வெளியீடு 24-4-1992 Issued 24-4-1992

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## OFFICIAL REPORT

வியாழக்கிழமை, செப்டம்பர் 26, 1991 - தொகுதி 2 - எண் 1

Thursday the 26th September, 1991 - Volume 2 - No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
Legislative Assembly Secretariat,
Madras-600 009

விலை ரூ. 3-00] [Price Rs. 3-00

360.

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

செயலக வெளியீடு.

தொகுதி-2 எண்-1

26.9.91

வெளியீடு - 24.4.1992

## உள்ளடக்கம்

பக்கங்கள்.

26-09-1991.

தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்.
Personal of the Government of Tamil Nadu,
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள். தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி).


1. வினாக்கள்—விடைகள்—

உடுக்குறியிட்ட வினாக்கள். 1—25

2. ஒத்திவைப்புத் தீர்மானம்—

வட ஆற்காடு மாவட்டம், திருப்பத்தூர் வனப் பகுதியில் காவலர் ஒருவர் கொலை செய்யப் பட்டது குறித்து. 25—27

3. முக்கிய பிரச்சினை—

மதுரையில் காவல் நிலையம் ஒன்றில் வழக்கறிஞர் ஒருவர் தாக்கப்பட்டதாகக் கூறப்படுவது குறித்து முதல் அமைச்சரின் விளக்கம். 27—28

4. அறிவிப்பு—

(அ) அண்ணா பல்கலைக்கழக ஆட்சிக் குழுவிற்கு உறுப்பினர் தேர்ந்தெடுத்தல். 28—29

(ஆ) சென்னைப் பல்கலைக்கழக ஆட்சி மன்றக்குழுவிற்கு உறுப்பினர்கள் தேர்தல். 135

(இ) பேரவை அலுவல் குறித்து. 217-219

5. கவன ஈர்ப்பு—

(அ) ஆரம்ப பள்ளி ஆசிரியர் நியமனங்களில் குறிப்பிட்ட மதிப்பெண்கள் பெற்றவர் மட்டுமே நியமிக்கப்பட வேண்டும் என்ற ஆணையால், ஆசிரியர் பயிற்சி பெற்ற மாணவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்பு குறித்து. 29—35

(ஆ) தமிழகத்தில் பட்டு நெசவுத் தொழிலுக்கு வேண்டிய மல்பரி பட்டு கிடைக்காததால் பட்டு நெசவாளர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து. 35—40

158378


பக்கங்கள்.

6. சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—

(அ) தமிழ்நாடு நகராட்சிச் சட்டங்கள் சார்ந்த (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1991. — 40

(ஆ) தமிழ்நாடு ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு, 1991. — 41

7. மானியக் கோரிக்கைகள், 1991–92 — விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி—

(அ) கோரிக்கை எண் 12-தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம். — 41–134

1. *மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா — 41-43, 109-134
2. *திரு. போளூர் வரதன் — 43–53
3. *திரு. கா. ப. பட்டாபிராமன் — 53–58
4. *திரு. வே. தம்புசாமி — 58–63
5. *திரு. வே. கோபாலகிருஷ்ணன் — 63–68
6. *திரு. இரா. நடேசன் — 68–71
7. திரு. இராம. இராமநாதன் — 71–75
8. திரு. ஆ. சுப்புரத்தினம் — 75–78
9. திரு. ஜி. பழனிசாமி — 78–84
10. திரு. கு. சீனிவாசன் — 82–84
11. திரு. கே. பி. மணிவாசகம் — 84–87
12. *திரு. கே. செல்வராஜ் — 87–89
13. திரு. நா. சா. பழனிசாமி — 90–92
14. *திரு. கி.இ. ராஜன்பாபு (எ) தணிகை பாபு — 92–95
15. *திரு. இரா. புதுநயினார் ஆதித்தன் — 96–98
16. திரு. எம். தங்கவேல் — 98–100
17. திரு. எஸ். வி. சண்முகம் — 100–103
18. திரு. டி. சுதர்சனம் — 103–109

(ஆ) கோரிக்கை எண் 36—பாசனம்

(இ) கோரிக்கை எண் 37—பொதுப்பணிகள்—கட்டிடங்கள். — 136–217, 219–250

iii

பக்கங்கள்.

(ஈ) கோரிக்கை எண் 38—பொதுப் பணிகள்—பணியாளரமைப்பும், கருவிகளும் தளவாடமும்.

(உ) கோரிக்கை எண் 39—சாலைகளும், பாலங்களும் — 136–217, 219–250

(ஊ) கோரிக்கை எண் 55—பாசனம் குறித்த மூலதனச் செலவு.

(எ) கோரிக்கை எண் 56—பொதுப் பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு.

(ஏ) கோரிக்கை எண் 57—சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச் செலவு.

136–141, 213–214

1. மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் — 229–246
2. திரு எம். எம். எஸ். அபுல்ஹசன் — 141–146
3. திரு. கே. சிங்காரம் — 146–148
4. * செல்வி கோ. மல்லிகா — 148–151
5. திரு. க. வெ. வீ. இராசமாணிக்கம் — 152–155
6. *திரு. த. ரத்தினவேல் — 156–159
7. திரு. வெ. தமிழரசு — 159–161
8. திரு. சி. கிருஷ்ணன் — 161–163
9. டாக்டர் தே. குமாரதாஸ் — 163–168
10. திரு. ஜி. பழனிசாமி — 168–172
11. திரு. சி. மாணிக்கம் — 173–175
12. *திரு. கோ. ஜானகிராமன் — 176–179
13. *திருமதி என். சி. கனகவல்லி — 180–182
14. *திருமதி அ. தி. சரஸ்வதி — 182–185
15. திரு. செ. கு. தமிழரசன் — 186–189
16. திரு. செ. து. வரதராஜன் — 189–193
17. திரு. ஆர். ஈஸ்வரன் — 193–196
18. *திரு. வி. எம். சின்னசாமி — 196–200
19. திரு. மா. சா. மா. இராமச்சந்திரன் — 200–204
20. *திரு. சோ. பாலகிருஷ்ணன் — 204–206
21. *திரு. காஞ்சி பன்னீர்செல்வம் — 206–209
22. திரு. நா. சா. பழனிசாமி — 209–212
23. *திரு. வ. சத்தியமூர்த்தி — 215–217
24. திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் — 219–228

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் — 251

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர்— திரு. பீஷ்ம நாராயண் சிங்

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

| | |
|---|---|
| 1. முதலமைச்சர் .. | மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா : பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர், இந்திய காவல் பணியாளர் மற்றும் அனைத்திந்தியப் பணியாளர்கள், மாவட்ட வருவாய் அதிகாரிகள், காவல், இலஞ்ச ஒழிப்பு, தொழில்கள், வணிக வரிகள், மதுவிலக்கு மற்றும் ஆயத் துறை, சர்க்கரைப் பாகு கழிவு, பிற்பட்டோர் நலம், சிறுபான்மையினர் நலம், அறநிலையத் துறை, செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல், திரைப்படச் சட்டம், சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக்கழகம், சுரங்கம் மற்றும் கனிம வளம். |
| 2. நிதி அமைச்சர் | மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நிதி, திட்டம், தேர்தல்கள், சட்டமன்றம். |
| 3. சட்ட அமைச்சர் | மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், எடைகள்–அளவைகள் பற்றி சட்டம் இயற்றுதல், கடன் நிவாரணம் (கடன் வழங்கல், சீட்டு நிதி இவை பற்றிய சட்டம் இயற்றுதல் உட்பட), கம்பெனிகள் பதிவு. |
| 4. வருவாய்த் துறை அமைச்சர் | மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: வருவாய், மாவட்ட வருவாய்த் துறைப் பணியாளர்கள், மாவட்டத் துணை ஆட்சியாளர்கள், ஆவணப் பதிவுத் துறை, முத்திரைச்சட்டம், வெளிநாடுவாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை, அரசு அச்சகம், பூமிதானம் மற்றும் கிராமதானம், பயண இசைவுச் சீட்டு. |

## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

**GOVERNOR OF TAMIL NADU Thiru BHISHMANARAIN SINGH.**

**Members of the Council of Ministers.**

| | |
|---|---|
| 1. **Chief Minister** | **The Hon. Selvi. J. Jayalalitha:** Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service and other All India Services, District Revenue Officers, Police, Prevention of Corruption. Industries, Commercial Taxes Prohibition and Excise, Molasses, Backward Classes. Minorities, Hindu Religious and Charitable Endowments, Information and Publicity, Film Technology, Cinematograph Act, Tourism and Tourism Development Corporation. Mines and Minerals. |
| 2. **Minister for Finance** | **The Hon. Dr. V. R. Nedunchezhian:** Finance, Planning, Elections and Legislature. |
| 3. **Minister for Law** | **The Hon. Thiru. K. A. Krishnasamy:** Law. Courts. Prisons, Legislation on Weights and Measures, Debt relief including Legislation on money lending, Chits and Registration of Companies. |
| 4. **Minister for Revenue** | **The Hon. Thiru. S.D. Somasundaram:** Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Registration, Stamp Act, Indians Overseas, Refugees and Evacuees, Stationery and Printing, Government Press, Bhoodan and Gramdan and Passports. |
| 5. **Minister for Education** | **The Hon. Thiru. Eraama Veerappan:** Education, Technical Education, Science and Technology, Sports and Youth Welfare, Tamil Development and Tamil Culture, Archaeology and Welfare of Ex-servicemen. |

| | |
|---|---|
| 6. Minister for Food and Co-operation | **The Hon. Thiru. K. Rajaram:** Food, Co-operation, Civil supplies, Price Control and Statistics. |
| 7. Minister for Labour | **The Hon. Dr. C. Aranganayagam:** Labour, Employment and Training, Urban and Rural Employment Programmes and Census. |
| 8. Ministsr for Health | **The Hon. Thiru. S. Muthusamy:** Health, Medical Education, Family Welfare, Environmental Pollution Control, Electronics, Iron and Steel Control and Newsprint Control. |
| 9. Minister for Transport | **The Hon. Thiru. K. A. Sengottayan:** Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports. |
| 10. Minister for Handlooms and Textiles. | **The Hon. Thiru. E. Madhusudhanan:** Handlooms and Textiles. |
| 11. Minister for Public Works | **The Hon. Thiru S. Kannappan:** Public Works, Irrigation including Minor Irrigation, Highways, Electricity and Non-conventional Enrgry Development. |
| 12. Minister for Local Administration | **The Hon. Thiru. Alagu Thirunavukkarasu:** Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes and Rural indebtedness. |
| 13. Minister for Agriculture | **The Hon. Thiru. Ku. Pa. Krishnan:** Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operative Horticulture and Sugar. |
| 14. Minister for Housing and Urban Development | **The Hon. Thiru. T. M. Selvaganapathi:** Housing, Slum Clearance, Rural Housing Development, Accommodation Control, Town Planning, Urabn Development, Madras Metropolitan Development Authority and Urban and Rural Water Supply |



| | |
|---|---|
| 15. Minister for Rural industries. | **The Hon. Thiru. Mohamed Asif:** Small - Scale Industries, Rural Industries including Cottage Industries, Khadi and Village Industries Board and Wakf. |
| 16. Minister for Social Welfare. | **The Hon. Tmt. R. IndiraKumari:** Social Welfare including Women and Children's Welfare, Nutritious Noon Meals, Beggar Homes, Orphanages and Correctional Administration. |
| 17. Minister for Adi-Dravidar Welfare. | **The Hon. Thiru. M. Anandan:** Adi-Dravidar Welfare, Hili Tribes and Bonded Labour. |
| 18. Minister for Forests and Fisheries. | **The Hon. Thiru. D. Jayakumar:** Animal Husbandry, Milk, Dairy Development, Fisheries, Forests and Cinchona. |

| | | |
|---|---|---|
| 5. | கல்வி அமைச்சர் .. | மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : கல்வி, தொழில் நுட்பக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், விளையாட்டு மற்றும் இளைஞர் நலம், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாடு, தொல் பொருளியல், முன்னாள் இராணுவத்தினர் நலம். |
| 6. | உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் | மாண்புமிகு திரு. க. இராசாராம் : உணவு, கூட்டுறவு, நுகர்பொருள் வழங்கல், விலைவாசிக் கட்டுப்பாடு, புள்ளிவிவரங்கள். |
| 7. | தொழிலாளர் நலத் துறை அமைச்சர் | மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : தொழிலாளர், வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர்ப்புற மற்றும் கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டங்கள், மக்கள் தொகைக் கணக்கு. |
| 8. | மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் | மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி, குடும்ப நலம், சுற்றுச் சூழல் மாசு கட்டுப்படுத்தல், மின்னணுவியல், இரும்பு மற்றும் எஃகுக் கட்டுப்பாடு, அச்சுக் காகிதக் கட்டுப்பாடு. |
| 9. | போக்குவரத்துத் துறை அமைச்சர் | மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள். |
| 10. | கைத்தறி மற்றும் நெசவாலைகள் துறை அமைச்சர் | மாண்புமிகு திரு. [illegible]. மதுசூதனன் : கைத்தறி மற்றும் நெசவாலைகள். |
| 11. | பொதுப்பணித் துறை அமைச்சர் | மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : பொதுப் பணிகள், பாசனம் (சிறு பாசனம் உட்பட), நெடுஞ்சாலைகள், மின்சாரம், மரபுசாரா எரிசக்தி வளர்ச்சி. |
| 12. | உள்ளாட்சித் துறை அமைச்சர் | மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் |



| | | |
|---|---|---|
| | | ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், கிராமப் புறக் கடன் சம்பந்தப்பட்டவை. |
| 13. | வேளாண்மைத் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை மற்றும் சர்க்கரை. |
| 14. | வீட்டு வசதி-நகர்ப் புற வளர்ச்சித் துறை அமைச்ச. | மாண்புமிகு திரு. பி. எம். செல்வகணபதி : வீட்டு வசதி, குடிசை மாற்றுத் திட்டம், ஊரக வீட்டு வசதி வளர்ச்சி, இடவசதிக் கட்டுப்பாடு, நகர அமைப்பு, நகர்ப்புற வளர்ச்சி சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், நகர்ப்புற மற்றும் கிராமப்புறக் குடிநீர் வழங்கல். |
| 15. | ஊரகத் தொழில் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. முஹமது ஆசிப் ; சிறு தொழில்கள், ஊரகத் தொழில்கள் (குடிசைத் தொழில்கள் உட்பட), கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியம், வக்ஃப். |
| 16. | சமூக நலத் துறை அமைச்சர். | மாண்புமிகுதிருமதி இரா. இந்திரகுமாரி: சமூக நலம் (மகளிர் மற்றும் குழந்தைகள் நலம் உட்பட), சத்துணவு, பிச்சைக்காரர் விடுதிகள், அனாதை விடுதிகள், சீர்திருத்த நிர்வாகம். |
| 17. | ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. எம், ஆனந்தன் : ஆதி திராவிடர் நலம், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் பிணைத் தொழிலாளர். |
| 18. | வனம் மற்றும் மீனளத் துறை அமைச்சர்; | மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : கால்நடை பராமரிப்பு, பால், பால் பெருக்குத் திட்டம், மீனளம், வனங்கள் மற்றும் சின்கோனா. |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

## பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. இரா. முத்தையா

## பேரவைத் துணைத் தலைவர்

பேராசிரியர் க. பொன்னுசாமி

## மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

1. திரு. க. அர்ச்சுனன்
2. திரு. வ. சத்தியமூர்த்தி
3. திருமதி ரமணி நல்லதம்பி
4. டாக்டர் தே. குமாரதாஸ்

திரு. செ. சு. ஜானகிராமன்,
செயலாளர்.

## பேரவையின் முக்கிய அலுவலர்கள் (அகர வரிசைப்படி).

| | | |
|---|---|---|
| இராமச்சந்திரன், திரு.ரெ.கு. பி.ஏ., பி.எல். | .. | இணைச் செயலாளர் |
| சுந்தரராஜன், திரு.கா.செ. பி.ஏ., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| இராசமாணிக்கம், திரு.பெ. பி.ஏ., பி.எல். | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| சண்முகநாதன், திரு.கோ. பி.காம்., | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| சந்திரசேகரன், திரு.ஆர்., பி.ஏ., | .. | துணைச் செயலாளர் |
| சாலமன் ஜெயபால், திரு.டி. பி.எஸ்ஸி., பி.எல்., | .. | துணைச் செயலாளர் |
| ஜேக்கப் ஆர்தர், திரு.தா. பி.ஏ., பி.எல்.,டி.பி. & பி.ஏ. | .. | துணைச் செயலாளர் |
| கிருஷ்ணமூர்த்தி, திரு.சு. பி,எஸ்ஸி., | .. | குழு அலுவலர் |
| வெங்கட்டராமன், திரு.ப.சீ. பி.காம். | .. | குழு அலுவலர் |

| | | |
|---|---|---|
| அப்துல் சத்தார், திரு. ஜெ. பி.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| இராசாராமன், திரு. வி. பி.எஸ்ஸி., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| உமா, திருமதி, வி.நா. பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| கண்ணன், திரு. கே. பி.எஸ்.ஸி., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| சாமிநாதன், திரு. கி, பி.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| பவானி சுப்பையா, திருமதி. பி.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| பானுமதி அனந்தராஜன், திருமதி பி.எஸ்ஸி., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| முடிகோபதி, திரு. நா. எம்.ஏ., | .. | சார்புச் செயலாளர் |
| முனிர் உன்னிசா, திருமதி. பி.எஸ்ஸி., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| ராஜன், திரு. கே.பி. டி.ஆர்.எஸ். | .. | சார்புச் செயலாளர் |
| ராஜேந்திரன், திரு. பி.சி., பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| வெங்கட்டராமன், திரு. கோ. | .. | பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர் |
| சுந்தரராஜுலு. திரு. துரை. எம்.ஏ. | .. | தலைமை நிருபர் |
| துரைபாண்டியன், திரு. செ.எ. பி.ஏ. | .. | தலைமை நிருபர் |
| ஜெயதேவ், திரு. பி.சி. | .. | தலைமை நிருபர் |



### தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
### உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)
### பெயர்களும் தொகுதிகளும்.

| | | | |
|---|---|---|---|
| 1 | அண்ணாமலை, திரு. எஸ். | .. | ஆலந்தூர் |
| 2 | அபரஞ்ஜி, திரு. பெ. | .. | அரூர் (செ.வ.) |
| 3 | அப்துல்ஹசன், திரு. எம்.எம்.எஸ். | .. | மயிலாடுதுறை |
| 4 | அமர்நாத், திரு. ஓ.எஸ். | .. | மதுரை கிழக்கு |
| 5 | அம்மமுத்து பிள்ளை. டாக்டர் மு. | .. | கன்னியாகுமரி |
| 6 | அரங்கநாதன், திரு. ஆர்.டி. | .. | விருத்தாசலம் |
| 7 | அரங்கநாயகம், டாக்டர் செ. | .. | தொண்டாமுத்தூர் |
| 8 | அர்ச்சுனன், திரு. க. | .. | வீரபாண்டி |
| 9 | அழகிரி, திரு. ச. | .. | சிதம்பரம் |
| 10 | அழகு திருநாவுக்கரசு, திரு. | .. | ஒரத்தநாடு |
| 11 | அறிவழகன், திரு. ஆ. | .. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 12 | அன்பழகன், திரு. எஸ், | .. | நாமக்கல் (செ.வ.) |
| 13 | ஆசைமணி, திரு. எஸ். | .. | குத்தாலம் |
| 14 | ஆண்டி அம்பலம், திரு. மெ. | .. | நத்தம் |
| 15 | ஆண்டித் தேவர், திரு. எஸ். | .. | திருப்பரங்குன்றம் |
| 16 | ஆரோக்கியசாமி, டாக்டர் ச. | .. | திருச்சிராப்பள்ளி–1 |
| 17 | ஆறுமுகம், திரு. செ. | .. | வானூர் (செ.வ.) |
| 18 | ஆனந்தன், திரு. எம். | .. | உளுந்தூர்பேட்டை (செ.வ.) |
| 16 | இந்திரகுமாரி, திருமதி இரா. | .. | நாட்றாம்பள்ளி |
| 20 | இராசமாணிக்கம், திரு. க.வெ.வீ. | .. | மேலூர் |
| 21 | இராசாராமன், திரு. சோ. | .. | பாபநாசம் |
| 22 | இராசாராம், திரு. க. | .. | பனமரத்துப்பட்டி |
| 23 | இராதாகிருஷ்ணன், திரு. த.கி. | .. | திருமங்கலம் |

| | | |
|---|---|---|
| 24 | இராமகிருஷ்ணன், டாக்டர் இ. | அச்சரப்பாக்கம் (செ.வ) |
| 25 | இராமசாமி அம்பலம், திரு.கே.ஆர் | திருவாடனை |
| 26 | இராமசுவாமி, திரு.சி. | சங்கராபுரம் |
| 27 | இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். | கம்பம் |
| 28 | இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். | சாத்தூர் |
| 29 | இராமச்சந்திரன், திரு.ச. | பண்ருட்டி |
| 30 | இராமச்சந்திரன், திரு.மா. சா.மா. | இளையாங்குடி |
| 31 | இராமதாஸ், திரு. எஸ். எஸ்.ஆர். | செஞ்சி |
| 32 | இராமநாதன், திரு. இராம. | கும்பகோணம் |
| 33 | இராமவீரப்பன், திரு. | காங்கேயம் |
| 34 | இராஜமன்னார், திரு.கு. சே. | ஒட்டப்பிடாரம் (செ.வ.) |
| 35 | இராஜன்பாபு (எ) தனிகைபாபு, திரு.கி. | திருத்தணி |
| 36 | இராஜேந்திரன், திரு.பி.வி. | வேதாரண்யம் |
| 37 | இலதா பிரியகுமார், திருமதி. | அரக்கோணம் (செ.வ.) |
| 38 | இளம்வழுதி, திரு. | எழும்பூர் (செ.வ.) |
| 39 | ஈஸ்வரமூர்த்தி, திரு.பி. | தாராபுரம் (செ.வ.) |
| 40 | ஈஸ்வரன், திரு.ஆர். | வாசுதேவநல்லூர் (செ.வ.) |
| 41 | ஏகாம்பர ரெட்டி, திரு.எ. | பள்ளிப்பட்டு |
| 42 | கண்ணப்பன், திரு.எஸ். | திருப்பத்தூர் |
| 43 | கண்ணன், திரு.வே. | திருவண்ணாமலை |
| 44 | கந்தசாமி, திரு.கா. | தலைவாசல் (செ.வ.) |
| 45 | கருப்புசாமி, டாக்டர் எம். | குன்னூர் (செ.வ.) |
| 46 | கலியபெருமாள், திரு.ப. | திருவையாறு |
| 47 | கலைச்செல்வி, திருமதி கே.எம். | காட்பாடி |



| | | |
|---|---|---|
| 48 | கவிநிலவு தர்மராஜ், பேராசிரியர் (திருமதி) | மொடக்குறிச்சி |
| 49 | கற்பகம் இளங்கோ பேராசிரியர் (திருமதி) | காரைக்குடி |
| 50 | கனகவல்லி, திருமதி என். சி. | விளாத்திகுளம் |
| 51 | காஞ்சி பன்னீர்செல்வம் திரு. | உத்திரமேரூர் |
| 52 | காந்திராஜன், திரு. ச. | வேடசந்தூர் |
| 53 | காளன், திரு.கோ. | வில்லிவாக்கம் |
| 54 | காளிராஜன், டாக்டர் மு. | சமயநல்லூர் (செ.வ) |
| 55 | கிருஷ்ணசாமி, திரு.கே.ஏ. | ஆயிரம்விளக்கு |
| 56 | கிருஷ்ணன், திரு. எஸ்.எம். | தாம்பரம் |
| 57 | கிருஷ்ணன், திரு. கு.ப. | ஸ்ரீரங்கம் |
| 58 | கிருஷ்ணன், திரு.சி. | ஓமலூர் |
| 59 | குப்பன், திரு. க. | திருவெற்றியூர் |
| 60 | குமரி அனந்தன், திரு. | சாத்தான்குளம் |
| 61 | குமாரதாஸ், டாக்டர் தே. | கிள்ளியூர் |
| 62 | குழந்தைவேலு, திரு.சி. | குளத்தூர் (செ.வ.) |
| 63 | கோடி மாரி, திரு.ஆர். | நாகப்பட்டினம் |
| 64 | கோபால கிருஷ்ணன், திரு. வே. | சங்கரநயினார் கோவில் (செ.வ.) |
| 65 | கோபால், டாக்டர்.க. | நன்னிலம் (செ.வ.) |
| 66 | கோவிந்தராசு, திரு.மா. | ரிஷிவந்தியம் |
| 67 | சக்குபாய், திருமதி ரா. | கும்மிடிப்பூண்டி |
| 68 | சக்குபாய் தேவராஜ், திருமதி டி. | திருவள்ளூர் |
| 69 | சஞ்சய் ராமசாமி, திரு. | விருதுநகர் |
| 70 | சண்முகநாதன், திரு.எஸ். | ஆலங்குடி |
| 71 | சண்முகம், திரு.எஸ்.வி. | மதுரை மேற்கு |
| 72 | சத்தியமூர்த்தி, திரு.வ. | கடலாடி |
| 73 | சந்திரசேகர், திரு.வி.பி. | பொள்ளாச்சி |
| 74 | சம்பத், திரு.எ. | வாணியம்பாடி |
| 75 | சரஸ்வதி, திருமதி அ.தி. | சத்தியமங்கலம் |

| | | | |
|---|---|---|---|
| 76 | சரஸ்வதி, திருமதி ப. | .. | கபிலர்மலை |
| 77 | சரோஜா, டாக்டர் (திருமதி) வெ. | .. | சங்கரி (செ.வ.) |
| 78 | சாத்தையா, திரு.தி. | .. | இராஜபாளையம் (செ.வ.) |
| 79 | சாவித்திரி அம்மாள் திருமதி ஆர். | .. | முகையூர் |
| 80 | சிங்காரம், திரு.ஆர். | .. | பேராவூரணி |
| 81 | சிங்காரம், திரு.கே. | .. | மொரப்பூர் |
| 82 | சிங்கை கோவிந்தராசு திரு. | .. | சிங்காநல்லூர் |
| 83 | சியாமளா, திருமதி ரெ, | .. | கோவில்பட்டி |
| 84 | சிவசுப்பிரமணியன், திரு.கு. | .. | குறிஞ்சிப்பாடி |
| 85 | சிவபதி, திரு.என்.ஆர். | .. | தொட்டியம் |
| 86 | சின்னசாமி, திரு.ம. | .. | சேந்தமங்கலம் (ம.வ.) |
| 87 | சின்னசாமி, திரு.கா. | .. | கரூர் |
| 88 | சின்னசாமி, திரு.வி.கே. | .. | பவானிசாகர் |
| 89 | சின்னப்பன், திரு. கே.கே. | .. | ஜெயங்கொண்டம் |
| 90 | சீனியம்மாள் டாக்டர் (திருமதி) மு. | .. | அவினாசி (செ.வ.) |
| 91 | சீனிவாசன் திரு. ஆ.கு. | .. | பெரணமல்லூர் |
| 92 | சீனிவாசன், திரு.கு. | .. | மன்னார்குடி |
| 93 | சுதர்சனம், திரு.டி. | .. | பூந்தமல்லி |
| 94 | சுந்தரசாமி, திரு. எம். | .. | கலசப்பாக்கம் |
| 95 | சுந்தரதாஸ், திரு.மா. | .. | விளவங்கோடு |
| 96 | சுந்தரம், திரு. எம்.கே. | .. | தண்டராம்பட்டு |
| 97 | சுந்தரராஜ். டாக்டர் சா. | .. | பரமக்குடி (செ.வ.) |
| 98 | சுந்தரவேல், திரு.ஏ.கே.சி. | .. | திருப்பத்தூர் |
| 99 | சுந்தராம்பாள், திருமதி செ. | .. | மேட்டூர் |
| 100 | சுப்பிரமணியம், திரு.வ.மு | .. | மானாமதுரை (செ.வ.) |
| 101 | சுப்பிரமணியன், திரு.வி. என். | .. | பெருந்துறை |
| 102 | சுப்பிரமணியன், திரு.வீ. | .. | கண்டமங்கலம் (செ.வ.) |



| | | | |
|---|---|---|---|
| 103 | சுப்புரத்தினம், திரு.ஆ. | .. | பழனி (செ.வ.) |
| 104 | சுலோசனா, செல்வி எல். | .. | மேட்டுப்பாளையம் |
| 105 | சுவாமிநாதன், திரு.சி. | .. | புதுக்கோட்டை |
| 106 | செங்கோட்டையன், திரு. கே. ஏ. | .. | கோபிசெட்டிபாளையம் |
| 107 | செல்லக்குமார், டாக்டர் அ. | .. | அண்ணாநகர் |
| 108 | செல்லசாமி, திரு.ஏ.டி. | .. | ஒட்டன்சத்திரம் |
| 109 | செல்லத்துரை, திரு.ஆ. | .. | திருச்செந்தூர் |
| 110 | செல்வகணபதி, திரு.டி.எம். | .. | திருச்செங்கோடு |
| 111 | செல்வராசன், திரு. அ. | .. | துறைமுகம் |
| 112 | செல்வராஜ், திரு. கே. | .. | கோயம்புத்தூர் மேற்கு |
| 113 | செழியன், திரு. தா. | .. | பெரம்பலூர் (செ.வ.) |
| 114 | சேகர், டாக்டர் எம்.பி. | .. | பெரம்பூர் (செ.வ.) |
| 115 | சேகர், திரு.எம்.ஜி. | .. | பாலக்கோடு |
| 116 | சொக்கலிங்கம், திரு.பி. | .. | மதுராந்தகம் |
| 117 | சோமசுந்தரம், திரு.எஸ்.டி. | .. | தஞ்சாவூர் |
| 118 | ஞானசேகரன். திரு.சி. | .. | வேலூர் |
| 119 | டேனியல்ராஜ், திரு.எஸ். | .. | ஸ்ரீவைகுண்டம் |
| 120 | தங்கமுத்து, திரு.கு. | .. | திருவோணம் |
| 121 | தங்கராஜ், திரு.ஆர். | .. | ஆண்டிமடம் |
| 122 | தங்கவேல், திரு.எம். | .. | முசிறி |
| 123 | தண்டாயுதபாணி, திரு.வி. | .. | குடியாத்தம் |
| 124 | தமிழரசன், திரு.செ.கு. | .. | வந்தவாசி (செ.வ.) |
| 125 | தமிழரசு, திரு.வெ. | .. | ஆத்தூர் |
| 126 | தம்புசாமி, திரு.வி. | .. | திருவாரூர் (செ.வ.) |
| 127 | தர்மலிங்கம், திரு.கி. | .. | அணைக்கட்டு |
| 128 | தர்மலிங்கம், திரு.பே | .. | பாளையங்கோட்டை |
| 129 | தவசி, திரு.கே. | .. | ஆண்டிப்பட்டி |
| 130 | தனபால், திரு.ம. | .. | திருப்போரூர் (செ.வ.) |
| 131 | தாமரைக்கனி, திரு.இரா. | .. | ஸ்ரீவில்லிபுத்தூர் |
| 132 | தாமோதரன், திரு.சி. | .. | நெல்லிக்குப்பம் |
| 133 | திருநாவுக்கரசு, திரு.எஸ். | .. | அறந்தாங்கி |
| 134 | துரை, திரு.எஸ்.எம். | .. | ஆத்தூர் |

| | | | |
|---|---|---|---|
| 190 | மனோகரன், திரு.கே.ஏ. | .. | ஒசூர் |
| 191 | மாணிக்கம், திரு.சி. | .. | ஈரோடு |
| 192 | மாலா, டாக்டர் (செல்வி) ஜி.ஆர். | ... | திருச்சிராப்பள்ளி-2 |
| 193 | முத்துசாமி திரு.சு. | .. | பவானி |
| 194 | முத்தையா, திரு.இரா. | .. | சேடப்பட்டி |
| 195 | முருகானந்தம், திரு.கே. ஆர். | .. | சிவகங்கை |
| 196 | முருகையா பாண்டியன், திரு.ஆர். | .. | அம்பாசமுத்திரம் |
| 197 | முனிரத்தினம், திரு.ஏ.எம். | .. | சோளிங்கர் |
| 198 | முனிவெங்கடப்பன், திரு. கே. | .. | கிருஷ்ணகிரி |
| 199 | முனுசாமி, திரு.கா.பூ. | .. | காவேரிப்பட்டினம் |
| 200 | முஹமது ஆசிப், திரு. | ... | திருவல்லிக்கேணி |
| 201 | மூர்த்தி, திரு.து. | .. | சீர்காழி (செ.வ.) |
| 202 | மோசஸ், டாக்டர் எம். | .. | நாகர்கோவில் |
| 203 | ரகுபதி, திரு.செ. | .. | திருமயம் |
| 204 | ரங்கநாதன், திரு.ப. | .. | புரசைவாக்கம் |
| 205 | ரங்கராஜன், திரு.டி.எம். | .. | மயிலாப்பூர் |
| 206 | ரத்தினவேல், திரு.த. | .. | திருவெறும்பூர் |
| 207 | ரமணி நல்லதம்பி, திருமதி | .. | ராதாபுரம் |
| 208 | ரமேஷ். திரு.வி.பி.ஆர். | .. | தூத்துக்குடி |
| 209 | ரவிக்குமார், திரு.ஏ. | .. | பொன்னேரி (செ.வ.) |
| 210 | ரவிச்சந்திரன், திரு.வி. | .. | உப்பிலியாபுரம் (ம.ப.) |
| 211 | ராமசுப்பு, திரு.எஸ்.எஸ். | . | ஆலங்குளம் |
| 212 | ராஜு, திரு.எச்.எம். | .. | உதகமண்டலம் |
| 213 | ராஜு, திரு.கே.ஆர். | .. | கூடலூரர் |
| 214 | ராஜு, திரு.கே.பி. | .. | பேரூர் |
| 215 | ராஜேந்திரன், திரு என் ஆர் | .. | காட்டு மன்னார் கோவில் (செ.வ) |
| 216 | லட்சுமணன், திரு.வி.கே. | .. | கோயம்புத்தூர் கிழக்கு |
| 217 | லாரன்ஸ், திரு,கு. | .. | பத்மநாபபுரம் |
| 218 | லோகாம்பாள், (திருமதி) ஜெ | ... | லால்குடி |
| 219 | வரதராஜன், திரு.செ.து, | .. | செங்கல்பட்டு |
| 220 | விசுவநாதன், திரு.ஜி. | .. | ஆற்காடு |
| 221 | வீரபாண்டியன், டாக்டர் பெ. | ... | செங்கம் (செ,வ.) |



| | | | |
|---|---|---|---|
| 222 | வெங்கடராம ரெட்டி, திரு. மு. | .. | தளி |
| 223 | வெங்கடேசன், திரு. பி.ஆர்.எஸ். | .. | கடலூர் |
| 224 | வேடியப்பன், திரு. தா. | .. | போளூர் |
| 225 | வேணுகோபால், திரு. என். ஜி. | .. | ராணிப்பேட்டை |
| 226 | வேலையா, திரு. டி. | .. | திருநெல்வேலி |
| 227 | ஜனார்தனன், திரு. தே. | .. | விழுப்புரம் |
| 228 | ஜானகிராமன், திரு. கோ. | .. | மேல் மலையனூர் |
| 229 | ஜீனத் சர்புதீன், திருமதி | .. | சேப்பாக்கம் |
| 230 | ஜெயக்குமார், திரு. எஸ். | ... | தியாகராகய நகர் |
| 231 | ஜெயகுமார், திரு. டி. | .. | ராயபுரம் |
| 232 | ஜெயராமன். திரு. எஸ். ஆர். | .. | சேலம்-1 |
| 233 | ஜெயலலிதா, (செல்வி) ஜெ. | .. | பர்கூர் |
| 234 | ஜெய்சன் ஜேக்கப், டாக்டர் | .. | ஆரணி |
| 235 | ஸ்ரீதரன், டாக்டர் அ. | .. | வால்பாறை (செ.வ) |

பேரவை நடவடிக்கைகளின் பங்கு கொள்ள உரிமை பெற்றவர்

சுப்பிரமணியன், திரு. க. தலைமை வழக்கறிஞர்

| | | |
|---|---|---|
| 135 | துரைமுருகன், திரு.கு.சு. | .. பல்லடம் |
| 136 | துரை ராமசாமி, திரு. | .. வெள்ளக்கோவில் |
| 137 | தெய்வநாயகம், திரு.எ. | .. மதுரை மத்தி |
| 138 | தென்னவன், திரு.மு. | .. இராமநாதபுரம் |
| 139 | தேவராஜ், திரு.அ. | .. செய்யாறு |
| 140 | தேனி பன்னீர்செல்வம், திரு. | .. போடிநாயக்கனூர் |
| 141 | நடேசன், திரு.இரா. | .. திருவட்டாறு |
| 142 | நடேசன், திரு.மு. | .. சேலம்–2 |
| 143 | நடேசன் பால்ராஜ், திரு.வே. | .. நாங்குநேரி |
| 144 | நாகூர் மீரான், திரு.எஸ். | .. கடையநல்லூர் |
| 145 | நிர்மலா, செல்வி பி. | .. திண்டுக்கல் |
| 146 | நெடுஞ்செழியன், டாக்டர் இரா. | .. தேனி |
| 147 | பஞ்சவர்ணம், திருமதி கே. | .. வலங்கைமான் (செ.வ.) |
| 148 | பட்டாபிராமன், திரு.கா.ப. | .. காஞ்சிபுரம் |
| 149 | பரந்தாமன், டாக்டர் ஜெ. | .. பேரணாம்பட்டு (செ.வ.) |
| 150 | பரமசிவம், திரு.ஆர்.பி. | .. சின்னசேலம் |
| 151 | பரமசிவம், திரு.ஏ.எம். | .. சோழவந்தான் |
| 152 | பலராமன், திரு.உ. | .. பூங்கா நகர் |
| 153 | பழனிசாமி, திரு.இரா. | .. தாரமங்கலம் |
| 154 | பழனிசாமி, திரு.க. | .. எடப்பாடி |
| 155 | பழனிசாமி, திரு.நா.சா. | .. கிணத்துக்கடவு |
| 156 | பழனிசாமி, திரு.வெ. | .. திருப்பூர் |
| 157 | பழனிசாமி, திரு.ஜி. | .. திருத்துறைப்பூண்டி (செ.வ.) |
| 158 | பழனியம்மாள், திருமதி க. | .. ராசிபுரம் |
| 159 | பன்னீர்செல்வம், திரு.என். | .. திருவிடைமருதூர் |
| 160 | பன்னீர்செல்வம், திரு.சா. | .. திண்டிவனம் |
| 161 | பன்னீர்செல்வம், திரு.ஜெ. | .. திருநாவலூர் |
| 162 | பாண்டியம்மாள், திருமதி இரா. | .. உசிலம்பட்டி |
| 163 | பாப்பாசுந்தரம், திரு.அ. | .. குளித்தலை |



| | | |
|---|---|---|
| 164 | பாலகங்காதரன், திரு. ஜெ. | .. சிவகாசி |
| 165 | பாலகிருஷ்ணன், திரு. சோ. | .. முதுகுளத்தூர் |
| 166 | பாலசுப்பிரமணியன், திரு. எஸ். ஆர். | .. பொங்கலூர் |
| 167 | பாலசுப்பிரமணியன், திரு. கி. | .. பட்டுக்கோட்டை |
| 168 | பாலன், திரு. எம். கே. | .. சைதாப்பேட்டை |
| 169 | பாலையா, திரு. ஆ. | .. குளச்சல் |
| 170 | பியாட்ரிக்ஸ் டி சோசா டாக்டர் (திருமதி) | .. நியமனம் |
| 171 | பீட்டர் அல்போன்ஸ், திரு. எஸ். | தென்காசி |
| 172 | புதுநயினார் ஆதித்தன், திரு. இரா. | .. சேரன்மகாதேவி |
| 173 | புரட்சிமணி, திரு. ச. | .. மங்களூர் (செ.வ.) |
| 174 | புருஷோத்தமன், டாக்டர் வெ. | .. பெண்ணாகரம் |
| 175 | பூராசாமி, திரு. எம். | .. பூம்புகார் |
| 176 | பெரியசாமி, திரு. வே. | .. அந்தியூர் (செ.வ.) |
| 177 | பெரியவீரன், திரு. எம். | .. பெரியகுளம் |
| 178 | பெருமாள், திரு. செ. | ஏற்காடு (ம.ப.) |
| 179 | பொன்னம்மாள், திருமதி ஏ. எஸ். | .. நிலக்கோட்டை (செவ.) |
| 180 | பொன்னுசாமி, பேராசிரியர் க. | .. மருங்காபுரி |
| 181 | பொன்னுசாமி, திரு. பெ. | .. தருமபுரி |
| 182 | பொன்னுவேலு, திரு. ஏ. தா. | .. வரகூர் (செ.வ.) |
| 183 | போளூர் வரதன், திரு. | .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| 184 | மணிமேகலை, டாக்டர் (திருமதி) சு. | அரியலூர் |
| 185 | மணிமேகலை, திருமதி வி.ஜி. | .. அருப்புக்கோட்டை |
| 186 | மணிவாசகம், திரு.கே.பி. | உடுமலைப்பேட்டை |
| 187 | மதுசூதனன், திரு.இ. | டாக்டர் இராதா கிருஷ்ணன் நகர் |
| 188 | மரியமுல் ஆசியா, திருமதி | .. அரவக்குறிச்சி |
| 189 | மல்லிகா, செல்வி கோ. | .. புவனகிரி |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

புரட்டாசி 10, பிரஜோற்பத்தி—திருவள்ளுவர் ஆண்டு 2022/1991/செப்டம்பர் 26, வியாழக்கிழமை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில், முற்பகல் 9.30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''சிறப்புஈனும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்கு
ஆக்கம் எவனோ உயிர்க்கு.''

அறம் சிறப்பையும் விளிக்கும்; செல்வத்தையும் அளிக்கும்; ஆகையால், உயிர்க்கு அத்தகைய அறத்தைவிட நன்மையானது வேறு யாது ?

### 1. வினாக்கள் – விடைகள்.

#### உடுக்குறியிட்ட வினாக்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : வினாக்கள்–விடைகள், வினா எண், 78 திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்,

78—

#### கிணறு ஆழப்படுத்த அளித்த கடன் தள்ளுபடி.

**495. திரு. சி. ஞானசேகரன் :**

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கிணற்றின் அடிப்பகுதி வெட்ட விவசாயிகளுக்குக் கொடுத்த கடனை தள்ளுபடி செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விவசாயிகள் கடனை ஒட்டு மொத்தமாகத் தள்ளுபடி செய்யும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

**திரு. சி. ஞானசேகரன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையிலே ஆளுநர் வாயிலாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறுகிறபோது, விவசாயிகளினுடைய கடன்களை எல்லாம் ரத்து செய்வதற்காக, அரசு தேர்தல் அறிக்கையில் சொன்னபடி, முயற்சி செய்து வருகிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே, கடனிலே பிறந்து, கடனிலே வாழ்ந்து, கடனிலே துய்த்துக்கொண்டிருக்கிற அந்த விவசாயிகளினுடைய அடிவெட்டுக் கிணற்றுக் கடனையாவது தள்ளுபடி செய்ய மீண்டும் அமைச்சர் அவர்கள் பரிசிலனை செய்வார்களா என்பதை அன்புடன் வேண்டுகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாங்கிய கடன் பூராவையும் மொத்தமாகத் தள்ளுபடி செய்யும் எண்ணம் அரசுக்கு இல்லை யென்று சொன்னேன் அந்தந்தப் பகுதியைப் பொறுத்தும். அங்கங்கே ஏற்பட்டிருக்கிற வறட்சியை முன்னிட்டும் கடன் வாங்கியவர்களுடைய தன்மையை முன்னிட்டும் அதுபற்றித் தனியாக ஆராயப்படும்,

**திரு. சி. ஞானசேகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. தமிழகத்திலே குறிப்பாக வடாற்காடு அம்பேத்கார் மாவட்டம், நிலத்தடி நீரைத்தான் முழுமையாக நம்பியிருக்கிறது. அந்த நிலத்தடி நீரை முழுமையாக நம்பியிருக்கிற விவசாயப் பெருமக்கள் இன்று வறட்சியிலே உழன்று கொண்டிருக்கிறார்கள். எனவே, அந்த வடாற்காடு அம்பேத்கார் மாவட்டத்தைப் பொறுத்த அளவிலாவது விவசாயிகளினுடைய அடிவெட்டுக் கிணற்றுக் கடனைத் தள்ளுபடி செய்ய அமைச்சர் அவர்கள் பரிசிலனை செய்வார்களா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மாவட்டத்தில் வறட்சி ஏற்படும் என்று எண்ணித்தான். இப்போது தண்ணீர் பஞ்சத்தைப் போக்குவதற்காக. வறட்சி நிவாரணத்தின் அடிப்படையில். தமிழகத்தினுடைய முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் அங்கே ஆழ்குழாய் வெட்டுவதற்கும். தண்ணீர் கிடைப்பதற்கும் பணம் இன்றைக்கு ஒதுக்கியிருக்கிறார்கள், அதேபோல். நான் முதலில் சொன்னபடி அங்கே இருக்கிற பகுதியினுடைய நிலவரங்களுக்கேற்றவாறு. கடன் வாங்கியவர்களுடைய தன்மைக்கேற்றவாறு அவர்கள் அதைத் திருப்பிச் செலுத்துவதற்கு ஏதும் இல்லாத தன்மையுள்ள மக்களாக இருந்தால். அவைகளை ஆராய்ந்து அரசு நல்ல முடிவு எடுக்கும்,

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. மு. நடேசன்,

**திரு. மு. நடேசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லிய பதிலிலிருந்து கிணற்றினுடைய அடிப்பகுதி. தண்ணீர் கிடைக்கும் வரை வெட்டப்படுமா; அல்லது பண விளவு வைத்து வெட்டப்படுமா என்பதைத் தெரிந்துக்கொள்ள ஆசைப் படுகிறேன்,

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்வியை என்னால் புரிந்து கொள்ள முடியாவிட்டாலும், நான் புரிந்துகொண்ட வகையில் சொல் வேண்டுமென்றால். கிணறு வெட்டுவதே. தண்ணீர் வேண்டும் என்பதற்காகத்தான் வெட்டப்படுகிறது. ஆகவே, தண்ணீர் வேண்டும் என்ற அளவுக்கு வெட்டப்பட வேண்டுமென்றால். அது எந்த அளவுக்கு வுக்கு வெட்டப்பட வேண்டும் என்பது அங்குள்ள விவசாயிகளுக்கு நன்றாகத் தெரியும்,



**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. நா. சா. பழனிசாமி,

**திரு நா. சா. பழனிசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிணறுகளை ஆழப்படுத்துவதற்காக, அரசின் மூலமாக கொடுக்கப்பட்ட கடன் ரூ. 2,500 அளவிலே 5 ஏக்கருக்குக் குறைவாக இருக்கிற சிறு விவசாயிகளுக்குத்தான் கொடுக்கப் பட்டிருக்கிறது, கிணறுகளை ஆழப்படுத்துவது என்பது ரூ. 2.500-லே ஒரு இரண்டடிகூட ஆழப்படுத்தமுடியாது, அப்படி சிறு விவசாயிகளுக்காக வறட்சியை முன்னிட்டு கிணறுகளை ஆழப்படுத்த கொடுத்திருக்கிற கடனைத்தான் இப்போது வருவாய்த்துறை அதிகாரிகள் ஜப்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டு அந்தக் கடனை வசூலித்துக்கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட சிறு விவசாயிகளுக்கு, ஜப்தியை நிறுத்தி, இந்த ரூ, 2,500 என்ற சிறு கடனையாவது தள்ளுபடி செய்து வறட்சியிலே இருந்து அவர்களுக்கு ஆறுதல் கொடுப்பார்களா என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 9.35

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மாண்புமிகு, பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் கேட்டக் கேள்வியை இரு பகுதியாகப் பிரித்து—ஒரு பகுதி சிறு விவசாயிகள் என்று சொன்னார்கள் ; ஆனால். சிறு விவசாயிகளிடம் எந்த இடத்திலும் ஜப்தி செய்யப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பேசிய பிறகு மாவட்டம் வாரியாக மாவட்ட ஆட்சித் தலைவர்களிடத்திலே தொடர்பு கொண்டு பேசினேன், சிறு விவசாயிகளிடம் எந்த இடத்திலும் ஜப்தி செய்யப்படவில்லை.

இரண்டாவது பகுதி, அவர்கள் இரண்டாயிரம் ரூபாய்க்குத் தான் கொடுத்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அதைப் பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆய்வு செய்து அது குறித்து எப்படி முடிவு எடுக்க வேண்டுமென்பதைப் பற்றி தெரிவிக்கின்றபொழுது, முடிவை அரசு அறிவிக்கும்,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** திரு, ச. காந்திராஜன்.

**திரு. ச. காந்திராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது எங்களுடைய வேடசந்தூர் பகுதியில் எல்லாம் கிணற்றிலே சுத்தமாகத் தண்ணீர் இல்லாத மிக வறண்ட நிலை இருக்கிறது. மத்திய ஆராய்ச்சி நிறுவனம் என்கிற செண்ட்ரல் கிரவுண்ட் வாட்டர் போர்டும் அதனுடைய அறிக்கையிலேயும் நிலத்தடி நீர் இல்லை என சொல்லியிருக்கிறது. எனவே, அப்படிப்பட்ட இடங்களில் எல்லாம் கிணற்றை ஆழப்படுத்துவதற்குப் பதிலாக ஆழ்குழாய்க் கிணறுகள் போடுவதற்கு அரசாங்கம் கடன் தர முன் வருமா? என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைப்பற்றிய கேள்வியைத் தனியாக சம்பந்தப்பட்ட இலாகாவிலே கேட்டால் அவர்கள் சொல்லுவார்கள்,

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. வி. தண்டாயுதபாணி

**திரு. வி. தண்டாயுதபாணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிணற்றை ஆழப்படுத்தும் நோக்கத்துடன்தான் சிறு விவசாயிகளுக்கு 2,500 ரூபாய் கொடுத்தார்கள். இது 1974 ஆம் ஆண்டிலிருந்தே கொடுக்கப்பட்டு வந்திருக்கின்றது. மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் காலத்திலும் கொடுக்கப்பட்டது. கடன் நிவாரணச் சட்டத்தையே மறுபரிசீலனை செய்து, சிறு விவசாயிகளுக்கு எந்த அளவுக்குப் பலன் கிடைக்குமோ அதைச் செய்யவேண்டும் என்கிற நோக்கத்தோடு அந்த 2,500 ரூபாயிலே சிலபேர் 2,000 வரையிலும் கட்டி, முதல் வட்டி கட்டியிருக்கின்றார்கள், 3,000 வரையிலும் வட்டி கட்டியிருக்கிறார்கள் இதைத் தக்காவி லோன் என்று சொல்வார்கள். எங்கள் பகுதியிலே சிறு விவசாயிகள் கிணற்றிலேயும் தண்ணீர் கிடையாது, விவசாயமும் கிடையாது. ஆனால் அந்த விவசாயிகளிடம் போன வருடம் 350 ரூபாய் வசூல் செய்தார்கள். இந்த வருடம், ஆடு மாடுகள் எல்லாவற்றையும் கவர்ன்மெண்ட் பவுண்டிலே வைத்திருக்கிறார்கள். இந்தக் கடனை ரத்துச் செய்வது குறித்து மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களோடு கலந்து முடிவு எடுக்கின்ற அதே நேரத்திலே முதலிலே பவுண்டிலே அடைக்கப்பட்ட ஆடு மாடுகளை விட்டுவிட, அரசு பரிசீலனை செய்யுமா? என்று கேட்டுக் கொள்ளவிரும்புகிறேன்,

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. கடனைத் தள்ளுபடி செய்வது பற்றி அரசு தனியாக ஆய்வு செய்யும் என்பதை முதலிலே தெரிவித்திருக்கின்றேன். மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல, ஜப்தி செய்யப்பட்டது ஏழைகளிடத்தில் அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன், உங்களுடைய மாவட்டத்தில் ஒருவருடைய பெயரை நான் படிக்கின்றேன். அப்படியென்றால் உங்களுக்குத் தெரிந்திருக்கும். ஏ. எம். கண்ணப்பன் என்பவர் சிறு விவசாயக் கடனாக ரூ. 3,984 பாக்கி என்ற அளவில் அவரிடம் ஜப்தி செய்யப்பட்டிருக்கிறது. அவர் ஏழை இல்லையென்று மாவட்ட ஆட்சித் தலைவர் சொல்லியிருக்கிறார். நீங்கள் அவர் ஏழை என்று சொன்னால் அதை ஆய்வு செய்கிறேன். அப்பொழுது சொல்லலாம் ஏழையா, இல்லையா என்று,

**திரு. வி. தண்டாயுதபாணி :** ஏழைதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. பி. ராஜு



**திரு. கே. பி. ராஜு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறு விவசாயிகள் மழை இல்லாத காரணத்தால் எங்கள் கோவை மாவட்டத்தில் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்தச் சிறு விவசாயிகள் பயிர்களுக்கென்று வாங்கிய கடனை அரசு ரத்து செய்யுமா....

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது கிணறு வெட்டுவதற்குக் கொடுத்த கடன். நீங்கள் கேட்கிற கடன் கூட்டுறவுத் துறையிலே வரும்.

வினா எண். 79. திரு. ஆர். சிங்காரம். மாண்புமிகு கல்வி அமைச்சர்.

79—

**தமிழ் ஆய்வு அலுவலர் பணியினை வட்டார அளவில் விரிவுபடுத்துதல்.**

***892—திரு. ஆர். சிங்காரம் :**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா :—

(அ) தற்போது தமிழக அரசால் மாவட்டந்தோறும் அறிமுகம் செய்யப்பட்டுள்ள தமிழ் ஆய்வு அலுவலர் (T.R.O.) பணியினை வட்டார அளவில் விரிவுபடுத்தி, தமிழ் ஆய்வு உதவியாளர்களை (T.R.A.) பணியமர்த்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது இல்லை.

(ஆ) எனவே, இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. ஆர். சிங்காரம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய புரட்சித் தலைவி தமிழக முதல்வர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் தமிழை கட்டாயப் பாடமாக்க வேண்டுமென்று சொல்கின்ற இந்த நேரத்தில், மாவட்ட அளவில் தமிழைக் கட்டாயப் பாடமாக்க வேண்டுமென்று சொல்லுகிற இந்த நேரத்தில், இந்த T.R.O. பணியை வட்டார அளவில் விரிவுபடுத்தினால் அதற்கு இன்னும் ஆதாரமாக இருக்கும் என்ற காரணத்தினாலேயும்தான் இந்தக் கேள்வியை நான் கேட்டிருக்கிறேன். அதை மீண்டும் பரிசீலனை செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழை ஆட்சிமொழியாக ஆக்கியதற்குப் பிறகு ஒவ்வொரு மாவட்டங்களிலேயும், அரசு அலுவலகங்களில் தமிழ்மொழி சரியாகப் பயன்படுத்தப்படுகிறதா, ஆங்கில வார்த்தைகளுக்கேற்ப தமிழ் வார்த்தைகள் உபயோகப்படுத்தப் படுகின்றதா என்பனவற்றையெல்லாம் அறிவதற்கும், அவர்களுக் குரிய ஆலோசனைகள் வழங்குவதற்கும் உதவி இயக்குநர்கள் தலத்தில் முன்னாலேயே இந்தப் பணி அமர்த்தப்பட்டிருந்தது. ஒரு 10 அல்லது 11 மாவட்டங்களில் அந்த உதவி இயக்குநர்கள் பதவி காலியான சூழ்நிலையில் முந்தைய அரசு அதற்குப் பதிலாக தமிழ் ஆய்வு அலுவலர்கள் என்கிற பெயரோடு இந்த நியமனம் செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே பல மாவட்டங்களில் உதவி இயக்குநர்களும், பல மாவட்டங்களில் இந்தத் தமிழ் ஆய்வு அலுவலர்களும் இப்போது இந்தப் பணியைச் செய்துக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக சென்ற ஆண்டு நியமனம் செய்யப்பட்ட இந்தத் தமிழ் ஆய்வு அலுவலர்களுடைய பணி எந்த அளவில் நடைபெற்றிருக்கிறது, அதனால் என்ன பயன் ஏற்பட்டிருக்கிறது என்பதை அரசு ஆராய்ந்து கொண்டிருக்கிறது. ஆகவே அதற்குப் பிறகுதான் இதற்குமேலே இன்னும் விரிவு படுத்தப்பட வேண்டுமா, வட்டார அளவிலே இப்படி அலுவலர் கள் நியமிக்கப்பட வேண்டுமா என்பதைப் பற்றி அரசு முடிவு செய்யும்.

முற்பகல் 9-40

**திரு. ஆர். சிங்காரம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை வட்டார அளவிலே விரிவுபடுத்தினால் தமிழ் வளர்ச்சிக்கு மிகவும் நலமாக இருக்கும் என்று பொதுமக்களும் நாங்களும், குறிப்பாகத் தமிழர்களும் நினைக்கிற காரணத்தால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வதுபோல் விரைந்து வட்டார அளவில் விரிவுபடுத்த அரசு ஆவன. செய்யுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். இராம வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்னாலேயே இதற்கு விடையளித்து விட்டேன். ஆய்வு முடிந்ததற்குப் பிறகு தேவையானால், எந்த அளவில் எந்தத் தகுதியில் இப்படிப்பட்ட அலுவலர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்பதை எல்லாம் அரசு பரிசீலித்து இறுதியாக முடிவு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. பீட்டர் அல்போன்ஸ்

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் மொழிக்கு புதிய அந்தஸ்தைக் கொடுக்கிற வகையில் ஆங்கிலத்தில் உள்ள வார்த்தைகளுக்கு எல்லாம் தமிழில் அர்த்தம் கண்டுபிடிப்பதற்காக ஒரு ஆய்வு நடத்தவேண்டும் என்றும் அதற்காகத் துணை இயக்குநர்கள்





நியமிப்பது சம்பந்தமாக அரசு பரிசிலித்து வருகிறது என்றும் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், ஏற்கெனவே ஆங்கிலத்தில் இருக்கிற சொற்களை எல்லாம் தமிழில் மொழி பெயர்ப்பதற்கும் அதிலும் குறிப்பாக சட்டப் புத்தகங்களை மொழிபெயர்ப்ப தற்கும் ஒரு கமிஷன் நியமிக்கப்பட்டு. அந்த கமிஷனில் 25 பேருக்கு மேல் வேலை பார்த்துக்கொண்டு எந்தவிதமான வேலையும் செய்யாமல் சம்பளம் மட்டும் வாங்கிக் கொண்டிருக் கிறார்களே, அதற்காக மத்திய அரசு கொடுக்கின்ற காகிதத்தைக் கூட அதாவது தமிழ் மொழியிலே மொழி பெயர்ப்பதற்காக To encourage Regional language என்ற அடிப்படையில் மத்திய அரசு இலவசமாக காகிதங்களை சப்ளை செய்யத் தயாராக இருந்தபோதும் கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாக அந்தக் காகிதங்களைக் கூட வாங்குவதற்கு சக்தி இல்லாமல் ஒரு நிறுவனம் வெறுமனே சம்பளம் மட்டும் வாங்கிக் கொண்டு இருக்கிறதே, அதற்கு அரசு என்ன செய்ய உத்தேசித்து இருக் கிறது என்பதைப் பற்றி நான் தெரிந்துகொள்ள ஆசைப்படு கிறேன்,

**மாண்புமிகு திரு, இராம. வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேளவி அரசு அலுவலகங்களில் நடைமுறையில் பழக்கத்தில் இருந்து வருகிற அந்த அரசு நடவடிக்கைகளுக்காக உகந்த வகையில் தமிழைப் பயன் படுத்துவது குறித்து, அதற்கு உதவி செய்கிற அலுவலர்கள் பற்றிய கேள்வி, ஆகவே மாண்புமிகு உறுப்பினர் கேட்கிற அந்த பொருள் பற்றி தனியாகக் கேள்வி கேட்டால் அந்தத் துறைக்குப் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிப்பார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண், 80—திரு. இரா, நடேசன், திரு, கு, லாரன்ஸ், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்,

**80**

**குடும்ப அட்டைதாரர்களுக்கு 25 கிலோ அரிசி**

*3 **திரு, இரா. நடேசன் :**

**திரு, கு, லாரன்ஸ் :**

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) 5 நபர்களுக்கு மேல் உள்ள குடும்ப அட்டைதாரர் களுக்கு மாதத்திற்கு குறைந்தபட்சம் 25 கிலோ அரிசி வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் வழங்கப்படும் ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) 5 நபர்களுக்கு மேல் உள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு மாதத்திற்கு குறைந்தபட்சம் 25 கிலோ அரிசி வழங்கும் திட்டம் அரசிடம் இல்லை,

(ஆ) வினாவிற்கு இடமில்லை,

திரு. அரா. நடேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. கன்னியாகுமரி மாவட்டம் மலையோரப் பகுதி நிறைந்த இடம். அங்கே ஏழைகள். தொழிலாளர்கள் ஆகியோர் கூடுதலாக வாழ்கிறார்கள், அப்படிப்பட்ட இடம் ஆதலால் 1974 ஆம் ஆண்டு முதல் அங்கே ஒரு நபருக்கு இரண்டு கிலோ அரிசி வாரத்திற்கு என்ற அளவில் சட்டபூர்வ ரேஷன் என்று சொல்லி வழங்கப்பட்டு வந்தது, அதற்காக அங்கு பல முறை போராட்டங்கள் நடத்திய பிறகுதான் 1974-ஆம் ஆண்டு முதல் கொடுத்து வந்தார்கள், அங்கு வசிக்கிற மக்கள் எல்லாம் புழுங்கல் அரிசிதான் மூன்று வேளையும் கூடுதலாகச் சாப்பிடுவார்கள், ஆகையினால் கருணை கூர்ந்து அங்கே கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டுமாவது அந்த 25 கிலோ அரிசி கொடுக்க அரசு முன்வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. ஏற்கெனவே நாம் ஒரு குடும்பத்திற்கு 12 கிலோ வரையில் வழங்கி கொண்டு வருகிறோம், அதில் மேற்கொண்டு தேவைப்பட்டால் பச்சரிசி 8 கிலோ தருவதற்கும் தயாராக இருக்கிறோம், ஆனால் புழுங்கல் அரிசி இருக்கிற வரையில் தற்போது அளிக்கப்பட்டுக் கொண்டு வருகிறது, கன்னியாகுமரி மாவட்டத்திற்குத் தனிப்பட்ட முறையில் ஏராளமான விரிசி தரப்பட்டுக்கொண்டு வருகிறது என்பதை மட்டும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்,

[முற்பகல் 9-45]

திரு, இரா, நடேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. கன்னியாகுமரி மாவட்டத்தில் கல்குளம். விளவங்கோடு ஆகிய இரண்டு வட்டங்களையும் பெல்ட் ஏரியா என்ற அவிலே எடுத்துக் கொண்டு. விவசாயம் கூடுதலாக இல்லை, நெல் விவசாயம் இல்லை. அது மட்டுமல்லாமல் அங்கு வருமானம் ஆயிரம் ரூபாய்க்கு குறைந்த குடும்பங்களுக்காவது 25 கிலோ புழுங்கல் அரிசி கொடுத்து உதவ முடியுமா என்று அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. தற்போதைய சூழ்நிலையில் 25 கிலோ தருவது என்பது கடினமான காரியம், விலையையும் மிகக் குறைவாக இந்த அரசு அளித்துக் கொண்டிருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள், புரட்சித் தலைவர் அவர்கள் 2 ரூபாய் 2½ ரூபாய் என்று அரிசி போடுகிற காலம் இது. இந்த கால கட்டத்தில் 25 கிலோ அளிப்பது என்பது தற்போது அதிக விளைச்சல் இருந்தாலும்கூட கொடுக்க இயலாது,



திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் சமுதாயத்தின் இனிய தலைவராம் தமிழக முதல்வர் நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய பிறந்த நாள் அன்றும், தமிழர் திருநாளாம், பொங்கல் திருநாளன்றும் ஆகிய இரு தினங்களில் ஆண்டு வருமானம் 5 ஆயிரம் ரூபாய்க்கு குறைவாக இருக்கிற ஏழைகளுக்கு 25 கிலோ அரிசி வழங்குகிற திட்டத்தை அடுத்த ஆண்டிலிருந்து அளிக்க உணவு அமைச்சகம் பரிசீலனை செய்யுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்த ஆண்டு அமோக விளைச்சல் இருந்தால் அதைப் பற்றி பரிசீலிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ். ஜெயக்குமார்.

திரு. எஸ். ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரேஷன் கார்ட் கேட்டு மனு செய்தவர்களுக்கு 40 நாட்கள் ஆகியும் இதுவரை ரேஷன் கார்ட் ' வழங்கப்படவில்லை என்று புகார்கள் வந்திருக்கின்றன. இதுபற்றி, இத்தனை நாட்களுக்குள். . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜெயக்குமார். கேள்வியையொட்டியதாக இருக்கவேண்டும். கார்டு இல்லாதவர்களுக்குத் தரவில்லை என்பது இந்த கேள்வியிலே வராது. திரு. வ. சத்தியமூர்த்தி.

திரு, வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற போது 12 கிலோவுக்கு கூடுதலாகத் தேவைப்பட்டால் 8 கிலோ பச்சரிசி கொடுக்கப்படும் என்று சொன்னார்கள். பொதுமக்கள், கிராமப்புறத்திலே உள்ள மக்கள் புழுங்கல் அரிசியை விரும்பி வாங்குகிறார்கள். புழுங்கல் அரிசி சாதம் தான் சாப்பிடுகிறார்கள். கட்டாயக் கல்யாணம் செய்து வைப்பதுபோல் பச்சரிசியை நீங்கள் தருகிறோம் என்று தொடர்ந்து கொடுத்துக்கொண்டு வருகிறீர்கள். மத்திய அரசிலேயிருந்து பெறுகின்ற அரிசி பச்சரிசியாக வருமேயானால் அதை புழுங்கல் அரிசியாகப் பெறுவதற்கு ஏதும் நடவடிக்கையை எடுக்க முயற்சிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரும்பாலும் பச்சரிசிதான் அதிகமாக கொடுத்துக் கொண்டு வருகிறோம். அதுபோலவே புழுங்கல் அரிசியும்

தேவைப்படுகிற அளவுக்கு கொடுக்கப்பட்டு வருகிறது. அத்தோடு வெளி மார்க்கெட்டிலேயும் நிறைய புழுங்கல் அரிசி இருக்கிறது. ஆகவே ரேஷன் கடையிலே நாம் தருவது இந்த அளவுக்குத் தந்து கொண்டிருக்கிறோம். அதையும் நாங்கள் ஒழுங்காகத் தருகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செ. பெருமாள்.

திரு. செ. பெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முன்னாள் முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியிலே குடும்ப அட்டைக்கு 20 கிலோ அரிசி பண்டிகைக் காலங்களிலே வழங்கப்பட்டது. நம்முடைய புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலே மீண்டும் குடும்ப அட்டைக்கு 20 கிலோ அரிசி வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதுகூட 12 கிலோவும் 8 கிலோவும் சேர்த்து 20 கிலோவாகத் தருவதற்கு ஆணை பிறப்பிக்கப் பட்டிருக்கிறது. 12 கிலோ அரிசி குடும்ப அட்டைக்கு தரப்படுகிறது. 8 கிலோ வேண்டுமானால் பச்சரிசி வாங்கிக்கொள்வதற்கு ஏற்கனவே உத்தரவு இருக்கிறது. 20 கிலோ தாராளமாக பொங்கல் திருநாளிலே வாங்கிக் கொள்ளலாம் அல்லது தீபாவளித் திருநாளிலே வாங்கிக் கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி. கே. சின்னசாமி.

திரு. வி. கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த புழுங்கல் அரிசியில், பச்சரிசியில் கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் எக்கச்சக்கமான பச்சரிசிகளை டன் கணக்கிலே கொடுத்தார்கள். அது எல்லாம் விற்கப்படாமல் அங்கே ரேஷன் கடையிலே தேங்கிய, புழுக்கல் பிடித்த அரிசி, நான் அதையெல்லாம் சட்டமன்றத்திலேயே அந்த அரிசியைக் கொண்டு வந்து காண்பித்திருக்கிறேன், குறிப்பாக பெரியார் மாவட்டத்தில் புழுங்கல் அரிசியைத்தான் அதிகமாக பயன்படுத்துகிறார்கள். பச்சரியை அங்கே 'ரேஷன் கடையிலே மிகக் குறைவாக வாங்குகிறார்கள். ஆனால் சில இடங்களிலே தமிழ்நாட்டிலே பச்சரிசியை அதிகமான அளவில் வாங்குவதாக தகவல் அறிகிறோம். ஆக அப்படி விரும்புகிற மாவட்டங்களுக்கு அவற்றை ஒதுக்கம் செய்து பச்சரிசிக்குப் பதிலாக புழுங்கல் அரிசியை விரும்புகின்ற இடங்களுக்கு மாறுதல் செய்து தரமுடியுமா?



மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பச்சரிசி கொடுத்தாலும், புழுங்கல் அரிசி கொடுத்தாலும் இந்த ஆட்சியிலே புழுத்துப்போன அரிசியாகக் கொடுக்க மாட்டோம் என்பதை மட்டும் நான் தெளிவாகத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆக பெரியார் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இவர்கள் புழுங்கல் அரிசியை அதிகமாகக் கொடுக்கிறார்கள், பெரியார் மாவட்டத்தை விட கன்னியாகுமரி மாவட்டத்திற்கு எல்லாம்கூட புழுங்கல் அரிசி அதிகமாகத் தேவைப்படுகிறது. இருந்தாலும் புழுங்கல் அரிசி என்பது வேக வைத்து எல்லாம் செய்து தயாரிக்க வேண்டிய அரிசி, பச்சை அரிசி என்பது நேராக வருவது. ஆகவே, பச்சரிசிதான் அதிகமாக அரசு கையிருப்பில் இருக்கிறது. அதோடு ஒரு கோடியே 25 லட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு தர வேண்டியிருக்கிறது. ஆகவே, ஒரேயடியாக புழுங்கல் அரிசி தருவது என்பது கடினமான காரியம். பச்சரிசியும் புழுங்கல் அரிசியும் சேர்த்து தருகிறோம். வேண்டுமானால் பொது மார்க்கெட்டிலே நிறைய கிடைக்கிறது. அதையும் வாங்கிக் கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர்.

முற்பகல் 9—50

மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விஷயத்தில் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் அரசோடு ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. கே. சின்னசாமி அவர்கள் சில பகுதிகளில் பச்சரிசியை விரும்பி வாங்குகிறார்கள், சில பகுதிகளில் புழுங்கல் அரிசியை வாங்குகிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். எனவே, பச்சரிசி விரும்பி வாங்குகின்ற பகுதிகளுக்கு அதை அனுப்பிவிட்டு மற்ற பகுதிகளுக்கு புழுங்கல் அரிசி சப்ளை செய்தால் என்ன என்று கேட்டார். அரசு அதிகாரிகளை வைத்து இது சம்பந்தமாக ஒரு ஆய்வு நடத்த சொன்னால் நடத்த முடியும். ஆனால் அதற்கு தாமதம் ஆகிவிடும். பல நாட்கள் ஆகிவிடும். எனவே இங்குள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் தங்கள் மாவட்டத்திலுள்ள நிலவரம் என்ன? தங்கள் தொகுதிகளிலுள்ள நிலவரம் என்ன, அங்கே பச்சரிசி வாங்குவார்களா அல்லது புழுங்கல் அரிசி விரும்புவார்களா என்பதை இந்த இலாகாவிற்கு ஒரு வாரத்திற்குள் தெரிவித்தால் நீங்கள் குறிப்பிட்டபடி ஆவன செய்ய முற்படுகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்லாமல், மத்திய அரசிடமிருந்து மாநில அரசுக்கு மாதந்தோறும் வழங்கப்பெறும் அரிசியை முழுவதுமாக புழுங்கல் அரிசியாகவே கொடுக்க வேண்டுமென்று ஏற்கெனவே மத்திய அரசுக்கு கோரிக்கை விடுத்திருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர்கள் அனைவர் சார்பிலும் நானே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். எல்லோரும் நன்றி தெரிவிப்பதற்கு கை தூக்குகிறார்கள்.

வினா எண் 81. திரு. எஸ். அன்பழகன். மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

81—

நாமக்கல் வட்டத்தில் புதிய குடும்ப அட்டை வழங்குதல்

*1738—திரு. எஸ். அன்பழகன் :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

நாமக்கல் வட்டத்தில் குடும்ப அட்டை இல்லாதவருக்கு குடும்ப அட்டை புதிதாக வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சேலம் மாவட்டத்தில், நாமக்கல் வட்டத்தில் புதிய ரேஷன் கார்டுகள் கேட்டு விண்ணப்பித்தவர்களில் தகுதியுள்ளவர்களுக்கு புதிய ரேஷன் கார்டுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

திரு. எஸ். அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாகத் திருமணம் செய்து கொண்டு, கூட்டுக் குடும்பத்திலிருந்து தனிக் குடித்தனம் போகும்போது அவர்களுக்கு எந்தப் பொருளைப் பிரித்துக் கொடுத்தாலும் திருப்தி ஏற்படுவதில்லை. காரணம் வீட்டுக்கு வந்த மருமகளிடம் குடும்ப அட்டையில் பங்கு கொண்டுவா என்று கேட்கிறார்கள், (சிரிப்பு) எனவே, அதற்கு முன்னுரிமை வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக திருமணம் செய்துகொண்டவர்கள் புதிதாக மணம் செய்து கொண்ட பிறகு தாங்கள் குடும்பத்திலிருந்து பிரிந்து போகப் போகிறோம் என்று சொன்னால் 'டெலீசன்' அதைச் சொல்லி எங்களுக்கு குடும்ப அட்டை தாருங்கள் என்று கேட்டால் அது தரப்படும். நாமக்கல் வட்டத்திலே மொத்தம் 125 பேர்தான் பொது அட்டைகள் கேட்டார்கள். அதில் 121 பேருக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. 4 பேருக்குத்தான் பாக்கி இருக்கிறது. ஆனால் அந்த வட்டத்தில் இருந்த போலி கார்டுகள் மட்டும் 4,156.



திரு. எஸ். அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் பகுதியில் சிறப்பாக நடந்தது போக அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் தாயுள்ளம் கொண்ட புரட்சித் தலைவி அவர்கள் இந்த அரசுக்கு எவ்வளவு சோதனைகள் எந்த நேரத்தில் எந்த ரூபத்தில் வந்தாலும் அதைத் தாங்கிக் கொண்டு நம்மை நம்பியுள்ள இந்த தாழ்த்தப்பட்ட. பிற்படுத்தப்பட்ட, நலிவுற்ற மக்களுக்கு தீபாவளிக்கு உள்ளாக பாமாயில் கொடுப்பதாக ஒரு நல்ல செய்தியை சொல்லியுள்ளார்கள். இந்த நிலையிலே, அதிகாரிகள் வீடு வீடாக சென்று கணக்கெடுத்து உண்மையிலேயே குடும்ப அட்டை இல்லாதவர்களுக்கு குடும்ப அட்டைகள் வழங்குவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடும்ப அட்டை இல்லாதவர்களுக்கு கட்டாயம் குடும்ப அட்டை தருவதற்கான ஏற்பாடுகளை இந்த அரசு செய்து வருகின்றது. ஒவ்வொரு ஆண்டும் குடும்ப அட்டை தேவைப்படுபவர்களுக்கு கொடுத்துக்கொண்டுதான் வருகிறோம். சென்ற ஆண்டிலே கூட, 1989—ல் 1 லட்சத்து 53 ஆயிரத்து 098 குடும்ப அட்டைகள் கொடுத்திருக்கிறோம். 1990—ல் 95,428 குடும்ப அட்டைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, குடும்ப அட்டைகள் புதிதாக அவ்வப்போது தேவைக்கு ஏற்ற வகையில், மக்கள் தொகை ஏறுகின்றதற்கேற்ப, குடும்பங்கள் பெருகுகின்றதற்கேற்ப தரப்பட்டு வருகின்றன, பாமாயிலைப் பொறுத்த வரையில் உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஏற்கெனவே இந்த அவையிலே அதைச் சொல்லியிருக்கிறார்கள். நல்ல சாத்தியக் கூறுகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்தத் தீபாவளிக்கு கட்டாயம் பாமாயில் கிடைக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 82, திரு. ஏ.டி. செல்லசாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

82—

ஆரம்பச் சுகாதார நிலையம்.

*167 திரு. ஏ.டி. செல்லசாமி :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஒட்டன்சத்திரம் தொகுதியில் தொப்பம்பட்டி, இடைய கோட்டை ஆகிய இடங்களில் ஆரம்பச் சுகாதார நிலையம் துவக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஒட்டன்சத்திரம் தொகுதியில் இடையக்கோட்டை என்னும் கிராமத்தில் ஏற்கெனவே ஒரு ஆரம்பச் சுகாதார நிலையம் இயங்கி வருகிறது. தொப்பம்பட்டியில் புதிதாக ஆரம்பச் சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறு ஏதுமில்லை.

முற்பகல் 9.55

திரு. ஏ.டி. செல்லசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொப்பம்பட்டியை ஒட்டி 40 கிராமங்கள் இருக்கின்றன. மேலும் தொப்பம்பட்டியில் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் உள்ளது. எனவே அலுவல் சம்பந்தமாகவும் பல்வேறு பணிகளுக்காகவும் மக்கள் அங்கே செல்ல வேண்டிய சூழ்நிலை உள்ளதால், அங்கே ஆரம்பச் சுகாதார நிலையம் கண்டிப்பாகத் தேவைப்படுகிறது. மற்றும் பெரியார், சேலம், தருமபுரி மாவட்டங்களிலிருந்து பழனி திருக்கோவிலுக்கு நடைப் பயணமாக வரும் பக்தர்கள் தொப்பம்பட்டி வழியாகத்தான் வர வேண்டும். எனவே தொப்பம்பட்டியில் ஆரம்பச் சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் 1,11,800 மக்கள் தொகை இருக்கிறதென்று கணக்கு கொடுக்கப் பட்டிருக்கிறது. அரசாங்கத்தினுடைய இலக்குப்படி 30,000 பேர்களுக்கு ஒரு ஆரம்பச் சுகாதார நிலையம் என்ற இலக்கை நாம் வைத்திருக்கிறோம். அதன்படி பார்த்தால் இந்த ஒன்றியத்திலே 4 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் ஏற்கெனவே இயங்கி வருகிற காரணத்தாலேதான் தொப்பம்பட்டியிலே அப்படிப்பட்ட சாத்தியக்கூறு இல்லை என்று நான் சொன்னேன். ஆனால் இன்றைக்கு அவர்கள் தொப்பம்பட்டி பற்றி தனிப்பட்ட முறையிலே ஜனத்தொகை பற்றியும் அங்கே மக்கள் அதிகமாக வந்து போகிறார்கள் என்பது பற்றியும் சொல்கிற காரணத்தால், இந்த நான்கு ஆரம்பச் சுகாதார நிலையங்கள் இருப்பது போதுமா என்பதை தனிப்பட்ட முறையிலே ஆய்வு செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.





திரு. ஏ. டி. செல்லசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியான ஒட்டன்சத்திரம் தொகுதியில் ஒட்டன்சத்திரத்தில் ஆரம்பச் சுகாதார நிலையம் இருந்தது. இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் அது அரசு மருத்துவமனையாக மாற்றப்பட்டது. பின்பு ஒட்டன் சத்திரத்தில் இருந்த அரசு மருத்துவமனையை முன்பு இருந்த தி.மு.க. அரசு ஆரம்பச் சுகாதார நிலையமாக மாற்றியது. 4 இலட்சம் பேர்களுக்கு மேல் மக்கள் தொகை கொண்ட என்னுடைய தொகுதியில் அரசு மருத்துவமனை இல்லாத நிலையில்......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: செல்லசாமி, இது தொப்பம் பட்டி, இடையக்கோட்டையில் ஆரம்பச் சுகாதார நிலையம் ஆரம்பிப்பது பற்றியது. இன்னொரு ஊர் பற்றிக் கேட்டால், அமைச்சரவர்களிடம் பதில் இராது. இந்த இரண்டு ஊர்கள் பற்றிக் கேட்கிறீர்களா?

வினா எண் 83. திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

83—

மருத்துவக் கல்லூரியில் மாணவர் சேர்க்கை எண்ணிக்கையை அதிகரித்தல்.

*251 திரு. ம. சின்னசாமி :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மருத்துவக் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை எண்ணிக்கையை அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மருத்துவக் கல்லூரிகளில் சேர அதிக எண்ணிக்கையில் மாணவர்கள் ஆண்டுதோறும் விண்ணப்பம் செய்கிறார்கள். குறைந்த அளவில்தான் மாணவர்களை இது வரை சேர்த்து வருகிறோம். எனவே கூடுதல் இடங்களை ஒதுக்க வேண்டும் என்ற கோரிக்கை மாணவர்களிடமிருந்து வந்த வண்ணம் உள்ளது.

ஆனால் மருத்துவர்களின் எண்ணிக்கையை கூடுதலாக்க வேண்டிய தேவை உள்ளதா, ஏற்கெனவே உள்ள கல்லூரிகளில் இடங்களை அதிகரிக்க போதிய வசதிகள் உள்ளனவா, இந்திய மருத்துவக் கழகம் அதற்கு ஒப்புதலைத் தருமா போன்ற கருத்துக்களை அடிப்படையாக வைத்து ஆய்வு செய்து அரசு நடவடிக்கை எடுக்க உள்ளது.

திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வோர் ஆண்டும் மேல்நிலைப் பள்ளிகளிலே தேறிவரும் மாணவர்களில் மருத்துவக் கல்லூரிக்குத் தகுதியான மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதாகவும், அதிகமான மாணவர்கள் மருத்துவக் கல்லூரிகளில் சேர விரும்புவதாகவும் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படியானால் ஒவ்வோர் ஆண்டும் மாணவர்கள் அதிகமாக வருகின்ற போது, மருத்துவக் கல்லூரிகளின் எண்ணிக்கை அதே அளவில் தான் இருக்கிறது. ஆகவே அதிகப்படியான மருத்துவக் கல்லூரிகளை அரசுத் துறையிலோ அல்லது தனியார் துறையிலோ ஆரம்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னபடி பொது மக்களிடத்திலேயிருந்தும், சட்டமன்ற உறுப்பினர்களிடத்திலே இருந்தும், மாணவர்களிடத்திலே இருந்தும் அதிகமான எண்ணிக்கையிலே மருத்துவப் படிப்புக்கு மாணவர்களை சேர்க்க வேண்டுமென்ற கோரிக்கை வந்து கொண்டுதான் இருக்கிறது. நான் அதைத்தான் சொன்னேன். இந்தக் கேள்வியைப் பொறுத்தவரையில், ஏற்கனவே உள்ள மருத்துவக் கல்லூரியில் உள்ள இடங்களை அதிகப்படுத்த முடியுமா என்ற அடிப்படையிலேதான் இந்தக் கேள்வி கேட்கப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையிலேதான் பதில் சொல்லப்பட்டிருக்கிறது. எனவே தான் சொன்னேன், மருத்துவக் கழகம் எங்கே தேவை இருக்கிறது என்பதைப் பார்த்து, எந்தெந்த மருத்துவக் கல்லூரியிலே கூடுதல் இடங்களை ஒதுக்க முடியுமென்பதை ஆய்வு செய்து, நடவடிக்கை எடுக்குமென்று சொன்னேன். புதிய மருத்துவக் கல்லூரிகளை ஆரம்பிப்பதைப் பொறுத்தவரையில் அரசாங்கத்தினுடைய கொள்கை முடிவாக இருக்கின்ற காரணத்தால் மாண்புமிகு முதல்வர் அவர்களோடு யோசித்து, பின்னால்தான் அதைப் பற்றி அறிவிக்க முடியும்.

திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவக் கல்லூரிகளில் மாணவர்கள் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதற்கு மருத்துவக் கவுன்சிலிடம் அனுமதி வாங்க வேண்டுமென்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். இந்த அதிகாரத்தை மத்திய அரசை வற்புறுத்தி, மாநில அரசே பெறுவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, இது போன்ற அதிகாரங்களை மாநில அரசு பெறுவது என்பது அவ்வளவு சரியாக இராது. காரணம், இந்தியா முழுவதும் ஒரே மாதிரியான, சரியான ஒரு முறை கடைப்பிடிக்கப்பட வேண்டுமென்ற காரணத்தால்தான் இந்தக் கட்டுப்பாடு



அங்கே வைத்திருக்கிறார்கள். ஒரு மாநிலத்திற்கு ஒரு மாநிலம் இந்தப் படிப்பைப் பொறுத்தவரையில் மிக நெருங்கிய தொடர்பு இருப்பதால், இதை நாம் பெறுவதற்கு வாய்ப்பு இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ்.எஸ். ராமசுப்பு.

திரு. எஸ்.எஸ். ராமசுப்பு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மெடிக்கல் காலேஜில் ஸ்போர்ட் கோட்டாவிலும் மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள். ஆனால் அது மிகவும் குறைவான எண்ணிக்கையில் அங்கே மாணவர்கள் சேர்க்கப்படுவதால், அதிகமான இடங்களை அவர்களுக்கு ஒதுக்கி விளையாட்டில் திறமையான மாணவர்களை அதிகமான அளவில் சேர்ப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.00

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களை ஊக்குவிப்பதற்காகத்தான் அவ்வாறு கொடுக்கப்படுகிறதே தவிர, விளையாடிவிட்டு வந்த அத்தனை பேருக்கும் வாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்பது அல்ல. எனவே, அவர்களை ஊக்குவிப்பதற்காகத்தான் கொடுக்கிறோம், இன்டர்நேஷனல் லெவலில் விளையாடியவர்களுக்கு முதலிடம் கொடுக்கப்படுகிறது. அப்படிப்பட்டவர்கள் மிகக் குறைவாகத்தான் வருகிறார்கள். எனவே அப்படி இன்டர்நேஷனல் லெவலில் அதிக அளவில் விளையாடிவிட்டு வருகிறவர்களைப் பற்றி எதிர்காலத்தில் யோசிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. விசுவநாதன்.

திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மருத்துவக் கல்லூரிகளில் இடம் கிடைக்காத திறமையான நூற்றுக்கணக்கான மாணவர்கள் வெளி மாநிலங்களுக்குச் சென்று சேருகின்ற நிலை இருக்கிறது. அதைத் தடுப்பதற்காகவாவது நம்முடைய அரசு தனியார் கல்லூரிகளையோ அல்லது அரசு கல்லூரிகளையோ அதிக அளவில் துவக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் அதைத்தான் தெரிவித்தேன். அரசாங்கத்தில் தற்போதுள்ள கல்லூரிகளில் அதிகமான இடத்தை ஒதுக்குவது சம்பந்தமாகத்தான் இந்த மூலக் கேள்வி கேட்கப்பட்டிருக்கிறது. என்ன காரணத்திற்காக அதிக இடங்கள் ஒதுக்கப்படவில்லை என்பதை ஆய்வு செய்து தருகிறோம் என்று தெளிவுபடுத்தியிருக்கிறேன். புதிதாக ஆரம்பிக்கக்கூடிய கல்லூரிகளைப் பற்றி அது கொள்கை முடிவாக இருக்கிற காரணத்தால் அதைப்பற்றி தனியாக யோசித்து, மாண்புமிகு முதல்வர் அவர்களுடன் பேசித்தான் அதைப்பற்றி முடிவு எடுக்கவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் வெ. புருஷோத்தமன்.

டாக்டர் வெ. புருஷோத்தமன்: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, மருத்துவக் கல்லூரிகளில் பட்ட மேற்படிப்பு வகுப்புகளில் தேவைக்கு அதிகமான மாணவர்கள், அதிலும் துறை சம்பந்தப்பட்டவர்களையே நியமனம் செய்வது பற்றி அரசுக்கு தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தேவைக்கு அதிகமான எண்ணிக்கையில் மாணவர்களைச் சேர்ப்பது அரசுக்குத் தெரியுமா என்பது கேள்வி.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் கல்வி பற்றி கேட்கிறார்கள் என்று கருதுகிறேன். இதிலே அதிகமான எண்ணிக்கையில் சேர்க்கப்படுவதில்லை. எவ்வளவு இடம் நிர்ணயிக்கப்படுகிறதோ அவ்வளவுதான் சேர்க்கப்படுகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதை வைத்து, எந்த உயர் கல்வியில் அதிகமான எண்ணிக்கையில் தேவையில்லாமல் இருக்கிறது அல்லது எதில் குறைவாக இருக்கிறது என்பதைப் பார்த்து அதைச் சீர் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 84— திரு. ம. தனபால் — மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

84—

குருவன்மேடு வரை செல்லும் பேருந்தை ரெட்டிப்பாளையம் வரை நீட்டித்தல்.

*406 திரு. ம. தனபால் :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தாம்பரத்திலிருந்து குருவன்மேடு வரை செல்லும் பேருந்தை (தடம் எண் 55-எம்) மக்கள் நலன் கருதி ரெட்டிப்பாளையம் வரை நீட்டிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. ம. தனபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களிடமிருந்து 'ஆம்' என்ற பதிலை எதிர்பார்த்தேன். ஆனால் 'இல்லை' என்ற பதில் எனக்கு ஏமாற்றத்தை





அளித்திருக்கிறது. தமிழகத்தின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் இன்றையதினம் தமிழகத்திலே எந்தப் பகுதியிலும் போக்குவரத்து வசதியே இல்லை என்ற ஒரு குறை இருக்கக்கூடாது என்று சொல்லியிருக்கிற சூழ்நிலையில், ஆயிரம் பேர் மக்கள் தொகை இருந்தால், 35 கிலோ மீட்டருக்குள்ளாக இருந்தால் அந்தப் பகுதிக்கு நகரப் பேருந்து வசதி கண்டிப்பாக செய்து தரப்படும் என்ற ஒரு ஆணையை அறிவித்திருக்கிறார்கள். இந்த நிலையில் ரெட்டிப்பாளையம் பகுதி 1,000 பேருக்கு மேலாகவும் 35 கிலோமீட்டருக்குள்ளாகவும் இருப்பதால் அந்தப் பகுதிக்கு பேருந்து விட அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து, அங்கே நகரப் பேருந்து போக்குவரத்து நடக்க ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட இடம் செங்கல்பட்டு—எம். ஜி. ஆர். மாவட்டம் வடக்குப்பட்டிலிருந்து அந்தப் பகுதிக்கு 10 நடைகள் பேருந்துகள் இயக்கப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ம. தனபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதிக்கு ஒரே ஒரு பேருந்துதான் சென்று கொண்டிருக்கிறது. ஆனால் அந்தப் பகுதியைச் சுற்றியுள்ள பல கிராமங்களில் இருக்கும் மக்கள் ரெட்டிப்பாளையத்திற்கு, கிட்டத்தட்ட குருவன்மேட்டிலிருந்து 3–4 கிலோ மீட்டருக்கு அப்பால் இருப்பதால், அங்கேயிருந்து நடந்து சென்றுதான் பஸ் ஏறுகின்ற சூழ்நிலை இருக்கிறது. அந்த நிலைமையைப் போக்க அந்தப் பகுதிக்கு போக்குவரத்து வசதிகளைச் செய்துதர ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரெட்டிப்பாளையம் 1,000 மக்கள் தொகைக்கு மேல் இருப்பதாகக் குறிப்பிட்டார்கள். அதற்கு இப்போது பேருந்து இருக்கிறது. ஆகவே மீண்டும் பேருந்துகள் விடப்பட அரசிடம் உத்தேசம் ஏதும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 85. டாக்டர் ச. சுந்தரராஜ் —மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

85—

மானாமதுரைக்கு சூசையப்பர்பட்டி வழியாக நகரப்பேருந்து.

* 1203 டாக்டர். எஸ். சுந்தரராஜ் :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பரமக்குடியிலிருந்து மானாமதுரைக்கு சூசையப்பர்பட்டி வழியாக நகரப்பேருந்து விடப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

முற்பகல் 10-05

டாக்டர் ச. சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி ஆட்சிக் காலத்தில் கிராம மக்களுக்கு வேண்டிய அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்க முன்னுரிமை அளிக்கப்பட்டு கிராம மக்களின் நலனை பாதுகாத்து வருகிறார்கள். கீழபார்த்தனூர், வடக்கூர், குடியூர், குசையப்பர்பட்டி, கரிசல்குளம் ஆகிய கிராமங்களில் உள்ள மக்கள் பேருந்துகளில் ஏறிச் செல்வதற்கு, பள்ளி மாணவ மாணவியர்கள் பள்ளிக்குச் செல்ல, வியாதியஸ்தர்கள் மற்றும் கர்ப்பிணி பெண்கள் மருத்துவமனைக்கு செல்லவும், பயணிகள் தங்களுடைய குறிப்பிட்ட இடங்களுக்குச் செல்லவும், கருணை உள்ளம் கொண்ட மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக் காலத்தில் முக்கியத்துவம் கொடுத்து பேருந்துகளை விட அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குசையப்பர்பட்டியைப் பற்றி குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள். அங்கே ஜீப் கூட செல்ல முடியாத குறுகிய பாதைகளாக அங்கே பாதைகள் இருக்கின்றன. பாதைகளின் குறுக்கே பாலம் இருக்கிறது. அந்தப் பாலமும் பழுதடைந்திருக்கிற காரணத்தால், அங்கே இப்போது பேருந்துகளை இயக்கும் சாத்தியக்கூறு இல்லை.

டாக்டர் ச. சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு முறையும் கேட்கும்போது, பாலம் கட்டப்படவில்லை, சாலைகள் போடப்படவில்லை என்று பல்வேறு காரணங்களைச் சொல்லி வருகிறார்கள். அந்தக் கிராமத்து மக்கள் தங்களுடைய பகுதிகளிலிருந்து மற்ற நகரப் பகுதிகளுக்குத் தொடர்பு கொள்ள கிட்டத்தட்ட நான்கு கிலோமீட்டர் செல்ல வேண்டியிருக்கிறது. மறு பக்கத்திலே ஐந்து கிலோமீட்டர் நடந்து செல்ல வேண்டிய நிலை இருக்கிறது. அவ்வாறு நடந்துசென்றாலும்கூட தூர வேகப் பேருந்துகள் அங்கே நின்று அவர்களை ஏற்றிச் செல்ல மறுக்கின்றன. ஆகவே அவர்களுடைய உடனடித் தேவைகளை முன்னிட்டு....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு குறிப்பிட்ட பகுதியில் விட வேண்டிய பஸ் பற்றி சொல்லுகிறார்கள். இதிலே மற்ற பஸ்களைப் பற்றிய கேள்வி வராது,





டாக்டர் ச. சுந்தரராஜ்: அந்த ஊர் வழியாகச் செல்வதால் சொல்லுகிறேன். ஆகவே அந்த தூர வேகப் பேருந்துகள் அந்தக் கிராமங்களில் கிராம மக்கள் நிற்கிற இடத்திலே நின்று, அவர்களை ஏற்றிக்கொண்டு வருவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி ஆட்சியில், பேருந்துகள் எந்தெந்த பகுதிகளில் எங்கெங்கு நிறுத்தப்பட வேண்டுமென்று கருதுகிறார்களோ, அந்த இடங்களையெல்லாம் குறிப்பிட்டுக் காட்டினால் பேருந்துகள் நிறுத்தி பொது மக்களை அதிலே ஏற்றிக் கொண்டு வருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 86—திரு. எஸ். எஸ். ராமசுப்பு—மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

86—

கீழப்பாவூர் வட்டத்தில் கூட்டுக்குடிநீர்த் திட்டம்.

* 89. திரு. எஸ். எஸ். ராமசுப்பு:

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர், கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) ஆலங்குளம் தொகுதி, கீழப்பாவூர் வட்டாரத்தைச் சேர்ந்த அதிசயபுரம், ராஜகோபாலபேரி, ராமனூர், கலிங்கப்பட்டி முதலிய ஊர்களை இணைத்து கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அத்திட்டம் நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): திட்டம் ஏதும் நடப்பு நிதியாண்டில் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்ப்பாவூர் வட்டாரத்தைச் சேர்ந்த அதிசயபுரம், ராஜகோபாலபேரி, ராமனூர், கலிங்கப்பட்டி முதலிய நான்கு கிராமங்களும் வி. கே. புதூர் ஊராட்சிக்கு உட்பட்டக் கிராமங்களாகும். ஆனால் வி. கே. புதூருக்கு அருகில் சிற்றாறு

இருக்கிறது. அந்த சிற்றாறிலிருந்து ஒரு சோர்ஸை உருவாக்கித் தண்ணீரைக் கொடுத்தார்கள். அப்போது அந்த குடிநீர்த் திட்டத்தில் இந்த 4 கிராமங்களும் இணைக்கப்பட்டிருந்தன. ஆனால் அந்த சோர்ஸ் போதுமானதாக இல்லை என்பதால் வி.கே. புதூருக்கு மட்டும் தண்ணீர் கொடுத்துவிட்டு இந்த 4 கிராமங்களையும் விட்டுவிட்டார்கள். ஆகவே மீண்டும் சிற்றாறில் இன்னுமொரு சோர்ஸை உருவாக்கி—மாண்புமிகு புரட்சித் தலைவி ஆட்சிக் காலத்தில் தண்ணீர் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டுமென்று பட்ஜெட்டில் சொல்லப்பட்டிருப்பதால்-அந்த 3 கிராமங்களின் மக்களுடைய முக்கியமான குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்து வைக்க இந்த அரசு முன்வருமா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கேள்விக்கு நடப்பு நிதியாண்டில் இந்த திட்டம் பரிசீலனையில் இல்லை என்று கூறினேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியிருக்கிற பகுதிகள் ஏற்கெனவே பகுதி அளவில் குடிநீர் வசதியைப் பெற்றிருக்கிற கிராமங்களாகும். மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை நடப்பு நிதியாண்டில் இல்லை என்றாலும்—அடுத்த நிதியாண்டில் அதை அரசு பரிசீலித்து ஆவன செய்யும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாமிரபரணி திட்டத்தின் மூலமாக ஆலங்குளம், சங்கரன்கோவில் ஆகியவற்றுக்கு ஒரு குடிநீர்த்திட்டம் இருக்கிறது. அதைப் போலவே தாமிரபரணியிலிருந்து இன்னுமொரு குடிநீர்த் திட்டத்தை உருவாக்கி சேந்தமரம், அதிசயபுரம், அச்சம் கொண்டம், இலட்சுமிபுரம், வி.கே. புதூர் ஆகியவைகளை யெல்லாம் இணைந்து சேந்தமரம் வரை சென்றால் பல கிராமங் களுக்கு குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க வசதியாக இருக்கும் என்பதால் தாமிரபரணியிலிருந்து ஒரு திட்டத்தை உருவாக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுகிற திட்டம், தீவிர பரிசீலனைக்குப் பிறகு, சாத்தியக்கூறுகளை ஆராய்ந்த பிறகுதான் அது பற்றித் தெரிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அவருடைய கோரிக்கையை பரிசீலனைக்கு இந்த அரசு எடுத்துக்கொள்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர்; திரு. இரா. பழனிசாமி.

முற்பகல் 10.10

திரு. இரா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த பல ஆண்டுகளுக்கு முன்பு கூட்டுக் குடிநீர்த் திட்டம் என்ற பெயரிலே 4, 5 குடியிருப்புகளுக்கு பல மேல்நிலைத் நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டி, குடிநீர் வழங்கப் பட்டுக் கொண்டிருந்தது. சேலம் மாவட்டத்தைப் பொறுத்த வரை....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்குத்தான் நான் முதலிலேயே சொன்னேன். இதிலே துணைக் கேள்வி என்றால், அதை மாத்திரம், கூட்டுக் குடிநீர்த் திட்டம் என்ன ஆயிற்று என்பதோடு கேள்வியை நிறுத்துங்கள். இதிலே கேள்வி வராது. நீங்கள் கேட்கிற சேலம் மாவட்டத்திலே அமைச்சருக்குத் தெரியும் என்பதற்காக நீங்கள் கேட்கக் கூடாது!

திரு. இரா. பழனிசாமி: பொதுவான கேள்விதான். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 4, 5 குடியிருப்புகளுக்கு மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி அவை இப்போது வறண்டு போய்விட்டது. அதுபோன்ற இடங்களில் இப்போது குடிநீர்ப் பிரச்சினை மிகவும் கடுமையாக இருக்கின்றது. அதுபோன்ற இடங்களை ஆய்வு செய்து நடப்பு ஆண்டிலே அதுபோன்ற இடங்களுக்கு மாற்று ஆழ்துளைக் கிணறுகள் அமைத்து குடிநீர் வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசைப் பொறுத்தவரை இந்த அரசுக்கு ஆணிவேராக விளங்கக்கூடியவர்கள் இந்த நாட்டிலே இருக்கின்ற பெண்கள், அந்தப் பெண்மணிகள் மைல்கள் பல நடந்து, மணிகள் பல கடந்து தண்ணீருக்காக அலைகின்ற அவல நிலை இந்த நாட்டிலே இருப்பதை இந்த அரசு நன்றாக உணர்ந்து இருக்கின்றது. அந்த அடிப்படையிலே இந்த அரசைப் பொறுத்த வரையில் நடப்பு நிதி ஆண்டிலே, குடிநீர் ஓரளவுகூட இல்லாத பகுதிகளுக்கு குடிநீர் வழங்கப்பட வேண்டுமென்று உத்தர விடப்பட்டு இருக்கின்றது. அந்த அளவிலே நிச்சயமாக இப்படிப் பட்ட பிரச்சினைகளையும் ஆராய்ந்து நடவடிக்கை மேற் கொள்ளப்படும் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 87. திரு. எஸ். நாகூர் மீரான்-மாண்புமிகு வனம் மற்றும் மீனளத் துறை அமைச்சர்.

87—

வடகரை கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைத்தல்.

*1500 திரு. எஸ். நாகூர் மீரான்:

*மாண்புமிகு வனம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?*

*(அ) கடையநல்லூர் தொகுதியைச் சார்ந்த வடகரை கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடையநல்லூர் தொகுதியில் வடகரை, பண்பொழி அச்சன்புதூர் போன்ற பேரூராட்சிகளைச் சுற்றி அமைந்துள்ள கிராமம். அங்கு 10 ஆயிரத்துக்கு அதிகமான கால்நடைகள் உள்ளன. எனவே விவசாயிகளின் நலன் கருதி மாண்புமிகு கருணை உள்ளம் கொண்ட புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சிக் காலத்தில் அங்கு ஒரு கால்நடை மருத்துவமனை அமைத்துத் தர அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்காசி தொகுதி மற்றும் கடையநல்லூர் தொகுதியில் 2 மருத்துவமனைகள் இருக்கின்றன. அதுபோல், 9 கிளை நிலையங்களும் இருக்கின்றன,

திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடகரையில் கால்நடை மருத்துவமனைக்கு இடம் தேர்வு செய்து உள்ளார்கள்; மருத்துவ அதிகாரிகள் அங்கே ஆய்வு செய்து இடம் தேர்வு செய்து உள்ளார்கள். பேரூராட்சியும் அதற்கு 2 ஏக்கர் நிலம் ஒதுக்கி உள்ளது. எனவே வரும் ஆண்டிலாவது அந்த கால்நடை மருத்துவமனையை அமைத்துக் தர நம்முடைய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உரிய கருத்துருவை அனுப்பினால், கால்நடைப் பராமரிப்புத் துறை இயக்குநரின் பரிந்துரையைப் பெற்று, புரட்சித் தலைவியின் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

## 2. ஒத்திவைப்புத் தீர்மானம்

### வடஆற்காடு மாவட்டம், திருப்பத்தூர் வனப்பகுதியில் காவலர் ஒருவர் கொலை செய்யப்பட்டது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒத்திவைப்புத் தீர்மானத்தை மாண்புமிகு எதிர்க்கட்சித்தலைவர் மற்றும் மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஆர். சிங்காரம், திரு. பெ. பொன்னுசாமி, திரு எஸ். எஸ். ராமசுப்பு, திரு. எ. சம்பத், திரு. வி. தண்டாயுதபாணி, திரு. சி. ஞானசேகரன் ஆகியோர் வடஆற்காடு மாவட்டம், திருப்பத்தூர் வனப் பகுதியில் வனத்துறை காவலர் ஒருவர் கொலை செய்யப்பட்டார் என்பது பற்றிய பிரச்சினை பற்றி விவாதிக்க இன்றைய பேரவை இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கோரி அறிவிப்பைக் கொடுத்து உள்ளார்கள். இது அவையை ஒத்திவைத்து விவாதிக்கும் அளவுக்கு எவ்வாறு அவசர முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை மிகச் சுருக்கமாக விளக்கக் கேட்டுக்கொள்கிறேன். திரு. சி. ஞானசேகரன்.

முற்பகல் 10 15

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடஆற்காடு அம்பேத்கார் மாவட்டத்தில் வாணியம்பாடி தாலுகாவிலே இருக்கிற ஆலங்காயம் சரகத்திலே கைலாசம் என்ற வனப் பாதுகாவலர் நரசிங்கபுரம் என்ற காட்டிலே பணியாற்றிக் கொண்டிருக்கிறபோது 4 பேர்கள் சந்தனக் கட்டைகளைக் கடத்தி இருக்கிறார்கள். சென்ற 20 ஆம் தேதி இந்த நிகழ்ச்சி நடந்து இருக்கிறது. அதை தடுப்பதற்காக கைலாசம் என்ற 35 வயது வாலிபர், அவர் எங்களுடைய கிராமத்தைச் சேர்ந்தவர். அவர் கடத்துவதைத் தடுத்தபோது அவரை அடித்து, உயிரோடு எரித்து இருக்கிறார்கள் சந்தனக் கடத்தல்காரர்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் சந்தன கட்டைகளே இல்லாமல் போய் விடுமோ என்ற அளவுக்கு கடத்திவிட்ட சூழ்நிலையில், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதவியேற்ற பிறகு இன்று மூன்று குற்றங்கள் தமிழகத்தில் ஓரளவுக்கு குறைந்திருக்கிறது. விடுதலைப்புலிகளை வேரறுத்து இருக்கிறார்கள். மதுவை ஒழித்து இருக்

[குறிப்பு; ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்]

கிறார்கள். சந்தனக்கட்டை கடத்துவதைத் தடுத்து இருக்கிறார்கள். இப்படி சந்தனக்கட்டை கடத்துவதை தடுத்து அதிரடி நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிற மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய நடவடிக்கை காலத்தில், இன்று கடத்துவதற்கு தடையாக இருக்கிற இந்த அரசு அலுவலர்களை அச்சுறுத்துகிற வகையில் உயிரோடு எரித்து இருக்கிறார்கள். இப்படிப்பட்ட பிரச்சனை இன்று அரசு அதிகாரிகளிடையே, பொதுமக்களிடையே ஒரு பதட்ட நிலையை உருவாக்கி இருக்கிறது. சிறிய முறையில் பணியாற்றுகிற அரசு ஊழியர்களுக்கு இன்று நமக்கு பாதுகாப்பு இல்லாமல் போய்விடுமோ என்று அஞ்சுகிற நிலை இருக்கிறது.

ஆகவே, இப்படிப்பட்ட அநாகரிகமான, மனிதாபிமானமற்ற முறையில், காட்டுமிராண்டித்தனமாக அரசு அலுவலர்களையே கொலை செய்கிற அளவுக்கு குற்றவாளிகள் இன்று கையோங்கி இருக்கிற நிலையை தடை செய்கிற வகையில் முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கையெடுக்க வேண்டும். அதைப்போல 56-வது விதியின்படி அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இன்று விவாதிக்க அனுமதியளிக்கும்படி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர்.

மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. கைலாசம், வேலூர்–ஆலங்காயம் காட்டுப் பகுதியில் வனத்துறை காவலராகப் பணிபுரிந்து வந்தார். அவர் 20–9–1991 அன்று ஒரு நாள் விடுப்பில் தனது சொந்த ஊரான நன்னேரிக்குச் சென்று, அன்று இரவே திரும்பியுள்ளார். ஆனால் அவர் 23-9-1991 அன்று காலை வரையில் பணிக்கு வராததால் ஆலங்காயம் வனச்சரக அலுவலர் காவல் துறையிடம் 23–9–1991 காலை 10.15 மணிக்கு புகார் செய்துள்ளார். இதுகுறித்து ஆலங்காயம் காவல் நிலையம் குற்ற எண் 197/91–ல் under section–Man missing பிரிவில் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொள்ளப்பட்டது. காவல் துறையினரும், வனத்துறையினரும் காணாமல் போனவரை தீவிரமாகத் தேடியதில் உடல் எரிந்த நிலையில் எலும்புக்கூடு ஒன்று மேட்டூர்–நிம்மியம்பட்டு மெயின் ரோடு வனப்பகுதியில் 25–9–1991 அன்று மாலை கண்டுபிடிக்கப்பட்டது. அதன் அருகில் கிடந்த வனத்துறை சின்னம்–Forest Department Batch மற்றும் ஒரு சைக்கிளை வைத்து இறந்தவர் வனத்துறை காவலர் கைலாசம் என்று உறுதி செய்யப்பட்டுள்ளது. எனவே, இந்த வழக்கின் பிரிவுகளை 302 மற்றும் 201 ஐ.பி.சி.யாக, கொலை மற்றும் தடயங்களை மறைத்தல் குற்றப்பிரிவுகளுக்குமாற்றப்பட்டுள்ளது. இதுகுறித்து இன்று வாணியம்பாடி வட்டாட்சியர் பிரேத விசாரணை செய்கிறார். இக்கொலையில் அருகிலுள்ள கிராமங்களில் வசிக்கும் சந்தனக்கட்டைகளைத் திருடும் வனக் குற்றவாளிகளுக்கு தொடர்புள்ளதாக கிடைத்த தகவலின்பேரில்





காவல்துறையினருக்கு, விரைந்து குற்றவாளிகளைப் பிடிக்க தீவிரமாக நடவடிக்கைகள் எடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இனிமேல் இத்தகைய நிகழ்வுகளைத் தடுக்க அலுவலர்களுக்கு, வனத்துறை அதிகாரிகளுக்கு, காவலர்களுக்கு தக்க பாதுகாப்பு அளிக்க ஏற்பாடு செய்யப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இது குறித்து விவாதிக்கத் தேவையில்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், சந்தனக்கட்டைத் திருட்டை தடுக்கும் வேளையில் கடமையைச் செய்யும்போது வீரமரணம் அடைந்த திரு. கைலாசம் அவர்களது குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஒரு லட்சம் ரூபாய் அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப்பிறகு அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இதுகுறித்து விவாதிக்கத் தேவையில்லை என்பதால் இதற்கு இசைவு மறுக்கப்படுகிறது.

## 3. முக்கியப் பிரச்சினை.

**மதுரையில் காவல்நிலையம் ஒன்றில் வழக்கறிஞர் ஒருவர் தாக்கப்பட்டதாகக் கூறப்படுவது குறித்து முதலமைச்சரின் விளக்கம்.**

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மதுரையில் காவல்நிலையம் ஒன்றில் வழக்கறிஞர் ஒருவர் தாக்கப்பட்டதாகக் கூறப்படும் பிரச்சினை குறித்து அரசின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டுமென்று கோரி, திரு. எஸ். அண்டித்தேவர், திரு. எ. தெய்வநாயகம் திரு. ஓ. எஸ். அமர்நாத், திரு. எஸ். வி. சண்முகம் ஆகியோர் என்னுடைய கவனத்திற்கு ஒரு பிரச்சினையைக் கொண்டு வந்துள்ளார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் இதுகுறித்து அவைக்கு ஒரு விளக்கம் தரவேண்டுமென்று கருத்துத் தெரிவித்திருப்பதால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை இதுபற்றிய விளக்கத்தை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10.20

*மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆண்டித் தேவர் உட்பட நான்கு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் கொடுத்துள்ள கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் பேரில், பின் வருமாறு விளக்கம் அளிக்க விரும்புகிறேன்.

25-9-1991 அன்று, மதுரை வழக்கறிஞர் திரு. ஜெயராஜ் அவர்கள் செல்லூர் காவல் நிலையத்திற்கு வந்து ஒரு வழக்கு தொடர்பான விசாரணைக்காக கூட்டிவரப்பட்ட, தனது உறவினரை உடனடியாக விடுவிக்க வேண்டும் என்று கேட்டுள்ளார். அவருக்கும் காவல் நிலைய உதவி ஆய்வாளர் திரு. தீனதயாளனுக்கும் பேச்சு வார்த்தைகள் முற்றி, கைகலப்பில் முடிந்ததாகத் தெரிய வருகிறது. இதுபற்றி, மதுரை வழக்கறிஞர்கள் சங்கத்தினர், மதுரை நகர காவல்துறை ஆணையரைச் சந்தித்து புகார் செய்ததைத் தொடர்ந்து உதவி ஆய்வாளர் தீனதயாளனையும், காவலர் 1413—கதிரேசனையும் வேறு இடத்திற்கு மாற்றியதையொட்டி, மதுரை வழக்கறிஞர்கள் தங்களது போராட்டத்தைக் கைவிடுவதாக அறிவித்துள்ளனர் என்ற தகவல் கிடைத்துள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### 4. அறிவிப்பு

#### (அ) அண்ணா பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிற்கு உறுப்பினர் தேர்ந்தெடுத்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. அண்ணாப் பல்கலைக்கழகத்தின் ஆட்சிக் குழுவிற்கு (சிண்டிகேட்) இச்சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள், தங்களிலிருந்து ஒருவரைத் தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு, அண்ணா பல்கலைக்கழகம் கோரியுள்ளது. தேர்ந்தெடுக்கப்படுவர்களின் பதவிக் காலம் தேர்ந்தெடுக்கப்பட்ட நாளிலிருந்து 3 ஆண்டுகளாகும். இருப்பினும் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர், ஏதாவது ஒரு காரணத்திற்காக பேரவை உறுப்பினர் பதவியினை இழக்க நேரிட்டால், அந்த நாளோடு இப்பதவிக்காலம் முடிவு அடையும். எனவே, வேட்பாளர்கள் நியமனத்தாள்களை 27-9-1991, வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்குள் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்கவேண்டும். நியமனத் தாள்கள் வேண்டுவோர், செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். நியமனத்தாள்கள் 28-9-1991, சனிக்கிழமை



பிற்பகல் 3.00 மணிக்குப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள், 30-9-1991 திங்கட்கிழமை, பிற்பகல் 3.00 மணிக்குள் விலகிக் கொள்ளலாம். நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை, வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு மேற்படுமாயின் 3-10-1991, வியாழக் கிழமை காலை 10 மணிக்கும், பிற்பகல் 1 மணிக்கும் இடையே, சென்னை கோட்டையில் இருக்கும் குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

### 5. கவன ஈர்ப்பு.

#### (அ) ஆரம்பப்பள்ளி ஆசிரியர் நியமனங்களில் குறிப்பிட்ட மதிப்பெண்கள் பெற்றவர்கள் மட்டுமே நியமிக்கப்பட வேண்டும் என்ற ஆணையால், ஆசிரியர் பயிற்சி பெற்ற மாணவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்பு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. கே. ஆர். முருகானந்தம், டாக்டர் தே. குமாரதாஸ் ஆகியோர், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகளை மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருவார்கள் திரு. கே. ஆர். முருகானந்தம்.

திரு. கே. ஆர். முருகானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்பப்பள்ளி ஆசிரியர் நியமனங்களில், மேல்நிலைப் பள்ளித் தேர்வில் 50 விழுக்காடு மதிப்பெண்களும், ஆசிரியர் பயிற்சித் தேர்வில் 50% மதிப்பெண்களும் பெற்றவர்கள் மட்டுமே நியமிக்கப்பட வேண்டும் என்று கல்வித்துறையில், அரசாணை எண் 1367, நாள் 3-10-1990 ஆம் ஆண்டில் ஒரு ஆணை பிறப்பிக்கப் பட்டிருக்கிறது. இந்த மதிப்பெண்களைக் குறைந்தும் ஆசிரியர் பயிற்சி பெற்றவர்கள் வேலை கிடைக்காமல் பல ஆயிரக்கணக்கான பேர்கள் இன்றையதினம் அவதிப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். இதுபற்றி மாண்புமிகு கல்வி அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

*மாண்புமிகு திரு. இராம வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவையிலே வைக்கப் பட்டு உள்ளது.

அறிக்கை.

தமிழ்நாடு பள்ளிக்கல்வி சார்நிலைப் பணிகளுக்கான தனி விதிகளின்படி, இடைநிலை ஆசிரியர் நியமனத்திற்கு குறைந்தபட்ச பொதுக்கல்வி தகுதியும், மற்றும் இடைநிலை ஆசிரியர் பயிற்சி சான்றிதழும் பெற்றிருக்க வேண்டும். வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பலர் இடைநிலை ஆசிரியர் நியமனங்களுக்காக காத்திருப்பதைக் கருத்தில் கொண்டு, அவர்கள் வேலைவாய்ப் பகத்தில் பதிவு செய்த தேதி, வயது மற்றும் திறமை (Merit) இவைகளைக் கருத்தில் கொண்டு, இடைநிலை ஆசிரியர் நியமனத்திற்கு நடைமுறை விதிகளை மாற்ற அரசு கொள்கை அளவில் முடிவு எடுத்து, அரசாணை நிலை எண். 1367 கல்வி, நாள் 3–10–90-ல், பத்தி 3 (iii)-ன்படி எஸ்.எஸ்.எல்.சி. பிளஸ்2 தேர்வுகளிலும், தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்ட இடைநிலை ஆசிரியர் பயிற்சித் தேர்விலும் குறைந்தது 50 சதவிகித மதிப்பெண் பெற்றவர்கள் மட்டுமே இடைநிலை ஆசிரியர் பதவிக்குத் தேர்வு செய்ய தகுதி படைத்தவர்கள் ஆவார்கள். ஆசிரியர்களின் திறமையையும் கணக்கில் கொள்ள வேண்டும் என்பதன் அடிப்படையில் அரசு எடுத்த கொள்கை முடிவில் இவ்வரசாணை பிறப்பிக்கப்பட்டது. இந்த அரசு ஆணையை எதிர்த்து தமிழ்நாடு நிர்வாகத் தீர்ப்பாணையத்தில் சிலர் வழக்குகள் தொடர்ந்தனர். இவ்வழக்குகளில் நிருவாகத் தீர்ப்பாணையம் 12–7–91 நாளிட்ட தனது தீர்ப்பில், இடைநிலை ஆசிரியர் பணியிடத்திற்கு சட்டரீதியாக உள்ள தமிழ்நாடு பள்ளிக்கல்வி சார்நிலை பணிகளுக்கான தனி விதிகளில், எஸ்.எஸ்.எல்.சி. மற்றும் பிளஸ் 2 தேர்வில் குறைந்தபட்ச மதிப்பெண் தேவை என்று குறிப்பிடாத நிலையில் நிருவாக ஆணை (Executive Order) மூலம் குறைந்தபட்ச மதிப்பெண் நிர்ணயம் செய்துள்ளது சட்டரீதியாக செல்லத்தக்கதல்ல என தெரிவித்து அரசாணை நிலை எண். 1367 கல்வி, நாள் 3–10–90 பத்தி 3 (iii)ல்- குறிப்பிடப்பட்டுள்ள குறைந்தபட்சம் 50 சதவீதம் மதிப்பெண் பெற்றிருக்க வேண்டும் என்பதனைக் கருத்திற் கொள்ளாமல் அவர்கள் தனி விதிகளின்படி இடைநிலை ஆசிரியர்களுக்கான தகுதிகள் பெற்றிருப்பின் அவர்களுக்கு வேலைவாய்ப்பளிப்பது குறித்து பரிசீலிக்கலாம் என தீர்ப்பு வழங்கியுள்ளது. இப்பொருள் குறித்து அரசு பரிசீலித்து வருகிறது.

*திரு. கே. ஆர். முருகானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆசிரியர் பயிற்சி படிப்புக்கு படிக்கின்றபோது, சதவீதம் 50 மதிப்பெண் பெற்றவர்கள் மட்டும்இந்த ஆசிரியர் பயிற்சிப் பள்ளியிலே, பிளஸ் 2 வில் வாங்கிய மார்க்குகளிலே 50 இருக்க வேண்டும் என்று குறிப்பிடப்படவில்லை அதேபோல், கிராமப்புறத்திலே இருப்பவர்களும் சரி, அதே



போல், பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், ஆதி திராவிட வகுப்பைச் சேர்ந்தவர்கள் இந்த மாணவர்கள் எல்லாம் 50 பர்சென்டுக்குக் குறைந்து, 48.49 வாங்கியவர்கள கூட ஆசிரியர் பயிற்சிப் பள்ளியிலே சேர்ந்து விடுகிறார்கள். சேர்ந்ததிற்கு பின்னாலே, அவர்களுடைய தரத்தை உயர்த்தி, இந்த ஆசிரியர் பயிற்சிப் பள்ளிப் படிப்பிலே அதிக மதிப்பெண்கள், அதாவது நூற்றுக்கு 90, 80 விழுக்காடுகளைக் கூட பெற்று விடுகிறார்கள். அப்படிப் பெற்றிருந்தும், அவர்கள் இந்த அரசாணையின்படி, தி.மு.க. ஆட்சியிலே இந்த ஆணை பிறப்பிக்கப்பட்டு இருக்கிறது. அவர்கள் சொல்வது, வயது, மெரிட், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திலே பதிந்த அந்த அடிப்படையிலே இந்த ஜி.ஓ. பிறப்பிக்கப்பட்டதாக இந்த ஆணையில் சொல்லப்பட்டு இருக்கிறது. அப்படி இருந்தால்; ஆசிரியர் பயிற்சிப் படிப்பிலே மெரிட்டாக இருந்த 95 விழுக்காடு பெற்று மாணவர்கள் அந்த பிளஸ் 2 மார்க்கிலே 50 விழுக்காட்டிற்குக் குறைந்து இருக்கிற போது அவர்கள் வேலைவாய்ப்பை இழக்கிறார்கள்.

முற்பகல் 10.25

ஆகவே இதுபோன்ற பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் இந்த அரசாணையாலே படித்திருந்தும், கிராமப்புறங்களிலே இருக்கின்ற அடித்தளத்திலே இருக்கின்ற ஏழை எளியவர்கள் நம்முடைய தாயுள்ளம் கொண்ட இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் இதுபோன்று பல்வேறு ஆசிரியர்கள் பயிற்சி பெற்றவர்கள் இன்றைய தினம் வேலை கிடைக்காமல் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதனால் தாயுள்ளம் கொண்ட நம்முடைய இதய தெய்வம் பரட்சித் தலைவி அவர்கள் இந்த ஆணையை மாற்றி அவர்களுக்கும் இவ்வளவு மதிப்பெண் வேண்டுமென்ற வரம்பு வேண்டியதில்லை, ஆசிரியர் பயிற்சி படித்திருந்தாலே போதும், அவர்களை வேலையில் சேர்த்துக் கொள்ளலாம் என்பதை மறு பரிசீலனை செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆசிரியர் பயிற்சியிலே நுழைகிற மாணவர்களுடைய தகுதியைக் குறித்து 84–ஆம் ஆண்டிலேயே 28–8–84 லேயே குறைந்தபட்சம் 50 சதவீத மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டுமென்ற அரசாணை வெளியிடப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு 8-5-87 ல் இன்னொரு அரசாணை ப்ளஸ் 2 மாணவர்கள் மாத்திரமே சேரலாம் என்று வெளியிடப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு 89—90–லே பரிசீலனை செய்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கிற இந்த 3-10–90 நாளிட்ட அரசாணை வெளியிடப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு ஆளுநர் ஆட்சியில் 21--5–91 ல் ஒரு அரசாணை வெளியிடப்பட்டிருக்கிறது. இந்த எல்லா அரசாணைகளுமே ஆசிரியர்

பயிற்சி என்பது மாணவர்களுக்கு ஆசிரியர் பயிற்சிக்குரிய தகுதியைப் பெற்றிருந்தால்தான் நல்ல பயிற்சியை வழங்க முடியும். ஆகவே மாணவர்களிலே சிறந்த மாணவர்களையே இதற்கு தேர்ந்தெடுக்க வேண்டுமென்கிற அந்த உணர்விலே தான் இந்த அடிப்படைத் தகுதி நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கும் பல்வேறு தொழிற் கல்விகளுக்கு நுழைகிற போது மாணவர்களுக்கு 60 சதவீதம் அவர்கள் மதிப்பெண் பெற்றிருக்கவேண்டுமென்றெல்லாம் விதித்திருக்கிறோம், அதற்குப் பிறகும் அவர்கள் 'Written Test' எழுதுகிறார்கள் அதற்குப் பிறகு 'அண்ணா யுனிவர்சிட்டி' என்றால் அதிக மதிப்பெண்கள் பெற்றிருப்பவர்கள்தான் அதிலே இடம் பெறுகிறார்கள். இப்படி மற்றவர்களுக்கு பாடம் போதிக்கின்ற தகுதியைப் பெற இருக்கின்ற ஆசிரியர்கள் அடிப்படையிலேயே ஒரு மிகச் சிறந்த தகுதியைப் பெற்றிருக்க வேண்டுமென்கிற உணர்விலே தான் இந்த முடிவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இன்றைக்கு இந்த அடிப்படையில் வைத்து சேர்ந்திருக்கிறவர்களுடைய எண்ணிக்கையே மிக அதிக அளவில் இருக்கிறது. இன்றைக்கு இந்த ஆசிரியர் பயிற்சிக்கு விண்ணப்பம் தந்து நேர்முகத் தேர்விற்கு வந்தவர்களுடைய பட்டியலைப் பார்க்கிற போது அநேகமாக பல மாணவர்கள் 900த்திற்கு மேல் மதிப்பெண்களைப் பெற்றிருக்கிறார்கள். ஆகவே வளர்ந்து வருகிற ஒரு சமுதாயத்தில் திறமைமிக்க இளைஞர்கள் வளர்ந்து வருகிற ஒரு காலத்தில் இப்படி தகுதியை வளர்த்துக் கொள்வதற்கு இந்த அடிப்படைத் தகுதியை நிர்ணயிப்பது அவசியம் என அரசு முடிவெடுத்திருக்கிறது.

திரு. கே.ஆர். முருகானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே போடப்பட்ட உத்தரவை எதிர்த்து 'Administrative Tribunal' தீர்ப்பாணையத்திலே சில பேர் வழக்கு தொடர்ந்தார்கள். அந்த வழக்கு தொடர்கின்ற நேரத்திலே அந்த தீர்ப்பாணையத்திலே .... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; கேள்வியாகக் கேளுங்கள். அதல் உள்ளே எல்லாம் போக வேண்டாம். ஏற்கெனவே அமைச்சர் அவர்கள் உங்களுக்கு நிறைய விளக்கங்களைக் கொடுத்திருக்கிறார்கள். திரு. முருகானந்தம்.

திரு. கே. ஆர். முருகானந்தம் ; இருந்தாலும் ஆசிரியர் பயிற்சி பெற்றிருப்பவர்களையும் பரிசீலிக்கும் என்று அந்த தீர்ப்பாணையம் சொல்லியிருக்கிறது. அதை நம்முடைய தாயுள்ளம் கொண்ட அரசு மறுபரிசீலனை செய்யுமா, அந்த தீர்ப்பாணையத்தின்படி என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே அரசாங்கம் இப்படி அரசாணைகளை வெளியிடுகிறபோது நிர்வாகத்திலே ஒரு தவறைச் செய்து விடுகிறார்கள் எப்போது அரசு ஒரு உத்தரவை பிறப்பிக்கிறதோ. அப்போதே





அந்த உத்தரவின் தொடர்ச்சியான சட்ட விதிகளையும் திருத்தி விட வேண்டும். இவ்வளவு காலம் 5, 6, ஆண்டுகளாக அரசாணைகளை பிறப்பித்திருக்கிற இந்த நிகழ்ச்சியில் அதன் தொடர்பாக உள்ள தமிழ்நாடு பள்ளிக்கல்வி சார்நிலை பணிகளுக்கான தனி விதிகளை 'Tamil Nadu School Education Subordinate Service Rules' என்று இருக்கின்ற விதிகளில் மாற்றம் செய்யவில்லை. இந்த விதிகளிலே உள்ள அந்த அடிப்படைத் தவறைச் சுட்டிக் காட்டித்தான் 2, 3, பேர்கள் அந்த தீர்ப்பாணையத்திற்குச் சென்று, டிரிப்யூனலும் அந்தத் தீர்ப்பை வழங்கியிருக்கிறது. அந்தச் சூழ்நிலையில் இப்போது விதிகளைத் திருத்துவதற்கும் அரசு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. இதை எடுத்துக் காட்டி, தீர்ப்பாணையத்தினிடத்திலே மூன்று மாதங்களுக்கு உங்களுடைய தீர்ப்பை நிறுத்தி வைக்க வேண்டுமென்றும் அரசு ஒரு மனு கொடுத்திருக்கிறது,

முற்பகல் 10-30

டாக்டர் தே. குமாரதாஸ் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. ஆசிரியப் பயிற்சியைப் பொறுத்த வரைக்கும் அரசு எஸ்.எஸ்.எல்.சி. மேல் நிலைத் தேர்வுகளில் வெற்றி பெற்றிருப்பதோடு பயிற்சியிலும் 50 சதவீதம் என்று வைத்திருக்கிறீர்கள். நீங்கள் இந்த மதிப்பெண்கள் பெற்றால்தான் வேலைக்கு உத்தரவாதம் என்று சொல்லுகிற நேரத்தில், பொதுவாக ஆசிரியர்ப் பயிற்சிக்கு செல்லுகின்றவர்களே பெரும்பாலும் பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட வறுமை கோட்டிற்கு கீழே வாழுகிற சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள்தான் ஏதாவது வேலை கிடைக்காதா என்ற எண்ணத்தின் அடிப்படையில் ஆசிரியப் பயிற்சிக்கு செல்லுகிறார்கள். நீங்கள் முதலாவதாக இந்த மார்க் எடுக்க வேண்டும் என்று வரம்பு வைத்து, அதை எடுத்தால் பாஸ் என்று எப்பொழுது செய்து விடுகிறீர்களோ அப்பொழுதே அதில் யாரெல்லாம் வெற்றி பெற்றிருக்கிறார்களோ அவர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கப்பட வேண்டும். ஆசிரியப் பயிற்சியை முடித்து விட்டு, வேறு வேலைக்கு செல்வது என்பதுநடைமுறைக்கு சாத்தியமானதல்ல. எனவே 50 சதவீதம் மார்க் என்பதை இன்னும் 2 ஆண்டுகளுக்கு தள்ளி வைத்து அதற்குப்பிறகு நீங்கள் நடைமுறைக்கு கொண்டு வருவீர்கள் என்று சொன்னால் இவ்வளவு காலம் தேர்வு எழுதி வெற்றி பெற்று பணி கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு காத்துக் கொண்டிருப்பவர்களுக்கு பாதகமே ஏற்படாத விதத்தில் அமையும். எனவே இந்தச் சட்டத் திட்டம் கொண்டு வருவது 2 ஆண்டுகளுக்கு கழித்து என்று நீங்கள் கொண்டு வந்து அமல்படுத்த அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்டவர்களுக்கென்று அரசு பல்வேறு சலுகைகளை

வழங்கியிருக்கிறது. பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மாணவர்கள் படிப்பதற்கு லாயக்கற்றவர்கள் என்று நாமே ஒரு தாழ்வு மனப்பான்மையை ஏற்படுத்திக் கொள்ளக் கூடாது. இன்றைக்கு 45, 50 ஆயிரம் பேர் படித்து இந்த பதவிக்காக ஆசிரியப்பயிற்சி முடித்து காத்துக் கொண்டிருக்கின்றார்களே, அதிலே இந்தத் தகுதியைப் பெற்றவர்கள் இங்கு அதிகம் பேர் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுப்பதற்கே இந்த அரசினாலே இயலாத நிலைமை இருக்கிறது. ஆகவே தான் ஆசிரியப் பயிற்சி நிலையங்களை இனிமேல் தொடங்க வேண்டாம் என்று முடிவெடுத்திருக்கிறோம். ஆகவே நம் மாணவர்கள் வளர்ந்து கொண்டிருக்கிறார்கள். நாம் தான் அவர்கள் வளராதவர்கள் என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். ஆகவே மிகச் சிறந்த வகையில் திறமையான பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மாணவர்கள் இதிலே பயிற்சி பெற்றிருக்கிறார்கள். அவர்களிலே திறமை உள்ளவர்களுககு முதலிலே வேலை கொடுக்க அரசு விரும்புகிறது.

டாக்டர் தே. குமாரதாஸ் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் கூறிய விளக்கத்திற்கு நன்றி இதிலே பிரச்சினை என்ன இருக்கிறது என்று சொன்னால், இப்பொழுது தேர்விலே சேர்ந்தவர்களுக்கு கூட இந்தச் சட்டத்தின் மூலம் பாதிப்பு வரக் கூடும் என்கிற ஒரு நிலைமை இருக்கிறது. ஏற்கெனவே பணியிலே நியமிக்கப்பட்டவர்கள் நிரந்தரமாக்கப்பட வேண்டும் என்பது ஒரு பக்கம் இருந்தாலும், இவர்களுக்கும் பாதிப்பு வராத விதத்திலே நான் முன்பே சொன்னதுபோல் குறிப்பிட்ட கால வரம்பை நீங்கள் வைத்துக் கொண்டு இதற்கு மேல் ஆசிரியப் பயிற்சியில் தேறியவர்களுக்கு நீங்கள் வெற்றி பெற வேண்டும் என்று சொன்னாலே இவ்வளவு சதவீதம் இருக்க வேண்டும் என்ற விதத்தில் நிர்ணயம் செய்திருப்பீர்கள் என்று சொன்னால் அது இன்னும் சிறப்பாக இருக்கும். அந்தப் பயிற்சியை முடித்தவர்கள் ஒரு நம்பிக்கையோடு வருகிறார்கள். இதை பாஸ் பண்ணி விட்டால் வேலை கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு வருகிறார்கள். எனவே இந்த பெர்சென்டேஜ் மார்க்கை எடுத்தால்தான் வெற்றி என்ற அடிப்படையிலேயே அந்த மாற்றத்தைக் கொண்டு வருவீர்கள் என்று சொன்னால் இந்தத் தேர்வினாலே அவர்கள் பாதிக்க முடியாத ஒரு சூழ்நிலை ஏற்படும். எனவே அரசு அதைக் கொண்டு வரவேண்டும் என்று கேட்பதோடு தேர்வு செய்யப்பட்டவர்கள் எக்காரணத்தைக் கொண்டும் பிந்தி விட மாட்டார்கள் என்ற உத்தரவாதத்தைத் தர அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரையில் இடையிலே ஏற்பட்ட அரசு ஆணைகளின் மாற்றங்களினாலே பதிவு செய்தவர்களிலே யாருக்காவது தனிப்பட்ட முறையில் பாதிப்பு ஏற்பட்டிருப்பதாக சூழ்நிலை வருமேயானால் அப்போது அரசு அதை பரிசீலிக்கும். நான் முன்பே சொன்னது போல தேவைக்கு அதிகமாக பல மடங்கு அதிகமாக இன்றைக்கு ஆசிரியப் பயிற்சி பெற்றவர்கள் வேலைக்காக காத்துக் கொண்டிருக்கிறார்கள். புதிதாக இந்த அரசின் ஆணையின் படி இரண்டு ஆண்டுகளாக அந்த உணர்வோடு அவர்கள் பயிற்சியிலே ஈடுபட்டு வந்தார்கள். நான் இன்னொன்றையும் தெரிவிக்க விரும்புகிறேன். எல்லோரும் வந்துவிட்டார்கள் என்பதற்காக எல்லோருக்கும் வேலை கொடுக்கவும் முடியாது. நாம் நேர்முக தேர்வு, நேர் காணல் தேர்வு, பெர்சனல் இண்டர்வியூ என்றெல்லாம் வைத்துத்தான் அவர்களை தேர்வு செய்கிறோம். ஓட்டப்பந்தயத்திற்காக 15 பேர்களுக்கு இடம் அளிக்கிறோம் என்றால், அந்த 15 பேர்களுக்கும் பரிசு கிடைக்காது. முதல், இரண்டாவது, மற்றும் மூன்றாவது பேர்களுக்குத் தான் பரிசு. ஆகவே தகுதியும் திறமையும் உள்ளவர்கள் அந்த இடத்தைப் பெறுகிறார்கள். அப்படி திறமையே இல்லாதவர்களாகத்தான் எல்லோரும் இருக்கிறார்கள் என்ற நிலைமை வருகிறபோது அதிலே யாருக்கு கொஞ்சம் திறமை இருக்கிறது என்பதைப் பற்றியும் அரசு பரிசீலிக்கும்.

முற்பகல் 10.35

(ஆ) தமிழகத்தில் பட்டுநெசவுத் தொழிலுக்கு வேண்டிய மல்பரி பட்டு கிடைக்காததால் பட்டு நெசவாளர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து :

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கவன ஈர்ப்பு, திருமதி மரியமுல் ஆசியா, டாக்டர் ஜெய்சன் ஜேக்கப், திரு. எஸ். ஜெயக்குமார், திரு. இராம. இராமநாதன் ஆகியோரில் ஒருவர் அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு கொண்டு வருவார்கள். திருமதி மரியமுல் ஆசியா.

திருமதி மரியமுல் ஆசியா : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் பட்டு கிடைககாததால் பட்டு நெசவாளர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

**Hon. Thiru. Mohamed Asif :** Hon. Speaker, Sir a detailed statement in this regard is placed on the table of the House.

அறிக்கை

இந்த கவனஈர்ப்புத் தீர்மானம் குறிப்பாக இல்லாமல் மிகவும் பொதுவானதாக உள்ளது. இம்மாநிலத்தில் (அ) பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கங்களைச் சேர்ந்த நெசவாளர்கள், (ஆ) தனிப்பட்ட பட்டு நெசவாளர்கள், என்று இரண்டு வகையான பட்டு நெசவாளர்கள் உள்ளனர். பட்டு கூட்டுறவு சங்கங்களைச் சேர்ந்த நெசவாளர்களைப் பொறுத்துவரை கச்சா பட்டு தட்டுப்பாடே ல்லை. அவர்களது முழு தேவையும் டான்சில்க் நிறுவனத்தினால் பூர்த்தி செய்யப்படுகிறது. தனியார் பட்டு நெசவாளர்களைப் பொறுத்தமட்டில் கர்நாடக மாநிலத்திலும் தமிழ்நாட்டில் தர்மபுரி மாவட்டத்திலும் உள்ள மல்பரி பயிர்கள் 'பெப்ரைன்' நோயினால் தாக்கப்பட்டுள்ளமையால் கச்சாபட்டில் சிறிது தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளபோதிலும் உறுப்பினர் அவர்கள் அஞ்சுவது போன்று நெசவாளர்களுக்கு பாதிப்பு ஏதும் இல்லை.

திருமதி மரியமுல் ஆசியா : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, ஏழை எளிய மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கிக்கொண்டிருக்கின்ற நமது தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் நெசவாளர் பிரச்சினையில் அதிக அக்கறை கொண்டு பட்டு நெசவாளர்களின் சிரமத்தைப் போக்க பட்டு உற்பத்தி பாதிக்கப்படாமல் இருக்க, பட்டு கச்சா பொருளான அந்த மல்பரி பயிர்களைத் தாக்கிக் கொண்டிருக்கின்ற பெப்ரைன் என்ற நோயிலிருந்து அந்த பயிர்களை பாதுகாக்க, அதிகப்படியான அளவிற்கு அந்த பட்டு மல்பரி கச்சா பொருள் கிடைப்பதற்கு அரசு உடனடியாக ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**Hon. Thiru. Mohamed Asif :** Hon. Speaker, Sir, in this regard Government has already taken action for disinfecting the areas which have been infected thus affecting mulberry production.

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தமிழகத்திலே இருக்கின்ற ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட நெசவாளர் குடும்பங்கள் தமிழகத்தினுடைய காவல் தெய்வம் புரட்சித் தலைவி அவர்களை தங்கள் வாழ்க்கையின் நம்பிக்கை நட்சத்திரமாக வணங்கி வாழ்ந்து வருகிறார்கள், மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலிலே



ர்நாட மாநிலத்திலும், தமிழ்நாட்டில் தர்மபுரி மாவட்டத்திலும் ள்ள மல்பெரி பயிர்கள் 'பெப்ரைன்' என்ற நோயினால் ாக்கப்பட்டு உள்ளதால் கச்சாப்பட்டில் சிறிது தட்டுப்பாடு ருக்கிறது என்பதை அவரே இங்கே சொல்லியிருக்கிறார். ப்போது இருக்கின்ற பிரச்சனை எல்லாம் இரண்டு மாத ாலமாக தமிழ்நாட்டிலே இருக்கின்ற ஒரு லட்சத்திற்கு மேறபட்ட நெசவாளர் குடும்பங்கள் வேலையின்றி வித்து கொண்டிருக்கின்றன. மல்பரி பட்டினுடைய விலையும் 0% உயர்ந்திருக்கிறது. அதனால் பட்டு உற்பத்தி.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி. விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த விளக்கத்திலே நீங்கள் கேள்வி கேட்க வண்டும். என்ன கேள்வி என்பதை மட்டும் சொல்லுங்கள்.

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் ; பேரவைத் தலைவர் அவர்களே, றைந்திருக்கிறது. இப்படி நிலைமைகள் மாறியிருப்பதன் ாரணமாக இன்றைக்கு அன்றாட வாழ்க்கையிலே தொழிலை சய்தால் தான் குடும்பத்தை நடத்தி செல்ல முடியும் என்கிற லையிலே இருக்கின்ற அந்த ஒரு இலட்சம் குடும்பங்களுக்கு அரசு ன்ன செய்யப் போகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**Hon. Thiru. Mohamed Asif :** Hon. Speaker, Sir, in this regard, I ould like to say that, as against our annual requirement of 1200 etric tonnes, the total quantity reeled in our States is only 400 metric nnes. The remaining quantity was being obtained from Karnataka, ıt now, because of this Peprain disease, there production has also been ected and they are not in a position to supply us our full requirement. ıerefore, we have already taken action to address the Central Silk ard for importing about 30 metric tonnes. Further, we have also dressed Jammu and Kashmir to explore the possibility of sending coons for being reeled in our State.

Sir, there is one more thing which I would like to add in this gard. As a long-term measure to increase the production, we are couraging reeling in the private sector also by giving training to the lers and also providing working capital assistance to the reelers at low e of interest.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தற்போதுள்ள பிரச்சினையைத் விர்ப்பதற்கு மத்திய அரசாங்கத்தை அணுகி தேவையான ளவிற்கு இறக்குமதி செய்ய அனுமதி கேட்டிருக்கிறோம்.

அதோடு ஜம்மு காஷ்மீர் மாநிலத்திலே கிடைக்கக் கூடிய பட்டில் ஓரளவாவது நமக்கு ஒதுக்கித் தருமாறு கேட்டிருக்கிறோம் என்பது போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாக....

**Hon. Thiru. Mohamed Asif** : Hon. Speaker Sir, One more point. Further one more thing I would like to highlight in this meeting is taking the permisson of our Honourable Chief Minister PuratchiThalaivi during the Part II discussion, The department has already initiated action in securing Government land in high altitude areas like Kodaikanal. Coonoor. Valparai for promoting production of Bi voltine Cocoons which will fetch higher income to the silk growers and facilitate the production of high grade silk at the international standards.

முற்பகல் 10–40

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இவற்றோடு கூட மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய ஆணையை ஏற்று கொடைக்கானல், குன்னூர் போன்ற மலைப் பகுதிகளிலேயும் தரமான பட்டுகள் இன்னும் அதிக அளவுக்கு உற்பத்தி செய்வதற்குரிய முயற்சிகளிலும் துறை இறங்கியிருக்கிறது என்று கூறுகிறார்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதில் என்ன பாயின்ட் ஆப் ஆர்டர்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில உறுப்பினர்கள் வந்து தமிழில் பேச முடியவில்லை. Why don't you think of an official Tamil Translator? நிறைய உறுப்பினர்கள் ஆங்கிலத்தில்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நம்முடைய விதியில் இருப்பதே, உறுப்பினர்கள் ஆங்கிலத்திலும் பேசலாம், தமிழிலும் பேசலாம், அதில் வந்து இன்டர்பிரடேஷன் பிரச்சினை நம்முடைய விதியில் வரவில்லை. அது வரும்போது கவனித்துக்கொள்ளலாம்.

திரு. எஸ். ஜெயக்குமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதேபோல ஸ்கேர்சிட்டி 1988 ஆம் ஆண்டு வந்தபோது சென்டிரல் சில்க் போர்டு உடனடியாக 2 டன் சில்க்



தமிழ்நாடு ஹேண்ட்லூம் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன் மூலமாக வழங்கப்பட்டு இருக்கிறது. இதை கோட் செய்து உடனடியாக சில்க் கார்ப்பரேஷனை வற்புறுத்தி ஒரு மாதத்திற்குள் வழங்க ஏற்பாடு செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**Hon. Thiru Mohamed Asif** : As I already told, Honourable Speaker Sir, we have already initiated the issue with the Government of India. However, we are taking the advice from our Honourable Member. We will try to pursue the matter.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; ஏற்கனவே மத்திய அரசை அணுகி இருக்கிறோம். உங்களுடைய ஆலோசனையையும் கேட்டு விரைவில் இந்தப் பிரச்சினையை முடிப்பதற்கு ஏற்பாடு செய்கிறோம் என்று சொல்லுகிறார். (மேசையைத் தட்டும் ஒலி) திரு. இராம. இராமநாதன்.

**Thiru Rama Ramanathan** : Honourable Speaker Sir, I submit the following facts for your kind consideration and favourable action. More than one lakh families of mulberry silk-handloom weavers of Tamil Nadu are now facing unemployment as a result of acute shortage of mulberry silk and a steep hike in silk price by 60% during the past two months. The Handloom Mulberry Silk cloth production has come down to 40 per cent by now. The urgent need of the hour is to supply mulberry silk to weavers Therefore. we request that urgent steps may kindly be taken to procure mulberry silk from all available sources and arrange supplies to the weavers at subsidised rates. I mean the rates provailing in June 1991 through the Federation of Tamil Nadu Handloom Pure Silk Cloth Manufacturers' Association. Thank you.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. இராமநாதன், ஏற்கனவே இதே கேள்வியைத் தான் மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் அவர்கள் கேட்டு என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள விரிவாக சொல்லியிருக்கிறார். தாங்களும் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தான் திரும்பவும் கேட்கிறீர்கள். ஏற்கனவே கூறப்பட்டிருக்கிறது. (சிரிப்பு)

**Hon. Thiru Mohamed Asif** : Honourable Speaker, I thank you very much for coming to my rescue. The same reply I am giving. But one more thing that I would like to add up for the information of our Honourable Members. Our Great Leader Puratchi Thalaivi in yesterdays' Budget, has reduced the sales tax for imported silk from 8 per cent to 2 per cent. This iself definitely will help us to bring down the prices (Thumping of desk)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏற்கனவே மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் மேசையைத் தட்டி வரவேற்ற காரணத்தால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னது உங்களுக்குப் புரிந்துள்ளது என்று நினைக்கிறேன்.

## 6. சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்).

### (அ) தமிழ்நாடு நகராட்சிச் சட்டங்கள் சார்ந்த (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1991.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன் வடிவை அறிமுகம் செய்தல். 1991-ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிச் சட்டங்கள் சார்ந்த (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, இதனைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் அனுமதி கோருவார்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1991-ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிச் சட்டங்கள் சார்ந்த (இரண்டாம் திருத்த) சட்டமுன் வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்'',
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

(மேயைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).



### (ஆ) தமிழ்நாடு ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு, 1991.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1991-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு, இதனைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அனுமதி கோருவார்:

முற்பகல் 10-45 மணி

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1991-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவினை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்,''
எனக்கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமுன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

## 7. மானியக் கோரிக்கைகள், 1991–92—விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

### (அ) கோரிக்கை எண் 12 தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும், மானியக் கோரிக்கை எண். 12 - தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம்; மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமயஅறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் பற்றிய 12-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ 7,84,71,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள், வெட்டுத் தீர்மானம் எண். 969, திரு. ப. ரங்கநாதன்.

திரு. ப. ரங்கநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'புரசை தொகுதியில் இந்து அறநிலைய துறைக்குச் சொந்தமான இடங்களில் பல வருடங்களாக வீடு கட்டிக்கொண்டு இருக்கும் ஏழைகள், பின் தங்கியவர்களுக்கு பட்டா வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''தமிழ்நாடு 1959ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம் பற்றிய 12ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 7,84,71,000-ல் ரூ, 100 குறைக்க வேண்டும்''.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண். 979. திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கோவில் குத்தகை விவசாயிகளால் பல ஆண்டுக் காலமாக செலுத்தப்பட வேண்டிய பாக்கிகளை ரத்து செய்வதன் அவசியம் குறித்து விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம் பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 7,84,71,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண். 966. டாக்டர் தே. குமாரதாஸ்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம் பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ 7,84,71,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப் படுகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய முன்னுரையாக ஏதாவது கூறவேண்டியிருப்பின், கூறக் கேட்டுக் கொள்கிறேன்.



*மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கையான தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சிடப்பட்டு அவையின் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதிலே தமிழில் இருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்பினை நான் இந்த அவையில் ஆற்றிய உரையாகக் கருதி அதை இந்த அவைக் குறிப்பில் பதிவு செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பு மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது கருத்துக்களையும் ஆலோசனைகளையும் வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இறுதியில் மாண்புமிகு உறுப்பினர்களின் கருத்துக்களுக்கு என்னுடைய பதிலுரையும் அரசு எடுக்கக் கருதியுள்ள சில முக்கிய முடிவுகள் பற்றியும் தெரிவிக்கிறேன் எனக்கூறி, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. போளூர் வரதன்.

*திரு. போளூர் வரதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து அறநிலையத் துறை மானியக் கோரிக்கையின் மீது எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்து அறநிலையத்துறை என்பது இன்றைக்கு நேற்றைக்கு உருவாக்கப்பட்ட ஒரு துறையல்ல. பண்டைய காலத்தில், இந்துக்களிடையே கோயில்கள் கலையும் கலாச் சாரத்தினுடைய மையங்களாகவும் விளங்கி வருகின்றன. இந்துக் களினுடைய கோயில்கள் பல, பெருமை வாய்ந்ததாக இருந்ததன் காரணமாக, பண்டைய காலத்தில் பல்லவர் காலத்திலே சிற்பக் கலைகளுக்கு முதலிடம் கொடுத்திருக்கிறார்கள். பண்டைய மன்னர்கள் ஆண்ட காலத்திலே தமிழை வளர்க்க வேண்டும் என்பதற்காக முச்சங்கங்களை அமைத்து இருக்கின்றார்கள். சோழர் காலத்திலே கோயில் திருப்பணிகள் மிகுந்து காணப் பட்டிருக்கின்றன என்று இன்றைக்கு வரலாற்றிலே சொல்லப் பட்டிருக்கிறது. இப்படி கோயில்கள் இன்றைக்கு இந்தியநாட்டிலே இந்துக்கள், முஸ்லீம்கள், கிருத்துவர்கள், சீக்கியர்கள், புத்த மதத்தவர், சமண மதத்தவர் பல்வேறு மதங்களைச் சார்ந்தவர்கள் இருந்தாலும் மதத்தால் முற்பட்டது. காலத்தால் பழமை வாய்ந்தது இந்து மதம் ஒன்று மட்டுமே. ராஜராஜ சோழன் காலத்திலே, தஞ்சை பெரிய கோயிலை உருவாக்கி, இன்றைக்கு, அந்த கோயிலினுடைய ஆயிரமாவது ஆண்டினை அன்னை இந்திரா காந்தி அவர்களை அழைத்து புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் கொண்டாடினார்கள் என்ற வரலாறு, தமிழக மண்ணிலே இருந்து கொண்டிருக்கிறது.

---

@ 253 முதல் 268 வரையிலான பக்கங்களில் இணைப்பு-1 ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

(திரு. போளூர் வரதன்) [1991 செப்டம்பர் 26

தமிழகத்திலே புராதனக் கோயில்கள் எத்தனையோ இருந்தாலும், இன்றைக்கு அதனுடைய நிலைகளைப் பார்க்கின்ற பொழுது மிகக் கேவலமான நிலைக்கு அது தள்ளப்பட்டிருக்கிறது. இன்றைக்குத் தமிழகத்திலே பல்வேறு கோயில்கள் பல்வேறு விதமான காலங்களிலே கட்டப்பட்டு, பல்வேறு விதமான வழிபாடுகளையும், சமய முறைகளையும் இன்றைக்கு எடுத்துச் சொல்லுகின்ற ஒரு கலங்கரை விளக்கமாக இருந்து கொண்டிருந்தாலும், தஞ்சைப் பெரிய கோயிலை உருவாக்குகின்றபொழுது இராஜராஜ சோழன் அவர்கள்—ஆய கலைகள் 64 என்று சொன்னார்கள்—அந்தக் கலையின் நடன முத்திரைகளைப் பதிக்க வேண்டுமென்று விரும்பி, அந்தக் கலையினுடைய நடன முத்திரைகளைப் பதித்தார்கள். அப்படி பதித்தபொழுது 50, 55 நடனக் கலைகளின் முத்திரைகள்தான் அங்கே பதிக்கப்பட்டிருக்கின்றன. ஏதோ காரணத்தினாலே மற்ற முத்திரைகள் பதிக்கப்படாமல் இன்றைக்கும் அங்கே வெற்றிடமாக காட்சியளித்துக் கொண்டிருக்கிறது. நான் தமிழக முதலமைச்சரவர்களை மெத்தப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன், இன்றைக்குக் கிட்டத்தட்ட 1007 ஆண்டுகளுக்கு முன்பு இராஜராஜசோழன் ஆண்டான் என்ற வரலாற்றைக் கொண்டிருக்கின்ற வேளையிலேதான் தாங்கள் இந்து அறநிலையத் துறையினுடைய பொறுப்பை ஏற்றிருக்கிறீர்கள். இன்றைக்கு அந்தக் கோயிலில் முக்கியமாக விட்டு வைக்கப்பட்டிருக்கின்ற அந்தக் கலைகளினுடைய சின்னங்களை உங்கள் காலத்திலே நிறைவேற்றினால் இந்த நூற்றாண்டிலே — இருபதாம் நூற்றாண்டின் இறுதியிலே நான் உங்களை இராஜராஜ சோழனாகப் பார்ப்பேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10.50

இன்றைக்குப் பல்வேறு சமயங்கள் பல்வேறு விதமான வழிமுறைகளைப் பின்பற்றி வந்தாலும், வரலாற்றிலே இடம் பெறுகின்ற அந்தச் சரித்திரச் சான்றுகளை உங்கள் காலத்திலே புதுப்பித்தீர்கள் என்ற பெருமை தமிழ் மண்ணுக்கு வந்து சேர வேண்டும் என்ற ஆவலோடு நான் உங்களுக்கு இந்த வேண்டுகோளை வைக்கிறேன். இதுவரை தமிழகத்திலே எத்தனையோ கோயில்கள் இருந்தாலும், கோயில்களுக்குச் சொத்துக்கள் இருக்கின்றன; இராஜராஜ சோழன் காலத்திலே கட்டப்பட்டிருக்கிற கோயில்களுக்கெல்லாம் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களும், விலையுயர்ந்த நகைகளும், மணிகளும் வழங்கியிருக்கிறான் என்ற தகவல் வரலாற்றிலே சொல்லப்பட்டிருக்கிறது. அப்படிச் சொல்லப்பட்டிருந்தாலும்கூட இன்றைக்குத் தொன்மை வாய்ந்த, பழமை வாய்ந்த கோயில்களினுடைய நிலை கேட்பாரற்று, புதுப்பிப்பாரற்று, வழிபாட்டு முறைகளற்ற நிலையிலே தமிழகத்திலே கோயில்கள் சீரழிக்கப்பட்டிருக்கின்றன என்ற உண்மையை இந்த அவையிலே நான் எடுத்துச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.



1991 செப்டம்பர் 26] (திரு. போளூர் வரதன்)

தமிழகத்திலே தெய்வ வழிபாட்டினுடைய முறை குறைந்ததன் காரணமாகத்தான் தேசப்பற்று குறைந்திருக்கிறது என்பதைப் பெரியவர்கள் ஒப்புக் கொள்கிறார்கள். அதற்குக் காரணம், இடைக்காலத்திலே ஏற்பட்ட இந்து மதத்தினுடைய சோர்வு; இந்து மதத்தைப் பரப்புகின்றவர்கள் இந்து சமயப் பெரியவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகளைத் தடுக்கின்ற விதத்திலே இந்திய நாட்டிலேயும், குறிப்பாக தென்னகத்திலே அதற்கு முனைப்போடு செயல்பட்டதன் காரணமாகத்தான் தென்னகத்திலே இந்துமதம் இன்றைக்குச் சற்றுத் தாழ்ந்த நிலையிலே வந்து கொண்டிருக்கின்ற வேளையிலேதான், தமிழகத்தினுடைய முதலமைச்சராகிய தாங்கள் அந்தப் பொறுப்பினை ஏற்றிருக்கிறீர்கள். அந்தப் பொறுப்பினைப் பார்க்கின்றபொழுது இன்றைக்கு மீண்டும் சோழர் காலம் தமிழகத்திலே மீண்டும் வரும்; புரட்சித் தலைவி மீண்டும் தமிழகத்திலே சோழர் கால ஆட்சியை நிறுவுவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. தமிழகத்திலே வாழ்ந்து கொண்டு இருக்கிற இந்து மக்கள் மத்தியிலே ஒரு உற்சாகத்தையும், உத்வேகத்தையும் ஏற்படுத்தியிருக்கின்ற தலைவியாகத் தாங்கள், தமிழகத்திலே மது அரக்கனை ஒழிக்க வேண்டும் என்பதற்காகப் பராசக்தி வடிவிலே இன்றைக்கு அதை நீங்கள் ஒழித்திருக்கின்றீர்கள்; இன்றைக்குக் கோயில் நிலங்களை ஆக்கிரமித்து, கோயிலைக் கொள்ளையடித்து, கோயிலைச் சீர்கேடடையச் செய்திருக்கின்ற சமூக விரோதிகளினுடைய கூடாரமாக்கப்பட்டிருக்கின்ற அவற்றை அழிப்பதற்கு நீங்கள் மீண்டும் தமிழகத்திலே துர்க்கை வடிவு எடுத்தால்தான், தமிழகத்திலே இருக்கின்ற பழமை வாய்ந்த, தொன்மை வாய்ந்த கோயில்கள் காக்கப்படும் என்பதை இந்த அவையிலே நான் உங்களுக்குச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எத்தனையோ விதமான நிலைகளிலேயும் நான் ஒன்றை எண்ணிப்பார்க்க வேண்டும். முகம்மதியர் கோயில்கள் என்று சொன்னால் அந்தக் கோயிலிலே காலையிலே முல்லா படிக்கின்றார்கள்; கிறித்தவர்களுடைய கோயில்கள் என்று சொன்னால், முதல் பூஜையினுடைய மணி அடிக்கிறார்கள்; பழைய காலங்களிலே பார்க்கின்றபொழுது, இந்துக்களினுடைய கோயில்களிலே பழைய காலத்தினுடைய பிரதானப் பாடல்களைப் பாடினார்கள். சைவ, வைணவ வேறுபாடுகள் தோன்றிய பொழுது இன்றைக்கு அவைகள் நிறுத்தப்பட்டு, கோயில்கள் கேட்பாரற்ற நிலையிலே தமிழகத்திலே நாம் இருந்து கொண்டிருக்கிறோம். மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களை நான் மெத்தப் பணிவோடு கேட்டுக் கொள்வதெல்லாம், இன்றைக்குத் தமிழகத்திலே பல்வேறு புராதனக் கோயில்கள் இருக்கின்றன. அந்தக் கோயில்களிலே, மாணிக்கவாசகர் பாடிய திருவெம்பாவையைப் பாட வைக்கலாம்; ஆண்டாள் அருளிய திருப்பாவையைப் பாட வைக்கலாம்; அல்லது வள்ளலார் பாடிய பாடல்களைப் பாட வைக்கலாம் அல்லது திருமுருகாற்றுப்படைப் பாடலைக் காலையிலே ஒலிக்க வைக்கலாம்; அல்லது விநாயகர்

அகவலைப் பாட வைக்கலாம்; அல்லது கந்தர் சஷ்டியைப் பாட வைக்கலாம்: அல்லது பெருமாள் சம்பந்தப்பட்ட பாடல்களை இன்றைக்கு கோயில்களிலே நீங்கள் ஒலிக்கச் செய்வதன் மூலமாக தமிழகத்திலே இழந்து கிடக்கின்ற, தாழ்ந்து கிடக்கின்ற, இந்து மதத்தை மீண்டும் நீங்கள் தலை நிமிரச் செய்ய முடிவதற்கு ஒரு வாய்ப்பினை ஏற்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 10.55

அது மட்டுமல்ல; இன்றைக்கு உலகத்திலே பார்க்கிறபோது, 'வாடிகன்' நகர் என்று சொல்கிறோம்; 'வாடிகன்' நகர் என்று ஒரு சிறிய இடமாக இருந்தாலும், உலகத்திலே இருக்கிற மக்கள் எல்லாம், 'வாடிகன்' நகர் வருகிறது என்று சொல்கிறபோது, ஆகாய விமானத்திலே பறந்து கொண்டிருந்தாலும், எழுந்து நின்று வணங்குகிறார்கள். அதேபோல, முகமதியர் 'மெக்கா மதீனா' என்று சொல்கிறபோது அதை வணங்குகிறார்கள். ஆனால், இன்றைக்கு இந்திய நாட்டிலே 7 புண்ணிய இடங்கள் தான் இந்திய நாட்டினுடைய புண்ணிய இடங்களாக மதிக்கப்படுகின்றன. அயோத்தி, வடமதுரா, ஹரித்துவார், காசி, உஜ்ஜயினி, துவாரகா, கடைசியாக காஞ்சிபுரம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இன்றைக்கு இந்துமதக் கோட்பாட்டிலே ஏற்றுக் கொள்ளப்பட்ட இந்த 7 புனித நகரங்கள் இந்திய நாட்டினுடைய, இந்து மதத்தினுடைய தொழுகை செய்கின்ற இடங்களாக காட்சி அளிக்கின்றன. அதிலே குறிப்பாக, தென்னகத்திலே ஒன்றுதான காஞ்சிபுரம். அந்த காஞ்சியிலே இன்றைக்கு மக்களால் மதிக்கப்படுகிற, எல்லா மதத்தினராலும் ஏற்றுக் கொள்ளப்படுகிற ஒரு மகான் காஞ்சி காமகோடி பீடாதிபதிகள் ஜகத்குரு ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்த நூற்றாண்டின் இறுதியிலே வாழ்கின்ற சமுதாய பெரியவர்களாலே இன்றைக்குப் பிரசித்தி பெற்றவர்; முக்கியமானவர்; எல்லா மதத்தினராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டவர்—பழைய காலத்திலே, சைவமும், வைணவமும் பிரிந்திருந்த காலத்திலேயும் கூட, சைவம், வைணவம் என்ற வேறுபாடு இருந்த காலத்திலே ஒன்றை ஒன்று ஏற்றுக் கொள்ளாத ஒரு சூழ்நிலை அன்றைக்கு இருந்தது—ஆனால் இன்றைக்கு நிலைமை மாறி இருக்கிறது. காஞ்சி காமகோடி பீடாதிபதிகள் அவர்கள் சைவத்தையும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்; வைணவத்தையும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்; அம்பாளையும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே தமிழ் சமுதாயத்தில், தமிழர் வழிபாட்டிலே இருக்கிற பிரிவினை சக்திகளையெல்லாம் ஒன்றாக்கி எல்லா கடவுளையும் வணங்குகிற ஒரு மகானாக இருக்கிற அந்த மகான் பிறந்த நகரத்தை, இந்து மதத்தினுடைய புனித நகரமாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



அதே நேரத்திலே, இந்து மதத்தினுடைய கோட்பாடுகளையும், இந்து மதத்தினுடைய வரையறைகளையும், இந்து மதத்தினுடைய தத்துவங்களையும், இந்து மதத்தினுடைய நெறிமுறைகளையும் நிலைநாட்டுவதற்கு தமிழகத்தில் மட்டுமல்லாமல், உலகத்திலே இருக்கிற இந்துக்களால் மதிக்கப்படுகிற, போற்றப்படுகிற ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் தலைமையிலே இந்து அறநிலையத் துறைக்கு ஒரு வாரியத்தை அமைத்து, தமிழகத்திலே மட்டுமல்ல, உலகத்திலே இந்து மதத்தை நீங்கள் பரவச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்திலே, வேறொன்றையும் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு, எத்தனையோ ஆலயங்கள் கேட்பாரற்ற நிலையில் இருக்கின்றன. நான் இதைக் குறிப்பிடுவதற்குக் காரணம், திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆண்ட போது—நான் அதை இங்கே சுட்டிக் காட்டுவதற்குக் காரணம், அவர்கள் காலத்திலேதான், 1959-ஆம் ஆண்டு இந்து அறநிலையச் சட்டம் என்று சொல்கிறார்கள்; அந்தச் சட்டத்திலே இருக்கிற ஓட்டைகளைப் பயன்படுத்திக் கொண்டு, கோவிலுக்கு இருந்த ஆயிரக்கணக்கான நிலங்களை குத்தகை என்ற பெயரால், பினாமி நிலங்களிலே அவர்கள் இன்றைக்கு ஆக்கிரமித்துக்கொண்டு, அந்த நிலங்களிலே வருகின்ற வருமானத்தை, கோவிலுக்கு செலுத்த வேண்டிய குத்தகைப் பாக்கியைக் கட்டாமல் தவிர்த்து வருகிறார்கள். அதற்குக் காரணம், அதிகாரம், செல்வாக்கு போன்ற எல்லா பலங்களையும் பயன்படுத்தி, அதிகாரிகளை மிரட்டி, அந்தக் கோவில்களுக்குச் சேர வேண்டிய சொத்துக்களைக் கொடுக்காமல் செய்வதற்குக் காரணமே, திராவிட முன்னேற்றக் கழக அரசு தான். காரணம், கோவிலினுடைய சொத்துக்கள் உரிய முறையிலே அதனுடைய பங்கிற்குப் போய்ச் சேர்ந்தால், மீண்டும் இந்து மதம் தழைத்து விடும்; இந்து மதம் இந்திய நாட்டிலே நிலைத்து விடும் என்பதற்காக, காழ்ப்புணர்ச்சி கொண்டு, திராவிட இனத்தவர் அன்றைக்கு அதைத் தடுத்தார்கள். அதன் மூலமாக பணபலத்தையும், அதிகார பலத்தையும் பயன்படுத்தி, கோவில் நிலங்களை தங்களுக்குச் சொந்தமாக்கி, இன்றைக்கு ஆயிரக் கணக்கிலே, இலட்சக் கணக்கிலே கொள்ளையடித்து, வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். நான் இதைச் சொல்வதற்குக் காரணம், பல்வேறு இடங்களிலே—இன்றைக்கு கும்பகோணத்திலே இருக்கிற ஒரு கோவிலுக்குச் சொந்தமான இடத்தை முன்னாள் அமைச்சர் ஒருவர், தன்னுடைய மனைவி பெயர், பிள்ளைகள் பெயர், உறவினர் பெயரிலே குத்தகை எடுதது, குத்தகை பணத்தைக் கட்டாமல் இருக்கிறார்.

அதேபோல, மன்னார்குடியிலே ஒரு கோவிலுக்குச் சொந்தமான இடத்தை வேறோரு முன்னாள் அமைச்சர் எடுத்துக் கொண்டு இன்றைக்கும், ஏமாற்றி வருகிறார்.

இப்படி, எங்கு பார்த்தாலும், மாநிலம் முழுவதும், மாவட்டங்கள் தோறும் பார்க்கிறபோது, கோவில் நிலங்கள் என்று சொன்னால் முன்னாள் அமைச்சர்கள். முன்னாள் அதிகாரிகள், முன்னாள் எம்.எல் ஏ.-க்கள், முன்னாள் எம்.பி.-க்கள், அந்த ஊரிலே இருக்கிற பண்ணையார், பணக்காரர்கள் என்றுதான் ஆக்கிரமிப்பு செய்து கொண்டிருக்கிறார்களே தவிர, என்னைப் போன்ற தாழ்த்தப்பட்ட இனத்திலே பிறந்தவன் ஒரு செண்டு நிலத்தைக்கூட இந்தக் கோவில் நிலத்தை எடுத்தது இல்லை. காரணம், நாங்கள் சாமியின் மீது விசுவாசம் படைத்தவர்கள்; சாமியை வணங்க வேண்டுமென்ற எண்ணம் படைத்தவர்கள், ஆனால், ஆலயங்களுக்குள்ளே, எங்களால் செல்ல முடியவில்லை. ஆண்டவன் சொத்து எங்களுக்குத் தேவையில்லை. ஆண்டவனை வணங்க வழிவிடுங்கள் என்றுதான் கேட்கிறோம். வழிவிட மறுக்கிறார்கள். காரணம், நாங்கள் வழிபட்டு விட்டால், அவர்கள் கையிலே இருக்கிற நிலங்கள், சாதாரண மக்களுக்குப் போய் சேர்ந்து விடுமென்ற காரணத்தினாலே, குறுக்கு வழியிலே சென்றவர்கள்; அன்றைக்குக் கொள்ளை அடித்தவர்கள்; புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில் அது நடக்காது என்பதை உணர்ந்த பின்னாலே, இன்றைக்கு கூக்குரலிடுகிறார்கள், ஓலமிடுகிறார்கள்; சாமி பக்கம் வரலாமா என்றுகூட கேட்கிறார்கள். அப்படிப் பட்டவர்கள்தான் இன்றைக்கு உங்களைப் பார்த்து, பாப்பாத்தி என்று சொல்கிறார்கள். நீங்கள் ஒன்றைத் தெளிவாகச் சொன்னீர்கள்; நாங்கள் சேவை செய்யப் பிறந்தவர்கள் என்று சொல்லியிருக்கிறீர்கள். ஆண்டவனுக்கு சேவை செய்யப் பிறந்தவர்களை எவனாலும் ஒழிக்க முடியாது. அழிக்க நினைத்தவர்கள், வரலாறில்லாமல் அழிக்கப்பட்டிருக்கிறார்கள். நீங்கள் வேறொன்றையும் குறிப்பிட்டீர்கள். புரட்சித் தலைவர் எம் ஜி.ஆர். அவர்கள் அன்றைக்கு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை அமைத்தபோது, நான் சைதாப்பேட்டையிலே, ஆசிரியர் கல்லூரியிலே மாணவனாக இருந்தேன்.

முற்பகல் 11-00

அன்றைக்குச் சைதாப்பேட்டையில் முதல் முறையாக அவர்கள் பேசினார்கள். நீங்கள் சொன்ன அதே கூற்றைச் சொன்னார்கள். இன்றைக்குச் சாதியின் பெயரால், பெயருக்கு அருகாமையிலே ஜாதியை வைத்துக்கொண்டு, நான் இந்தக் கட்சியைச் சேர்ந்தவன் என்று சொல்லுகிறார்கள். யார் எதைச் சொன்னாலும், நான் எம்.ஜி.ஆர். மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டவன். என்னை மக்கள் எம்.ஜி.ஆர். என்று தான் அழைக்கிறார்களே தவிர, மலையாளி என்று அழைப்பதில்லை என்று சொன்னார்கள். இன்றைக்குத் தமிழகத்திலே இருக்கின்ற மக்கள் உங்கள் பின்னாலே இருக்கிறார்கள். எந்தக் கொம்பன் வந்தாலும் உங்களை அசைக்க முடியாது (மேசையைத் தட்டும் ஒலி) எந்த இனம் வந்தாலும் உங்களை அசைக்க முடியாது. இன்றைக்குத், தமிழகத்திலே இருக்கின்ற ஒன்றரைக் கோடி மக்கள் வாக்காளர்



கள். அதில் அரிசன மக்களுடைய வாக்குகளை ஒட்டுமொத்தமாகப்பெற்ற தலைவி இந்த அவையிலே நீங்களாகத்தான் இருக்க முடியும். எத்தனையோ முதலமைச்சர்கள் இந்த அவைக்கு வந்திருக்கிறார்கள். அத்தனை முதலமைச்சர்களுக்கும் இல்லாத ஒரு பெருமை தமிழகத்திலே இன்றைக்கு உங்களுக்கு இருக்கிறது என்று சொன்னால், சாதாரண மக்கள், ஏழை, எளிய மக்கள், கடவுள் மீது நம்பிக்கையுடைய மக்கள் உங்களுக்கு வாக்களித்து இருக்கிறார்கள்.

வாக்களிக்காதவர்களை எண்ணிப் பார்க்க வேண்டும். பணம் படைத்தவர்கள் என்றைக்கும் வாக்களிக்க வருவதில்லை. படித்தவர்கள் வாக்களிப்பதில்லை. போலிங் பூத்துக்கு போய்விடுகிறேன் என்று போய்விடுவார்கள் வியாபார நோக்கிலே வெளியிலே சென்று விடுவார்கள். வெயிலிலே சென்று ஓட்டுப்போட முடியாது என்று எண்ணக்கூடியவர்கள் இவர்கள். இவர்களைப் பற்றி நீங்கள் அஞ்சத் தேவையில்லை. உங்களுக்கென்று ஓட்டுப் போடுகின்ற ஜனங்கள் உங்கள் பின்னாலேயே இருக்கின்றார்கள். அவர்கள் பெயரால் கேட்கிறேன். அந்த மக்கள் வணங்க வேண்டுமென்று விரும்புகிறார்கள். ஆண்டவனைப் பார்க்க வேண்டுமென்று விரும்புகிறார்கள். இன்றைக்குத் தமிழகத்திலே இருக்கிற மக்கள் ஆண்டவனுடைய வடிவிலே உங்களைப் பார்க்கின்றார்கள். ஆகவேதான், நான் கேட்கிறேன். தமிழகத்திலே மீண்டும் இந்து சமய அறநிலையத் துறை செழிப்படைய, வளம் பொங்க, பெருமையடைய, ஒரு அமைப்பை உங்கள் காலத்திலே உருவாக்கி, அந்த அமைப்புக்கு நீங்கள் ஒரு வழிகாட்டியாக விளங்க வேண்டும்.

அதுமட்டுமல்ல, இன்றைக்கு இந்து மதத்திலே ஆலயங்களிலே நீங்கள் இ.ஓ.க்களை நியமித்திருக்கிறீர்கள். யார் அந்த இ.ஓ க்கள் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். கோயிலிலே இ.-ஓக்களாக வரக்கூடியவர்கள் குடிப்பழக்கம் உள்ளவர்களாக நிறைந்திருக்கிறார்கள். அவர்கள் வருகின்றபோதே, டிக்கட் எந்தப் பக்கம் விற்கிறார்கள்; இன்றைக்கு எந்த டிக்கட் அதிகம் போகிறது; எந்த டிக்கட்டைப் பிளாக்கில் விற்றால் எவ்வளவு காசு கிடைக்கும் என்று எண்ணக் கூடியவர்கள்தான் இன்றைக்கு இ.ஓ க்களாக வந்து கொண்டிருக்கின்றார்கள். அவர்களுக்குச் சமயத்தின் மீதோ, இறைவன் மீதோ நம்பிக்கை இல்லை. இப்படி நம்பிக்கை இல்லாதவர்கள் கோயிலில் இ ஓ.க்களாக நியமிக்கப் படுவதன் மூலமாகத்தான் கோயில் சொத்துக்கள் கொள்ளையடிக்கப்படுகின்றன. ஒன்றை நான் தெளிவாகச் சொல்கிறேன். எலக்ட்ரிசிடி போர்டு என்று சொல்லுகிறபோது அங்கே. மின்சாரத்தைப் பற்றித் தெரிந்தவர்களைத் தான் நியமிக்கிறோம். கல்வி நிறுவனம் என்று சொன்னால், கல்வியாளர்களை நியமிக்கிறோம், மருத்துவத் துறை என்று சொல்லுகிறபோது. மருத்துவ நிபுணர்களை அங்கே நியமிக்கிறோம். அதைப்போல, நீங்கள் இந்த இந்து அறநிலையப் பணிக்கு, இந்து மதச் சடங்குகளைத்

தெரிந்தவர்களை, இந்து வேத சாஸ்திரங்களை அறிந்தவர்களைத் தான் அந்தப் பதவிக்கு நீங்கள் அமர்த்த வேண்டும். அப்படி அமர்த்துகின்றபோது, அவர்களுக்கு அந்த வேலைகள் தெரியாமல் இருக்கலாம். அப்படித் தெரியாதவர்களை இந்தப் பணியில் நியமிக்கின்றபோது, அரசு செலவிலே நீங்கள் அவர்களுக்குப் பயிற்சி அளித்து, அவர்களை அந்தக் கோயிலில் நியமித்தால், கோவிலினுடைய புனிதத்தன்மை மீண்டும் பலம் பெறும். கோவிலைப் பற்றி மக்கள் புரிந்து கொள்வார்கள். ஆண்டவன் இருக்கிறார் என்பதை உணர்ந்தால்தான், நாட்டிலே மழை வரும். அன்றைக்குப் பழைய காலத்திலே பார்க்கின்றபோது, மாதம் மும்மாரி பொழிந்ததாக வரலாறு சொல்கின்றது. ஆறு கால பூஜை நடத்தினார்கள். அப்படியெல்லாம் சொல்லுகிறார்கள். ஆனால், இன்றைக்கு ஆலயங்களிலே விளக்கு கூட ஏற்ற முடியாத நிலைமையை நாம் பார்க்கின்றோம்.

இன்றைக்குத் தஞ்சை மாவட்டத்தில், தஞ்சைப் பெரிய கோவிலை இராஜராஜன் கட்டினார் என்று சொல்லுகிறார்கள். ஆனால் அங்கே இருக்கின்ற சிவலிங்கத்திற்கு விளக்கு கூட ஏற்ற முடியாத நிலை இருக்கிறது அதை உணர்ந்த காஞ்சிப் பெரியவர் அங்கே விளக்கு பூஜை நடத்துவதற்கு இன்றைக்கு ஒரு அமைப்பை உருவாக்கி அந்தச் சேவையைச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

உலகத்திலே பழமையானது இந்து மதம். இன்றைக்கு அது சிறப்பாக விளங்கக் கூடியது என்றெல்லாம் நாம் அதைப் பார்க்கின்றோம். அங்கேயிருக்கின்ற ஆண்டவனை வணங்கச் செல்பவர்களுக்கு வசதியாக, ஆண்டவன் இருக்கின்ற இடத்திற்கு விளக்குக் கூட யாராலும் போட முடியவில்லை. அந்தக் கோவிலினுடைய சொத்துக்கள் எங்கே போனது?

மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களை நான் கேட்டுக் கொள்வதெல்லாம், இதுநாள் வரையில் இந்தத் துறை கொள்ளையர்களுடைய கையிலே இருந்து கொண்டிருந்தது. அதை இன்றைக்கு நீங்கள் நேரிடையாக ஏற்றுக் கொண்டிருக்கிறீர்கள். ஒரு உண்மையை நீங்கள் இந்த அவைமுன் வைக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். தமிழகத்திலே இருக்கின்ற கோவில்களின் எண்ணிக்கை எத்தனை? அந்தக் கோவில்களுக்கு எத்தனை ஏக்கர் நிலங்கள் எழுதி வைக்கப்பட்டுள்ளது? எத்தனை ஏக்கர் நிலங்கள் யார் யார் வசம் இருக்கின்றன? எத்தனை ஏக்கர் நிலங்களுக்கு குத்தகை கட்டப்பட்டிருக்கிறது? எத்தனை ஏக்கர் நிலங்களுக்கு குத்தகை கட்டப்படவில்லை? அபபடிக் கட்டாதவர்கள் யார் என்ற பட்டியலை இந்த அவையிலே அறிவித்து, அப்படிப்பட்டவர்களுடைய முகத் திரையை மக்கள் மத்தியிலே கிழித்து, அப்படிப்பட்ட நிலங்களை பொது ஏலத்தில் விடவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பொது ஏலத்தின் மூலமாகக்



கிடைக்கும் பணத்தைக் கொண்டு, ஆலயத் திருப்பணிக்கு நல்ல சேவைகள் செய்ய முடியும். ஆயிரம் ஆயிரம ஏக்கர் நிலங்கள் தமிழகத்திலே இருக்கின்றன.

நான் வேறொன்றையும் சொல்லிக் கொள்கிறேன். ஸ்ரீரங்கம் ரங்கநாதர் திருக்கோயிலில் இருக்கின்ற கருநீலக்கல், உலகத்திலேயே விலை மதிக்க முடியாத ஒன்று. உலகத்திலே, ஏன், எந்த நாட்டிலேயும் இல்லாத ஒன்று என்று கூடச் சொல்லுகிறார்கள்.

முற்பகல் 11-05

பண்டைய காலத்தில் பார்க்கிறபோது பொன் நகைகள் என்றும் வைர நகைகள் என்றும் பார்க்கிறபோது அதை அவர்கள் நகைகளாகப் பார்க்கவில்லை; அதை வழங்க வேண்டும் என்று எண்ணிய அந்த பக்தர்கள் சாமி மீது நம்பிக்கை கொண்டவர்களாக இருந்தார்கள். ஆகவே அப்படிப்பட்ட பழமையான பழங்காலத்தினுடைய கலாச்சாரத்தை எடுத்துச் சொல்கிற நகைகள் எல்லாம் இன்றைக்குக் கொள்ளை அடிக்கப்பட்டிருக்கின்றன. அவை எங்கிருந்தாலும், நீங்கள் கண்டுபிடிக்க வேண்டும் என்ற ஒரு தெளிவான உண்மையை நீங்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு எடுத்துச் சொல்லியிருக்கிறீர்கள்.

கடந்த காலங்களில் கடத்தப்பட்ட சிவன் சிலை, நீங்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு ஆட்சிப் பொறுப்பிலே இருக்கின்ற நேரத்தில் இங்கே ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. சிவன் இன்றைக்கு உங்கள் கையிலே வந்து தாண்டவம் ஆடுகிறான். சிவ தாண்டவத்தின் முன்பு எந்த தாண்டவமும் வெற்றி பெற்றதாக வரலாற்றிலே இல்லை. இன்னும் ஒரு நிமிஷத்தில் முடித்து விடுகிறேன்.

என்னுடைய தொகுதியின் சார்பில் வேண்டுகோளாக ஒன்றை வைக்க விரும்புகிறேன். தலைவர் ராஜீவ் காந்தி அவர்கள் கொல்லப்பட்ட இடம் என்பதால் அந்த இடம் இன்றைக்கு முக்கியத்துவம் வாய்ந்த இடமாகக் கருதப்படுகிறது. அங்கே ராஜீவ் காந்தி அவர்களுக்காக எடுக்கப்பட்டிருக்கிற இடமும் கோயில் நிலம் தான். அதை நினைவில் கொண்டு அந்த இடத்தினுடைய இம்பார்டன்ஸ் கருதி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்த பெரும்புதூரை டி.எஸ்.பி., ஆர்.டி.ஓ. ஹெட்குவார்ட்டர்ஸ் ஆக மாற்றித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அந்தப் பகுதியைச் சுற்றுலா மையமாக்க வேண்டும் என்றும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. போளூர் வரதன்] [1991 செப்டம்பர் 26

என்னுடைய பகுதி மிகவும் பின்தங்கிய ஒரு பகுதி. அந்தத் தொகுதி மக்கள் எந்தவித முன்னேற்றமும் இல்லாமல் இருக்கிறார்கள். அந்தத் தொதியிலே தண்ணீர்ப் பஞ்சம் இருக்கிறது. வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கிறது. வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்ந்துகொண்டு இருக்கிறார்கள். நகர்ப்புறத்தை ஒட்டியிருக்கிற பகுதிகள் எல்லாம் இன்றைக்கு வீடுகளாக மாற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஏரிகளிலும் புறம்போக்கு நிலங்களிலும் தி.மு.க.வைச் சேர்ந்த பிரமுகர்களும், முன்னாள் எம்.எல்.ஏ., எம்.பி. போன்றவர்களும் அந்த இடங்களை 'ப்ளாட்' போட்டு விற்றுக் கொண்டிருக்கிறார்கள், அதற்கு அதிகாரிகளும் உறுதுணையாக இருக்கிறார்கள். படப்பையில் ஒரு ஈசுவரன கோவிலுக்கு 26 ஏக்கர் நிலம் இருக்கிறது. அந்த நிலத்தில் ஒரு பகுதியில் சவுக்கு போட்டிருந்தார்கள். கடந்த மாதம் கூட அந்த சவுக்குத் தோப்பை தி.மு.க. கட்சியை சேர்ந்தவர்களும், கோயில் ஈ.ஓ.வும் சேர்ந்து வெட்டி விற்றிருக்கிறார்கள். இது சம்பந்தமாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு. ஆர்.டீ.ஓ. அவர்களுக்கும், தாசில்தார் அவர்களுக்கும், சம்பந்தப்பட்ட அதிகாரிக்கும் நான் புகார் கொடுத்தும் இதுவரையில் சம்பந்தப்பட்டவர்கள் கைது செய்யப்படவில்லை. வெட்டி எடுத்துச் செல்லப்பட்ட அந்த சவுக்குகள் பல ஆயிரக்கணக்கான ரூபாய் மதிப்புள்ளதாகக் கருதப்படுகிறது. அவற்றைப் பறிமுதல் செய்ய வேண்டும்.

என்னுடைய பகுதியில் நீங்கள் கோவில் பணிகளைத் துவங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வேறு ஒன்றையும் இறுதியாகச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். தாழ்த்தப்பட்ட மக்கள் இன்றைக்குக் கோயில்களுக்கு செல்லமுடியாத நிலைமை இருக்கிறது. பாரதி சொன்னான், காணி நிலம் வேண்டும் என்று. அப்படி அவன் ஆதிபராசக்தியிடம் கேட்டான். நான் உங்களிடத்தில் கேட்கிறேன். எங்கள் இனம் மக்களுக்கு 3 சென்ட் என்று இடம் வைத்திருக்கிறார்கள். உங்கள் காலத்திலாவது அதை 5 சென்ட் நிலமாக உயர்த்தி, எங்கள் இன மக்கள் வாழ்வதற்கும், அவர்கள் வாழ்ந்து, அவர்களும் சாமியை வணங்குவதற்கும் எங்களுக்கு நீங்கள் வழிவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சிவனை பார்க்கச் சென்றபோது நந்தியை வழிவிடு என்று சொன்னது போல், நாங்கள் இன்றைக்கு உங்கள் பின்னால் அணிவகுத்து நிற்கிறோம். எனவே, எங்களை ஆலயத்திற்குள்ளே அழைத்துச் செல்லுங்கள். ஆலயத்தின் உள்ளே செல்வதற்குச் சட்டம் இருந்தாலும் அநத ஆலயங்களிலே அரிசனங்களை உள்ளே விட்டதாக வரலாறு இல்லை. தனியார்களின் கோயில்கள் இருக்கின்றன. பரம்பரைக் கோயில்கள் என்று சொல்கிறார்கள். கொள்ளை அடிக்கிறார்கள். அரசின் கோயில்களில் மட்டும்தான் இன்றைக்கு அவர்கள் செல்ல முடிகிறது. இப்படி தனியாருக்குச் சொந்தம், ஆதீனத்திற்குச்



1991 செப்டம்பர் 26] [திரு. போளூர் வரதன்]

சொந்தம் என்கிற கோயில்களை எல்லாம் மாற்றி, அவற்றின் சட்ட விதிகளை எல்லாம் மாற்றி, கோயில்கள் எல்லாவற்றையும் அரசாங்கமே ஏற்று நலிந்த கோயில்களுக்கு மாதந்தோறும் 100 ரூபாய் எண்ணெய்க்காக வழங்கியும், அங்கே எண்ணெய் ஏற்றுபவர்களுக்கு 100 ரூபாய் வழங்கியும ஒவ்வொரு கிராமத்திலும் கோயில்களுக்கு விளக்கேற்றும் வகையில் ஆவன செய்யவேண்டும்.

அரிசன மக்கள் வாழ்கிற பகுதியில் அரசின் செலவில் ஒரு கோயிலை அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த நல்ல வாய்ப்பினைத் தந்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி அமைகிறேன். ஜெய்ஹிந்த்.

முற்பகல் 11-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கா. ப. பட்டாபிராமன்

திரு. கா. ப. பட்டாபிராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாய்ப்புக்கு முதற்கண் என் நன்றி. கண்முன் இந்நாளில் காணுகின்ற காலத்தை வென்ற திருக்குறளின் வாழ்வாக வெள்ளை உள்ளமாக, கனிந்த எழில் தமிழ்ப்பண்பாக, தமிழர் செய்த புண்ணியத்தால் வந்துதித்த புரட்சித் தலைவியாக, ஈகை வள்ளலின் இணையற்ற வாரிசாக, ஏழை எளிய மக்களின் இதய தெய்வமாக எங்களின் வாழ்வின் தெய்வமாக அமர்ந்திருக்கிற மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுடைய திருப்பாதங்களை தொட்டு வணங்கி என்னுடைய உரையைத் துவக்குகின்றேன்.

ஏற்கெனவே உருவாக்கப்பட்ட சட்டங்களை வைத்து நீதிமன்றங்களிலே வாதாடிக்கொண்டிருந்த என்னை, பேறறிஞர் அண்ணா அவர்களுடைய வார்த்தையிலே சொல்லவேண்டுமென்றால் சாமானியமான, சாதாரணமான என்னை, அந்தச் சட்டங்களையே உருவாக்குகிற சட்டசபைக்கே வரவழைத்து அதுவும் நகரேசு காஞ்சி என்றும், அண்ணா பிறந்த மண் என்றும் போற்றப்படுகிற காஞ்சிபுரம் சட்டமன்ற தொகுதியிலிருந்து என்னை வரவழைத்து இந்தச் சட்டமன்றத்தில் அமர வைத்திருக்கிற என்னுடைய இதய தெய்வத்திற்கு மீண்டும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். எலியெனத் தங்களை இகழ்ந்தார்கள். நீங்கள் அஞ்சவில்லை. புலியென இன்று செய்லபடப் புறப்பட்டுவிட்டீர்கள். புல்லர்கள் ஒடுகிறார்கள் புறமுதுகு காட்டி. தங்கள் மீது இழிசொல்லும் பழிசொல்லும் சுமத்தி அலங்கோல காட்சியுடன் அவமானப்படுத்தி எந்த மாமன்றத்திலே அந்த நிகழ்ச்சிகள் நடந்தனவோ அதே மாமன்றத்தில் இன்றைய தினம் மக்கள் தங்களை முதல்வராக அமர வைத்திருக்கின்ற காட்சியை பார்க்கிறபோது தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும், பிறகு தர்மம் வெல்லும் என்ற வார்த்தைகளுக்கு நீங்கள் இன்றைய தினம் இலக்கணமாகி விட்டீர்கள். சூது மனம் படைத்தோர் சுக்குநூறாக்கப்பட்(

அரசியல் அநாதைகளாக்கப்பட்டு இன்றைய தினம் அவர்கள் எல்லாம் மூலையிலே முடங்கி முக்காடுபோட்டு முராரி பாடிக் கொண்டிருக்கிறார்கள். ஓடி ஓடி வரப் பார்த்தார்கள். கால்கள ஓடிந்தன. இன்று நொண்டி நொண்டி நடந்து நடந்து வர பார்த்தார்களே. அதிலேயும் ஓரிருவர் வந்தார்கள். அவரும் இன்றைய தினம் அவையிலே இல்லை. அந்த அளவுக்கு இன்றைய தினம் நாட்டு மக்கள் உங்களை ஏகோபித்தத் தலைவியாக என்றைய தினமும் இருக்கின்ற நிரந்தர முதலமைச்சராக தமிழகத்து மக்கள் தினம் தங்களை நினைக்கிறார்கள். நான் கூட அடிக்கடி மக்களிடத்திலே பார்த்துப் பேசுகிறபோது கேட்கின்றேன். 10, 15 ஆண்டுகளாக ஒரு முதலமைச்சர் ஒரு மாநிலத்திலே இருந்து எந்த அளவுக்கு அனுபவங்களை பெற்றிருப்பார்களோ அந்த அளவுக்கு அனுபவங்களை பெற்று இன்றைய தினம் தமிழகத்தின் முதல்வராக நீங்கள் காட்சியளிக்கிறீர்கள் என்றெல்லாம் நான் சொல்லவில்லை, மக்கள் சொல்லிக் கொள்கிறார்கள். இந்த நிலையைத் தாங்கள் பெறுவதற்கு நீங்கள், நீந்தி வந்த நெருப் பாறுகள் எத்தனை, தாண்டி வந்த எரிமலைகள் எத்தனை? நடந்து வந்த நச்சுப் பாதைகள் எத்தனை, எண்ணிப் பார்க்கிறோம். அவைகளை எல்லாம் எண்ணிப் பார்க்கிறபோது இன்றைய தினம் இந்த மாமன்றத்திலே, இந்த மாமன்றமே மனிதர்களை ஏற்றிருக்கின்ற ஒரு கோயிலாக இருக்கின்ற மாமன்றத்திலே தாங்கள் தேவதையாக அமர்ந்திருக்கிற காட்சியை தமிழகத்து மக்கள் வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இன்றைய தினம் சொல்லக் கடமைபட்டிருக்கிறேன்,

மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அவர்கள் ஆதி பராசக்தியின் வடிவம் என்று மக்கள் பேசுகிறார்கள். அவர்கள் அமர்ந்திருக்கிற இடம் கோயில் என்கிறார்கள். அவர்கள் கை காட்டுகிற இடம் தேவலோகம் என்கிறார்கள். அவர்கள் பேசுகின்ற பேச்சுக்கள் வேதங்கள்.

அந்த நிலைமையிலேதான் இன்றைய தினம், தாங்கள் தமிழகத்தினுடைய திருக்கோயில்களை எல்லாம் தங்கள் கையிலே வைத்து அருள்பாலித்து அந்த திருக்கோயில்களை நல்ல முறையிலே வளர்க்கப்படவேண்டுமென்ற நிலையிலே இன்றைய தினம் அந்தத் துறையைப் பெற்றிருக்கிறீர்கள்.

இறையுள்ளம் கொண்ட நம் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி தங்களிடமே இந்து சமய அறக்கட்டளை நிர்வாகத்தை வைத்துக் கொண்டிருப்பதை தமிழகத்திலே உள்ள கோடான் கோடி மக்கள் தங்களுடைய அகமும் முகமும் மலர வாழ்த்திக் கொண்டிருக்கின்றார்கள். தமிழகத்திலே இந்து சமய அறக் கட்டளைகள் நிர்வாகத்தில் 35 ஆயிரத்திற்கும் மேற்பட்ட திருக் கோயில்கள் உள்ளன என்று நான் கருதுகிறேன். அவைகள் வகைப்படுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. 2 ஆயிரம் ரூபாய்க்கு மேல் வருவாய் உள்ள கோயில்கள் 5 ஆயிரத்தில் இருந்து 10 ஆயிரம் என்று, அப்படி வகைப்படுத்தி வைத்திருக்கிறார்கள்.



கோயில்களுக்கு என்று ஆன்மிகத்திலே அழுத்தமான நம்பிக்கை உடைய பக்தி உள்ளம் கொண்ட முன்னோர்கள் எவ்வளவோ அசையா சொத்துக்களை எழுதி வைத்திருக்கிறார்கள். எடுத்துக் காட்டாக சொல்ல வேண்டுமென்று சொன்னால், தஞ்சை மாவட்டத்திலே மட்டும் ஏறத்தாழ 5 ஆயிரம் ஏக்கர் நஞ்சை நிலங்கள் இருக்கின்றன. இந்த 5 ஆயிரம் ஏக்கர் நஞ்சை நிலங்களிலே வருகிற வருவாய் ஒரு பிச்சை போடுவது போல வருவாய் கொடுத்தால்கூட இன்றைய தினம் கோயில்களிலே ஒளி விளக்குகள் 24 மணி நேரமும் எரிந்து கொண்டிருக்கின்ற காட்சியை நாம் பார்க்க முடியும். ஆனால் இன்றைய நிலை என்ன? சட்டத்திலே இருக்கின்ற ஓட்டை ஓடிசல்களை எல்லாம் பயன்படுத்திக்கொண்டு அவர்கள் குத்தகைதாரர்கள் என்ற அடிப்படையிலே' கல்ட்டிவேட்டிங் டெனன்ட்ஸ், என்று அதாவது பயிரிடும் விவசாயிகள் என்ற அடிப்படையிலே அவர்களை அந்த நிலங்களிலே இருந்து வெளியேற்ற முடியாமல் நாம் திக்குமுக்கு ஆடிக்கொண்டிருக்கிறோம். இந்த நிலையிலே மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நான் மிகவும் பணிவன்போடு சொல்லிக் கொள்வேன், இந்த மாமன்றத்திலே இருந்து அந்த கல்ட்டிவேட்டிங் டெனன்ட்ஸ் என்கின்ற பயிரிடுகின்ற விவசாயி வாடகை கட்டுப்பாட்டு சட்டத்திலே ஒரு விதிவிலக்கு கொடுத்திருக்கிறோம். அதாவது நகரங்களிலே இருக்கின்ற கட்டடங்களுக்கு இந்து சமய அறக் கட்டளைகளுக்குச் சொந்தமான கட்டடங்களுக்கு அந்த சட்டம் ஒவ்வாது என்று 1976-என்று கருதுகிறேன், அதிலே ஜி.ஓ.எம்.எஸ். 2000 என்ற அடிப்படையிலே கோயில்களுக்கு சொந்தமான வீடுகளுக்கு அந்த சட்டத்திலிருந்து விதிவிலக்கு அளித்திருக்கிறார்கள் அந்த அடிப் படையிலே கோயில்களுக்கு சொந்தமான நிலங்களுக்கு நீங்கள் கல்ட்டிவேட்டிங் டெனன்ட்ஸ் என்கின்ற அந்த வார்த்தையிலே இருந்து விதிவிலக்கு அளித்து பப்ளிக் டிரஸ்ட் ஆக்ட் என்ற அந்த சட்டத்திலேயிருக்கின்ற அந்த கல்ட்டிவேட்டிங் டெனன்ட்ஸ் அல்லது டெனன்ட்ஸ் என்ற வார்த்தைகளுக்கு விதிவிலக்கு அளிக்கப்படுமானால் கோயில்களுக்குச் சொந்தமாக இருக்கின்ற நிலங்களை அங்கே அரசு மிகச் சீக்கிரமாக குத்தகைதாரர்கள் கையிலேயிருந்து எடுத்து அதற்கான ஆவணங்களை செய்ய முடியும் என்று கருதுகிறேன். அதுமட்டுமல்ல, எத்தனை எத்தனையோ காலங்களுக்கு முன்பு, 99 ஆண்டுகளுக்கு எல்லாம் குத்தகையை உருவாக்கி, கோயில் சொத்துக்கள் ஒரு தனிப் பட்டவர்களிடமோ அல்லது குடும்பத்தினிடமோ அடங்கிக் கிடக்கிறது. அப்படிப் பார்க்கும்போது தான் செப்டம்பர் மாதத் தினுடைய 'அசைட்' என்ற ஆங்கிலப் பத்திரிகையில் கூட கவர் ஸ்டோரியில், ஒரு கட்டுரையில் ஒன்றை எழுதியிருக்கிறார்கள். இதை இந்தப் பேரவையினுடைய மாண்புமிகு தலைவர் அவர்களே, தங்களுடைய அனுமதியோடு இங்கே சொல்கிறேன்.

முற்பகல் 11-15

'Here are a few facts about temples in Tamil Nadu; amazing but true as they are. 46 grounds of land belonging to the Arulmigu Kapaleeswarar Temple, Madras in prime location in crowded Mylapore is being held on a 99 years lease by somebody else I do not want to mention the name'' for 1400 rupees a month as a lease,

என்று, இப்படி அந்தக் கட்டுரையில் எழுதிக் கொண்டே போகிறார்கள். இந்த நிலைமையை மாற்றி, மாண்புமிகு முதல்வர் அவர்கள். இந்தக் காலத்தில் இதைச் செய்யவில்லையென்றால் எந்தக் காலத்திலும் அவர்கள் இதை தமிழகத்தில் செய்ய முடியாது. அதாவது கோயில் நிலங்களையோ, கோயில் கட்டடங்களையோ பல பல ஆண்டுகள், இப்படி எல்லாம் 99 ஆண்டுகள் குத்தகைக்கு விடுவது தடுக்கப்படவேண்டும். அதற்கான சட்ட முன்வடிவினைக் கொண்டு வர வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். அப்படி வருகின்ற சட்டம், ரெட்ராஸ்பேக்டிவ் ஆக அதாவது கடந்த காலத்திலிருந்து அது நடைமுறைக்கு வரும் அளவுக்கு அந்தச் சட்டத்தை இயற்ற வேண்டுமென்று இந்தப் பேரவையில் நான் சொல்லிக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமில்லாமல், கோயில் நிலங்களை வைத்திருக்கிற குத்தகைதாரர்கள், கல்டிவேடிங் டெனன்ட்ஸ் என்கிற போர்வை அவர்கள் மேலேயிருந்து தூக்கி எறியப்பட்டால் அவர்கள் சட்டத்தின் சாதாரண பிடியில் வந்து விடுவார்கள் என்பதையும் நான் இங்கே சொல்லிக்கொள்வேன்.

இதைத் தவிர்க்க வேண்டுமென்றால், 1976 ஆம் ஆண்டு அதாவது 16-8-1977-லே வந்த ஜி.ஓ. (எம்.எஸ்) எண் 2000 என்கின்ற அந்த அரசு ஆணையை இந்த நிலங்களுக்கு செயல் படுத்த வேண்டுமென்றும் இங்கே நான் சொல்ல கடமைப் பட்டிருக்கிறேன்.

எதுவும் முறைப்படி நடக்க வேண்டுமென்ற ஏற்றமிகு எண்ணம் கொண்ட மாண்புமிகு முதல்வர் அவர்கள் விரும்பினால் இதைக்கவனத்தில் கொள்ளலாம். இதுவரை கோயில் நிலங்களுக்கு செலுத்த வேண்டிய குத்தகை தொகையை ரத்து செய்துவிட்டு, அதாவது இன்றைய தினம் கோயிலுக்குச் சொந்தமான நிலங்களை விவசாயத்திலே வைத்துக் கொண்டிருக்கிற குத்தகைதாரர்களிடமிருந்து பணமும் வருவதில்லை, நிலத்தையும் நாம்கையில்எடுத்துக் கொண்டு கோயில்களைக் காப்பாற்றலாம் என்றால் அதுவும் முடியவில்லை. எனவே, நான் என்னுடைய பணிவான கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த கால குத்தகைப் பாக்கிகள் வரவில்லையென்றால் கூட கவலைப்படவில்லை, ஆனால் சென்ற ஆண்டு பசலிக்கு தரவேண்டிய குத்தகையை தந்துவிட்டு, அடுத்த



ஆண்டுக்குரிய குத்தகைப் பணத்தை டெபாசிட் செய்துவிட்டு அவர்களே அந்த நிலங்களை பயிர் செய்தால்கூட ஓரளவுக்கு கோயில்களுக்கு நன்மை பயக்கும் என்ற கருத்தை இந்த மாமன்றத்திலே நான் வெளியிட கடமைப்பட்டிருக்கிறேன்.

கோயில் பராமரிப்புக்கு என்று எனக்கு முன்னர் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சில கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். அந்த அளவில் என்னுடைய பணிவான கருத்தையும் இந்த மாமன்றத்தில் எடுத்து வைக்க கடமைப் பட்டிருக்கிறேன். தற்போது கோயில்களில் பணிபுரியும் அரசு அலுவலர்களுக்கு ஞாயிற்றுக் கிழமையில் விடுமுறை இருக்கிறது. பொதுவாக கோயில்கள் என்றாலே அதுவும் தமிழகத்துக் கோயில்கள் என்றால் ஞாயிற்றுக் கிழமைகளில் தான் பக்தர்களும் யாத்திரிகர்களும் கோயிலுக்கு வருவார்கள். எனவே, அந்த அரசு ஊழியர்கள் ஞாயிற்றுக் கிழமைகளில் பணிபுரிந்துவிட்டு அதற்குப் பதிலாக வேறு ஒரு நாளிலே அவர்களுக்கு விடுமுறை தந்தால் யாத்திரிகர்கள் ஏதாவது சந்தேகம் வந்தால்கூட அங்கே பணிபுரிகின்ற அரசு அலுவலர்கள் இருந்தால் அவர்களிடம் கேட்டு சந்தேகத்தைப் போக்க முடியும். அரசு அதிகாரிகளைக் கண்டு பேசி, கேட்க முடியும் என்பதையும் இந்தச் சமயத்தில் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, அர்ச்சகர்கள், பூசாரிகள், குருக்கள் போன்ற பூஜை புனஸ்காரங்களில் ஈடுபடுகிறவர்களுக்கு தேவஸ்தானங்கள் மூலமாகவே பயிற்சி முகாம்கள் வைத்து பயிற்சி தரலாம், அரசு அதை நடத்த முடியுமா என்றால், 'இட் ஈஸ் ஏ செக்யூலர்ஸ்டேட்' என்ற அடிப்படையிலே அது முடியாது என்கிற காரணத்தினாலே வசதி பெற்றிருக்கின்ற அந்தந்த தேவஸ்தானங்கள் மூலம் இத்தகைய பயிற்சி முகாம்களை நடத்தி பயிற்சி அளிக்க வேண்டுமென்று இம்மாமன்றத்தில் தெரிவித்துக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், நல்ல வருவாயுள்ள தேவஸ்தானங்கள் தமிழகத்தில் எத்தனையோ இருககின்றன. அந்தத் தேவஸ்தானங்களின் வருவாயை வைத்து ஆன்மீகக் கல்லூரி ஒன்றை ஏற்படுத்தி, அதுவும் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் இறையுள்ளம் உள்ள எங்களுடைய இதயத் தெய்வம் அவர்கள் தன்னுடைய ஆட்சிக் காலத்திலேயே ஆன்மீகக் கல்லூரி ஒன்றை உருவாக்கி பழம் பெரும் ஏடுகளை எல்லாம் பார்த்து, அந்தக் காலத்தில் எந்த அளவுக்கு பூசை புனஸ்காரங்கள் எல்லாம் வகைப்படுத்தப்பட்டன என்பதை எல்லாம் அந்தக் கல்லூரியின் மூலமாகப் போதிக்கப்பட வேண்டும் என்ற என்னுடைய கருத்தையும் இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்ததாக, சுயநலம் என்று கருத வேண்டாம். என்னுடைய சொந்தத்தொகுதி பற்றி வருகிறேன்; காஞ்சிபுரம் தான். கல்வியில் சிறந்தது காஞ்சிபுரம் என்பார்கள். நகரத்திலே எல்லாம் பேர் பெற்ற நகரம் நகரேசி காஞ்சி என்பார்கள். அந்த காஞ்சிபுரத்தைப் பற்றித்தான் யுவான்சுவாங் போன்ற பெரிய சரித்திரத்திலே புகழ் பெற்றவர்கள் குறிப்புகளில் எல்லாம் இருக்கிறது என்று சொல்லுவார்கள் அந்தக் காஞ்சியிலே தான் பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்தார்கள். இதையெல்லாம்விட நாங்கள் போற்றி வணங்குகின்ற புரட்சித் தலைவர் அவர்கள் வாழ்ந்த மாவட்டதைச் சேர்ந்தது தான் காஞ்சிபுரம் என்பதையும் இந்த மாமன்றத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அந்தக் காஞ்சிபுரத்திலே இன்றையதினம் எண்ணற்ற கோவில்கள் இருக்கின்றன. அந்தக் கோவில்களைப் பார்ப்பதற்காகவும், அதிலே உள்ள இறைவனை வணங்குவதற்காகவும் தமிழகத்திலிருந்து மட்டுமல்ல, காஷ்மீரத்திலிருந்து கன்னியாகுமரியிலிருந்து, அஸ்ஸாமிலிருந்து, இந்தியப் பெருநாட்டிலுள்ள பல மூலை முடுக்குகளிலிருந்து காஞ்சிபுரம் நோக்கி வந்து கொண்டிருக்கிறார்கள். யாத்திரிகர்கள் அங்கே இருக்கிற கோவில்களில் உள்ள இறைவனைக்காண்பதற்காக மட்டுமல்ல, அங்கே இன்றைய தினம் வாழ்கின்ற முப்பெரும் ஆச்சாரியப் பெருமக்கள் இருக்கிறார்கள். அவர்களைப் பார்க்கவருகிறார்கள் ஆனால் அந்த காஞ்சிபுரத்திலே யாத்திரிகர்கள் தங்குவதற்கு வசதியான தங்குமிடம் கிடையாது. ஒரிருவரின் தனிப்பட்ட இடங்கள் இருந்தாலும்கூட, அங்கே வசதிகள் கிடையாது. அங்கே வாடகைக் கட்டணமும் அதிகமாக இருக்கிறது. எனவே பப்ளிக் இண்டரஸ்ட் என்ற அடிப்படையிலே பொதுமக்கள் நலன் கருதி அங்கே தங்கும் விடுதிகளைக் கட்டி, நவீன முறையிலே அவைகள் பாதுகாக்கப்பட்டால் அரசுக்கும் வருவாய் உண்டு. யாத்ரிகர்களுக்கும் நன்மை உண்டு என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக் கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-20

அதுமட்டுமல்ல 2,000 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டதாக சொல்லப்படுகின்ற ஏகாம்பரநாதர் என்கின்ற பெரிய கோவில் காஞ்சிபுரத்தில் இருக்கிறது. அதற்கு அடுத்த பிப்ரவரி மாதம் அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் நடக்க இருக்கிறது. அவ்வளவு பெரிய பெயர்பெற்ற காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோவிலில் கும்பாபிஷேகத்திற்கு இதய தெய்வம் புரட்சித்தலைவி அவர்கள் வந்திருந்து, அவர்கள் திருக்கையாலே அதை நடத்தி வைக்க வேண்டுமென்று என்னுடைய தொகுதி மக்கள் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றையதினம் பாலிசி நோட்டைப் பாக்கும்போது, புரட்சித் தலைவி அவர்கள் ஆரம்பித்த கோவில்களுக்காகச் சேகரிக்கப்படுகின்ற நிதிக்கு 1½ கோடி ரூபாய் பொதுமக்கள் தந்திருக்கிறார்கள் என்பது தெரிகிறது. அதுவும் 54 நாட்களிலே 1½ கோடி



ரூபாய் தந்திருக்கிறார்கள் என்றால் இந்தக் கோவில்களை வாழ வைக்கின்ற அந்தக் காக்கும் கரங்களாக தமிழக மக்கள் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களை எண்ணுகிறார்கள் என்பதை நான் எண்ணிப் பார்க்கிறேன். எனவே கோவில்களிலே ஆண்டவனைப் பார்க்கிறோமோ இல்லையோ, நாங்கள் இன்றைய தினம் தமிழகத்திலே தங்களை ஒரு தெய்வமாகப் பார்க்கிறோம் என்பதைச் சொல்லி, வாய்ப்பு அளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைச் சொல்லி, விடைபெற்றுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வே. தம்புசாமி.

முற்பகல் 11-25

திரு.வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறநிலையத் துறை மானியத்தின் மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்து அறநிலையத் துறை மற்றும் அதன் தலைமையில் செயல்படுகின்ற இந்து அறநிலையங்கள் சிறப்பாக நடைபெறுவதற்காக வாரியம் அமைப்பதாகக்கொள்கை குறிப்பிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் முன்பு காங்கிரஸ் கட்சியின் முதல்வராக இருந்த திரு. பக்தவத்சலம் அவர்கள் காலத்தில் இப்படி ஒரு வாரியம் அமைக்கப்பட்டு, அது செயல்படாமல் தோல்வி கண்டிருக்கிறது. எனவே மீண்டும் ஒரு வாரியத்தை அமைத்து செயல்படுத்துவதைவிட, இன்றைக்கு இருக்கிற அறநிலையத் துறையையே செம்மையாகச் செயல்படுத்தினால் நிச்சயமாக இந்து அறநிலையக் கோவில்களைச் சிறப்பான முறையிலே பராமரிக்க முடியும் என்று கருதுகிறேன். அறநிலையத் துறையையும் அவர்கள் தலைமையிலே செயல்படுகிற இந்து அறநிலையங்களையும் சிறப்பாகச் செயல்படுத்துவதற்கு எவ்வளவோ நிதிகள் இருக்கின்றன. அந்த நிதிகளை எல்லாம் ஒழுங்குபடுத்தி அதை சேகரித்தோமானால் நிச்சயமாக அதிகமான வருவாயை எட்ட முடியும். எனக்கு முன்னாலே உரையாற்றிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். குத்தகை என்ற பெயராலே விவசாயி கையிலே குத்தகை நிலம் இருக்கிறது. உண்மை. ஆனால் அந்தக் குத்தகை நிலம் முழுமையும் தொடர்ந்து சாகுபடி செய்யும் குத்தகையாளர்கள் கடுமையாகப் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள் என்பது தொடர்ந்து இருந்து வந்திருக்கிற அரசுகளுக்குத் தெரியும். வெறும் குத்தகைதாரர்கள் மட்டுமல்ல. பொதுவாக விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிற, குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் ஈடுபட்டிருக்கிற அத்தனை நிலச் சொந்தக்காரர்களும் பாதிக்கப்பட்டு இருப்பதன் விளைவாகத்தான் தொடர்ந்து அரசு பரிசீலித்து, அவர்களுக்கு உரிய கடனை தொர்டந்து ஒத்தி

வைப்பதும், தள்ளுவதுமான நடைமுறையைக் கையாண்டு வருகிறது. அப்படி கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கிற குத்தகை விவசாயிகளுக்கு தொடர்ந்து குத்தகை பாக்கி இருந்தால், அந்த அரசு அவ்வப்போது ஆய்வுசெய்து பரிசீலித்து அவ்வப்போது தள்ளுபடி செய்கிறது. ஆனால் குத்தகை விவசாயிகள் குத்தகை பாக்கியைக் கொடுக்கக் கூடாது என்று தவறான கருத்தில் இருக்கிறார்கள் என்பதை விட, அவர்களுக்கு அதிலே ஏற்பட்டிருக்கிற சிரமங்கள், சங்கடங்களை அவ்வப்போது அரசு பரிசீலித்து, நிவாரணம் செய்து கொண்டிருக்கிறது என்பதுதான் உண்மை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் அதைவிட பெரிய வருமானம் வருகிற அளவில், நகரங்களில் நிலைமைகள் உள்ளன. நகரங்களில் ஒரு கிரவுண்ட் 12 லட்சம், 15 லட்சம் ரூபாய் என்று விலை போகின்றன. அப்படிப்பட்ட சூழ்நிலையில் கோயில்களுக்குச் சொந்தமான அடிமனைகள் 99 ஆண்டுகளுக்கு குத்தகை என்ற பெயரால் எழுதிக் கொடுத்துவிட்டு, அந்த மனைகள் மூலம் இன்றையதினம் பல லட்சங்கள் பெற்றிருக்கிறார்கள். அந்த மனைகள் பல கைகள் மாறிக் கொண்டிருக்கின்றன என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அரசு அவைகளை ஆய்வு செய்ய முன் வரவேண்டும். அப்படிப்பட்ட மனைகளையும் நிலங்களையும் அரசு கைப்பற்ற வேண்டும். உதாரணமாக ஒரு கிரவுண்ட் கோயில் நிலத்திற்கு 10 ரூபாய், 15 ரூபாய் என்று தீர்வை செலுத்துகிறார்கள். அப்படிப்பட்ட விலை மதிப்புள்ள நிலங்களில் உள்ள கட்டிடங்களுக்கு கோயிலுக்கு ரூ. 25 தான் வாடகை கிடைக்கிறது. அதற்கு மேல் இருக்காது. ஆனால் அதே இடத்தை 25 லட்சம், 30 லட்சம் ரூபாய்க்கு தொடர்ந்து விற்பதும், வாங்குவதுமான ஒரு நிலைமையை அவர்கள் கையாண்டு கொண்டிருக்கிறார்கள். இதுபோன்று பெரிய பெரிய நகரங்களை எடுத்துக் கொண்டால், அந்த நகரங்களில் இருக்கிற சரிபாதி மனைகள், சரிபாதி கட்டிடங்கள், சரிபாதி நிலங்கள் எல்லாம் அங்குள்ள கோயில்களுக்குச் சொந்தமானவையாகவே இருக்கின்றன. ஆனால் அந்த அளவுக்கு கோவிலுக்கு வருமானம் இல்லை. கோயில் இடங்களை அளவுக்கு மீறி வைத்துக் கொண்டிருப்பவர்கள், பினாமியாக வைத்துக் கொண்டிருப்பவர்கள், வேறு பெயர்களில் வைத்துக் கொண்டிருப்பவர்களிடமிருந்து அந்தக் குடிமனைகளைக் கைப்பற்றினால் பல கோடி ரூபாய் இந்த அறநிலையத் துறைக்கு மிச்சப்படும். அந்த அளவில் எதிர்காலத்தில் தமிழக அரசு நகரங்களில் இருக்கிற கோயில் மனைகளைக் கைப்பற்ற வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். ஏழைகளிடம் இருந்தால் பரிசீலித்து பட்டா போட்டுக் கொடுக்கலாம். ஆனால் அளவுக்கு மீறிய வகையில் ஏராளமான இடங்கள் பணக்காரர்கள் கையில், செல்வாக்கு உள்ளவர்கள் கைகளில் இருப்பதைக் கைப்பற்ற வேண்டும். அவைகளை வெளியில் மார்க்கெட் விலை என்னவோ, அந்த விலையில் விற்றால்கூட பல கோடி ரூபாய் அறநிலையத் துறைக்குக் கிடைக்கும். அந்த அளவுக்கு ஏற்பாடுகளை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தண்டாயுதபாணி.

திரு. வி. தண்டாயுதபாணி: பாயின்ட் ஆப் ஆர்டர். பேரவைத் தலைவர் அவர்களே, கோயில் சொத்துக்கள், அடிமனையாக இருந்தாலும், நிலமாக இருந்தாலும் சரி அதை யாருக்கும் விற்கக் கூடாது. அந்தக் கோயில்களைப் பராமரிப்பதற்காகத்தான் அந்த இடங்கள், நிலங்கள் கோயில்களுக்கு எழுதப்பட்டிருக்கின்றன. ஆகவே யாராவது விருப்பப்பட்டு எழுதிவைத்த சொத்துக்களை கோயில்கள் பராமரிப்பதற்காகத்தான் வைக்கவேண்டுமே தவிர, அவற்றை விற்றுவிட வேண்டும்மென்று சொல்வது சாலச் சிறந்ததாகாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லையே இந்த விதியின் கீழ் புறம்பாக இது இருக்கிறது என்று சொல்ல வேண்டும். உட்காருங்கள். திரு. தம்புசாமி அவர்கள் பேசலாம்.

திரு. வே. தம்புசாமி; அதைப் போல பெரிய பெரிய நகரங்களில் உள்ள கோயில் இடங்களை எதிர்காலத்தில் வசைப்படுத்த ஏற்பாடு செய்ய வேண்டும். அதன் மூலம் கிடைக்கும் பணத்தைக் கொண்டு கோயில்கள் சிறப்பான முறையில் பாரமரிக்கப்பட ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில், இந்த அறநிலையத்துறையின்கீழ் வரும் இந்துக் கோயில்களில் பணியாற்றக் கூடியவர்கள் ஏறத்தாழ 49,700 ஊழியர்கள் இருக்கிறார்கள் என்று இந்தக் கொள்கைக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது. அதிலே நேரடியாக அரசு சம்பளம் பெறக் கூடியவர்கள் 4,200 பேர்கள் தான். அவர்கள் போக மீதி 45,500 ஊழியர்கள் கோயிலிருந்து பணமாகவும், பொருட்களாகவும் ஊதியம் பெறுகிறார்கள் என்றும் இதிலே கூறப்பட்டுள்ளது, தஞ்சை மாவட்டத்தை எடுத்துக்கொண்டால், அங்குள்ள கோயில் ஊழியர்கள் 2 கலம் நெல், அதாவது 24 மரக்கால் நெல், அல்லது 3 கலம் (36 மரக்கால்) நெல், என்றுதான் பெறுகிறார்கள். அதிகபட்சமாகப் போனால் சில கோயில்களில் 5 கலம் நெல்லுக்கு மேல் கிடைக்காது. சிலர் அரிசியாக, சிலர் சாதமாகக் கூட ஊதியம் பெறுகிறார்கள். அப்படிப்பட்ட நிலையில் ஏறத்தாழ 45,500 ஊழியர்கள் இருக்கிறார்கள். அந்த நிலைமைகளைப் பரிசீலித்து, அரசாங்கம் அவர்களுக்கும் சம்பள விகிதம் என்ற அடிப்படையில் ஊதியம் வழங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 11.30

அவர்கள் இறக்கும் காலத்தில் பத்தாயிரம் ரூபாய் அளிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அதை அரசு பரிசீலித்து அரசு ஊழியர்களுக்கு வழங்கக் கூடிய அளவிற்கு இறப்புத் தொகையை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஓதுவார்களுக்கு, 60 வயதுக்கு மேல் போனால் ரூ. 250 ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. இன்றைய விலைவாசியேற்ற நிலையில் எந்தவிதமான வசதியும் அற்ற நிலையிலே அவர்கள் இருக்கிறார்கள். ஆகவே அந்த ஓய்வூதியத்தை அதிகப்படுத்திக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அறநிலையத் துறையைப் பொறுத்த வரையில் வேகமாக எவ்வளவு உத்தரவுகளைப் போட்டாலும் கூட அதைக் கீழே செயல் படுத்துவதில் கடுமையான தேக்க நிலை இருக்கிறது. உதாரணத்திற்கு கோவில் கட்டிடங்களையும், கும்பாபிசேக கட்டிடங்களையும், இதர கட்டிட வேலைகளையும் செய்ய வேண்டுமென்று சொன்னால் அதை உடனடியாக நிறைவேற்றுவதற்காக பொறியாளர்கள் கிடையாது. பொறியாளர்கள் இல்லாத காரணத்தால் இத்துறையில் கட்டடங்களைக் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப் பட்டாலும் காலம் கடந்து கொண்டிருக்கிறது. உதாரணத்திற்கு எட்டுக்குடி கோவிலை அபிவிருத்திச் செய்ய வேண்டும் என்பது நீண்ட காலமாக உள்ள கோரிக்கை; அதை முதல்வர் அவர்களிடத்திலே சொன்னேன். உடனே அவர்களும் ஆணையிட்டார்கள். ஆனால் அந்த ஆணை இது வரையில் செயல்படுத்தப்படவில்லை. என்ன காரணம் என்று கேட்டால், பொறியாளர்கள் கிடையாது என்று சொல்லுகிறார்கள். அங்கே ஒரே ஒரு பொறியாளர் தான் இருக்கிறார். ஒருவரே அவ்வளவு கோவில்களுக்கும் மதிப்பீடு செய்ய வேண்டும் என்று சொன்னால் அவரால் செய்ய முடியவில்லை. ஆகவே மதிப்பீடு தயாரிக்கப்பட்டாலும் அவற்றைச் செயல்படுத்துவதில் சிக்கல் இருக்கிறது என்று சொல்லக்கூடிய அளவிற்குச் சூழ்நிலை இருக்கிறது. எனவே எதிர்காலத்திலே யாவது பொறியாளர்களை அதிகமாக நியமித்து விரைவாக திட்டங்களை நிறைவேற்றுவதற்கான ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

கோவில்களில் பணியாற்றக்கூடியவர்களுக்கு ஒரு குறைந்த பட்ச ஊதியச் சட்டத்தை அரசு அறிவிக்க வேண்டும். (மணி அடிக்கப்பெற்றது). அவர்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் கிடையாது. அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கக் கூடிய வகையில் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதே மாதிரி கோவில்களில் பணியாற்றக் கூடியவர்களுக்கு. அரசு ஊழியர்களுக்கு அளிக்கக் கூடிய சலுகையில் பாதியையாவது அளிக்க வேண்டும். அவர்களுக்கு எந்தவிதமான சலுகைகளும் கிடையாது. தீபாவளி, பொங்கல் முன்பணம், திருமணக் கடன் போன்ற எந்தவிதமான வசதி வாய்ப்புமின்றி இருக்கிறார்கள், ஆகவே அவர்களுக்கு அரசு ஊழியர்களுக்கு வழங்கக்கூடிய சலுகையிலே, குறைந்தபட்ச சலுகையாவது வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



இன்றைய தினம் கோவில் வருமானத்தைப் பெருக்குவதற்கு திருமண மண்டபங்கள் கட்ட வேண்டும். சாதாரண கட்டிடங்களைக் கட்டுவதைவிட அதிகமான வாடகையைத் தரக்கூடிய கட்டிடங்கள் ஆகியவற்றைக் கட்ட வேண்டும். திருவாரூரில் ஆரூரான் திருமண மண்டபத்தில் இடம் போதவில்லை. இடம் போதாமல் வெளியே தனியாக பந்தல் போட்டு திருமணத்தை நடத்தக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஒரே நேரத்தில் இரண்டு, மூன்று திருமணங்களை நடத்துவதற்கான வாய்ப்பு, வசதிகள் இல்லை. ஆனால் இடம் அங்கே இருக்கிறது. ஆகவே மேலும் அங்கே கட்டிடங்களைக் கட்டினால் கோவிலுக்கு அதிகமான வருவாய் வரும் சூழ்நிலை உருவாகும். அந்த வகையிலே அந்த இடங்களைப் பயன்படுத்தி அபிவிருத்திச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைய தினம் இந்துக் கோவில்களைப் பராமரிக்க நிதி வசூலிக்கப்படுகிறது. அப்படி மனமுவந்து பக்தர்கள், கொடை வள்ளலாக இருப்பவர்கள் கொடுப்பதிலே எனக்கு கருத்து வேறுபாடு கிடையாது. சாதாரணமாக இருக்கக் கூடிய நகராட்சி, பேரூராட்சி, மாநகராட்சி ஆகியவற்றில் உள்ள ஊழியர்களிடம் அப்படி கட்டாயமாக பிடிக்கப்படுவதாக தகவல் கிடைக்கிறது. அந்த . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக ஏற்கனவே தெளிவாக பத்திரிகைகளில் அறிவிப்புக் கொடுத்திருக்கிறேன். முதலமைச்சரின் கோவில் பராமரிப்பு மற்றும் திருப்பணி நிதிக்கு யார் பணம் கொடுத்தாலும் அவர்களாகவே மனமுவந்துதான் கொடுக்க வேண்டும். எந்தத் துறையிலும் கட்டாய வசூல் கூடாது. அப்படிப் பட்ட ஆணைகள், உத்தரவுகள் யாருக்கும் பிறப்பிக்கப்படவில்லை என்பதை ஏற்கெனவே பத்திரிகை அறிக்கை வாயிலாக தெளிவு படுத்தி இருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் தம்புசாமி அவர்கள் இப்போது கூறியதுபோல் ஏதாவது ஒரு துறையில் இத்தகைய கட்டாய வசூல் நடைபெறுகிறது என்றால். அதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் உடனடியாக அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும், வசூல் செய்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11.35

திரு. வி. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கிடைத்த தகவலைச் சொன்னேன். எனவே அந்த வகையிலே எதிர்காலத்திலே செயலாற்ற வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொண்டு இந்த மானியத்தின் மீது ஒருசில கருத்துக்களைக் கூற அனுமதித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி அமைகிறேன், நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வே. கோபால கிருஷ்ணன்.

திரு. வீ. கோபாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசியல் வரலாற்றிலே நீண்ட பாரம்பரியமும் சிறப்பும் மிக்க இந்த மாமன்றத்தில், உலக ஜனநாயக வரலாற்றில் பெரும் சாதனை பதித்த புரட்சித் தலைவியார் அவர்களைத் தலைமையாகக் கொண்டு ஆளும் கட்சி உறுப்பினராகப் பணியாற்றுகின்ற வாய்ப்பினைப் பெற்றேன். இப் பெரும் வாய்ப்பினை தூங்காமை, கல்வி, துணிவுடைமை இவற்றை நீங்காமல் பெற்று அரசாளும் அன்னையே! தாங்களே எனக்கு உருவாக்கித் தந்து உள்ளீர்கள். உங்கள் புனித பாதங்களை நன்றியுடன் வணங்குகிறேன். புரட்சித் தலைவியாரின் அன்பு வேண்டுகோளை ஏற்று, சங்கரன்கோவில் சட்டமன்றத் தொகுதி வரலாற்றிலேயே அதிக வாக்குகள் வித்தியாசத்தில் என்னை வெற்றி பெறச் செய்த என் தொகுதி மக்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியை இந்த மாமன்றத்தின் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆரம்பத்தில் அறங்காவலராகப் பொறுப்பேற்று ஆலயப் பணியாற்றிய நான், நெல்லை கட்டபொம்மன் மாவட்டத்திலே மிகப் பெரும் ஆலயத்தைக் கொண்ட சங்கரன்கோவில் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் என்ற பெருமையுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பிலே உள்ள அறநிலையத் துறை மானியக் கோரிக்கையின் மீது இந்த மாமன்றத்திலே எனது முதல் உரையை நிகழ்த்துகின்ற நல் வாய்ப்பினைப் பெற்றுள்ளேன் என்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

'ஆலயம் தொழுவது சாலவும் நன்று', 'கோயில் இல்லாத ஊரிலே குடி இருக்க வேண்டாம்' என்பவை ஆன்றோரின் அமுத மொழிகள். இன்று நம்மை ஆண்டு கொண்டிருக்கின்ற புரட்சித் தலைவியார் அவர்கள் தமிழகத்திலுள்ள ஆலயங்கள் அனைத்தையும் திருப்பணி செய்ய ''திருக்கோயில் திருப்பணி மற்றும் பராமரிப்புக்கு நிதி'' வழங்க வேண்டியுள்ளார்கள், இறை தொண்டை நிறைவேற்ற எண்ணற்ற இதயங்கள் பேராதரவு தெரிவித்துள்ளன. இந்த மகத்தான மறுமலர்ச்சிக்கு வித்திட்ட இந்த மகிழ்சியான தருணத்தில் இந்த மாமன்றத்தில் பேசுவதிலே மீண்டும் மகிழ்ச்சி அடைகிறேன்.

எனது தொகுதி ''அரனும் அரியும் ஒன்றே'' என்ற தத்துவத்தை உணர்த்தவும், சைவ வைணவ மக்களிடையே ஒற்றுமையை நிலை நாட்டவும் ஏற்பட்ட திருத்தலம்தான் சங்கரநயினார்கோயில். அருள்மிகு சங்கரநாராயணசாமி கோயிலில் எழுந்தருளியுள்ள அன்னை கோமதி அருந்தவம் இயற்றி, இறைவனை சங்கரனாகவும் நாராயணனாகவும் உலகிற்கு உணர்த்திய பெருமை இந்த ஊருக்கே சாரும். இந்தத் திருமண்ணில் ஆண்டுதோறும் ஆடி தவசு நடை பெறுவது கண்கொள்ளாக் காட்சியாகும். பல்லாயிரக் கணக்கில்



ஆடித் தவசு காட்சியைக் காணவரும் பக்தர்கள் கூடும் சங்கரன் கோவில் அரிய சிற்பங்களைக் கொண்ட தொன்மையான திருத்தலம். இதனை சுற்றுலா மையமாக அறிவிக்க ஆவன செய்யுமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

எனது தொகுதி மக்களின் நீண்ட கோரிக்கை ஒன்றையும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். பெரும் ஆலயத்தைப் பெற்றுள்ள இந்த நகரில் பெண்கள் உயர் கல்வி பெற மகளிர் கல்லூரி ஒன்றை மக்கள் வேண்டுகின்றனர். அரசின் நிதிநிலை நெருக்கடி காரணமாக, அரசின் சார்பாக மகளிர் கல்லூரி தொடங்குவது என்பது இயலாத நிலையாக உள்ளது. இந்தக் கல்லூரி அமைப்பதற்காக திருவாடுதுறை ஆதினத்துக்குச் சொந்தமான 58 ஏக்கர் புஞ்சை நிலத்தைப் பெறுவதற்கான பூர்வாங்க வேலைகள் தொடங்கப்பட்டு, பின்பு கிடப்பில் போடப்பட்டுள்ளது. இந்தச் சூழ்நிலையில் மகளிர் கல்லூரி அமைத்து மக்களின் கோரிக்கையை நிறைவேற்ற திருக்கோயில் முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். உதவி ஆணையர் பொறுப்பிலுள்ள இத்திருக் கோயிலின் ஆண்டு வருமானம் 1400 ஆம் பசலிக்கு ரூ. 29,65,679 ஆகும். மேலும், இத்திருக்கோயிலில் வைப்பு நிதியாக ரூ. 70 இலட்சம் வங்கியிலே உள்ளது. இந்த வைப்பு நிதியை ஆதாரமாகக் கொண்டு சங்கரன்கோயிலில் மகளிர் கல்லூரி ஒன்றைத் தொடங்க வேண்டும். மேலும், இத்திருக்கோயிலில் குடி கொண்டிருக்கின்ற அன்னை கோமதி அம்மனே, கல்லூரி தொடங்க நிதி தருவதாக அருள்வாக்கு தந்துள்ளார்கள். 6 கோடி தமிழ் மக்களின் நெஞ்சங் களில் நீங்காத இடத்தைப் பெற்று இம்மாமன்றத்தில் கொலு வீற்றிருக்கின்ற கோமதி அம்மனின் அவதாரமாகிய அன்னை லலிதாம்பிகையாம் தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவியார் அவர்களே, தாங்களும் இதற்கு அனுமதி அளித்து ஆசி வழங்க வேண்டும் என்று யாசிக்கின்றேன்.

அடுத்து, தமிழகத்தின் முந்தைய ஆட்சியிலே அமைக்கப்பெற்ற அறங்காவலர் குழுக்களைக் கலைத்துவிட்டு ஆன்மீகத்திலே உண்மையான ஆர்வம் கொண்டு பொதுப்பணி ஆற்றுகின்றவர்களைக் கொண்ட புதிய அறங்காவலர் குழுவை நியமிக்க வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் தமிழகத்திலே உள்ள மிகப் பெரிய ஆலயங்கள் 21-ல் ஏதேனும் ஒன்றுக்கு தகுதி வாய்ந்த தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஒருவரை அறங்காவலர் குழுத் தலைவராகவோ அல்லது தக்காராகவோ நியமனம் செய்து தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சமூக அந்தஸ்தை ஏற்படுத்த கருணை உள்ளம் கொண்ட தாழ்த்தப்பட்ட மக்களின் கலங்கரை விளக்காகிய தமிழக முதல்வர் அவர்கள் ஆவன செய்ய வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்திலுள்ள மிகப் பெரிய ஆலயங்களில், ஆலய நிர்வாகத்தால் நியமிக்கப்படுகின்ற எழுத்தர் பணிக்கு மேலுள்ள அலுவலக ஊழியர்கள் அரசு சம்பள விகிதத்துக்கு நிகராக ஊதியம் பெறுகின்ற நிலை உள்ளது. இந்தப் பணி நியமனங்களில் இட ஒதுக்கீடு முறையைக் கொண்டுவந்து தாழ்த்தப்பட்ட சமூகத்தினர் பணியாற்றுகின்ற நல்லதொரு வாய்ப்பினை நல்ல தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு புரட்சித் தலைவியார் அவர்கள் உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு வேண்டிக் கொள்ளும்போது எனது கருத்து ஒன்றையும் தெரிவிக்க விரும்புகிறேன். ஆதிதிராவிடர்கள் ஆலயங்களில் அர்ச்சகர்களாக நியமனம் செய்யப்பட வேண்டும் என்று நடைமுறைக்கு ஒத்து வராத தேவையற்ற கோரிக்கையை எண்ணிப் பார்க்கிறேன். அறங்காவலர் குழுத் தலைவர் பொறுப்பிலும், ஆலய அலுவலக பணியிலும் அரிசனங்கள் நியமனம் செய்யப்படுவதே உண்மையான சமூக அந்தஸ்தையும் மேன்மையையும் அவர்களுக்குத் தரும் என்பதே என்னுடைய கருத்து ஆகும். எல்லா உயிருக்கும் படி அளக்கும் ஈசனே சில கோவில்களில் பசியால் வாடுகிறான். தேரோடும் வீதிகளில் இறைவனின் திருவிழாக்கள் இல்லை. நித்திய பூஜைகள் இல்லை. எல்லாம் வல்ல ஈசனுக்கு ஏன் வந்தது இந்த நிலை? முடிமன்னர்களும் வள்ளல்களும் திருக்கோவில்களுக்கு எழுதி வைத்த வளமான வயல்களின் வருமானம் எங்கே போய் மறைந்தது? கோவில் நிலங்களை குத்தகைக்கு எடுத்தவர்கள் குத்தகையை பல ஆண்டுகளாக செலுத்தவில்லை. குத்தகைதாரர்கள் சிலர் பினாமி பெயரில் குத்தகை மாற்றம் செய்து தாங்கள் பெற்று வருகிறார்கள். வேறு சிலர் குடிவார உரிமையைப் பெற்று பின் நிலத்தை தரிசாகவே போட்டுள்ளார்கள். விளைச்சல் இல்லை என்பதால் குத்தகை இல்லையென்று கூறிவிடுகிறார்கள். கோவில் நிர்வாகமே அதற்கான கிஸ்தியை கட்டி வருகிறது. வர வேண்டிய வருமானத்தை முறையாக, தவறாமல் பெறுவதற்கு சட்டம் இயற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 11.40

இதைவிட கொடுமை இன்னொன்று உண்டு. சில ஆலயங்களில் நிர்வாகமே கோவில்களுக்குச் சொந்தமான விவசாய நிலங்களை பயிரேதும் செய்யாமல் தரிசாகப் போட்டுள்ளது. உதாரணமாக ஒன்றைச் சொல்கிறேன். திருநெல்வேலி நெல்லையப்பர் கோவிலுக்கு பாத்தியப்பட்ட நாங்குநேரி–திருமலாபுரம் பகுதியிலும், பள்ளிமடை, தென்கலம், பல்லிக்கோட்டை ஆகிய பகுதிகளில் சுமார் ஆயிரம் ஏக்கர் நிலங்கள் ஏர் முனையை பல ஆண்டுகளாகக் கண்டதில்லை, சிதம்பரனார் மாவட்டத்தில் ஆழ்வார் திருநகரியில் ஆதிநாத ஆழ்வார்கோவில், எம்பெருமானார் கோவில், ஏகாந்தலிங்க சுவாமி கோவில் ஆகிய கோவில்களுக்கு பாத்தியப்பட்ட சுமார் 500 ஏக்கர் நன்செய் நிலங்கள் பாழாகவே கிடக்கின்றன. இன்னும் இதுபோன்று தமிழகத்தில் எத்தனையோ ஏக்கர் நிலம் தரிசாகவே கிடக்கிறது. இவ்வாறு குத்தகை



முறையாக அளிக்கப்படாத நிலங்களையும், விவசாயம் இல்லாமல் தரிசாகக் கிடக்கும் நிலங்களையும் ஆலயம் கையகப்படுத்த வேண்டும். இந்த நிலங்களை குறிப்பிட்ட ஆலயத்தை சுற்றியுள்ள தாழ்த்தப்பட்ட ஆதிதிராவிட விவசாயிகளுக்கு பிரித்துக் கொடுக்க வேண்டும்.

அதோடு ஆதிதிராவிடர் நலத் துறையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ள 10 அம்ச திட்டத்தில் குறிப்பிட்டுள்ள 10 ஆயிரம் கிணறுகள் இலவசமாக வெட்டித்தரும் திட்டத்தை இணைத்து ஒருங்கிணைப்பு திட்டத்தின் மூலமாக விவசாய உற்பத்தியைப் பெருக்கவும், கோவில் வருமானத்தை அதிகரிக்கவும் நிலமற்ற ஆதிதிராவிடமக்களுக்கு விவசாயநிலங்களை அளிப்பதன் மூலம் அவர்களுக்கு வேலை வாய்ப்பை அளிக்கவும் சாத்தியமாகும். இந்த சீரிய திட்டத்தின் மூலமாக அண்ணல் காந்தியடிகள் அவர்களால் ஆண்டவனின் பிள்ளைகள் என்று அன்போடு அழைக்கப்பட்ட அரிசன மக்கள் ஏற்றம் பெறுவார்கள். எனவே, மாண்புமிகு முதலமைச்சர் கருணையே வடிவான புரட்சித் தலைவி அவர்கள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆவன செய்ய வேண்டுகிறேன். (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் கருத்துக்களை சொல்லிவிட்டீர்கள். முடித்து விடுங்கள். ஐந்து நிமிடங்கள்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

திரு. வே. கோபாலகிருஷ்ணன்: தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை எட்டு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு மண்டலத்தின் நிர்வாகமும் துணை ஆணையர் பொறுப்பில் செயல்பட்டு வருகிறது. சில ஆலயங்கள் நிர்வாக அதிகாரியை இணை ஆணையர் அந்தஸ்தில் பெற்று இருக்கின்றன. அத்தகைய இணை ஆணையர் பொறுப்பில் உள்ள ஆலயங்களில் துணை ஆணையர் அதிகார வரம்பு செயலற்று விடுகிறது. ஆகவே மண்டலந்தோறும் அறநிலைய துணை ஆணையர் அலுவலகங்களை இணை ஆணையர் அலுவலகங்களாக உயர்த்த வேண்டுமென்று பேரவைத் தலைவர் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன். மேலும் தமிழ்நாட்டில் இணை ஆணையர் பொறுப்பில் 5 கோவில்கள் இருக்கின்றன. இவற்றில் நான்கு கோவில்களின் ஆண்டு வருமானம் தலா 2 கோடி ரூபாய் வரை உள்ளது. அதே சமயம் ஆண்டு ஒன்றுக்கு 10 கோடியே 65 லட்சம் ரூபாய் வருமானம் உள்ள பழனி திருக்கோவில் இணை ஆணையர் பொறுப்பில் உள்ளது. இந்த நிலையை மாற்றி ஐ. ஏ. எஸ். அதிகாரி ஒருவரை நிர்வாக அதிகாரியாக நியமித்து கோவில் நிர்வாகத்தை அரசின் நேரடிப் பொறுப்பில் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதன் மூலம் திருக்கோவில் நிர்வாகம் மேலும் சிறப்படையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முடித்து விடுங்கள். கடைசி பகுதிக்கு போகவேண்டும்.

திரு. வே. கோபாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவனே தாய், தாயே இறைவன் என்ற அடிப்படையில் என்உயிரினும் மேலான தாயாம் புரட்சித் தலைவி அவர்களின் புனித பாதங்களை மீண்டும் வணங்குகிறேன்.

''இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்''

என்றார் வள்ளுவர். தமிழகத்தின் வீடுகளில் புதிய நம்பிக்கை தீபங்களை ஏற்றி வைக்கும் பொறுப்பை தமிழக மக்கள் உங்கள் கரங்களில் அளித்து உள்ளார்கள். நிம்மதியாக இருக்கிறார்கள். தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் ஆகியோரின் பொற்கால கனவுகள் நிறைவேறும் காலம் வந்துவிட்டது. உங்கள் ஆணைக்கு கட்டுப்படும் விஸ்வாசமுள்ள தொண்டன் என்று கூறி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இரா. நடேசன்,

*திரு. இரா. நடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறநிலையத் துறை மானியக் கோரிககையில் பேசுவதற்கு வாய்ப்பளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நமது தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுக்கும், எங்கள் காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்களுக்கும் முதற்கண் என் நன்றியைத் தெரிவித்து, ஒரு சில கருத்துக்களைச் சொல்ல முன் வருகிறேன்.

முற்பகல் 11.45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. நடேசன் அவர்கள் சரியாக 11.50 மணிக்கு முடித்துக் கொள்ள வேண்டும்.

திரு. இரா. நடேசன்: பேரவைத் தலைவர் அவர்களே, நமது தமிழகத்திலே 35 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கோவில்கள் இருப்பதாகவும், சுமார் 13 கோடிக்கு மேல் வருமானம் வருவதாகவும் இங்கே குறிப்பிட்டுள்ளார்கள். உண்மையிலேயே நமது கோவில்களுக்குச் சொந்தமான சொத்துக்கள் எல்லாம் பல ஆட்கள் கையிலே, பல நூற்றுக்கணக்கான வருடங்களாக முன்னாலே எந்த நிலையிலே அவர்களுக்குக் கொடுக்கப்பட்டதோ அந்த நிலையில் அவர்கள் வைத்துக் கொண்டு, அன்று கொடுக்கப்பட்ட அந்தத் தீர்வையைக் கூட இன்றும் கொடுக்காமல் இருக்கிறார்கள். இன்று வசூலிக்கவேண்டிய தொகை சுமார் 70 கோடி ரூபாய் வரை பாக்கியிருப்பதாகக் கூறப்பட்டுள்ளது.



இன்று நமது தமிழகத்திலே உள்ள கோவில்களை எல்லாம் பார்க்கும்போது—கன்னியாகுமரி மாவட்டத்தைத் தவிர, ஏனோ அதைச் சேர்க்கவில்லை. இந்தப் பக்கம் வரும்போது பார்த்தால் தெரியும்—ஒவ்வொரு திருக்கோவில் மண்டபங்களும் இடிந்து விழுகின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. இவைகளை எல்லாம் நன்றாகச் சீரமைப்புச் செய்ய வேண்டும் என்றால், ஏராளமான பணம் வேண்டும். மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதற்கு நிதி திரட்டினாலும் கூட, அங்குள்ள வருமானத்தை ஒழுங்காக எடுத்துக்கொள்வதற்கு-புதிய திட்டங்களை உருவாக்க வேண்டும். அன்னியர்கையிலேஇருக்கக்கூடியகோவில்சொத்துக்களை எல்லாம் உடனடியாக எடுப்பதற்கு ஒரு புதுச் சட்டத்தைக் கொண்டு வந்தாவது கைப்பற்றி, அதை மீண்டும் கோவில் நிர்வாகிகள் கையிலே கொடுத்து, நாம் ஒவ்வொரு வருடமும் தனித்தனியாக ஏலம் போட்டுக் கொடுக்க வேண்டும். அன்று 50 ரூபாய் அளவிலே வாடகைக்கு கொடுத்திருக்கிற ஒரு கட்டிடம், உண்மையிலே சொன்னால், இன்றைக்கு 2,000 ரூபாய் அளவிற்கு வாடகை வருகின்ற கட்டிடங்கள்கூட ஏராளமாக இருக்கின்றன. இப்படிப்பட்ட அளவிலே வருமானங்கள் வர வேண்டுமென்றால், நம்மால் வருடாவருடம் புதுப்புது ஏலங்கள் போட்டு கொடுப்பதாக இருந்தால், இன்று இந்த 13 கோடி ரூபாய் என்கிற வருமானம் 200, 300 கோடி ரூபாய் அளவிலே வரும் என்று நினைக்கிறேன். எங்களது கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையிலும், அங்குள்ள கோவில்கள் எல்லாம், தமிழகத்தில் உள்ள கோவில்களின் நிர்வாகத்தில் கூட வரவில்லை. ஏன் என்றால், முன்பு அது கேரளா மாநிலத்திலே சேர்ந்திருந்தது. 1956 ஆம் ஆண்டில்தான் நம்முடைய தமிழகத்திலே சேர்ந்தது. அங்கு 490 கோவில்கள் இருக்கின்றன. அந்தக் கோவில்களுக்கு 13 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய்தான் அரசு மானியமாக வழங்கப்படுகிறது. அங்கு தொள்ளாயிரத்திற்கும் மேற்பட்ட ஊழியர்கள் வேலை பார்த்து வருகிறார்கள். அவர்களுக்கு எல்லாம் 120 ரூபாயிலிருந்து 240 ரூபாய் வரையில்தான் சம்பளம் கொடுத்து வருகிறார்கள். உண்மையிலே இதை நினைக்கும்போது மிகவும் வருத்தமாக இருக்கிறது. அந்த ஊழியர்கள் எல்லாம் வீட்டிலே பட்டினியாகத்தான் இருக்கிறார்கள். இங்கே வேலை பார்க்கின்ற ஊழியர்களுக்கு எல்லாம் பென்சன் கொடுப்பதாகக் கூறப்பட்டு இருக்கிறது. ஆனால் கன்னியாகுமரி மாவட்டத்தைப் புறக்கணிக்கின்ற அளவிலே இது இருக்கிறது என்று நான் சொல்லவில்லை. கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள ஆலயங்களிலே வேலை பார்க்கின்றவர்களுக்கு 120 ரூபாய் முதல் 240 ரூபாய் வரைதான் சம்பளம் இருக்கிறது. எனவே அவர்களுக்கு எல்லாம், குறைந்தபட்சம் தமிழகத்தில் உள்ள மற்ற கோவில்களிலே வேலை பார்க்கின்றவர்களுக்குக் கொடுப்பது போலாவது சம்பளத்தைக் கூட்டிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 11.50

எனது திருவட்டாறு தொகுதியிலே ஆதிகேசவபெருமாள் கோயில் ஒன்று இருக்கிறது. அந்தக் கோவிலுக்குச் சொந்தமாக 100 ஏக்கர் நிலம் இருக்கின்றது. அந்த 100 ஏக்கரிலே 75 ஏக்கரை தனியார் ஒருவர் 6,000 ரூபாய்க்கு 20 வருடங்களுக்கு முன்னால் பாட்டத்திற்கு எடுத்தார். இன்று அந்த பாட்டத்தை ஒழிப்பதற்கு கோர்ட்டிற்குச் சென்றபோதுகூட எந்தவிதமான வழியும் முடியவில்லை. இந்த 6 ஆயிரம் ரூபாய் கூட இந்நாள் வரையிலும் கொடுக்கப்படவில்லை. அந்த 75 ஏக்கர் நிலத்தை இன்று பகிங்கரமாக ஏலம் விடுவதாக இருந்தால், 2 லட்சம் ரூபாய்க்குமேல் வருமானம் கிடைக்கும். கன்னியாகுமரி மாவட்டத்திலே இப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது. இதேபோல்தான் எல்லா இடத்திலும். கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள 490 கோயில்கள். சுமார் 180 வருடங்களுக்கு முன்னால், 1811 ஆம் ஆண்டு வரை அவைகள் தனியார் நிர்வாகத்தில் இருந்த கோயில்கள் ஆகும். அந்தக் கோவில்களை எல்லாம், இரவோடு இரவாக—கர்னல்மென்றோ என்பவர் கேரளாவிலே (திருவாங்கூர) வந்தபோது அங்கு ஒரு அம்மையார் ஆண்டு கொண்டிருந்தார்கள். அவர்கள் ஆட்சி காலத்திலே இரவோடு இரவாக கோவில்கள்—அனைத்தும் ஒரே நாளில் அரசாங்கத்திற்கு எடுத்துக் கொண்டார்கள். எடுத்துக் கொண்டதும் நல்லதுதான். நல்ல முறையில்தான் நடத்தி வந்தார்கள் 1922 ஆம் ஆண்டு வரை. 1922 ஆம் ஆண்டிலே கோவில்கள் ரெவின்யு டிபார்ட்மெண்டிலே இருந்ததால், ரெவின்யு டிபார்ட்மெண்டிலே கிருத்துவ நண்பர்களுக்கு வேலை கொடுக்க முடியாத அளவிற்கு இருந்தது. அதைப் பார்த்துக் கொண்டிருந்த கிருஸ்துவ நண்பர்கள் எல்லாம் தனியாக கோவில்களுக்கு ஒரு வாரியம் அமைக்க வேண்டும், அல்லது தேவஸ்வம் போர்டு வைக்க வேண்டும் என்று போராட்டம் நடத்தினார்கள். அப்படி நடத்தியதன் காரணமாக 1922 ஆம் ஆண்டிலே தனியாக தேவசம் போர்டு உண்டு பண்ணினார்கள். அன்று முதல் ஒவ்வொரு கோவிலையும், அந்த தேவஸ்தானம் நல்ல முறையிலே பராமரித்து வந்தது. 1956 ஆம் ஆண்டிலே தமிழகத்தோடு சேர்ந்தவுடனே, 13 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய்தான் மானியமாக அரசு குமரி மாவட்டக் கோவில்களுக்கு கொடுத்து வந்தார்கள். அந்த ரூபாய்தான் இன்றும் கொடுக்கிறார்கள். அதனால்தான் அங்கே இருக்கின்ற ஏழை எளிய தொழிலாளர்களுக்கு ரூ. 120-லிருந்து ரூ 240 வரை சம்பளம். ஆகவே கருணைகூர்ந்து கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அந்தக் கோயில்களையும். தமிழகத்துக் கோயில்களோடு இணைத்து, இங்கேயுள்ள தொழிலாளர்களுக்குக் கொடுக்கின்ற சம்பளத்தைப் போல் கொடுத்து, அந்தக் கோயில்களிலே தீபாராதனை, பூஜை போன்றவை ஒழுங்காக நடக்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக்கொள்வதோடு



எப்படியும் அந்தத் தனியார் கையில் சிக்கியிருக்கின்ற சொத்துக்களை எல்லாம் மீட்டு, அந்தக் கோயில் நிர்வாகிகளுக்கு எப்போது தேவைப்பட்டாலும் அவர்களே எடுத்து அந்தக் கோயில்களில் நல்ல காரியங்கள் செய்வதற்காக, திருப்பணிகள் செய்வதற்காக உபயோகப்படுத்துகின்ற அளவிலே இந்த அரசு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் செய்யுமாறு வேண்டுகின்றேன். அவர்களால்தான் அதைச் செய்ய முடியும். ஏனென்றால் வேறு எந்த ஆட்சிக் காலத்திலும்கூட இந்தத் துறையை முதல்வர் அவர்கள் கையில் வைத்தது இல்லை.

ஆண்டவன் நமக்கு உதவினால்தான் நாட்டிலே நல்ல மழை பொழியும். நாம் ஆண்டவனுக்காக நல்ல பணிகளைச் செய்ய வேண்டும். அதற்காக இந்த ஆட்சியில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் எப்படியும் அந்தக் கோயில்களுக்கு ஒரு நல்ல வாய்ப்பினைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள ஆலய ஊழியர்களுக்கு இங்கே கொடுப்பதுபோல் பென்ஷன், குறைந்த அளவு பென்ஷனாவது கொடுத்து அவர்களுக்கு உதவ வேண்டும். காரணம், அங்கே கஷ்டம். உண்மையிலே இப்போதுகூட போராட்டங்கள் நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லி, எப்படியும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த ஆலய ஊழியர்களுக்கு எல்லாம் சம்பள உயர்வு கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ளவர்களுக்கும் கொடுக்க வேண்டும், கோயில்களுக்கு எல்லாம் பூஜைகளை நடத்த வேண்டும். தமிழகத்து மற்ற கோயில்களோடு அந்தக் கோயில்களையும் ஒன்று சேர்த்து, ஒன்றுபோல் பாகுபாடு இல்லாமல் செய்வீர்கள் என்ற நம்பிக்கையோடு மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றி சொல்லி, இங்கே பேச வாய்ப்பளித்த பேரவைத் தலைவருக்கும் நன்றி சொல்லி, விடைபெறுகிறேன், நன்றி. வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இராம. இராமநாதன்.

திரு. இராம. இராமநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''நல்லோர்களைக் காப்பதற்காகவும், தீயோர்களை ஒடுக்கி தர்மத்தை நிலைநாட்டவும் அவ்வப்போது நான் தோன்றுவேன்''. ''பரித்ராணாய ஸாதூனாம் விநாசாய துஷ்க்ருதாம் தர்ம ஸம்ஸ்தாபநார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே'' என கண்ணன் சொன்னதுபோல இன்றைய தினம் தமிழகத்தின் அவதார உருவமாக வந்து அவதரித்து தி.மு.க. என்னும் அரக்க ஆட்சியை தமிழகத்திலிருந்தும் தமிழக மக்களிடமிருந்தும் அகற்றி தமிழகத்தில் தர்மத்தை நிலைநாட்டிய தலைவி, என் தலைவி மக்கள் தலைவி, புரட்சித் தலைவி அவர்கள். ''அறம் செய விரும்பு'', ''ஆலயம் தொழுவது சாலவும் நன்று''. ''கோயில் இல்லா ஊர்தனிலே குடியிருக்க வேண்டாம்''

என்பவை எல்லாம் நம் சங்கத் தமிழ் முதுமொழிகள். இதையே வேதங்களில், ''ஏஷவை விபூர் நாம யஞ'' என்று ஆரம்பித்து, ''ஏஷவை கீலூப்தோ நாம யஞ'' என்று சொல்லி, ''கல்பதே ஹுவை தத்ர ப்ராஜாப்யோ யோக க்ஷேம'' என்று சொல்லியிருக்கிறார்கள். அதன்படி ''அறச் செயல்கள் செவ்வனே செய்யப்படின், நாட்டின்–நாட்டு மக்களின் நலன்கள் நன்முறையில் அமையும்'' என்பதே இந்த வேத வாக்கின் பொருள். 'நாடென்ப–நாடா வளந்தருவது' என்பார்கள். அதன்படியே அறச்செயல்களை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தையும் வைத்து கடவுள் பெயரால் உறுதிமொழியும் எடுத்துக் கொண்டு ஆட்சிபீடத்தில் அமர்ந்திருக்கின்ற நம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவியின் மனம்போல— எண்ணம் போல இந்தத் தமிழ் திருநாடும் மக்களும் செழிப்படைந்து வருவதோடு மாறி–மாறி மாரி பொழிகின்றது. காவிரித் தாய் புனலாக பொங்கி எழுந்து வாழ்த்துகின்றாள்.

''அற நிலையம்'' என்று சொல்லும்போதே உலகைக் காக்கின்ற பரம்பொருளாம் இறைவனின் சிந்தனை மாந்தர்க்கு வந்தாலும், திருக்கோயில்களிலே பக்தியோடு இறைவனை அனைவரும் வணங்கினாலும், எங்களைக் காக்கின்ற தாயுள்ளம் கொண்ட, மக்களின் இதயமெனும் கோயிலிலே குடிகொண்டிருக்கின்ற எங்கள் தங்கத் தலைவி, தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களை நான் முதலில் வணங்கி நமஸ்கரித்து இயற்கையும், தெய்வமும் என் தலைவி நீடுழி வாழ்ந்து நல்லாட்சி நடத்த அருள்புரிய வேண்டும் என்றும் வேண்டுகின்றேன்.

தொன்மையான சிதிலமடைந்த திருக்கோயில்களை சீர்செய்வதற்கு ''திருக்கோயில் பராமரிப்பு நிதி'' தொடங்கிய புரட்சித் தலைவி அவர்களை வணங்குவதோடு, அறநிலையத் துறைக்கு தனி வாரியம் அமைப்பதற்கு உளமாற நன்றியறிதலையும், பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11.55

திருக்கோயில்களின் புனிதத் தன்மை காக்கப்படவேண்டியது அரசின் தலையாய கடமை. நமது இந்தியத் திருநாடு குறிப்பாக தமிழகம் தெய்வ நம்பிக்கையும், தெய்வத் திருத்தலங்களையும் நிரம்பப் பெற்றுள்ள நாடு. அந்தக் கோயில்களின் புனிதத் தன்மை காக்கப்பட வேண்டுமேயானால், தமிழகத்தில் இருக்கும் அத்துணை ஆலயங்களிலும் விளக்கெரிந்தே ஆக வேண்டும். இன்று தமிழக மக்களின் இல்லங்களில் எல்லாம் விளக்கேற்றி இருக்கிற நம்முடைய புரட்சித் தலைவி அவர்களின் இந்த அரசு திருக்கோயில்கள்



அத்துணையிலும் விளக்கெரிய வேண்டும் என்றும் அதற்கு நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் தேவையான எற்பாடுகளைச் செய்து விளக்கேற்றி வைக்க வேண்டும் என்றும் நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

வேதங்கள், சாஸ்திரங்கள், புராணங்கள், தேவாரங்கள், திருவாசகங்கள் போன்ற நமது இலக்கிய பக்திச் செல்வங்களை அரசு பேணி காக்க வேண்டும். கோவில்களிலே பணிபுரிந்து வருகின்ற அர்ச்சகர்களுக்கும் ஓதுவார்களுக்கும் அதிக ஊதியம் வழங்க வேண்டும் என்பதோடு 20 ஆண்டுகள் பணிபுரிந்து ஓய்வு பெற்ற ஓதுவார்களுக்கு வழங்கப்படுகிற அர்ச்சகர்கள் அனைவருக்கும் வழங்க ரூ. 250 ஓய்வூதியத்தை இந்த நேரத்திலே தமிழக முதல்வர் வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பணியிலிருக்கும்போது அவர்களைக் பணியாளர்களுக்கு வழங்கப்படுகிற குடும்ப இறக்கும் ஆலய ஊழியர்களுக்கு பாதுகாப்பு நிதி ரூ. 10 ஆயிரத்தை அரசு வழங்குவதோடு இணையாக அதிகப்படுத்தி அவர்களுக்கும் ஆக பொங்கல் பரிசுத் தொகையான ரூ. 300–ஐ ரூ. 400 இந்த அரசு முதல்வர் அவர்கள் உயர்த்தி அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அறநிலையத் துறையில் முந்தைய ஆட்சியிலரால் நியமிக்கப் பட்டவர்கள் ஆலயம் தவறானது என்று சொல்லும் தெய்வ நம்பிக்கையற்றவர்களாக இருப்பதோடு, இன்றைய தினம் தமிழக மக்களின் நம்பிக்கையையும் ஆதரவையும் இழந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அறங்காவலர்களை, அறங்காவலர் குழுக்களை நம்முடைய ஒப்பற்ற தலைவி அவர்கள் உடனடியாக ரத்து செய்து ஆணைகள் பிறப்பிக்க வேண்டும் என்று நான் இந்த மன்றத்தின் வாயிலாகக் கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திருக்கோயில்களில் நிலங்கள் சொத்துக்கள் அதிகமாக இருந்தபோதிலும், அதன் மேல் வரவேண்டிய வருமானங்கள் கோவிலுக்கு வந்து சேர்வதில்லை. கோவில் நிலங்களின் குத்தகைதாரர்களிடமிருந்து குத்தகை சரியாக வசூலிக்கப்படவில்லை. கோவில் நிலங்களில் முந்தைய ஆட்சிக்காரர்களின் ஆக்கிரமிப்பு அதிகமாக உள்ளது. இந்த நிலங்களை அரசு மீட்டு நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு குத்தகைக்கு அளிக்க வேண்டும். மேலும் அதன் மூலம் வருகிற வருவாயை ஆலய மேம்பாட்டிற்கும் பராமரிப்பிற்கும் அரசு பயன்படுத்த வேண்டும். அதோடு சில நிலங்களை ஆதி திராவிட மக்களுக்கு பட்டா போட்டுக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதையும் இந்த அரசு கருணை உள்ளத்தோடு

பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மற்றும் சில நிலங்களையெல்லாம் கல்லூரிகள், பள்ளிகள், வாசக சாலைகள் போன்றவைகளை அமைக்கவும் பயன்படுத்த வேண்டும். இதைக் கட்சி பாகுபாடின்றி உடனடியாக நமது புரட்சித் தலைவி அரசு செய்வதற்கு முன் வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் பின்னத்தூர் பகுதியிலே இருக்கிற மாசிமக கட்டண கோயிலிலே நிலங்களை தகாத முறையில் பயன்படுத்தி வருகிற சிதம்பரம் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரின் மீது நமது அரசு அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே தாழ்மையோடு கேட்டுக் கொள் கிறேன். அதிக வருமானம் வருகின்ற கோயில்களின் வருமானத்தை பள்ளி, கல்லூரி போன்ற பல திட்டங்களுக்கு பயன்படுத்த வேண்டும். நாம் வணங்குகிற தெய்வங்களுக்கு அபிஷேகம் செய்யப்படுகின்ற பால் தரமானதாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நில உச்சவரம்பு சட்டத்தின்படி அதிகமான நிலங்களை வைத்திருக்கும் பினாமி நிலங்களை பிடுங்கி நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தேரோடும் வீதியிலே ஆக்கிரமிப்பு அதிகமாக இருக்கிறது. தேரோடும் வீதியிலே குடியிருப்பீர் என்ற பாடல்தான் இருக்கிறது. அந்த ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

'கோபுர தரிசனம், கோடி பாப விமோசனம்' என்று சொல்லுவார்கள். அப்படி பல்வேறு இடங்களில் கோவில்கள் கோபுரம் இல்லாமல் இருக்கின்றன. அந்தக் கோவில்களுக் கெல்லாம் கோபுரம் கட்டி நம்முடையபுரட்சித் தலைவி அவர்கள் ஆட்சி பீடத்திலே கோபுரமாக விளங்கும் அவர், கோபுரம் இல்லாத கோவில்களுக்கு கோபுரம் கட்டித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில் கோபுரங்கள் கட்டப் பட்ட இடங்களில் எல்லாம், கோபுரங்கள் கட்டி கும்பாபிஷேகம் உடனடியாக செய்தவுடன் அங்கு மழை நன்றாகப் பொழிந்து அந்தப்பகுதி எல்லாம் நன்றாக விளங்கிக் கொண்டிருக்கிறது. எடுத்துக்காட்டாக பார்ப்போமேயானால் ஸ்ரீரங்கம், தென்காசி கோவில்களில் கோபுரம் கட்டி முடித்ததும் மழை பெய்தது, நான் பிறந்த ஊராகிய இராமேஸ்வரம் கோயிலிலே இன்று கோபுரம் கட்டுகிற பணியும், திருப்பணியும் நன்றாக நிகழ்ந்து அங்கேயும் மாரி பெய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் இறைவனை வேண்டிக் கொள்கிறேன்.

அடுத்து கோவில் சிலைகள் திருடு போகாமல் பாதுகாக்கப் படவேண்டும். அத்தோடு தமிழகத்தில் சிலை திருட்டு வழக்குகளை நீதிமன்றங்களின் வாயிலாக விசாரிக்கிறார்கள்



இந்த நீதிமன்றம் தமிழகத்திலே கும்பகோணத்தில்தான் இருக்கிறது. எனவே அந்த நீதிமன்றத்திற்கு தனிக் கட்டிட வசதியையும் தனி நீதிபதியையும் நியமித்து தேங்கியுள்ள வழக்குகளை எல்லாம் உடனடியாக விசாரித்து ஆவன செய்ய வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். காணாமல் போகின்ற திருவுருவச் சிலைகளையெல்லாம் உடனடியாகக் கண்டு பிடிக்க முன்வர வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். ஆதி திராவிட பகுதிகளுக்கு பல்வேறு இடங்களில் கோயில்கள் வேண்டும் என்று மனுக்களைத் தருகிறார்கள். ஆகவே ஆதி திராவிட பகுதிகளுக்கு கோயில்களைக் கட்டித் தர நம்முடைய அரசு தயாராக இருக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள் கிறேன்.

நண்பகல் 12.00

ஏழ்மை நிலையிலே இருக்கும் அர்ச்சகர்கள், கிராம கோயில்களில் பூஜைக்குச் செல்லும் பூஜகர்கள் பல கோவில் களுக்கும் ஒருவரே சென்று கவனிக்கும் நேரத்தில், பல வசதிகள் இல்லாமை போன்ற காரணங்களால் எல்லா இடத்திற்கும் சென்று, ஆலயங்களிலே தீபம் போடுவதற்கு வசதியாக மிகவும் ஏழ்மை நிலையில் இருக்கும் அர்ச்சகர்களுக்கு மட்டுமாவது மொப்பெட் போன்ற வாகனங்கள் அளிப்பதற்கு இந்த ஆட்சியிலே ஆவன செய்ய வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொண்டு ...... (மணியடிக்கப் பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர்; திரு. ஆ. சுப்புரத்தினம்.

திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க இம்மாமன்றத்திலே சாதாரணமான என்னையும் சட்டமன்ற உறுப்பினராக்கி பேசும் வாய்ப்பை உருவாக்கித் தந்த நாங்கள் வணங்கும் மனித தெய்வம் தென்னகத்தின் திருவிளக்கு, தமிழர்தம் வாழ்வின் குல விளக்கு, இந்திய ஒற்றுமையைக் கட்டிக் காத்து வரக்கூடிய ஒப்புயர்வற்ற தலைவி, மனித குலம் போற்றும் மாணிக்க யணித் தலைவி, தமிழகத்தின் தன்னிகரில்லா முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் பொற் பாதங்களை வணங்கி என் நன்றியைக் காணிக்கையாக்கிக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

புரட்சித் தலைவி அவர்களின் கனிவான வேண்டுகோளை ஏற்று என்னை 40,000 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்த, தமிழ்க் கடவுள் முருகப் பெருமான் எழுந்தருளி யுள்ள பழனி தொகுதிவாக்காளர் பெருமக்களுக்கு என் நன்றியைத் தெரிவித்து மீண்டும் புரட்சித் தலைவி அவர்களின் பொற்பாதம் வணங்கி என் கன்னி உரையைத் துவக்குகின்றேன்.

புரட்சித் தலைவி அவர்களின் நேரடி கண்காணிப்பில் செயல்பட்டு வரும் இத்துறை மிகப் பொலிவோடு செயல்பட்டு வருவது மிகுந்த பெருமைக்குரியதாகும்.

வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

[திரு ஆ. சுப்புரத்தினம்] [1991 செப்டம்பர் 26

1976 ஆம் ஆண்டில் இந்தியாவிலிருந்து கள்ளத்தனமாக கடத்திச் செல்லப்பட்ட பத்தூர் நடராசர் சிலையை மீட்ட எங்களுடைய பத்தரைமாற்றுத் தங்கம் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுக்கு தமிழ்வாழ் மக்கள் யாவரும் என்றென்றுப் நன்றி சொல்ல கடமைப்பட்டவர்களாவர். அதே போல திருடிச் செல்லப்பட்ட அனைத்து சிலைகளையும் மீட்க அனைத்த நடவடிக்கைகளையும் துரிதமாகவும், வேகமாகவும் எடுத்துவருப் நம் தமிழகத்தின் தன்னிகரல்லாத முதல்வர் இதய தெய்வப் புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றி தெரிவிக்க கடமைப் பட்டுள்ளேன். குறிப்பிட்ட திருக்கோயில் ஒன்றில் திருட்டு நடைபெறுமேயானால், சம்பந்தப்பட்ட உலோகத் திருமேனிகளை அடையாளம் கண்டறிதலை எளிதாக்கும் பொருட்டு ஆல்பப் தயாரிக்கப்பட்டுள்ளது மிகவும் பாராட்டுக்குரியதாகும். 1972 ஆம் ஆண்டு பழம்பொருள் கலைச் செல்வங்கள் சட்டத்தின்படி திருக்கோயில்களுக்குச் சொந்தமான உலோக திருமேனிகளை தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறையில் பதிவு செய்ய வேண்டும் என உள்ளது. திருக் கோயில்களில் உள்ள 66,534 உலோகத் திருமேனிகளில் இதுவரையில் அரசு தொல்பொருள் ஆய்வுத் துறையில் 23,910 உலோகத் திருமேனிகள் பதிவு செய்யப்பட்டுள்ளது வரவேற்கத்தக்கது. மீதம் உள்ள உலோகத் திருமேனி களையும் விரைவில் பதிவு செய்ய நம்முடைய அரசு ஆவன செய்யும் என்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்றாக இருக்கிறது. சமய நிறுவனங்களுக்கு 4.91 இலட்சம் ஏக்கர் பரப்புள்ள வேளாண்மை நிலங்களும், வேளாண்மைக்கு உட்படாத நிலங்களும் உள்ளன. இது தவிர நகர்ப் பகுதியில் 22,592 மனைகளும், 21,200 கட்டிடங்களும் உள்ளன. ஆனால் இவற்றிலிருந்து ஆண்டு வருமானம் 13.92 கோடி மட்டுமே மிகக் குறைவான அளவாக வந்து கொண்டிருக்கிறது. இதற்கான அடிப்படைக் காரணம் முறையான குத்தகை வசூல் செய்யப்படாததே ஆகும். ஆகவே குத்தகையை முறையாக வசூல் செய்தால் நல்ல லாபம் கிடைக்கும். தொடர்ந்து குத்தகை கொடுக்காமல் இருக்கும் (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை) நபர்கள் மீது நடவடிக்கை எடுக்க முடியாத நிலை, அவர்களை நிலங்களிலிருந்து வெளியேற்ற முடியாத சூழ்நிலை இன்றைக்கு நிலவுகிறது. இந்நிலையை மாற்றம் செய்து முறையாக குத்தகைத் கொடுக்காதவர்களைத் திருக்கோயில் நிலங்களிலிருந்து வெளியேற்ற வழிவகை செய்தோமேயானால் திருக்கோயிலுக்கு வரக்கூடிய வருவாய் தங்குதடையின்றி கிடைக்கும். இன்றைய நிலையில் வசூல் செய்யப்படாத நிலுவைத் தொகை ரூ. 70 கோடி என்று அறிகிறேன். இத்தொகையை கராறாக வசூல் செய்ய அறநிலையத் துறை நிர்வாக அதிகாரிகளுக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் உடன் உத்திரவிட வேண்டும் என்று அவர்கள் பாதம் தொட்டு கேட்டுக்கொள்கிறேன்.



1991 செப்டம்பர் 26] [திரு ஆ. சுப்புரத்தினம்]

திருக்கோயில்களுக்குச் சொந்தமான மனைகள், கடைகள் போன்றவைகளுக்கு பல ஆண்டுகளுக்கு முன்னால் நிர்ணயம் செய்யப்பட்ட குறைவான தொகையே வாடகையாக வசூலிக்கப் படுகிறது. இப்போதைய பண வீக்கத்தைக் கருத்தில் கொண்டு இவ்வாடகையை உயர்த்தி நிர்ணயிக்கலாம். திருக்கோயில் களுக்குச் சொந்தமான இடங்களில் ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ் போன்றவற்றை உருவாக்கி வருவாயைப் பெருக்க ஆவன செய்யலாம். வாடகை வசூல் செய்ய முடியாத இடங்களில் கோயிலுக்குச் சொந்தமான இடங்களை பொது ஏல விற்பனை மூலம் செய்து, அத்தொகையை வங்கிகளில் முதலீடு செய்து, அதிலிருந்து கிடைக்கும் வருவாயைக் கொண்டு கோயில் திருப்பணிகளைத் தடையின்றி செய்யலாம். இதுகுறித்து அரசு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது).

தொன்மை சிறப்புமிக்க நாகரிகத்தின் பிறப்பிடமாகவும், பழம் பெருமைமிக்க பண்பாட்டுச் சின்னங்களின் இருப்பிட மாகவும், கலைப் பெட்டகங்களின் உறைவிடமாகவும் உள்ள தமிழகத்தின் பெருமை குறித்து வீடியோ படம் எடுத்து வெளிநாடுகளில் ஐக்கிய நாட்டு நிறுவனமான யுனஸ்கோ மூலமாக தக்க முறையில் விளம்பரம் செய்வோமானால், நமது மாநிலத்தின் புராதான பெருமை குறித்து, மரபு செல்வங்கள் குறித்து, உலக மக்கள் அறிந்து அவற்றைப் பார்த்து மகிழ நமது மாநிலத்திற்கு வருகை தருவார்கள். இதன் மூலம் அன்னியச் செலாவணி நம் நாட்டுக்கு நிறைய கிடைக்கும். இது குறித்து தாங்கள் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12.05

இன்னொரு முக்கியமான பிரச்சினையை மாண்புமிகு புரட்சித் தலைவியின் கனிவான கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். தற்போது நமது மாநிலத்தின் வேதம், ஆகமம் இவற்றைப் பற்றிய சிந்தனை, ஆகியவற்றை கற்றுக்கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் கொஞ்சம் கொஞ்சமாக குறைந்து கொண்டே வருகிறது. 35 ஆயிரத்திற்கு மேற்பட்ட ஆலயங்கள் நிறைந்துள்ள நமது மாநிலத்தில் 4 வேத பாடசாலைகள் மட்டுமே செயல்பட்டு வருகின்றன. வேதம், ஆகமம் இவற்றைப் பற்றி அறியாத மக்கள் மத்தியில் சற்று கிளறி விட்டு, அவற்றை தெரிந்துகொள்ள வேண்டும் என்ற அளவுக்கு கொஞ்சம் பரப்ப மேலும் வேத பாடசாலைகளை திறந்து அவற்றை கற்றுக் கொடுப்பவர்களுக்கும், கற்றுக்கொள்பவர்களுக்கும் வேண்டிய உதவியை நமது அறநிலையத் துறையின் சார்பில் செய்வோ மானால் ஆன்மீக நெறி, அறநெறி, நமது மாநிலத்தில் மேலும் தழைத்து ஓங்க உதவியாக இருக்கும். வேதம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு நல்ல ஊதியமும், மாணவர்களுக்கு போதிய

உதவித் தொகையும இதுபோன்ற பொருளாதார ரீதியான ஆதரவை நமது அரசு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதற்கு என்று தனியாக நிதி ஒதுக்கீடு செய்தால் நலமாக இருக்கும். இதுபோன்ற செயல்களுக்கு மத்திய அரசு ஏதேனும் உதவி செய்கிறதா என்று விசாரித்து அதை பெற முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். (மணியடிக்கப்பெற்றது) தமிழகத்தில் ஒரு லட்சத்திற்கும்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி . பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அறநிலையத் துறை மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல அனுமதி தந்து இருக்கின்ற மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர் களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

அறநிலையத் துறை நம்முடைய பண்டைக்கால பெருமை களைப் பாதுகாக்கின்ற வகையில் ஆண்டு ஆண்டு காலமாக அழியாத சொத்தாக பல்வேறு சிற்பங்களை பாதுகாக்கின்ற ஒரு நல்ல துறையாகும். ஆக இன்றைக்கு நம்முடைய தமிழகத்தில் இருக்கின்ற திருக்கோவில்களை எல்லாம் பாதுகாக்கின்ற வகையில் அதை மேலும் புனர் அமைத்து செம்மை படுத்துகின்ற வகையில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நல்ல முயற்சிகளை எடுத்து இருக்கிறார்கள்.

ஆனால் அதேநேரத்தில் இன்றைக்கு கோவில்களின் சொத்துக்கள் எல்லாம் அநேகமாக பல்வேறு தனி நபர்களிடம் பல லட்சக்கணக்கான ரூபாய் இன்றைய தினம் சிக்கி தவித்துக் கொண்டிருக்கிறது. அந்தக் கோவில்களுடைய சொத்துக்களை பராமரிக்கவேண்டும், பாதுகாக்க வேண்டும் என்று சொன்னால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒவ்வொரு கோவிலுடைய சொத்துக்களையும் கணக்கு எடுத்து, அந்தக் கணக்கைப் பார்த்து யார் யார் தரப்பிலே எவ்வளவு சொத்துக்கள் இருக்கிறது என்று பார்த்தோமானால் இந்தக் கோவில்களுடைய சொத்துக்கள் உழைக்கின்ற குத்தகை விவசாயிகளுடைய நிலங்களை விட தனி நபர்களிடம் இருக்கின்ற பல கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள கோவில் சொத்துக்களைக் கண்டுபிடிக்க முடியும். அப்படி பல்வேறு சொத்துக்கள் இன்றைய தினம் தனி நபர்களிடம் பல்வேறு பெரிய நகரங்களில் அது மதுரையாக இருந்தாலும், பழனியாக இருந்தாலும் தஞ்சை போன்ற இடங்களில் பார்த்தோம் என்று சொன்னால் இன்றைக்கு பெரிய மனிதர்களாக காட்சியளிக்கக்கூடியவர்கள் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை



பினாமி பெயரில் எழுதி வைத்துக்கொண்டு சாதாரண ஏழை எளிய விவசாயத் தொழிலாளர்களுக்கு ஒரு ஏக்கர், ½ ஏக்கர் என்று கொடுத்து, அதை வசூல் செய்து தன்னுடைய வருவாயைப் பெருக்கிக்கொண்டு பினாமியாக இருந்து கொண்டிருக்கிறார்கள். இதையெல்லாம் கண்டுபிடிக்க முடியும்.

இந்த அவையில் நான் பெயர் சொல்லக்கூடாது, அவையில் இல்லாத ஒரு உறுப்பினர் பெயரை நான் சொல்லக் கூடாது. தஞ்சையில் இருக்கக்கூடிய பல்வேறு பெரிய மனிதர்களிடத்தில் இன்றைக்கு நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்கள் அவர்கள் கையில் இருக்கிறது. உண்மையில் பல ஆண்டு காலமாக அறநிலையத் துறையில் இதுபற்றி இந்த அவையில் பேசி, விவாதித்து அதற்கான தீர்வுகள் ஒன்றும் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆகஅதற்காக நீங்கள் ஒரு குழுவை அமைத்து உங்களுடைய காலத்திலேதான் அந்த நிலங் களை பினாமியாக வைத்து இருக்கிற அந்த நபர்களைக் கண்டு பிடித்து அவர்களிடமிருந்து அந்த நிலங்களை எடுக்க வேண்டும். அதை கோவிலுக்கு சேர்த்து, நிலமற்ற விவசாய தொழிலாளர் களுக்கு வழங்க முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படிப்பட்ட கோவில் நிலங்கள் இன்றைய தினம் பல்வேறு இடங்களில் இருக்கின்றன.

எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர் பல பேர் கோவில் நிலங்களை வைத்துள்ள குத்தகை விவசாயிகள் மீது பாக்கி இருக்கிறது; அவர்களை நிலத்தை விட்டு வெளியேற்ற வேண்டும், நிலத்தை கையகப்படுத்த வேண்டுமென்று எல்லாம் சொன்னார்கள். நான் உதாரணத்திற்குச் சொல்கிறேன்.

பிற்பகல் 2.10

நானும் ஒரு குத்தகை விவசாயி தான் கோயில் நிலத்திலே நானும் 1½ ஏக்கர் சாகுபடி செய்து கொண்டிருக்கிறேன். உண்மை யாகச் சொல்ல போனால், அந்தக் கோயிலினுடைய நிலமான புஞ்சை நிலத்தில் சாகுபடி செய்கிறேம் என்று சொன்னால், புஞ்சை சாகுபடியிலே வருகிற குறைவான வருமானத்தைவிட நெல் சாகுபடி செய்யக்கூடிய விவசாயிகள் நஷ்டத்திலே சாகுபடி செய்கிறார்கள். இதுதான் யதார்த்தமான உண்மை. கிராமங்களிலே இருக்கக்கூடிய கோயில்களுக்குச் சொந்தமான ஆயிரக்கணக்கான ஏக்கர்களில் சாதாரண விசாயிகள், ஏழைத் தொழிலாளர்கள், அரிஜனங்கள், சாகுபடி செய்கின்றார்கள். எங்களிடத்திலே நிர்வாக அதிகாரி சொல்கிறபோது நாங்கள் சொல்லுவோம்; அந்தக் கோயிலுக்கு இருக்கிற குத்தகயைக் கொடுங்கள் என்று சொல்லுவோம் நாங்கள் கொடுக்க வேண்டாம் என்று சொல்லுவதில்லை, ஆனால், தொடர்ந்து கொடுக் தஞ்சை மாவட்டத்திலே வரக்கூடிய

இயற்கைச் சீற்றத்தின் காரணமாக, வறட்சியின் காரணமாக அவர்கள் அளக்க முடியாத காரணத்தால்தான் தொடர்ந்து பல்வேறு வழக்குகளை ரெவின்யூ கோர்ட் மூலமாக, தனிக் கோர்ட் மூலமாக சந்தித்து, அளக்க முடியாத ஒரு நிலைமை அவர்களுக்கு தொடர்ந்து நீடித்துக்கொண்டு வருகிறது. பல ஆண்டுக்காலமாக இது தொடர்ந்து வருகிறது. விவசாயிகள் நெல் அளக்காமல் அந்தப் பாக்கி வரவில்லை. சென்ற ஆண்டு பாக்கி இருக்கிறது என்று சொன்னால் இந்த ஆண்டு குத்தகையை அளந்தோம் என்று சொன்னால் பழைய பாக்கிகளை வரவு வைத்துக்கொண்டு இந்த ஆண்டில் பாக்கி வைக்கிறார்கள். இப்படி ஒவ்வொரு ஆண்டும் தொடர்ச்சியாக முன்னாடி இருக்கிற பாக்கிகளை வரவு வைத்துக்கொண்டு வருவதால், பாக்கி தொடர்ந்து வருகிறது. ஆனால் கணக்குகளைப் பார்த்தோம் என்று சொன்னால் இந்த ஆண்டு குத்தகைப் பாக்கி இருக்கும். ஆனால் இந்த ஆண்டு குத்தகை பாக்கி இல்லை. இந்த ஆண்டில் நெல் அளந்து இருப்பார்கள். ஆனால் 10 ஆண்டுகளுக்கான பாக்கிகளை அளந்து வரவு வைத்திருக்கிற கணக்குதான் தொடர்ந்து வந்துகொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமைகள் தஞ்சாவூர் ஜில்லாவிலே இன்றைய தினத்திலே இருந்துகொண்டிருக்கின்றன. நெல் அளக்கக்கூடாது என்பது அல்ல நான் சொல்வது. அவர்களை அந்தக் குத்தகைப் பாக்கியிலேயிருந்து விடுவிக்க வேண்டுமென்று சொன்னால், அந்தக் குத்தகை விவசாயிகளுடைய பாக்கிகளை முழுமையாகவிடுவிக்க வேண்டும்; ரத்து செய்ய வேண்டும். அதை நீங்கள் மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று உங்களைப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில் பினாமியாக வைத்திருக்கக் கூடிய, ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை வைத்துக்கொண்டு இருக்கக்கூடிய, நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்களை வைத்துக் கொண்டிருக்கக் கூடிய மிராசுதாரர்களைக் கண்டுபிடித்து அவர்களை அந்த நிலங்களிலிருந்து அப்புறப்படுத்துவதற்கு நீங்கள் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். இன்னும் சொல்லப் போனால், கோயில்களுக்கு மிகவும் அதிகமான வருமானம் வரக் கூடிய கோயில் இடங்களில் இன்றைய தினத்தில் தனி நபர்கள் லாட்ஜ் கட்டிவிட்டிருக்கிறார்கள். பெரிய பில்டிங்குகளைக் கட்டி வாடகைக்கு விட்டுக்கொண்டிருக்கிறார்கள். பகடி என்ற பெயரிலே 50 ஆயிரம், 2 இலட்சம், 10 இலட்சம் என்று சொல்லி வியாபாரம் செய்து கொண்டு இருக்கிறார்கள். அந்தக் கோயில் நிலங்களெல்லாம் தனி நபர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதேபோன்று 99 வருடம் குத்தகை என்கிற ஒரு நிலைமையை, அநேகமாக எனக்கு சரியாக ஞாபகம் இருக்கிறது என்று நினைக்கிறேன், நமது மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே இது அனுமதிக்கப்பட்டது. இதைத் தவறாகப் பயன்படுத்துகிறார்கள். அவர் நினைத்தது கல்வி கூடங்களுக்கு, அரசு அலுவலகங்களுக்கு, தொழிற்சாலைகளுக்கு வழங்க வேண்டுமென்ற நோக்கத்தோடு செய்தார்



என்று நினைக்கிறேன், ஆனால் இன்றைய தினத்திலே அதைப் பயன்படுத்தி பல்வேறு தனிநபர்கள், பல்வேறு கட்டிடங்களைக் கட்டி வாடகை விடக்கூடிய நிலைமைகள் சென்னை மாநகரிலே கூட இருக்கிறது. இவைகளையெல்லாம் மாற்றம் செய்வதற்கான முயற்சிகளை அரசு எடுக்கவேண்டும். நான்கூட இதுகுறித்து தொடர்ந்து சொல்லி வருகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் உங்களிடம்கூட சொன்னார்கள். கல்வி நிலையங்களுக்கு, அரசு கட்டிடங்களுக்கு கோயில் நிலங்களை கொடுப்பதற்கு வசதி இருந்தால் கொடுங்கள் என்று சொன்னார்கள் நான் கூட 86,000 ரூபாய்களை கோட்டூரிலே இருக்கக்கூடிய ஒரு இடத்திற்கு, பெண்களுடைய உயர்நிலைப்பள்ளிக்கு, பொது மக்களிடத்திலேயிருந்து வசூல் பண்ணி, அந்தப் பணத்தை, அந்த இடத்திற்கு விலை நிர்ணயம் செய்யப்பட்ட பின்னால்கூட, என்னால் அந்த இடத்தை வாங்க முடியவில்லை. அதுபோன்ற பள்ளிக் கட்டிடங்களைக் கட்டுவதற்கு அனுமதி கொடுங்கள். அரசு கட்டிடங்களுக்கு அனுமதி கொடுங்கள். என்னுடைய திருத்துறைப்பூண்டி போன்ற தொகுதிகளில் எல்லாம் ஒரு சென்ட் நிலம்கூட தனி நபர்களுக்கு கிடையாது. அவ்வளவும் கோயில்களுக்குச் சொந்தமான இடங்களாக இருக்கின்றன. அரசு அலுவலகங்களைக் கட்ட வேண்டுமென்று அனுமதித்தால்கூட கட்டிடங்களைக் கட்ட முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, அரசு அலுவலகங்களைக் கட்டுவதற்கும், பள்ளிக் கட்டிடங்களைக் கட்டுவதற்கும் நீங்கள் சட்டத்திலே ஒரு திருத்தத்தைக் கொண்டு வாருங்கள் என்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

இதுகுறித்து ஆய்வு செய்ய, ஏற்கெனவே ஐவர் குழு ஒன்று போடப்பட்டு, இதற்கு இன்னும் தீர்வு காணாத நிலை இருந்து கொண்டிருக்கிறது. அந்த ஐவர் குழுவினுடைய தீர்ப்பை உடனடியாகக் கேட்டறிந்து அதனை அமல்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அநேகமாக இந்தத் துறையைச் சேர்ந்த கமிஷனர் எல்லாம்கூட வந்திருப்பார்கள் என்று நான் நினைக்கிறேன்.

திருத்துறைப்பூண்டி பெரிய கோயிலினுடைய நிர்வாக அதிகாரியைப்பற்றி நான் 9–7–90 அன்று கமிஷனரிடத்திலே ஒரு மனு கொடுத்தேன். அநேகமாக, இரண்டு ஆண்டுக் காலம் அந்த அதிகாரி, திருத்துறைப்பூண்டி, ஆளத்தம்படி போன்ற பகுதிகளிலே உள்ள கோயில்களில் தட்சணையாகப் போடக் கூடிய, வேண்டுதலுக்காக செய்யக்கூடிய தாலி, மூக்குத்தி போன்ற பொருள்களையெல்லாம் திருடியவர். அவர் திரும்பவும் அந்த கோயிலினுடைய நிர்வாகத்துக்கு, திருத்துறைப் பூண்டியினுடைய நிர்வாக அதிகாரியாக வந்தார். அவர் வந்த பிறகு, கோயிலுக்குச் சொந்தமான இடங்களில் தனியார்கள்

கட்டிடம் கட்டுவதற்கு பல லட்சக்கணக்கான ரூபாய்களைப் பெற்றுக்கொண்டு அவர் அனுமதி கொடுத்துக் கொண்டிருந்தார். இதுகுறித்து கமிஷனரிடத்தில் பல தடவை தெரிவித்து இருக்கிறேன். மூன்று மனுக்களையும் இதுகுறித்து கொடுத்து இருக்கிறேன். ஒரு விசாரணையும் இல்லை. இந்த தடவை யாவது நீங்கள் விசாரணை செய்வீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. திருத்துறைப்பூண்டி நகரத்திலே இருக்கக்கூடிய மக்கள் எல்லாம் சென்ற மாதம் 23 ஆம் தேதி மிகப் பெரிய உண்ணா விரதம் நடத்தி அவரை சஸ்பென்ட் செய்யவேண்டுமென்று சொன்னார்கள். ஆனால் அவர் சஸ்பென்ட் செய்யப்படவில்லை. மாற்றம் செய்திருக்கிறார்கள். அவர் மீது உச்சமாக சஸ்பெண்ட் செய்ய வேண்டும். நடவடிக்கை எடுக்க வேண்டும். பல்வேறு முறைகேடுகளைச் செய்திருக்கிறார்கள். அவர் மீது நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**பிற்பகல் 12.15**

அதோடு மட்டுமல்ல, அந்தக் கோயிலிலே இருக்கின்ற ஓதுவாரை விட்டு, கோயிலுக்கு வருகின்றவர்கள் போட்டுக் கொண்டு வருகின்ற செருப்புக்களைப் பாதுகாத்து 10 காசு வாங்குவதற்கான வேலையைக் கொடுத்தார்கள். நான் அவரிடத்தில் போய்ச் சொன்னபொழுது, என் பேரிலே நோட்டீஸ் விட்டார். இப்படிப்பட்ட தவறான முறைகேடுகள் அதிகாரி களிடத்தில் நடந்து கொண்டிருக்கின்றன. அவர்களையெல்லாம் கண்காணித்து நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கோயில் நிலங்களை உழுது கொண்டிருக்கின்ற சிறிய விவசாயிகளுக்கு, கேரளாவைப் போன்று சொந்தம் ஆக்குகின்ற சட்டங்களைக் கொண்டு வர வேண்டும். சாதாரண ஏழை எளிய விவசாயிகள் பல ஆண்டுக் காலமாக தன்னுடைய பாட்டன், முப்பாட்டன் காலத்திலேயிருந்து உழுது உழுது ஓட்டாண்டியாக ஆகிக் கொண்டிருக்கிற அந்தச் சிறிய விவசாயிகளுக்குக் கேரளாவிலே பத்மநாப சுவாமியினுடைய நிலங்களை அந்தக் கோயில் குத்தகை விவசாயிகளுக்குச் சொந்தம் ஆக்கியது போன்று நம் தமிழகத்திலே புரட்சிகரமான திட்டத்தைக் கொண்டு வர வேண்டும். உழுபவனுக்கு நிலத்தைச் சொந்தமாக ஆக்க வேண்டும். ஆயிரக்கணக்கான பினாமியாக வைத்திருக்கிற நிலங்களைக் கண்டுபிடிப்பதற்கு எங்களைப் போன்ற விவசாயத் தொழிலாளர்களை, கிராமப்புறங்களிலே இருக்கக்கூடிய நபர் களைக் கொண்ட கமிட்டிகளை நீங்கள் அமையுங்கள். நாங்கள் கண்டுபிடித்துக் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறோம் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே மாண்புமிகு அமைச்சரவர்களுக்குத் தெரிவித்துக் கொண்டு, பேசுவதற்கு வாய்ப்பளித்திருக்கிற தலைவரவர்களுக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. கு. சினிவாசன்.**





**திரு. கு. சினிவாசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களையெல்லாம் உருவாக்கி வாழ வைத்துக் கொண்டிருக்கிற இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி, தமிழக முதல்வரவர்களின் பொற்பாதம் தொட்டு வணங்கி, போற்றி, என்னுடைய உரையைத் துவங்குகின்றேன்.

இந்து சமய அறக்கட்டளை நிர்வாக மானியக் கோரிக்கையில் எனக்குப் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களுக்கு மறுபடியும் என்னுடைய வணக்கத்தைக் கூறிக்கொள்கிறேன்.

இன்றைய தினம் இந்தக் கோரிக்கையிலே பேசுகின்றவர் களெல்லாம், தமிழகத்திலே இருக்கின்ற கோயில்களினுடைய சிறப்பையும், பெருமையையும் எடுத்துக் கூறினார்கள். ''கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்'' என்பது பழமொழி என்றாலும், இன்றையதினம் தமிழகத்தைப் பொறுத்த அளவில் தமிழகத்திலே இருக்கின்ற அனைத்து மக்களின் ஒட்டுமொத்த தெய்வமாக நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் விளங்குகின்ற இந்த வேளையிலே நிச்சயமாகத் தமிழக மக்களுக்கு எந்தவிதக் குறையும் வராத அளவிற்கு அவர்கள் பார்த்துக்கொள்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

இங்கே தமிழகத்திலே இருக்கின்ற கோயில்கள் தமிழர் களுடைய கலாச்சாரத்தையும், தமிழர்களுடைய பண்பாட்டையும் விளக்குகின்ற வகையிலேயும், அறநெறியைப் போதிக்கின்ற வகையிலேயும் தமிழகக் கோயில்களில் சிற்பக் கலைகள் விளங்கு கின்றன என்பது தெளிவான உண்மை. அவைகள் பல கோயில் களில் பல ஆண்டுக் காலமாகச் சரியாகப் பராமரிக்கப்படாமலும், செப்பனிடப்படாமலும் ஒளியிழந்து போயிருக்கின்றன. இந்த நிலையில், இதுகாறும், இந்திய வரலாற்றிலேயே இதுபோன்று ஆலயங்களைச் செப்பனிடுவதற்கும், அதைத் திருத்தியமைப் பதற்கும் 1960–62 ஆம் ஆண்டு இந்து அறநிலையக் குழு என்ற ஒரு குழு மத்திய அரசால் நியமிக்கப்பட்டு, அதன் தலைவராக சர் சி. பி. இராமசாமி ஐயர் அவர்கள் நியமனம் செய்யப்பட்டு, இந்தியாவிலே உள்ள பல்வேறு மாநிலங்களிலுள்ள ஆலயங் களையும் மற்றும் அது சம்பந்தப்பட்ட அறக்கட்டளைகள் நிர்வாகங்களையும், மடாதிபதிகளையும் கலந்தாலோசித்து, அவர்களுடைய அறிக்கையைத் தாக்கல் செய்தார்கள். அதன்பிறகு இந்தியாவிலாகட்டும், தமிழகத்திலாகட்டும், அதுபோன்ற ஒரு கமிஷனை இதுகாறும் நியமிக்காத இந்த வேளையிலே இன்றைய தினம் தமிழகத்தினுடைய காவல் தெய்வமாக தமிழகத்தினுடைய முதல்வராகப் பொறுப்பேற்றிருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள், தமிழகத்திலுள்ள ஆலயங்களுடைய பராமரிப்புக்காக ஒரு நிதித் திட்டத்தை இங்கே ஒதுக்கியிருக் கிறார்கள் என்றால், இதை யாராலும் பாராட்டாமல் இருக்க முடியாது.

இதுபோன்று, தமிழகத்திலுள்ள அனைத்துக் கோயில்களையும் பராமரிப்பதற்கு ஒரு தனி வாரியத்தை இங்கே அமைக்க இருக்கிறோம் என்ற உத்தரவாதத்தையும் அளித்திருக்கின்றார்கள்.

நாட்டில் தர்மத்தை நிலைநாட்டுவதற்காகக் கோயில்கள் இருக்கின்றன. தமிழ்நாட்டில் மிக முக்கியமாகப் பல்வேறு இடங்களில் கோயில்கள் இருந்தாலும், கோயில்களில் சிறந்து விளங்கக் கூடியது தஞ்சை மாவட்டமாகக் கருதப்படுகிறது.

பிற்பகல் 12.20

தஞ்சை மாவட்டத்திலே கிட்டத்தட்ட ஐயாயிரம் கோயில்களுக்கு மேல் இருக்கின்றன. (மணியடிக்கப்பெற்றது). அப்படி, தஞ்சை மாவட்டத்திலே கிட்டத்தட்ட ஐயாயிரம் கோயில்கள் இருக்கிற இந்த அளவிலே, மன்னார்குடியைப் பொறுத்தவரையில், இராஜகோபால சுவாமி திருக்கோயில் என்ற ஒரு கோயில் 5 ஏக்கர் நிலத்திலே கட்டப்பட்டு. அதன் வடபுறத்திலே 'ஹரித்திரா நதி' என்ற ஒரு பெரிய தெப்பக்குளம் 5 ஏக்கர் நிலத்தில் அமைந்துள்ளது. இன்றையதினம், அந்தக் கோயில் சரியான முறையில் பராமரிக்கப்படாமலும், அதன் திருப்பணிக்காக ஒரு கமிட்டி சென்ற அரசால் போடப்பட்டு, அந்தக் கமிட்டி சரியாக செயல்படாத காரணத்தினால், அந்தத் திருப்பணிக்காக ஒதுக்கப்பட்ட பணம் சரியான முறையிலே அக்கோவிலுக்கு செலவிடப்படாத நிலை இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள், அந்தத் திருப்பணிக் கமிட்டியை மாற்றியமைத்து, மன்னார்குடியில், இராஜகோபால சுவாமி திருக்கோவிலின் திருப்பணி முடிந்து, கும்பாபிஷேகம் நடைபெறுவதற்கு உதவிட வேண்டுமாய் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, அறநிலையத் துறையைப் பொறுத்த வரையில், ஆலயப் பணியாளர்களுக்கு கேரளாவில் எப்படி சமமாக சம்பள விகிதம் அளிக்கப்படுகிறதோ, அதேபோல் இங்கேயும் கோவிலிலே—சிறிய கோவில்களிலேயும், பெரிய கோவில்களிலேயும் வருகின்ற வருமானங்களையெல்லாம் ஒருங்கே ஒரு 'ஜாயின்ட் பண்ட்'-ஆக உருவாக்கி, அனைவருக்கும் சம ஊதியம் வழங்க வேண்டுமென்று கேட்டு, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. கே. பி. மணிவாசகம்.

திரு. கே. பி. மணிவாசகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இராமர் உள்ள இடம் அயோத்தி என்பார்கள். அதுபோல, புரட்சித் தலைவி உள்ள இடம்



திருக்கோயில் எனக் கூறி, சட்டம் பயின்ற சாதாரணமான என்னை, இந்த சட்டமன்றப் பேரவையில் உறுப்பினராக்கிய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுக்கு என்னுடைய பணிவான வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக் கொண்டு, அதேவேளையில், புரட்சித் தலைவி அவர்களின் கட்டளைக்கேற்ப என்னைத் தேர்வு செய்து, வாக்களித்த, உடுமலைப்பேட்டைத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

புரட்சித் தலைவர் அடிக்கடி ஒன்றை நினைவு கூர்வார்கள். நல்லவனாக இருப்பதைவிட, விசுவாசியே மேல் என்று சொல்வார்கள். அந்தவகையில், நான் என்றென்றைக்கும் புரட்சித் தலைவி அவர்களுக்கு விசுவாசமாக இருப்பேன் என்று கூறிக் கொண்டு, எனது முதல் உரையைத் துவக்குகிறேன்.

தன்னலம் சிறிதுமின்றி, தலைவரின் காலந்தொட்டு,
நன்னய நோன்பிருந்த, நற்றவத் தலைவி வாழ்க;

அரியணை ஏற்ற நாளே, மது அரக்கனை ஒழிப்பேனென்று,
அதைச் சரியாக அமல்படுத்தி, தக்கநல் வழிகள் சொன்னீர்;

இதைப் புரியாத பேர்கள் எல்லாம் புத்தியே பேதலித்து,
மரியாதையோடு மௌன மயக்கத்திலாழ்ந்து போனார்;

கெடுதலே அறியா உடுமலை மக்கள் கனாக்களில் மிதந்
திருக்கும் உடுமலைத் தொகுதி உயர உரைக்கின்றேன்
ஒன்றிரண்டு.

உடுமலைப்பேட்டை என்பது, கடந்த காலங்களில் எல்லாம் புரட்சித் தலைவர் அவர்களின் கோட்டையாக விளங்கி வந்துள்ளது. எனவே, அது ஒரு வளர்ந்துவரும் தொழில் நகரம். அங்கே, கொடைக்கானல் நிலையத்திலே இருந்து ஒளிபரப்பப் படுகிற தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் சரியாகத் தெரிவதில்லை. எனவே, இக்குறையைப் போக்க, மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி அவர்கள் உடுமலைபேட்டைக்கு ஒரு டி.வி. எக்ஸ்போஸர் ஒன்றை அமைத்துத் தரும்படி மத்திய அரசை வலியுறுத்தும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, உடுமலை தொகுதியில் அதிக எண்ணிக்கையில் வாகனங்கள் உள்ளன. அங்கே போக்குவரத்து வட்டார அலுவலகம் ஒன்றை அமைத்துத் தரும்படியும் கேட்டுக் கொள்கிறேன்.

உடுமலைத் தொகுதியைப் பொறுத்த அளவிலே சேரன் போக்குவரத்துக் கழகம் 1300 பேருந்துகளை இயக்குகிறது. அந்த வகையில், சங்க காலத்தில் வாழ்ந்த குமண வள்ளல் வாழ்ந்த தொகுதி உடுமலைப்பேட்டை. அந்த உடுமலைப்பேட்டையைத் தலைமையிடமாகக் கொண்டு, குமண வள்ளலின் பெயரால், சேரன் போக்குவரத்துக் கழகத்தை இரண்டாகப் பிரித்து, ஒரு கழகம் அமைத்துத் தருமாறு இதய தெய்வம் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

கேரளாவிலிருந்து ஏராளமான பக்தர்கள், உடுமலை வழியாக பழனிக்குச் செல்கிறார்கள். எனவே, அந்த பக்தர்களின் நலனை முன்னிட்டு அங்கே அவர்களுக்கு 'மோட்டல்ஸ்' கட்டித் தருமாறு மாண்புமிகு இதய தெய்வம் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

வாழ்க்கையிலே முன்னேற அடிப்படையானது ஒழுக்கம். அந்த ஒழுக்கத்திற்கு அடிப்படையானது பக்தி. அந்த பக்திதான் தனி மனிதனையும், சமுதாயத்தையும் முன்னேறச் செய்கிறது. அந்த வகையிலே, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் தன்னகத்தே கொண்டுள்ள இந்த அறநிலையத் துறையானது, அறநிலையத் துறைக்கே ஒரு பெருமை சேர்க்கிறது என்று கூறுகிறேன். 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்பது பழமொழி. இந்தியாவிலே இதுவரை யாரும் செய்திராத, ஏன், உலகத்திலே யாரும் செய்திராததை நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் செய்துள்ளார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) அந்தத் திட்டம்தான் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய மாண்புமிகு முதல்வர் திருக்கோயில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதி என்ற அமைப்பாகும். அந்தத் திட்டத்தை நான் மனமாரப் பாராட்டுகிறேன்.

முற்பகல் 12.25

'சிவன் சொத்து குல நாசம்' என்பார்கள். கோவில் சிலையைத் திருடியவர்கள் எல்லாம் நன்றாக இருந்ததில்லை. இதை வரலாறு கூறுகிறது. அந்த வகையிலே 1971 ஆம் ஆண்டு தமிழ் நாட்டி லிருந்து கடத்தப்பட்ட நடராசர் சிலையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் மீட்டுத் தந்தது பற்றி நெஞ்சாரப் பாராட்டுகிறேன்.

மேலும், திருக்கோயில் நிர்வாகத்தைச் சீரமைக்க திருக் கோவில் நிர்வாக வாரியம் அமைக்க மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் எடுத்த நடவடிக்கையைப் பாராட்டு கிறேன்.



'எல்லோரும் எல்லாமும் பெறவேண்டும்; இங்கு
இல்லாமை இல்லாத நிலை வேண்டும்'

என்ற கூற்றின்படி தமிழ்நாட்டில் சில கோவில்களிலே ஒரு கால பூசை செய்வதற்குக் கூட நிதி இல்லாமல் இருக்கின்றது. அந்த வகையிலே புரட்சித் தலைவி அவர்களுடைய திட்டம், ஒருகால பூசை செய்யும் திட்டம் மிகவும் பாராட்டத்தக்கது, போற்றுவதற் குரியது. தமிழ்நாட்டிலே கோவில்களுக்கு நிலங்கள் நிறைய இருக்கின்றன. அந்த நில பாக்கியையும், வருமானத்தையும் வசூல் செய்வதற்கு சிவில் கோர்ட்டை நாட வேண்டியுள்ளது. இதனால் காலதாமதம் ஏற்படுகிறது, நேரமும் விரையமாகிறது. எனவே, இதைப்போக்க, ரெவின்யூ ரெகவரி ஆக்டிலே நிலுவையை வசூல் செய்ய ஆவன செய்யுமாறு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

புரட்சித் தலைவியினுடைய அன்பைப் பெற்றவர் புனித ஜார்ஜ் கோட்டையை அடைந்தார். ஆனால் அவரைப் புரிந்திடாதோர் வாய்ப்பை இழந்தார். புரட்சித் தலைவி அவர்கள் முகத்தில் தெய்வீகம் இருக்கிறது போற்றிடாத நாக்கில் சனி இருக்கிறது என்று கூறி, மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி அவர்கள் பல்லாண்டு பல்லாண்டு காலம் வாழ வேண்டுமென்று வாழ்த்தி, வாய்ப்புக்கு நன்றிகூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. கே. செல்வராஜ்.

*திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று இந்து அறநிலையத் துறை மானியக் கோரிக்கையில் பேசுகின்ற வாய்ப்புக் கொடுத்ததற்கு மிக்க நன்றி.

அமாவாசை இருளாய் மண்டிக் கிடந்த ஆலயங்களில், பௌர்ணமி நிலவாய் ஒளிவிடச் செய்து புதிய வரலாறு படைத்த பாரதி கண்ட புதுமைப் பெண் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆலயத் திருப்பணிகள் சிறக்க வேண்டுகிறேன். கோவில் நிலங்களை ஒரு சிலர் தனது சொந்த சொத்தாக அனுபவித்து வருகிறார்கள். சரியாகக் குத்தகை செலுத்துவ தில்லை. கோவில் நிர்வாகம் கேட்டால் நீதிமன்றம் சென்று தடையை வாங்கிக் கொள்கிறார்கள். இப்படிப்பட்ட ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலங்கள் தனியாரிடம் உள்ளன. அரசு இதில் உடனடியாக நடவடிக்கை எடுத்து, கோவில் நிர்வாகமே நிர்வகித்து, தனியாரிடம் இல்லாது இருக்கவும், வருமானம் நேரிடையாக அறநிலையத் துறையை அடைய, நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

சில இடங்களில் கோவில் நிலங்கள் இட வாடகைக்காக வீட்டு மனைகள் கட்டிக்கொள்ள, பல ஆண்டுகளுக்கு முன்பு வாடகைக்குக் கொடுக்கப்பட்டன. இதில், சொந்த செலவில்

வீடுகள் கட்டிக் கொண்டு, நிறைய பேர் குடியிருந்து வருகிறார்கள். அவர்களுக்கு அந்த இடத்தை அறநிலையத் துறையின் மூலம் இன்றைய விலை மதிப்பீட்டில் அங்கு வசிப்பவர்களுக்கே சொந்தம் செய்து கொடுத்தால் அவர்கள் அந்த இடங்களிலே தங்களுக்குச் சொந்த வீடுகளை பெற்றுக்கொள்ளவும், அதே நேரத்தில் கோடிக்கணக்கான பணம் அறநிலையத் துறைக்கு வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது தமிழக முதல்வர் அவர்கள் கோவில் பராமரிப்புக்கு வேண்டி பணம் வசூல் செய்யும் நேரத்தில் இதுவும், உதவியாக இருக்கும்.

ஒருசில இடங்களில் கோவில் நிலங்கள் அரசியல் செல்வாக்கு மூலம் சில தனியார்கள் தங்கள் பெயரில் பட்டா வாங்கி உள்ளார்கள். அப்படி தவறாகப் பெறப்பட்ட பட்டா நிலங்களை திரும்பப் பெற்று அந்த இடங்களை கோவிலுக்குத் திருப்பிக் கொடுக்க வேண்டுகிறேன்.

முந்தைய திராவிட முன்னேற்றக் கழக அரசு, பெரிய, சிறிய கோவில்களுக்கு, அந்தக் கோவிலுக்கும், சாமிக்கும் சம்பந்தமே இல்லாதவர்களை அறங்காவலர்களாக நியமித்தனர். இன்னும் அவர்கள் அந்தப் பதவியில் இருந்து கொண்டு கொள்ளையடித்து வருகிறார்கள். அவர்கள் கோவில் பணிகள் செய்வதில் ஒவ்வொரு அறங்காவல் உறுப்பினர்களும், ஒரு பணியாளரை அழைத்து வந்து, பணிகள் கொடுக்க வேண்டும் என வலியுறுத்தி அந்தப் பணியில் செய்யும் தொகையில் பாதியை லஞ்சமாக வாங்கிக்கொள்கிறார்கள். அப்படிக் கோடிக்கணக்கான ரூபாய்களைக் கொள்ளையடிப்பவர்கள் இன்று கோவில் அறங்காவலராக உள்ளனர். இப்படிப்பட்ட தவறுகள் நடைபெறுவதைத் தடுக்க அரசு உடனடியாக திராவிட முன்னேற்றக் கழக அரசு நியமித்த அறங்காவலர்களை நீக்க வேண்டுகிறேன். அவ்வாறு நீக்கி விட்டு, புதிதாக, நல்ல தெய்வ பக்தி உள்ள, அந்தக் கோவிலின் சம்பந்தப்பட்ட வரலாறு தெரிந்த ஆன்றோர்களைத் தக்காராக நியமிக்க வேண்டுகிறேன்.

சில கோயில்களில் திருப்பணி செய்ய அனுமதி கேட்டு அறநிலையத் துறைக்கு அனுப்புகிறார்கள். ஆனால், ஆண்டுகள் பலவானாலும், அந்தத் திருப்பணிகள் செய்ய அனுமதி கிடைப்பதில்லை. அப்படிக் கிடைத்து பணிகள் துவங்கினாலும் அரசு தரப்பில் பொறியாளர்கள் சென்று பார்வையிட நீண்ட நாட்கள் ஆகின்றன. இப்படிப்பட்ட தடைபாடுகளை நீக்க, துரிதமாக கோவில் பணிகள் நடைபெற மண்டலங்களாக உள்ள பிரிவை மாற்றி, மாவட்டம் வாரியாக அறநிலையத் துறையைப் பிரித்து, ஐ. ஏ. எஸ். அதிகாரிகளை நியமித்து செயல்படுத்த வேண்டும். கோவில் பணிகளைப் பார்த்து சரி செய்ய அரசு கட்டிடப் பொறியாளர்களை நியமித்து பணிகளில் தவறு நடக்காது கண்காணித்து



நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன். (மணியடிக்கப்பெற்றது) மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்வது; பழனி அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோவில் சார்பாக கல்லூரிகள் ஆரம்பிக்கப்பட்டு சிறப்பாக நடத்தப்பட்டு வருகின்றன. அதுபோல பெரிய கோயில்கள் சார்பாக அந்தக் கோவில் பணத்திலிருந்து பள்ளிகள், கல்லூரிகள், பாலிடெக்னிக்ஸ், என்ஜினியரிங் மற்றும் மருத்துவக் கல்லூரிகள் ஆரம்பிக்க வேண்டுகிறேன். காரணம் தனியார் சிலர் கல்லூரிகள், பாலிடெக்னிக்குகள், மருத்துவ, என்ஜினியரிங் கல்லூரிகள் ஆரம்பித்து இன்று கொள்ளை லாபத்தில் தொழிலினை நடத்துகிறார்கள். ஆதலால் கோயில்கள் மூலம் புதிதாக ஆரம்பித்து கல்வியும் கற்றுத் தந்து சிறப்பாக நடத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

பிற்பகல் 12-30

தமிழக முன்னாள் முதல்வர் மாண்புமிகு எம். ஜி. ஆர். அவர்கள் நோய்வாய்ப்பட்டு அமெரிக்க மருத்துவமனையில் இருந்தபோது புரட்சித் தலைவர் அவர்கள் பூரண ஆயுளுடன் நீண்டநாள் வாழ, நலம் பெறவேண்டி தமிழகம் முழுவதும், இந்துக்கள் எல்லா ஆலயங்களிலும் இறை வழிபாடு செய்தும், இஸ்லாமியர்கள் தொழுகை நடத்தியும், கிறிஸ்தவர்கள் ஜெபம் செய்தும் ஒரே எண்ணத்தில் ஆண்டவனை வணங்கியதன் மூலம் நல்ல உடல் நலம் பெற்று மீண்டும் தமிழகம் வந்து நல்லாட்சி நடத்தினார். மாண்புமிகு புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள். அவர்கள் இறைவன் அருள் என்றும் உண்டு என நாட்டுக்கு உணர்த்தினார்கள். அதனால்தான் எல்லா நலமும், வளமும் எல்லோரும் பெறவேண்டும் என்பதற்காக தமிழகம் முழுவதும் உள்ள ஆலயங்களில், எல்லா சக்தியும் நிறைந்த கந்த சஷ்டி கவசம் எனும் முருகன் வழிபாட்டுப் பாடலை கல்வெட்டுகள் மூலம் பரப்ப வேண்டுகிறேன். பெரிய கோவில்களில் வரலாறு, புராணம், சரித்திரங்களை அனைவரும் தெரிந்து கொள்ள, அறிந்துகொள்ள வசதியாக அவற்றை அரசு வெளியிட வேண்டுகிறேன்.

ஒவ்வொரு மாவட்ட தலைநகர பஸ், ரெயில் நிலையங்களில் அந்தந்த மாவட்டங்களில் உள்ள பிரசித்தி பெற்ற ஆலயங்கள் செல்லும் வழித்தடங்கள், தூரங்கள், செல்ல வேண்டிய பஸ் நம்பர்கள் ஆகியவை அடங்கிய விளம்பரப் பலகைகளை வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒருசில கோவில்களில் இன்னும் பெண்கள், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் வரக்கூடாது என தடை உள்ளது. அப்படிப்பட்ட தடைகளை நீக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. சா. பழனிசாமி அவர்கள். (குறுக்கீடு) தயவு செய்து ஒத்துழைப்பு தரவேண்டும். இன்னும் 5 பேர் பேசி முடிக்க வேண்டும். திரு. நா. சா. பழனிசாமி.

திரு. நா. சா. பழனிசாமி: மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி தமிழக முதல்வர் அவர்களின் இந்த அறநிலைய மானியக் கோரிக்கை மீது பேசுவதற்கு வாய்ப்பளித்ததற்காக நன்றி கூறி எனது உரையைத் துவங்குகிறேன்.

தாளாண்மை இல்லாதார்
வேளாண்மை செய்குவதும்
தரைமேல் என்றும்
வாளாண்மை செய்யாதார்
மணவாழ்க்கை நடத்துவதும்
விசயம்கேட்டு வேளாண்மை இல்லாதார்
மண்டுசமர்க்கு ஏகுவதும்
வளர்புராணம் கேளாதார் கதிவிளைவும்
விழிஇல்லார் வழிநடத்தும்
கிரமம் ஆகும்.

என்று திரிகூட இராசப்பகவிராயர் என்பவர் பாடிச் சென்றார். முயற்சி இல்லாதவர்கள் விவசாயம் செய்வதும், விருந்தோம்பல் செய்யாதவர்கள் இல்வாழ்க்கை நடத்துவதும், வாள்வலிமை இல்லாதவர்கள் போருக்குச் செல்வதும், நல்ல நீதி இலக்கியங்களை கேளாதார் ஆன்மீகவாழ்வும், கண்ணில்லாதவர் பின்னால் சென்றது போலாகும் என்று கவிஞர் அன்று பாடினார். கண்ணில்லாதவர்கள் பின்னால் இரண்டு ஆண்டு சென்று வாழ்வில் இருளைக் கண்ட தமிழக மக்கள் கண்கண்ட தெய்வமாக புரட்சித் தலைவியை புனித ஜார்ஜ் கோட்டையிலே கொலு வைத்த பிறகு தான் இன்று ஒளியைக் கண்டு இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) வாழ்வுக்கு ஒரு வழியைக் கண்டு இருக்கிறார்கள். சேரனும், சோழனும், பாண்டியனும் கோட்டைகளை மண்ணிலே கட்டினார்கள். கோயிலை மட்டும் கல்லிலே கட்டினார்கள். ஆனால் அந்த சேரன், சோழன், பாண்டியன் என தன்னை உருவகப்படுத்திக்கொண்டு புனித ஜார்ஜ் கோட்டையைப் பிடிக்க மனக் கோட்டை கட்டியவர்கள் அந்த மன்னர்கள் கட்டிய கோயிலை மறந்தார்கள். கோயிலைத்தான் மறந்தார்களேயல்லாமல் அதில் உள்ள ஆபரணங்களை மறக்கவில்லை; உண்டியலை மறக்கவிலலை, ஐம்பொன் சிலைகளை மறக்கவில்லை; (மேசையைந் தட்டும் ஒலி) கோயில்கள் தோறும் சென்று பரிவட்டங்கட்டிய வரவேற்பைப் பெற்றார்கள். கோயில் கட்ட நினைக்கவில்லை. தமிழ்நாட்டை ஆண்டவர்கள் தமிழ்நாட்டு அரசு சின்னமாக கோயிலை வைத்தவர்கள், வாய்மையே வெல்லும் என்று அதில் எழுதியவர்கள், இடிந்த



கோயில்களை எழுப்ப நினைக்கவில்லை, களவு போன சிலைகளை கொண்டுவர நினைக்கவில்லை, காலியான உண்டியல்களை நிரப்ப நினைக்கவில்லை. மொத்தமாகச் சொல்லப்போனால் அந்த சேரனும், சோழனும், பாண்டியனும், கட்டிக்காத்த தமிழ் கலாச் சாரத்தை காக்க நினைக்கவில்லை. சென்னை புனித ஜார்ஜ் கோட்டையில் கொலுவிருந்து ஆளவந்தவர்களின் ஆண்டவர்களை நினைத்தவர்கள், ஆலயத்தைப் புதுப்பிக்க ஆணை பிறப்பித்தவர்கள், ஆத்திகர்கள் உள்ளங்கள்தோறும் சக்தியின் உருவமாய்க் காட்சி அளிப்பவர்கள் நமது காவிரி தந்த கலைச்செல்வி புரட்சித் தலைவி மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்தான்.

(12.35)

அன்றைய மூவேந்தர்கள் கோயிலுக்கு மானியமாக நிலங்களை வழங்கினார்கள். பொன்னை வழங்கினார்கள். அந்த மூவேந்தர்கள் கட்டிய ஆலயத்தைப் பாதுகாக்க நமது புரட்சித் தலைவி அவர்கள் தனது அறநிலையத் துறைக்கு இந்த மன்றத்தில் உள்ள மாண்புமிகு உறுப்பினர்களிடம் மானியம் கோருகிறார்கள். இந் மன்னர்களுக்கு கொடுக்கப்பட்ட மானியத்தை எல்லோரும் என்ற நாட்டு மன்னர்கள் ஆனபிறகும் கொடுக்கவேண்டுமா அன்னை கேள்வி எழுப்பி மன்னர் மானியத்தை ஒழித்தவர் இந்திரா அவர்கள்.

ஊர் பேர் தெரியாதவர்களை எல்லாம் வெற்றியின் சின்னமாக இரட்டை இலையில் நிற்கவைத்து ஜனநாயக மன்னர்களாக்கி பழைய மன்னர்கள் கட்டிய கோயிலை பாதுகாக்க மானியம் கேட்டு நிற்கிறார்கள் புரட்சித் தலைவி அவர்கள். (பலத்த மேசையைத் தட்டும் ஒலி).

சக்தியிடம் வரம்கேட்டு நின்ற பக்தர்களைப் யாடுவது பழைய புராணம். பக்தர்களிடம் வரம்கேட்டு நிற்கும் சக்தியைப் பற்றிப் பாடுவது இன்றைய புதுக்காப்பியம். (பலத்த மேசையைத் தட்டும் ஒலி). வரம் கொடுத்த சக்தியின் தலையிலேயே கையை வைத்து, கொடுத்த வரம் பலிக்கிறதா என்று பார்க்கின்ற நன்றி கெட்ட நரகாசுரர்களாக இந்த மன்றத்தில் யாருமே இல்லை. நன்றி செலுத்தவும் ஒரு சந்தர்ப்பம் கிடைக்காதா என்று ஏங்கு றவர்கள்தான் இங்கே இருக்கிறோம். பலத்த மேசையைத் தட்டும் ஒலி) பேரவைத் தலைவர் அவர்கள் வாக்கெடுப்பு நடத்தும் முன்பே 'ஆம்' என்று சொல்லிவிட்டோம். அந்த 'ஆம்' என்று சொல்லுவதையே 'ஓம்' என்று சொல்லும் பிரணவ மந்திர மாக கருதுகிறோம்.

''பூசாரியைத் தாக்கினேன், அவன் பக்தன் என்பதற்காக அல்ல. பக்தி பகல் வேசமாக்கப்பட்டதைக் கண்டிப்பதற்காக. கோயிலிலே குழப்பம் விளைவித்தேன், கோயில் கூடாது என்பதற் காக அல்ல. கோயில் கொடியவர்களின் கூடாரமாக மாறிவிடக்

கூடாது என்பதற்காக'' என அடுக்குமொழி வசனத்தை பராசக்திக்
காகத் தீட்டியவர்களின் வசவுக்கு ஆளான ஆச்சாரியர்கள்
எத்தனை பேர். குழப்பத்திற்காளான கோயில் எத்தனை என்பது
மக்களுக்கும் தெரியும்.

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை குறிஞ்சி பூக்கும். அது
புனித ஜார்ஜ் கோட்டையில் பூத்திருக்கிறது. (பலத்த மேசையைத்
தட்டும் ஒலி). விலைமதிக்க முடியாத பத்தூர் நடராஜர் சிலை
லண்டன் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டு புரட்சித் தலைவியின்
திருக்கரத்தால் புனித நீராட்டப்பட்டு பாதுகாப்புப் பெட்டகத்
திற்கு சென்றிருக்கிறது. 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடை
பெறும் கும்பகோண மகாமகம் திருவிழா கோலாகலமாக 1992ல்-
கொண்டாடப்பட இருக்கிறது. காவிரி நடுவர் மன்ற தீர்ப்பை
மதிக்காத கர்நாடக அரசின் அணைத் தடுப்பை தாவிக் குதித்து
காவிரித்தாய் மேட்டூர் அணையை பல்லாண்டுகளுக்குப் பிறகு
நிரப்பி தஞ்சை விவசாயிகளின் நெஞ்சிலே பால் வார்த்து இருக்
கிறார். நதிகளைப் பெண்ணாக உருவகப்படுத்தி புலவர்கள்
பாடியதன் பொருள் இப்போதுதான் புரிகிறது. ஆண்கள் ஆட்சி
செய்யும்வரை அணைகளை நிரப்பாத தமிழக நதிகளுக்கு என்ன
ஆனந்தம் வந்ததோ இந்த பெண்ணரசியின் ஆட்சியில் பெரு
வெள்ளமாய் வந்துவிட்டார்கள். இனி தமிழக மக்கள் மழைச்
சோறு எடுக்கமாட்டார்கள், மாரி அம்மனை வணங்க மாட்டார்
கள், நேராக கோட்டைக்கு வந்து இந்த குலமாதாவை வணங்கி
னால் ஆறுகள் பெருகிவிடும், அணைகளும் நிரம்பிவிடும்.

''ஆலயம் தொழுவது சாலவும் நன்றி'' என்று தமிழுக்கு
பெருமை சேர்த்த பெண்பாற்புலவர் ஔவைகூட தீர்க்க தரிச
னத்தால் தீர்மானித்துவிட்டுத்தானோ ஆலயத் திருப்பணிக்கு
இந்த தமிழகத்தை ஆளுகின்ற ஒரு பெண்ணரசி வருவார் என்றும்
அவரால் நடத்தப்படும் என்று அவர் கனவுகண்டு தான் சொல்லி
யிருப்பார்.

முதலமைச்சர் அவர்களின் திருக்கோயில் திருப்பணி மற்றும்
பாராமரிப்பு நிதிக்கு எனது ஒரு மாத சட்டமன்ற உறுப்பினர்
சம்பளத்தை காணிக்கையாக்கிக் கொடுத்து வாய்ப்புக்கு நன்றி
கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. கி. இராஜன்
பாபு என்கிற தணிகைபாபு.

*திரு. கி. இராஜன்பாபு என்கிற தணிகைபாபு: மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களைப் போன்ற
சாமான்யர்களை எல்லாம் சட்டமன்ற உறுப்பினர்களாக்
ஆக்கி சட்டமன்றத்திற்கு கொண்டு வந்த தமிழகத்தினுடைய



நம்பிக்கை நட்சத்திரம் எங்களை எல்லாம் நாளும் வாழவைத்துக்
கொண்டிருக்கின்ற புனிதத் தாய் புரட்சித் தலைவியினுடைய
பொற்பாதங்களில் கோடானகோடி வணக்கங்களை காணிக்கை
யாக்கி வணங்கி எனது அன்புத்தாய் 'வாழிய பல்லாண்டு,
பல்லாண்டு, பல்லாயிரத்தாண்டு, பலகோடி நூறாயிரம் ஆண்டு,
எனச் சொல்லி என்னுடைய அன்புத் தாயினுடைய தாளை
பணிந்து ஒரு சில வார்த்தைகளை நான் இந்த அறநிலையத்
துறை மானியக் கோரிக்கையிலே பேச முற்படுகிறேன்.
புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலே தான், தமிழகத்திலே
இன்று எங்கும் எதிலும் புதுமையைக் கண்டுக் கொண்டிருக்கிறது.
புதுமையைக் காணுகின்ற புரட்சித் தலைவி அவர்கள் அறநிலையத்
துறையிலேயும் ஒரு புதுமையை கண்டுகொண்டிருக்கிறார்கள்.
புரட்சித் தலைவி இன்றையதினம் அறநிலையத் துறையின்
அமைச்சராக இருந்துகொண்டு அறநிலையத் துறைக்கு என்று
தனியாக ஒரு வாரியத்தை உருவாக்கி அற நிலையத் துறையை
செப்பனிடுவதற்காக புரட்சித் தலைவியினுடைய திட்டத்திற்கு
எங்களைப் போன்றவர்கள், சாமான்ய சாதாரண உதவிகளையும்
செய்ய நாங்கள் முன் வந்திருக்கிறோம்.

பிற்பகல் 12.40

என்னுடைய இரண்டு மாதச் சம்பளத்தையும் புரட்சித் தலை
வியினுடைய அறநிலையத் துறைக்கு நான் இங்கே ஒதுக்கீடு
செய்திருக்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி) என்ற மகிழ்ச்சிகர
மான செய்தியை புரட்சித் தலைவிக்கு இந்த மாமன்றத்தின்
வாயிலாக அறிவிக்கிறேன்.

அன்புத் தாயாக இன்றையதினம் தமிழகத்தினுடைய
ஏழையெளிய மக்களுடைய நெஞ்சங்களில் நீக்கமற
வீற்றிருக்கிறார்கள். அதே போன்று தமிழகத்தில்
இன்றைய தினம் பல்வேறு திருத்தலங்கள் ஒளிவிலக்கு
இல்லாமல் டாழடைந்து கிடக்கின்றன. அந்தத் திருக்
கோயில்களை எல்லாம் புரட்சித் தலைவி அவர்கள் பாதுகாக்
கின்ற புனிதப் பொறுப்பை ஏற்றிருக்கின்ற உத்தமத் தலைவிக்கு
நிச்சயமாக எங்களுடைய மாவட்ட மக்கள் எல்லோரும் நன்றி
சொல்ல கடமைப்பட்டிருக்கிறோம். காரணம், புரட்சித்
தலைவர் எம். ஜி. ஆர். பெயரை தாங்கி இருக்கின்றது எங்கள்
மாவட்டம், காஞ்சியை தலைநகராகக் கொண்டிருக்கிறது.
காஞ்சி தலைநகரில் தான் உலக இந்துக்களுடைய தலைவர்களாகிய
காஞ்சிப் பெரியவர்கள் வாழ்ந்துக்கொண்டிருக்கிறார்கள். எனவே,
உலக இந்துக்களின் தலைவர்களாகிய அந்த காஞ்சிப் பெரியவர்
கள் வாழ்ந்துக்கொண்டிருக்கிற அந்த காஞ்சி நகரத்தை Vatican
நகரத்தைப்போல, உலக கிறிஸ்தவர்களுடைய தலைமையிடமாக
எப்படி 'வாட்டிகன், விளங்கிக் கொண்டிருக்கிறதோ அதுபோல்
தமிழகத்தில் இருந்துகொண்டிருக்கின்ற அந்த காஞ்சி நகரத்தை
யும் Vatican நகரைப் போல புரட்சித் தலைவி அவர்கள்

[திரு. கி. இராஜன்பாபு (எ) தணிகைபாபு]

உருவாக்கி, இந்துக்களுடைய கொள்கைகளைப் பரப்புகின்ற தூதுவர்களை எல்லாம் அங்கிருந்து உலகளாவிய அளவில் அனுப்புவதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, திருத்தணி ஆறுபடை வீடுகளில் ஒரு வீடாக இருந்துகொண்டிருக்கிறது. அந்த அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் இன்றையதினம் கோடிக்கணக்கிலே வருமானம் ஈட்டிக்கொண்டிருக்கிறது. ஆனால், அங்கே வருகின்ற வருமானம் இன்றையதினம் கோடிக்கணக்கில் நிரந்தர வைப்புத் தொகையாக வங்கிகளில் முடக்கப்பட்டிருக்கின்றன, நான் ஒன்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். கிறிஸ்தவர்களுடைய ஆலயப் பணியில் அவர்கள் ஈடுபட்டுக் கொண்டிருக்கும்போதே கல்வித் துறையிலும், மருத்துவத் துறையிலும் கூட அவர்களுடைய ஆலயங்கள் ஈடுபட்டு வருகின்றன. அதேபோன்று நம்முடைய ஆலயங்களும் மருத்துவத் துறைக்கும், கல்வித் துறைக்கும் தங்களிடம் இருக்கும் பணத்தைப் பயன்படுத்தி மக்களுக்குப் பயன்படும் வகையில் ஆலயத் திருப்பணிகளையும் பயன்படுத்தியாக வேண்டும்.

[மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை]

இன்றைக்கு திருத்தணி நகரில் இருக்கின்ற அந்தக் கோயிலுக்கு வருகின்ற பக்தர்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கக் கூட அந்தத் திருக்கோயிலால் முடியவில்லை. காரணம், எந்தப் பணியை எடுத்துக்கொண்டாலும் அது அங்கே முடக்கப்படுகிறது. அங்கே ஆணையாளரைக் கேட்க வேண்டும், இவரை கேட்க வேண்டும் என்று சொல்லியே பணிகள் எல்லாம் முடக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, இன்றையதினம் திருத்தணி திருநகரத்திற்கு 10 ஆயிரத்திற்கு மேற்பட்ட யாத்ரீகர்கள் அன்றாடம் வருகிறார்கள். கிருத்திகை நாட்களில் லட்சக் கணக்கில் பக்தர்கள் வருகிறார்கள். ஆடிக் கிருத்திகை போன்ற திருவிழாக்களின்போது ஏறக்குறைய சராசரி 7 லட்சம் பக்தர்கள் வருகிறார்கள். அங்கே குடிநீர் இன்றி அந்த பக்தர்கள் அவதிப்படுவதால், ஒரு டம்ளர் குடிநீர் கூட கிடைக்காமல் அவர்கள் அந்த நகரத்தை விட்டு அப்புறம் சென்று தண்ணீர் குடிக்கிற அளவுக்கு நிலைமைகள் மிகவும் பரிதாபமாக இருந்துகொண்டிருக்கிறது. எனவே, திருத்தணி நகரத்திலுள்ள குடிநீர் பிரச்சினையை நிரந்தரமாக போக்க வேண்டுமென்று இப்பொழுது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் 2 கோடி ரூபாய் அளிவுக்கு ஒரு குடிநீர் திட்டத்தை உருவாக்கித் தந்திருக்கிறார்கள். அது அரசுக்கு வந்திருக்கிறது. எனவே, தாய் உள்ளம் கொண்ட புரட்சித் தலைவி அவர்கள் அந்த குடிநீர் திட்டத்தை ஏற்று, அந்த குடிநீர் திட்டத்தை திருத்தணி மக்களுக்காக உருவாக்கித் தர வேண்டுமாய் புரட்சித் தலைவியின் பாதம் தொட்டு, வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறேன்.



[திரு. கி. இராஜன்பாபு (எ) தணிகைபாபு]

என்னுடைய தொகுதியில் திருவாலங்காடு என்கிற காரைக்கால் அம்மையாருடைய பாடல்பெற்ற ஒரு புனிதத் தலம் உள்ளது. அங்கேயுள்ள தேர் பாழ் பட்டு ஓடாமல் இருக்கிறது. அந்தத் தேரை புதுப்பித்து புரட்சித் தலைவி அவர்கள் அதை ஓட விடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுபோல மப்பேடு பகுதியில் ஒரு மிகப் பெரிய திருக்கோயில் இருந்துகொண்டிருக்கிறது. அது கிருஷ்ணதேவராயர் காலத்தில் கட்டப்பட்ட திருக்கோயில், அந்தத் திருக்கோயில் பாழடைந்து கிடக்கிறது. அந்தத் திருக்கோயிலையும் புரட்சித் தலைவி அவர்கள் புதுப்பித்துத் தரவேண்டும்.

எங்களுடைய திருத்தணி நகரில் அருள்மிகு சுப்பிரமணியம் அரசினர் கலைக் கல்லூரி ஒன்று இருக்கிறது. அங்கே பட்ட மேற்படிப்பு, எம்.ஏ., எம்.எஸ்ஸி., போன்ற வகுப்புகள் உள்ள கல்லூரியாக அது மாற்றப்பட வேண்டும். குறிப்பாக அங்கே சயன்ஸ் சம்பந்தப்பட்ட படிப்புகள் இல்லையாதலால் அவற்றை உருவாக்கித் தர வேண்டுமென்று புரட்சித் தலைவி அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

திருத்தணி நகரில் சாலைகள் பாழடைந்து மோசமாக இருக்கின்றன. எனவே, சாலைகளைப் புதுப்பித்துத் தர வேண்டும். அந்த வகையில் புரட்சித் தலைவி அவர்களுடைய நல்லரசு திருத்தணி நகரை சுற்றுலா நகரமாக உருவாக்குவதற்கான வாய்ப்பினை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அருகாமையிலேயே திருப்பதி போன்ற பெரிய திருத்தலம் இருக்கிறது.

பிற்பகல் 12-45 மணி

எனவே, சுற்றுலா மையமாக அரசு அறிவிக்க வேண்டும். குறிப்பாக திருத்தணியிலே கன்னி கோவில், ஆறுமுகசாமி கோவில் போன்ற பகுதிகள் இருக்கின்றன. அங்கே கன்னிகோவில் பகுதி சுற்றுலாப் பயணிகளை மிகவும் கவரும் பகுதியாக இருக்கிறது. இங்கே ஐந்தருவி இருக்கிறது. ஆறு மரங்கள் ஒன்றாக முளைத்திருக்கின்றன. எனவே, அந்தப் பகுதியில் உயிரியல் பூங்கா அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் வழி வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அங்கே வசதிகள் சரியான முறையில் ஏற்படுத்தப்படாமல் இருக்கிறது. ஆகவே விடுதிகளைக் கட்டுவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆவன செய்ய வேண்டும். குறிப்பாக, திருத்தணி நகரை ஒரு சுற்றுலா மையமாக புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்து, எங்களுக்குப் பெருமை சேர்க்க வேண்டுமென்று கேட்டு, புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்பாதங்களைத் தொட்டு வணங்கி, பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து, வாழ்க புரட்சித் தலைவி பல்லாண்டு, பல்லாண்டு, பல்லாயிரத்தாண்டு என்று சொல்லி, என்னுடைய உரையை நிறைவு செய்து, அமைகிறேன்.

[1991 செப்டம்பர் 26

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இரா. புதுநயினார் ஆதித்தன்.

* திரு. இரா. புதுநயினார் ஆதித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே சேரன்மகாதேவி தொகுதியிலே யாரும் வெற்றி பெற முடியாது என்று கூறிய மாமணிதரைத் தோற்கடிக்க இந்தச் சிறியவனை, இந்தப் புதியவனை, சேரன் மகாதேவி தொகுதிக்கு சம்பந்தமில்லாத என்னை, அந்தத் தொகுதியிலே நிறுத்தி, மூன்று மணி நேரம் இடைவிடாது பிரச்சாரம் செய்து, என்னைத் தேர்ந்தெடுக்கச் செய்து, இந்த மாமன்றத்திலே எனக்குப் பேச வாய்ப்பு அளித்த எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்பாதங்களில் என்னுடைய நன்றியைக் காணிக்கையாகச் சமர்ப்பித்து, என்னுடைய கன்னிப் பேச்சைத் துவக்குகின்றேன்.

ஒரே குடும்பத்தில் பிறந்த என்னுடைய சகோதரரையும் தோழமைக் கட்சியின் சார்பாக நாடாளுமன்ற உறிப்பினராக்கி, எந்தக் குடும்பத்திற்கும் இல்லாத பெருமையை எங்கள் குடும்பத்திற்கு புரட்சித் தலைவி அவர்கள் அளித்ததற்காக எங்களுடைய குடும்பத்தின் சார்பாகவும், எங்களுடைய வயோதிகத் தாயார், தந்தையார் சார்பாகவும் அவருடைய பொற்பாதங்களிலே நன்றியைக் காணிக்கையாகச் சமர்ப்பிக்கிறோம். என்னுடைய தாயார் அவர்கள் வயதான காலத்தில்கூட, புரட்சித் தலைவி அவர்கள் பல்லாண்டுக் காலம் வாழ வேண்டுமென்பதற்காக ஒரு அணையா தீபத்தை வீட்டிலே ஏற்றி வருகிறார் என்பதையும் இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

எங்களைப் போன்றவர்களெல்லாம் இந்த மாமன்றத்திலே பேச வாய்ப்பு கிடைக்குமா என்று எண்ணியிருந்த நேரத்தில், எனக்கும் இந்த மாமன்றத்தில் பேச வாய்ப்பு அளித்த புரட்சித் தலைவி அவர்களுக்கு மீண்டும் நன்றி தெரிவித்து, அவர்களுடைய மானியத்திலே பேச வாய்ப்பு அளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து, என்னுடைய உரையை ஆரம்பிக்கிறேன்.

ஈகையிலே புரட்சித் தலைவர் அவர்களாய், அறிவாற்றலிலே மூதறிஞர் இராஜாஜியாய், 'சட்' என்று பதில் சொல்லுவதில் பேரறிஞர் அண்ணாவாய், மூட நம்பிக்கைகளை அகற்றுவதிலே தந்தை பெரியாரராய், தன்னலமற்று வாழ்வதில் பெருந்தலைவர் காமராஜராய், துணிச்சலாக நடவடிக்கை எடுப்பதில் அன்னை இந்திரா காந்தியாய், தன்னை எதிர்த்தவர்களையும் மன்னித்து அவர்களுக்கு உயர்வு அளிப்பதில் ஏசுபிரானாய், மொத்தத்தில் ஒரு தெய்வப் பிறவியாய் விளங்கிக் கொண்டிருக்கும் தமிழக



1991 செப்டம்பர் 26] [திரு. இரா. புதுநயினார் ஆதித்தன்]

முதல்வர் அவர்களுடைய (மேசையைத் தட்டும் ஒலி) 93 நாட்கள் ஆட்சியில் அவர்களுடைய குறைகளை எதிர்க் கட்சிகள் சொல்ல முடியாமல். இன்னும் நாட்களைத் தள்ளிக் கொண்டு போகும் நிலைமையைப் பார்க்கும்போது, எங்களுடைய புரட்சித் தலைவி அவர்கள் 100 நாட்கள் ஆட்சி செய்தால், இந்தத் தமிழகத்திலே புரட்சித் தலைவி அவர்களின் சுண்டுவிரல் காட்டுடவர்தான் இந்தச் சட்டமன்றத்திற்கு வர முடியுமென்ற நிலையை நாம் பார்க்க ...டியுமென்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இந்த நேரத்திலே புரட்சித் தலைவி அவர்களுக்கு ஒரு ...ணிவான வேண்டுகோளை நான் சமர்ப்பிக்கிறேன். நமது ...ரட்சித் தலைவர் அவர்கள் 'அண்ணா திராவிட முன்னேற்றக் ...ழகத்தை ஆரம்பிக்கின்றபோது அண்ணா திராவிட முன்னேற்றக் ...ழகம்' என்று ஆரம்பித்தார்கள். ஆனால், பின்னால் அதை 'அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்'' என்று ...அவர்கள் மாற்றி அமைத்தார்கள். அப்படி அவர்கள் மாற்றி ...அமைக்கின்ற காலகட்டத்தில் புரட்சித் தலைவர் பயந்து தேசிய ...கட்சிகள் பிராந்தியக் கட்சிகளை ஒழித்துவிடுமென்ற காரணத்திற்காக அப்படி ஆரம்பித்ததாகச் சொன்னார்கள். ஆனால், ...புரட்சித் தலைவர் அவர்கள் யாருக்கும் பயந்தது இல்லை என்பதை இந்தத் தமிழக மக்கள் நன்றாக அறிவார்கள். ஆனால், அவர்கள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை தேசியக் கட்சியாக ஆக்க வேண்டுமென்ற எண்ணத்தில்தான் ''அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்'' என்று மாற்றினார்கள். அந்த ...ஒப்பற்ற தலைவருடைய அந்த ஆசையை, பல தலைவர்களுடைய ...சாயலிலே வாழ்ந்து கொண்டிருக்கிற தெய்வப் பிறவியாகிய நீங்கள் நமது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை ஒரு தேசியக் கட்சியாக உங்கள் காலத்திலே வளர்க்க வேண்டும். அப்படி வளர்த்து அமைப்புகளை இந்தியா முழுவதும் நீங்கள் ஏற்படுத்துவீர்களானால், அடுத்த முறை தேர்தலிலே நீங்கள் பிரதம மந்திரியாக வருவீர்கள் என்பதை நான் இந்த மாமன்றத்திலே அடித்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இப்படிப்பட்ட ஒப்பற்ற தலைவியை பெற்றிருக்கிற நான், என்னுடைய தொகுதியில் பல புராதனக் கோவில்கள் இருக்கிற காரணத்தாலே. அவற்றைப் பற்றிச் சொல்லி, என் உரையை முடிக்க விரும்புகிறேன்.

பிற்பகல் 12-50

காஞ்சிப்பெரியவர் வாழ்ந்த சிவாலயம் ஒன்று என்னுடைய தொகுதியில் திருப்புடைமருதூரில் இருக்கிறது. அது நீண்ட காலமாகத் திருப்பணி செய்யப்படாமல் மிகவும் பாழடைந்த நிலையில் இருந்த காலத்தில் மாண்புமிகு ஜனாதிபதி அவர்களுடைய தலையீட்டினாலும் மாண்புமிகு உச்ச நீதிமன்ற நீதிபதி இரத்தினவேல் பாண்டியன் அவர்கள் தலையீட்டினாலும் பிர்லா அறக்கட்டளை சார்பாக சுமார் ஒரு கோடி ரூபாய் செலவில்

அந்தத் திருப்பணி நடந்துகொண்டிருக்கிறது. அந்தத் திருப்பணி முடிந்து, அந்தக் கோயில் கும்பாபிஷேகத்திற்கு தாங்கள் எனது தொகுதிக்கு வந்து சிறப்பிக்க வேண்டுமென்று தொகுதி மக்கள் சார்பாக உங்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

கோயில் நிலங்கள் சுமார் 6 இலட்சம் ஏக்கர் இருக்கிறது என்று கணக்கிலே பார்க்கிறோம். அந்த வருமானங்கள் 66 கோடி ரூபாய் வரவில்லை என்றும் நாம் பார்க்கிறோம். இந்தக் கணக்கை எல்லாம் நாம் முந்தைய வருமானத்தின் அடிப்படையில்தான் பார்க்கிறோம். அந்த நிலங்களை நீங்கள் மீண்டும் ஆக்கிரமித்து திருப்பி குத்தகைக்குக் கொடுத்தால் 600 கோடி ரூபாய்க்குமேல் வருமானம் வரும் என்று நான் இந்த மன்றத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் திருப்பணிக்காக எங்களுடைய தொகுதியிலே பல கோயில்கள் இருக்கின்றன. எல்லாம் உங்களுடைய காலகட்டத்தில் நிறைவேற்றப்பட வேண்டுமென்று கோரி, பல்லாண்டு, பல்லாண்டு, பல்லாயிரத்தாண்டு வாழ்ந்து, இந்தத் தமிழகத்திலே எந்த முதலமைச்சரும் சாதிக்காத சாதனைகளை எல்லாம் நீங்கள் சாதிக்க வேண்டுமென்று வேண்டி, விடைபெறுகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எம். தங்கவேல்.

திரு. எம். தங்கவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய தானைத் தலைவி, என்னுடைய இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்களின்கீழ் இயங்கி வருகின்ற இந்து அறநிலையத்துறை மானியக் கோரிக்கையில் பேச வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்து அறநிலையத்துறை 'இன்றைக்கு யாரிடம் இருக்கிறது? தமிழக மக்கள் எல்லாம் தங்களுடைய இதயதெய்வமாக ஏற்றிருக்கிற தமிழகத்தினுடைய காவல் தெய்வம் புரட்சித் தலைவி அவர்களிடம் இருக்கிறது. தேவர்களுக்கு எல்லாம் ஆபத்து வருகிற, சோதனை வருகிற காலகட்டத்திலே இறைவன் பல்வேறு உருவங்களில் அவதரித்து அந்தத் தேவர்களுக்கு வருகின்ற ஆபத்துகளைப் போக்கி வந்தார். அதைப்போல இன்றைக்கு தமிழகத்தினுடைய காவல் தெய்வம் புரட்சித் தலைவி தமிழக மக்களுக்கு ஏற்பட்டிருக்கிற சோதனையான காலகட்டத்திலே தமிழகத்தினுடைய காவல் தெய்வமாக, தமிழர்களுடைய இதய தெய்வமாக வந்திருக்கிறார்கள்.

நாம் கோயிலுக்குச் செல்லுகிறோம். சாமியை நேரடியாகப் பார்த்ததில்லை. சாமியை கும்பிடுகிறோம். சிலைகளைத்தான் பார்த்துக் கும்பிடுகிறோம். என்னைப் பொறுத்தவரையில் நடமாடும் தெய்வமாக, தமிழகத்தினுடைய நடமாடும்



ஆதிபராசக்தியாக வருகின்ற எங்களுடைய இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் பொற்பாதங்களைத் தொட்டு வணங்கி என்னுடைய உரையைத் தொடங்குகிறேன்.

இன்றைக்கு புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பின்னால் — கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம் என்று நம்முடைய முன்னோர்கள் சொன்னார்கள். ஆனால், அந்த முன்னோர்கள் கட்டிய கோயில்களில் எல்லாம் இன்றைக்கு விளக்குக்கூட ஏற்ற முடியாத சூழ்நிலை இருக்கிற இந்த நேரத்தில் – அந்தக் கோயில்களில் விளக்கு எரிய வேண்டும்; இடிந்த கோயில்களைச் செப்பனிட வேண்டும் என்பதற்காக புரட்சித் தலைவி அவர்கள் 'முதலமைச்சர் திருக்கோயில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதி' என்று தொடங்கி, கிட்டத்தட்ட 1.5 கோடி ரூபாய் வசூலாகி, அன்புள்ளம் கொண்டவர்களும், கொடை உள்ளம் கொண்டவர்களும் இன்றைக்கு வாரி வழங்கியிருக்கிறார்கள்.

பிற்பகல் 12-55

அந்த வகையில் புரட்சித் தலைவி அவர்களின் மேலான கவனத்திற்கு நான் ஒன்றைக் கொண்டுவரலாம் என்று நினைக்கிறேன். இன்றைக்கு தமிழகத்தில் பெரும் நிதி வருவாய் உள்ள முதல்நிலைத் திருக்கோயில்களைச் சுற்றியுள்ள நலிந்த கோயில்களை அந்த பெரும் திருக்கோயில்களோடு இணைத்து ஒப்படைக்கப்பட்டால், வருவாய் இல்லாமல் இருக்கும் அந்த சிறு கோயில்கள் பராமரிக்கப்பட வசதியாக இருக்கும். அதேபோல் இன்று தமிழகத்தில் பெரும் நிதி வருவாய் உள்ள திருக்கோயில்கள், பல தனியார் நிர்வாகத்தில் பரம்பரை பாத்தியம் என்ற பெயரில் உரிமையைப் பயன்படுத்தி அவர்கள் பயன்பெற்று வருகிறார்கள்.

எப்படி ஒரு காலத்தில் அன்னை இந்திராகாந்தி அவர்கள் மன்னர்களுடைய சாம்ராஜ்யத்தை, மன்னர் மானியத்தை இரவோடு இரவாக அவசரச் சட்டம் போட்டு ஒழித்தார்களோ, அதேபோல் இதயதெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில் கிராமங்களை அடிமைப்படுத்திக்கொண்டிருந்த கிராம மாணியக்காரர்களை அவசரச் சட்டத்தின் மூலம் ஒரே இரவில் விரட்டினாரோ, அதேபோல் புரட்சித் தலைவி அவர்கள் இன்றைக்கும் பெரும் முதலைகளிடமிருந்து அந்தக் கோயில்களை அவசரச் சட்டத்தின் மூலமாக இரவோடு இரவாக எடுத்து, அரசாங்கத்திற்கு வருமானத்தைத் தேடித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோயில்களுக்குச் சொந்தமான பல நிலங்கள் தனியாரிடம் நீண்டகாலமாக இருப்பவற்றை அரசே எடுத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே பேசிய கும்பகோணம் தொகுதி உறுப்பினர் திரு. ராமநாதன் அவர்கள் சமஸ்கிருதத்தில் பேசினார்கள். அது எங்களுக்குப் புரியவில்லை. இப்போது கோயில்களில் சமஸ்கிருதத்தில் அர்ச்சனை செய்கிறார்கள். தமிழில் அர்ச்சனை செய்யலாம் என்று இருந்தாலும் எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்று இருக்கும் நமது புரட்சித்தலைவி அவர்கள், தமிழிலே கோயில்களில் அர்ச்சனை செய்வதற்கு சட்டம் கொண்டு வரவேண்டுமென்று தாழ்மையான வேண்டுகோளை தங்கள் முன் வைத்து, பெரும்பாலும் சிவன் கோயில்கள்தான் அதிகம் பாழடைந்திருக்கின்றன. அந்தக் கோயில்கள் சரிவர பராமரிக்கப் படவில்லை. அவைகளைப் பராமரிக்க முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பல கோயில்களில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது போடப்பட்ட அறங்காவலர்களை இப்போது நீக்கிவிட்டு, தெய்வ பக்தி உள்ளவர்களை அறங்காவலர்களாகப் போட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ். வி. சண்முகம்.

திரு. எஸ். வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திறமையான நிர்வாகம், சரியான பராமரிப்பு, தேவையான திருப்பணிகள் இந்த அரசின் கொள்கையென மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அது குறித்து என்னுடைய மகிழ்ச்சியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். இரண்டு தினங்களுக்கு முன்பு மாண்புமிகு முதல்வர் அவர்கள் இரண்டு மணி நேரம் இந்த சபையிலே பேசியபோது, தமிழக மக்களால் முற்றும் துடைத்தெறியப்பட்ட சக்திகள் பயன்படுத்திய ஒரு வார்த்தையை நான்கு முறை அவர்கள் பயன்படுத்தியபோது, நாங்கள் எல்லாம் கலங்கிப் போனோம்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, இத்தகைய வார்த்தையை எத்தகைய சக்திகள் பயன்படுத்தினாலும் நீங்கள் பொருட்படுத்தத் தேவையில்லை. நீங்கள் சாதாரண முதலமைச்சர் அல்ல என்பதை தமிழ்நாடு அறிந்திருக்கிறது. ஏதோ சினிமாவில் நடித்துவிட்டு நேரடியாக முதலமைச்சராக வந்துவிடவில்லை. கடந்த மூன்றாண்டுகளாக தமிழ்நாட்டு அரசியலில் எந்த அரசியல்வாதியும் சந்திக்காத சோதனைகளையெல்லாம் சந்தித்துவிட்டுத்தான், ரத்தம் சிந்திவிட்டுத்தான் முதலமைச்சராக வந்திருக்கிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 1.00

ஆகவே நீங்கள் எந்தச் சக்திகளைப் பற்றியும் கவலைப்பட வேண்டியதில்லை. உங்களை யாரோ ஏதோ சொல்லலாம். நீங்கள் இந்தியப் பண்பாட்டின் பிரதிபலிப்பு என்பதை தமிழகம் அறிந்திருக்கிறது. அதேபோல தமிழ்நாட்டின் அரசியல்



158378

வரலாற்றின் தொடர்ச்சி என்பதையும் தமிழ்நாட்டின் மக்கள் அறிந்திருக்கிறார்கள். கடந்த காலங்களில் சிலரால் சொல்லப் பட்டதைப்போல எப்போதோ பொற்காலம் இருந்தது என்பதல்ல. உண்மையான பொற்காலமாக உங்கள ஆட்சிக்காலம் திகழும் என்பதை, தமிழ்நாட்டு மக்கள் உங்களுடைய நடை, உடை, பா னை, செயல் திறன் ஆகிய அத்தனை மூலமும் தெரிந்து வைத்திருக்கிறார்கள். ஆகவே முதலமைச்சர் அவர்களே, மறந்தும் கூட அத்தகைய வார்த்தைகளைப் பயன்படுத்திடக் கூடாது. எங்களைப் போன்றவர்களால் அதைத் தாங்கமுடியவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

''கோவில் கொடியவர்களின் கூடாரமாக ஆகிவிடக்கூடாது'' என்று முப்பது ஆண்டுகளுக்கு முன்பு வசனம் எழுதியவர்களுடைய அடிவருடிகளால்தான் இன்றைக்குக் கோவில்கள் கொள்ளையர்களுடைய கூடாரமாக மாறியிருக்கின்றன. உங்களுடைய முதல் கடமையாக அறங்காவலர்கள் என்ற பெயரில் ப்போது உள்ள கொள்ளையர்களை இன்றே விரட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ''சிவன் சொத்து குலநாசம்'' ஒரு பழமொழி தமிழ்நாட்டிலே இருக்கிறது. இருந்தாலும் அவர்கள் நாசமாவதாகத்தெரியவில்லை. செழித்து, செழித்து செழிப்போடு வளர்ந்துகொண்டே இருக்கிறார்கள். (சிரிப்பு). நான்கூட நண்பர்களிடம் சொன்னேன். தெய்வம் நின்றுகொல்லும் என்று சொன்னேன். தெய்வம் பின்னாலே கொல்லட்டும். அரசு இன்றே அவர்களை விரட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மீண்டும் அறங்காவலர்களை நியமனம் செய்யும்போது கட்சிக் கண்ணோட்டத்தில் நியமனம் செய்யாதிருக்கும்படி நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். கோவில்கள் என்பது புனித ஸ்தலங்கள். ஆன்மீகவாதிகளை, கடவுள் பக்தி உள்ளவர்களை எதிர்காலத்திலே கோவில் நிர்வாகங்களுக்குக் கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வசதி படைத்தவர்களை திருப்பணி வேலைகளுக்கு நீங்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏனெனில் வசதி படைத்தவர்கள்தான் கடவுளுக்குக் கொடுக்கிறார்கள். வசதி இல்லாதவர்கள் கடவுளிடம் கேட்கிறார்கள். முன்பிருந்த தி.மு.க.வினர் கேட்டதோடு எடுத்தும் சென்றுவிட்டார்கள். ஆகவே புதிய பார்வையோடு நிர்வாகம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கோவில் நிலங்களைப் பற்றியெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் பேசினார்கள். நம்முடைய இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் பழனிச்சாமி அவர்கள் கூட, கோவில் நிலத்தில் நான் உழைக்கிறேன், நஷ்டமாக இருக்கிறது என்றெல்லாம் சொன்னார்கள். எனக்குக் கூட கஷ்டமாகஇருந்தது. ஏன் இவர் அந்த நஷ்டத்தைக் கட்டி அழ வேண்டும் என்று எனக்குத் தெரியவில்லை. (சிரிப்பு). (மேசையைத் தட்டும் ஒலி). இன்றைக்குக் கல்வியமைச்சராக இருக்கிற...

211, 31 1991.2.1

திரு. ஜி. பழனிசாமி : தலைவர் அவர்களே,......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேசுகின்ற உறுப்பினர் 'யீல்ட்' பண்ணினால் நீங்கள் பேசலாம். அவர் 'யீல்ட்' பண்ண வில்லை.

திரு. ஜி. பழனிசாமி : நான் தப்பாகச் சொல்லவில்லை. நான் சொல்லிவிடுகிறேன். ஒரு வார்த்தை என்னை பேச விடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் பேசி முடிக்கட்டும். நேரமாகிவிட்டது. ஆகவே அவர் பேசி முடிக்கட்டும்.

திரு. எஸ்.வி. சண்முகம் ; உழுபவர்கள் நிலங்களைப் பற்றி யெல்லாம் இப்போது கல்வியமைச்சராக இருக்கக் கூடிய நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்பு அறநிலையத் துறை அமைச்சராக இருந்தபோது ஒழுங்குபடுத்துவதற்கு பெரிய முயற்சியைச் செய்தார்கள். குத்தகையை வசூல் செய்வதற்கு, அல்லது நிலங்களை உரியவர்கள் ஒழுங்காக பராமரிக்க முயற்சி யைச் செய்தார்கள். அதெல்லாம் தோல்வி கண்டுபோனதுதான் உண்மை. ஆகவே கோவில் நிலங்களை எல்லாம் உழுபவர்களுக்கே விற்றுவிட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு பழனிச்சாமி போன்றவர்களும் பணம் கொடுத்து எடுத்துக் கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன். ஏனென்றால் கோவில் நிலங்களிலிருந்து எந்த வருமானமும் கோவிலுக்கும் கிடைக்கவில்லை, அவருக்கும் நஷ்டம். (சிரிப்பு) ஆகவே, கோவில் நிலங்களை விற்று அதிலிருந்து வருகிற தொகைக்குண்டான வட்டியைக் கொண்டே கோவில்களை நடத்தலாம். ஆகவே கோவில் நிலங்களை இந்த அரசு விற்றுவிடவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அந்த நிலத்தால் யாருக்கும் பலன் இல்லை.

அதைப் போலவே ஆண்டவனுக்கு இப்போதுள்ள கோவில் நகைகளை அவ்வப்போது பராமரிப்பதற்கு, அந்த நகைகள் முழு மையாக இருக்கிறதா அல்லது குறைவாக இருக்கிறதா என்றெல் லாம் பார்க்க திருப்பதி தேவஸ்தானத்தில் பராமரிப்பது போல தமிழ்நாட்டிலும் கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன். ஏனெனில் இரண்டாண்டுகளுக்கு முன்பு இருந்தவர்கள் அதை என்ன செய்து விட்டுப் போயிருப்பார்களோ என்ற சந்தேகம் இருக்கிறது. அதை எடுத்துக்கொண்டு போயிருக்கிறார் களோ; என்றுஅவைகளைச் செக்-அப் பண்ணுவதற்கு ஒரு குழுவை அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சிறந்த கோவில் நிர்வாகத்தை உருவாக்கும்போது கோவில் ஊழியர்களைப் பராமரிப்பதிலும் இந்த அரசு கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அறங்காவலர்கள்



வருவார்கள், வந்தவுடனே அவருக்கென்று எட்டுப் பேரை இஷ்டத்திற்கு நியமித்துவிடுவார்கள். அதிலே நடக்கிறதெல்லாம் நடக்கும். அத்தகைய நிலைமையை மாற்றும் வகையில் கோவில் ஊழியர்களை நியமனம் செய்யும்போது இதர துறைகளில் நியமிப் பதைப் போல எம்ப்ளாய்மென்ட் எக்சேஞ் மூலமாக நியமனம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதைப் போல .. (மணி அடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; முடித்து விடுங்கள்.

பிற்பகல் 1.05

திரு. எஸ்.வி. சண்முகம் : கோயில்களில் பல முறைகேடுகள் நடைபெறுவதற்கு அங்குள்ள ஊழியர்கள்-அவர்கள் கோவிலிலேயே வருடக் கணக்கில் இருப்பவர்கள், காரணமாக இருக்கிறார்கள். அவர்களுக்கு டிரான்ஸ்பர் இல்லை. அனைத்து ஊழியர்களையுமே ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு மாற்றுகின்ற உரிமையும் இந்த அரசுக்கு இருக்கவேண்டும். அப்படி இருந்தால் தான் கோயில்களை எல்லாம் நன்கு பராமரிக்க முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; முடியுங்கள்.

திரு. எஸ்.வி. சண்முகம் : கோவில் ஊழியர்களின் கோரிக்கை களையும் நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எங்களுடைய மதுரை மாநகரம் ஒரு கோவில் நகரம். 'டெம்பிள் சிட்டி' என்று பெயர். அந்த கோவில் நகரில் கூடலழகர் பெரு மாளுக்குச் சொந்தமாக ஒரு தெப்பக்குளம் இருக்கிறது. அது டவுன் ஹால் ரோட்டுக்கு அருகில் இருக்கிறது. அந்த தெப்ப குளத்தை பயன்படுத்தி டில்லியிலே இருப்பதுபோல ஒரு 'பாலிகா பஜார்' அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு; முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. டி. சுதர்சனம்.

திரு. டி. சுதர்சனம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து அறநிலையத் துறை மானியக் கோரிக்கை மீது எனது கருத்துக்களைக் கூற வாய்ப்பு அளித்த தங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ்நாட்டிலே ஏராளமான சைவ, வைணவத் திருக்கோயில்கள் உள்ளன. அவைகளிலே சில பெரிய திருக்கோயில்களின் வருமானம் அதிகமாக உள்ளது. வருமானமே இல்லாத ஒருவேளை பூஜை கூட செய்ய இயலாத கோயில்கள் நிறைய இருக்கின்றன. தமிழக முதல்வர் இந்தத் துறையை தன் வசம் வைத்துக்கொண்டு இருக்கிற காரணத்தினால் இதன் மீது அவர் எவ்வளவு அக்கரை

[திரு. டி. சுதர்சனம்] [1991 செப்டம்பர் 26

கொண்டிருக்கிறார் என்பதை அறிய முடிகிறது. ஐந்தரைக் கோடி தமிழ் மக்களின் நெஞ்சங்களிலே நிறைந்து இருக்கின்ற முதல்வர் கோடானுகோடி ஏழை எளிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு அரும்பணி ஆற்றிக்கொண்டிருக்கும் தமிழக முதல்வர், நலிந்து இருக்கின்ற திருக்கோயில்களுக்காக, பராமரிப்பு நிதி என்ற பெயரிலே பல்வேறுவிதமான விமர்சனங்களுக்கு இடையே புரட்சித் தலைவி அவர்கள் பணம் திரட்டிக்கொண்டு இருக்கிறார்கள். இதற்காக எனது இதயப்பூர்வமான நன்றியையும், வாழ்த்துக்களையும் தமிழக பக்தகோடிகள் சார்பாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சில நூறு ஆண்டுகளுக்கு முன்னாலே திருக்கோயில்கள் சிறப்பாகப் பராமரிக்கப்பட வேண்டும் என்கிற எண்ணத்தில், தென்காசி, காசிவிஸ்வநாதர் கோயிலை நிர்மாணித்த பராக்கிராம பாண்டியன் அந்தக் கோயிலிருந்து பெயர்ந்துவிழும் கல்லை மறுபடியும் அதே இடத்தில் பொருத்துபவர்களின் பாதங்களை நான் தலைமேல் தாங்குவேன் என்று செப்பேடு எழுதி வைத்து இருக்கிறான். வருங்காலத்தில் அந்த சரித்திரம், அந்த பேரும் புகழும் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் கோயில் திருப்பணிகளைச் சிறப்பாகச் செய்வதற்காக வந்து அடைய வேண்டுமென்று விரும்புகின்றேன். தமிழகத்தின் காவல் தெய்வமான உங்களை குமரிமுனையிலிருந்து தமிழக எல்லை வரை இருக்கின்ற மிகச் சிறந்த சக்தி படைத்த மதுரை மீனாட்சி, காஞ்சி காமாட்சி, திருவேற்காடு கருமாரி, சென்னையிலே கற்பகாம்பாள் ஆகியோரின் அத்தனை சக்திகளையும் ஒருங்கே பெற்று, இந்த சட்டமன்றத்திலே பராசக்தியாக, கொடியவர்களையும், கொடியவர்களுக்குத் துணையாக இருப்பவர்களையும் அடக்குவதற்கு நீங்கள் இங்கே அமர்ந்து இருக்கிறீர்கள். தமிழகத்திலே 35,150 திருக்கோயில்கள் உள்ளன. ஆண்டவனை வழிபடுகின்ற அத்தனை பேரும் நீங்கள் செய்யும் நல்ல காரியங்களுக்காக உங்களை வாழ்த்துகிறார்கள். சில குறுகிய மனம் படைத்தவர்கள் விமர்சிக்கிறார்கள்.

'போற்றுவோர் போற்றட்டும்,
தூற்றுவோர் தூற்றட்டும்
ஏற்றதொரு கருத்தை எனது உள்ளம் சொன்னால்,
எதுவரினும் அஞ்சேன், அஞ்சேன்,'

என்ற கொள்கையில் நம்பிக்கை உள்ள மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் திருக்கோவில் நிர்வாகத்திலே நடைபெறும் ஊழல்களை ஒழித்துப் புதிய பொலிவோடும், வலிவோடும் ஆக்குகின்ற முயற்சிகளை நான் வரவேற்கிறேன்.

'ஆலயம் என்றால், ஆன்மா லயிக்கும் இடம்', இதனால்தான் முன்னோர்கள் தினமும் கோயிலுக்குச் சென்று ஆண்டவனை வணங்கினார்கள். கோயில் குளத்திலே குளித்து சுத்தமாகி,



1991 செப்டம்பர் 26] [திரு. டி. சுதர்சனம்]

வேம்பும் அரசும் இணைந்து நிற்கும் இடத்திலே அமர்ந்து இருக்கும் பிள்ளையாரை பெண்கள் சுற்றி வந்தால் பிள்ளைப்பேறு உண்டாகும் என்று நம்பினார்கள். அதைப் பலர் கேலியும் கிண்டலும் செய்தார்கள். இன்று அவர்களே பிள்ளையாரையும் சுற்றி வந்து, இம்மரங்களின் தென்றல் சுவாசிப்பதற்கு நல்லது என்று விஞ்ஞானிகள் கூறுவதாக சமாதானம் செய்கிறார்கள். இன்று கடற்கரையிலே பலர் உலாவுகிறார்கள்; ஏனென்று கேட்டால் எனக்கு சக்கரை நோய்; அதனால் வைத்தியர் சொன்னார் என்று கூறுகிறார்கள். ஆனால் இதையேதான் பெரியோர்கள் கோயில்களிலே வெளிப்பிரகாரம், உட்பிரகாரம் என்று சுற்றினார்கள். முருகக் கடவுளை குன்றின் மீது வைத்து, மலை ஏறி இறங்கி ஆண்டவனை வழிபடுவதுதன் வாயிலாக நமது உடலுக்கு நல்லது என்று கூறினார்கள். அந்தக் காலத்திலே கோயிலைக் கட்டியவர்கள் தங்களைப் பெருமைப் படுத்திக் கொண்டதில்லை. பக்தர்கள் நடந்துவரும் படிக்கட்டுகளுக்குப் பக்கத்திலே கைகளைக் கூப்பியபடி படுத்தவண்ணம் செதுக்கப்பட்டு இருக்கும் அவர்களின் உருவம், இதையே ஆழ்வார்கள் கூட

'படியாய் கிடந்து உன் பவழவாய் காண்பேன்'

என்று பாடி மகிழ்ந்தார்கள். ஓடாத தேரை எல்லாம் ஓட்டியதாக விளம்பரம் செய்கிறவர்கள், கோயில் கொடியவர்களின் கூடாரமாக ஆகிவிடக் கூடாது என்று வசனம் எழுதியவர்கள், அவர்களின் ஆட்சியின்போது பல கொடிய செயல்களைச் செய்து இருக்கிறார்கள். உதாரணமாக, வ.உ. சிதம்பரனார் மாவட்டம் உடன்குடி வட்டாரம், செட்டியார்முத்து கிராமத்திலே அமைந்துள்ள சிதம்பரேஸ்வரர் கோயிலில் கடந்த ஆண்டு ஆகஸ்டு 8-ம் தேதி கோயில் குரு பூஜை விழாவும், 11 ஆம் தேதி படைப்பு காட்சி விழாவும், 28–ஆம் தேதி முதல் செப்டம்பர் 1 ஆம் தேதி முடிய 4 நாட்களுக்குக் கொடை விழா நடத்தவும் மேற்படி கிராம மக்கள் தீர்மானித்து இருந்தார்கள். திடீரென்று அறநிலையத்துறை அமைச்சரிடமிருந்து கோயில் நிர்வாகத்தாருக்கு ஒரு தந்தி வந்தது. அந்த தந்தியின் பேரில் அறநிலையத்துறை ஆய்வாளர் அத்தனை பொறுப்புகளையும் பிடுங்கி தி.மு.க. செயலாளரான ஒத்தையாண்டி என்பவருக்கு வழங்கப்பட்டது. எப்படியெல்லாம் தி.மு.க. ஆட்சியில் கோயில் நிர்வாகம் தலையிட்டது என்பதற்கு இது ஒரு உதாரணம்.

பிற்பகல் 1-10

கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் 10 ஆம் தேதி தி.மு.க. ஆட்சியில் தஞ்சை மாவட்டம், கும்பகோணத்திலே இருக்கிற சங்கர மடத்திலே சில நாஸ்திகர்கள் புகுந்து பெரிய தாக்குதலை நடத்தினார்கள். அங்கேயுள்ள வேதபாராயண புத்தகங்கள் தீக்கிரையாக்கப்பட்டன. வேத விற்பன்னர் ரங்கநாத அய்யங்கார் அவர்கள் தாக்கப்பட்டார்கள். மடம் பெரிய அளவில் பாழ்படுத்தப்பட்டது. அதைப்போல கடந்த ஆண்டு மே மாதம் 18ம் தேதி

[திரு. டி. சுதர்சனம்] [1991 செப்டம்பர் 26

வெள்ளிக்கிழமை, தஞ்சை மாவட்டம் நீடாமங்கலம் திரௌபதி அம்மன் கோவிலில் பூஜை முடிந்து திரும்பி வரும்போது ரங்கநாதன் குருக்களையும், அவரது மகன் ரவிச்சந்திரனையும் மடக்கி, அடித்து பூணூலை அறுத்து இருக்கிறார்கள். அதே தஞ்சை மாவட்டம் கும்பகோணம் அருகில் உள்ள நாச்சியார் கோவிலில் கடந்த ஆண்டு ஜனவரி மாதம் 22-ஆம் தேதி 60 வயது முதிர்ந்த கோபால கிருஷ்ண அய்யர் அவரது வீட்டில் அவரையும் அங்கேயிருந்த 25 வயதுள்ள சாமிநாதன் என்பவரையும் உள்ளே புகுந்து நாஸ்திகர்கள் பூணூலை அறுத்து மிகப் பயங்கரமாக தாக்கியுள்ளனர். இவைகள் அனைத்தும் பத்திரிகைகளில் வந்துள்ளவை. இவை தமிழக மக்களை மிகவும் பாதித்துள்ளது. இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறா வண்ணம் தமிழக முதல்வர் அவர்கள் தகுந்த நடவடிக்கையெடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து கோவில்கள் வளர்ச்சிக்கு எனக்கு தெரிந்த ஒன்றிரண்டு யோசனைகளைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு கோவில் நிலங்கள் மற்றும் நகரங்களில் உள்ள வீட்டு மனைகளை பலர் ஆண்டாண்டு காலமாக அனுபவித்து வருகிறார்கள். ஆனால் ஒழுங்காக வாடகை தருவதில்லை. அந்த வகையில் பல கோடிக் கணக்கான ரூபாய் நிலுவையில் இருக்கிறது. என்னுடைய தொகுதியான பூவிருந்தவல்லியில் காஞ்சி வரதராஜபெருமாளுடன் தினம் தினம் பேசிய திருக்கச்சிநம்பி கோவில் உள்ளது. அந்தக் கோவிலுக்கு சுமார் 110 ஏக்கர் நிலம் பூவிருந்தவல்லி பைபாஸ் ரோடில் உள்ளது. ஒரு ஏக்கர் நிலத்தின் மதிப்பு 10 இலட்சம் ரூபாய். அதன் மொத்த மதிப்பு 10 கோடி ரூபாய். இன்றைக்கு அந்த கோவில் தினப்பூஜை செய்வதற்கு கூட வருமானம் இல்லை. கோவில் திருக்குளத்தில் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் ஒருவர் மாடி வீடு கட்டிக் கொண்டிருக்கிறார். அதை தமிழக முதல்வர் அவர்கள் புரட்சித் தலைவி அவர்கள் உடனே அதை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திருநின்றவூர் ஸ்ரீ பக்தவச்சலப் பெருமாள் கோவிலுக்கு 500 ஏக்கர் நிலம் உள்ளது. அங்கேயும் கற்பூரம் ஏற்றக் கூட காசு இல்லாத நிலை இருக்கிறது. ஆழ்வார்கள் அவதரித்த திருமழிசையில் ஜகன்னாதப் பெருமாள் கோவிலுக்கும், திருமழிசை ஆழ்வார் கோவிலுக்கும் 175 ஏக்கர் நிலம் உள்ளது. அன்று அங்கே ஆண்ட அரசன் தன்னைப் புகழ்ந்து பாடச் சொன்னபோது அதை மறுத்ததன் காரணமாக அரசன் அவரை நாடு கடத்தினான். அதனால் வெகுண்ட திருமழிசை ஆழ்வார் பெருமாளை நோக்கி,

'கணிகண்ணன் போகின்றான் காமரு பூங்கச்சி மணிவண்ணா
நீ கடத்த வேண்டாம் துணிவுடைய செந்நாப்புலவன்
சொல்கின்றேன் நீயும் உந்தன் பைநாகப் பாய் சுருட்டிக்
கொள்'



1991 செப்டம்பர் 26] [திரு. டி. சுதர்சனம்]

என்ற பாசுரம் பாடி பெருமாளையே தன்னுடன் அழைத்துக் கொண்டு ஊரை விட்டுச் சென்றார். அப்படிப்பட்ட அழகுமிக்க பெருமாளுக்கு படைக்க நைவேத்தியம் செய்ய அரிசி வாங்க கூட்டுறவுச் சங்கக் கடையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

என்னுடைய தொகுதியில் கோவில் குத்தகையை மாற்றி தருவதற்கு ஏக்கர் ஒன்றுக்கு 30 ஆயிரம், 40 ஆயிரம் என்று ரூபாய்களை சுருட்டிக் கொண்டிருக்கிறார்கள் அதிகாரிகள். பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த காஞ்சிபுரத்தில் 108 சிவன் கோவில்களும், 18 விஷ்ணு கோவில்களும் இருக்கின்றன. அங்கே ஏழை பணக்கார சுவாமிகள் இருக்கின்றார்கள். அந்தக் கோவில்களைப் பற்றி 'அழிந்த கோவில்கள்' என்ற தலைப்பின் கீழ் மக்கள் குரல் நாளேட்டில் 23–9–91 அன்று வெளியிடப்பட்டுள்ளது. அந்தக் கட்டுரையில் பூரத்தாழ்வார் சன்னதி, புண்ணிய கோடீஸ்வரர் சன்னதி, உலகளந்த பெருமாள் கோவில், சென்னை அருகில் உள்ள திருவான்மியூரில் உள்ள மருந்தீஸ்வரர் ஆலயம் ஆகிய இடங்களில் உள்ள கோவில் நிலங்கள் கொள்ளையடிக்கப்பட்ட விவரம் இருக்கிறது.

தஞ்சை மாவட்டம் வேதாரண்யத்தில் மறைகாட்டீஸ்வரன் கோவில் இருக்கிறது. அதற்கு 12 ஆயிரம் ஏக்கர் நிலம் இருக்கிறது. அங்கே 15 மாத காலமாக ஊழியர்களுக்கு சம்பளமே கொடுக்கவில்லை என்று சொல்கிறார்கள். இதற்கு என்ன காரணம் என்று கேட்கிறபோது இந்திய குடியாட்சி வந்த பின்னும், அரசியல் சாசனம் அமலுக்கு வந்த பின்னும், 19 ஆம் நூற்றாண்டின் முறைப்படி யாழ்ப்பாணம் பரணி ஆதீனம் என்ற இல்லாத ஒரு ஆதீனத்தை, லெட்டர் பேப்பரில் வாழும் இலங்கை ஆதீனம் நியமிக்கிற அறங்காவலர்கள் நிர்வகிக்கிறார்கள். இதனை மக்கள் வெறுக்கிறார்கள். ஒத்துழைக்க மறுக்கிறார்கள். இதைச் சட்டப்பூர்வமாக மாற்றி இந்தியத் தமிழர்கள் நிர்வகிக்க தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழக முதல்வர் அவர்களை நான் கேட்டுக்கொள்வதெல்லாம் உடனடியாக தமிழக திருக்கோவில்களில் இருக்கும் அறங்காவலர்களை நீக்கிவிட்டு, கடவுள் பக்தி உள்ளவர்களை, நல்லவர்களை, நாணயமானவர்களை, கட்சி பாகுபாடின்றி நியமிக்க வேண்டும். கோவில் நிலங்களை வைத்துக் கொண்டு குத்தகை செலுத்தாதவர்களிடமிருந்து நிலங்களைப் பிடுங்கி நல்லவர்களுக்கு குத்தகைக்கு விடவேண்டும். அல்லது அந்த நிலங்களை பொது ஏலத்தில் விற்று அதில் கிடைக்கும் பணத்தை வங்கிகளில் டெபாசிட் செய்யவேண்டும். சென்னை மற்றும் நகர்ப்பகுதிகளில் உள்ள கோவில் நிலங்களுக்கு குறைந்த வாடகை நிர்ணயம் செய்துள்ள போதிலும், குத்தகைதாரர்கள் வாடகை தராமல் ஏமாற்றி வருகிறார்கள். அப்படி ஏமாற்றி வருகிறவர்களை

உடனடியாக காலி செய்யவேண்டும். வாடகை நிர்ணயம் செய்யும்போது மாநகராட்சி அல்லது நகராட்சி வரி விதிப்பில் 20 சதவீதத் தொகையை தரை வாடகையாக நிர்ணயம் செய்ய வேண்டும், இதற்கு தேவையானால் இந்தக் கூட்டத்தொடரிலேயே ஒரு அவசரச் சட்டத்தைக் கொண்டுவந்து, நிறைவேற்ற வேண்டும்.

பிற்பகல் 1-15

ஆலயத்திற்குச் சேரவேண்டிய பாக்கிகளை வசூல் செய்ய, சிவில் கோர்ட்டுகளுக்கும், நிலக்குத்தகைகளை வசூல் செய்ய, வருவாய் கோர்ட்டுகளுக்கும் செல்லவேண்டியதாக உள்ளது. இதனால் காலதாமதம் ஏற்படுகிறது. ஆலயங்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளை விசாரித்து, பாக்கிகளை வசூல் செய்ய, தனியாக அறநிலையத்துறைக்கு என்று சிறப்பு கோர்ட் அமைக்கப்பட வேண்டும்.

அறநிலையத்துறை சட்டப் பிரிவு 101–ல் மாற்றம் செய்யப்படவேண்டும். பொறுப்புகளை, புதிய அறங்காவலர்களிடம் ஒப்படைக்காமல் ஏமாற்றும் பழைய அறங்காவலர்களை, கண்டிக்க, தண்டிக்க அறநிலையத்துறை அதிகாரிகளுக்கு அனுமதி வழங்க வேண்டும். இதுபோல், ஆந்திர மாநிலச் சட்டம் 1960–ல் 91–வது பிரிவிலும், ஒரிசா மாநிலச் சட்டம் 76–வது பிரிவிலும், ராஜஸ்தான் சட்டம், 1950 ஆண்டு, 76–வது பிரிவிலும் உள்ளது. ஆகவே ஆலய நிதியை, பொதுநிதி என்று அறிவிக்கவேண்டும். அப்போதுதான் கையாடல்கள் செய்கின்றவர்களை கிரிமினல் சட்டத்திலே கைது செய்து நடவடிக்கை எடுக்க முடியும். பல்வேறு காலங்களில் அரசு சட்டத்திருத்தம் செய்துள்ளது. ஆனால் 1960 ஆம் ஆண்டுக்குப் பிறகு சட்டத்திருத்தங்கள் செய்யவில்லை. உடனே தற்போது உள்ள நிலைமைக்கு ஏற்ப, அறநிலையத்துறை சட்டத்தைத் திருத்த, தமிழகத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று இந்த நல்ல நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

கோயில்களிலே பணிபுரியும் பணியாளர்களை அரசு ஊழியர்களாக அங்கீகரித்து அவர்களுக்கு சம்பள உயர்வு கொடுக்க வேண்டும். நம்முடைய நாட்டிலே இருக்கிற, சிறந்த கோயில்களைப் பற்றிய விவரங்களை ஆங்கிலத்திலே அழகிய புத்தகங்களாக சிறிய வடிவிலே அச்சடித்து, வழங்க வேண்டும். படித்து வேலை கிடைக்காமல் உள்ள பட்டதாரி இளைஞர்களுக்கு நமது கோயில்களைப் பற்றிய பயிற்சி அளித்து, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு கைடுகளாக நியமிக்கவேண்டும்.

எனது தொகுதியில் உள்ள அருள்மிகு திருவேற்காடு கருமாரி அம்மன் கோயிலுக்கு தேவையான பணம் உள்ளது. தேவையான நிலம் உள்ளது. உடனடியாக அந்தக் கோயிலின் சார்பா ஒரு பொறியியல் கல்லூரியைத் துவங்கவேண்டும் என்று தமிழ் முதல்வர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.



அர்ச்சகர்கள் பதவிகளுக்கு எல்லா ஜாதிகளைச் சேர்ந்தவர்களும் பணியாற்றும் வகையிலே ஆகம விதிகளில் பயிற்சி அளித்து, அர்ச்சகர்களாக நியமிக்க வேண்டும். தேவைப்பட்டால் அதற்கான தனிப் பயிற்சிப் பள்ளியை அமைக்கவேண்டும்.

கடைசியாக, சிறுசிறு கோயில்களில் எல்லாம் விளக்குகள் எரிந்து கொண்டிருக்கின்றன. அந்த விளக்குகளுக்கு மின்சாரத் துறை கமர்சியல் டாரிப் போடுகிறார்கள். எனவே இதை டொமஸ்டிக் டாரிப்–ஆக மாற்றித் தரவேண்டும்.

கோயில் பணத்தைக் கொள்ளை அடித்துவரும் ஊழல் அதிகாரிகள் எவ்வளவு பெரிய பதவியில் இருந்தாலும், அவர்களைக் கைது செய்து, அவர்களுடைய சொத்துக்களைப் பறிமுதல் செய்ய வேண்டும். அவர்களுக்கு உறுதுணையாக உள்ள அரசியல்வாதிகள் மீதும், அவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும், தயவுதாட்சண்யம் பாராமல் கடுமையான நடவடிக்கையை, தமிழக முதல்வர், புரட்சித் தலைவி அவர்கள் எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இன்னும் பல்வேறு செய்திகளைச் சொல்ல ஆவல் இருந்தாலும், நேரத்தின் அருமை கருதி, நீங்கள் திருக்கோயில்கள் நலம் பெற, ஆற்றிவரும் பணிகள் சிறந்திடவும் உங்கள் புகழ் ஓங்கி உலகளந்து உத்தமர்போர் பாடி, இதன் காரணமாய் தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரிப் பெய்து, ஓங்குபெறும் செந்நெலொடு கயலுகல, வாங்கக்குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்கள்போல், நீங்காத செல்வங்கள் பெற்று, இந்த நாட்டிலேயிருக்கிற பல ஆயிரக்கணக்கான விளக்கேற்ற இயலாத கோயில்களுக்கு விளக்கேற்றும் வகையிலே நீங்கள் காரியங்களை ஆற்றிடவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்த வாய்ப்பினை அளித்த தங்களுக்கு நன்றி கூறி அமர்கிறேன். என்னுடைய சார்பாக கோயில் நிதிக்காக (குறுக்கீடு) இங்கே எல்லோரும் சொன்னார்கள், என்னுடைய சார்பாக, 25 ஆயிரம் ரூபாயை அளிக்கிறேன். (மேசையைத்தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகக் கோயில்கள் தொன்மையானவை. அவை தெய்வீக வழிபாட்டு ஸ்தலங்கள் மட்டுமின்றி, தமிழர் தம் பண்பாட்டுச் செழுமையினையும், வரலாற்றுச் சிறப்பினையும் நுண்கலை ஆற்றல்களையும், நமக்கு இன்றைக்கும் தெளிவாக எடுத்துரைக்கும் அரிய செல்வங்கள்.

தமிழகத்தின் முக்கியத் திருக்கோயில்களை ஒரு வலம் வந்தாலே, தமிழக வரலாற்றுப் பின்னணியை நன்கு அறிந்து கொள்ள முடியும். தமிழகத் திருக்கோயில்கள் ஒவ்வொன்றும், நம் முன்னோர்கள் நமக்கு விட்டுச் சென்றுள்ள இழக்கவொண்ணா கலைப் பொக்கிஷங்கள்.

தொன்மையான சரித்திரப்புகழ் பெற்ற நமது சமூகத்தின் பண்பாட்டு நிலைக்களன்களாகவும், நாகரிகத்தின் சின்னமாகவும், வரலாற்றுப் பெட்டகமாகவும், தமிழ்நாட்டுத் திருக்கோயில்கள் விளங்கி வருகின்றன. பண்டைக்காலத்தில் வாழ்ந்து வந்த அனைத்து மக்களின் உழைப்பு மற்றும் முயற்சி, சேவையின் உருவாகவே அவை, தோன்றி வளர்ந்துள்ளன. காலம் காலமாக, நமது கலாச்சாரக் கருவூலமாக பாதுகாக்கப்பட வேண்டிய கோயில்களை நாம் சீரழிந்த நிலையில் சிதிலமாக காணுகின்ற பின்னணிக்குத் தள்ளப்பட்டுள்ளோம். ஆனால் அவைகளை நாம் சரியான முறையில் பராமரித்துக் கொண்டிருக்கிறோமா என்ற கேள்விக்கு 'இல்லை' என்ற பதிலைக் கொடுக்க வேண்டிய கட்டாயத்தில் தமிழகம் இதுவரை இருந்தது. கோவில்களைப் பொறுத்தவரை நமது கவனமும் பாதுகாப்பும் போதுமானதாக இல்லாத காரணத்தினால் அவைகளின் பழம் பெருமை ஊனப்படுத்தப்பட்டு, அவற்றிற்குள் இருந்த கலைச் செல்வங்கள் களவாடப்பட்டு பல்வேறு சமுதாய நல தத்துவங்களுக்கு தாய் வீடாக இருந்த அதன் தனித் தன்மை சீரழிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தின் வருங்கால சந்ததியினருக்கு வழி வழியாக வந்த இக்கலைச் செல்வங்களை நன்முறையில் பாதுகாத்து அளிக்கவேண்டுமென்ற மாபெரும் கடமையை உணர்ந்த இந்த அரசு அவற்றினைப் பராமரிக்க ''முதல்வரின் கோவில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதி''யினைத் தொடங்கியது. பள்ளிச் சிறுவர் முதல் பெரியோர்கள் வரை அனைவரும் இந்நிதிக்கு இதுவரை ரூ. 1.51 கோடியை வாரி வழங்கியுள்ளனர் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் இம்மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் அனைவருக்கும் என் உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளும் இதே நேரத்தில் இந்த மாமன்றத்தில் இன்று இந்தக் கோயில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதிக்கு நன்கொடை அளிப்பதாக அறிவித்துள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சுதர்சனம் அவர்களுக்கும், திரு. என்.எஸ். பழனிசாமி அவர்களுக்கும். திரு. தணிகை பாபு அவர்களுக்கும் எனது உளங்கனிந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–20

இறை உணர்வு மத உணர்விற்கு அப்பாற்பட்டது. நம் தமிழகக் கோவில்கள் இம்மாபெரும் தத்துவத்தினை நமக்கு நடைமுறையில் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன. நமது மக்களுக்கு பாதுகாப்பு அரணாக, பாடம் கற்றுத் தருகிற பல்கலைக் கழகமாக, மன அமைதி வழங்குகிற தியான மண்டபமாக, நம்முடைய உயிரில் கலந்து, ஊனில் கரைந்துள்ள வாழ்க்கை தத்துவமாக அவை இருந்து வருகின்றன. ஜாதி மதம் என்பவை பிறப்பால் ஏற்பட்ட மனிதனால் உருவாக்கப்பட்ட பிரிவுகளேயன்றி, இறை உணர்வினைக் கட்டுப்படுத்தவும், மனித நேயத்தினை சிதைக்கவும் அவை உருவாக்கப்படவில்லை. இந்த அடிப்படைக் கொள்கையை நன்கு உணர்ந்துள்ள இந்த அரசு, தமிழகத்



தினை என்றும் போல் இன்றும் பண்பாட்டு நெறிமுறைகளின் உறைவிடமாக ஆக்க, கோவில்களை பராமரிக்கும் புனித பயணத்தினை மக்கள் ஆதரவோடு தொடங்கியுள்ளது. இந்த நல்ல துவக்கத்தோடு, இந்து சமய அறநிலையத் துறையின் மேம்பாட்டுக்கு உதவும் எங்கள் அரசின் கொள்கை விளக்கங்களை இன்று உங்களுக்கு அளிப்பதில் பெருமையடைகிறேன்.

தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகத்தின் மானியக் கோரிக்கை எண் 12-ன் மீது கொள்கை விளக்கக் குறிப்பு சட்டமன்றப் பேரவையில் வைக்கப் பட்டுள்ளது. இக்கொள்கை விளக்கக் குறிப்பில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் அமைப்பு, ஆலய நிர்வாக வாரியம் அமைத்தல், சமய நிறுவனங்கள் மற்றும் கட்டளைகள் நிர்வாகம், உலோகத் திருமேனி பாதுகாப்பு, திருக்கோயில்களின் திருப்பணி மற்றும் மேம்பாடு. முதலமைச்சரின் கோயில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதி மற்றும் ஆலய ஊழியர்கள் நலன் ஆகிய முக்கிய அம்சங்கள் பற்றி விளக்கப்பட்டிருக்கின்றன.

எங்கள் தேர்தல் அறிக்கையில், இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் ஆளுகைக்கு உட்பட்ட கோயில்களைத் தவிர தமிழகம் எங்கும் உள்ள கிராமங்களில் சிறுசிறு புராதனக் கோயில்கள் பல்லாயிரக் கணக்கில் பராமரிப்பு இன்றி பாழ்பட்டு கிடக்கின்ற நிலையில் அவைகளை நன்கு பராமரித்து அவற்றின் அன்றாடப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்போம் என்று அறிவித் திருந்தோம். சிறப்புக்குரிய இக்கோயில்களின் பராமரிப்புப் பணி களையும் ஆலய நிர்வாகப் பணிகளையும் கவனிக்க தனியாக ஆலய நிர்வாக வாரியம் ஒன்று அமைக்கப்படும் என்றும் குறிப் பிட்டிருந்தோம். அதனை நிறைவேற்றும் வகையில் தமிழ்நாடு ஆளுநர் உரையில் தமிழகத்தின் புகழ்மிக்க பெரிய கோயில்களில் பராமரிப்பும், வழிபாடுகளும் முறையாக நடைபெறத்தக்க நட வடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அறிவித்திருந்தோம். அந்த அறிவிப்புக்கு செயல் வடிவம் கொடுத்து ஆலய நிர்வாக வாரியத்தை அமைக்க தற்போதைய 1959–ஆம் ஆண்டு இந்து சமய அறநிலைய சட்டத்திற்கு திருத்தம் ஒன்றை இந்தச் சட்ட மன்றக் கூட்டத் தொடரிலேயே அறிமுகப்படுத்த உள்ளோம் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இச்சட்டத் திருத்தத்தின் அடிப்படையில், புதிய நிர்வாக வாரியம் ஒன்று அமைக்கப்படும்.

அறிமுகப்படுத்தப்பட உள்ள இச் சட்டமுன் வரையில், ஆலய நிர்வாக வாரியத்தின் அமைப்பு, அவற்றின் அதிகாரங்கள், மற்றும் பணிகள், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் மற்றும் துணை ஆணையர் ஆகியவர்களின் அதிகாரங்கள், அரசின் அதிகாரங்கள் போன்ற முக்கிய அம்சங்கள் தெளிவாக குறிப் பிடப்பட்டுள்ளன.

பிற்பகல் 1-25

தமிழகத்தின் பண்பாட்டுமையங்களான ஆலயங்களின் புனிதத் தன்மை காக்கப்பட வேண்டும்; மரபுகள் கெடாத வகையில் திருக்கோயில்களின் நிர்வாகங்கள் சரியான முறையில் அமைந்து செயல்படவேண்டும்; பல்லாயிரக்கணக்கில் பராமரிப்பு இன்றி பாதிக்கப்பட்டுள்ள புராதனக் கோயில்கள் சிறப்பான முறையில் பராமரிக்கப்படவேண்டும்; அவற்றின் அன்றாடத் தேவைகள் பூர்த்தி செய்யப்படவேண்டும், என்ற எங்களுடைய எண்ணம் நாங்கள் அமைக்க இருக்கின்ற ஆலய நிர்வாக வாரியத்தின் மூலம் நிறைவேற்றப்படும் என்பதில் நம்பிக்கை கொண்டுள்ளோம். இந்து சமய அறநிலையத் துறையின் நிர்வாக அமைப்பு பற்றி நான் சில விளக்கங்களைக் கூற விரும்புகின்றேன். இத்துறையின் ஆளுகைக்கு உட்பட்ட திருக்கோயில்கள், மடங்கள், குறிப்பிட்ட அறக்கட்டளைகள் மற்றும் சமண மத அறநிலையங்கள் ஆகியவைகள் மொத்தம் 35,150 ஆகும். இத்துறை சென்னையை தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. இத்துறைக்குத் தலைவராக இந்திய ஆட்சிப் பணியைச் சார்ந்த அலுவலர் ஒருவர் ஆணையராக செயல்படுகிறார்.

இத்துறை 8 மண்டலங்களாக பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றும் ஒரு துணை ஆணையர் நிர்வாகத்தின் கீழ் இயங்கி வருகிறது. மேலும் இம்மண்டலங்கள் 17 கோட்டங்களாக பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு கோட்டமும் ஒரு உதவி ஆணையரின் நிர்வாகத்தின் கீழ் இயங்கி வருகிறது. தற்போது நம் மாநிலம், நிர்வாக வசதிக்காக 21 மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு இயங்கி வருகின்றது. மாவட்டங்களுடைய எண்ணிக்கை அதிகரித்த போதிலும் மாநிலம் முழுவதிலும் அறநிலையத் துறையைப் பொறுத்த வரை 8 மண்டலங்களாகவே இயங்கி வருகின்றன.

இந்த எட்டு மண்டலங்களில் குறிப்பாக சென்னை, சேலம் மற்றும் மதுரை போன்ற 3 மண்டலங்களில் திருக்கோயில்களுக்குச் சொந்தமான விலை மதிப்புள்ள நகர்ப்புற நிலங்கள் இருக்கின்றன. அங்கே நிர்வாகப்பணிகள் அதிகரித்துள்ளன. ஆலயங்கள் குறித்த வழக்குகளும் அதிகமான அளவுக்கு நிலுவையில் உள்ளன. மதுரை மற்றும் சென்னை மண்டலங்களில் புகழ்பெற்ற முக்கியத்துவம் வாய்ந்த திருக்கோயில்கள் பல உள்ளன. நாளுக்கு நாள் வருமானம் அக்கோயில்களில் பெருகி வருகிறது.

அத்துடன் சென்னை மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் உள்ள திருக்கோயில்களுக்கு சொந்தமாக, ஏராளமான சொத்துக்கள் உள்ளன. அவற்றின் விலை மதிப்பும் தற்போது மிகவும் உயர்ந்துள்ளது. அவற்றை உரிய முறையில் பயன்படுத்தி வருமானத்தைப் பெருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இக்காரணங்களை முன்னிட்டு சென்னை மற்றும் சேலம் மண்டலங்களிலிருந்து சில பகுதிகளைப் பிரிக்க வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டத்தில் வேலூரை தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய மண்டலமும்,



அதேபோன்று மதுரை மண்டலத்தை இரண்டாகப் பிரித்து பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்தில் சிவகங்கையை தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய மண்டலமும் அமைக்கப்படும்.

அறநிலையங்கள் அவைகள் பெறுகின்ற ஆண்டு வருமானத்தின் அடிப்படையில் தற்போது நான்கு வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு வகைப்படுத்தப்பட்ட அறநிலையங்களில் ரூ. 1 லட்சமும் அதற்கு மேற்பட்ட வருமானம் பெறுகின்ற திருக்கோயில்களுக்கு அறங்காவலரை தற்போது அரசு நியமித்து வருகிறது. ரூ. 50,000 லிருந்து ரூ. 1லட்சம் வரை வருமானம் பெறுகின்ற திருக்கோயில்கள், ரூ. 10,000-லிருந்து ரூ. 50,000 வரை வருமானம் பெறுகின்ற திருக்கோயில்கள், ரூ. 10,000க்கு கீழே வருமானம் பெறுகின்ற திருக்கோயில்கள் ஆகியவற்றிற்கு அறங்காவலர்களை நியமிக்கும் அதிகாரத்தை முறையே ஆணையர், துணை ஆணையர் மற்றும் உதவி ஆணையர் பெற்று இருக்கின்றனர். இம்முறையைப் பின்பற்றுவதால் நடைமுறைச் சிக்கல்கள் மற்றும் காலதாமதம் ஏற்படுகின்றன. இந்த முறை ஆலயங்களின் திறமையான நிர்வாகத்திற்கு நலம் பயப்பதாக இல்லாததாலும், நடைமுறைச் சிக்கல்களைத் தோற்றுவிப்பதாலும், பரம்பரை வழிமுறைச் சாரா அறங்காவலர்களை நியமிப்பதற்கு தற்போதைய நடைமுறையை மாற்றி அமைப்பது குறித்து, இந்த சட்டமன்ற கூட்டத்தொடரில் சட்டத்திருத்த மசோதா ஒன்று கொண்டு வரப்படும் என்பதை நான் அறிவிக்க விரும்புகிறேன். பரம்பரை வழிமுறைச் சாரா அறங்காவலர்களை நியமிப்பதற்கு கொண்டு வரப்படும் புதிய முறை சிறப்பான வகையில் செயல்படுவதாக அமையும். (மேசையைத் தட்டும் ஒலி).

திருக்கோயில்களில் திருப்பணிகள், பொதுமக்கள் நன்கொடை, அரசு மானியம், ஆணையரின் பொது நல நிதி, ஆலயங்களின் உபரி நிதி ஆகியவைகளிலிருந்து கிடைக்கின்ற நிதிகளின் மூலமாக மேற்கொள்ளப்படுகின்றன. திருப்பணிக்காக அரசு ஒவ்வொரு நிதி ஆண்டிலும் ரூ. 45 இலட்சம் ஒதுக்குகிறது. இந்த ஆண்டிலும் இதற்காக ரூ. 45 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதனால் 1985–86 ஆம் ஆண்டிலிருந்து 1990–91 வரை 322 திருக்கோயில்கள் பயன்பெற்றுள்ளன. இவ்வாண்டில் அதாவது 1991–92ல் 45 திருகோயில்களுக்கு அரசு மானியம் வழங்கப்படும்.

பிற்பகல் 1–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்; அவையின் முன் அனுமதியோடு அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

[1991 செப்டம்பர் 26

மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா; தலைவர் அவர்களே. தமிழக திருக்கோயில்களில் ஒவ்வொரு பசலி வரவு-செலவுத் திட்டத்திலும், வரவுத் தொகையில் 1 சதவிகிதம் ஆணையர் பொதுநல நிதிக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது. 1988-89லிருந்து 1991-92 வரை இந்நிதியின் மூலமாக பயனடைந்த கோயில்களின் எண்ணிக்கை 97 ஆகும். இதற்காக வழங்கப்பட்ட தொகை ரூ. 49.17 இலட்சம் ஆகும். தற்போது இந்நிதியில் கையிருப்பு ரூபாய் 16 இலட்சம் உள்ளது. இந்தத் தொகை தேவைப்படும் கோயில்களின் திருப்பணிகளுக்கு அளிக்கப்படும். உபரி நிதி உள்ள கோயில்களிலிருந்து 1988-89 ஆம் ஆண்டு 15 திருக்கோயில்களுக்கு ரூ. 31.27 லட்சமும் 1989-90 ஆம் ஆண்டு 26 திருக்கோயில்களுக்கு ரூ. 22.65 இலட்சமும் 1990-91 ஆம் ஆண்டு 14 திருக்கோயில்களுக்கு ரூ. 11.56 இலட்சமும் வழங்கப் பட்டுள்ளது. நடப்பாண்டு அதாவது 1991-92ல் கும்பகோணத்தில் வருகின்ற பிப்ரவரி மாதத்தில் கொண்டாடப்பட இருக்கின்ற மகாமகம் திருப்பணிக்கு ரூ. 12 இலட்சம் உபரி நிதி மாற்றத்திலிருந்து வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி). மேலும் அரசு மானியமாக மகாமகம் திருப்பணிக்கு ரூ. 12.50 இலட்சம் வழங்கப்படும். மேலும் இத்திருப்பணிக்கு நிதி தேவைப்பட்டால் முதலமைச்சர் திருக்கோயில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதியிலிருந்து வழங்கப்படும். (மேசையை தட்டும் ஒலி).

நலிவுற்ற திருகோயில்களில் குறைந்தபட்சம் ஒருகால பூஜை செய்வதற்காக நிதி வசதி உள்ள திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து ரூ. 5 கோடி நிதி மாற்றம் செய்து 1984-85 ஆம் ஆண்டு ரூ. 5 கோடி ஆலய மேம்பாட்டு நிதி உருவாக்கப் பட்டது. இத்தொகையிலிருந்து ஆண்டுதோறும் சுமார் ரூ.50 இலட்சம் வட்டி பெறப்படுகிறது. இதில் 50 சதவீதம் நலிவுற்ற திருக்கோயில்களில் ஒருகால பூஜை நடத்துவதற்கும், எஞ்சியுள்ள 50 சதவிகிதம் வருமானம் பழமையான திருக்கோயில்களின் திருப்பணிக்காகவும் செலவிடப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை 3,915 திருக்கோயில்களுக்கு ஒருகால பூஜை நடத்த ரூ. 132.04 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் மங்களாசாசனம் மற்றும் பாடல்பெற்ற 12 திருக்கோயில்களுக்கு ரூ. 25,000 வீதம் வைப்பு நிதி அளிக்கப்பட்டு அதன் வட்டியைக் கொண்டு இந்த திருக்கோயில்களில் ஒருகால பூஜை நிரந்தரமாக நடத்த ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. இந்த நிதியிலிருந்து திருப்பணிக்காக 1989-90லிருந்து இதுவரை 32 திருக்கோயில்களுக்கு ரூ. 195.10 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. தற்போது ஒருகால பூஜை நடத்துவதற்கு இத்திட்டத்தின் கீழ் தேவைப்படுகின்ற ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் ஆண்டொன்றுக்கு ரூ. 2,500 மட்டுமே வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டும் இத்திட்டம் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.



1991 செப்டம்பர் 26] [செல்வி ஜெ. ஜெயலலிதா]

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவில் உபரி நிதியிலிருந்து ரூ. 1 கோடிக்கு ஒரு நிலையான வைப்பு நிதி ஏற்படுத்தி அதன் வட்டி வருமானத்திலிருந்து நிதி வசதி இல்லாத திருக்கோயில் திருப்பணிக்காக அரசு அனுமதியுடன் ரூ. 10,000 நிதி உதவி வழங்கப்படுகிறது. இந்நிதி 1984-ல் தொடங்கப்பட்டது. இந்நிதி கிராமப்புற திருக்கோயில் திருப் பணிகளுக்கு வழங்கப்படுகிறது. இந்தத் தொகை தற்போது ரூ. 25,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. 1985-86 ஆம் ஆண்டி லிருந்து 1989-90 ஆம் ஆண்டு வரை 553 திருககோவில்களுக்கு ரூ. 54.43 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் 66 கிராமப்புற திருக்கோயில்களுக்கு ரூ. 16.50 இலட்சம் ஒதுக்கீடு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தற்போது துறையின் ஆளுகைக்குட்பட்ட 35,150 திருக் கோயில்கள் மற்றும் அறநிலையங்களில் 476 திருக்கோயில்களுக்கு ரூ. 7.10 கோடி மதிப்பீட்டில் திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும் 294 திருக்கோயில்களில் திருப்பணியை மேற்கொள்வதற்கு ரூ. 9.96 கோடி செலவாகும் என மதிப்பிடப் பட்டு அவற்றுக்கான நிர்வாக அனுமதியும் ஆணையர், அறநிலையத்துறை அவர்களால் வழங்கப்பட்டுள்ளது. இப்பணிகளை மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளிகள் பெறுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

பிற்பகல் 1.35

இந்து சமய அறநிலையத்துறை, திருக்கோயில்களுக்கு செய்ய வேண்டிய திருப்பணிகளைப் பற்றி ஒரு ஆய்வு நடத்தியுள்ளது. அந்த ஆய்வு மொத்தம் 14,920 திருக்கோவில்களுக்கு திருப்பணி செய்ய வேண்டிய அவசியம் இருப்பதாக தெரிவித்துள்ளது. இந்த திருக்கோவில்களின் பட்டியலில் சேர்ந்த 1,137 ஆலயங்களுக்கு திருப்பணி செய்வதற்கு ரூபாய் 28.57 கோடி தேவைப் படும் என்றும், பட்டியலில் சேராத 6,861 ஆலயங்களுக்கு ரூபாய் 24.14 கோடி தேவைப்படும் எனவும், 6688 சிறு ஆலயங்களுக்கு ரூபாய் 21.81 கோடி தேவைப்படும் என்றும்; ஆளுகைக்கு உட்படாத 234 திருக்கோவில்களுக்கு ரூபாய் 56 லட்சம் தேவைப்படும் என்றும் மதிப்பிடப்பட்டிருக்கிறது. எனவே திருக்கோவில்களின் பராமரிப்புக்கு மொத்தம் ரூபாய் 75 கோடி தேவைப்படும். இது அளவில் மிகப்பெரிய தொகையாக இருப்பதால் பொதுமக்கள், கொடையுள்ளம் படைத்தவர்கள் மற்றும் பொது நிறுவனங்கள் நிதியை வழங்கினால் திருப் பணிகளை மேற்கொள்வதற்கு உதவிகரமாக இருக்கும். இதற்காக ஒரு நீண்டகால திட்டம் வகுத்து இத்திருக்கோவில் களுக்கு திருப்பணியை மேற்கொள்ளுவதற்கு நடவடிக்கை எடுக்கலாம்.

இத்துறையின் கீழுள்ள திருக்கோவில்களைத் தவிர தமிழகம் எங்கும் கிராமங்கள் பலவற்றில் சிறு சிறு புராதனக் கோவில்கள் பல்லாயிரக்கணக்கில் பராமரிப்பு இன்றி பாழ்பட்டு கிடப்பது

என் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. அவற்றின் பராமரிப்புக்கு, அன்றாடத் தேவைகளுக்கு என உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அவற்றுக்குள்ள நித்திய பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படும் என தேர்தல் அறிக்கையில் ஏற்கனவே குறிப்பிட்டு இருந்தேன். இந்த அறிவிப்பை செயற்படுத்தும் வகையில் முதலமைச்சரின் திருக்கோவில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதி எனது நன்கொடையாக ரூ. 1,00,008 உடன் 2–8–91-ல் துவக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி).

ஆயிரக்கணக்கான பாழடைந்த நிலையிலுள்ள சிறு கோவில்களுக்கு திருப்பணிகள் வேலைகளை மேற்கொள்ளவும், பல கோவில்களுக்கு அன்றாட வழிபாடுகள் நடத்த ஏற்பாடு செய்யவும் அவற்றை பராமரிக்கவும் இந்த நிதியானது பயன்படுத்தப்படும். 25–9–91 வரை ரூபாய் 1.51 கோடி இந்த நிதியில் சேர்ந்துள்ளது. பொதுமக்கள், கொடையுள்ளம் படைத்தவர்கள், தொழில் அதிபர்கள், இன்னும் சமுதாயத்தில் இருக்கின்ற பலதரப்பட்ட மக்கள் அவர்களாகவே மனம் உவந்து நிதியை வழங்குகின்றனர்.

திருக்கோவில்களில் இருக்கும் பழமை வாய்ந்த உலோகத் திருமேனிகளை பாதுகாக்கும் நோக்கத்துடன் திருவாரூரில் அருள்மிகு தியாகராஜ சுவாமி திருக்கோவில் வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையத்தில் தற்போது 1,785 திருமேனிகள் வைக்கப்பட்டுள்ளன. இந்த மையத்திலிருந்து திருவிழாக் காலங்களில் தேவைப்படும் திருமேனிகள் எடுத்துச் செல்லப்பட்டு திருவிழாக்கள் முடிந்த உடன் மீண்டும் திரும்பப் பெறப்பட்டு பாதுகாப்பாக வைக்கப்பட்டு வருகிறது. இந்தத் திருமேனிகள் நல்லமுறையில் பாதுகாக்கப்படவும், அவற்றின் மீது அரிப்பு மற்றும் உலோக நோய்கள் ஏற்படாமல் இருக்கவும், 'மெட்டல் டிசீசஸ்' ஏற்படாமல் இருக்கவும், இந்த மையத்தினை குளிர் சாதன வசதி செய்ய 'ஏர்கன்டிஷன் செய்ய நடவடிக்கை எடுக்குமாறு ஆணையிட்டுள்ளேன். இப்பணி அடுத்த மாத இறுதிக்குள் முடிக்கப்படும்'

இந்த நேரத்தில், 1976 ஆம் ஆண்டு களவாடப்பட்டு லண்டனுக்கு கடத்தப்பட்ட பத்தூர் நடராஜர் உலோகத் திருமேனி பல ஆண்டுகள் வழக்கு நடைபெற்று நமக்கு சாதகமாக முடிவுற்ற பிறகு இங்கிலாந்து நாட்டில் இந்திய தூதராக பணிபுரியும் டாக்டர் சிங்வி அவர்கள் தாமே அதை சென்னைக்குக் கொண்டு வந்து நினைவுறத்தக்க விழாவில் என்னிடம் நேரில் வழங்கியதை உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். இத்திருமேனி தற்போது பாதுகாப்பு மையத்தில் வைக்கப்பட்டுள்ளது. இத்திருமேனி சுமார் ரூபாய் 7 லட்சம் மதிப்பீட்டில் [illegible] கட்டப்பட்டு வரும் அருள்மிகு விசுவநாத ஸ்வாமி



திருக்கோவிலில் பிரதிஷ்டை செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

திருக்கோவில்களில் திருட்டுக்களைத் தடுக்க காவலர்கள் நியமிக்கப்படுகின்றனர். முக்கிய திருக்கோவில்களில் திருடர்கள் எச்சரிக்கை மணியும் 'பர்க்ளர் அலார்ம்' மற்றும் விழிப்பு பதிவு கடிகாரங்களும் பொருத்தப்பட்டுள்ளன.

திருக்கோவில்களால் 5 கல்லூரிகளும், 10 மேல்நிலைப் பள்ளிகளும், 9 உயர்நிலைப் பள்ளிகளும், 2 பாலிடெக்னிக்குகளும், நடத்தப்பட்டு வருகின்றன. மற்றும் வேத பாடசாலை, தேவார பாடசாலை, தவில் நாதஸ்வர பள்ளி, காதுகேளாதோர் பள்ளி, சித்த மருத்துவமனைகள், முதியோர் இல்லங்கள், அன்பு இல்லங்கள் ஆகியவைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

பிற்பகல் 1.40 மணி

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி ஸ்வாமி திருக்கோவிலின் கீழ் ஆண்களுக்கென பராமரிக்கப்படும் பாலிடெக்னிக்குக்கு தேவையான கட்டிடங்கள் மற்றும் தொழில் கூடங்கள் கட்ட உலக வங்கியிடம் சுமார் 46.80 லட்சம் கடன்உதவி பெற்று பணிகள் நிறைவேற்றப்படும். இது தவிர பெண்களுக்கான பாலிடெக்னிக்கிற்குத் தேவையான கட்டிடங்கள் மற்றும் உபகரணங்கள் வாங்கவும் பாலிடெக்னிக்கை விரிவாக்குவதற்கும் ரூபாய் 75.90 இலட்சம் உலக வங்கிக் கடன்/உதவி பெற்று நடப்பு ஆண்டில் பணிகளைத் தொடங்க இருக்கிறோம். பெண்கள் பாலிடெக்னிக் தற்போது பழனி மலையின் அடிவாரத்தில் நடைபெற்று வருகிறது. அதை விரிவாக்குவதற்கான இடவசதி அங்கு இல்லை. எனவே அதை பழனியாண்டவர் மகளிர் கலைக் கல்லூரி வளாகத்தில், கல்லூரி விடுதிக்குப் பின்புற பகுதிக்கு மாற்றி, புதிய கட்டிடங்கள் கட்டும் பணி உலக வங்கித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படவிருக்கிறது. திருக்கோயில் பணியாளர், பணியில் இருக்கும் போது இறக்க நேரிட்டால் இந்து சமய அறநிலைய குடும்பநலத் திட்டத்தின் கீழ் அவர்களின் குடும்பங்களுக்கு ரூபாய் 10 ஆயிரம் உதவியாக வழங்கும் திட்டம் தற்போது அமலில் இருந்து வருகிறது. இத்திட்டத்தின் கீழ் மாத வருமானம் ரூபாய் 100-க்கு மேல் பெறும் திருக்கோயில் பணியாளர்களிடமிருந்து மாதம் ஒன்றுக்கு ரூபாய் 2 சந்தாவாகப் பெறப்படுகிறது. மாத வருமானம் ரூபாய் 100–க்கு குறைவாக பெறும் திருக்கோயில் பணியாளர்களிடமிருந்து சந்தா தொகை பெறப்படுவதில்லை. ஆனால் அவர்களுக்கும் குடும்பநலத் திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. தற்போது குடும்பநல உதவித் தொகையாக வழங்கப்படும் ரூபாய் 10 ஆயிரத்தை ரூபாய் 20 ஆயிரமாக உயர்த்தி (மேசையைத் தட்டும் ஒலி) வழங்குவதற்கு புதிய திட்டம் ஒன்று செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் கீழ் அடிப்படை ஊதியம் ரூபாய் 100-ம் அதற்குமேலும் வருமானம் பெறும் திருக்கோயில் பணியாளர்கள் 16,640 நபர்களிடமிருந்து மாதம்

ஒன்றுக்கு ரூபாய் 5 வீதமும், பட்டியலைச் சேராத 33,060 திருக்கோயில்களில் பணிபுரியும் மாதம் அடிப்படை ஊதியம் ரூபாய் 100-க்கு குறைவாக வருமானம் பெறும் பணியாளர்களிடமிருந்து மாதம் ஒன்றுக்கு ஒரு ரூபாய் வீதமும் சந்தா தொகை வசூலிக்கப்பட்டு, இப்புதிய திட்டம் மேற்கொள்ளப்படும். இதன்மூலம் ஆண்டொன்றுக்கு ரூபாய் 13.95 இலட்சம் வருவாய் கிடைக்கும். ஆனால், இத்திட்டத்திற்கு ஆகும் செலவு ரூபாய் 30 இலட்சமென மதிப்பிடப்பட்டுள்ளது. மேற்குறிப்பிடப்பட்டுள்ள வருவாய்த்தொகையை விட அதிகமாக உள்ள செலவினை உபரி வருவாயுள்ள திருக்கோயில்களின் நிதியிலிருந்து ரூபாய் ஒரு கோடியை வைப்பு நிதியாக வைத்து, அதிலிருந்து கிடைக்கும் வட்டியைக் கொண்டு ஈடு செய்யலாம் என்று உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இந்து சமயத்திற்கு ஆணிவேராக கருதப்படுவது வேதங்களும் ஆகமங்களும் ஆகும் என்பது எல்லோரும் அறிந்ததே. தற்போது இந்த அற்புதமான, வேத ஆகமம் மற்றும் சாஸ்திரங்கள் ஒரு சில தனியார் மூலமாகவே பாதுகாக்கப்பட்டும் வளர்ச்சி செய்யப்பட்டும் வருகிறது. இத்துறையின் கீழ் செயற்பட்டுவரும் வேத ஆகமப் பள்ளிகள் மேலும் சிறப்பாக ஆகம சாஸ்திரங்களைக் கற்றுக் கொடுக்க இயலாத சூழ்நிலையிலேயே உள்ளது. காலப்போக்கினால் வேத ஆகம சாஸ்திரிகள் இப்புனிதப் பணியை விட்டுவிட்டு மேலும் அதிக வருவாய் ஈட்டக்கூடிய பல நவீன துறைகளில் ஈடுபட்டுள்ளனர். எனவே, தற்போது திருக்கோயில்களில் முறையாக வேத ஆகமம் மற்றும் சாஸ்திரங்களைக் கற்றுத் தெளிந்த வல்லுநர்கள் மிகமிகக் குறைவாகவே உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. ஆகவே, வேத ஆகமம் மற்றும் சாஸ்திரங்களில் முழுமையான தேர்ச்சி பெற ஒரு வேத ஆகம சாஸ்திரக் கல்லூரியை அமைத்து (மேசையைத் தட்டும் ஒலி) ஆதரவு அளிப்பது காலத்தின் கட்டாயம் எனக் கருதுகிறேன். இதன்படி, 'Tamil Nadu Institute of Vedic Science' என்ற ஒரு அமைப்பினை நமது மாநிலத்தில் தக்கதொரு இடத்தில் நிறுவுவது ஒரு அத்தியாவசிய தேவையாகும். இந்தத் திட்டத்தில் வேதம், ஆகம சாஸ்திரம், வேதத்தின் உப சாஸ்திரம், திருமறைகள் மற்றும் நாலாயிரத்திவ்ய பிரபந்தங்கள் ஆகிய பாடத்திட்டங்கள் அமையும். சமஸ்கிருத மொழியில் உள்ள வேத ஆகம சாஸ்திரங்கள் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு எல்லோரும் எளிதில் கற்றுக் கொண்டு (மேசையைத் தட்டும் ஒலி) சிறிய திருக்கோயில்களில் கூட சாஸ்திர முறையில் பூஜைகள், வழிபாடுகள் நடத்துவதற்கு பயிற்சி அளிக்கப்படும். நிதி உபரியாக உள்ள திருக்கோயில்களிலிருந்து சுமார் ஒரு கோடி ரூபாய் வைப்பு நிதியாகத் திரட்டி, இத்திட்ட பயிற்சிப் பணிகளுக்காக செலவிடப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.) திருக்கோயில்களில் குறைந்த பட்சம் 20 ஆண்டுகள் பணிபுரிந்து, 60 வயதைக் கடந்த ஓதுவார்களுக்கு



மாத ஓய்வு ஊதியத் தொகையாக ரூபாய் 250 வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஓய்வூதியம் தற்போது 100 நபர்களுக்கு அளிக்கப்படுகிறது. இந்த ஓய்வூதியம் இனிமேல் ரூபாய் 300 ஆக உயர்த்தித்தரப்படும்.

பிற்பகல் 1.45 மணி

அதேபோன்று தொன்மையான திருக்கோயில்களில் வேத பாராயணம் மற்றும் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தங்களைப் பாடும் பெரியோர்களுக்கும் அரையர் சேவை செய்பவர்களுக்கும் ஓய்வு ஊதியம் அளிக்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தலாம் என கருதப்படுகிறது. திருக்கோயில்களினுடைய வருவாய் பாதிக்கப்பட்ட நிலையில் குறைந்த ஊதியத்தைக் கொண்டு இப்பணியை மேற்கொள்ள முன் வருபவர்களுடைய எண்ணிக்கை தற்போது குறைந்துவிட்டது. ஏனெனில் சமயத் தொண்டைக் காட்டிலும் அதிக வருவாய் வரக்கூடிய உத்தியோகங்களுக்கும், பிற தொழில்களுக்கும் வைதீகக் குடும்பத்தைச் சேர்ந்த இளைஞர்கள் பலர் சென்று விடுகின்றனர். இச்சூழ்நிலையில் வேத பாராயணம் மற்றும் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தங்களைப் பாடும் பெரியோர்களே இல்லாமல் போய்விடும் நிலை ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது. எனவே அவர்களுக்கு ஊக்கம் அளிக்கவும் இத்தகைய சமயத் தொண்டினை மேலும் வளர்க்கவும், இவர்கள் பயன் பெறுகின்ற வகையில் ஓய்வு ஊதியத் திட்டம் ஒன்றை ஏற்படுத்தி அவர்களுக்கும் மாதம் ஒன்றுக்கு ரூபாய் 300 வீதம் வழங்கலாம் எனக் கருதப்படுகிறது. இந்த ஓய்வு ஊதியத்தைப் பெறுவதற்கு 20 ஆண்டுகளுக்குக் குறையாமல் பணிபுரிந்து, ஓய்வு பெற்ற பெரியோர்களுக்கு அரசு நிதியிலிருந்து இந்த ஓய்வு ஊதியத்தை வழங்கலாம் என எண்ணியுள்ளேன். இத்திட்டத்தினால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு தொடரும் செலவினமாக ரூபாய் 3,60,000 செலவு ஏற்படும்.

தமிழ்நாட்டிலுள்ள திருக்கோயில்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றுக்குச் சொந்தமான நிலங்களின் விவரம் மற்றும் அவற்றின் இதர சொத்துக்கள் ஆகியவற்றைக் கண்டறிந்து அவற்றைப் பற்றிய பதிவேடுகளைத் தயாரிப்பதற்கு 1970 ஆம் ஆண்டு மாவட்ட வருவாய் அதிகாரி ஒருவரின் தலைமையில் தனி வருவாய்ப் பிரிவு ஒன்று இத்துறையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த அதிகாரியின் கீழ் 4 வட்டாட்சியர்கள் தற்போது மதுரை, சிதம்பரம், கும்பகோணம் மற்றும் சென்னை ஆகிய இடங்களில் பணியாற்றி வருகின்றனர். இதன் பயனாக இதுவரை 16,7[illegible] ஆலயங்களின் சொத்து விவரங்கள் குறித்த சிறப்புப் பதிவேடுகள் தயாரிக்கப்பட உள்ளது. இவ்விவரங்களை மதுரை, சிதம்பரம், கும்பகோணம் மற்றும் சென்னை ஆகிய இடங்களில் பணியாற்றும் வட்டாட்சியர் அவ்விடங்களில் பணி முடிந்த பிறகு பிற இடங்களுக்குச் சென்று சேகரிப்பார்கள். இப்பணிகளை விரைவில் முடிக்கும்படி ஆணையிட்டுள்ளேன். தென்ஆற்காடு மாவட்டத்தில் சிதம்பரம் அருள்மிகு சபாநாயகர் திருக்கோயிலுக்குத் தென் ஆற்காடு, சேலம், திருச்சி, திருநெல்வேலி மற்றும் தஞ்சாவூர்

மாவட்டங்களில் மொத்தம் 234 கிராமங்களில் நிலங்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்நிலங்களின் விவரங்களைச் சேகரித்து அவற்றைக் கைப்பற்றி உரிய தர்ம காரியங்களைச் செய்ய வழி வகுத்துக் கொடுக்கும்படி ஆலய தீட்சதர்கள் 1-5-76-ல் அரசைக் கேட்டுக் கொண்டார்கள். அக்கோரிக்கையை ஏற்று இதற்கென ஒரு வட்டாட்சியர் நியமிக்கப்பட்டு பணியாற்றி வருகிறார், இவர் இது வரை திருக்கோயில்கள் நிலங்களை சுவாதீனப்படுத்தி குத்தகைப் பத்திரங்கள் எழுதி வாங்கி மொத்தம் 422 ஏக்கரில் குத்தகை வசூலிக்க ஏற்பாடு செய்திருக்கிறார். இன்னும் 146 ஏக்கர்கள் சுவாதீனப்படுத்த வேண்டியுள்ளது. இதற்கான முயற்சியை இவர் மேற்கொண்டுள்ளார்.

அறநிலையங்களுக்கு 4.91 லட்சம் ஏக்கர்கள் நஞ்சை மற்றும் புஞ்சை நிலங்கள் சொந்தமாக உள்ளன. அவற்றை 1,06,807 குத்தகைதாரர்கள் பயிரிட்டு வருகின்றனர். அவற்றிலிருந்து வர வேண்டிய குத்தகைத் தொகை ரூபாய் 10.17 கோடி. 1,400 பசலியில் 3-6-91 வரை நடப்பு கேட்பு குத்தகையில் ரூபாய் 4.79 கோடியும், பாக்கி கேட்புத் தொகை ரூபாய் 4.15 கோடியும், ஆக மொத்தம் ரூபாய் 8.94 கோடி மட்டுமே வசூல் ஆகியுள்ளது. 30-6-91 முடிய உள்ள குத்தகை பாக்கி ரூபாய் 65.90 கோடி ஆகும்.

தமிழ்நாட்டில் குத்தகைதாரர்கள் பாதுகாப்புச் சட்டம் 25/55ன் கீழ் குத்தகைதாரர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட்டு வருகிறது. 1966-ம் ஆண்டு தமிழ்நாடு அரசால் ஏற்படுத்தப்பட்ட சட்டம் 11/1966 மாரடோரியம் சட்டத்தின் கீழ் குத்தகைதாரர்களிடமிருந்து குத்தகை பாக்கி வசூலிப்பதற்கும் குத்தகை பாக்கிக்காக வெளியேற்றுவதிலிருந்தும் பாதுகாப்பு அளிக்கப்பட்டு அதைத் தொடர்ந்து மாரடோரியம் சட்டம் நீட்டிப்பு செய்யப்பட்டு 31-3-91 வரை அமுலில் இருந்தது:

பிற்பகல் 1.50 மணி

கடைசியாக இயற்றப்பட்ட தமிழ்நாடு குத்தகைதாரர்கள் குத்தகை நிலுவை நிவாரணச் சட்டம், 1990-ன்படி, நில குத்தகைதாரர்கள், பழைய பாக்கியில் கால் பகுதியையும், நடப்பு பசலி 1400-ல் குத்தகைத்தொகை முழுவதையும் 31-3-91க்குள் செலுத்தினால், பழைய பாக்கிகள் அனைத்தும் தள்ளுபடியானதாகக் கருதப்படும் எனவும் அல்லது நடப்புப்பசலி குத்தகைத்தொகையை 31-3-91க்குள் நிலச்சுவான்தார்களிடமோ, நீதிமன்றங்களிடமோ செலுத்திவிட்டு பழைய பாக்கியில் மூன்றில் ஒரு பங்கினை, 5 தவணைகளில் கீழ்க்கண்டவாறு செலுத்தினால் பாக்கிகள் அனைத்தும் தள்ளுபடியானதாகக் கருதப்படும் எனவும், இம்முறைகளில் ஏதேனும் ஒன்றை குத்தகைதாரர்கள் பயன்படுத்திக் கொள்ளலாம் எனவும் சட்டம் இயற்றப்பட்டது.



முதல் தவணை 31-3-91-க்குள் செலுத்த வேண்டும்; இரண்டாவது தவணை 31-3-92-க்குள் செலுத்த வேண்டும்; மூன்றாவது தவணை 31-3-93-க்குள் செலுத்த வேண்டும்; நான்காவது தவணை 31-3-94-க்குள் செலுத்த வேண்டும்; ஐந்தாவது தவணை 31-3-95-க்குள் செலுத்த வேண்டும் என்று சட்டம் வழி செய்திருக்கிறது.

இந்த 'மாரடோரியம்' சட்டம் 31-7-91 வரை நீட்டிக்கப்பட்டது. தற்போது, இச்சட்டப் காலாவதி ஆகிவிட்டது. தற்போது, தஞ்சாவூர், மயிலாடுதுறை, சேலம், மதுரை மற்றும் கடலூர் ஆகிய இடங்களில் வருவாய் நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றன. இந்நீதிமன்றங்களில் திருக்கோவில் நிர்வாகிகள் குத்தகை பாக்கியை வசூலிப்பதற்கு மனுக்கள் தாக்கல் செய்து நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள். மேலும் 6 இடங்களில் வருவாய் நீதிமன்றங்களை ஏற்படுத்தி, வழக்குகளை விரைவில் விசாரித்து ஆணைகள் வழங்குவதற்கு, வருவாய்த் துறை நடவடிக்கை எடுத்து வருகிறது. அறுவடை காலங்களில், களத்து மேட்டுக்குச் சென்று, தீவிர வசூல் நடவடிக்கையில் ஈடுபட வேண்டுமென்று திருக்கோவில் நிர்வாகிகளுக்கு அறநிலையத் துறை ஆணையர் அறிவுறுத்தியுள்ளார். இப்படிப்பட்ட அரசு சார்ந்த மற்றும் அரசு சார்பற்ற நடவடிக்கைகளின் மூலம், தமிழ்நாட்டின் கலைப் பொக்கிஷங்களாகத் திகழும், தமிழகத் திருக்கோவில்களை பழுதடையாமல் பாதுகாக்கவும், கோவில்களின் கலாசாரத்தை, தொன்மையை, கால வெள்ளம் அழித்துவிடாமல் அரவணைக்கவும், இந்த அரசு தொடர்ந்து பாடுபடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் கோவில்களுக்கு—பெரிய நகரங்களில்—சொந்தமான நிலங்கள் 'பிரைம் லேண்ட்' (Prime Land) மிகவும் குறைந்த கட்டணத்தின் வாடகைக்கு 90 வருடங்கள் லீஸில் கொடுக்கப்பட்டுள்ளன; இந்த நிலங்களை குத்தகைக்கு எடுத்துள்ளவர்கள் தவறான வழிகளில் பயன்படுத்தி வருகிறார்கள் என்பதையெல்லாம் சுட்டிக் காட்டினார்கள். இதற்கெல்லாம் ஒரு முடிவுகட்ட அரசு இன்று ஒரு முடிவு எடுத்துள்ளது.

திருக்கோவில் நகர்ப்புற நிலங்களை நீண்டகால குத்தகையின் அடிப்படையில், 25 ஆண்டுகள், 50 ஆண்டுகள் மற்றும் 99 ஆண்டுகளுக்கு, தனியாருக்கு முன்னாள் அறங்காவலர்களும், முன்னாள் அறநிலைய நிர்வாகிகளும் அனுமதி அளித்துள்ளனர். இதுபோன்ற நீண்டகால குத்தகை வழங்குவதால், திருக்கோயில்களின் வருவாயில் பெரும் இழப்பு ஏற்படுகிறது என்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளது. எனவே, இனி இதுபோன்ற நீண்டகாலக் குத்தகைகள் வழங்கக்கூடாது என்று அரசு முடிவு

செய்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) அதுகுறித்து இந்து சமய அறநிலையச் சட்டம் பிரிவு 34–ன்படி, இந்த சமய அறநிலையத் துறை ஆணையருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரம் ரத்து செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி). இதன்படி, கோவில் நிலங்களை, அதிகபட்சமாக 5 ஆண்டுகளுக்கு மட்டுமே குத்தகைக்கு விடமுடியும். (மேசையைத் தட்டும் ஒலி) ஏற்கெனவே நீண்டகால குத்தகைக்கு விடப்பட்ட கோவில்களின் விவரங்கள் சேகரிக்கப்படும். அவற்றைப் பரிசீலனை செய்து, அவற்றுடன் மிகக்குறைந்த தொகைக்கு குத்தகைக்கு விடப்பட்ட நிலங்களை திரும்பப் பெற தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி). மேலும், தவறான முறையில் சட்ட விதிகளுக்கு முரணாக விற்பனை செய்யப்பட்ட அனைத்து கோவில் நிலங்களின் விவரங்களையும் பெற்று, அவற்றை சட்டத் துறையில் ஆய்வு செய்து, அவற்றையும் திரும்பப் பெற உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி). இதற்குத் தேவையான சட்டத் திருத்தங்கள் விரைவில் கொண்டு வரப்படும் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

குறைந்த வாடகையில் கோவில் நிலங்களை அனுபவித்து வரும் வாடகைதாரர்களிடமிருந்து, இன்றைய நிலவரப்படி வாடகை வசூலிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி).

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சில பேர் குறிப்பிட்டார்கள். சென்னையிலே சில கோவில் நிலங்கள் 1400 ரூபாய் என்ற அளவில் வாடகைக்கு விடப்பட்டிருக்கின்றன என்று சொன்னார்கள். இன்றைய ரேட் படி வாடகை வசூலிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி). இவ்வாறு உயர்த்தி நிர்ணயிக்கப்படும் வாடகையைச் செலுத்த மறுப்பவர்கள் மீது நடவடிக்கைகள் தொடரப்பட்டு, அவர்கள் அப்புறப்படுத்தப்படுவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 1.55

திருக்கோவிலின் நிலங்களைக் காப்போம்; இதுநாள் வரை இருந்து வரும் குறைகளைத் தீர்ப்போம் என்று தெரிவித்துக் கொள்கிறேன், (மேசையைத் தட்டும் ஒலி).

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு.வி. தம்புசாமி அவர்கள், கோவில்களில் பணிபுரியவர்களுக்கு ஒரு 'basic salary' நிர்ணயிக்க வேண்டும். அடிப்படை ஊதியம் நிர்ணயிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். இப்போதுள்ள நடைமுறைப்படி ஒரு இலட்சம் ரூபாய்க்கு மேல் ஆண்டு வருமானம் உள்ள கோவில்களில் பணிபுரியும் கோவில் பணியாளர்களுக்கு 'basic salary' ஏற்கெனவே நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மற்ற



கோவில்களைப் பொறுத்தவரை, அந்தக் கோவிலுக்கு ஆண்டு வருமானம் எந்த அளவில் இருக்கிறதோ அந்த ஆண்டு வருமானத்தையொட்டித்தான் அங்கே பணிபுரிபவர்களுக்குச் சம்பளம் நிர்ணயிக்கப்படுகிறது. எல்லாக் கோவில் பணியாளர்களுக்கும் சீராக ஒரே அடிப்படைச் சம்பளத்தை நிர்ணயிக்க வேண்டுமென்றால் அது மிகவும் சிரமமான காரியம். நடைமுறையில் சரிப்பட்டு வராது. ஏனென்றால், சில கோவில்களுக்கு ஆண்டு வருமானம் 10,000 ஆக இருக்கிறது. சில கோவில்களுக்கு 50,000 ஆக இருக்கிறது. சில கோவில்களுக்கு ஒரு இலட்சமாக இருக்கிறது. சில கோவில்களுக்கு இரண்டாயிரத்திற்கும் கீழே வருமானம் வருகிறது. எனவே இத்தகைய கோவில்களில் பணிபுரியும் பணியாளர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரே விதமான சம்பளத்தை நிர்ணயிக்க வேண்டுமென்றால் பல நடைமுறைச் சிக்கல்கள் இருக்கின்றன. இதை அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. போளூர் வரதன் அவர்கள் பேசுகின்றபோது தாழ்த்தப்பட்ட மக்கள் கோவிலுக்குள் அனுமதிக்கப்படுவது இல்லை என்பதைக் குறிப்பிட்டார். இதைப் பற்றியே வேறு சில மாண்புமிகு உறுப்பினர்களும் இங்கே பேசுகையில் குறிப்பிட்டார்கள். எந்தக் கோவிலாக இருந்தாலும் தாழ்த்தப்பட்ட மக்கள் உள்ளே அனுமதிக்கப்பட வேண்டும் என்ற சட்டமே இருக்கின்றது. அப்படியிருந்தும்கூட, சில கோவில்களில் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் அனுமதிக்கப்படுவதில்லை என்பது உண்மையானால், அந்தக் கோவில்கள் யாவை என்ற விவரங்களை அரசுக்குத் தெரிவித்தால், இது தொடர்பாக, உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். அங்கேயும் தாழ்த்தப்பட்ட மக்கள் உள்ளே சென்று வழிபாடு நடத்த ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கொள்கை பற்றி விவாதிக்க வேண்டுமென்ற வெட்டுத் தீர்மானங்களை மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் தே. குமாரதாஸ், எம். ஆண்டியம்பலம் மற்றும் ஜி. பழனிசாமி ஆகியோர் முன்மொழிந்துள்ளார்கள்.

கொள்கை மற்றும் அறக்கட்டளைகள், சட்ட நிர்வாகம் ஆகியவைகளைப் பற்றிய முழு விவரங்களும் கொள்கை விளக்கக் குறிப்பில் கொடுக்கப்பட்டுள்ளன. அதன்மீது என்னுடைய விளக்கத்தையும் இப்பொழுது அளித்துள்ளேன்.

திருக்கோவில் நிலங்களிலுள்ள ஆக்கிரமிப்புகளை நீக்குதல் பற்றியும், ஆவ்வ நிலங்களை நலிந்தவர்களுக்கும், தற்போது குடியிருப்பவர்களுக்கும், பட்டா வழங்கக் கோருவது பற்றியும்

விவாதிக்க வேண்டுமென்று வெட்டுத் தீர்மானங்களை மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் ப. ரங்கநாதன், ஆர். சிங்காரம் மற்றும் சி. ஞானசேகரன் ஆகியோர் கொடுத்திருக்கிறார்கள்.

ஆக்கிரமிப்புகளைப் பொறுத்தவரையில், திருக்கோயில்களின் எல்லையிலும், அதன் அருகாமையிலும் உள்ள இடங்களில் ஏற்படும் ஆக்கிரமிப்புகள் 1959 ஆம் ஆண்டு இந்து சமய அற நிலைய சட்டப்பிரிவு எண். 78 மற்றும் 79-ன் கீழ் துறை அதிகாரிகளால் நடவடிக்கை எடுக்கப்பட்டு, ஆக்கிரமிப்புக்காரர்கள் வெளியேற்றப்படுகிறார்கள். கோயிலுக்குச் சொந்தமான நிலங்கள் கோயிலுக்கு அருகாமையில் இல்லாது இதர இடங்களில் இருக்குமானால் அவைகளைப் பொறுத்த வரையில் 'சிவில் கோர்ட்' மூலமாக ஆக்கிரமிப்புக்காரர்களை வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பொதுவாக, ஆக்கிரமிப்புக்களை நீக்குவதற்கும், துறை அதிகாரிகளுக்குத் தற்போதுள்ள அதிகாரங்கள், போதியனவாக இல்லாத காரணத்தால் அவர்களுக்குக் கூடுதல் அதிகாரங்கள் வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானத்தில் பூவிருந்தவல்லி தொகுதியிலுள்ள கோயில் நிலங்களில் குத்தகை பாக்கி அதிகம் உள்ளதாகவும், தனியார் சிலர் தங்கள் பெயரில் பட்டா வாங்கி அனுபவித்து வருவதாகவும் குறிப்பிட்டிருக்கிறார். பூவிருந்தவல்லி அருள்மிகு திருக்கச்சி நம்பிகள் வரதராஜப் பெருமாள் திருக்கோயில், மேல்மணம்பேடு அருள்மிகு செல்வ விநாயகர் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களிருந்து ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டுவிட்டன. சென்னீர்க்குப்பம் அருள்மிகு காசி விசுவநாதர் திருக்கோயில், திருமழிசை அருள்மிகு ஜகன்னாதப் பெருமாள் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பிற்பகல் 2-00

கைலாசநாதர் திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளவர்கள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. மாசிலாமணி பேரில் 'சேர்மன் மாசிலாமணி நகர்' எனப் பெயர் வைத்துள்ளதாகத் தெரிகிறது. திருமழிசை திருக்கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் ஆழ்கிணறுகள் அமைக்கப்பட்டு லாரிகள் மூலம் தண்ணீர் விற்பனையை முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. டி. ஆர். மாசிலாமணி செய்து வருவதாகத் தெரிகிறது. இது தவிர முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. டி. ஆர். மாசிலாமணியும் அவரது உறவினர்களும் குத்தகை பாக்கிகளை வைத்துள்ளனர்; அதாவது சுமார் 600 மூட்டை நெல் பாக்கியாக உள்ளது. அதனுடைய மதிப்பு ரூ. 90,150 ஆகும்.



இது தவிர அவரது மகன்கள் பெயரில் குத்தகை எடுத்த நிலத்திற்கு ரூ. 55,800-ஐ பாக்கியாக வைத்துள்ளார்கள். இக்குத்தகை பாக்கிகளை வசூல் செய்ய நீதிமன்றங்கள் மூலம் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இந்த நிலங்களைப் பொறுத்த வரையில், யாருக்கும் பட்டா வழங்கப்படவில்லை என்பதை இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

தற்போது திருக்கோயில்களுக்குச் சொந்தமான குடியிருப்பு மனைகளில் அடிமனை வாடகைதாரர்களிடமிருந்து குறிப்பிட்ட தொகை வாடகையாக வசூலிக்கப்பட்டு வருகிறது. பொதுவாக பின்தங்கிய வகுப்பினர், ஆதிதிராவிடர் மற்றும் நலிந்த பிரிவினர் ஆகியோருக்கு வீட்டுமனை வழங்குவது போன்ற சமுதாய நலத் திட்டங்கள் அந்தந்தத் துறையினரால் பெருமளவில் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. அதுப்போன்ற திட்டங்களுக்குத் தேவைப்படுகின்றபோது கோயில் நிலங்களும் ஆங்காங்கே கையகப்படுத்தப்பட்டு அத்துறைகளால் நஷ்டஈடு கோயில்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. கோயிலுக்குச் சொந்தமான வீட்டுமனைகள், நாளுக்கு நாள் உயர்ந்து செல்லும் விலை மதிப்பு உடையவையாகும். மேலும் திருக்கோயில்களுடைய அன்றாடத் தேவைகளையும், பராமரிப்பினையும், இதுபோன்ற இனங்களிலிருந்து வரும் வருமானத்தைக் கொண்டே செய்தாக வேண்டும். தற்போது நிலவி வரும் பணவீக்கத்தில் நிலங்களை விற்று தொகையாக வைப்பு நிதியில் வைப்பது என்பது சாதுரியமான செயலாகாது. எனவே, கோயில்களுக்குச் சொந்தமான இடங்களை எந்த ஒரு பகுதியினருக்கும் ஒப்படை செய்ய இயலாது.

திருப்பணி மற்றும் கல்யாண மண்டபங்கள் கட்டுவதற்கான வெட்டுத் தீர்மானங்களை மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஆர். சிங்காரம், திரு. ஆண்டியம்பலம், திரு. சி. சுவாமிநாதன், திரு. சி. ஞானசேகரன், திரு. என். பன்னீர்செல்வம் மற்றும் திரு. பி.வி. ராஜேந்திரன் ஆகியோர் கொடுத்திருக்கிறார்கள். ஆலயங்களுக்கான திருப்பணிகள் தேவையின் அடிப்படையில் அரசு மானியம், பொதுமக்களின் நன்கொடை, ஆணையர் பொதுநல நிதி, நிதி வசதியுள்ள ஆலயங்களின் உபரி நிதியிலிருந்து பெறும் நிதி உதவி ஆகியவற்றின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. புராதன சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த, ஆழ்வார்கள் மற்றும் நாயன்மார்களால் பாடப்பட்ட திருத்தலங்கள் போன்ற பலவற்றின் அடிப்படையில் திருப்பணிகள் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. திருப்பணியைப் பொறுத்தவரையில் தொழில்நுட்ப அனுமதியும் வழங்கப்படுகின்றன. அரசு மானியமும் பொதுமக்கள் நன்கொடையும் பெறப்படுமானால் திருப்பணிக்கென திருப்பணிக்குழு ஒன்றும் அமைக்கப்படுகிறது.

கல்யாண மண்டபங்களைப் பொறுத்தவரையில் திருப்பணியைப் போன்று அரசு மானியம் வழங்கப்படுவதில்லை. ஆலயங்களே தங்களுடைய செலவில் இப்பணியை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சிங்காரம் அவர்கள் குறிப்பிட்ட பேராவூரணியிலுள்ள நீலகண்டப் பிள்ளையார் கோயிலுக்கு கல்யாண மண்டபம் கட்டுவதற்கு திருத்திய மதிப்பீடு தற்போது தஞ்சை துணை ஆணையரால் தயாரிக்கப்பட்டு வருகிறது. அருள்மிகு துர்க்கை அம்மன் திருக்கோயிலுக்கு திருப்பணி செய்வதைப் பொறுத்தவரையில் ரூ. 1,15,000-க்கு நிர்வாக அனுமதியும், மதிப்பீட்டு அங்கீகாரமும் வழங்கப் பட்டுள்ளன. டெண்டர் முறையில் இந்தத் திருப்பணி வேலைகள் விரைவில் துவக்கப்பட உள்ளன.

மாண்புமிகு உறுப்பினர் திரு. மெ. ஆண்டி அம்பலம் அவர்கள் நத்தம் தொகுதியில் நத்தம் கோவில்பட்டியில் உள்ள அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயிலுக்குத் திருப்பணி செய்வது குறித்து வெட்டுத் தீர்மானம் ஒன்றினைக் கொடுத்துள்ளார். அருள்மிகு கைலாசநாதர் ஆலயத்தின் திருப்பணிகளைப் பொறுத்தவரையில் நிர்வாக அனுமதியும் மற்றும் தொழில் நுட்ப அங்கீகாரமும் முறையே 10–12–1990 மற்றும் 14–2–1991 ஆம் நாளன்று வழங்கப்பட்டுள்ளன. பொதுவாக திருப்பணிக் குழுக்களை திருத்தி அமைக்க வேண்டும் என்ற நோக்கத்தின் காரணமாக தற்போது செயல்பட்ட திருப்பணிக் குழு கலைக்கப்பட்டுவிட்டது. ஆலயத்தின் நலன் மீது அக்கறை கொண்ட பொதுமக்கள் அடங்கிய திருப்பணிக் குழு அமைக்கப்பட உள்ளது. எனவே அரசு மானியம், ஆணையரின் பொதுநலநிதி, பொதுமக்களின் நன்கொடை ஆகியவற்றின் மூலம் இந்தத் திருப்பணி வேலைகள் விரைவிலேயே நடைபெற இருக்கின்றன.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் தனது வெட்டுத்தீர்மானத்தில் திருமணஞ்சேரியில் உள்ள சுகந்த பரிமளேஸ்வரர் ஆலயத்திற்குப் புதியதாக கல்யாண மண்டபம் கட்டுவது பற்றியும், ஆலயத்தைப் புதுப்பிப்பது பற்றியும் விவாதிக்க வேண்டுமென்று கோரியுள்ளார். இந்தத் திருக் கோயிலைப் பொறுத்தவரையில் கடந்த 1979 ஆம் ஆண்டுதான் அந்தக் கோயிலுக்கு குடமுழுக்கு விழா நடை பெற்றுள்ளது. வர்ணப் பூச்சுகள் கூட நல்ல நிலையில் உள்ளன. எனவே திருப்பணி செய்ய வேண்டிய அவசியத்தில் அத்திருக் கோயில் இல்லை. திருமணஞ்சேரியைப் பொறுத்தவரையில் மழையின்றி வறட்சியோடு இருக்கின்ற ஒரு சிறிய கிராமம். எனவே பொது மக்களிடம் நன்கொடை பெற இயலாத நிலை உள்ளது. இருந்தபோதிலும் இதற்காக ரூ. 6 லட்சம் மதிப்பீட்டில் திருமண மண்டபம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

பிற்பகல் 2.05

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் கொடுத்துள்ள வெட்டுப் பிரேரணையைப் பொறுத்தவரையில் வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள திருக்கோயில்கள் திருப்பணிக்கு



பல்வேறு திட்டங்களின் கீழ் பெரும் தொகைகள் வழங்கப்பட்டு இருக்கின்றன என்பதைக் குறிப்பிட வேண்டும். ரூ. 5 கோடி வைப்பு நிதியிலிருந்து பெறும் வட்டியிலிருந்து ரூ. 10,000/- வீதம் ஒரு திருக்கோயிலுக்கு நிதி உதவி வழங்கும் திட்டம் நடை முறையில் இருந்து வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் இதுவரை 29 ஆலயங்களுக்கு ரூ. 2.90 லட்சம் நிதி உதவி அளிக்கப்பட்டு உள்ளது. அரசு மானியத்தைப் பொறுத்தவரையில் வட ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த 14 திருக்கோயில்களுக்கு திருப்பணி களுக்காக ரூ. 6 லட்சம் நிதி உதவி செய்யப்பட்டுள்ளது. இதே போன்று பொதுநல நிதியின் கீழ் 10 ஆலயங்களுக்கு இதுவரை ரூ. 2.7 லட்சம் வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பன்னீர்செல்வம் அவர்கள் குறிப்பிட்டுள்ள திண்டிவனம் அருள்மிகு திந்தீஸ்வரசாமி திருக் கோயில் திருப்பணி மற்றும் அத்திருக்கோயிலுடைய தேரினைப் பழுதுபார்க்கவும் மொத்தம் ரூ. 5 லட்சத்துக்கு உத்தேச மதிப்பீடு தயார் செய்யப்பட்டு தற்போது அம்மதிப்பீடு துறையின் பரி சீலனையில் உள்ளது. இப்பணிகளுக்கான திருப்பணிக் குழுவும் விரைவில் அமைக்கப்பட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. இராஜேந்திரன் அவர்கள் குறிப்பிட்டுள்ள வேதாரண்யம் அருள்மிகு வேதாரண்யேஸ்வரர் திருக்கோயில் திருப்பணியைப் பொறுத்தவரையில் அந்தக் கோயில் திருப்பணிக்காக அரசு மானியமோ, பொதுமக்கள் நன்கொடை யோ இல்லாது முழுக்க முழுக்க ஆலய மேம்பாட்டு நிதியிலிருந்து செலவு செய்யப்படுகின்ற காரணத்தால் திருப்பணிக்குழு எதுவும் அமைக்கப்படவில்லை. இருந்தபோதிலும் உறுப்பினர் குறிப்பிட்ட மாதிரி கண்காணிப்புக் குழுவுக்கு பதிலாக ஒரு திருப்பணிக் குழு விரைவில் அமைக்கப்பட இருக்கிறது.

திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலங்களை குத்தகைதாரர் களுக்கு உரிமையாக்கி அதற்கான ஈட்டுத் தொகையை திருக் கோயிலுக்கு செலுத்தி கோயிலுக்கு நிரந்தரமாக நிதி வசதி செய்வது குறித்த வெட்டுப் பிரேரணையை மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. இராஜேந்திரன் அவர்கள் முன்மொழிந் துள்ளார். திருக்கோயில்களுக்கு நிலங்கள் மன்னர்களாலும், பொதுமக்களாலும் திருக்கோயில் பராமரிப்பு மற்றும் இதர நோக்கங்களுக்காகவும் வழங்கப்பட்டதாகும். இந்நிலங்களிலிருந்து பெறும் வருமானத்தைக் கொண்டு திருக்கோயில்களின் பராமரிப்பும் அன்றாடத் தேவைகளும் செய்யப்படவேண்டிய நிலையில் உள்ளோம். நாளுக்கு நாள் நிலத்தின் மதிப்பு உயர்ந்துகொண்டே செல்லுகின்ற இந்த காலகட்டத்தில் பண வீக்கத்தின் காரண மாகவும் பணத்தின் மதிப்பு குறைந்துகொண்டு இருக்கிற இந்த வேளையில் நிலங்களை விற்று வைப்பு நிதி ஏற்படுத்துவது என்பது

தொலை நோக்கில் திருக்கோயில்களுக்கு பயன்படுவதாக அமையாது. இது ஆழ்ந்து பரிசீலித்து எடுக்கப்படவேண்டிய ஒரு முடிவாகும்.

ஆத்தாளூர், வீரகாளியம்மன் கோயிலுக்கு அறங்காவலர் குழு நியமிக்கப்படும்போது சம்பந்தப்பட்ட கிராமங்களுக்கு பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டுமெனவும் பக்தி மிக்கவர்களாக நியமிக்கப்பட வேண்டுமெனவும் மாண்புமிகு உறுப்பினர் திரு. சிங்காரம் அவர்கள் ஒரு வெட்டுத் தீர்மானத்தைக் கொடுத்துள்ளார்.

அறங்காவலராக நியமிக்கப்படுபவர்களுக்கு என்னென்ன தகுதி குறைபாடுகள் இருக்கக்கூடாது என இந்து சமய அறநிலைய சட்டத்தின் 26-வது பிரிவில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. சான்றாக இந்து மதம் தவிர வேறு மதத்தைச் சேர்ந்தவராக இருக்கக்கூடாது; மத்திய, மாநில மற்றும் உள்ளாட்சி நிறுவனங்களிலிருந்து பணியிலிருந்து நீக்கப்பட்டவர்களாக இருக்கக்கூடாது; ஒழுக்கத்திற்காக குற்றவியல் நீதி மன்றத்தால் தண்டிக்கப்பட்டவராக இருக்கக்கூடாது; கடனைத் திருப்பி அளிக்க வசதியற்றவர் என தீர்மானிக்கப்பட்டவராக இருக்கக்கூடாது; 25 வயதிலிருந்து 70 வயதிற்குள் இருப்பார்களேயானால் அவர்கள் அறங்காவலர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம். விண்ணப்பம் செய்பவர்களுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் ஆலயத்திற்கும் உள்ள ஈடுபாடு, ஆலய வழிபாட்டில் நம்பிக்கை போன்ற பல அம்சங்கள் கருத்தில் கொள்ளப்பட்டு அதன் அடிப்படையிலேயே அறங்காவலர்கள் தேர்வு செய்யப்படுகிறார்கள். சம்பந்தப்பட்ட கிராமத்தினரும் தகுதிக் குறைபாடுகள் இல்லாதவர்களாக இருப்பார்களேயானால் அவர்களும் அறங்காவலர் குழுவில் நியமிக்கப்பட வாய்ப்பு இருக்கிறது.

ஏற்கெனவே அறங்காவலர்களாக நியமிக்கப்பட்டவர்கள் பல முறைகேடுகளில் ஈடுபடுவதாக இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் தெரிவித்துள்ளார்கள். இதைப் பற்றி விரைவில் ஆய்ந்து தக்க முடிவுகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 2–10

திருமதி ரமணி நல்லதம்பி, திரு. எம். சுந்தரதாஸ், திரு. எஸ். ராஜாராமன், திரு. பி.வி. இராஜேந்திரன், திரு. ஆர். நடேசன் ஆகிய உறுப்பினர்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்கள் தனிப்பட்ட நபர்களின் பொருளைப் பற்றியதாக இருப்பதால், இதுபற்றிய குறிப்புகள் தனியாக கொடுக்கப்பட்டு இருக்கின்றன.



மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. பழனிசாமி அவர்கள் கோயில் குத்தகை விவசாயிகளால் பல ஆண்டு காலமாக உள்ள பாக்கிகளை ரத்து செய்வதன் அவசியம் குறித்து விவாதிக்க ஒரு வெட்டுத் தீர்மானத்தைக் கொடுத்துள்ளார்.

திருக்கோயில்கள் பெரும்பாலும் அவைகளுக்குச் சொந்தமான நிலங்களின் வருவாயையே நம்பி இருக்கின்றன. கடந்த பல ஆண்டுகளாக செய்யப்பட்ட குத்தகைத் தொகை தள்ளி வைப்பு காரணமாக குத்தகைதாரர்களிடமிருந்து வசூல் செய்ய இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக திருக்கோயில்கள் தங்களது அன்றாடத் தேவைகளைக் கூட பூர்த்தி செய்ய இயலாத நிலையில் இருந்து வருகின்றன. துவரை வசூலிக்கப்பட வேண்டிய குத்தகைத் தொகை பாக்கி ரூ. 65.90 கோடி ஆகும். குத்தகைதாரர்கள் குத்தகை பாக்கியினை தவணை முறையில் செலுத்துகின்றபோது அளிக்கப்பட்ட சலுகைகளைப் பற்றி ஏற்கெனவே என் பதில் உரையில் குறிப்பிட்டுள்ளேன். குத்தகை பாக்கிகளை முழுமையாக ரத்து செய்தால் திருக்கோயில்களில் அன்றாட பூஜை செய்வதும், திருப்பணி மேற்கொண்டதும் இயலாமல் போய்விடும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. இராஜேந்திரன் அவர்கள் தஞ்சை மாவட்டம், திருவாரூரில் வழிபாட்டிற்குரிய தெய்வங்களின் விக்கிரகங்கள் பாதுகாப்பு காரணங்களுக்கு என்று வழிபட முடியாமல் ஒரு கட்டிடத்தில் பூட்டி வைக்கப்பட்டுள்ளது குறித்து விவாதிக்க ஒரு வெட்டுத் தீர்மானத்தைக் கொடுத்துள்ளார்.

தஞ்சை மாவட்டம், திருவாரூரில் உள்ள உலோக திருமேனிகள் பாதுகாப்பு மையத்தில் வழிபாட்டில் இல்லாதவை மட்டுமே வைக்கப்பட்டுள்ளன. அவைகளுக்கு ஒவ்வொரு வாரமும் வெள்ளிக்கிழமை அன்று வழிபாடு முறையாக நடத்தப்படுகிறது. திருவிழாக் காலங்களில் சம்பந்தப்பட்ட திருக்கோயிலுக்கு சிலைகளை எடுத்துச் சென்று வழிபாடு நடத்த அனுமதி வழங்கப்படுகிறது. இந்த சிலைகளின் நலன் கருதி இப்பாதுகாப்பு மையத்தில் குளிர்சாதன வசதி பொருத்தவும் அரசு உத்தரவிட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. இராஜேந்திரன் அவர்கள் தமிழகத்தின் பழமையும், சிறப்பும் வாய்ந்த அனைத்து கோவில்களிலும் பணிபுரியும் ஊழியர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிப்பதுடன் அரசுப் பணியாளர்களாக அவர்கள் ஆக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து ஒரு வெட்டுத் தீர்மானம் கொடுத்துள்ளார்.

முதுநிலை திருக்கோவில் பணியாளர்களுக்கும், முதுநிலை அல்லாத திருக்கோவில் பணியாளர்களுக்கும் இருந்த சம்பள விகிதங்கள் பல்வேறு குழுக்களின் பரிந்துரைகளின்படி மாற்றப்பட்டு தற்போது முறையே 12 விகிதங்கள் ஆகவும், 9 விகிதங்கள் ஆகவும் வழங்கப்பட்டு வருகின்றன. அத்திருக்கோவில்களின் பணியாளர்களின் ஊதியம் அந்த அந்தக் கோவில்களின் வருமானத்தின் அடிப்படையில் வழங்கப்பட வேண்டும் என்பதால் தற்பொழுது சம்பளத்தை அதிகரிக்க இயலாது. அத்திருக்கோவில்களின் ஊழியர்கள் பெரும்பாலும் முழு நேரப் பணியாளர்களாக இருப்பது இல்லை. பணியின் தன்மை, வேலை நேரம் இவைகளில் அரசு ஊழியர்களுக்கும், திருக்கோவில் பணியாளர்களுக்கும் பெருத்த வித்தியாசம் உண்டு. எனவே, திருக்கோவில் ஊழியர்களை அரசு ஊழியர்களாக ஆக்கும் பிரச்சினை எழவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். இராசாராமன் அவர்கள் தற்பொழுது உள்ள அனைத்து திருக்கோவில்களின் அறங்காவலர்களையும் நீக்கி புதிய அறங்காவலர்கள் அந்த அந்தப் பகுதிகளிலிருந்து நியமிக்கப்பட்டு இந்து சமய அறநிலையத் துறையின் நிர்வாகத்தை சீரமைக்கக் கோரி ஒரு வெட்டுத் தீர்மானத்தினைக் கொடுத்துள்ளார்.

இந்து சமய அறநிலையத் துறையின் நிர்வாகத்தை திருத்தி அமைக்கும் செயற்குறிப்பு தற்போது அரசின் தீவிர பரிசீலனையில் இருந்து வருகிறது. அவ்வாறு சீரமைப்பு செய்கின்றபோது அறங்காவலர்கள் நியமனத்திலும் மாற்றங்கள் செய்ய அரசு உத்தேசித்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பன்னீர்செல்வம் அவர்கள் திண்டிவனம் அருள்மிகு இலட்சுமி நரசிம்மசுவாமி திருக்கோவில் புதுப்பிக்கும் வகையில் பல்வேறு பணிகளுக்காக சுமார் ரூ. 7 லட்சம் செலவிலான மதிப்பீட்டிற்கு மானிய உதவி அளிப்பது குறித்து விவாதிக்க ஒரு வெட்டுத் தீர்மானத்தினைக் கொண்டு வந்துள்ளார்.

திண்டிவனம் அருள்மிகு இலட்சுமி நரசிம்மசுவாமி திருக்கோவில் திருப்பணி வேலைகளுக்காக ரூ. 6.67 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு துறையின் பரிசீலனையில் உள்ளது என்பதையும், இத்திருக்கோவிலுக்கு புதியதாக திருப்பணி குழு அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. இராம. இராமநாதன் அவர்கள் சிலைகள் திருட்டுப் போகாமல் தடுப்பது குறித்து இங்கே கருத்து தெரிவித்தார்.



திருக்கோவில்களில் உள்ள சிலைகளைப் பாதுகாப்பதற்காக 'சிலைகளை புகைப்படம் எடுப்பது'' 'அவைகளை பழம்பொருள் சட்டத்தின் கீழ் பதிவு செய்வது'' 'கிராமங்களில் விழிப்புக் குழு ஏற்படுத்துவது', 'திருக்கோவில்களில் திருடர்கள் அறிவிப்பு மணி மற்றும் விழிப்பு பதிவு கடிகாரம் ஆகியவைகள் வைத்தல்' போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. சிறிய கிராமங்களில் உள்ள திருக்கோவில்களில் நாள்தோறும் வழிப்பாட்டுக்கு பயன்படாமல் உள்ள உலோகத் திருமேனிகளைப் பாதுகாப்பதற்கென்று திருவாரூரில் உலோகத் திருமேனி பாதுகாப்பு மையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அதில் மொத்தம் 1,785 உலோகத் திருமேனிகள் வைக்கப்பட்டுள்ளன. திருக்கோவில்களில் சிலைத் திருட்டைத் தடுப்பதற்காகவும், விலை மதிப்புள்ள நகைகளைப் பாதுகாப்பதற்காகவும் முன்னாள் படைவீரர்கள் காவலர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். களவு போன உலோகத் திருமேனிகளை மீட்பதற்கு இந்த அரசால் அயராத முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 2.15

மாண்புமிகு உறுப்பினர் திரு. நடேசன் அவர்கள் இங்கே பேசுகின்றபோது கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள 490 கோவில்கள் சரியான பராமரிப்பு இன்றி இருக்கின்றன என்று குறிப்பிட்டார். இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத தேவஸ்வம் என்று அழைக்கப்படுகின்ற கன்னியாகுமரி தேவஸ்வம் வாரியம் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள 490 திருக்கோயில்களைப் பராமரித்து வருகின்றது. இதற்கு அரசு மானியமாக ரூ. 13.70 இலட்சம் வழங்கப்பட்டு வருகிறது. துணை ஆணையர் நிலையில் உள்ள ஒரு செயல் அலுவலர் பொறுப்பில் இந்நிர்வாகம் இருந்து வருகிறது. அரசு மானியம் ரூ. 13.70 இலட்சம் நீங்கலாக இந்த தேவஸ்தானத்தின் ஆண்டு வருவாய் ரூ. 45.23 இலட்சமாகும்.

இங்கே பணிபுரியும் கோவில் பணியாளர்களின் ஊதியம் உயர்த்தப்பட வேண்டுமென்ற கோரிக்கையை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். இதை அரசு பரிவோடு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதுவரை நான் எடுத்துரைத்த அறநிலையத் துறை பற்றிய விளக்கங்களை செவி மடுத்த மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் தமிழகத்திலுள்ள ஆலயங்களைக் காக்க, செவ்வனே பராமரிக்க இந்த அரசு எடுத்துள்ள முடிவுகளுக்கும், நடவடிக்கைகளுக்கும் முழு ஆதரவு நல்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதுமட்டுமின்றி

பிற சமய திருத்தலங்களையும் பேணிக்காத்து நல்லமுறையில் பராமரிக்க இந்த அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்குமென்பதை இத்தருணத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). இத்துறையின் செயல்பாட்டினை மேம்படுத்த சிறந்த கருத்துக்களைக் கூறிய மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் பேசிய கருத்துக்களுக்கும், கொடுத்த வெட்டுத் தீர்மானங்களுக்கும் பெரும்பாலும் என்னுடைய உரையில் பதில் கிடைத்திருக்குமென்று நம்புகிறேன். சில கருத்துக்களுக்கு பதில் கிடைக்கவில்லை என்றாலும். மாண்புமிகு உறுப்பினர்கள் பேசியவை அனைத்தும் அவைக் குறிப்பேட்டில் உள்ளன. அவைகள்மீது உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று தெரிவித்து, வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்த மாண்புமிகு உறுப்பினர்கள் அவைகளைத் திரும்பப் பெற்றுக்கொண்டு மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வே. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவில் நிலங்கள் சம்பந்தமாக, முன்னாள் முதல்வர், அமரர் மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள் கோவில் நிலங்களை உழுபவர்களுக்கே சொந்தமாக்குவோமென்று ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். மாண்புமிகு முதலமைச்சரவர்கள் பதிலுரையில் கோவில் நிலம் யாருக்கும் ஒப்படைக்கப்படமாட்டாது என்று கூறினார்கள். இந்த இரண்டுக்கும் உள்ள வித்தியாசத்தை விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் உழுபவனுக்கே நிலம் சொந்தமாக்கப்பட வேண்டுமென்று கூறியபோது, அது இலவசமாகத் தரப்படுமென்று கூறவில்லை. உழுபவர்களுக்கு நிலம் சொந்தமாக்கப்படுமென்றுதான் குறிப்பிட்டார். அந்தக் கொள்கையில் இப்போதும் மாற்றமில்லை. எங்களைப் பொறுத்தவரையில் உழுபவர்களுக்கு நிலத்தை விற்று விட வேண்டுமென்ற கருத்தும் அரசின் பரிசீலனையில் இருக்கிறது. ஆனால் நிலத்தை உழுபவர்களில் எத்தனை பேர் உரிய தொகை கொடுத்து அரசிடமிருந்து அதை வாங்க முடியும்? எத்தனை பேருக்கு வாங்கும் சக்தி இருக்கிறது என்பதைக் கணக்குப் போட்டுப் பார்த்தால், மிகக் குறைவான எண்ணிக்கையில்தான் அத்தகைய விவசாயத் தொழிலாளர்கள் இருப்பார்கள், சிறு விவசாயிகள் இருப்பார்கள் என்பது அனைவருக்கும் புரிந்த ஒன்று. எனவே புரட்சித் தலைவர்



எம். ஜி. ஆர். அவர்கள் அறிவித்த கொள்கையில் இந்த அரசுக்கு எந்தவித மாற்றமும் இல்லை. ஆனால் இதை எப்படிச் செய்யலாமென்றுதான் சிந்தித்துக் கொண்டிருக்கிறோம். ஏற்கெனவே இங்கே பேசிய பல மாண்புமிகு உறுப்பினர்களும் குறிப்பிட்டார்கள். இத்தனை நிலங்களைக் கோவில்களுக்குச் சொந்தமாக வைத்துக்கொள்வதிலும் பயனில்லை, எனவே அந்த நிலங்களை உழுபவர்களுக்கு விற்றுவிடுங்கள் என்று குறிப்பிட்டார்கள். இதைப்பற்றி ஏற்கெனவே யோசித்திருக்கிறோம். விற்று விடலாம். ஒருசிலரால்தான் அதற்கான, உரிய தொகையை செலுத்த முடியும். அப்படியில்லையென்றால் அரசு கடன் கொடுக்க வேண்டும். கடன் கொடுத்தால் அடுத்த ஆண்டே, அடுத்த பட்ஜெட் கூட்டத் தொடர் வரும்போதே நீங்கள் எல்லோரும் அந்தக் கடன்களை ரத்து செய்யுங்கள் என்றும் கேட்பீர்கள். எங்களால் முடிந்தால் அதையும் செய்வோம். ஆனால் இன்று இருக்கிற நிதி நெருக்கடியில் இதையெல்லாம் நினைத்துப் பார்க்கவே முடியாது. ஆகவே இப்போது Rotating Fund என்ற ஒரு ஃபண்டை, சுழல்கின்ற நிதியை ஏற்படுத்தலாம் என்ற கருத்து அரசின் பரிசீலனையில் இருக்கிறது. இந்த சுழல்கின்ற நிதியை ஏற்படுத்தி, அதன்மூலம் உழுபவர்களுக்கே நிலத்தை வாங்குவதற்குக் கடன் கொடுக்கலாம் என்ற ஐடியா இந்த அரசின் பரிசீலனையில் இருக்கிறது. இதைப்பற்றி இன்னும் ஒரு தெளிவான முடிவு எடுக்காததால், It is still in the stage of formation, it is not yet a formulated Policy. அதனால்தான் அதைப்பற்றி குறிப்பிடவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு உங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 2-20

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ச. இராமச்சந்திரன்.

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களின் நிதியிலிருந்தும் அரசுத் துறையிலிருந்தும் கோயில் திருப்பணிக்கு நிதி அனுமதிக்கப்படுகிறபோது, தாழ்த்தப்பட்டோரையும், தாய்மார்களையும் அந்தக் கோயிலில் அனுமதிக்க வேண்டுமென்று கண்டிஷன் போடுவதைப்பற்றி அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. ஏற்கெனவே நான் இதைப்பற்றி தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறேன், தாழ்த்தப்பட்டவர்களாக இருந்தாலும், எந்த சமுதாயத்தைச் சேர்ந்த மக்களாக இருந்தாலும் எல்லோரும் கோயிலுக்குள் அனுமதிக்கப்படவேண்டுமென்று சட்டம் ஏற்கெனவே இருக்கிறது. எனவே இதற்காக ஒரு சட்டத் திருத்தம் மீண்டும் கொண்டு வர வேண்டிய அவசியம் இல்லை, ஏற்கெனவே நான் குறிப்பிட்டதைப் போல எந்தக்

கோயிலுக்குள்ளாவது இத்தகைய தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் அனுமதிக்கப்படுவது இல்லையென்ற விபரங்களை அரசுக்கு மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவிப்பார்களானால், அந்தக் கோயில்களிலும் தாழ்த்தப்பட்ட சமுதாய மக்கள் அனுமதிக்கப்பட வேண்டுமென்று ஆணையிட்டு, அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

அ. கோரிக்கை எண். 12—தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் நிருவாகம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண் 12—தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமயஅறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப் படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு ப. ரங்கநாதன்.

திரு. ப. ரங்கநாதன் : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; திரு. ரங்கநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றது. திரு. ஜி. பழனிசாமி. தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்த விரும்புகிறாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. ஜி. பழனிசாமி : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பழனிசாமி அவர்களின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றது.

டாக்டர். தே. குமாரதாஸ். : தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்த விரும்புகிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

டாக்டர் தே. குமாரதாஸ் இருக்கையில் இல்லை.

டாக்டர் தே. குமாரதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாகக் கருதப்பெறுகிறது.

''தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் பற்றிய 12-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 7,84,71,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்'' என்னும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்படுகிறது.



ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக், கோரிய தொகை வழங்கப்பெற்றது.

பேரவையின் இன்றைய முற்பகல் நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றது. பேரவை மீண்டும் இன்று பிற்பகல் 4.30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2.23 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

பேரவை பிற்பகல் 4.30 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் கூடியது.

4. அறிவிப்பு—தொடர்ச்சி.

(ஆ) சென்னைப் பல்கலைக் கழக ஆட்சிமன்றக் குழுவிற்கு உறுப்பினர்கள் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; பேரவைக்கு ஓர் அறிவிப்பு. சென்னைப் பல்கலைக் கழகத்தின் ஆட்சி மன்றக் குழுவிற்கு இச் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் தங்களிலிருந்து ஆறு உறுப்பினர்களை தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு சென்னை பல்கலைக்கழகம் கோரியுள்ளது. தேர்ந்தெடுக்கப்படுபவரின் பதவிக் காலம் தேர்ந்தெடுக்கப்பட்ட நாளிலிருந்து 1-5-1992 வரை ஆகும். இருப்பினும், தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் ஏதாவதொரு காரணத்திற்காக பேரவை உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டால் அந்த நாளோடு இப்பதவிகளின் காலம் முடிவடையும்.

எனவே, வேட்பாளர்கள் நியமனத் தாள்களை 27-9-1991 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்குள் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத் தாள்கள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

நியமனத் தாள்கள் 28-9-1991 சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் 30-9-1991 திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு மேற்படுமாயின் 3-10-1991 வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கும் பிற்பகல் 1.00 மணிக்கும் இடையே சென்னை கோட்டையில் இருக்கும் குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

7. மானியக் கோரிக்கைகள், 1991-92—விவாதமும் வாக்கெடுப்பும் தொடர்ச்சி.

(ஆ) கோரிக்கை எண். 36—பாசனம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும், மானியக் கோரிக்கை எண் 36—பாசனம். மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''பாசனம் பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 119,73,73,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்'' எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1013. திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் : பேரவைத் தலைவர் அவர்களே, 'பேராவூரணி தொகுதியிலுள்ள ராஜா மடம் வாய்க்கால், அலிவலம் வாய்க்கால், பண்ணை வயல் வாய்க்கால், புதுப் பட்டினம் வாய்க்கால், எஸ். பி. சி. வாய்க்கால், ஏ. வி. சாலை வாய்க்கால், கே. வி. சாலை வாய்க்கால், வீரக்குடி வாய்க்கால், அம்மனிசத்திரம் அனைவயல் வாய்க்கால், மற்றும் இதன் கிளை வாய்க்கால்களை தூர்வாரி பராமரிக்க வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''பாசனம் பற்றிய 36ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 193,73,73,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; வெட்டுத் தீர்மானம் எண் 991 டாக்டர் தே. குமாரதாஸ்.

டாக்டர் தே. குமாரதாஸ் ; பேரவைத் தலைவர் அவர்களே. 'கொள்கை பற்றி விவாதிக்க' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''பாசனம் பற்றிய 36—ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 193,73,73,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; வெட்டுத் தீர்மானம் எண் 1006. திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி ; பேரவைத் தலைவர் அவர்களே, 'தஞ்சை மாவட்டத்தில் பாசன ஆறு வாய்க்கால்கள் சீர்கெட்டு இருப்பதால், நவீன பாசன திட்டம் அமைத்துத் தர வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



''பாசனம் பற்றிய 36ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 193,73,73,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.

(இ) கோரிக்கை எண் 37—பொதுப் பணிகள்—கட்டிடங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; மானியக் கோரிக்கை எண் 37—பொதுப் பணிகள்—கட்டிடங்கள். மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''பொதுப் பணிகள்—கட்டிடங்கள் பற்றிய 37-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 4,28,90,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள், வெட்டுத் தீர்மானம் எண் 1036. திரு. சி. சுவாமிநாதன். இருக்கையில் இல்லை.

அடுத்த வெட்டுத் தீர்மானம் எண் 1034, டாக்டர் தே. குமாரதாஸ்.

டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''கொள்கைப் பற்றி விவாதிக்க'' நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''பொதுப் பணிகள்—கட்டிடங்கள் பற்றிய 37-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 4,28,90,000—ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

(ஈ) கோரிக்கை எண் 38—பொதுப்பணிகள்—பணியாளரமைப்பும் கருவிகளும் தளவாடமும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண் 38-பொதுப் பணிகள்-பணியாளரமைப்பும், கருவிகளும் தளவாடமும். மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பொதுப் பணிகள்—பணியாளரமைப்பும், கருவிகளும், தளவாடமும் பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 47,58,16,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

பிற்பகல் 4.35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1058. திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொதுப்பணித் துறையில் பணியாற்றும் தற்காலிக ஊழியர்களை நிரந்தரமாக்குவது குறித்து விவாதிக்க" நான் கீழ்க் கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணிகள்—பணியாளரமைப்பும், கருவிகளும், தளவாடமும் பற்றிய 38 ஆம் எண். மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 47,58,16,000-ல் ரூ. .00 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1052. டாக்டர் தே. குமாரதாஸ்.

டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி விவாதிக்க" நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணிகள்—பணியாளரமைப்பும், கருவிகளும், தளவாடமும் பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 47,58,16,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

(உ) கோரிக்கை எண் 39—சாலைகளும், பாலங்களும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 39—சாலைகளும் பாலங்களும். மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே,

"சாலைகளும் பாலங்களும், பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 171,78,12,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் வெட்டுத் தீர்மானம் எண் 1117. திரு. எச். எம். ராஜு.

திரு. எச். எம். ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீலகிரி மாவட்டம், உதகை-குந்தா வழித்தடத்திலுள்ள காத்தாடி மட்டம் சந்திப்பு (12-வது கிலோ மீட்டர்) முதல் எடக்காடு வரை—தங்காடு, ஹோரநள்ளிகன்னேரி-மந்தனை வழியாக செல்லும் பெருஞ்சாலை மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளபடியால், இந்த சாலையைச் சீரமைக்க வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க" நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைகளும், பாலங்களும் பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 171,78,12,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1061. டாக்டர் தே. குமாரதாஸ்.

டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி விவாதிக்க' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைகளும், பாலங்களும் பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.171,78,12,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

பிற்பகல் 4.35

(ஊ) கோரிக்கை எண் 55—பாசனம் குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 55—பாசனம் குறித்த மூலதனச் செலவு. மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பாசனம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 55 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 85,69,14,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் வெட்டுத் தீர்மானம் எண். 1133. திரு. சா. பன்னீர் செல்வம்.

திரு. சா. பன்னீர் செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உலக வங்கி நிதியுதவியுடன் அணை பாதுகாப்பு திட்டத்தின் கீழ் வீடூர் அணை பாதுகாப்புப் பணியினை நடப்பு ஆண்டில் ஆய்வு செய்து பணி மேற்கொள்ள வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க" நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 55ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 85,69,14,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

(எ) கோரிக்கை எண் 56—பொதுப்பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 56—பொதுப் பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு. மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பொதுப் பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 56-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 49,62,79,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1134. திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர் சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. "கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 56 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 49,62,79,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

(ஏ) கோரிக்கை எண் 57—சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதன செலவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 57—சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச் செலவு. மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



"சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச்செலவு பற்றிய 57 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 34,33,34,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1149. திரு. ஆர். தங்கராஜ்.

திரு. ஆர். தங்கராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருச்சி மாவட்டத்தையும், தென் ஆற்காடு மாவட்டத்தையும் இணைக்க ஆண்டிமடம் தொகுதியிலுள்ள கோட்டைக்காட்டில் வெள்ளாற்றில் பாலம் கட்டுதல் குறித்தும் விவாதிக்க" நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைகள்-பாலங்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 57ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 34,33,34,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப் படுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை ஆகிய துறைகளைப் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அதில் தமிழில் உள்ள குறிப்புகளை நான் இந்த அவையில் படித்ததாகக் கருதி ** அவை நடவடிக்கைக் குறிப்பில் ஏற்றிக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். உறுப்பினர்கள் நல்குகின்ற மேலான கருத்துக் களையும் யோசனைகளையும் கேட்டதற்குப் பின்னாலே நான் அரசின் சார்பிலே அளிக்க வேண்டிய முடிவுகளையும் அதற்குப் பின்னாலே என்னுடைய விளக்க உரையையும் தரக் கடமைப் பட்டு இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 4-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன் அவர்கள்.

திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப்பணித்துறை மானியக் கோரிக்கை மீது எனக்கு பேச வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கும், மயிலாடுதுறை மக்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்

** 269 முதல் 319 வரையிலான பக்கங்களில் இரண்டு முதல் 4 வரையிலான இணைப்புகளாக அச்சிடப்பெற்றுள்ளன.

கொள்கிறேன். உலகம் புகழும் ஒப்பற்றத் தலைவி அன்னை இந்திரா காந்திக்கு ஈடு இணையாக இருந்து வரும் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுக்கு என் தொகுதி மக்கள் சார்பாக வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் தமிழ்நாட்டில் இருக்கும் தெய்வங்களில் கண்கண்ட தெய்வமாக நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் விளங்குகிறார்கள் என்று சொல்வதை கேட்டு நானும் சந்தோஷம் அடைகிறேன், ஆனந்தம் அடைகிறேன். (மேசைலயைத் தட்டும் ஒலி)

குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் என்னுடைய முஸ்லீம் சமுதாய மக்கள் அம்மையாரிடம் வைத்திருக்கும் நமபிக்கையை குறித்து நான் தெளிவாக எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் எங்கள் முஸ்லீம் பெண் மக்கள் மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்களிடம் வைத்திருக்கும் நம்பிக்கையை மாற்ற எந்த முஸ்லீம் தலைவர்கள் வந்து எடுத்துச் சொன்னாலும் எடுபடாது என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப் படுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதைச் சொல்வதில் பெருமை அடைகிறேன் என்பதைச் சொல்லிக் கொண்டு என்னுடைய உரையைத் தொடங்குகிறேன்.

நான் 1970 ஆம் ஆண்டிலிருந்து 1975 ஆம் ஆண்டு வரையில் மயிலாடுதுறை நகராட்சி மன்றத் தலைவராக இருந்து நகராட்சிக்கு வருவாயை அதிகரித்து, மயிலாடுதுறை மையப் பகுதியில் அங்காடியை உருவாக்கினேன். பேருந்து நிலையத்தில் நவீன கழிப்பறையைக் கட்டினேன். நகராட்சி எல்லையில் உள்ள அனைத்து மண் சாலைகளையும் தார்ச்சாலைகளாக மாற்றிக் கொடுத்தேன். பயணிகள் வசதியை முன்னிட்டு பேருந்து நிலையத்தை நவீனப்படுத்தி கட்டிக் கொடுத்தேன். மகளிர் கலைக்கல்லூரி அமைக்க நகராட்சி இடத்தைக் கொடுத்து அந்த இடத்தில் கல்லூரி அமைய காரணமாக இருந்தேன். இதற்குப் பிறகு மயிலாடுதுறை நகராட்சிக்கும், தொகுதிக்கும் எந்தவிதமான திட்டங்களையும் நிறைவேற்றித் தர சரியான பிரதிநிதிகள் வரவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதனால் முன்னேற்றம் அடையாமல் வந்துள்ள என்னுடைய தொகுதியில் தொகுதி மக்கள் கீழ்க்கண்ட கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். அவைகளை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களும், மாண்புமிகு அமைச்சர் அவர்களும் நிறைவேற்றித் தந்து என்னுடைய தொகுதி மக்கள் வயிற்றில் பால் வார்ப்பார்கள் என்று நம்புகிறேன்.

தஞ்சை என்று சொன்னாலே நஞ்சையும் புஞ்சையும் கொஞ்சி விளையாடும் மாவட்டம் என்று சொல்வார்கள். ஆனால், சென்ற ஆட்சி நடைபெற்ற காலத்தில் தஞ்சையில் நஞ்சையும் புஞ்சையும் கொஞ்சி விளையாடவில்லை. அவை கெஞ்சி தான் கிடந்தன என்பதை கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.



இந்த மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியில் தஞ்சை மீண்டும் கொஞ்ச ஆரம்பித்து இருக்கிறது. இதனை இந்தப் பேரவையில் சொல்வதற்குக் காரணம், பல ஆண்டுகளாக தண்ணீரே கண்டிராத காவிரியில் தற்போது மாண்புமிகு புரட்சித் தலைவி ஆட்சியில் பொறுப்பேற்றவுடன் தண்ணீர் ஓடுகிறது. மாண்புமிகு புரட்சித் தலைவி ஆட்சியில் தெய்வமே இயற்கையாகத் தண்ணீரை காவிரியில் விட்டு இருக்கிறது. இதைக் காணும்போது மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சி தமிழகத்தின் பொற்கால ஆட்சி என்பது நிருபணம் ஆகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

இது ஒரு பாடலில் வந்திருக்கிறது. அது 12 பாடல்களாக இருந்தாலும், அதை முழுவதையும் நான் பாடிக் காட்டுவதற்கு ஆசைப்படவில்லை. ஒரு பாடல் மட்டும் அதிலே சொல்ல ஆசைப் படுகிறேன். எனது சொந்த ஊர் அதிராம்பட்டினம். அந்த அதிராம்பட்டினத்தில் 12 ஆண்டுகளாக மழை இல்லாததன் காரணமாக நைனா முகமது புலவர் அவர்கள் கனவில் கண்டு 40 நாட்கள் தவமிருந்து, ஒரு பாடலை பாடினார். அந்தப் பாடலை, பாட்டை நான் பாடவில்லை. காரணம் சபையில் அதைக் கேட்டு சிரிப்பார்கள் என்று கருதுகிறேன். ஆகவே, அந்தப் பாடலின் வார்த்தைகளை மட்டும் சொல்ல விரும்புகிறேன். அவர் பாடிய ஆரம்பப் பாடல்——

''வேதம் ஓதிய வேதியராலேயோ
விட்ட கற்பினை கன்னியராலேயோ
நீதி தவறிய நெறிமுறையாலேயோ
இந்த மழை பெய்யவில்லை.
எங்கள் முகமது நபிக்காக வேண்டிக்
கொண்டு கொட்டென கொட்ட அருள் புரிவாய்,
கோடி நிலா வடிவே''

என்ற 12 அடிக் கொண்ட பாடலைப் பாடினார். இதை பாடியவுடன் மழையை நிறுத்த முடியவில்லை, மழை வேண்டாம் என்று மக்கள் வேண்டிக் கொண்டார்கள். அந்த பாடலுக்கு, புலவருக்கு ஒப்பாக அத்தனை பொருத்தமும் அத்தனை தகுதியும் நம்முடைய புரட்சித் தலைவி அவர்களுக்கு உண்டு என்பதைச் சொல்லிக் கொள்ளத்தான் இந்தப் பாடலை பாடுகிறேன். அதனால்தான் காவிரியிலே தண்ணீர்-இந்தப் பாடலுக்கு ஒப்பாக இந்த அம்மையார் ஆட்சி ஏற்றவுடன்—வருகிறது என்பதைப் பார்க்க நாம் எல்லோரும் சந்தோஷப்பட வேண்டிய நிலைமையில் இருக்கிறோம்.

[மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை]

இன்றையதினம் தஞ்சை மாவட்டம் என்பது முழுக்க முழுக்க விவசாயத்தை நம்பிக் கொண்டிருக்கிற ஒரு மாவட்டமாகும். அதனுடைய விவசாயப் பரப்பு 16 இலட்சத்து 8 ஆயிரத்து 150 ஏக்கர் ஆகும். காவிரி பகுதியில் மொத்தம் 36 ஆறுகள் இருக்கின்றன. இவைகளில் மண் எடுத்ததன் காரணமாக, ஆறுகள் பள்ளமாகி, அதன் காரணமாக இன்றையதினம் ஆறுகளில் தண்ணீர் ஏறிப் போகிற சூழ்நிலை இல்லை. உதாரணமாக எடுத்துக் கொள்வோமானால், என் தொகுதியான மயிலாடு துறையில் உள்ள மூவலூர் கிராமத்தில் காவிரியிலிருந்து பிரியும் பழங்காவிரி பழைய வாய்க்காலில் தண்ணீர் ஏறவில்லை. கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை என்று சொல்வார்களே, அதைப் போல, இன்றையதினம் காவிரியில் தண்ணீர் வந்தாலும், பழங் காவிரியில் தண்ணீர் பாயாமல், அதனால் பல ஏக்கர் விவசாயம் இன்று பாதிக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர கடமைப்பட்டு இருக்கிறேன்.

பிற்பகல் 4.45

மேலும் பழங்காவிரியில் தண்ணீர் ஏறினால்தான் மயிலாடு துறைப் பகுதியில் உள்ள சுமார் 50 குளங்களுக்கு தண்ணீர் வரும் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். சென்ற அரசு மயிலாடு துறை ஒன்றியம், மூவலூர் கிராமத்தில் ரெகுலேட்டர் ஒன்றினை, காவிரிக்கும், பழங்காவிரிக்கும் இடையில் கட்டுவதற்கு திட்டம் தீட்டியும், அது இதுவரையில் கட்டப்படாமல் இருந்து வருகிறது. எனவே மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் அங்கு அவசியம் ஒரு ரெகுலேட்டரைக் கட்டித் தர வேண்டும் என்று வேண்டுகிறேன்.

என் தொகுதியான மயிலாடுதுறையில், 1969-ல் துவங்கப்பட்ட பொதுப்பணித் துறையின் காவிரி சீரமைப்புக்கோட்டம், கடந்த 14–4–1991 அன்று முதல் மூடப்பட்டு விட்டது. இக் கோட்டம் சென்ற 20 வருட காலத்தில், ரூ. 1,500 லட்சம் மதிப்பில் கால்வாய் புதுப்பிக்கும் வேலைகளை சுமார் 240 கிலோ மீட்டர் நீளத்திற்கு செய்து முடித்துள்ளது. மற்றும் 116 வாய்க் கால் வேலைகளை சுமார் 88 லட்சம் ரூபாய் செலவில் முடித்து உள்ளது. இந்த வளர்ச்சிப் பணிகளின் காரணமாக, தஞ்சை மாவட்டத்தில் உணவு உற்பத்தி பல கோடிக்கணக்கான ரூபாய்க்கு பெருகி உள்ளது.

மேலும் இந்தக் கோட்டத்தின் மூலமாக, தஞ்சை காவிரி கடைமடைப் பகுதியில் 1995-ஆம் ஆண்டு வரைக்கான வேலைகள் சுமார் 950 லட்சம் ரூபாய் மதிப்பில், 125 கிலோ மீட்டர் நீளத்திற்கான லைனில், பணிகள் திட்டமிடப்பட்டு அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டு இருக்கிறது. இந்த நிலையில், இந்தக் கோட்டம் மூடப்பட்டு விட்டதால், தஞ்சை காவிரி கடைமடைப் பகுதிகளின் வளர்ச்சி பாதிக்கப்பட்டுள்ளது. இது மேலும் உணவு உற்பத்தியில் பெரிய அளவில் உற்பத்தி இழப்பை ஏற்படுத்த வாய்ப்பு உள்ளது. தஞ்சை மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப் பட்டு இருக்கிற சூழ்நிலையில், மயிலாடுதுறையில் நிரந்தரக் கோட்டத்தை எற்படுத்தித் தர வேண்டும் என்று தஞ்சை மாவட்ட, காவிரி கடைமடைப்பகுதி மக்கள் சார்பில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களையும் வேண்டுகிறேன்.



சாலைகளை எடுத்துக்கொள்வோமானால், கிழக்குக் கடற்கரை சாலைகளை மேம்படுத்தும்பொருட்டு, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுடைய கோரிக்கையில் 53 கோடி ரூபாயை, சென்னை யிலிருந்து கடலூர் வரை உள்ள சாலைக்கு செலவிடப்படும் என்று கூறினார்கள். கிழக்குக் கடற்கரைச் சாலை என்பது சென்னை யிலிருந்து ஆரம்பித்து கடலூர் வரையில் நின்றுவிடுவதில்லை என்பதை இப்பேரவைக்கு தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். கிழக்குக் கடற்கரைச் சாலை, சென்னையிலிருந்து ஆரம்பித்து, கடலூர், நாகப்பட்டினம், வேதாரண்யம், அதிராம் பட்டினம், மல்லிப்பட்டினம், தொண்டி, ராமநாதபுரம் வழியாக ராமேஸ்வரம் வரை செல்கிறது. கிழக்குச் கடற்கரை சாலை கடலூரைத் தாண்டி மிகவும் சேதமடைந்துள்ளது. ஆதலால், விடுதலைப்புலிகள் இன்றைய தினம் இந்தக் கடற்கரை சாலையின் சீர்கேட்டைச் சாதகமாக்கிக் கொண்டு, மிக எளிதில் கடலோரப் பகுதிகளில், தரமான வாகனங்களைக் கொண்டு, அந்த சாலையில் தப்பிவிடுகிறார்கள். விடுதலைப் புலிகளை புறமுதுகிட்டு ஓடஓட விரட்டிக் கொண்டிருக்கும், மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்கள் இந்தக் கிழக்குக் கடற்கரைச் சாலையை ராமேஸ்வரம் வரை சீரமைத்து தரும்படி வேண்டுகிறேன்,

பிற்பகல் 4-50

என்னுடைய தொகுதியான மயிலாடுதுறையைப் பொறுத்த வரையில் போக்குவரத்திற்கு என்று ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்ட குறுகிய பழுதடைந்த பாலம்தான் இருக்கிறது. தற்கால மக்கட்தொகையும், வாகனங்களும அதிக மாகி விட்டதால் போக்குவரத்திற்கு இடையூறாக இருக்கிறது. இதுவரை அகலப்படுத்தவோ, சீர் செய்யப்படவோ இல்லை. எனவே அதைப் புதுப்பித்து தருவதோடு பெருகி வரும் போக்கு வரத்து நெரிசலை தவிர்க்க அரசு மருத்துவமனைச் சாலையில் காவிரியின் குறுக்கே நடைபாதைப் பாலத்தை வாகனப் போக்கு வரத்துப் பாலமாக மாற்றி அச்சாலையை ஒரு பை–பாஸ் சாலையாக மாற்றித் தரும்படி மாண்புமிகு முதல்வர் அவர்களை, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களை என் தொகுதி மக்கள் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதல்வர், புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் 'இல்லை' என்ற சொல்லுக்கே இடமில்லை என்பதற்கிணங்க, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் நிதிநிலையைக் காரணம் காட்டி, இல்லையென்று சொல்லிவிடாமல் மயிலாடுதுறை நகரில் அரசு பொது மருத்துவமனைச் சாலையில் நடைபாதை பாலத்தை போக்குவரத்து பாலமாக மாற்றித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மயிலாடுதுறை ஒன்றியத்தில் கேசிங்கல் கிராமத்தையும் மணல்மேடு பேரூராட்சியை இணைக்கும் பாலத்தையும்—கேசிங்கல் கிராமத்தையும் பாக்கும் காவாளமேடு கிராமங்களையும் இணைக்கும் பாலத்தையும் கட்டித் தர வேண்டுமாய் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களை அத்தொகுதி மக்களின் சார்பில் வேண்டுகிறேன்.

தஞ்சை மாவட்டம் மயிலாடுதுறை தொகுதியில் விவசாயத்தையே நம்பிக்கொண்டிருக்கிற விவசாயப் பெருமக்களுக்கு அடிப்படைத் தேவையான தண்ணீர் வசதி, சாலைகள், பாலங்கள், மின்சாரம், வீட்டுவசதி ஆகியவைகளை எல்லாம் அரசின் சார்பாக மேம்பாடு செய்து கொடுக்க வேண்டுமென்று என்னுடைய தொகுதி மக்கள் சார்பாக நான் கேட்டுக்கொண்டு, இந்த ஆட்சிக்கும், மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கும், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவருக்கும் நன்றியைக் கூறி, அமைகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. கே. சிங்காரம்.

திரு. கே. சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத் தேர்தலில் அ.இ.அ.தி.மு.க. இறுதி வேட்பாளர் பட்டியல் அறிவிக்கப்பட்டுவிட்ட நிலையில் மொரப்பூர் தொகுதியில் அறிவிக்கப்பட்ட வேட்பாளருக்கு ஆதரவாக செயல்வீரர்களை சந்தித்துவிட்டு தூங்கிக் கொண்டிருந்த என்னை வானொலி செய்தி விழித்தெழ வைத்தது அதிர்ந்து விட்டேன்; ஆம்; இன்ப அதிர்ச்சியில் ஆழ்ந்துவிட்டேன் கனவு காண்கிறேனோ என்று கூட எண்ணி விட்டேன்; ஆ என்னை நானே நம்ப முடியாத அளவிற்கு செய்தி, மாநில செய்தி, மொரப்பூர் தொகுதி வேட்பாளர் மாற்றப்பட்டு கே. சிங்காரம் அறிவிக்கப்பட்டுள்ளார் என்ற செய்தி. 12 ஆண்டு களாக ஒன்றியச் செயலாளராக பணியாற்றிக் கொண்டிருக்கின்ற என்னை, பல கால கட்டங்களில் ஆதிக்க வர்க்கத்தினரால் புறக்கணிக்கப்பட்ட என்னை, இன்னவன் இனியாரென்று யாருமே அறிய என்னை தொண்டன் இவன் தானென்று சட்டமன்ற வேட்பாளராக்கி, சட்டமன்ற உறுப்பின ராக்கி இம்மாமன்றத்தில் முதன் முறையாகப் பேசுகின்





வாய்ப்பினை நல்கிய நான் வணங்கும் தெய்வம் என் தாயினும் மேலான இதய தெய்வம் புரட்சித் தலைவியின் பொற்பாதங்களை வணங்கி 'மன்னவன் செய்த நன்றி மறப்பனோ பிறப்பிலேழு' என்று கூறி புரட்சித் தலைவியின் புனித ஆட்சி வேண்டும் என்பதற்காக என்னை சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுத்த மொரப்பூர் தொகுதி வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்து, கன்னி உரையைத் துவக்குகிறேன்.

'இடிப்பாரை இல்லா ஏமரா மன்னன் கெடுப்பார் இலானும் கெடும்' யானைக்கு அங்குசம் போல் எந்த ஆட்சிக்கும் எதிர்க்கட்சி, அத்தகைய எதிர்க்கட்சித் தலைவியாய் செயல்பட்ட புரட்சித் தலைவியை கயவர்கள் செய்ததென்ன? தி.மு.க. கயவர்கள் செய்ததென்ன? இம்மாமன்றத்தில் துச்சாதனனாய் மாறித் துகிலுறிய முயன்றனர். பாஞ்சாலிக்கு ஆயர்பாடிக் கண்ணன், புரட்சித் தலைவிக்கு இன்பத் தமிழகமே கண்ணனாய் வந்து கரம் நீட்டி உதவியது. தலைவியின் சபதம் தரணியில் நிறைவேற, புரட்சித் தலைவியின் தொண்டர்கள் இதுதான் காங்கிரஸ் என்ற நிலைக்குப் பின்பானக் காங்கிரஸ் தொண்டர்கள் சிங்கமென சீறிப்பாய்ந்தனர். பொங்கி வரும் காவிரி போல், போர்ப் பரணி பாடிவந்த புரட்சிக் குயிலுக்கு எங்கும் செல்வாக்கு இமயத்தைத் தொட்டது. தங்குதடையின்றி தந்தார்கள் தாய்மார்கள், தங்கள் ஆதரவை நூற்றுக்கு நூறு சதம் பெற்றார்கள் வெற்றியினை. புரட்சித் தலைவியைப் போல் பூ உலகில் பெற்றதில்லை, தரணியில் அவர் வெற்றி எந்நாளும் தலைவியின் தனி வெற்றி—புரட்சித் தலைவியின் தனி வெற்றி. அவ்வெற்றிதான் ஆட்சி என்னும் குழந்தை. இதை ஏன் குறிப்பிடுகிறேன் என்றால் இந்த ஆட்சி நாங்கள் பெற்றெடுத்த குழந்தை; ஆட்சி மாற்றத்திற்குக் காரணம் நாங்கள் என்பது போலப் பேசி வருகின்ற மாண்புமிகு உறுப்பினர் ஒருவருக்காக. மனிதன் உயிர் வாழத் தேவை உண்ண உணவு, உடுக்க உடை, உறைவிடம். இந்த மூன்றிற்கும் தொடர்புடையத் துறை பொதுப் பணித்துறை. மொரப்பூர் தொகுதி வறண்ட பகுதி. நிலத்தடி நீர் ஆதாரம் இல்லாத பகுதி. 50 அடி ஆழத்திற்குக் கீழ் எங்கும் பாறை. சராசரி மழையளவும் குறைவு. எனவே பல ஆண்டுகளுக்கு முன்பு ஆய்வு செய்யப்பட்டு அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ள பொதியன் பள்ளம் அணைக்கட்டுத் திட்டத்தை இந்நிதியாண்டில் பகுதி 2 திட்டத்தின் கீழ் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 4-55

'தட்டுங்கள் திறக்கப்படும் கேளுங்கள் கொடுக்கப்படும்' என்ற கூற்றைப் பொய்யாக்கி கேட்காமலேயே, எங்கள் மாவட்டத்திற்கு பல திட்டங்களை அள்ளித் தந்திருக்கின்ற புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால அரசில் மேற்குறிப்பிட்ட திட்டத்தை நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் வேப்பாடியாறு அணைக்கட்டுத் திட்டம், வள்ளி மதுரை அணைக்கட்டுத் திட்டம், சனத்குமார் நதி அணைக்கட்டுத் திட்டம், வத்தல் மலைக்குப் பாதை அமைக்கும் திட்டம், சித்தேரி மலைப்பகுதியில் பாலக்குட்டை முதல் தும்பல் வரையிலான 14 கி. மீட்டர் சாலை அமைக்கும் திட்டம், மொரப்பூர் இரயில்வே மேம்பாலத் திட்டம், ஈச்சம்பாடி–மல்லமாபுரம் சாலை அமைக்கும் திட்டம், தென்பெண்ணையாற்றின் குறுக்கே பாலம் கட்டும் திட்டம் ஆகியவற்றை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். வர்கள் காலத்தில் கெலவரப்பள்ளி நீர்த்தேக்கத் திட்டத்தை அறிவித்தார். அதை துரிதப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அத்துடன் கடத்தூர்–பட்டிரெட்டிப்பட்டி நெடுஞ்சாலையில் ஓர் பாலம் கட்டும் திட்டம், வாணியாறு நீர்த்தேக்கத் திட்டத்தை உயரப்படுத்தி இராமியன்ஹள்ளிப் பகுதி வரைக்கும் இடதுபுறக் கால்வாயை நீட்டித்துத் தரவேண்டிக் கொள்வதோடு வாய்ப்பளித்த பேரவைத் தலைவருக்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : செல்வி கோ. மல்லிகா

*செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தன்னிகரல்லாத தங்கத் தலைவியாம், சத்தியத் தாய்ஈன்றெடுத்த முத்தாய் தமிழகத்தைக் காக்க வந்த சக்தியாய் ஊக்கமுடன் உருவெடுத்து ஏங்கித் தவிக்கும் ஏழைகளை வாழ்விக்க வந்த ஏந்தலாய், ஏய்க்கும் சக்திகளை விரட்டியடித்து, ஐயமின்றி அனைத்தும் வழங்கிட ஒப்பிலா ஒளியாய், ஓளவியம் பேசுவோரை அரவணைத்து ஆட்சி செய்யும் ஒப்பற்ற தலைவியே, என் இதய தெய்வமே, உந்தன் பொற்பாதக்கமலம் தொட்டு என் பணிவான வணக்கங்களை உந்தன் பாதங்களில் பாதகாணிக்கையாக்குகிறேன்.

பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவரின் பொன்னான ஆட்சியை மீண்டும் தொடரச் செய்துள்ள எங்கள் விடிவெள்ளியே, விலாசம் தெரியாத என்னையும் இந்த அவையில் அமரச் செய்த உங்கள் பொற்பாதங்களில் என் நன்றி மலர்களை காணிக்கையாக்குகின்றேன். புவனகிரி தொகுதி மக்கள் எத்துணை இன்னல்வரினும் இரட்டை இலைக்கே எங்கள் ஓட்டு எனப் புரட்சித் தலைவியின் கரத்தை பலப்படுத்த எனக்கு வாக்களித்ததற்கு என் தொகுதி மக்களுக்கு என் உள்மார்ந்த நன்றியினை இந்த அவையின் முன் தெரிவித்துக் கொள்கிறேன்.

உலகம் வியக்கும் வண்ணம் வெற்றி வாகை சூடி ஆட்சி பீடம் ஏறிய அன்பு அன்னை, இத்தமிழ் மக்களின் நெஞ்சங்களில் உட்புகுந்து அவர்களின் வேதனை ஒளியை அறிந்து விரைந்து சென்று உதவிக்கரம் அளிக்கும் வகையில் அளிக்கப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தின் அடிப்படையில் பல நல்ல திட்டங்களை உள்ளடக்கியதாக இங்கே அவை முன் வைக்கப்பட்டுள்ள பொதுப்



பணித்துறை மானியக் கோரிக்கையை நான் மனமார வரவேற்கிறேன். தேசிய நீர் நிர்வாகத் திட்டத்தின் கீழ் இவ்வாண்டில் ரூ. 6.69 கோடி செலவில் சேத்தியாத்தோப்பு பாசன நிருவாகத் திட்டம் மேற்கொள்ளப்படும் என்கிற அறிவிப்பு தென் ஆற்காடு மாவட்ட மக்களின் நெடுநாளைய எதிர்பார்ப்பை ஈடு செய்வதாக அமைந்துள்ளது. அதற்காக அந்த மக்கள் கூறும் நன்றிச் சொற்களை இந்த அவை முன் எடுத்துரைக்க விரும்புகிறேன். தனி ஒரு மனிதனுக்கு உணவில்லையேல் ஜகத்தினை அழித்திடுவோம் என்ற பாரதி கண்ட புதுமைப்பெண் புரட்சித் தலைவியின் ஆட்சியில் புத்துயிர் பெறுவோம் என எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் விவசாய மக்களின் கோரிக்கையாக ஒரு திட்டத்தை நான் கூற விரும்புகிறேன். வீணாக கடலில் கலக்கும் கொள்ளிடம் நீரை தேக்கி கான்சாகிப் வாய்க்கால் வழியாக திருப்பி விடுவதன் மூலம் 20,000 ஏக்கர் தரிசு நிலங்கள் விளை நிலங்களாகும் வாய்ப்புள்ளது. புவனகிரி தொகுதி விவசாய மக்களுக்கு இது ஒரு வரப்பிரசாதமாக இருக்கும் என்பதால் இத்திட்டத்தை நிறைவேற்றித் தருமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போலவே, பரங்கிப்பேட்டை ஒன்றியத்தில் அலுவம்பட்டு ஊராட்சியில் பாசிமுத்தான் ஓடையில் ஓடும் நீரில் கடல் நீர் பாய்ந்து தண்ணீர் உப்பு நீராக மாறி விடுவதால் விவசாயிகளுக்கு ஏற்படும் இன்னல்களையும், 5,000 ஏக்கர் நிலம் மானாவாரியாக பயிர் செய்ய வேண்டிய நிலையில் குடிதண்ணீரே உப்பு நீராகின்ற நிலையை மாற்றும் வகையில் கடல் நீர் கலக்காமல் இருக்க ஒரு தடுப்புச் சுவர் கட்டித் தரவும், பாசிமுத்தான் ஓடையில் வெள்ளம் வரும் காலங்களில் நீர் கடலில் கலக்கவும் வழி வகை செய்து தர வேண்டுகிறேன்.

மீனவ பெருங்குடி மக்கள் வாழும் முடசல் ஓடை கிராமத்தில் வெள்ளாற்றின் உப்பு நீர் கடலில் கலக்கும் முகத்துவாரம் மணல் மேடாகி நீர்போக்குவரத்து தடைப்பட்டிருப்பதால் வெள்ளாற்றை கடலுடன் இணைக்கும் வகையிலும், விசைப்படகுகள் பயன்படுத்தி தொழில் செய்யும் மீனவர்கள் பயன் பெறவும், அதன் மூலம் மீன்பிடி தொழில் முன்னேற்றம் அடையவும் வாய்ப்பு ஏற்படும். அப்பகுதியில் இறால் மீன் அதிகம் கிடைப்பதால் ஏற்றுமதி செய்து அந்திய செலாவணி கிடைக்கவும் வாய்ப்புள்ளதால் இத்திட்டத்தை விரைவில் நிறைவேற்றித் தர மத்திய அரசிடம் பரிந்துரை செய்ய வேண்டும் என அன்போடு கோருகிறேன்.

தி.மு.க. ஆட்சியினால் வீராணம் திட்டத்தில் வீணடிக்கப்பட்ட குழாய்களை பயன்படுத்தி வாய்க்காலை அகலப்படுத்தி ஆழப்படுத்தி நெய்வேலி 2-வது சுரங்கத்தின் உபரி நீரை புவனகிரி தொகுதி மக்களுக்கு குடிநீராகவும் பாசன நீராகவும் பயன்படும் வகையில் ஒரு புரட்சிகரமான திட்டத்தை நமது புரட்சித் தலைவியின் அரசு பரிசீலிக்க வேண்டுமென தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

[செல்வி கோ. மல்லிகா] [1991 செப்டம்பர் 26

பிற்பகல் 5-00

குறைவான நீர் வளமே இருப்பினும், நிறைவான பயனைப் பெற வேண்டும் என பாடுபட்டு, புவனகிரி பகுதி விவசாயிகள் மணம் கமழும் மல்லிகைச் செடிகளை ஏராளமாகப் பயிரிட்டு வருகின்றனர். இவர்களின் வாழ்வு ஏற்றம்பெற அந்தப் பகுதியில் ஒரு சென்ட் தொழிற்சாலை தொடங்க அரசு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ரூ. 1,433 கோடி செலவில் அரோமேடிக் தொழிற்சாலை என வரவு–செலவு திட்டத்தில் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் இத்திட்டமும் அதில் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும் என விரும்புகிறேன்.

சேத்தியாத்தோப்பிலுள்ள கூட்டுறவு சர்க்கரை ஆலையில் கிடைக்கும் சக்கையைப் பயன்படுத்தி புவனகிரியில் ஒரு காகித தொழிற்சாலை நிறுவ அன்புத் தாயிடம் அடிபணிந்து வேண்டுகிறேன். மேலும் சேத்தியாத்தோப்பில் ஒரு பஸ் நிலையத்தை அமைத்துத்தர வேண்டும் என்றும் வேண்டுகிறேன்.

பரங்கிப்பேட்டை, சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இடமாகும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் அவையில் அமைதி காக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

செல்வி கோ. மல்லிகா : துணைத் தலைவர் அவர்களே, வெள்ளையர் ஆண்ட காலத்தில் பிரசித்தி பெற்ற துறைமுக நகரமாக இருந்த அந்த இடம் தற்போது பின்தங்கிய நிலையில உள்ளது. எனவே பரங்கிப்பேட்டை ஒன்றியத்தில் தொழிற்சாலை ஒன்றை அமைத்துத் தருமாறு அம்மா அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

சென்னையில் மூடியிருக்கும் பின்னி தொழிற்சாலை புவனகிரிக்கு வரும் என்று மக்கள் எதிர்பார்க்கின்றனர். அதை நிறைவேற்றித் தருமாறு அம்மா அவர்களை வேண்டுகின்றேன்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரால் உருவாக்கப்பட்ட சேத்தியாத்தோப்பு கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு சம்பந்தமே இல்லாத தி.மு.க. மாவட்ட செயலாளர் எம். ஆர். கிருஷ்ணமூர்த்தி பெயர் சூட்டியுள்ளதை மாற்றி டாக்டர் புரட்சித் தலைவர் எம் ஜி. ஆர். கூட்டுறவு சர்க்கரை ஆலை என்று மாற்றித் தருமாறு மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களை தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அறிஞர் அண்ணாவால் ஈர்க்கப்பட்டு புரட்சித் தலைவரால் உருவாக்கப்பட்டு உலக வரலாற்றில் பிரசித்திப்பெற்ற பிச்சாவரம் சுற்றுலா மையம் கடந்த அரசால் கவனிக்கப்படாமல் இருந்ததால் அது தற்போது பொலிவு இழந்துள்ளது. அதற்கு கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்பதை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் மேன்மையான பார்வைக்கு கொண்டு வருகிறேன்.



1991 செப்டம்பர் 26] [செல்வி கோ. மல்லிகா]

'நாபார்டு' நிதியுதவியுடன் அடுத்த 10 ஆண்டுகளில் 75,000 கைத்தறிகளைப் படிப்படியாக விசைத்தறிகளாக மாற்றுவதையும் இப்பாண்டில் இத்திட்டத்தின் தொடக்க பணிக்கு ரூ. 30 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளதையும் இதய பூர்வமாக வரவேற்கிறேன்.

மழைக்காலத்திலும் தொடர்ந்து நெசவாளர்கள் வேலை செய்யும் வகையில் பாவு நூல் ஒழுங்குபடுத்த உரிய வகையில் கூடாரங்கள் அமைத்துக் கொடுக்குமாறும், நீண்ட நாட்களாக புவனகிரி தொகுதி நெசவாளர்கள் கைத்தறி தொழிலையே செய்து வருவதால விடிவு பெறாத அவர்களுடைய வாழ்க்கையில பொருளாதார நிலையில் சீரடைய காலத்தையொட்டி துணி தேவையை பொருத்து விசைத்தறி நெசவாளர் சங்கம் அமைத்துத் கொடுத்து, நிம்மதியான நிலையானதுமான பொருளாதார தன்னிறைவுபெற வாய்ப்பு ஏற்படுத்தித் தர வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்,(மணியடிக்கப்பெற்றது) என் தொகுதியைப் பற்றி பேசவேயில்லை. ஆதிதிராவிட மக்கள் வாழும் நஞ்சமதத்து வாழ்க்கை சின்னத்தெரு வழியே ஓடும் பாசிமுத்தான் வாய்க்காலை கடந்து செல்ல 20 மீட்டர் நீளமுள்ள பாலம் ஒன்று அமைத்துத் தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். நஞ்சமதத்து "வாழ்க்கை"யிலிருந்து நெலிஞ்சிகிராமத்திற்கு மெட்டல்சாலையும் "கீழச்சாவடி"யிலிருந்து நடராஜபுரம் ராதாவிளாகத்திற்கு மெட்டல் சாலையும், மீனவப்பெருங்குடி மக்கள் வாழும் பரங்கிப்பேட்டையிலிருந்து சாமியார்பேட்டைக்கு மெட்டல் சாலை வசதியும் செய்து தருமாறு மிகவும் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். புவனகிரி தொகுதி இருண்ட தொகுதி என்று கூறலாம். பகற்பொழுது ஏன் போகிறது என்று மக்கள் வருந்தும் நிலையில் எப்பொழுதும் என் தொகுதி இருட்டாக இருக்கிறது. ஆகவே மின்சாரப் பற்றாக்குறையைப் போக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக கடலோர கிராமங்களில் மின்விளக்குகள் சரிவர எரிய, தனி டிரான்ஸ்பார்மர் அமைக்கக் கோருகிறேன்.

மக்கள் நலமே என் உயிர் மூச்சு என ஓயாது உழைத்து வரும் நம் இதய தெய்வம் புரட்சித் தலைவியின் பெயர், வரலாற்றின் பொன் எழுத்துக்களில் பொறிக்கப்பட வேண்டும் என்று எப்போதும் துடிப்போடு துணை நின்று பணியாற்றும் பேரவைத் தலைவர் அவர்களுக்கும், பொதுப்பணித் துறையின் சிறந்த பணியின் மூலமே இவ்வாட்சியின் சிறப்பு செம்மையுற அமையும் என்பதை உணர்த்தி சுறுசுறுப்புடன் பணியாற்றும் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சருக்கும் நன்றியையும், பாராட்டையும் தெரிவித்து உரையை நிறைவு செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. க. வெ. வீ. இராசமாணிக்கம்.

திரு. க. வெ. வீ. இராசமாணிக்கம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இன்று நடைபெறுகின்ற பொதுப்பணித் துறை, சாலை வசதி மற்றும் பாசன வசதி ஆகிய மானிய கோரிக்கைகளில் பேச வாய்ப்பு அளித்தமைக்கு எனது நன்றியை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன் முதலாவதாக பெரியாறு அணையின் கொள்ளளவு 152 அடியாக உயர்த்த அரசு மூன்று கட்ட நடவடிக்கைகள் எடுத்து அந்தப் பணிகள் முடிவடையும் தருவாயில் இருக்கின்றன. இருந்தாலும் கூட கடந்த வருஷம் அதிகமாக மழை பெய்ததின் காரணமாக 145 அடி தண்ணீரை தேக்கியதற்கு கேரள அரசு எதிர்ப்பு தெரிவித்து அதன் காரணமாக 136 அடியாக மீண்டும் குறைக்க வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது. உலக வங்கி உதவியுடன் திருப்பத்தூர், கொட்டாம்பட்டி, சிவகங்கைப் பகுதிகளுக்கு பெரியார் அணை நீட்டிப்புக் கால்வாய் என்ற திட்டத்தில் கால்வாய்கள் கட்டப்பட்டு, இதுவரை தண்ணீர் வழங்கப் படவில்லை. பெரியார் அணையை 152 அடி கொள்ளளவுக்கு உயர்த்தினால்தான் நீட்டிப்பு கால்வாய்ப் பகுதிகளுக்கு தண்ணீர் கிடைக்க வாய்ப்புள்ளதாகத் தெரிகிறது. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த பெரியார் அணையினுடைய கொள்ளளவை 152 அடியாக உயர்த்த வேண்டுமென்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். மேலும் பெரியார் பாசன கால்வாய்களில் உள்ள மடைகளில் கதவுகள் சரியாக இல்லாத காரணத்தினால் கடைமடைப் பகுதிகளுக்கு தண்ணீர் சரியாக கிடைக்கவில்லை. அதற்காக கொஞ்சம் கதவுகளின் வசதியை செய்து கொடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 5-05

மேலும் தண்ணீரை முறை வைத்து பாய்ச்சுகின்ற காலங்களில் லஸ்கர்கள் வசதியுள்ளவர்களிடம் பணம் பெற்றுக் கொண்டு தண்ணீரை திறந்து விடுகிறார்கள். அதை முறையாக பாய்ச்சவும், தவறு செய்யும் லஸ்கர்கள் மீது நடவடிக்கை எடுத்து அந்த பாசன வசதிகள் ஏழை விவசாயிகளுக்கு முறையாக முழுமையாக கிடைக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அரசு அலுவலகங்கள் அதிகமாக வாடகைக் கட்டிடங்களில் இயங்கிக் கொண்டு வருகின்றன. அதிலும் குறிப்பாக மேலூர் மருத்துவமனைக் கட்டிட்ம் பல ஆண்டுகள் ஆகியும் அங்கே ஜெனரேட்டர் வைக்க தனிக் கட்டிடம் இல்லாமல் இருக்கிறது. ஆகவே, தனிக் கட்டிடம் கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கொட்டாம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையம் 20 ஆண்டு காலமாக வாடகைக் கட்டிடத்தில் இயங்கிக் கொண்டு வருகிறது. இந்த ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு இடம்



வாங்கப்பட்டு இதுவரை ஆஸ்பத்திரி கட்டப்படாமல் இருக்கிறது. ஆகவே மாண்புமிகு அமைசசர் அவர்கள் அந்த ஆரம்ப சுகாதார நிலையத்தினை கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பெரியாறு வைகை மேம்பாட்டுத் திட்டக் காலத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவர் காலத்தில் 1977 முதல் 1979 முடிய 817 பணியாளர்களை நியமித்தார்கள். 1987 முதல் 1989 வரை உள்ள ஆண்டுகளில் 10 ஆண்டு பணி முடித்தவர்களை நிரந்தரம் செய்ய சென்ற அரசு அறிவித்து சர்வீஸ் புத்தகம் எல்லாம் அரசுக்கு உடனடியாக அனுப்பி ஆய்வு முடிந்த நிலையில் அரசு நிரந்தரம் செய்யாமல் இருக்கிறது.

இவர்கள் எல்லாம் வேலை வாய்ப்பு அலுவலகத்தின் மூலம் புரட்சித் தலைவர் காலத்தில் நியமிக்கப்பட்ட பணியாளர்கள் என்ற காரணத்தைக் கொண்டு அவர்களுக்கு பணி நிரந்தரம் செய்யாமல் தி.மு.க. அரசு விட்டுவிட்டது. ஆகவே 817 பணியாளர்களை நிரந்தரம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டு மென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து சாலை வசதிகள். திருச்சி–மதுரை ரோடு, இது வரை மேஜர் டிஸ்ட்டிரிக்ட் ரோடு என்ற கேட்டகிரியாக கருதப்பட்டு வருகிறது, ஆனால் சென்னையிலிருந்து திருநெல்வேலி, கன்னியாகுமரி போன்ற பகுதிகளுக்கு செல்லு கின்ற அனைத்து பஸ்களும், லாரிகளும் திருச்சி, மதுரை வழி யாக செல்கிற இந்த மேலூர் சாலையைத்தான் பயன்படுத்திக் கொண்டு இருக்கிறார்கள், ஆகவே இதை தேசிய நெடுஞ் சாலை கேட்டகிரியில் சேர்த்து அந்த திருச்சி-மதுரை மெயின் ரோடை நல்லமுறையில் பராமரிப்பு செய்யவேண்டும் என்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்,

அதிலும் மேலூரிலிருந்து மதுரை வரை உள்ள ரோடில் அதிகமான வளைவுகள் இருக்கின்றன. இதனால் அந்தப் பகுதி யில் அடிக்கடி விபத்துகள் ஏற்பட்டு பல உயிர் இழப்புகள் ஏற்படுகின்றன. ஆகவே அந்த வளைவுகளை எல்லாம் போக்கி ஒரு ஸ்டிரெயிட் ரோடு போடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏன் என்றால் மேலூரும், மதுரையும் இப்போது இணைந்து வரக்கூடிய சூழ் நிலையில் அவை இரண்டும் வளர்ந்து வருகின்ற நகரங்களாக இருக்கின்றன. ஆகவே இந்த மேலூர்–மதுரை சாலை அதிக வளைவாக இருப்பதால் அதை மாற்றி ஒரு ஸ்டிரெயிட்ரோடாக மாற்றுவதற்கு போதிய நிதி உதவியை செய்து தர வேண்டு மென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மேலூர் நகரம் இன்று வளர்ந்து வரும் நகரமாக இருக்கின்றது. புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்தில் பிளான் 2 பிரேரணையில் சேர்க்கப்பட்டிருந்த மேலூர் பை-பாஸ் ரோடைப் போடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. ஆனால் அதற்குப் பிறகு என்ன காரணத்தாலோ தெரியவில்லை. அதற்கான நடவடிக்கை எடுக்காமல் இருக்கிறார்கள். ஆகவே மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள்—மேலூர் பகுதியில் போக்குவரத்து நெரிசல் அதிகரித்து இருப்பது மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்கு தெரியும். ஆகவே மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் மேலூர் 'பை-பாஸ்' ரோடை அமைப்பதற்கு வேண்டிய முயற்சிகளை எடுக்கவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் திருச்சியிலிருந்து மதுரை செல்லும் ரோடில் இராஜாஜி பாலம் என்று ஒன்று இருக்கிறது. இராஜாஜி அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது மதுரைக்கு செல்லவேண்டிய அவசியம் ஏற்பட்டு அந்த வழியே போகும்போது மழை அதிகமாக பெய்து பாலாற்றில் தண்ணீர் அதிகமாக வந்ததால் அவரால் போக முடியாததால் அந்தப் பாலத்தை அப்போது கட்டினார்கள். இப்போதும் அதே சூழ்நிலையில்தான் உள்ளது. ஆகவே, மதுரை–திருச்சி மெயின் ரோடில் அதிக விபத்து வராத அளவுக்கு அந்த பாலத்தை புதிதாக பெரியதாக கட்டித்தர ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் திருப்பத்தூரிலிருந்து மதுரைக்கு செல்லக்கூடிய இடத்தில் இடையே இமலம்பட்டி அருகே உப்பாற்றின் மீது கட்டப்பட்டுள்ள பாலம் மிகவும் குறுகியதாக இருக்கிறது. அதையும் விரிவுபடுத்தி புதியதாக பாலத்தை கட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்கு பல திட்டங்களை அரசு தீட்டி வருகிறது. இன்று மதுரை நகரத்தின் வளர்ச்சி மிகவும் முக்கியமாக கவனிக்க வேண்டிய ஒன்றாக இருக்கிறது. மதுரையிலே வாழ்கின்ற மக்களோடு தினந்தோறும் மதுரைக்கு வந்து செல்லுகின்ற 'புளோட்டிங் பாப்புலேஷன்' என்று சொல்லுகின்ற மதுரைக்கு வந்து செல்லுகின்ற மக்கள் தொகை அதிகமாக இருப்பதால் பெரியார் பஸ் நிலையம் அருகே ஒரு சுரங்க நடைபாதை அமைக்க எத்தனையோ அரசுகள் அறிவித்து இருந்தாலும் கூட இதுவரை நடவடிக்கை எடுக்கப்படாமல் இருக்கிறது. ஆகவே மதுரை பெரியார் பஸ் நிலையம் அருகே ஒரு சுரங்க நடைபாதை அமைக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.





பிற்பகல் 5.10

அதேபோல் கிராமப்புறச் சாலைகள், சிறு பாலங்கள கட்டுவதை ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்களிடமிருந்து விடுவித்து நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித்துறை மேற்கொள்ள அரசு ஆணையிட்டுள்ளதை வரவேற்கக் கடமைப்பட்டுள்ளேன். ஆனால நாம் 1981–ஆம் ஆண்டில் மக்கள் கணக்கெடுப்பை வைத்துக்கொண்டுதான் இப்போது திட்டங்களைத் தீட்டி வருகிறோம். ஆனால் எதிர்காலத்தில் மக்கள் தொகையைக் கணக்கிலே வைத்துக்கொண்டு சாலை மற்றும் பாலங்கள், போக்குவரத்து வசதிகளைச் செய்து தரவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சீக்கிரம் முடியுங்கள். ஒரு நிமிடத்தில் முடித்துக்கொள்ளுங்கள்.

திரு. க. வெ. வீ. இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குறிப்பாக இந்தப் பகுதியிலே கொட்டாம்பட்டி, தொந்திலிங்கபுரம் செலகின்ற பகுதிகள் 8 கிராமங்களை இணைக்கின்ற அந்தப் பகுதி, நெடுஞ்சாலையிலே சேர்க்கப்பட்டு பல ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆனால் இது வரை தார்ச்சாலை போடப்படாமல் இருக்கிறது. அவைகளை தார்சாலையாக மாற்ற அமைச்சர் அவர்கள உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும் இதுவரை நமது பப்ளிக் ஒர்க்ஸ் டிபார்ட்மென்டை மக்கள் பேப்பர் ஒர்க்ஸ் டிபார்ட்மெண்ட் என்று மிகவும் கிண்டலாகச் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். நமது திறமை மிக்க அமைச்சர் அவர்கள் பொறுப்பு ஏற்றதற்குப் பின்னால் பொதுப்பணித்துறையைத் திறமையாகச் செயல்படுத்த அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்து, சிறப்பான முறையில் செயலாற்றுவார்கள் என்ற நம்பிக்கையோடு என்னுடைய குறைகளையும் கோரிக்கைகளையும் இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அவைகளை அமைச்சர் அவர்கள் விரைவாக நிறைவேற்றித் தருவதற்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனக்கு இந்த வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, விடை பெறுகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. த. ரத்தினவேல் அவர்கள்.

* திரு. த. ரத்தினவேல்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புதிய யுகத்தின் சரித்திரங்களைப் புரட்டித் தள்ளும் நுகத்தடியாக சாதனைகளைப் புரிந்துகொண்டிருக்கும்

தமிழகத்தின் யுகப்பேரொளி, எங்களின் இதய தெய்வம், ஏழைகளின் வழிகாட்டும் ஒளி விளக்கு, என்னை சட்டப் பேரவை உறுப்பினராக இம்மாமன்றத்தில் அமரச் செய்த இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் பொற் பாதம் வணங்கி எனக்கு வாக்களித்த திருவெறும்பூர் தொகுதி வாக்காளப் பெரு மக்களுக்கு என்னுடைய நெஞ்சம் கனிந்த நன்றியைக் காணிக்கையாக்கி என் உரையைத் துவக்க விழைகின்றேன்.

1991–92 ஆம் ஆண்டின் பொதுப்பணித்துறை குறித்த மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, கிராமங்கள் முன்னேற வேண்டுமென்றால் நகரம் முன்னேற வேண்டும்; நகரங்கள் முன்னேற வேண்டுமென்றால் நாடு முன்னேற வேண்டும்; நாடு முன்னேற வேண்டுமென்றால் இந்த தேசம் முன்னேற வேண்டுமென்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். அந்த நல்வழியில் இன்றைக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள், தமிழகத்தில் நல்வாழ்வுத் திட்டங்களை இப்போது நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய நாட்டில் சாலைகளைச் சரியான முறையில் பராமரிக்காமல் விட்டதின் விளைவாக அவற்றின் நிலை மிகவும் மோசமாக இருக்கிறது. 1990–91 ஆம் ஆண்டில் 70.07 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு இருந்தது. நடப்பு ஆண்டில் ரூபாய் 102.25 கோடி மொத்த நிதியை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் இப்போது ஒதுக்கீடு செய்திருக் கிறார்கள். மிகவும் மோசமான நிலையில் உள்ள சுமார் 8 ஆயிரம் கிலோ மீட்டர் நீளத்திற்கு சாலைப் பகுதிகளை ரூபாய் 150 கோடி செலவில் செப்பனிடும் சிறப்பு பழுது பார்ப்பு திட்டம் என்று ஒரு திட்டத்தை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்து இருப்பது மிகவும் வரவேற்கத்தக்க ஒரு அம்சமாக இருக்கிறது. ஊராட்சி ஒன்றியங்களில் உள்ளூர் சாலைகளைப் பராமரிப்பதற்கு நிதி ஒதுக்கீடு 5.32 கோடியிலிருந்து 9 கோடி ரூபாய் வரை உயர்த்தி சாலைகள் சரி செய்யப்பட இருப்பது குறிப்பிடத்தக்கது. நம்முடைய ஏரிகள் அனைத்தும் நாட்டிலே தூர்ந்த நிலையில் உள்ளன. அவற்றை நவீனப்படுத்துவதற்கு ரூபாய் 200 கோடி செலவில், 2,500 ஏரிகள் நவீனப்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. என்னுடைய திருவெறும்பூர் தொகுதியிலுள்ள திருவெறும்பூர் பெரியகுளம் கண்மாய், வாளவந்தான்கோட்டை, அசூர், குண்டூர் பகுதிகளில் உள்ள கண்மாய்களை இத்திட்டத்தின்கீழ் நவீனப்படுத்த, நடைமுறைப்படுத்த வேண்டுமென்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதற்குக் கடமைப்பட்டு இருக்கிறேன். உய்யக்கொண்டான் கட்டளைக் கால்வாய்களில் நெய்வேலி காட்டாமணக்கு செடிகள் நிறைய வளர்ந்து இருக்கின்றன. இதனால் வடிகாலில் தண்ணீர் வடிவதில்லை. வெள்ளப்பெருக்கு ஏற்படுகின்ற காலங்களில் அந்த



பகுதியிலே இருக்கிற வேங்கூர், அரசங்குடி, காட்டூர், பாப்பரக் குறிச்சி கிராமங்களில் வெள்ளம் புகுந்து விடுகிறது. எனவே, அந்த நெய்வேலி காட்டாமணக்கு செடிகளை புல்டோசர் வைத்து அழித்துவிடவேண்டுமென்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்தின் ஜீவநாடியாக விளங்கும் காவிரி நதிநீர்ப் பிரச்சினையில் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் ஒட்டுமொத்தமான எதிர்கால சந்ததிகள், நாளைய தமிழகம் வேளாண்மையில் நிறைவு பெற காவிரியில் நமது உரிமைக் குரலை எழுப்பி இருப்பதிலிருந்தே இந்த அரசு மக்கள் நலன் காக்கும் அரசு என்பது தெளிவாகிறது. காவிரிக் கரையிலே வசிக்கும் என்னுடைய திருவெறும்பூர் தொகுதி மக்கள் முழுமையாக இன்னும் காவிரி தண்ணீரைக் குடிப்பதற்கு முடியவில்லை. அரியமங்கலம், திருவெறும்பூர், துவாக்குடி கூத்தைப்பார் போன்ற பேரூராட்சி பகுதிகளில் குடிநீர்ப் பிரச்சினை இன்னும் தீரவில்லை. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே கொண்டுவரப்பட்ட திருவெறும்பூர், துவாக்குடி, கூத்தைப்பார் கூட்டுக் குடிநீர் திட்டத்தை இடையிலே திராவிட முன்னேற்றக் கழக அரசு கிடப்பிலே போட்டு விட்டது. அந்தத் திட்டத்தை மீண்டும் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் கருணையுடன் பரிசீலித்து அதைச் செயல்படுத்தி அந்தப் பகுதி மக்களுக்கு உதவ வேண்டுமென்று நான் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 5-15

அதைப்போலவே, என்னுடைய தொகுதியில் உள்ள பொன் மலை நகராட்சியில் கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகள் தற் போது விரைவுபடுத்தப்பட்டு உள்ளன. விரைவிலேயே நகராட்சிப் பகுதிகளில் உள்ள வீடுகளுக்கு இணைப்புக் கொடுத்து அந்தத் திட்டத்தினை மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சி தலைவி அவர்கள் தங்கள் பொற்கரத்தால் திறந்திட வேண்டுமெனப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

பொன்மலை நகராட்சிப் பகுதியைச் சேர்ந்த செம்பட்டு பகுதியில் உள்ள தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவு நீரால் சுகாதாரக் கேடுகள் இப் பகுதி மக்களுக்கு ஏற்படுகிறது. இந்தக் கழிவு நீரை உரிய முறையில் வெளியேற்ற மாசு கட்டுப்பாடு வாரியத்தின் மூலமாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போலவே, காவிரியில் உய்யக்கொண்டான், கட்டளைக் கால்வாயில் சாராய கழிவுநீர் கலப்பதால் தூய்மைக் கேடு ஏற்படுகிறது. அதைச் சரியான முறையில் ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பல வருடங்களாக பொன்மலை நகராட்சியில் செம்பட்டு கீழப்புதுத் தெருவில் வசிக்கும் ஆதி திராவிட மக்களுக்கும், என்.எம்.டி. காலனி, எம்.கே.டி. காலனி, அலிகான்குளம், பொன்மலை மலை அடிவாரம் போன்ற பகுதிகளிலும் மற்றும் அரியமங்கலம், மேலக்கல்கண்டார்கோட்டை, திருவெறும்பூர் பகுதிகளில் வாழ்கிற ஆதி திராவிட மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் பட்டா வழங்கிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பொன்மலை நகராட்சியில் செம்பட்டு விமான நிலையம் அருகில் ஒயர்லெஸ் ரோடு என்ற ஒரு ரோடு இருக்கிறது. இந்த ரோடு, திருச்சி நகராட்சிக்கு உள்ளடங்கிய காஜாமலைக் காலனி பகுதியையும், விமான நிலையத்தையும் இணைக்கிறது. இந்த ரோடு மத்திய அரசுக்குச் சொந்தமானது. மிகவும் மோசமான நிலையில் குண்டும் குழியுமாக உள்ள இந்த ரோட்டை, விமான நிலைய அதிகாரிகள் போட மறுக்கிறார்கள். அந்தச் சாலையை பொன்மலை நகராட்சியுடன் இணைத்து, நகராட்சி மூலம் அந்தச் சாலையைச் சிறப்பு பழுது பார்க்கும் திட்டத்தின் மூலம் முடிக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : விரைவில் முடியுங்கள்.

திரு. த. ரத்தினவேல்: மேலும், இதற்கும் மேலாக அந்தப் பகுதியிலே இருக்கிற, வேலைக்குச் செல்கின்ற தொழிலாளர்களுக்கு உரிய இந்தப் பாதுகாப்பு முறைகள் சரியான முறையிலே இல்லாமல் இருக்கின்றன. திருவெறும்பூர் தொகுதியில் உள்ள பி.எச்.இ.எல் தொழிற்சாலையில் சுமார் 17,000 பேர் பணிபுரிகின்றனர். இப்பகுதியில்B.H.E.L. தொழிற்சாலையை நம்பியிருக்கும் சுமார் 300 சிறு தொழிற்சாலைகள் இருக்கின்றன. அதிலும் 15,000 பேர்களுக்கு மேலாக வேலை செய்கின்றனர், ஆனால். பி.எச்.இ.எல்.க்குப் போதிய புதிய ஆர்டர்கள் இல்லாத காரணத்தாலும், நிதிப்பற்றாக்குறையினாலும் பி.எச்.இ.எல்.. மற்றும் ஸ்மால் இண்டஸ்ட்ரீஸ் நலிவுற்று விடுமோ என்ற அச்சம் ஏற்பட்டு இருக்கிறது. இதை உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டும். தடுத்து நிறுத்தாவிட்டால் இந்த மாவட்டத்தின் தொழில் வளம் பாதிக்கும். அதற்கு மத்திய அரசிடம் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் பேசி இந்தத் தொழிலாளர்களுக்கு வாழ்வு அளிக்க வேண்டிய திட்டத்தை



உருவாக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் பணிவன்போடு கேட்டுக்கொண்டு, இம்மாமன்றத்தில் பொதுப்பணித் துறை மான்யத்தில் பேசுவதற்கு வாய்ப்பு தந்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்; திரு. வெ. தமிழரசு.

திரு, வெ. தமிழரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாசனம், பொதுப்பணித் துறை, சாலைகள்— பாலங்கள் மானியக் கோரிக்கைகளில் எனக்கு பேச வாய்ப்பளித்த நம்முடைய இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைப் பொற்பாதங்களில் சமர்ப்பித்து–மன்னிக்க வேண்டும்–துணைப் பேரவைத் தலைவர் அவர்களே, என் ஆத்தூர் தொகுதியில் வசிஷ்டா நதியின் குறுக்கே கல்பசனூர், ராமநாயக்கன்பாளையம் ஆகிய இடங்களில் பெரியகல்ராயன் மலைக்குச் செல்ல 40 ஆண்டுக்காலமாகக் கஷ்டப்படும் மலைவாழ் மக்களுக்காகத் தரைப்பாலங்கள் கட்ட பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். முள்ளுவாடி-புதுப்பேட்டை பாலமும், சேதன் சாலை கோரையாற்றிலும் குறுக்கே தரைப்பாலமும் கட்ட வேண்டுகின்றேன்.

பெரியகல்ராயன் மலை கல்லாற்றில் ராமநாயக்கன் பாளையத்தில் நீர்த் தேக்க அணை கட்ட வேண்டுகிறேன். பைத்தூரிலிருந்து ஆத்தூர் நோக்கி வரும் கோரையாற்றில் வரும் மழை நீரைத் தேக்க நீர்த்தேக்கம் அமைக்க வேண்டுகிறேன். ஆத்தூர் தெற்குகாடு பகுதிக்குச் செல்ல கிளாஸ்பேக்டரிக்கு அருகில் ரயில்வே தரைப்பாலம் ஒன்றை ரயில்வே கேட் அருகில் அமைக்க வேண்டுகிறேன், ஆத்தூர் பஸ் நிலையம் பின்புறம் சந்தைப்பேட்டையில் வசிஷ்டா நதி குறுக்கே கோட்டை வாயில் வரை தரைப்பாலம் அமைக்கவேண்டுகிறேன். ஆத்தூர் சேலம் சென்னை நேஷனல் ஹைவேஸ் சாலையில் உள்ளதால் பைபாஸ் சாலை ஒன்றை அமைக்க அன்போடு வேண்டுகிறேன்.

ஆத்தூர் வடக்காடு விதைப்பண்ணை வழியாக பெரிய கல்ராயன் மலைக்கு தார்ச்சாலை அமைக்க வேண்டுகிறேன்.

பெரியகல்ராயன் மலையில் சூலாங்குறிச்சியிலிருந்து கிழக்காம்பாடி வரை செம்பரக்கை கோயில் ஆண்ரிப்பட்டி, தாள்பள்ளம். மேலூர் வழியாக சாலை வசதி ஏற்படுத்தித் தர வேண்டுகிறேன், ஏனென்றால் அங்கே மலைவாழ் மக்கள் வசிக்கின்ற பகுதியாகும். ஆகவே, அங்கு தார் சாலை ஏற்படுத்தித் தர வேண்டுகிறேன்,

பெரிய கல்ராயன் மலையிலிருந்து, ஆத்தூருக்கு ராமநாயக் கன்பாளையம் வழியாக கரியகோயில் வரை மலைப்பாதை அமைக்க வேண்டுகிறேன். தாண்டவராயபுரத்திலிருந்து சொக்க நாதபுரம் வரையிலும் அக்கிசெட்டி பாளையத்திலிருந்து சொக்கநாதபுரம் வரையிலும், தார்ச்சாலை அமைக்க வேண்டு கிறேன். பெரியகல்ராயன் மலை மேல்நாடுக்கு உட்பட்ட புளியம் பட்டி, ஓடுவன்காடு செங்காட்டுபுத்தூர், ஆலடிப்பட்டி, தாள் வள்ளம். மோதூர், மன்னூர் சாலைகளை சீர்செய்து, தார்சாலை அமைக்க வேண்டுகிறேன்.

பிற்பகல் 5.20

கீழ்நாடு முதல் குன்னூர் வரையிலும், கரிய கோயில் முதல் தூலாங்குறிச்சி வரை பாதையை சிரமைக்கவும், இடையப்பட்டி முதல் முட்டல் வரை சாலையை சிரமைக்கவும் வேண்டுகிறேன்.

சீலியம்பட்டி, ஈச்சம்பட்டி ஆற்றில் தரைப்பாலமும் தாண்டவ ராயபுரம், சொக்கநாதபுரம் பாலங்களைப் புதுப்பிக்கவும் வேண்டு கிறேன். முத்தாகவுண்டர், ராஜாவாய்க்கால் ஏரி தூர் எடுத்து ஆழப்படுத்தவும், அகலப்படுத்தவும் வேண்டுகிறேன். சீலியம்பட்டி ஏரியில் இரும்பு ஷட்டர் அமைக்க வேண்டுகிறேன். ஆத்தூர் முதல் முள்ளுவாடி கோட்டை, விதைப்பண்ணை வழியாக பெரிய கல்ராயன் மலைக்கு தார் சாலை அமைக்க வேண்டுகிறேன். ஆத்தூர் கடை வீதி சாலைமிகவும் குண்டுங்குழியுமாக இருப்பதால் நகராட்சிக்குப் போதிய நிதி வசதி மிகவும் இல்லாததால், இதை 'நரல்ரோட் ஸ்கீமில்' சேர்த்து, தார்சாலை அமைக்க வேண்கிறேன்.

சேலம், திருச்சி மெயின் ரோடில் நாமக்கல் அருகே கருங்கல் பாளையத்திலிருந்து ஆவல்நாயக்கன்பட்டி வழியாக பொட்டணம் நாமக்கல் தார் சாலை மிகவும் குண்டும் குழியுமாக இருப்பதை புதுப்பிக்க வேண்டுகிறேன்.

நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் குறிப் பிட்டபடி, மத்திய அரசோடு மோத வேண்டுமென்பது நமது நோக்கமல்ல. ஆனால், மக்களின் உரிமைகளுக்காக நாம் ஓங்கி பேசுகின்றபோது, மத்திய அரசு காவிரிப் பிரச்சினையில் நமக்கு அநீதி இழைக்கப்பட்டதாகவே கருதுகிறோம். ஒரு நீண்ட போராட்டத்திற்குப் பிறகு, நமது எதிர்பார்ப்புகளுக்கு குறை வாகவே ஒரு இடைக்காலத் தீர்ப்பை நாம் பெற்றோம். ஆனால் கர்நாடகமும், கேரளாவும் தீர்ப்பின் பலனை நாம் அடையாதபடி செய்கிறார்கள். நடுவர் மன்ற தீர்ப்பை மதிக்கவில்லை என்றால், இனி எதிர்காலத்தில் இந்தியாவில் யாரும் எந்த நடுவர் மன்ற தீர்ப்பையும் மதிக்க மாட்டார்கள். நமது இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் தமிழ்நாட்டின் நியாயமான உரிமை களுக்காக போராடி வருகிறார்கள். காவிரிப் பிரச்சினை, நமக்கு வாழ்வா, சாவா என்றபடியான பிரச்சினையாகும். கர்நாடத் திற்கு கிருஷ்ணா, துங்கபத்திரா போன்ற ஆறுகள் உண்டு.



ஆனால், காவிரி ஒன்றுதான் நமக்கு உள்ள வாழ்வு கொடுக்கும் ஆறு ஆகும். ஆகவே மத்திய அரசு நம்முடைய நியாயமான கோரிக்கையை நிறைவேற்ற வேண்டுமென கோரி பேச வாய்ப்பு அளித்தமைக்கு மீண்டும் நன்றி கூறி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. சி. கிருஷ்ணன்.

திரு. சி. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு முதலில் என்னுடைய நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். இரண்டாம் முறையாக இந்த மாமன்றத்திலே பேசுவதற்கும், மீண்டும் கழகத்தினுடைய வேட்பாளராக அறிவித்து, ஆக்கமும், ஊக்கமும் கொடுத்து, மீண்டும் சட்டமன்ற உறுப்பினராக என்னை உருவாக்கிய மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுக்கு என்னுடைய நன்றியைக் காணிக்கையாக தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்து ஓமலூர் வாக்காளப் பெருமக்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே, நம்முடைய மறைந்த முன்னாள் முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்களுடைய ஆட்சியை தமிழகத்திலே மீண்டும் நிலைநாட்டிய நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர் களுடைய திருக்கரத்தாலே, இந்த மாமன்றத்தில் புரட்சித் தலைவர், எம்.ஜி.ஆர். அவர்களுடைய படத்தைத் திறந்து வைக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய நினைவாலயம் மீண்டும் புதுப்பிக்கப்படும் என்று புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இந்த நினைவாலயத்தை எப்படி கட்ட வேண்டுமென்று நான் ஒரு சிறு கருத்தைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஏழை, எளிய மக்களுடைய உள்ளத்திலே கோயில் கொண்டிருக்கிறார்கள். ஆகையினால், கடற்கரையிலே கோபுரம் போன்ற அமைப்பினை உருவாக்கி, மார்பளவு சிலையினை வைத்து, அங்கேயிருந்து நினைவாலயத்திற்குச் செல்கிற முகப்பை உருவாக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக காவிரி நீர் பிரச்சினையைப் பொறுத்த மட்டிலே புரட்சித் தலைவி அவர்கள் என்ன முடிவு எடுக் கிறார்களோ, அந்த முடிவே இறுதியான முடிவாகவும், நிலையான

முடிவாகவும், தெளிவான முடிவாகவும் இருக்கிறது என்பதாலே, அனைத்துக் கட்சிகளும் புரட்சித் தலைவி அவர்களுடைய கருத்தை வலுப்படுத்துகின்ற வகையிலே, ஆதரவு கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

சென்னையில், பக்கிங்காம் கால்வாயை அழகுபடுத்தவும், தூர் எடுத்து சுத்தப்படுத்தவும் வேண்டும். அதன் வகையிலேதான் சென்னை நகரம் அழகுபடும் என்று இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். தெலுங்கு-கங்கைத் திட்டம் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் கொண்டு வரப்பட்ட திட்டம். அந்தத் திட்டத்தை மீண்டும் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் மிகவும் வேகமாக, துரிதமாகச் செயல்படுத்தி, இங்கே சென்னைக்கு குடிநீர் வழங்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 5.25

காவிரி—கங்கை இணைப்புப் பிரச்சினை வெறும் கானல் நீராகவே இருந்து வருகிறது. இங்கே நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தமட்டில் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சி பொற்கால ஆட்சியாக அமைந்திருக்கிறது. இந்த நல்ல நேரத்திலே இந்தச் சாதனையைப் படைக்கவில்லையென்றால், இனி வருகின்ற எந்தக் காலத்திலும் எப்படிப்பட்ட முதல்வராலும் இப்படிப்பட்ட சாதனையைப் படைக்க முடியாது. எனவே, தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்குத் துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கேரளாவிலேயிருந்து மேற்கு நோக்கிச் செல்கின்ற நதிகள் எல்லாம் வீணாகக் கடலிலே சென்று சங்கமம் ஆகின்றன. அந்த நதிகளைக் கிழக்கு நோக்கிப் பயன்படுத்தி இராமநாதபுரம், காமராசர் போன்ற மாவட்டங்களுக்குப் பாசன வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

மத்தியிலே இருக்கின்ற மகாநதி, கோதாவரி, கிருஷ்ணா போன்ற நதிகளை. வைகை, காவிரியுடன் இணைக்கின்ற ஒரு திட்டத்தையும், நதிகளைத் தேசியமயமாக்கிட, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதே போல, இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியிலே காவிரி நீர் பெருக்கெடுத்து மேட்டூர் அணை நிரம்பி வழிகின்ற நிலைமையெல்லாம் ஏற்பட்டிருக்கிறது.



சேலம், தர்மபுரி மாவட்டங்களைப் பொறுத்தமட்டிலும் மிகவும் வறட்சியான மாவட்டங்களாக இருந்து வருகின்றன. ஆகவே, ஒகேனக்கலிலிருந்து ஒரு கால்வாய்த் திட்டத்தை அமைத்து, தர்மபுரி, ஓமலூர் போன்ற நகரங்களுக்குத் தண்ணீர் உபரியாக இருக்கின்ற நேரத்திலே பயனபடக் கூடிய வகையிலே எங்களுக்கு ஒரு வாய்க்கால் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணி யடிக்கப் பெற்றது.)

அடுத்து, என்னுடைய தொகுதியைப் பொறுத்தமட்டிலும், இங்கே தொப்பையாறிலிருந்து ஒரு வாய்க்கால் அமைத்து, ஓமலூர் பகுதிக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டு கொள்கிறேன். அதேபோல் கே. மோரூர் பகுதியிலே மிகப் பெரிய அளவிலே கொரியாட்டுக் கோம்மை என்ற இடத்திலே ஒரு ஏரியை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, வாய்ப்புக் கொடுத்ததற்கு நன்றி கூறி, விடை பெறுகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: டாக்டர் குமாரதாஸ்.

டாக்டர் தே.குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாசனம் மற்றும் கட்டிடங்கள், சாலை மேம்பாட்டுத் திட்டங்கள், கட்டிடப் பிரிவு மற்றும் தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றின் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசுகின்ற ஒரு வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்ததற்கு முதலாவது என்னுடைய பணிவான வணக்கங்களைக் கூறிக் கொண்டு ஒரு சில கருத்துக்களை உங்களுடன் பகிர்ந்து கொள்ளலாம் என்று கருதுகிறேன்.

பொதுப்பணித் துறை என்று சொல்கிற நேரத்தில், பொதுவாக மக்களுடைய குறைகளை நிறைவு செய்ய வேண்டும் என்கிற துறையாக அது இருக்கிறது. ஆக, இந்தத் துறையிலே யார் எந்தவிதமான கருத்துக்களைக் கூறினாலும், அத்தனையும் பணம்-நீங்கள் செலவு செய்ய வேண்டிய துறையாகத்தான் இருக்கிறது. எனவே, இந்தத் துறைக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை குறைவாக இருக்கிறதென்பது என்னுடைய தாழ்மையான கருத்து. இருப்பினும், மக்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற பொறுப்பு மரியாதைக்குரிய பொதுப்பணித் துறை, அமைச்சரவர்களுக்கு உண்டு. அதன் அடிப்படையில் நாங்கள் உங்கள் முன்னிலையிலே சில கோரிக்கைகளை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். அவைகளை நீங்கள் பரிவுடன் கவனித்து வேண்டிய கனிவுடன் அதற்கான உத்தரவைப் பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு சில, மிகமிக முக்கியமான கோரிக்கைகளை, வெகுநாட்களாக இருந்து வருபவைகளை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

பொதுவாக என்னுடைய மாவட்டத்தில் கடையால் என்கிற பகுதியில் தெப்பக்கடவு என்கிற பாலம் இருக்கிறது. 1983-லிருந்தே அதற்குப் பலமுறை மதிப்பீடு எடுக்கப்பட்டு உடனே செய்கிறோம், உடனே செய்கிறோம் என்று சொல்லி, ஆனால் இதுவரைக்கும் நடைமுறைக்கு வரவில்லை. அது மட்டுமல்ல, ஆயிரக்கணக்கான மக்கள் அந்தப் பகுதியிலே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். மூங்கிலிலே படகுகளை தெப்பம் மாதிரி கட்டி சென்று கொண்டிருக்கிறார்கள். அதிலே பள்ளிக்குச் செல்கிற பிள்ளைகளுக்குப் பலமுறை ஆபத்துகள் வந்திருக்கின்றன. ஆனால் உயிர்ச்சேதம் வரவில்லை. எனவே, அதை நீங்கள் கவனத்தில் கொண்டு, 1983-ல் 35 இலட்சம் ரூபாய்க்கு எடுத்த அந்தத் திட்டத்தைக் கவனத்திற் கொண்டு, அந்த இரண்டு ஊர்களையும் இணைக்கின்ற மிகப்பெரிய முக்கியமான பாலத்தைக் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல, நான் இதற்கு முன்புகூட, சட்டமன்றத்தில் கேட்டிருக்கிறேன். எங்கள் பகுதியில் கணபதியான்கடவு பாலம் என்ற ஒன்றிருக்கிறது. அது இரண்டு ஊர்களை இணைக்கிறது என்று உங்களுக்குத் தகவல் வந்திருக்கும் என்று சொன்னால் அது தவறு. இரண்டு பெரிய சாலைப் போக்குவரத்தின் மையப் பகுதியாக இருக்கக்கூடிய குழித்துறைப் பகுதியில் சாலைப் போக்குவரத்தை மேம்படுத்தித் தருவீர்கள் என்று சொன்னால் இந்தப் பகுதியில் செல்வதற்கு வாய்ப்பு ஏற்படும். அதன்மூலம் போக்குவரத்து நெரிசல் தேசிய நெடுஞ்சாலையில் ஏற்படுவதைத் தவிர்க்க முடியும். எனவே இந்த கணபதியான்கடவு பாலத்தை அமைத்துத் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் இந்த கீழமணக்குடி, மேலமணக்குடி பாலம் என்பது வெகுகாலமாக உங்கள் முன்னால் இருந்து வரக்கூடிய கோரிக்கை. அதுபற்றியும் உங்களுடைய அதிகாரிகளிடம் கேட்டால் அது எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பது உங்களுக்குத் தெரியும். அவைகளையும் இணைத்துத் தருவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 5-30

அடுத்தபடியாக 1987-ல் கிட்டத்தட்ட 280 இளம் பொறியாளர்களையும், 50 உதவிப் பொறியாளர்களையும் பணியிலிருந்து பணிக்காலியிடம் இல்லை என்ற காரணத்தாலே பிரித்து விடப்பட்டு இருக்கிறார்கள். அவர்களைப் பொறுத்தவரையில் ஆண்டு ஒன்றுக்கு 10-ம் 15-ம் ஆக கிட்டத்தட்ட 115 பேர்களைப் பணியில் சேர்த்து இருக்கிறார்கள். தற்போது 35 இளம்பொறியாளர்கள் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். இவர்களுக்கு உடனடியாக வேலை கிடைக்க ஏற்பாடு நீங்கள் செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



அதேபோல் ஊராட்சி ஒன்றியங்களில் 1 கோடி ரூபாய் ஒதுக்கி பணிகள் செய்கிற வகையில் நல்ல திட்டத்தை இப்போது அளித்திருக்கிறீர்கள். அந்தத் திட்டத்திற்காக அங்கே ஒதுக்கப்படுகிற பணம் சரியாகச் செலவு செய்யப்படவும், பணிகள் செவ்வனே பராமரிக்கப்படுவதற்கும் அங்கே பொறியாளர்கள் தேவைப்படுகிறார்கள். எனவே அந்த 384 ஊராட்சி ஒன்றியங்களில் பொறியாளர்களை நியமிக்கும்போது இங்கே இருந்து டெபுட்டேஷனாக அனுப்பிவிட்டு அவர்கள் இங்கிருந்த இடங்களை ஃபில் அப் பண்ணுகிறபோது வேலைவாய்ப்பு பெருகுவதோடு அந்தப் பணிகளும் செவ்வனே நடக்கும். அந்த ஒரு கோடி ரூபாய்க்கான திட்டத்தையும் ஒழுங்காகச் செயல்படுத்தி முடிக்க முடியும் என்று நான் கருதுகிறேன். எனவே அதிலே 384 புதிய இளம் பொறியாளர்கள் நியமிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதுசம்பந்தமாக 1987 முதல் 1991 வரை 4 முறை ஜி.ஓ. போட்டிருக்கிறார்கள். 1987-ல் இரண்டு முறை போட்டிருக்கிறார்கள். 1991-லும் போட்டிருக்கிறார்கள். ஆனால் அவை நடைமுறைக்கு வரவில்லை. அதையும் நீங்கள் கவனத்தில் கொண்டு அவர்களுக்குப் பணிக்கிடைக்கச் செய்ய ஏற்பாடுகளைச் செய்து தர வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் சேனல்ஸ் பொறுத்தவரையில் எங்களுடைய மாவட்டத்தில் பொதுவாக சித்தாறு–பட்டணங்கால் சேனல் ஒன்று இருக்கிறது. இதைப் தொறுத்த வரையில் கடைவரம்பு பகுதிகளுக்குத் தண்ணீர் வருகிற நேரத்தில் அது வந்து சேர்வதே இல்லை. சஃபிசியன்ட் ஆக டேம்–இலே தண்ணீர் இருந்தும் கூட வராத சூழ்நிலை இருக்கிறது. காரணம் அங்கே ஏகப்பட்ட பகுதிகளில் உடைப்புகள் இருக்கின்றன. அதனால்தான் கடைமடைப் பகுதி வரையில் அதாவது இறுதி வரை சிமென்ட் தளங்கள் அமைத்துத் தரவேண்டும். உலக வங்கித் திட்டத்தின் கீழ் கடன் வாங்கிச் செய்கிற திட்டத்தில் பலவற்றை இணைத்திருக்கிறீர்கள். அதாவது கோதையாறு மேம்பாட்டுத் திட்டம் என்பதில் இணைத்து இருக்கிறீர்கள். இதையும் அதிலே உள்ளடக்கி கடைமடைப் பகுதி வரை அதாவது இறுதி வரை தண்ணீர் வருகிற விதத்தில் அந்த சேனலில் சிமென்ட் தளம் அமைத்துத் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் மடிச்சல் பகுதியில் உள்ள கால்வாய், கிட்டத்தட்ட 6 அல்லது 7 கிலோ மீட்டர் வரை மிகவும் பழுதடைந்து தண்ணீர் வராமலே இருந்தது. நாங்கள் எல்லோரும் கூடி, பொதுமக்கள் ஒத்துழைப்போடு அந்த சேனலைச் சீர் செய்திருக்கிறோம். கொஞ்ச நாள் வந்தது. திருப்பியும் போய்விட்டது. இப்படி பல முறை அந்த வேலைகளைச் செய்து பார்த்துவிட்டோம். ஆனால் அரசு அதில் தனிக் கவனம் செலுத்தவில்லை என்றால் அந்த மடிச்சல் சேனலை சரிப்படுத்தவே முடியாது. எனவே அரசு அதில் தனிக் கவனம் செலுத்தி அந்த மடிச்சல் சேனலைச் செப்பனிட்டுத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் இன்றைக்குக் கேரளாவில் இருந்து நெய்யாறு இடதுகரை சேனல் வழியாகத் தண்ணீர் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு வருகிறது. அந்த அக்ரிமென்ட்-படி அவர்கள் தண்ணீர் தருவதற்கு தயாராக இருந்தால் கூட இந்த சேனலின் கொள்ளளவைப் பார்த்தால் தண்ணீர் வராத சூழ்நிலைதான் இருந்துகொண்டிருக்கிறது. பல ஆண்டுகளாக அது பராமரிப்பு இல்லாமல் இருக்கின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. சில பகுதிகளில் அதாவது இரண்டு, மூன்று மதகுகள் மாத்திரம் போடுவார்கள் என்று சொன்னால் அவைகளைச் செய்துவிட முடியும் என்று அங்கேயுள்ள அதிகாரிகள் சொல்கிறார்கள். அதற்கு சில இலட்சங்கள் ஆகலாம். ஒருவேளை 10 அல்லது 15 இலட்சம் ரூபாய் தான் ஆகும். இது செய்யப்படாத காரணத்தால் பல ஆண்டுகளாக அந்தப் பகுதியில் நீர்ப்பாசனம் தடைப்பட்டுக் கொண்டிருக்கிறது. எனவே அவைகளையும் உங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அந்த நெய்யாறு இடது கரைச் சேனல் முழுவதுமாகச் செப்பனிடப்படவேண்டும். அதைச் செப்பனிட்டுத் தருவதோடு அந்தப் பகுதி மக்களுடைய விவசாயத் திற்கும் பயன்படுகிற வகையில் அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் அந்த மாவட்டத்தில் 15, 20 ஆண்டுகளாக விளாத்துறை என்கிற பகுதியில் 'விளாத்துறைலிஃப்ட். இரிகேஷன் ஸ்கீம்' என்ற அடிப்படையில் நிறைய பகுதிகளில் விவசாயம் செய்து வந்திருக்கிறார்கள். ஆனால் என்ன காரணத்தாலோ அந்த 'விளாத்துறை லிஃப்ட் இரிகேஷன் ஸ்கீம்' கழிந்த 10 அல்லது 12 ஆண்டுகளாகச் செயல்படாமல் இருக்கிறது. அதையும் நான் அரசிடம் கேட்கிற போதெல்லாம் இந்த ஆண்டு சேர்த்துவிடுகி றோம், மறு ஆண்டு சேர்த்துவிடுகிறோம் என்று சொல்லி காலங்கள் உருண்டோடிக் கொண்டிருக்கிறதே அல்லாமல் அது செயல்படுத்தப்படவில்லை அதற்கு சேனல் எல்லாம் சரியாக இருக்கிறது. அங்கே லிஃப்ட் பண்ணுவதற்கான ஒரு மோட்டார் மாத்திரம் இல்லாத காரணத்தால் தடைப்பட்டுக் கொண்டிருக் கிறது. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேரடியாக அதிலே கவனம் செலுத்துவார்கள் என்று சொன்னால் உண்மை நிலையைப்புரிந்துகொள்ள முடியும். அந்த மக்களுடைய குறையும் தீரும் என்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். (மணியடிக்கப்பட்டது)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சீக்கிரம் முடியுங்கள். ஒரு நிமிடத்திற்குள் முடித்துவிடுங்கள்.

டாக்டர் தே. குமாரதாஸ்: அதேபோல் அங்கே எங்கள் மாவட்டத்தில் பெக்யூலியராக இருக்கின்ற ஒன்றைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். அந்தப் பகுதி மேடும், பள்ளமும் நிறைந்திருக்கின்ற பகுதியாக இருக்கின்ற காரணத்தால் சில பகுதிகளில் தண்ணீர் வருகிறது. சில பகுதிகளில் தண்ணீர்



வருவதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை. அப்படிப்பட்ட இடங்களில் சுமார் 25 குளங்களை நிரப்பக்கூடிய விதத்தில் ஒரு பகுதி இருக்கிறது. அந்தப் பகுதியில் உள்ள அந்த மக்கள் பல காலமாக ஒரு வேண்டுகோள் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அதாவது புட்டேத்தி என்கிற ஊரிலிருந்து ஒரு ஊற்றுக்கால் தண்ணீர் கடலிலே போய் கலந்துகொண்டிருக்கிறது. அந்த தண்ணீரை அங்கே பிளாக் பண்ணி, லிப்ட் பண்ணி தாளையூர் விளாக்குன்று என்ற பகுதிக்கு நீங்கள் லிப்ட் பண்ணிக் கொடுப் பீர்கள் என்று சொன்னால் அந்த பகுதியிலுள்ள 25 குளங்கள் நிரப்புவது மட்டுமல்லாமல் கிட்டத்தட்ட 20 ஆயிரம் மக்களுக்கு அங்கேயுள்ள குடிதண்ணீர் பிரச்சினை தீரும். கிட்டதட்ட 500, 600 ஏக்கர் விவசாயம் புதிதாக செய்யமுடியும் என்று சொல்கின்றார்கள்.

பிற்பகல் 5-35

அதேபோல அந்த பகுதியில் இன்னும் கிள்ளியூர் வாய்க்காலிலே சென்று கொண்டிருக்கக்கூடிய தண்ணீர், ஊற்றுத் தண்ணீர் கடலிலே கலந்துகொண்டிருக்கிறது. அங்கேயும் அந்த தண்ணீரை பிளாக் பண்ணி தொலையாவட்டம் என்கின்ற பகுதிக்கு லிப்ட் பண்ணி கொடுத்தீர்கள் என்று சொன்னால் அந்த பகுதியில் 500 ஏக்கருக்கு விவசாயம் செய்ய முடியும் என்று அங்கேயுள்ள விவசாயிகள் சார்பாக வெகுவாக கேட்டுக் கொண்டிருக் கின்றார்கள்.

அதுமாத்திரமல்ல. நம்முடைய தேசிய நெடுஞ்சாலை யினுடைய நிலவரத்தைப் பற்றிச் சொல்கிறபோது, சென்னை யிலிருந்து கன்னியாகுமரி வரைக்கும் தேசிய நெடுஞ்சாலை என்று போட்டிருக்கிறார்கள். அதிலே ஆரல்வாய்மொழி பகுதியிலே இருந்து இப்போது புதிதாக ஒரு சாலை அமைத்திருக்கிறார்கள். ஆரல்வாய்மொழி முதல் நாகர்கோயில் வரைக்கும் இதுவரைக்கும் தேசிய நெடுஞ்சாலையாக பராமரிக்கப்பட்ட சாலை. தேசிய நெடுஞ்சாலையிலும், ஹைவேஸ் சாலையிலும் இல்லை என்ற சூழ்நிலை இருந்துகொண்டிருக்கிறது. கிட்டத்தட்ட 15 கிலோமீட்டர் தூரம் வரை அப்படி இருந்துகொண்டிருக் கிறது. யாரும் பராமரிக்கவில்லை. எனவே மிகமிக பழுதடைந்த சூழ்நிலையில் இருக்கிறது. அதை உங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வந்து அந்த சாலையைச் செப்பனிட்டுத் தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேட்டுக்கொண்டு முடிக்கவேண்டும், டாக்டர் தே.குமாரதாஸ்

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இறுதியாக ஒரே ஒரு கருத்தினை மாத்திரம் சொல்லி முடிக்கலாம் என்று கருதுகிறேன். இப்போது பெய்து முடிந்த மழையின் காரணமாக அந்த கிள்ளியூர் பகுதியில் கிள்ளியூர் பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் வேங்கோடு என்கின்ற பகுதி இருக்கிறது. அதிலே ஒரு பாலம் உடைந்துவிட்டது.

அதற்கு கிட்டத்தட்ட ரூ. 7 லட்சம் ஆகிறது. ஆனால் அது மாவட்ட ஆட்சித் தலைவருடைய ஒப்புதலோடு செய்துவிட முடியாதாம் அந்த தொகை. அதற்கு இங்கேயிருந்து மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய அனுமதி பெற்று தந்தால் தான் செய்யமுடியும் என்ற சூழ்நிலை இருக்கிறது. பஸ் போக்குவரத்து, கார் வசதி எல்லாம் பெருவாரியாக ரொம்ப டிராபிக்காக இருக்கும் ரோடு. அது பெருமளவிலே உடைக்கப் பட்டிருக்கிறது. வேங்கோடு பகுதியில் அந்த பாலத்தை உடனடியாக அமைத்துத்தரவேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன். (மணியடிக்கப் பெற்றது) இறுதியாக ஒரே ஒரு கருத்து.

அதே போல நாகர்கோயிலிலிருந்து அப்பர் கோதையாறுசெல் கின்ற, இதற்கு முன்பு சென்றுகொண்டிருந்த ரோடு, 10, 15 ஆண்டுகளாக அந்த ரோடு பிளாக் செய்யப்பட்டிருக்கிறது. இப்போது நாகர்கோயிலிலிருந்து அப்பர் கோதையாறு செல்ல வேண்டும் என்று சொன்னால் அங்கேயிருந்து அம்பாசமுத்திரம் வந்து கள்ளிடைக்குறிச்சி வழியாக அப்பர் கோதையாறு செல் கின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. இதற்கு பதிலாக நாகர் கோயிலிலிருந்து கீரிப்பாறை பால்மர் வழியாக அப்பர்கோதையாறு செல்வோம் என்று சொன்னால் கிட்டதட்ட 60 கிலோ மீட்டர் ஷார்ட், பயணம் பண்ணுகிற நேரமும் மிச்சம். எளிதாகவும் சென்றுவிடவும் முடியும். எனவே நம்முடைய அந்த பால்மர் பகுதியில் ஏற்பட்டிருக்கின்ற தடங்கள் தனியார் தோட்டத் தினுடைய தடங்கல் என்று கருதுகிறேன். அவற்றை மாற்றி இந்த நாகர்கோவில் அப்பர் கோதையாறு சாலை கீரிப்பாறை-பால்மர் வழியாக போடுவார்கள் என்று சொன்னால் அந்த பகுதி மக்களுக்கு பயனுடையதாக இருக்கும். எனவே அரசு தனிக் கவனம் செலுத்தி அந்த போக்குவரத்தை அமைத்துத்தர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு அளித்த வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன். நன்றி. வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ஜி. பழனிசாமி அவர்கள் குறிப்பிட்ட நேரத்திலே முடிக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாசனம், சாலை, கட்டடம் மானியக் கோரிக்கையின் மீது பேசுவதற்கு அனுமதி தந்திருக்கக்கூடிய பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றையதினம் நம்முடைய பாசன மானியக் கோரிக்கையின் மீது பேசுகிறபோது தமிழ்நாட்டில்.... (குறுக்கீடு) எனக்கு கொடுத்திருக்கிற டைம், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் கொடுத்திருப்பது நேரம் குறைவான நேரம். அனேகமாக தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய (குறுக்கீடு)



திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காலையிலும் மாலையிலும் அவை நடக்கிறது. டைம் இல்லை என்கிறார்.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே....(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தொடர்ந்து பேசுங்கள். இந்த குறுக்கீடுகள் எல்லாம் உங்களுக்குத் தரப்பட்ட நேரத்திலேயே அடங்கும்.

பிற்பகல் 5-40

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே 35 ஆயிரம் ஏரி குளங்கள் இன்றைய தினத்திலே இருக்கின்றன. அந்த ஏரிகள் எல்லாம் இன்றைய தினத்திலே நீர் வளத்தைப் பாது காக்கின்ற வகையில் இல்லை. நம்முடைய அதிகாரி களுக்கு நன்றாகவே தெரியும். சுமார் 15 ஆண்டுக்கால மாக அந்த ஏரிகளை, கரையைக் கட்டுவதிலே மழைத் தண்ணீரை தேக்கி வைப்பதிலே சரியான நடவடிக்கை இதுவரை யிலும் எடுக்கப்படவில்லை. காரணம், நம்முடைய முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் இருக்கிறபோது அந்தத் திட்டத்தை விரைவுபடுத்த வேண்டும் என்பதற்காக தனியாக நிதி ஒதுக்கப்பட்டு, அந்தப் பணிகள் ஆரம்பத்தில் நடைபெற்றன. அதற்குப் பின்னால் அந்த ஏரிகளுடைய கரைகள் பலப்படுத்தப் படாமல், மழை நீர் தேக்க முடியாமல், இன்றைக்கு அந்த ஏரிகளில் தண்ணீரை தேக்கி வைக்க முடியாத நிலை இருக்கிறது. ஆகவே, அந்த ஏரிகளைப் பலப்படுத்துவதற்கு மாறாக, கட்டு வதற்கு மாறாக, தமிழகத்தில் இருக்கிற அதிகாரிகள், பொறியாளர்கள் மாற்று யோசனை சொல்லியிருக்கிறார்கள். இன்றைய தினம் அந்த ஏரிகளைப் பலப்படுத்தி நீர் வளத்தைப் பெருக்குவதற்கு மாறாக அதில் எல்லாம் வன இலாகாவின் மூலம் மரங்கள் நட்டு,எடுத்து விடுங்கள் என்று சொல்லக்கூடிய விதத்தில் இன்று அந்த ஏரிகளை முழுமையாக எடுத்துக்கொண்டு மரக் கன்றுகளை நடுகின்ற ஒரு திட்டம் இருக்கிறது. முற்றிலும் மரங்களை வளர்ப்பதற்கு மலைப் பிரதேசங்கள் இருக்கின்றன. இன்னும் ஆயிரக்கணக்கான ஏக்கர் புறம்போக்கு நிலங்கள், திடல்கள் எல்லாம் இருக்கின்றன. ஆகவே, அந்த இடங்களில் மரம் நடுவதை விட்டுவிட்டு, தனக்கு சாதகமாக அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் தங்களுக்கு சிரமம் இல்லாமல் தண்ணர் தேக்கி வைக்கக்கூடிய ஏரிகளில், நீர் வளத்தைப் பெருக்கக்கூடிய ஏரிகளில் இன்றைக்கு அதனை வளப்படுத்துவதற்கு மாறாக இவ்வாறு மரக் கன்றுகள் நடுவதை முற்றிலுமாக தடுத்து நிறுத்த வேண்டும். நீர் வளங்களைப் பாதுகாக்க வேண்டும்.

[திரு. ஜி. பழனிசாமி] [1991 செப்டம்பர் 26

அடுத்து, ஆழ் குழாய் கிணறுகள் மூலம் தண்ணீரை பாது காக்க வேண்டும் என்று சொன்னால் அவசியம் ஏரிகளைப் பலப் படுத்தும் முயற்சியில் அரசு ஈடுபட வேண்டுமென்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுபோல தஞ்சை மாவட்டத்தில், காவிரி நதி நீரை மட்டும் நம்பியிருக்கக் கூடிய அந்த மாவட்டத்தில், இன்றைக்கு ஆழ் குழாய் கிணறு மூலம் பல்வேறு இடங்களில் தண்ணீர் எடுப்பதற்கான முயற்சியை மேற்கொள்ள வேண்டும். காரணம், மன்னார்குடி, சீர்காழி, நன்னிலம் போன்ற பகுதிகளில் எல்லாம் தனியார் மூலமாக ஆழ் குழாய் கிணறுகள் போடப்பட்டு தண்ணீர் எடுக்கப்படு கிறது. அருகிலே இருக்கிற பாண்டிச்சேரியில் அரசு மூலமாக ஆழ் குழாய் கிணறுகள் போடப்பட்டு அதன் மூலம் விவசாயத் திற்கு ஒரு மணிக்கு இவ்வளவு என்று நிர்ணயித்து தண்ணீர் வழங்கப்படுகிறது. விவசாயிகள் கூட தண்ணீர் தட்டுப்பாடாக இருக்கிற காலங்களில் இத்திட்டத்தின் மூலமாக விவசாயம் செய்யக் கூடிய ஒரு நல்ல வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. அது போன்று தஞ்சை மாவட்டத்தில் தண்ணீர் கிடைக்கக் கூடிய இடங்களில், கடல் ஓரம் இல்லாத பகுதிகளில், அதுபோன்று ஆய்வு செய்து தண்ணீர் கொடுக்கும் முயற்சிகளை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல சாலைப் போக்குவரத்தைப் பொறுத்தவரையில், தமிழகத்தினுடைய சாலைப் போக்குவரத்து பற்றி சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. அமைச்சர் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், அதைப் போல நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மிகவும் தேர்தல் காலங்களில் சுற்றுப் பயணம் செய்து, தஞ்சை மற்றும் தமிழகத்தில் இருக்கிற ரோடுகளை எல்லாம் கூர்மையாக கவனித்திருக்கிற காரணத்தினால் இன்றைய தினம் நிதி கொஞ்சம் கூடுதலாக ஒதுக்கிக் கொடுத்திருக்கிறார்கள். இருந்தாலும் இது போதுமானது அல்ல, 15 ஆண்டுகளாக கேட்பாரற்ற நிலையில், அது மாநில சாலையாக இருந்தாலும், மாவட்ட சாலையாக இருந்தாலும், வட்ட சாலையாக இருந்தாலும் நீங்கள் எத்தனைப் பிரிவுகளாக சாலை களைப் பிரித்து வைத்திருந்தாலும்கூட அந்த சாலைகள் எல்லாம் இன்றைக்கு முழுமையாக, சரியாக இல்லை. தேசிய நெடுஞ்சாலை என்று சொல்லக்கூடிய சாலைகள் தான் செப்பனி டப்படுகிறன. அதுவும் நகர்புறங்களில் இருக்கிற சாலைகளை மட்டும் தான் நீங்கள் கண்காணிக்கிற ஒரு நிலை இருக்கிறது. ஆகவே கிராமப்புறச் சாலைகளை மாவட்ட தலைநகர் மற்றும் தாலுகா பகுதிகளில் இருக்கிற சாலைகளை நீங்கள் நல்ல முறையில் செப்பனிடுவதற்கு தேவையான நிதியினை கொஞ்சம் கூடுதலாக ஒதுக்கியிருந்தாலும் இன்றைய தினம் இருக்கக்கூடிய விலைவாசி ஏற்றங்கள், அதுபோல லாரி போக்குவரத்து வாகனங்களுடைய விலை ஏற்றங்கள், ஜல்லியினுடைய விலை ஏற்றங்கள், ஆட்களுடைய சம்பளங்கள் இவற்றை எல்லாம் பார்த்தோம் என்றால் அநேகமாக நீங்கள் ஒதுக்கியிருக்கும் பணம் என்பது இரண்டுக்கும் ஈடாக தான் இருக்கும்.



1991 செப்டம்பர் 26] [திரு. ஜி. பழனிசாமி]

புதிய சாலைகளை அபிவிருத்தி செய்ய முடியாத ஒரு நிலை இருக்கிறது. அநேகமாக 800 கிலோ மீட்டர் சாலைகள் இன்றைக்கு போட இருப்பதாக மானியத்திலே அறிவித்திருக் கிறீர்கள். அதோடு மட்டுமல்ல, அடிக்கக்கூடிய ஜல்லி, செய்யக் கூடிய பணிகளை எல்லாம் காண்ட்ராக்டரிடம் கொடுத்து விடுவதால் அநேகமாக அவர்கள் குறிப்பிட்ட காலத்திற்குள் வேலையை செய்வதே கிடையாது. 6 மாதம், 9 மாதம், 1 வருட காலத்திற்குள் பாதி ஜல்லிகள், அதிகாரிகள் அளந்ததற்கு பின்னால், அவர்கள் பில் வாங்கியத்திற்கு பின்னால், பொதுத் தெருவிலே ஓடி விடுகின்றன. பள்ளிப் பிள்ளைகள் அவைகளை எடுத்து விளையாடக் கூடிய நிலை இருக்கிறது. இதனால் பாதிக்கும் குறைவான ஜல்லிகளைக் கொண்டு தான் சாலைகளை செப்பனிட வேண்டியிருக்கிறது. ஆகவே, ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் அந்த காண்ட்ராக்டர் அந்த வேலையை செய்ய வில்லையென்று சொன்னால் அந்த காண்ட்ராக்டை ரத்து செய்ய வேண்டும். அதுபோல ஒழுங்காக வேலை செய்ய வில்லையென்றாலும் ரத்து செய்ய வேண்டும். கார்களில் ரோடுகளில் போகும்போது பார்க்கிறோம், வெள்ளை வெளேர் என்று சாலைகள் இருக்கின்றன. காண்ட்ராக்ட் எடுக்கிறவர்கள் அங்குள்ள பணிகளை முழுமையாக மேற்பார்வையிடுவதில்லை. காண்ட்ராக்ட் எடுக்கிறவர்கள் அங்கேயே இருந்து முழுமையாக பார்வையிடக் கூடிய சில பணிகள் இருக்கின்றன. பொதுவாக காண்ட்ராக்ட் எடுப்பவர்கள் அந்த ஸ்தலத்திலே இருப்பதேயில்லை. ரோடு போடக்கூடிய உள் காண்ட்ராக்டர்களை வைத்து அவர்கள் வேலை செய்யக் கூடிய நிலை இருக்கிறது. அதிகாரிகள் இதை எல்லாம் கண்காணிக்க வேண்டும். அமைச்சர் அவர்கள் இதை யெல்லாம் கண்டுபிடித்து, கண்டிப்பாய் நடவடிக்கை எடுப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அந்த முயற்சியில் அந்த ரோடுகளை எல்லாம் குறிப்பிட்ட காலத்திற்குள் செய்து முடிப்ப தற்கான முயற்சிகளை செய்ய வேண்டுமென்று இச்சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

பிற்பகல் 5-45

அதுபோல தஞ்சை மாவட்டத்தில் பல்வேறு இணைப்புச் சாலைகள், புதிய பாலங்கள், வெள்ளைக்காரர்கள் ஆட்சிக் காலத்தில் போடப்பட்ட பல பாலங்கள் எல்லாம் இன்றைய தினம் இடிந்து இருக்கின்றன. போக்குவரத்து துண்டிக்கப்பட் டிருக்கிறது. அனேகமாக வீராணம் திட்டத்திற்கு பல கோடி ரூபாய் மக்கள் வரிப்பணத்தில் செய்யப்பட்டுள்ள குழாய்களை தஞ்சை மாவட்டத்தில் உள்ள இணைப்பு வாய்க்கால்களுக்கு உபயோகித்தால் அரசுக்கு செலவு மிச்சமாகும். அந்தபணி களைத் துரிதமாகச் செய்வதற்கும் வாய்ப்பு ஏற்படும். எனவே பொதுப் பணித் துறை அமைச்சரவர்கள் முதலமைச்சர்

அவர்களுடன் கலந்துகொண்டு அந்த பணியைச் செய்து இணைப்பு வாய்க்கால்களை உருவாக்கலாமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதியில் இறைவைப் பாசனம் பல ஆண்டுகளாக, பல லட்சக் கணக்கான ரூபாயில் செய்து வந்து, இப்போது வீணாகக் கிடக்கிறது. அதற்காக ஆட்கள் எல்லாம் போட்டு, அவர்கள் இப்போது வேலையில்லாமல் இருக்கிறார்கள். இப்போது இறவைப் பாசனம் இல்லாமல் இருக்கிறது. மழைக் காலங்களில் வீணாகச் செல்லும் தண்ணீரை, இறைவை பாசனம் மூலம் இறைக்கும் நிலைமைகளை செய்துதர வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். இந்தப் பணிகளை தொண்டியக்காடு, மங்கல், ராயநல்லூர் பகுதிகளில் செய்தால் இதன்மூலம் அரசாங்கம் நிர்ணயிக்கும் உணவு தானிய உற்பத்தியைச் செய்ய வாய்ப்பு ஏற்படும் என்பதைச் சொல்லி, இந்தப் பணியை மாண்புமிகு அமைச்சரவர்கள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதி பற்றியது—சுய நலத்திற்காகச் சொல்லவில்லை. திருத்துறைப்பூண்டி வளர்ந்து வரும் நகரமாக இருக்கிறது. அங்கே பை-பாஸ் சாலை போட வேண்டுமென்று ஏற்கெனவே திட்டமிட்டு அரசிடமிருந்து அறிக்கைகள் வந்துகொண்டிருக்கிறது. இப்போதும் வந்திருக்கிறது, இரண்டாவது தடவை கேட்டிருக்கிறார்கள். அதற்கான இடத்தை நான் தருகிறேன். உரிமையான இடங்களைத் தருகிறேன். யாரையும் இதற்காக அப்புறப்படுத்த வேண்டியதில்லை என்று சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்தத் திட்டத்தை எடுத்துக்கொள்ள வேண்டும். அடுத்து வேதாரண்யம்-வேளாங்கண்ணி சாலை முக்கியமான சாலை. அனேகமாக நாகூர், வேளாங்கண்ணி கோவிலுக்குப் போக வேண்டுமென்றால் இந்த ஒரு வழிதான் இருக்கிறது. அந்தச் சாலையில் உள்ள பாலம் பழுதான பாலம். இப்போது ஒரு வழிதான் இருக்கிறது. அந்தப் பாலம் இடிந்துவிட்டால் தஞ்சை வழியாகத்தான்வர வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. சென்ற ஆண்டு அந்தப் பாலம் இடிந்து, வேளாங்கண்ணித் திருவிழா நடந்தபோது, மிகவும் கஷ்டமான சூழ்நிலை இருந்தது, அதைத் தற்காலிகமாக பழுது பார்த்திருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சரவர்கள் அதை கவனத்தில் எடுத்துக்கொண்டு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு, பேசுவதற்கு வாய்ப்பு அளித்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, முடிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. சி. மாணிக்கம்.



திரு. சி. மாணிக்கம்: மாண்புமிகு சட்டப் பேரவைத்துணைத் தலைவர் அவர்களே, பாசனம், சாலை மற்றும் கட்டட மானியக் கோரிக்கைகள்மீது கலந்துகொண்டு பேறுவதற்கு வாய்ப்பு கொடுத்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு அன்பான வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். சாதாரணத் தொண்டனை ஈரோடு தொகுதி சட்டமன்ற உறுப்பினராக இம்மாமன்றத்திற்கு அனுப்ப வைத்த 5½ கோடி தமிழ் மக்களின் நம்பிக்கை நட்சத்திரம், தமிழகத்தின் முதல்வர் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் பாதத்தைத் தொட்டு வணங்கி என் கன்னிப் பேச்சை தொடங்குகிறேன். புரட்சித் தலைவியினுடைய அன்புக் கட்டளைக்கு இணங்கி 43,700 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றியடையச் செய்த வாக்காளப் பெருமக்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு நிலவிவரும் பொருளாதார நெருக்கடியிலும் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியப் பகுதியிலும் சாலை வசதிகள், குடி தண்ணீர், மின் விளக்கு போன்ற அடிப்படை வசதிகள் தன்னிறைவு பெறுகின்ற வகையில் ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறீர்கள். அதற்காக அனைத்து கிராம மக்களும் மனமாரப் பாராட்டுகிறார்கள்.

ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் மலிவு விலை சாராயத்தை ஒழித்துள்ளீர்கள். தமிழகத்திலுள்ள தாய்மார்களின் கண்ணீரை துடைத்துள்ளீர். அதற்காக தமிழகத்திலுள்ள அத்தனை மக்களும் மனதாரப் பாராட்டுகிறார்கள். தமிழ்நாட்டில் கள்ளச் சாராயத்தை ஒழித்ததற்குப் பாராட்டுகிறேன்.

அரசியல் விபத்தின் ஆட்சிக்கு வந்த தி.மு.க.வை ஒழித்து விடுதலைப் புலிகளின் கொட்டத்தை அடக்கி, ஆயுதக் கலாச்சாரத்தை ஒழித்த இதய தெய்வம் புரட்சித் தலைவியை மனமாரப் பாராட்டுகிறார்கள்.

கடந்த இரண்டு ஆண்டுக் காலமாக தமிழகத்தை ஆண்ட தி.மு.க. அரசு சாலைகளைச் சரியாகப் பராமரிக்கவில்லை. புரட்சித் தலைவியினுடைய அரசு சாலைகளைப் பராமரிக்க 102.25 கோடி ஒதுக்கியுள்ளது. மிகவும் மோசமான சாலைகளைப் பராமரிக்க சிறப்புப் பழுது பார்ப்புத் திட்டம் ஒன்று ஐந்து ஆண்டுகளுக்கு மேற்கொள்ளப்பட்டு இந்த வரவு-செலவுத் திட்டத்தில் 20 கோடி ஒதுக்கியமைக்கு இதய தெய்வத்தைப் பாராட்டுகிறேன்.

எட்டு ஏக்கர் வரை வைத்து விவசாயம் செய்யும் விவசாய நிலங்களுக்கு நில வரியை ரத்து செய்ததற்கு இதய தெய்வத்தைப் பாராட்டுகிறேன்.

பிற்பகல் 5.50

ஈரோடு தாலுக்கா, காங்கேயம், தாராபுரம், மொடக்குறிச்சி போன்ற பகுதிகளில் கீழ்பவானி பாசனத்தையே விவசாயிகள் நம்பியுள்ளனர். கீழ்பவானி அணைத் திட்டம் 1954 முதல் பாசனத்திற்கு தண்ணீர் திறந்துவிடப்பட்டது. இத் திட்டத்தில் 2,07,000 ஏக்கர் பாசனப் பகுதியை இரண்டு பாகங்களாகப் பிரித்து முறைப் பாசனம் அமல்படுத்தப்பட்டு வருகிறது. முதல் முறைப் பாசனம் ஆகஸ்ட் 15 முதல் டிசம்பர் 15 வரையில் நஞ்சைப் பயிருக்கும், இரண்டாவது முறைப் பாசனம் டிசம்பர் 15 முதல் மார்ச் 15 வரை புஞ்சைப் பயிர் செய்வதற்கும் தண்ணீர் விடப்படுகிறது. 1-ம் நெம்பர் மதகுக்கு ஒரு வருடமும் 2-ம் நெம்பர் மதகுக்கு அடுத்த வருடமும் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.

கடந்த பல ஆண்டுகளாக பருவ மழை சரிவரப் பெய்யாத காரணத்தால் கீழ்பவானி பாசனப் பகுதி முக்கியமாக காங்கேயம், தாராபுரம் ஆகிய பகுதிகள் வெகுவாகப் பாதிக்கப்பட்டு, தென்னை மற்றும் பலவகை மரங்கள் எல்லாம் பட்டுப்போய் விட்டது. கடந்த 5 ஆண்டுகளாக தொடர்ச்சியாக மழை பெய்யவில்லை. ஆதலால் நஞ்சை புஞ்சை பயிருக்கு தண்ணீர் திறந்துவிடப்படவில்லை. இதனால் இப்பகுதியில் உள்ள மக்கள் விவசாயத்திற்கு மட்டுமல்லாமல் குடி தண்ணீருக்கும் கஷ்டப்பட வேண்டியதாயிற்று. போதிய வேலை வாய்ப்பு இல்லாததால் விவசாயத் தொழிலாளர்களும் பாதிக்கப்பட்டனர். எனவே இந்த துன்பங்களில் இருந்து இப்பகுதி மக்களைக் காப்பாற்றவும் அவர்களுக்கு நிரந்தர வருமானத்தை ஏற்படுத்தித் தரவும் கீழ்பவானி பாசனத் திட்டத்தை முறைப் பாசனத் திட்டமாக மாற்றி அமல்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தற்போது நடைமுறையில் இருந்து வரும் பாசனத்திற்கு அனுமதிக்கப்பட்டுள்ள 36 டி.எம்.சி. தண்ணீரில் அனைத்து ஆயக்கட்டு பகுதிகளுக்கும் 2,07,000 ஏக்கர் சுமார் 8 மாதங்களுக்கு முறைப் பாசனத்திற்கு தண்ணீர் தர இயலும், அதாவது ஒரு வாரத்திற்கு ஒற்றைப்படை மதகுகளிலும் அடுத்த வாரத்தில் இரட்டைப்படை மதகுகளிலும் மாறி மாறி முறை வைத்து தண்ணீர் பாய்ச்ச இயலும். இதனால் விவசாய விளைபொருள் உற்பத்தி பெருகவும், நிலத்தடி நீர் மட்டம் உயரவும் குடிநீர்ப் பிரச்சினை தீரவும் வாய்ப்பு ஏற்படும். விவசாயத் தொழிலாளர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பு ஏற்படும். தற்போது நடைமுறையில் உள்ள கீழ்பவானி பாசனத் திட்டத்தை ஏற்கெனவே இத்திட்டமானது வடிவமைக்கப்பட்டபடி தொடர்ந்து 8 மாதங்களுக்கு தண்ணீர் பாய முறைப் பாசனத் திட்டமாக மாற்றி செயல்பட மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட வேண்டுமென்று இங்கே நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.



காளிங்கராயன் வாய்க்காலில் இடதுகரையில் நேரடிப் பாசனமாக 15,713 ஏக்கர் அனுமதி பெற்று பாசனம் செய்யப்பட்டு வருகிறது. இவைகளில் ஒரு பகுதி 12-12-1962-க்கு முன்னால் அனுமதி பெறப்பட்டது. பாசனம் செய்யப்பட்ட பகுதியையும் அனுமதி அளித்து ஒழுங்குபடுத்தி பாசனம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும். அதற்குப் பின்னாலே கடந்த 29 ஆண்டுகளாக காளிங்கராயன் வாய்க்காலில் அனுமதி பெறாமல் பாசனம் செய்யப்பட்டு வருகிறது. அதற்கும் அனுமதி கொடுக்குமாறு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். கழிவு நீரை பயன்படுத்தி எல்.பி.பி. பாசனத்தின் போது கழிவு நீர் பாசனம் செய்து கரும்பு, வாழை, நெல் போன்ற பயிர் செய்கிற விவசாயிகளுக்கு தண்டத் தீர்வை என்ற பெயரில் 20 மடங்கு தீர்வை போடுகிறார்கள். அந்த தண்டத் தீர்வையை ரத்து செய்யுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

ஈரோடு நகரத்திலும் ஒன்றியப் பகுதிலேயும் ஆயிரக்கணக்கான மக்கள் பல்லாண்டுகளாக வசிக்கின்ற பகுதி ஓடை புறம்போக்கு, பாதை புறம்போக்கு பகுதியில் இருப்பவர்களுக்கு கண்டிஷன் பட்டா என்று உள்ளது. அவர்கள் வசிக்கும் வீடுகளுக்குப் பட்டா கொடுக்கவேண்டுமென்று புரட்சித் தலைவி அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஈரோடு தொகுதியைப் பொறுத்தவரையில் பாதைகள் மோசமான நிலையில் உள்ளன. பல பெரிய பாலங்கள் பழுதடைந்து உள்ளன. இவைகளை உலக வங்கியின் மூலம் நிதி வசதியளித்து பழுது பார்த்துத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஈரோடு நகரத்தில் மழை பெய்யும் போது மழைத் தண்ணீர் ஆயிரக்கணக்கான வீடுகளில் புகுந்து வெள்ளம் சூழ்ந்து விடுகிறது. ஆகவே அந்த அந்த பகுதிகளில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

ஈரோடு நகரத்தில் அரசாங்க மருத்துமனை அருகிலும், பன்னீர்செல்வம் பார்க் அருகிலும் சுரங்கப் பாதைகள் ஏற்படுத்தி கொடுக்க வேண்டும். வீரப்பன் சத்திரம், பெரிய சேமூர் பேரூராட்சிப் பகுதிகளில் பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டம் நிறைவேற்றி, சூரம்பட்டி, காசிபாளையம் பேரூராட்சி போன்ற பகுதிகளிலும் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்று மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களை பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

ஈரோட்டில் ஒரு மகளிர் கல்லூரியும் மேல்நிலைப்பள்ளியும் தொடங்க வேண்டும் என்று சொல்லி என்னுடைய கருத்துக்களைக் கூற அனுமதித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைக் கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ஜானகிராமன்.

*திரு. கோ. ஜானகிராமன்: மாண்புமிகு பேரவைத் துணைத்
லவர் அவர்களே, பாசனம், பொதுப்பணி, சாலைகள்,
_டங்கள் ஆகியவை குறித்த மானியக் கோரிக்கைகளின் பேரில்
வாய்ப்பளித்தமைக்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்
ள்கிறேன்.

பகல் 5–55

நாட்டின் உயிர்நாடியாக இருப்பது நீர்ப்பாசனம்தான்.
டு மக்களுக்கு பாசன வசதிகளைச் செய்து கொடுத்து
ளயாத நிலங்களை எல்லாம் விளைகின்ற நிலங்களாக மாற்றி
வு உற்பத்தியில் தன்னிறைவு அடைந்த உபரியாக
பத்தியைப் பெருக்கி விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை
ர்த்த இவ்வாண்டு பாசனத்திற்காக ரூ. 119 கோடிக்கு
மான தொகையினை அரசு செலவு செய்ய முன்வந்திருப்பது
ாட்டுக்குரிய விஷயமாகும்.

காவிரி நீர்ப் பிரச்சனையைப் பொறுத்த வரையில் சுமார்
ரம் ஆண்டுகளுக்கு முன்னதாகவே காவிரியில் கரிகால் மன்னன்
மணை கட்டி தஞ்சை மாவட்டத்தை நெற்களஞ்சியமாக
கிய பெருமை அந்த மன்னனுக்கு உண்டு. தமிழக விவசாயிகள்
டந்துகொண்டு வந்த அந்தப் பலனை தற்சமயம் கர்நாடக
சு தடுத்து நிறுத்தியிருப்பது கண்டிக்கத்தக்கது, வருத்தப்பட
ண்டிய விஷயமாக இருந்து கொண்டு வருகிறது.

ஆரம்பத்தில் காவிரி நீரைப் பயன்படுத்தி ஆயிரக்கணக்கான
ரில் மட்டுமே பயிர் செய்துவந்த கர்நாடக அரசு கண்ணம்
அணை, கிருஷ்ணராஜசாகர் அணை போன்ற அணைகளைக்
டி இன்று பத்து இலட்சம் ஹெக்டேருக்கு மேல் பாசனம்
து வருகிறார்கள். நமக்குக் கிடைக்க வேண்டிய தண்ணீரை
ர்கள் அனுபவித்து வருகிறார்கள். இதனால் சோலை
மாக இருந்த தஞ்சை, திருச்சி மாவட்டங்கள் இன்று அவற்றின்
ம் குன்றியிருப்பதை கண்டு தமிழக மக்கள் மிகவும் வேதனை
டந்துவருகிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கர்நாடக அரசால் பாதிக்கப்பட்ட தமிழக மக்களின்
யம், நலன் இவைகளைக் கருத்தில் கொண்டு நடுவர் நீதி
றம் 205 டி.எம்.சி. தண்ணீரை உடனே திறந்துவிட வேண்டும்
று தீர்ப்பு சொல்லியிருந்தது. ஆனால் கர்நாடக அரசு அதை
கவில்லை. இந்தப் பிரச்சனையை தமிழக முதல்வர் புரட்சித்
லவி அவர்களால் மட்டுமே தீர்க்க முடியும் என தமிழக
கள் நம்புகிறார்கள் என்று இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட
மைப்பட்டிருக்கிறேன்.



புதிய பெரிய, சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களை இந்த ஆண்டிலேயே உருவாக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். எங்கெங்கே அணைகள் கட்டலாம், கால்வாய்கள் வெட்டலாம் என்று அறிய சட்டமன்ற உறுப்பினர்கள், பொறியியல் வல்லுநர்கள் அடங்கிய குழு ஒன்றை நியமனம் செய்து குழுவின் ஆலோசனைகளைப் பெற இந்த அரசு முன்வர வேண்டும். அதைப் போன்று வட்டார அளவில் விவசாயிகள் மற்றும் அதிகாரிகள் அடங்கிய குழுவினை நியமனம் செய்து, சிறிய நீர்ப்பாசனத் திட்டம், பெரிய நீர்ப்பாசனத் திட்டம் இவைகளை பார்வையிடுவதற்கும் அவர்கள் ஆலோசகளைப் பெறுவதற்கும் இந்த அரசு முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் ஒவ்வொரு மாவட்டத்திலும் விவசாயிகள் மாநாட்டை இந்த அரசு கூட்டி அதில் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும் விவசாயத் துறை அமைச்சர் அவர்களும் கலந்து கொண்டு அந்தப் பகுதியின் பெரிய சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் குறித்து அவர்களின் கருத்துக்களை கேட்டறிய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் பகுதியிலே தென்பெண்ணை ஆற்றில் மழைக்காலங்களில் வரும் தண்ணீர் வீணாகக் கடலிலே போய்க் கலப்பதைத் தடுத்து குறுக்குத் தடுப்புச் சுவர் சுமார் ஒன்றரை அடி மட்டத்தில் கட்டினால் தண்ணீர் தேங்கி நின்று பக்கத்திலுள்ள கிணறுகளில் ஊற்று ஏற்படும்; நிலத்தடி நீர்வளம் உண்டாகும். ஆகையால் இரண்டு மைலுக்கு ஒரு தடுப்புச் சுவர் கட்டினால் நல்ல பலன் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய மேல்மலையனூர் தொகுதியில் பொதுப்பணித் துறையின் கீழ் வருகின்ற பொன்னங்குப்பம் ஏரி, அவலூர் பேட்டை ஏரி, மேல்மலையனூர் ஏரி, அண்ணமங்கலம் ஏரி, சத்தியமங்கலம் ஏரி, ஆலம்பூண்டி ஏரி, அனந்தபுரம் ஏரி இவைகள் எல்லாம் பல்லாண்டுக்காலமாக தூர் எடுத்து ஆழப்படுத்தாமல் இருக்கின்றன. அதனால் அதிக அளவில் நீரைத் தேக்கி வைக்க முடியாமல் இருக்கிறது.

அதைப்போன்று என்னுடைய சொந்தப் பகுதியான முகையூர், ஆற்காடு, பரனூர், பையூர், சென்னற்குளம் ஆகிய ஏரிகளை ஆழப்படுத்தி கரைகளை உயர்த்தி நவீனப்படுத்துமாறு இந்த நேரத்தில் பொதுப்பணித் துறையைக் கேட்டுக்கொள்கிறேன்.

மழைக்காலங்களில் தென்பெண்ணை ஆற்றில் ஏற்படுகின்ற வெள்ளத்தால் அதன் கரையோரமுள்ள கிராமங்களான அருமுலை ஆற்காடு, வீரசோழபுரம், அறவாவடி ஆதி திராவிடர் காலனி,

மாரங்கியூர் ஆகிய கிராமங்களில் கரை அரிப்பு உண்டாக்கி அங்கு வாழ்கின்ற மக்களுக்கு பொருள் நஷ்டமும் உயிர் சேதமும் உண்டாகின்றன. இந்தக் கரை அரிப்பினைத் தடுக்க தடுப்புச் சுவர்களைக் கட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 6.00 மணி

திருக்கோவிலூர் அணைக்கட்டிலிருந்து எம்பேர், புத்தூர். பரணூர் வழியாக முகையூர் கொடுங்கால் ஏரிகளுக்குத் தண்ணீர் வர கால்வாய் ஒன்று வெட்டித் தருமாறு இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று என்னுடைய மேல்மலையனூர் தொகுதி முழுவதும் வறட்சியால் பாதிக்கப்பட்ட தொகுதியாகும். இந்தப் பகுதி மக்களின் நீண்ட நாள் வேண்டுகோள் ஒன்று உள்ளது. கலசப்பாக்கம் செய்யாற்றிலிருந்து அவலூர்பேட்டை மலையனூர் ஏரிக்குக் கால்வாய் வெட்டித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். இதனால் இந்த பகுதியில் 1,500 ஏக்கருக்கு மேற்பட்ட நிலங்கள் சாகுபடியாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தற்காலம் நடைமுறையில் உள்ள நந்தன் கால்வாய்த் திட்டத்தைத் துரிதப்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன், இதனால் முகையூர் தொகுதியைச் சார்ந்த பனமலை, அன்னியூர் மக்களும் மலையனூர் தொகுதி அனந்தபுரம் மக்களும் பயன் அடைவார்கள்.

மேல்மலையனூர் தொகுதியில் போத்துவாய், தடாகம், கணக்கன் குப்பம், கெங்கவரம், காமராஜன்பேட்டை, பழவலம், மழவதாங்கல் ஆகிய பகுதியிலுள்ள இடங்கள் மலைப் பிரதேசமாக இருக்கின்றன. அங்கே பெய்கின்ற மழை நீர், மலைப் பகுதியிலிருந்து வரும் தண்ணீரைத் தேக்க முனப்பாறு திட்டத்தை உருவாக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப் பெற்றது).

ஊராட்சி ஒன்றியங்களின் அதிகாரத்தில் உள்ள மைனர் இரிகேஷன் டேங்குகள் சரியாக பராமரிக்கப்படாமல் உள்ளன. அங்கே வேலைகள் நடப்பதாகச் சொல்லுகிறார்களே தவிர வேலைகள் திருப்திகரமாக இல்லை. மைனர் இரிகேஷன் டேங்குக்கு ரூ. 10 கோடி ஒதுக்கியிருப்பதை நான் வரவேற்கிறேன். இந்தப் பணத்தை சரியான முறையில் செலவு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கசிவுநீர் குட்டைகளை பராமரிப்புச் செய்தால், ஆடு, மாடுகள் தண்ணீர் குடிக்கவும், இதனால் விவசாயக் கிணறுகளுக்கு நீர் ஊற்று எடுக்கவும் பயனுள்ளதாக இருக்கும். இதனை அரசு கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்,



ஐரோப்பிய பொருளாதார சமுதாய நிதி உதவியுடன் ரூ. 15 கோடி செலவில் பெரிய ஏரிகளை நவீனப்படுத்தப் போவதாகவும் மேலும் ரூ. 200 கோடி செலவில் 2.500 ஏரிகளை நவீனப்படுத்தப் போவதாகவும் சொல்லியிருக்கின்ற திட்டத்தை வரவேற்கிறேன். இந்தப் பணம் சரியான முறையில் செலவு செய்யப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நான் இங்கே பாசனம் சம்பந்தமாக பல கோரிக்கைகளைச் சொல்லியிருக்கிறேன். இந்த ஆண்டே ஏதாவது ஒரு கோரிக்கையை ஏற்று திட்டத்தை நிறைவேற்றுமாறு அன்போடு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களையும், புரட்சித் தலைவி ஜெயலலிதா அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன்,

கட்டடங்களைப் பொறுத்தவரையில் என்னுடைய தொகுதியில் அனந்தபுரம் ஆரம்ப சுகாதார மருத்துவமனை நீண்ட காலமாக வாடகைக் கட்டடத்திலிருந்து வருகிறது. அதற்கு இவ்வாண்டு கட்டடம் கட்டித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன், (மணி அடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : விரைவில் முடிக்க வேண்டும்.

திரு. கோ. ஜானகிராமன்: அதே போன்று மழவந்தாங்கல் உயர்நிலைப் பள்ளிக் கட்டடம் இல்லாததால் ஆரம்ப பாடசாலையில் இயங்கி வருகிறது. இதனைக் கருத்தில் கொண்டு பள்ளிக் கட்டடம் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தேவனூர் உயர்நிலைப் பள்ளி சரியான கட்டடம் இல்லாமல் தற்காலம் சில வகுப்புகள் கூரை கட்டடத்தில், மரத்தடியில் நடைபெறுகின்றன. இவற்றைப் போக்க கட்டடம் கட்டித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதே போல அவலூர் பேட்டை, மலையனூர், ஆலம்பூண்டி பள்ளிகளுக்கும் கட்டடம் கட்டித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

செஞ்சி—சேத்துப்பட்டு சாலையிலிருந்து பெரவலூர் செல்லும் ரோடு, தேவனூர் செங்கபுரம் செல்லும் ரோடு, எயில் சாத்தம்பாடி ரோடு, வேலந்தாங்கல் தாயனூர் செல்லும் ரோடு, அனந்தபுரம் கணக்கன்குப்பம் கல்லேரி வழியாகச் செல்லும் ரோடு. செஞ்சி—விழுப்புரம் ரோட்டிலிருந்து அந்தியூர் வழியாக அனந்தபுரம் செல்லும் ரோடுகள் யாவும் கட்டை வண்டிகள் கூட போக லாயக்கற்ற நிலையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொண்டு இவைகளை அவசியம் இவ்வாண்டு சரி செய்து கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திருமதி என். சி. கனகவல்லி

* திருமதி என். சி. கனகவல்லி: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாருக்கும் தனக்குவமை இல்லாதான் பேரறிஞர் அண்ணா அவர்களுக்கும் விழா எடுத்து மாபெரும் சிறப்பினைச் செய்து, வாழும்போதே வரலாற்றுக்குச் சொந்தக்காரராகிவிட்ட புனிதத்தலைவி புரட்சித் தலைவியின் நல்லாசியுடன் என் உரையைத் தொடங்குகின்றேன்.

நம் நாட்டினுடைய வளர்ச்சிக்கும், பொருளாதார மேம்பாட்டிற்கும் அடிப்படையாக அமைவது பொதுப் பணித் துறை. எல்லாத் துறைகளோடும் தொடர்புடைய முக்கிய துறையாகும்.

தமிழகத்தில் நிலவுகிற வறட்சியைக் கருத்தில் கொண்டு ஏரிகள், குளங்கள், வரத்து வாய்க்கால்கள் போன்றவற்றை தூர் எடுத்து மழைநீர் வீணாகாமல் தேங்கிட வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கசிவு நீர்க் குட்டைகளை எங்கெங்கு அமைக்க முடியுமோ அங்கெல்லாம் அமைத்து மழைத் தண்ணீர் தேக்கி வைத்து நிலத்தடி நீர் குறைவுபடாமல் இருப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து நிலத்தடி நீரை பாதுகாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுப்பணித்துறையின் மூலம் கட்டடங்கள் கட்டி முடிக்கப் படுகின்றன. ஆனால் உடனடியாக அந்தந்த துறைகளிடம் ஒப்படைக்கப்படுவதில்லை. இதனால் மக்கள் பணிகள் பாதிக்கப் படுவதைக் கருத்தில் கொண்டு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

காவிரி நீர்ப் பிரச்சினையில் ஒரு தெளிவான முடிவை எடுத்து தமிழக நலனுக்கு எதிராக யார் இருந்தாலும் அவர்களை புறக்கணித்து தமிழக நலன் காக்கும்—எடுக்கும் காரியத்தை முடிக்கும் வேகம், செயல் திறன், கூரிய நோக்கு, கனிந்த மனம், நிறைந்த குணம், வாடிய மக்களின் வாட்டம் போக்கும் சிந்தனை ஆகியவற்றையே இலட்சியமாய்க் கொண்டு வெற்றி நடைபோடும் புரட்சித் தலைவி எடுக்கும் அனைத்து முயற்சிகளுக்கும் நானும் என் தொகுதி மக்களும் தோள் கொடுப்போம் என உறுதி கூறுகிறேன்.

பிற்பகல் 6,05 மணி

நம்மையெல்லாம் ஆளாக்கிவிட்ட இதய தெய்வம் புரட்சித் தலைவர் சமாதியை மேம்படுத்த ரூ. 70 இலட்சம் செலவழிக்க அனுமதித்த இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுக்கு கோடிப் பூச்சொற்களால் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த சமாதியை அழகுறக் கட்ட வேண்டுமென கடந்த தி.மு.க. ஆட்சியிலே எதிர்க் கட்சி வரிசையில் இருந்து நாம் கூறியபோது அன்றைக்குப் பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்தவர், ''இன்றைக்கு எங்களை இங்கே உட்கார வைத்து இருக்கிறீர்கள்; இன்னும் எங்கே கொண்டுபோய் உட்கார வைக்கப்



போகிறீர்களோ?'' என்று கூறினார். மக்களின் எண்ணங்களைப் புறக்கணித்த அவர்களை இன்றைக்கு மக்கள் உட்கார வைக்க வேண்டிய இடத்தில் உட்கார வைத்து இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நினைவு கூறக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

குடிநீர்ப் பிரச்சினை என்னுடைய தொகுதியில் இன்றியமையாத பிரச்சினையாக உள்ளது. குடிநீர் ஆதாரம் இல்லாத பகுதிகளுக்கு ஆதி திராவிட குடியிருப்புகள் உள்ள பகுதிகளுக்கும் சேர்த்து குடிநீர் வசதி செய்து கொடுக்கும் திட்டம் செயல்படுத்தும்போது என்னுடைய தொகுதியான விளாத்திக்குளத்துக்கும் அதிக அளவில் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் சாலைகள் மோசமான நிலையில் உள்ளது. குண்டும் குழியுமாக இருப்பதால் வாகனங்களில் செல்லும்போது வாகனங்களே ஆடிக்கொண்டு செல்லும் நிலைமை உள்ளது. இந்நிலையினைப் போக்கி சீர்கேடுகளைக் களைந்து நல்ல சாலை வசதி செய்து தருமாறு வேண்டுகிறேன்.

என்னுடைய தொகுதியில் மின் விளக்குகள் மின்மினிப் பூச்சிகளாய்க் காட்சி அளிக்கின்றன. மின் அழுத்தம் குறைவாக இருப்பதால் விளக்குகள் மங்கிய நிலையில் எரிகின்றன. அதைச் சீர் செய்ய தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன.

''சந்தர்ப்பம் கிடைக்கும்போது தன்னுடைய கருத்துக்களை வலியுறுத்துகின்றவனே சிறந்த மனிதன்'' என புரட்சித் தலைவர் அவர்கள் கூறியுள்ளார். அதைப்போல மின்சாரம் என்பது இன்றைக்கு மனிதனின் உறைவிடத்தின் முக்கிய அங்கமாகவும் தொழில் வளர்ச்சியின் மூலப் பொருளாகவும் உள்ளது. தமிழ்நாட்டில் மின்வசதி இல்லாத இடங்களே இல்லை எனும் அளவுக்கு இதய தெய்வம் புரட்சித் தலைவியின் பொற்கால ஆட்சியில் நிலைமை உருவாக வேண்டுமென இச்சந்தர்ப்பத்திலே வலியுறுத்த விரும்புகிறேன்.

1971 ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியில் தமிழ்நாடு முழுவதும் மின்சார இணைப்பு இல்லாத கிராமங்களே இல்லை எனும் அளவுக்கு ஒரு திட்டத்தினைக் கொண்டு வந்து முதற்கட்டமாக செங்கை மாவட்டத்தில் பூர்த்தி செய்து அதற்கு ஒரு விழாவினை எற்பாடு செய்தார்கள். அந்த விழாவில் அன்றைய முதல்வர் பேசும்போது, ''பொன்சாரம் இழைந்தோடும் பூமான்களின் இல்லங்களிலேதான் மின்சாரம் பாயும் எனும் நிலை மாறி என்னரும் தமிழ்நாட்டில் எங்கணும் மின்சாரம் எழுபத்திரண்டுக்குள் வந்துவிடும்'' என்று கூறினார். ஆனால் 1976 வரை அத்திட்டப் பூர்த்தி செய்யப்படவில்லை. அப்படிப்பட்ட நிலை இல்லாமல்

[திருமதி என். சி. கனகவல்லி] [1991 செப்டம்பர் 26

நமது இதய தெய்வம் புரட்சித் தலைவி ஆட்சியில் தமிழகத்தில் மின்சார இணைப்பு இல்லாத கிராமங்களே இல்லை எனும் அளவுக்கு நிலைமையினை நிச்சயம் உருவாக்க வேண்டும் எனும் அவாவினைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுப்பணித் துறையின் பராமரிப்பில் உள்ள ஏரிகள், கண் மாய்களில் இருக்கும் தனியார் ஆக்கிரமிப்புகள் உடனடியாக அகற்றப்பட வேண்டும்.

இராமேஸ்வரத்தில் தி.மு.க. அரசால் கொடுக்கப்பட்ட— டெண்டர்கள் ஸ்ட்ரெங்த்தனிங் என். எச். ரோடு 49ல் கிலோ மீட்டர் 160 முதல் 170 வரை என்ற பணி தற்போது முடியும் நிலையில் உள்ளது. இந்தப் பணியில் கடல் மணல் பயன்படுத்தப்படு கிறது என்று கூறப்படுகிறது. கடல் மணலைப் பயன்படுத்துவதால் சாலையின் தரம்மிகவும் பாதிக்கப்படும். இது குறித்து உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

விளாத்திகுளம் தொகுதியில் வைப்பாற்றில் ஒரு கோடி ரூபாய் செலவில் புது அணைக்கட்டு கட்டத் திட்டம் உருவாக்கப்பட்டு அரசின் பரிசீலனையில் இருந்தது. இத்திட்டம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பெற்றுள்ளது. அத்திட்டத்தை மீண்டும் செயல் படுத்த தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேபோல் வைப்பாற் றின் குறுக்கே மேம்பாலம் கட்டித்தரவேண்டும். மழைக்காலங்களில் தண்ணீரால் நிரம்பி, தீவு போல் காட்சி அளிக்கிறது. இதனால் பொது மக்களுக்கு மிகவும் இடையூறாகவும், குறிப்பாக பள்ளிக் குழந்தைகளுக்கு இடையூறாகவும் உள்ளது.

அரியதொரு வாய்ப்பை எனக்கு வழங்கி இந்த அவையிலே உரையாற்றுகின்ற வாய்ப்புக் கிடைத்தமைக்கு நன்றி கூறி அமர் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திருமதி அ. தி. சரஸ்வதி.

* திருமதி அ. தி. சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனக்கு ஒரு பத்து நிமிடம் பேச வாய்ப்பு அளிக்குமாறு உங்களை மிகவும் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சந்தன மணம் கமழும் சத்தியமங்கலத்தில் சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்த என்னை சத்தியமங்கலம் சட்ட மன்ற உறுப்பினராக ஆக்கி, சான்றோர் நிறைந்த இந்த மாமன் றத்தில் நல்லுரை ஆற்ற செய்திருப்பது சரித்திரம் மிக்க வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த சத்தியத் தாய் சந்தியா ஈன்றெடுத்த தமிழ் சரித்திரத்தின் சகாப்தமாய் என் அன்னை புரட்சித் தலைவி யையே சாரும். நமது கழகத்தை கண்ணின் கருமணியாகக் காக்கும் நமது கழகத்தின் பேசும் காவல் தெய்வம் தமிழினப்



1991 செப்டம்பர் 26] [திருமதி அ. தி. சரஸ்வதி]

பெண் குலத்தின் பொன் விளக்கு, கொங்கு தமிழ்நாட்டின் கற்பூர மணம் வீசும் பூபாள ராகம் பாரதத் தாய் பெற்றெடுத்த உலகம் போற்றும் ஒப்பற்ற தலைவி, ஆதிபராசக்தியின் அவதாரமாக வந்து தமிழகத்தின் சாராய சாம்ராஜ்யத்துக்கு சாவு மணி அடித்த தாய்க் குலத்தின் திருவிளக்கு. தமிழகத்தின் ஒளிவிளக்கு, ஏழைகள் இல்லமெல்லாம் அவர்களின் உள்ளமெல்லாம் நிறைந்து இருக்கும் என் இதயதெய்வம், நான் உயிர் உள்ள வரையில் என் உயிரினும் மேலாக நான் வணங்கும் இதய தெய்வம், தமிழகத்தின் நிரந்தர முதல்வர், மாண்புமிகு இதயதெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களின் புனித பொற்பாதம் தொட்டு வணங்கி, அவர்களின் நல்லாசியுடன் சத்தியமங்கலம் தொகுதியில் பெருவாரியான வாக்கு வித்தியாசத் தில் வெற்றிப் பெறச் செய்த வாக்காள பெருமக்களுக்கும், கழக உடன் பிறப்புகளுக்கும், தோழமை கட்சியைச் சேர்ந்த உடன்பிறப் புகளுக்கும், இம்மாமன்றத்தில் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து கொண்டு, பொதுப்பணித் துறை மானியக் கோரிக்கை மீது எனது கன்னிப் பேச்சைத் தொடங்குகிறேன்.

பிற்பகல் 6.10 மணி.

தமிழக அரசின் நிதிநிலை அறிக்கையை தமிழகத்தின் கிராமத்து மக்கள் அனைவரும் போற்றுகிறார்கள், புகழ்கிறார்கள், இது வரை எந்த மாநிலத்திலேயும் ஆட்சிபுரிந்த முதல்வர்கள் செய்யத் துணியாத சாதனைகளை மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் செய்துள்ளார்கள். தன் உயிரையே துச்சமென மதித்து தமிழக மக்களுக்காக அரும்பணியாற்றி சாதனைபடைக்க இருக்கும் அவர்களுக்கு உறுதுணையாக நாங்கள் இன்றும் என்றும் இருப்போம். தன்னுயிர் பாராமல் மக்களுக் காகவே என்னுயிர் என்று வெற்றி முரசு கொட்டி, தமிழகத்தின் ஆட்சிப் பீடத்தில் அழகு இராணியாக அமர்ந்து ஆட்சி புரியும் காட்சி கண் கொள்ளாக் காட்சியாக இருக்கின்றது. இந்த மா மன்றத்தில் கோவிலில் தெய்வத்தை வணங்கும் பக்தர்கள் போல் அமர்ந்து எங்கள் இதய தெய்வம் புரட்சித்தலைவிக்கே எங்கள் உயிர் கொடுப்போம் என்று சூளுரைத்து மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களும் அமர்ந்து கொண்டிருக்கும் காட்சி அற்புதமான இந்திரலோகக் காட்சியாக எனக்கு தெரிகின்றது.

இதுவரையில் எந்த முதல்வரின் தலைமையிலாவது இப்படி ஒரு மாமன்றத்திலே சட்டமன்ற உறுப்பினர்கள் தெய்வத்தை வழிபட்டு அமைதியாக அமர்ந்திருந்த காட்சியை மக்கள் பார்த் திருப்பார்களா என்றால் அரிது அரிது. சென்ற ஆட்சியில் அமர்ந் திருந்த தலைவர் நடத்திய ஆட்சி மக்களாட்சியா? இராவணன் ஆட்சியல்லவா நடத்தினார். சட்டமன்றம் சட்டமன்றமாக இல்லாமல் சண்டை மன்றமாக அல்லவா இருந்தது. நமது இதய

தெய்வம் புரட்சித் தலைவியையே இதே மாமன்றத்திலே பரி தவிக்கவிட்ட கொலை பாதகம் செய்யத் தூண்டிய துச்சாதன, துரியோதனர்களை, தமிழக மக்கள், அவர்களுக்கு மரண அடி கொடுத்து, வேரோடு சாய்த்து, அவர்களின் நாடி நரம்புகளை அடக்கி, ஒடுக்கி, முக்காடு போட்டு மூலையில் உட்கார வைத்து. சண்டை மன்றமாக இருந்த மன்றத்தை சட்டமன்றமாக்கி, அதில் நமது இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களை அரியாசனத்தில் அமரச் செய்த பெருமை தமிழக மக்களுக்கே சேரும்.

அத்தகைய மக்களின் நலம்தான் முக்கியம் என்று ரூ.325கோடி நஷ்டம் ஏற்பட்டாலும் கவலைப்படாமல் சாராயக் கடைகளை ஒழித்து, அரசுக்கு பணம் முக்கியமல்ல, மக்கள் நலன்தான் முக்கிய மென தமிழக மக்களின் உள்ளத்தில் இடம்பெற்று பாராட்டுதல் களையும் பெற்றுள்ளார். இது சமுதாய நோக்கமும் மனிதாபி மானமும் நிறைந்த செயலாகும். எந்த மாநில முதல்வரும் செய் யாத சாதனையை நமது மாண்புமிகு இதயதெய்வம், புரட்சித் தலைவி அவர்கள் செய்து முடித்துள்ளார்கள், இனியும் செய்வார்கள் என மக்கள் நம்பிக்கையுடன் இருக்கிறார்கள்.

இப்பவும் சத்தியமங்கலம் தொகுதி மக்கள் மிகவும் பிற்பட்ட நிலையில் உள்ளனர். அதனை மலைவாழ் மக்கள் அபிவிருத்தி ஒன்றியமாக அறிவித்து அவர்களின் வாழ்வு மலர மாண்புமிகு முதல்வர் அவர்கள் கருணைகாட்டினால் அவர்களுக்கு விமோசனம் கிடைக்கும். எனது சத்தியமங்கலம் தொகுதி விவசாய நிலங்கள் நிறைந்த தொகுதி. அங்கே 90 சதவீதம் மழைநீரை நம்பியே விவசாயம் நடைபெறுகின்றது. சத்தியமங்கலம் தொகுதி பெரும் பகுதி மலைப்பகுதி. மலை அடிவாரம் மற்றும் மலைப் பிரதேசத்தில் உள்ள நிலங்களை பாசன நிலங்களாக பயன்படுத்த, பல்வேறு திட்டங்கள் செயல்படுத்த வாய்ப்புள்ளது. மழைக் காலங்களில் மழைநீர் வெள்ளப் பெருக்கெடுத்து வீணாக ஆற்றில் கலக்கிறது. அதைத் தடுத்து கீழ்க்கண்ட இடங்களில் அணைகள் கட்டித்தர வேண்டுமென்று மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களை கேட்டுக் கொளகிறேன்,

தாளவாடி ஒன்றியத்தில் காளவாடி கிராமத்திற்கு அருகில் வாளைப்பள்ளத்தில் ஒரு அணை கட்டவேண்டும். திக்னாரை- மல்குத்திபுரம் இடையில் ஒரு அணைத் திட்டம், பையன்ன புறத்தில் யோச்சம்பள்ளி என்ற இடத்தில் ஒரு அணைத் திட்டம். அரேபாளையத்தில் ஒரு அணைத் திட்டம். ஆகிய இந்தத் திட்டங் களை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் நிறைவேற்றித் தரவேண்டுமென்று பணிவுடன் கேட்டுக் கொள் கிறேன்.





மாண்புமிகு முன்னாள் முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சியில் கெம்பநாயக்கன் பாளையத்தின் பகுதியில் விவசாயிகள் பயன்பெறும் விதத்தில் ஒரு அணை கட்டப்பட்டுள்ளது. அந்த அணைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவரின் ஒரே வாரிசு மாண்புமிகு புரட்சித் தலைவி அணை என்று பெயர் வைக்க வேண்டுமென்று என் தொகுதி மக்கள் சார்பிலும், என் சார்பிலும் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அணைக்கட்டின் நிதி ஒதுக்கீட்டில் ரூ. 10 லட்சம் மீதம் உள்ளது. அணைக்குச் செல்லும் மண் பாதை மிகவும் பழுது அடைந்துள்ளது. அதைத் தார்ச்சாலையாக அமைத்துக் கொடுக்குமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களை பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 6.15

புதுபீர் கடவுபெரும்பள்ளத் திட்டம், புதுகுய்யனூர் பெரும் பள்ளத் திட்டம், கோம்புப்பள்ள அணைத் திட்டம், புளியங் கோம்பைத் திட்டம், கணக்கம்பாளையத் திட்டம் ஆகிய திட்டங்கள் அரசின் ஆய்விலும், மதிப்பீடுகள் தயாரிப்பதிலும் உள்ளன. இந்தத் திட்டங்களைச் செயல்படுத்தினால், சுமார் 25 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெருகும். சுமார் 25 ஆயிரம் ஏக்கர் நிலம் கிணற்றுப் பாசனத்திற்கு நிலத்தடி நீர் வளம் பெருகும். மாண்புமிகு முதல்வர், புரட்சித் தலைவி அவர்களின் பொற்பாதங்களைத் தொட்டும், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களையும் இந்தத் திட்டங்களை நிறை வேற்றித் தருமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

சத்தியமங்கலம் தொகுதியில் பல்வேறு குட்டைகள் பழுது அடைந்துள்ளன. அவைகளைப் பழுது பார்த்துக் கொடுக்கவும், புதிய சிறு குட்டைகளைக் கட்டவும் நிதி ஒதுக்கக் கேட்டுக் கொள்கிறேன். வனப் பகுதியில் நிறைய குட்டைகள் கட்ட வாய்ப்பு உள்ளது, அப்படிக் கட்டி, நீரைத் தேக்கினால், வன விலங்குகள் தண்ணீர் குடிக்கவும், மண் அரிப்பைத் தடுக்கவும், மரங்கள் செழித்து வளரவும் ஏய்ப்பு அளிக்கும்.

தாளவாடிப் பகுதியில், தாளவாடிக்கும் தலைமலைக்கும் இடையில் சிக்கஹள்ளிக்குப் பக்கத்தில் இரண்டு பாலங்கள் கட்ட வேண்டும். மழைக்காலத்தில் போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளது. ஒசூரிலிருந்து பந்திகவுடஹள்ளிக்கு இடையே உள்ள பள்ளத்திற்கு ஒரு பாலம் கட்டவேண்டும். சத்தியமங்கலத்தில் உள்ள புதிய பவானி பாலத்திற்கு அன்னை சந்தியா பாலம் என்று பெயர்சூட்டவேண்டுமாய் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

மணியடிக்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. செ. கு. தமிழரசன்

திரு. செ. கு. தமிழரசன்: மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித்துறை, நெடுஞ் சாலைத்துறை ஆகிய மானியங்களின் மீது இந்திய குடியரசுக் கட்சியின் சார்பிலே கருத்துக்களை வழங்குவதற்கு வாய்ப்புத் தந்தமைக்கு முதலிலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

70 ஆண்டுக் காலமாக நீடித்துக் கொண்டிருக்கிற காவிரி நீர்ப் பிரச்சினையை இன்றைக்குப் புதிதாக பொறுப்பேற்றிருக்கிற நம்முடைய அரசு, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய தலைமையிலே இந்தப் பிரச்சினையை ஒரு புதிய கண்ணோட்டத் தோடு அணுகி, அவர்களுடைய தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டி ருந்ததைப் போல, 'கட்டுண்டு வாழோம், சமநிலையில் இணை வோம்' என்ற அற்புதமான குடியாட்சித் தத்துவத்தை வலியுறுத்துகிற வகையில், மத்திய அரசிடம் நம்முடைய கோரிக்கைகளைக் கேட்க, மாநில அனைத்துத் தரப்பு மக்களையும் ஒன்றுதிரட்டி, ஒரு புதிய எழுச்சியை உருவாக்கி, இன்றைக்கு இந்தப் பிரச்சினையில் நம்முடைய அரசு ஒரு தெளிவான நிலையை எடுத்து இருப்பதை நான் முதலிலே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல், பல்வேறு பிரச்சினைகளை நான் லேசாக இங்கே கோடிட்டுக் காட்ட வேண்டும் என்று கருதுகிறேன். கங்கையையும் காவிரியையும் இணைக்கிற ஒரு திட்டத்தை நாம் நெடுநாளாக பேசிக் கொண்டிருக்கிறோம். இந்தத் திட்டம் இதுவரையிலும் மத்திய அரசுகளினாலும் மாநில அரசுகளினாலும் பேசப்படுகிற ஒரு பிரச்சினையாக இருந்து கொண்டிருக்கிறதே தவிர, அதற்கு ஒரு இறுதியான வடிவத்தை நம்மால் தர முடியவில்லை. நாம் எப்படி காவிரி நீர்ப் பிரச்சினையில் ஒரு புதிய அணுகுமுறையோடு புரட்சித் தலைவி அவர்கள் இன்றைக்கு மத்திய அரசிலே கோரிக்கை விடுத்து, அணுகிக் கொண்டிருக்கிறார்களோ, அதைப் போல, கங்கையையும் காவிரியையும் இணைக்கிற இந்தத் திட்டத் திற்கும் நம்முடைய மாநில மக்களுடைய ஒட்டுமொத்தமான உணர்வைத் தட்டி எழுப்பி, அதையும் செயல்படுத்தவேண்டும் என்று நான் இங்கே எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். மாநில அளவிலே இப்படிப்பட்ட வளமான திட்டங்களை நாம் செயல்படுத்துவதற்கு நான் ஒன்றை இங்கே நினைவுகூரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்திய அரசியல் சட்டத்தை வடிவமைத்துத்தந்த பாபாசாகிப் அண்ணல் அம்பேத்கர் அவர்கள், அரசியல் சட்ட நிர்மாணக் குழுவிலே பேசுகிறபோது, ஒரு பகுதியிலே வளமான நதிகளும், ஆறுகளும் இருக்கின்றன. இன்னொரு பகுதி, இந்தியத் துணைக் கண்டத்திலே வறண்டு கிடக்கிறது. அதனால், பிற்காலத்திலே



மாநிலங்களிடையே இத்தகைய பிரச்சினைகள் எல்லாம் உருவாவதற்கு வழி கொடுக்கும், எனவே நதிகளை தேசிய மயமாக்கவேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தினார்கள். இன்றைக்கு என்ன காரணத்தினாலோ அவைகளைச் செயல்படுத்த முடியாமல் போய்விட்டது. இன்றைக்கு நம்முடைய மாநில அரசே கூட, இப்படிப்பட்ட ஒரு தீர்மானத்தை நம்முடைய சட்டப் பேரவையின் முன்வைத்து, மத்திய அரசை வலியுறுத்தி நதிகளை தேசியமயமாக்கவேண்டும் என்ற கருத்தினை நான் இங்கே எடுத்துக்கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 6-20

அதேபோல் கிருஷ்ணா நீர் திட்டத்தை புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் அன்றைக்குக் கொண்டுவந்தார்கள். அந்தத் திட்டம் விரைவாக செயல்படுத்தப்படுமேயானால், சென்னை மாநகரத்திலே இருக்கிற மக்களுக்கு இன்னும் பல ஆண்டுகளுக்கு குடிநீர் பஞ்சம் ஏற்படாத நிலைமை ஏற்படும் என்று புரட்சித் தலைவர் அவர்கள் அன்றைக்கே அதை விரைவாக செயல்படுத்த வேண்டுமென்று தொடங்கியும் வைத்தார். நடுவிலே வேறு ஒரு அரசு வந்தபோது அந்தத் திட்டத்தினுடைய பணிகள் எல்லாம் மந்தப்படுத்தப்பட்டது. இன்றைக்கு மீண்டும் புரட்சித் தலைவி யினுடைய தலைமையில் ஏற்பட்டிருக்கின்ற இந்த புரட்சித் தலைவியினுடைய அரசு அவைகளை விரைவாக செயல்படுத்த வேண்டும்; கிருஷ்ணா நீர் திட்டத்தை மிக விரைவிலே செயல் படுத்தி சென்னைக்கு கிருஷ்ணா நீரைக் கொண்டுவரவேண்டு மென்று வலியுறுத்த விரும்புகிறேன்.

பொதுப் பணித் துறையிலே பல்வேறு ஒப்பந்தங்கள் இன்றைக்கு டெண்டர் வழியாக விடப்படுகிறது. நெடுஞ்சாலைத் துறையிலே 'தாட்கோ' விலும் வேறு பல துறைகளிலும் ஓரளவிற் ரூ. 5 இலட்சம் வரையில் இருக்கிற பணிகளை தாழ்த்தப்பட்டவர் களுக்கு நேரடியாக நியமனத்தின் மூலம் ஈ. எம். டி. என்று சொல்லப்படுகிற அந்த டெபாசிட் தொகை இல்லாமலே தரலாம் என்கிற ஒரு மரபு இருக்கிறது. அது என்னவோ இந்த அரசாணை யிலே பொதுப்பணித் துறையை மட்டும் விட்டுவிட்டார்கள். மற்ற துறைகளுக்கு பொருந்துகின்ற அந்த சட்டத்தை, இந்த அரசாணையை பொதுப்பணித் துறையிலும் கொண்டு வந்து ரூ. 5 இலட்சம் வரையில் இருக்கிற பணிகளை நேரடியாக தாழ்த்தப் பட்டவர்களுக்கு நியமனத்தின் மூலம் தரலாம் என்கிற மரபை ஏற்படுத்திட வேண்டுமென்று இந்த நேரத்திலே வேண்டிக் கொள்ள விரும்புகிறேன்.

எங்களுடைய வட-ஆற்காடு அம்பேத்கார் மாவட்டத்திலே மோர்தானா அணைக்கட்டு என்று நாங்கள், அந்த மாவட்டத்து சட்டமன்ற உறுப்பினர்கள் 15 ஆண்டுகளாக தொடர்ந்து பேசிக் கொண்டிருக்கிறோம், 15 ஆண்டுகளுக்கு முன்னாலே அதற்கு

[திரு.செ.கு. தமிழரசன்] [1991 செப்டம்பர் 26

அடிக்கல் நாட்டப்பட்டு, நிலுவையிலே கிடப்பில் போடப்பட்டது. பிறகு மீண்டும் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக அடிக்கல் நாட்டு விழா நடத்தியிருக்கிறார்கள். ஆனால் இன்னமும் ஆயத்தப் பணிகள், தொடக்கப் பணிகள் அங்கே நடைபெறவில்லை. இந்த முறையும் அதேபோல் அடிக்கல் நாட்டு விழாவோடு நின்றுவிடுமோ என்று அந்தப் பகுதி மக்கள் அஞ்சிக்கொண்டிருக்கிறார்கள். எனவே மோர்தானா அணைக்கட்டினுடைய திட்டப்பணிகளை நடைமுறைப்படுத்திட வேண்டும், செயல்படுத்திட வேண்டுமென்று நான் இங்கே எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்திலே செண்பகத் தோப்பு அணை என்கிற அந்த அணையை நாங்கள் நெடுங்கால மாக வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். வருகிற பட்ஜெட்டிலாவது அந்த அணையைக் கொண்டுவரவேண்டுமென்று இங்கே நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

ஒரு நாட்டினுடைய வளர்ச்சியை தெரிந்துகொள்ள வேண்டு மானால், அந்த நாட்டினுடைய நிதி நிலைமையைத் தெரிந்து கொள்ள வேண்டுமானால், அங்கேயிருக்கின்ற சாலைகளைப் பார்த்தாலே போதும், அந்த நாட்டின் வளர்ச்சியை நாம் தெரிந்துகொள்ளலாம். ஆனால் நம்முடைய சாலைகள் எந்த மாவட்டம் என்று குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லாமல், எல்லா மாவட்டங்களிலுமே குண்டும் குழியும், மேடும் பள்ளமுமாக இருந்துகொண்டிருக்கிறது. நம்முடைய நிதிப் பற்றாக்குறையைக் காட்டுகின்றது என்றாலும் ஒரு சிறப்புத் திட்டத்தை வைத்து, உலக வங்கியிடம் கோடிக்கணக்கிலே கடன் பெற்று, ஓராண்டு காலம் எடுத்து போதிய அளவிற்கு எல்லா நெடுஞ்சாலைகளையும் சீர்படுத்த வேண்டுமென்று நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (குறுக்கீடு) ஒரு நிமிடத்திலே முடித்துக்கொள்கிறேன். நிறைய பேச வேண்டுமென்று நினைத்தேன். ஆனால் இத்தோடு முடித்துக் கொள்கிறேன்.

அதே நேரத்திலே நெடுஞ்சாலைத் துறையிலே ஆயிரக்கணக் கான தொழிலாளர்கள் இருக்கிறார்களே, அவர்கள் எல்லாம் அந்த குண்டும் குழியுமாக இருக்கின்றதை சீர்படுத்துகின்ற வேலை களிலே காலையிலிருந்து மண்ணோடு மண்ணாக, சேறோடு சேறாக, தாரோடு தாராக கலந்து உழைத்துக்கொண்ருக் கிறார்கள். அவர்கள் எல்லாம் கேஷுவல் லேபராகவே காலம் காலமாக இருக்கிறார்கள். அவர்களை எல்லாம் பணி நிரந்தரம் செய்யவேண்டுமென்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இரயில்வே துறையில் மஸ்தூர் என்று தனியாகவே இருக்கிறது. பொதுப் பணித்துறையிலே, நெடுஞ்சாலைத் துறையிலே இந்த கேஷுவல் லேபர்களையும், தினக் கூலியாளர்களையும் பணி நிரந்தரம் செய்யவேண்டுமென்று நான் நினைவுபடுத்த விரும்பு கிறேன்.



1991 செப்டம்பர் 26] [திரு. செ. கு. தமிழரசன்]

ஒன்றே ஒன்றை மட்டும் சொல்கிறேன். மிக முக்கியம் நெடுஞ்சாலைத் துறையிலே போனால் ஊர் பெயர்ப் பலகை எல்லாம் வைத்திருப்பார்கள். ஆனால் அந்த பெயர் பலகையிலே பெயர் இருக்காது. மேலே சுவரொட்டி ஒட்டியிருப்பார்கள். அது வைப்பதே வீணாகத் தெரிகிறது. எல்லா பெயர்ப் பலகைகளிலும் சுவரொட்டி ஒட்டி. எந்த ஊர் என்றே நம்மால் தெரிந்து கொள்ள முடிவதில்லை. எனவே அப்படிப்பட்ட சுவரொட்டிகளை ஒட்டுகின்றபோது கடுமையான தண்டனையை மேற்கொள்ள வேண்டுமென்று நான் சுட்டிக்காட்டி, பல்வேறு பிரச்சினைகளைப் பேசுவதற்கு நேரமற்ற நிலையிலே வாய்ப்பிற்கு நன்றி கூறி, அமர்கிறேன், நன்றி, வணக்கம்.

பிற்பகல் 6.25

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. செ.து. வரத ராஜன்.

திரு. செ. து. வரதராஜன் : மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே பேசுகிற நல்வாய்ப்பினைத் தந்த எங்கள் தங்கத் தலைவி புரட்சித் தலைவிக்கு எனது வணக்கத்தை தெரிவித்துக் கொண்டு, செங்கை வட்டாரத்திலே உள்ள பொது பணித்துறையினுடைய பராமரிப்பிலே உள்ள ஏரிகள் 207 ஏரிகள் இருக்கின்றன. அதனுடைய ஆயக்கட்டுகளாக 57,522 ஏக்கர்கள் இருக்கின்றன. ஊராட்சி ஒன்றியத்தினுடைய பரா மரிப்பின் கீழ் 271 ஏரிகள் இருக்கின்றன. அதனுடைய ஆயக் கட்டுகளாக 948 ஏக்கர்கள் இருக்கின்றன. சிறு பாசன ஏரி களாக 231 ஏரிகள் இருக்கின்றன. ஜமீன் ஏரிகளாக 40 இருக்கின்றன. ஆகவே என்னுடைய தொகுதியில் என்னுடைய பகுதியில் 749 ஏரிகள் இருக்கின்றன நீர்பாசனத் திற்கு வேண்டிய நிலங்களாக 67,003 ஏக்கர் நிலங்கள் இருக் கின்றன. அந்த ஒவ்வோர் ஏரியும் 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை யாவது பழுது பார்க்கப்பட வேண்டும் என்கிற வரைமுறை யுள்ளது. அவ்வாறு பழுது பார்க்க தோராயமாக ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 50 என்கிற வீதத்தில் நிதி தேவைப்படுகிறது. அதன் அடிப்படையில் ஆண்டுக்கு சுமார் 10 லட்சம் ரூபாய்க்கு மேல் தேவைப்படுகின்றன. தற்போது ஒதுக்கப்படுகிற தொகையோ 2 லட்சம் என்று சொல்லுகிறார்கள். மேற்படி ஏரிகளை ஒழுங்காக பராமரிக்க வேண்டுமானால் ஏக்கருக்கு ரூ. 50 வீதம் தேவைப்படுகின்றன. எனவே தேவையான நிதி ஒதுக்கீடு அளிக்காத காரணத்தினால் விவசாயத்திற்கு மிகவும் ஆதார மாக இருக்கிற நீர் நிலைகளில் நல்ல பராமரிப்பிற்கு வழி வகை செய்ய வேண்டும் என நான் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

செங்கற்பட்டு தொகுதியில் உள்ள சுமார் 2,500 ஆயக் கட்டுகள் உள்ள ஏரி பொன்விளைந்த களத்தூர் ஏரியாகும், அந்த ஏரியிலே நீஞ்சல் மடு என்ற அணைக்கட்டின் மூலமாக

தண்ணீர் வர ஏற்பாடு செய்துள்ளார்கள். ஆனால் நீஞ்சல்
மடு அணைக்கட்டு கடந்த 15 ஆண்டுகாலமாக பழுது அடைந்த
ஏரிகளுக்கு தண்ணீர் வரத்து குறைந்துள்ளது. பல ஆண்டுக்
காலமாக ஏரிகள் நிரம்பாமல் விவசாயம் பெரிதும் பாதிக்கப்
பட்டு ஆண்டு முழுவதும் அந்த மடுவிலே ஓடுகிற தண்ணீர்
அத்தனையும் வீணாக பாலாற்றிலே விழுந்து அது கடலிலே
போய் சேர்ந்து விடுகிறது. நம்முடைய தங்கத்தலைவி
அவர்கள் காவிரி நீர் வீணாகிறது என்றும் கேரளத்திலிருந்து
வரும் நதி நீர் வீணாகிறது என்றும் சொல்லுகிறார்கள்.
ஆனால் செங்கற்பட்டிலே இருக்கிற இந்த மடுவிலே உள்ள
தண்ணீர் அனைத்தும் பாலாற்றிலே விழுந்து, அந்த பாலாற்
றிலே விழுகின்ற தண்ணீர் அனைத்தும் கடலிலே வீணாகப்
போய் கலந்து விடுகின்றன. அந்த தண்ணீர் நீஞ்சல் மடு வழி
யாகச் செல்லுமேயானால் சுற்றுப் புறத்தில் இருக்கிற 2,500
ஏக்கர் நிலங்கள் நல்லபடியாக சாகுபடி ஆவதற்கு விவசாயத்
திற்கு மிக ஏதுவாக இருக்கும்.

அது மட்டும் அல்லாமல் கடலிலே கலக்கின்ற அந்த தண்ணீரை
வீணாக்காமல் இருக்க ஆற்றிலே ஒரு மடுவைப் போல
ஒரு சிறு அணையைப் போல் ஒன்று அதில் கட்டுவீர்களே
யானால் சுற்றுப் புறங்களிலும் ஊற்றுகள் நன்றாக ஊறும்.

அந்தப் பகுதியிலே குடிதண்ணீருக்காக ஆலந்தூர், தாம்பரம்,
செங்கற்பட்டு மற்றும் எம்.எம்.டி.ஏ. யிலே இருக்கிற காட்டாங்
கொளத்தூருக்கு குடிதண்ணீர் தருவதற்கு ஸ்பிரிங் வாட்டர்
தருவதற்கு ஏதுவாக இருக்கும். ஆனால் சில நேரங்களில் மழை
பெய்யும் போது தண்ணீர் செல்லுகின்றதே தவிர மற்ற
காலங்களில் வறண்ட ஆறாகத்தான் அந்த பாலாறு இருக்கிறது.
ஆகவே அதில் இப்படிப்பட்ட ஒரு மடுவையாவது கட்ட
வேண்டும். ஆகவே அந்த மடுவை புதுப்பித்து கால்வாய்கள் மூல
மாக அந்த தண்ணீர் அந்த அணையின் மூலமாக செல்வதற்கு
ஏதுவாக செய்தால் அங்கிருக்கிற 2,500 ஏக்கர் விவசாயிகளுக்கு
விவசாயத்திற்கு மிகப்பெரும் உதவியாக இருக்கும். எத்தனையோ
காலத்திலே எத்தனையோ சட்டமன்ற உறுப்பினர்கள்
கடந்த 15 ஆண்டு காலமாக சொல்லி சொல்லி அந்தக் கால்
வாய் சீர்படுத்தப் படவில்லை. அந்த அணைக்கட்டை சரியான
முறையிலே வேலை செய்யவும் முயற்சி செய்யவில்லை.
அதற்கு என்ன காரணம் என்பதே விளங்கவில்லை. அப்படி
அந்த அணைக்கட்டுகள் வேலை செய்யுமானால் நிச்சயமாக
சுற்றுப்புறத்தில் இருக்கிற விவசாயிகள் மிகவும் பயன் அடை
வார்கள். நான் புதியதாக அணைக்கட்டக் சொல்லவில்லை.
இருக்கிற அணையை புதுப்பித்து சீர்செய்தால் பயன் உள்ள
தாக இருக்கும் என்றுதான் மிகப் பணிவோடு கேட்டுக் கொள்
கிறேன். இது போன்ற பணிகளைச் செய்வோமேயானால்
நிச்சயமாக இந்த அரசு மக்களிடையே நல்ல பெயரை
பெறுவதற்கும் விலைவாசிகளை குறைப்பதற்கும் ஏதுவா



பிற்பகல் 6-30

இருக்கும். ஆகவே குறைந்த செலவிலே இருக்கிற அணையை சீர் செய்வதற்கும் அந்த வருவாய் கால்வாயையும் சீர் செய்ய வேண்டுமாய் மிகப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். அதற்கு குறைந்த தொகை 10 லட்சம் ரூபாய்க்குள் தான் ஆகுமே தவிர அதிகம் ஆகாது. இதற்கு எத்தனையோ பொறியாளர்கள் எல்லாம் எஸ்டிமேட் போட்டும் செய்ய வேண்டிய பணிகளைச் செய்யாமல் இருக்கிறார்கள். அதை உடனே நம்முடைய அரசு தாய் உள்ளத்தோடு, கருணை உள்ளத்தோடு கவனிக்க வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய தொகுதியிலே புதியதாக மருத்துவ மனைகள் கட்டப்பட்டு இருக்கின்றன. அந்த மருத்துவ மனையில் பழைய மருத்துவமனைக் கட்டிடங்கள் காலியாக இருக்கின்றன. என்னுடைய தொகுதியிலே பெரிய மாவட்ட நீதி மன்றம் கட்டப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே இந்த நீதிமன்றக் கட்டிடங்கள் காலியாக இருக்கின்றன. பழைய கட்டிடங்கள் எல்லாம் பெரிய பெரிய கட்டிடங்கள், வசதியான கட்டிடங்கள். அந்த கட்டிடங்களிலே அரசு அலுவலகங்களைக் கொண்டு வரலாம். ஆனால் கொண்டு வரவில்லை. தனியாருடைய கட்டிடங்களில் அரசு அலுவலகங்கள் இயங்குகின்றன. திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய மாவட்ட செயலாளராக இருக்கின்ற ஒருவருடைய இல்லத்தில் 6,000 ரூபாய்க்கு வாடகைக்கு இருக்கிறதே தவிர, அந்த அரசு அலுவலகங்களை பழைய கட்டிடங்களிலே வைக்க வேண்டுமென்ற உணர்வுகள் இல்லை. என்னுடைய ஊரிலே மட்டும் இப்படி வைத்தால் அரசுக்கு பல லட்ச ரூபாய் மிச்சப் படுத்த முடியும். ஆனால் ஏன் செய்யவில்லை? எதற்காகச் செய்யவில்லை? கட்டிடங்கள் ஏன் பாழாகிக் கொண்டு இருக்கின்றன. வருங்காலத்தில் பேய் மாளிகையாக ஆகிவிடுமோ என்ற அச்சம் இருக்கிறது. இந்தக் கட்டிடங்களில் இருக்கின்ற தேக்கு மரங்கள் போன்ற நல்ல, உயர்ந்த மரங்களை பெயர்த்து எடுத்துக் கொண்டு போய்விடுகிறார்கள். காவல்காரன் கூட இல்லை. ஆகவே இதையெல்லாம் அரசு பரிசீலனை பண்ணி பொதுப் பணித்துறை தனியாக இருக்கின்ற அரசு அலுவலகங்களை இந்தக் கட்டிடங்களில் கொண்டு வரலாம் என்று சொல்லிக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

அடுத்து தேசிய நெடுஞ்சாலையைப் பற்றி என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். எப்பொழுது பார்த்தாலும் ரோடு போட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஒரு வருடத்திற்கு இரண்டு முறை ரோடு போடுகிறார்கள். அதற்கு என்ன காரணம் என்ன என்றால், இதற்கு முன்னாடி எல்லாம் தார் ரோடு போடுகிறார்கள் என்றால் ஹிட்மாஸ்டர் காலையிலே 6 மணிக்கெல்லாம் அதை கொளுத்துவார்கள் 6 மணிக்கு கொளுத்தினால்தான் 11 மணிக்கு வேலை செய்வதற்கு ஹிட்மாஸ்டரிலிருந்து தார் அப்படியே மெல்ட்டாகி வரும். அதற்கு அப்புறம் தான் வேலை செய்ய முடியும். ஆனால் இப்போது

இருக்கிற தார் அது ஹிட் மாஸ்டரிலே போடுவதற்கு முன்னாடியே உருகி வெளியே வந்து விடுகிறது. அதற்கு சிப்ஸ் என்று 12 எம். எம். சிப்ஸ்ஸை அலவ் பண்ணுகிறார்கள். சின்ன சின்ன சிப்ஸை அந்த ரோடிலே போடும் போது 30 டன் வண்டிகள் அந்த ரோடிலே போனால். தார் அப்படியே டய ரோடு டயர் ஒட்டிக் கொண்டு வந்து விடுகிறது. ஆகையால் முக்கால் ஜல்லி போட்டு அதற்கு அப்புறம் சிப்ஸ் போட்டால் கூட ஓரளவிற்கு ஏதுவாக இருக்கும். அதுவும் ரோடு வேலைக்கு கிருஷ்ணாயிலைக் கலக்கிறார்கள். அப்படி கலப்பதால் அந்தத் தாருக்கு லைஃப் போய் விடுகிறது. அது ஒரு நாள் கூட நிற்பதில்லை. உதாரணமாக மெட்ராஸிலே பார்த்தால் ஆசர்கானாவிலே வருடத்திற்கு 3 முறை தார் ரோடு போடுகிறார்கள். எத்தனை இலட்சம் ரூபாய் லாஸாகிறது என்பதை நாம் பார்க்க வேண்டும். ஆக முக்கால் ஜல்லியிலே நல்ல தரமான தார்களைக் கலந்து என். எச். ரோடுகளிலே போடுவதையாவது க்ரிப் இருக்கின்ற தாராக, பெரிய ஜல்லியாக பார்த்து போட வேண்டும். 12 எம். எம், ஜல்லி போட வேண்டும் என்று சொன்னால் காண்ட்ராக்ட்காரர்கள் 6 எம். எம், ஜல்லியோ, 10 எம். எம். ஜல்லியோ போட்டு தார் போட்டு அதன் மேல் குவாரி டஸ்ட் போடுகிறார்கள். இந்த குவாரி டஸ்டை எப்படி அலவ் பண்ணுகிறார்கள் என்று தெரியவில்லை. நம்முடைய வரிப்பணம் அத்தனையும் வீணாகிறது. பேப்பர் மாதிரி மெல்லிசாக பாய் விரிப்பதைவிட கேவலமாகப் போடுகிறார்கள். இதை நீங்கள் 1½ அங்குலம் கனம் கண்டிப்பாக போட வேண்டும். ஸ்பெசிபிகேஷனை கண்டிப்பாக அப்ஸர்வ் பண்ண வேண்டும். என்று உத்தரவு போடுவோமானால் நம்முடைய நிதிநிலைமைக்கு மிகச் சிறப்பாக இருக்கும் என்று தெரிவித்து இந்த அளவிற்கு பேசுவதற்கு வாய்ப்பு கொடுத்ததற்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆர். ஈஸ்வரன்.

திரு. ஆர். ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே; பொதுப்பணித் துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறையில் பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் உள்ள நீண்ட நாள் பிரச்சினை உள்ளாறு நீர்த்தேக்கத் திட்டம் என்று சுமார் 20 ஆண்டுகளுக்கு மேலாக இந்த அணைத் திட்டம் மதிப்பீடுகள் எல்லாம் செய்யப்பட்டு அரசினுடைய நிலுவையிலே இருந்து கொண்டிருக்கிறது. ஆனால் போன ஆண்டு பார்ட்-டூ-ஸ்கீமிலே எடுக்கப்பட்டு மீண்டும் அரசினுடைய கவனத்திலே இருக்கிறது. இந்த உள்ளாறு நீர்த்தேக்கத் திட்டத்தின் மூலமாக 18.35 கோடிக்கு



மதிப்பீடுகள் செய்யப்பட்டு அரசினுடைய திட்டத்தில் இருக்கிறது. அதன் மூலமாக சுமார் 15,000 ஏக்கர் பாசனம் ஏற்படக் கூடிட நிலைமை இருக்கிறது. அதே மாதிரி கோம்பையாறு அணைத் திட்டம் இருக்கிறது. அந்த கோம்பையாறு அணை திட்டத்தில் ஆய்வுகள் சுமார் 10 கோடி மதிப்பில் செய்யப்பட்டிருக்கிறது.

பிற்பகல் 6.35

அந்தத் திட்டம் நிறைவேறினால் சுமார் 10 ஆயிரம் ஏக்கர் நிலத்திற்கு பாசனம் ஏற்படக்கூடிய நிலைமை உண்டாகும். புளியங்குடி மேற்கு பகுதியிலுள்ள நகராட்சியின் மேற்குப் பகுதியில், மேற்கு தொடர்ச்சிப் பகுதியில் உள்ள வாழமலையாறு திட்டம் என்று ஒன்று இருக்கிறது. அதனுடைய மதிப்பீடு 3.25 கோடி ரூபாய் ஆகும். அந்தத் திட்டம் நிறைவேறும் போது வாசுதேவநல்லூர் சட்டமன்றத் தொகுதியிலும் சங்கரன் கோவில் சட்டமன்றத் தொகுதியிலும் உணவுப் பொருட்களின் உற்பத்தியைக் கூட்டவும், கிணறுகளில் நீர் வருவதற்கும் விவசாயத்திற்கும் ஒரு வாய்ப்பாக இருக்கும். ஆகவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களும் இந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுத்தால் இந்தப் பகுதி மக்களுடைய வாழ்க்கைத் தரம் உயர்வதற்கு நல்ல ஒரு திட்டமாக இருக்கும். ஏற்கெனவே இது சம்பந்தமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமும்' மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களிடமும் நான் இந்தக் கோரிக்கை மனுவைக் கொடுத்திருக்கிறேன்.

அடுத்து செண்பகவல்லி அணைத் திட்டம் 1985 ஆம் ஆண்டு கேரள எல்லைக்கு உட்பட்ட இடத்தில் போடப்பட்டது. 1956 ஆம் ஆண்டு கேரள அரசோடு ஒப்பந்தம் ஏற்பட்டு சுமார் 5600 அடி கேரள எல்லைக்கு உட்பட்ட இடத்தில் கட்டப்பட்டு இருக்கிறது. 1986ல் உடைப்பு ஏற்பட்டு என்னுடைய தொகுதிக்கு நேரடியாக வரவேண்டிய தண்ணீர் இப்போது கேரளாவுக்கு நேரடியாக செல்கிறது. அந்த உடைப்பை அடைப்பதற்கு 10 லட்சம் ரூபாய் என்று மதிப்பீடு போட்டு தமிழ்நாடு அரசு 15-3-86ல் கேரள அரசுக்கு சுமார் 5 லட்சத்து 15 ஆயிரம் ரூபாயை முன்பணமாக கொடுத்து இருக்கிறது. கிட்டத்தட்ட 1986 லிருந்து இதுவரைக்கும் அந்த அணைத் திட்டம் வேகமாக நடைபெறவில்லை. எப்பொழுது பார்த்தாலும் வந்து பார்த்துக் கொண்டுத் தான் இருக்கிறார்கள். 1985ல் இருந்த மரியாதைக்குரிய நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் நேரடியாக வந்து அந்த உடைப்பைப் பார்த்தார்கள். இது வரை 3 முறை அமைச்சர்களும், அதிகாரிகளும் அந்த உடைப்பை பார்த்தார்கள். அப்படி இருந்தும் அந்த உடைப்பை அடைக்கவில்லை. உடனடியாக அந்த உடைப்பை அடைத்தால் நிரந்தரமாக எப்போதும் அங்கே தண்ணீர் அந்த

உள்ளார் நீர்த் தேக்கத் திட்டத்திற்கு வரக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, அந்த திட்டத்தை தமிழ்நாடு அரசு கேரள அரசிடம் அப்போது கேட்டு இருக்கவே வேண்டாம். முன் பணமாக 5 இலட்சம் கொடுத்து இருக்க வேண்டிய அவசியம் இல்லை. அந்தத் திட்டம் கட்டப்பட்டது 1956ல், இதில் தூர் எடுப்பதற்கு, அல்லது உடைப்பை அடைப்பதற்கு 1986ல் கேரள அரசுக்கு முன்பணமாக கொடுத்து இதுவரைக்கும் அந்த கேரள அரசு அந்த உடைப்பை அடைக்காத நிலையில் அந்தத் தண்ணீர் கேரளாவிலிருந்து வருவதற்கு அங்கே இருக்கக்கூடிய அமைச்சரும், பொதுப்பணித்துறை அதிகாரிகளும் அதற்கு துரிதமான நடவடிக்கையை இதுவரைக்கும் எடுக்கவில்லை. ஆகவே உடனடியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களும் இந்தத் திட்டத்தில் ஒரு தனிக் கவனம் செலுத்தி தமிழகத்திற்கு வரக் கூடிய, என்னுடைய தொகுதிக்கு வரக்கூடிய தண்ணீர் துரிதமாக வர நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் 12 குளங்கள் இருக்கின்றன. மலை அடிவாரம் மேற்கு தொடர்ச்சி மலையின் அருகில் உள்ளது. இந்த குளங்களில் எல்லாம் களங்கல் இல்லை. சரியான முறையில் மடைகள் இல்லை. மேற்கு தொடர்ச்சி மலையின் மேலே நீண்ட நாட்கள் காற்று வேகமாக அடிப்பதால் அந்த குளங்கள் எல்லாம் மேடு ஏற்பட்டு தண்ணீர் கட்ட முடியாத சூழ்நிலை எற்படுகிறது. அது என்னுடைய தொகுதியில் பெரிய ஆவுடை பேரி குளம், சின்ன ஆவுடை பேரி குளம், விஜயரங்கபேரி குளம் ஆகிய இந்த 3 குளங்களும் சிவகிரி கிராமத்தை சேர்ந்தது. அதேபோல் விழிவில் குளம், விஸ்வநாத பேரி கிராமத்தைச் சேர்ந்தது; குலசேகர பேரி குளம், திருமலாபுரம் கிராமத்தைச் சேர்ந்தது; பெரிய குளம், இளங்குளம், புதுக்குளம் ஆகியவை வசுதேவநல்லூர் கிராமத்தைச் சேர்ந்தது; ஏலந்தக்குளம், கடையநேரி குளம் ஆகியவை புளியங்குடி கிராமத்தைச் சேர்ந்தது; மத்திக் குளம் தடுப்பு அணைக்கட்டல் பனையுர் கிராமத்தைச் சேர்ந்தது; சிந்தாமணி பாறைக்குளம் நெற்கட்டும்செவல் கிராமத்தைச் சேர்ந்த குளம்.

பிற்பகல் 6.40

இதெல்லாம் பெரிய குளங்கள், பி.டபுள்யு.டி.,-ஐச் சேர்ந்த பெரிய குளங்கள். ஒவ்வொரு குளங்கள் மூலம் 3 ஆயிரம் ஏக்கர், 2 ஆயிரம் ஏக்கர் பாசன வசதி ஏற்படக் கூடிய குளங்கள், இந்தக் குளங்களை ஐரோப்பிய நிதியுதவி பெற்றோ அதுலது பொதுப் பணித்துறை மூலமோ, இந்தக் குளங்களுக்கு நீங்கள் முன்னுரிமை கொடுத்து மராமத்து வேலை செய்து கொடுக்க வேண்டுமென்று உங்களை மிக்க அன்புடன் நான் கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில், பாலங்களை பொறுத்த அளவில் சுதந்திரம் அடைந்து கிட்டத்தட்ட 45 ஆண்டுகள் ஆகின்றன. ஒரு கிராமத்தைவிட்டு



இன்னொரு கிராமத்திற்கு போக முடியாத சூழ்நிலைகள் இருக்கின்றன. ஒரு காட்டாற்று வெள்ளம் வந்தால் கூட அந்தந்த கிராமத்திலிருந்து மருத்துவ வசதிக்காகவோ அல்லது வேறு கிராமங்களுக்கு கல்யாணத்திற்கோ வேறு எதற்கோ போக முடியாத நிலைமைகள் இருக்கின்றன. அதேமாதிரி சங்கரன் கோவில் யூனியனிலே இரண்டு முக்கியமான பாலங்கள் இருக்கின்றன. செந்தட்டியாபுரம் பாலம், காமராஜர் மாவட்டத் திற்கும் நெல்லை மாவட்டத்திற்கும் ஒரு இணைப்பு இருக்கிறது. இந்தப் பணத்தை கட்டினால்தான் இந்த இரண்டு மாவட்டங்களுக்கும் ஒரு தொடர்பு ஏற்படும். அதே மாதிரி சங்கரலிங்கபுரத்திற்கும் சுப்புலாபுரத்திற்கும் மையத்தில் ஒரு பாலம் இருக்கிறது. அடுத்து வாசுதேவநலலூர் ஊராட்சி ஒன்றியத்தில் வாசு தேவநல்லூருக்கும் சங்கனாபேரிக்கும் மையத்தில் ஒரு பாலம் இருக்கிறது. இந்தப் பாலம் கட்டாத காரணத்தினால் சுமார் 7. 3 கிராமங்களுக்கு மழை பெய்கின்ற நேரத்தில் வாகனங்கள் பஸ் போன்றவை போக முடியவில்லை. இந்த பாலம் கட்டுகின்ற ஏற்பாடுகளை நீங்கள் இந்த நிதி ஆண்டில் எடுக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன். அதேமாதிரி ஏமன்பட்டிக்கும் தேசியம்பட்டிக்கும் மையத்தில் ஒரு பாலம் இருக்கிறது. அந்த பாலத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வருகின்ற நிதியாண்டில் கட்டி முடிப்பதறகு அனுமதி வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதேமாதிரி, நெடுஞ்சாலைகள் இருக்கின்றன. கூடலூர் டூ பனையுர் வரைக்கும் சாலைகள் ரொம்பவும் மோசமாக இருக்கின்றன. நெற்கட்டும்செவல்-டூ-பெரியுர் வரைக்கும் உள்ள சாலைகள் ரொம்ப மோசமாக இருக்கின்றன. நெற்கட்டும் செவலிலிருந்து வாசுதேவநல்லூர் வரையிலுள்ள நெடுஞ்சாலைகள் ரொம்ப மோசமான நிலையில் இருக்கின்றன. அதேமாதிரி திருமலாபுரத் திலிருந்து நாராயணபுரம் வரையில் உள்ள நெடுஞ்சாலையை சீர்படுத்திக் கொடுக்க வேண்டும். அதேமாதிரி கடலூரிலிந்து துரைச்சாமியாபுரம் வரையுள்ள நெடுஞ்சாலையை செப்பனிட்டுக் கொடுக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள் கிறேன். அதேமாதிரி புளியங்குடி-டூ-சங்கரன்கோயில்வரை ஒரு வழித்தடமாக நீங்கள் ஏற்படுத்தித் தரவேண்டும். ஏனென்றால் புளியங்குடி ஒரு நகராட்சி: சங்கரன்கோயிலும் ஒரு நகராட்சி. இரண்டுமே ஜனத்தொகை நெருக்கடியுள்ள நகராட்சிகள் ஆகவே அதை இருவழித் தடமாக நீங்கள் மாற்றிக் கொடுக்க வேண்டும். அதேமாதிரி இராஜபாளையம் மற்றும் சங்கரன்கோயில் இரண்டுமே நகராட்சிகள். வாகன போக்குவரத்து நெருக்கடி ரொம்ப மோசமான நிலைமையில் இருக்கின்றன. அந்த ஒரு வழித் தடத்தை இருவழித்தடமாக மாற்றிக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சீக்கிரம் முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. ஆர். ஈஸ்வரன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே தரணி சர்க்கரை ஆலை என்று ஒன்று புதியதாக துவக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதியிலே சுமார் 20 ஆயிரம் ஏக்கர் கரும்பு சாகுபடி செய்யப்படுகிறது. ஆகவே, கரும்பு அபிவிருத்தித் திட்டத்தின் மூலமாக மூன்று சாலைகள் அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். 1. வாசுதேவநல்லூர் ரூ மேற்கு தொடர்ச்சி மலை வரை. 2 நவாசாலையிலிருந்து மேற்கு தொடர்ச்சி மலை வரை 3. புளியங்குடியிலிருந்து மேற்குத் தொடர்ச்சி மலை வரை. அதேமாதிரி மேற்குத் தொடர்க்சி மலை அபிவிருத்தி திட்டத்தின் மூலம் சிவகிரியிலிருந்து கோம்பையாறு பாரஸ்ட் வரை சாலை அமைக்க வேண்டும். அதேமாதிரி தேவிபட்டணத்திலிருந்து மேற்குத் தொடர்ச்சி மலை வரையிலும்; இராயகிரியிலிருந்து மேற்கு தொடர்சசி மலை வரையிலும் சாலை வசதி ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் ஷொள்கிறேன். இந்த மூன்றையும் நீங்கள் இந்த ஆண்டில் எடுக்க வேண்டுமென்று மிக்க அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; இவ்வளவை எடுத்தாலே அடுத்த பட்ஜெட் வரைக்கும் சரியாக இருக்கும். திரு. வி. கே. சின்னசாமி.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கின்ற பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத் துறை, கட்டிடங்கள் போன்ற மானியத்திலே பேசுகின்ற வாய்ப்பை ஆதரித்து, முதலில் என்னுவடைய நன்றியைத் தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன். தமிழகத்தைப் பொறுத்தமட்டில் குறிப்பாக பயிரிடப்படுகின்ற பரப்பளவில் 60 சதவீதம் பரப்பளவு இன்றைக்குப் பாசனம் பெறுகிறது. ஆனால் அகில இந்திய அளவிலே எடுத்துக் கொள்வோமேயானால் இது 28 சதவீதம்தான் என்பதை நான் இங்கே நினைவுபடுத்த கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் இந்திய அளவிலே ஒரு மனிதனுக்கு கிடைக்கக்கூடிய நீரினுடைய அளவு 0.99 மில்லியன் கனஅடி, ஆனால் தமிழ்நாட்டிலே ஒரு மனிதனுக்கு கிடைக்கக் கூடிய நீரினுடைய அளவு 0.03 மில்லியன் கன அடிதான், ஆக, இப்படி கணக்குப் பார்க்கின்ற நேரத்தில் நாம் முழுமையாக பாதிக்கப்பட்டிருக்கிறோம் என்று நான் இங்கே நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன், ஆனால் முழுமையான நீரைப் பயன்படுத்துகின்ற ஒரு மாநிலம் இந்தியத் துணைக் கண்டத்தில் தமிழ் மாநிலம்தான் என்பதை இந்த நேரத்திலே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆக, நீர் வளங்களை அதிகமாகப் பயன்படுத்துகின்ற மாநிலத்திலும் நீர் வளங்கள் அதிகமாக இருந்தும் பயன்படுத்தக் கூடாத கேரள மாநிலங்களைப் போன்ற மாநிலங்களும் இன்றைக்கு இருக்கின்றன.



பிற்பகல் 6-45

ஆக, நதிகளையெல்லாம் தேசிய மயமாக்க வேண்டுமென்ற கொள்கை.ைய அனைத்திந்திய அண்ணா திராவிடமுன்னேற்றக் கழகத்தின் சார்பாக நம்முடைய கழகத்தின் பொதுச் செயலாளராகவும், இன்றைய தினம் தமிழகத்தினுடைய முதலமைச்சராகவும் இருக்கின்ற இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் இன்றைக்கு இந்த நதிகளைத் தேசியமயமாக்க வேண்டுமென்ற கொள்கையை வலியுறுத்தி வருகின்றார்கள். ஆக, நதிகளைத் தேசியமயமாக்க வேண்டுமென்ற கொள்கையைத் தமிழகத்தின் சார்பாக இந்தச் சட்டமன்றத்திலே தீர்மானமாக நிறைவேற்றி அனைத்து உறுப்பினர்களுடைய, அனைத்துக் கட்சியினுடைய, தோழமைக் கட்சிகளினுடைய கருத்துக்களாகவும் சேர்த்து, இதை டெல்லிக்கு அனுப்ப வேண்டும். டெல்லியிலே இருக்கின்ற இந்தியப் பேரரசு ஒவ்வொரு மாநிலத்தினுடைய அதிகாரத்தையும் பெற்றோ அல்லது மத்திய சர்க்காரே இதற்கொரு சட்டத்தைக் கொண்டு வர வேண்டுமென்பதையும் இந்த நேரத்திலே தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன். இல்லையென்றால் இந்திய நாட்டினுடைய ஒருமைப்பாட்டிற்கே குந்தகம் விளைவிக்கின்ற காலம் மிக விரைவிலே வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்பதையும் நான் இங்கே ஆணித்தரமாகக் கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். காரணம், ஒரு மாநிலத்திலே நீரினுடைய ஆதாரம் அதிகமாக இருக்கிறது. ஆனால் அதைப் பயன்படுத்துவது இல்லை. இங்கே தமிழகத்திலே நீரினுடைய ஆதாரம் குறைவாக இருக்கின்றது. பயள்படுத்துவதற்கு நாம் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

குறிப்பாக, எல்.பி.பி யைப் பொறுத்தமட்டில், நான் ஒன்றைச் சொல்லியாக வேண்டும். மொத்தம் அதனுடைய பரப்பளவு பாசனம் பெறுவது இரண்டு இலட்சத்து ஏழாயிரம் ஏக்கர். ஆனால் மொத்தம் இரண்டு இலட்சத்து இருபத்தேழாயிரம் ஏக்கர் அதிலே பாசனம் பெற வேண்டும், இருந்தாலும் இன்னும் இருபதாயிரம் ஏக்கர்கள் இன்னும் பாசனம் பெறாமல் இருக்கிறது. ஆகவேதான், நான் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சரவர்களை கேட்டுக் கொள்கிறேன்.

கீழ் பவானியிலே ஒன்றாவது கிலோமீட்டரிலேயிருந்து ஆரம்பியுங்கள். எனவே, எங்கெல்லாம் அங்கே பாசனம் பெறுவதற்கு வாய்ப்பிருக்சிறதோ அதைத் தருவதற்கு நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

குறிப்பாக. எனனுடைய தொகுதியிலே கோபி தாலுக்காவில் கரட்டுபாளையம், காரப்பாடி, கூடத்தூர் போன்ற பகுதிகளில் அந்தப் பகுதி விவசாயிகளைக் கடந்து இரண்டு கிலோ மீட்டர் தள்ளி வேறு பகுதிகளிலே இருக்கின்ற விவசாயிகளினுடைய நிலங்கள் பயன் அடைகிறது. ஆனால் அந்தப் பகுதியில் இருக்கின்ற

விவசாய நிலங்கள் பயன் பெறாமல் வறண்ட நிலங்களாக இருக்கின்றன. ஆகவே, அந்தப் பகுதி விவசாயிகளும் பாசலம் பெற வேண்டுமென்று உங்களிடத்திலே மனுக் கொடுத்திருக் கிறார்கள். நானும் கொடுத்து இருக்கிறேன். அது கிட்டத்தட்ட 1200 ஏக்கர் விவசாயம் பெறுகின்ற அந்த நிலங்களுக்கு நீங்கள் உத்தரவு வழங்க வேண்டும். இதுபற்றி ஏற்கனவே கூட பொதுப் பணித்துறை அமைச்சரவர்களால், 1987-88 என்று கருதுகிறேன். அதை ஆய்வு செய்து, நம்முடைய பொதுப்பணித்துறையினுடைய தலைமைப் பொறியாளர் அவர்கள் நாகேஸ்வரன் இருந்தார்கள் என்று கருதுகிறேன். அவர்களுடைய ஒப்புதலோடு அரசாங்கத் திற்குக் கோப்புகளும் வந்தன. அது. உத்தரவு போடுவதற்குப் பெரியார் மாவட்ட ஆட்சியினுடைய ஒப்புதலை என்.ஓ.சி. பெறுவதற்குக் கூட, கோப்புகள் சென்றன என்று கருதுகிறேன். அந்த நேரத்திலேதான் நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவரவர்கள் இறந்த காரணத்தினால், அரசாங்கம் கவிழ்ந்த காரணத்தினால், அந்தத் திட்டம் தடைப்பட்டிருக்கிறது. ஆகவே பொதுப்பணித்துறை அமைச்சராகப் பொறுப்பேற்று இருக்கிற மாண்புமிகு அமைச்சரவர்கள் நம்முடைய இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் பெரியார் மாவட்டத்திலே தருவதற்குத் தயா ராக இருப்பார்கள் என்பது எங்களுக்குத் தெரியும். 1700 ஏக்கர் காரப்பாடி, கரட்டுபாளையம், கடத்தூர் பகுதிகள் சேர்க்கப்பட வேண்டுமென்பதை இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன், டெபாசிட் - அதற்கான செலவுகளை அந்த விவசாயிகளே ஏற்றுக் கொள்வதற்கும் தயாராக இருக்கிறார்கள் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொண்டு, இந்தக் கீழ் பவானி அணை ஆரம்பிக்கும்பொழுது வாய்க்கால் கட்டுகின்ற நேரத்தில் ஒரு சில இடங்களிலே நடைபாதைகளாகப் பாலத்தை அமைத்திருக் கின்றார்கள். குறிப்பாக என்னுடைய பகுதியிலே, குருமந்தூர் மோலபாளையம் என்று சுருதுகிறேன். கிட்டத்தட்ட எல.பி, வாய்க்காலிலே 28 வது கிலோமீட்டராக இருக்கும் என்று கருது கிறேன். அதிலே நடைப்பாலம் வந்திருக்கிறது இன்றைக்கு எத்தனை காலம் முன்னேறுகிற வகையில் அந்தப் பாலத்திற்கு ஒரு உயர் நிலைப்பள்ளியாகக் கூட மாற்ற இருக்கிறார்கள். ஆகவே, பள்ளிக் குழந்தைகள் செல்லும்பொழுது அங்கே வாய்க்காலிலே விழுந்து விடுகின்ற சூழ்நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது, 2, 3, குழந்தைகள் கூட கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பு தண் ணீருக்குள் விழுந்து விட்டார்கள். ஆகவே அந்தப் பாலத்தை விரிவுபடுத்தவேண்டுமென்று நான் இந்த நேரத்தில் பணிவன்போடு கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அக்கரைக்குடிவேர் என்ற இடத்திலே அணை இருக்கிறது. அந்த அணையிலே ஒரு பயணியர் விடுதி—மன்னர் காலத்திலே கட்டப்பட்ட பயணியர் விடுதி என்று கருதுகிறேன். அது பழுதடைந்து புதுப்பிப்பதற்காக அதை இடித்து தரைமட்ட



மாக்கினார்கள். ஆனால் இதுநாள் வரை அது பழுதுபார்க்கப் படவில்லை. அதைப் புதுப்பித்துக் கட்டித்தர வேண்டு மென்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

ஆர்.எல்.இ.ஜி.பி. திட்டத்தில் பல சிறு நீர்ப்பாசனக் குட்டைகள் ஊராட்சி ஒன்றியங்களில் கட்டப்பட்டு, அவை களெல்லாம் பழுதடைந்து உடைந்திருக்கின்றன. மழைக் காலங் களில் நீர் தேங்குவது இல்லாமல் ஒரு மிகப்பெரிய துர்பாக்கியம் ஏற்பட்டிருக்கிறது. என்னுடைய தொகுதியிலேகூட, நம்பியூர் ஊராட்சி ஒன்றியம், பவானிசாகர் ஊராட்சி ஒன்றியத்திலே பல குட்டைகள் அப்படி உடைந்திருக்கின்றன. ஊராட்சி ஒன்றிய ஆணையாளரிடத்திலே எடுத்து வைத்தால் அவரும் நிதி இல்லை என்கிறார். ஆகவே, பொதுப்பணித் துறையினருக்கு உடைக்கப் பட்டிருக்கின்ற குட்டைகளை, அதனுடைய பட்டியலும் தரப் பட்டிருக்கிறது. உடனடியாக நிறைவேற்றுவதற்கு, பழுது பார்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே மாண்புமிகு அமைச்சரவர்களிடத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 6.50

ஓணான்குட்டைஎன்ற இடத்தில் ஒரு குட்டை கட்டுவதற்கு ஆர்.எல்.இ.ஜி.பி. திட்டத்திலே பணம் ஒதுக்கினார்கள். ஆனால் அது 'ஸ்டே' வாங்கப்பட்டு நிறுத்தப்பட்டுவிட்டது. (மணியடிக்கப் பெற்றது) மீண்டும் அது கட்டப்பட வேண்டும். பழைய இடத்திலேயே கட்ட வேண்டும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொண்டு, நெடுஞ்சாலைத் துறையைப் பற்றி ஒன்றே ஒன்றை மட்டும் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு கோடி ரூபாய் தருகிறோம் என்று நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆக, அந்த ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு கோடி ரூபாய் தரும்போது, ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ஒரு ரோடு ரோலர் வாங்க வேண்டும். அதோடு 'ஹீட் மாஸ்டர்' மற்றும் தார் போடும் சாதனங்களையும் கையோடு வாங்கினால் தான் போட முடியும். இப்போது பல இடங்களில் ரோலர்கள் இல்லாமல், கற்கள் கொட்டப்பட்டு, இரண்டு, மூன்று மாதங்கள் காலதாமதம் ஏற்படுகிற நிலை இருக்கிறது. ஆகவே, அரசு அந்தப் பொருட்களை வாங்க வேண்டும் என்பதையும் இந்த நேரத்திலே கேட்டுக் கொண்டு, என்னுடைய கோபிசெட்டிப் பாளையத்திலே இருக்கிற ஏ.டி.ஈ.-யைப் பொறுத்தவரையில் அவர் அங்கு தங்குவதே கிடையாது. என்ன காரணமோ தெரியவில்லை; தங்குவதே கிடையாது. பல ரோடுகள் 'பேச்' கூட போடப் படாமல் இருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் பலமுறை எடுத்துச் சொல்லியிருக்கிறேன். இந்த ஏ.டி.ஈ.-யை மாற்றி, உடனடியாக வேறு ஆள் போட்டாலன்றி, விமோசனமே கிடையாது. ஆபிஸிலும் அவர் தங்குவதில்லை.

டி.ஈ.-யிடம் சொன்னாலும்—ஏனென்றே தெரியவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு எழுதிக் கேட்டிருக்கிறோம். பல தார்ச்சாலைகள் 'பேச்' கூட போடப்படாமல் பழுதடைந்து இருக்கின்றன. அங்கே நிறைய வேலி முட்கள் எக்கச்சக்கமாக இரண்டு பக்கங்களில் வளர்ந்து கிடக்கின்றன. ஆகவே, ஒன்று என்.எம்.ஆர். மூலமாகவோ, அல்லது வேறு வகையில் ஆட்களை வைத்தோ அந்த முட்களை எல்லாம் வெட்டிஎடுக்கலாம். அந்தத் தார்ச்சாலைகளிலே பஸ்களே போக முடியாது. அப்படி முட்கள் அங்கு அடர்ந்து கிடக்கின்றன. ஆகவே, அதற்கு என்.எம்.ஆர். அல்லது வேறு ஆட்களையாவது நாம் எடுப்பதற்கு நீங்கள் உதவ வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வெட்டி எடுக்கும்போது அதை வேரோடு எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக் கொண்டு, கீழ்பவானியைப் பொறுத்தமட்டில், மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். கீழ்பவானி ஆயக்கட்டில் இரண்டு போகம் புஞ்சைப் பயிருக்கு தண்ணீர் விட வேண்டும். பழைய முறைப் படி அப்படித்தான் விட்டுக் கொண்டிருந்தார்கள். அப்படி விட வில்லையென்றால், இப்போது இரண்டாண்டுகளுக்கு ஒரு போகத் திற்குத்தான் சாகுபடி செய்து பயிர் செய்ய முடிகிறது. ஆகவே. நஞ்சைப் பயிராக மாற்றி, வாரத்திற்கு ஒரு முறை மாற்றி, மாற்றி தண்ணீர் 1-ஆம் நம்பர், 2-ஆம் நம்பர் என்று விடுவோமே யானால், 8,9,10 மாதங்களுக்கு கீழ்பவானி வாய்க்காலில், தண்ணீர் விடுகிற நிலை உருவாகும். அது மட்டுமல்ல; குடி தண்ணீர் பிரச்சினை வராது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொண்டு, அதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர் களிடத்தில் அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் சொல்லி யிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மா.சா.மா. இராமச் சந்திரன்.

திரு. மா. சா. மா. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களின் இதய தெய்வம் தமிழகத்தின் காவல் தெய்வம், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்பாதங்களை வணங்கி, எனது உரையைத் துவக்குகின்றேன்.

தமிழ்நாடு பொதுப்பணித் துறை மானியக் கோரிக்கை விவாதத்தின் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். என்னை சட்டமன்ற உறுப்பின ராக்கிய இளையான்குடி தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



ஒரு நாட்டின் வளர்ச்சிக்கும், பொருளாதார மேம்பாட்டிற்கும் அடிப்படையாக அமைவது பொதுப்பணித் துறை ஆகும். ''நீரின்றி அமையாது உலகு'' என்பதற்கு ஏற்ப, வேளாண்மைத் திட்டப் பணிகள் வெற்றிப் பெறவும், உற்பத்தியில் நம்முடைய இலக்கை எட்டுவதற்கும் பாசனம் மிகவும் இன்றியமையாதது ஆகும்.

பொதுப்பணித் துறை மற்ற எல்லா துறைகளோடும் தொடர்பு உடைய துறை ஆகும். மற்ற துறைகள் சிறப்பாக செயல்பட வேண்டுமானால், பொதுப்பணித் துறை சிறந்து விளங்கினால்தான் முடியும். தமிழ்நாட்டில் இருக்கின்ற ஏரிகள், குளங்கள், குட்டை கள் ஆழப்படுத்தப்பட வேண்டும். இவற்றிற்கு நீர்வரும் வாய்க்கால்கள் தூர் எடுக்கப்பட்டு ஆங்காங்கே இருக்கின்ற ஆக்கிரமிப்புகள் எல்லாம் அகற்றப்பட வேண்டும். இதன்மூலம் மழைநீர் வீணாகாமல் தடுப்பதற்கான வாய்ப்புகள் இருக்கிறது.

ஏரிகளைப் பொறுத்தவரையில், 100 ஏக்கர் பாசனத்திற்கு மேற்பட்ட ஏரிகளை மராமத்து செய்வதற்கு பொதுப்பணித் துறையிலே எடுத்துக் கொள்கிறார்கள். 100 ஏக்கர் பாசனத்திற்கு குறைவாக உள்ள ஏரிகளை ஊராட்சி ஒன்றியங்களிலே இருந்து எடுத்துக் கொள்கிறார்கள். ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கின்ற ஏரிகளின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது. அவற்றை பராமரிக்க போதுமான நிதி ஆதாரம் ஒன்றியங்களிலே இல்லை. எனவே அவைகள் பல ஆண்டுக் காலம் மராமத்து செய்யப் படாமலே உள்ளன. இந்த நிலையை மாற்றி அமைக்க, அனைத்து ஏரிகளையும் பொதுப்பணித் துறையின்கீழ் எடுத்து மராமத்து வேலைகள் பார்க்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதற்கு அடுத்தபடியாக, பசும்பொன், இராமநாதபுரம் மாவட்டங்களில் முன்னாள் ஜமீன் கண்மாய்கள் நிறைய உள்ளன. அதற்கு அரசு அதிக நிதியினை ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எனது இளையான்குடி தொகுதியில், ஆர்.எஸ்.மங்கலம் பேரூராட்சியில், ஆர்.எஸ்.மங்கலம் பெரிய கண்மாய் உள்ளது. 48 மடைகளைக் கொண்ட கண்மாய் அது. அநேகமாக தென் மாவட்டங்களிலேயே ஆர்.எஸ்.மங்கலம் கண்மாய்தான் பெரிது என எண்ணுகிறேன். அதை 'நாரை பறக்க முடியாத 48 மடைக் கண்மாய்' என்றும் சொல்வார்கள்.

பிற்பகல் 6.55

இவ்வளவு பெரிய கண்மாய் இருந்தும், முந்தைய திராவிட முன்னேற்றக் கழக அரசு காலத்தில் இந்தக் கண்மாய் சரியான முறையில் பராமரிக்கப்படவில்லை. இந்தக் கண்மாய் பருவ மழையை எதிர்பார்த்துத்தான் உள்ளது. வைகை ஆற்றுத் தண்ணீர் இந்தக் கண்மாய்க்கு வருவதற்கு Supply Channel ஒன்று உள்ளது. அது ஆக்கிரமிக்கப்பட்டும், தூர்வாரப்படாமலும்



ஆவணக்காப்பக

இருக்கின்ற காரணத்தால் வைகை ஆற்றுத் தண்ணீர் இந்தக் கண்மாய்க்கு வருவதில்லை. எனவே, நம்முடைய கழக அரசானது வைகை ஆற்றுத் தண்ணீர் ஆர்.எஸ்.மங்கலம் பெரிய கண்மாய்க்கு வரும் வண்ணம் Supply Channel-ஐச் சீர்செய்ய வேண்டும் என்றும், கண்மாயை ஆழப்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

இராமநாதபுரம் ஒரு வறட்சியான மாவட்டமாக இருந்தாலும், அதனுடைய நெற்களஞ்சியம், திருவாடானை, ஆர்.எஸ்.மங்கலம் ஒன்றியத்தை உள்ளடக்கிய திருவாடானை தாலூகா ஆகும். திருவாடானைத் தாலூகாவில் பெரிய பெரிய கண்மாய்கள் நிறைய உள்ளன. இந்தக் கண்மாய்கள் எல்லாம் தூர்ந்துபோய் கிடக்கின்ற காரணத்தால், மழைநீரை அதிகமாகத் தேக்கி வைக்க முடியவில்லை. எனவே, ஆர்.எஸ். மங்கலம் ஒன்றியத்தில் உள்ள அனைத்துக் கண்மாய்களையும் ஐரோப்பிய பொருளாதாரத் திட்டத்தின் கீழ் சேர்த்து மராமத்து செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இங்கே உள்ள பல கண்மாய்களுக்கு மடைகள், கலுங்குகள் சரியாக இல்லை. அவை அனைத்தும் சீர் செய்யப்பட வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

பசும்பொன் மாவட்டம் இளையான்குடி வட்டத்தில் உள்ள கீழ் நெட்டூர், ஆழிமதுரை, இளமனூர், குமாரக்குறிச்சி, குணப்பனேந்தல், புதூர் வலசை, அண்டக்குடி, சாலைக்கிராமம், கச்சாத்தநல்லூர், பெத்தனேந்தல், இளையான்குடி, நகரகுடி உள்ளிட்ட 10 கிராமங்களுக்கு மேல் சேர்ந்து வைகை ஆற்றுத் தண்ணீர் பயன்பட வேண்டும். இதன்மூலம் சுமார் 5,000 ஏக்கர் நிலங்கள் பயனடைகின்றன.

வைகை ஆற்று நீரைச் குடியூர் அணைக்கட்டின் இடது பிரதானக் கால்வாய்க்குத் திறந்து விடுவதன் மூலம், மேலே சொன்ன அனைத்துக் கண்மாய்களுக்கும் வைகை ஆற்றுநீர் கிடைக்க வாய்ப்பு ஏற்படுகிறது. இதற்கான பொறுப்பு, தற்போது பரமக்குடி பொதுப்பணித் துறை செயற்பொறியாளர் வசம் உள்ளது. மேலே குறிப்பிட்ட கண்மாய்கள் அனைத்தும் பசும்பொன் மாவட்ட எல்லைப் பகுதியில் வடிவதால் குடியூர் அணைக்கட்டைத் திறந்து இடது பிரதானக் கால்வாய்க்குத் தண்ணீர் விடும் பொறுப்பு சிவகெங்கை பொதுப்பணித் துறை செயற்பொறியாளர் அவர்கள் வசம் ஒப்படைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

எனது தொகுதியின் புதூர் வலசைக் கிராமத்தில் மேல நாட்டார் கால்வாயின் குறுக்கே பாலம் ஒன்று கட்டப்பட வேண்டும்.

எனது தொகுதியில் நிலவுகின்ற குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு வைகை ஆற்றில் அதிகமான அளவில் திறந்த வெளிக் கிணறும் மேல்நிலைத் தொட்டியும் அமைக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



எனது இளையான்குடி தொகுதியைப் பொறுத்தவரையில் சாலைகள் மிகவும் மோசமான நிலையில் உள்ளன. அதன் காரண மாக ஏற்கனவே சென்று கொண்டிருந்த பேருந்துகள் எல்லாம் பல வழித்தடங்களில் நிறுத்தப்பட்டு விட்டன. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிக் காலத்தில்தான் எனது தொகுதியின் பல்வேறு பகுதிகளுக்குச் சாலைகள் எல்லாம் போடப்பட்டன. அதற்குப் பின்னாலே வந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு அந்தச் சாலைகளைச் சரியாகச் செப்பனிடாத காரணத்தால், இன்றைக்குச் சாலைகள் எல்லாம் குண்டும் குழியுமாகக் காட்சி யளிக்கக்கூடிய நிலை இருக்கின்றன. மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களது பொற்கால ஆட்சியில் அந்தச் சாலைகள் நல்ல முறையில் பராமரிக்கப்படும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. எனது தொகுதியிலே உள்ள உப்பூர், திருப்பாலைக்குடி பகுதிகளில் கிழக்குக் கடற்கரைச் சாலை அகலப்படுத்தப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். எனது தொகுதியின் அழியதென்மொழி வெட்டுக்குளம் அருகே பாலம் ஒன்று கட்டப்பட வேண்டும். இதன்மூலம் சுமார் 30,000 மக்களுக்கு மேல் பயனடைவார்கள்.

திருச்சியிலிருந்து, புதுக்கோட்டை, காரைக்குடி, தேவக் கோட்டை ஆர்.எஸ். மங்கலம் வழியாக இராமநாதபுரம், இராமேஸ்வரம் வரை செல்லும் சாலை மிகவும் முக்கியமான சாலை ஆகும். பல மாநிலங்களிலிருந்து இராமேஸ்வரத்திற்குத் தரிசனத்திற்காகத் தினசரி நூற்றுக்கணக்கான பேருந்துகள் செல்கின்றன. இந்தச்சாலை, திருச்சியிலிருந்து திருமயம் வரை இரட்டைச் சாலையாக அகலமாக உள்ளது. அதாவது, புதுக் கோட்டை மாவட்ட எல்லை வரை அகலமாக உள்ளது. பசும் பொன்—இராமநாதபுரம் மாவட்டப் பகுதிகளில் இந்தச் சாலை மிகவும் குறுகியதாகவும், அதிகமான வளைவுகளைக் கொண்ட தாகவும் உள்ளது. எனவே, திருமயத்திலிருந்து காரைக்குடி, தேவக்கோட்டை, ஆர்.எஸ். மங்கலம் வழியாக, இராமநாதபுரம் வரை இந்தச் சாலை அகலப்படுத்தப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முடியுங்கள்.

திரு.மா. சா.மா. இராமச்சந்திரன் : சென்னையிலிருந்து திருச்சி செல்லும் தேசிய நெடுஞ்சாலை மிகவும் முக்கியமான ஒரு சாலை யாகும். இந்தச் சாலையில் விழுப்புரம் வரை ரயில் பாதையின் மேல் கார்கள் செல்வதற்கு மேம்பாலங்கள் கட்டப்பட்டுள்ளன. விழுப்புரத்திற்கு அப்பால் மூன்று இடங்களில் ரயில் பாதை குறுக் கிடுகின்றது. இந்த இடங்களில் மேம்பாலங்கள் இல்லாத காரணத்தால் ரயில்வே கேட் மூடப்பட்டிருக்கும் நேரத்தில் ஆயிரக்கணக்கான வண்டிகள் சாலையின் இருபுறமும் நின்று விடுவதால் பல்மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்படுகின்றது.

இந்த நிலைமையினை மாற்றும் வண்ணம் நமது அரசு உடனடியாக மேம்பாலங்கள் கட்ட ஆவன செய்யவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சோ. பாலகிருஷ்ணன்.

*திரு. சோ. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று பொதுப்பணித் துறை மானியத்தில் நம்முடைய பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் 500 கோடி ரூபாய்க்குத் திட்டங்களைக் கொடுத்திருக்கிறார்கள். இவ்வளவு பெரிய நல்ல திட்டங்களை செயல்படுத்தவிருக்கின்ற இந்த நல்ல திட்டத்தில் என்னுடைய தொகுதியான முதுகுளத்தூர் தொகுதியில் மலட்டாறு திட்டம் என்ற ஒரு திட்டத்திற்கு, 1963 ஆம் ஆண்டு நம்முடைய ஒப்பற்ற தலைவர் காமராசர் அவர்கள் தமிழகத்திலே முதலமைச்சராக இருந்தபோது அடையாளமாக ஒரு ரூபாய்த் திட்டம் ஒன்றை அறிவித்தார்கள்.

பிற்பகல் 7.00

ஆனால் அதற்குப் பிறகு 28 ஆண்டுகளுக்குப் பிறகு நம்முடைய முதவமைச்சர் அவர்கள் காலத்தில் நம்முடைய பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களும் நம்முடைய பேரவைத் தலைவர் அவர்களும் எங்கள் தொகுதிக்கு வந்தார்கள். அவர்கள் காமராஜர் பிறந்த நாள் அன்று வந்தார்கள் அங்கே வந்த நேரத்தில் அங்கே யுள்ள தெய்வத் திருமகன் முத்துராமலிங்கத் தேவர் சமாதியில் வணங்கிவிட்டு காமராஜர் பிறந்த நாள் விழாவுக்குச் சென்ற நேரத்தில் நாங்கள் இந்தக் கோரிக்கையை வைத்தோம். அந்தக் கோரிக்கையை நிறைவேற்ற பொதுப் பணித்துறை அமைச்சர் 17 கோடி ரூபாய் என்னுடைய தொகுதிக்கு ஒதுக்கி இருக்கிறார்கள். அதற்காக நன்றி செலுத்துவதற்காகத்தான் இன்று பெரும் பாடு பட்டு இந்த நேரத்தை நான் வாங்கினேன் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். எனவே நம்முடைய அரசுக்கு உண்மையான நன்றியை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதோடு எங்கள் தொகுதியில் பிறந்து, அகில இந்தியாவிலும் புகழ் மணந்து இன்று தெய்வத் திருமகனாக விளங்கிக்கொண்டிருக் கிற பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் சமாதியினை நம்முடைய பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் அரசின் பொதுப்பணித் துறையிலே எடுத்துக்கொண்டு, எப்படி அண்ணா சமாதியும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் சமாதியும் அழகுடன் விளங்குகின்றனவோ அதைப்போல அந்த சமாதியையும் அழகுபடுத்தி உலகம் முழுவதிலிருந்து அங்கே வருகிற மக்கள் அங்கே வந்து இந்தப் புனித மனிதர் எப்படி வாழ்ந்தார் என்று பார்க்கிற வகையில் அதை ஒரு காட்சிக்கூடமாக ஆக்கிக் கொடுக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.





எங்களுடைய பகுதியில் இருக்கின்ற மலட்டாறு திட்டத்தைப் பொறுத்த வரையில் தண்ணீரே இல்லாத வறட்சிப் பகுதியில் வருகிற அந்த 17 கோடி ரூபாய்த் திட்டத்தை நன்கு விரிவுபடுத்தி 10 அடி உயரத்தில் கட்டி கால்வாய் அமைக்கப் போவதாக அறிவித்து இருக்கிறார்கள். அதை இன்னும் 10 அடி உயர்த்தி 20 அடியாகக் கட்டி அந்தப் பகுதியிலே தண்ணீர் நிரந்தரமாக நிற்கின்ற வகையில் ஒரு நல்ல திட்டமாக அதை உருவாக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு உலக வங்கித் திட்டத்தின் மூலம் பெரிய கண்மாய் களை எல்லாம் பழுதுபார்க்க இருப்பதாக நம்முடைய அறிக் கையில் பார்த்தேன். எங்களுடைய பகுதி என்பது 'செயின்ஸ் ஆஃப் டேங்க்ஸ்' என்று சொல்வார்கள். இராமநாதபுரம் மன்னர் இருந்த காலத்தில் வைகையிலிருந்து வருகிற அத்தனைத் தண்ணீரையும் ஒவ்வொரு கண்மாயாக நிரப்பி, நிரப்பி இறுதியில் கடலுக்கு தண்ணீரே போகாத ஒரு நல்ல சூழ்நிலையை உருவாக்கி இருக்கிறார்கள். அங்கே நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான கண்மாய்கள் நம்முடைய இராமநாதபுரம் மாவட்டத்தில் இருக் கின்றன. நம்முடைய பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் எங்களுடைய பழைய இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த வர்கள் என்ற முறையில் அவர்கள் அதை மிக நன்றாக அறிவார்கள். அந்தக் கண்மாய்கள் எல்லாம் இன்றைக்குப் பழுது பார்க்கப்படாமல் அங்கே ஏற்படுத்தப்பட்ட கால்வாய்கள் எல்லாம் வெட்டப்படாமல் மன்னர் காலத்தில் எந்தக் கனவோடு அவர்கள் அதை நிறைவேற்றினார்களோ அது இன்று பாழ்பட்டுக் கிடக் கிறது என்பதை இங்கே நான் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஒரு காலத்தில் இராஜாஜி அவர்கள் இதே மன்றத்தில் சொன்னார்கள். பொதுப்பணித் துறை என்பது என்னுடைய எதிரி நம்பர் 1 என்று சொன்னார்கள். கம்யூனிஸ்ட்கள் என்னுடைய எதிரி நம்பர் 2 என்று சொன்னார்கள். ஆனால் இன்று அந்தச் சூழ்நிலைகள் எல்லாம் மாறி, பொதுப்பணித் துறை என்பது இன்றைக்கு நல்ல முறையில் வளர்ந்து இன்று நம்முடைய மத்திய அரசு 5 இலட்சம் டன் அரிசியை, 5 இலட்சம் டன் சர்க்கரையை வெளிநாடுகளுக்கு அனுப்புகிற அளவுக்கு பொதுப் பணித் துறை இந்த நாட்டிலே மிகப்பெரிய சேவை செய்திருக் கின்றது என்பதை நான் சொல்லி பாராட்டினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல் நம்முடைய பகுதியில் இருக்கின்ற பொதுப்பணித் துறை பல நல்ல காரியங்களைச் செய்தாகவேண்டும். கால்வாய்கள் எல்லாம் எங்கள் பகுதியில் இன்று காடுகளாக ஆகி இருக்கின்றன. காட்டுக் கருவேலங்கள் முளைத்து காட்டுப் பகுதிகளாக ஆகிவிட்டன. பலர் ஆக்கிரமிப்பு செய்துவிட்டார்கள். அவற்றை

[திரு. சோ. பாலகிருஷ்ணன்] [1991 செப்டம்பர் 26

எல்லாம் திருத்தி ஒழுங்கான முறையில் கால்வாய்களில் தண்ணீர் வந்து பெரிய கண்மாய்களை அவை நிரப்புகின்ற அளவுக்கு அந்தச் சூழ்நிலையை உருவாக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

எங்களுடைய தொகுதியில் மண்டலமாணிக்கம் என்ற ஒரு மிகப் பெரிய கண்மாய் இருக்கிறது. அந்தக் கண்மாயின் நீர்ப்பிடி பரப்பு மட்டுமே 4000 ஏக்கர். அதைப்போல் முதுகளத்தூர் என்று ஒரு கண்மாய் இருக்கிறது. அதனுடைய நீர்பிடிப்புப் பரப்பும் 4000 ஏக்கர். இந்தப் பெரிய கண்மாய்களை எல்லாம் அதாவது இது போன்ற பெரிய 'கண்மாய்களை எல்லாம் நாலா பக்கமும் வெட்டி அகலப்படுத்தி தண்ணீர் நிரப்பி குடிநீர்ப் பிரச்சினை இல்லை என்ற சூழ்நிலையை உருவாக்க வேண்டும். விவசாயத்திற்கும் பயன்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 7.05

கசிவு நீர் குட்டைக்கு என்று ஏராளமான பணத்தை ஒதுக்குகிறார்கள். கசிவு நீர் குட்டை என்கின்ற திட்டத்திற்கு ஒதுக்குகின்ற அத்தனை பணத்தையும் கண்மாய்கள் ஆழப்படுத்துவதற்காகவும், ஊருணிகளை ஆழப்படுத்துவதற்காகவும் நீங்கள் பயன்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எங்கள் பகுதியில் ஒரு மிக முக்கியமானது கூத்தங்கால் என்ற ஒரு கால்வாய். அந்த கூத்தங்கால் கால்வாயை மட்டும் நீங்கள் விரிவுபடுத்தினால் 80 கண்மாய்களுக்கு நீர் கிடைக்கும்.

அதுபோல, இன்னும் ஒன்றே ஒன்று சொல்கிறேன். இந்த ரோடு பற்றி சொல்கிறேன். 'சிவிலைசேஷன் வாக்ஸ் ஆன் தி ரோட்' என்று சொல்வார்கள். நம்முடைய பகுதியில் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல், ஏராளமான ரோடுகள் மிகமிக மோசமான சூழ்நிலையிலே இருக்கின்றன. அத்தனை ரோடுகளையும் பழுது பார்த்து எங்களுடைய பகுதி முன்னேறுவதற்கு வழிசெய்ய வேண்டும் என்று நம்முடைய மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களையும் இந்த அரசையும் கேட்டுக் கொள்கிறேன். அதற்கு உறுதுணையாக இருக்கவேண்டும் என்று கேட்டு எனக்கு ஒரு வாய்ப்பளித்ததற்கு நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. காஞ்சி பன்னீர் செல்வம்.

*திரு. காஞ்சி பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1977லேயிருந்து 1984'வரையிலே 'சீட்டுக் கேட்டு கேட்டு கிடைக்காத சூழ்நிலையில், இன்றைக்கு இந்த



1991 செப்டம்பர் 26] [திரு. காஞ்சி பன்னீர்செல்வம்]

அவையிலே, ஒருமுறை நாடாளுமன்றத்திலேயும் உட்கார வைத்து எங்களைப் போன்ற சாதாரண தொண்டர்களை எல்லாம் இன்றைக்கு ஆளாக்கி இருக்கிற, என்னை ஆளாக்கிய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய திருப்பாதங்களுக்கு என்னுடைய நன்றியைச் சொல்லி, இன்றைக்கு மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சருடைய மானியக் கோரிக்கையின் மீதான பேசுகின்ற வாய்ப்பினை தந்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைச் சொல்லிக்கொள்கிறேன். தமிழ் நாட்டில் அரசு கால்வாய்கள் மூலம் 95 மில்லியன் எக்டேர் நிலமும், ஏரிகளின் மூலம் 90 மில்லியன் எக்டேர் நிலமும், பாசன வசதிக்காக கிணறுகள், குழாய் கிணறுகள் முதலியவற்றின் மூலம் 1.15 மில்லியன் எக்டேர் நிலமும் பாசன வசதியை இன்றைக்குப் பெறுகின்றன.

நான் சார்ந்திருக்கின்ற செங்கற்பட்டு எம். ஜி. ஆர். மாவட்டத்தில் தான் ஏரிகள் நிரம்ப அதிகமாக இருக்கின்றன. அதிலே குறிப்பாக மதுராந்தகம், உத்திரமேரூர், செம்பரம்பாக்கம் புழல் இன்னும் செங்கற்பட்டிலே இருக்கின்ற குளவாய் ஏரி இப்படி பல்வேறு ஏரிகள் எங்கள் மாவட்டத்திலே அதிகமாக இருக்கின்றன. அந்த மாவட்டத்தினுடைய ஏரிகளைப் பார்க்கின்ற போது துரதிருஷ்டவசமாக செங்கற்பட்டு எம். ஜி. ஆர். மாவட்டத்தில் அணைகள் கட்டும்படியான ஆறுகளோ பாசனம் அளிக்கும் ஆறுகளோ இல்லை. இதனால் இந்த மாவட்டத்தில் உள்ள நிலப்பரப்புக்கு ஏரிப்பாசனம், ஏரியில் தண்ணீர் இல்லாத போது கிணற்று நீர் பாசனத்தை சிலவற்றை நம்பித்தான் பயிர் தொழிலே மேற்கொள்ளவேண்டியதாக இருக்கிறது. ஐரோப்பிய பொருளாதார நிதி மாற்று திட்டத்தின் உதவியுடன் என்னுடைய செங்கற்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் 38 ஏரிகள் இருக்கின்றன. அவைகளை ரூ. 7,35,62,000 செலவில் ஆழப்படுத்தும் பணிகள் நடைபெறுவதற்கு நடப்பாண்டில் 100 முதல் 200 ஏக்கர் ஆயக்கட்டுள்ள ஏரிகளையும் ஆழப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள இருப்பதற்கு என்னுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுக்கு இந்த நேரத்திலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஐரோப்பிய பொருளாதார நிதி மாற்று திட்டம் ஒப்பந்தக் காலம் முடிவடைவதற்குள் அதாவது 1995 ஆம் ஆண்டுக்குள் செங்கற்பட்டு எம்.ஜி. ஆர். மாவட்டத்திலே உள்ள எல்லா பெரிய பாசன ஏரிகளையும் மராமத்து செய்து, நீர் கொள்ளளவை அதிகப்படுத்துமாறு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களை நான் இந்த நேரத்திலே பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். அது மட்டுமல்ல, சிறிய ஏரிகளை பராமரிக்கும் பணிகளை ஊராட்சி ஒன்றியங்கள் மேற்கொள்கின்ற வகையில் செங்கற்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டத்திலுள்ள 27 ஊராட்சி ஒன்றியங்களும் ஏரிகளை மராமத்து செய்வதற்கும் சாலைகள்

மேம்படுத்துவதற்கும் ஒரு ஒன்றியத்திற்கு ஒரு கோடி ரூபாய் ஒதுக்குவதுபோல, ஏரி பராமரிப்பதற்கும் நிதி ஒதுக்குமாறு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களை நான் இந்த நேரத்திலே பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு சென்னையிலே இருந்து விழுப்புரம் வரையிலே நான்கு வழி சாலைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இன்றைக்கு நிறைய விபத்துகள் அங்கே நடைபெறுகிறது என்று மத்திய அரசின் மூலமாக அந்த வழிவகை செய்து ரோடுகள் போட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

அதேபோல, சென்னையிலிருந்து பெங்களூர் வரை செல்கின்ற பாதையில் குறிப்பாக காஞ்சிபுரம், வேலூர் வரையிலே போகின்ற பாதையில் நிறைய விபத்துகள் நடைபெறுகின்றன. அந்த இடத்திற்கும் 2 வழிப்பாதை அல்லது 4 வழிப்பாதை அமைப்பதற்கு மத்திய அரசை மாநில அரசு கேட்கவேண்டும் என்று நம்முடைய மாண்புமிகு மரியாதைக்குரிய பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களை நான் இந்த நேரத்திலே பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 7.10

அதுமட்டுமல்லாமல், என்னுடைய தொகுதி, தமிழகத்திலேயே மிகவும் பின்தங்கிய தொகுதி, உத்திரமேரூர் தொகுதியிலே இட்டத்தட்ட நிறைய பாலங்கள் அமைக்கப்பட வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. குறிப்பாக அமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு மாண்புமிகு தலைவர் அவர்கள் மூலமாக சொல்லிக்கொள்கிறேன். ஏற்கெனவே அரசின் ஆய்விலே இருக்கிறது. சென்னையிலிருந்து, செங்கற்பட்டிலிருந்து காஞ்சிபுரம் போகிற வழியில் பழத்தோட்டத்தில் ஓர்க்காட்பேட்டை தரைப் பாலம் ஒன்று அமைக்கப்பட வேண்டும். அதுமட்டுமல்லாமல், செங்கற்பட்டிலிருந்து காஞ்சிபுரம் வருகின்ற வழியில் திருமுக்கூடல் இருக்கிறது. அந்த திருமுக்கூடலில் 3 ஆறுகள் ஒன்றாக சேர்கின்றன. பாலாறு, செய்யாறு மற்றும் வேகவதி ஆறு ஆகிய இந்த மூன்று ஆறுகளும் ஒன்றாக சேர்ந்து தண்ணீர் வருகின்ற அந்த இடத்தில், சுமாராக மழை பெய்தாலும் கூட மணல் வந்து விடுகிறது. சாலைகள் தடைப்படுகிறது. அந்த திருமுக்கூடல் பகுதியில் இருக்கின்ற அந்தப் பாலத்தை மேம்பாலமாக கட்டவேண்டுமென்று இந்த நேரத்திலே பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அண்ணா அவர்களுக்கு நாங்கள் தான் வாரிசு என்று சொல்லிக் கொண்டிருந்தவர்கள் அதை எல்லாம் அவர்கள் காலத்தில், அந்த அண்ணாவின் குடும்பத்தைக் காப்பாற்றுவதற்கு மட்டுமல்ல. அவர்களை நாடுவதற்குக்கூட இல்லாத ஒரு சூழ்நிலை இன்றைக்கு நாட்டு மக்கள் பார்த்துக்கொண்டு தான் இருந்தார்கள்.



ஆனால் இன்றைக்கு எங்களுடைய இதயத் தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் அந்தக் குடும்பத்திற்கு ஒரு குறிப்பிட்ட நிதியை கொடுத்ததோடு மட்டுமல்லாமல் சொல்லுகின்ற நேரத்தில் அதை பெற்றுக்கொள்ளுங்கள் என்று தாய் உள்ளத்தோடு சொல்லியிருக் கிறார்கள். அப்பேர்ப்பட்ட இதயத் தெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் பாதங்களைத் தொட்டு பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். காஞ்சிபுரம் அறிஞர் அண்ணா இருந்த காலத் திலே மாவட்டத் தலைநகராக ஆனது. அந்த சமயத்தில் மட்டும் தான் அந்த நகரம் விரிவாக அமைக்கப்பட்டது. ஆனால் அந்த நகரத்திற்கு சாலை வசதியோ, சுற்றுலா ஸ்தலமாக இருக்கிற அந்த இடத்தில் நகர்ப்புற வளர்ச்சியோ இல்லாத ஒரு சூழ்நிலை நிச்சயமாக இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, அதை இதயத் தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள், அண்ணா பிறந்த அந்த மண்ணுக்கு ஒரு பெருமை சேர்க்கின்ற வகையில், உங்களுடைய காலத்திலே தான் அதை நிறைவேற்ற முடியும், நிறைவேற்ற வேண்டுமென்று உங்கள் பாதங்களைத் தொட்டு, அந்த நகரத்தை சுற்றுலா ஸ்தலமாக உருவாக்க வேண்டுமென்றும், சாலை வசதியை அமைத்துத் தர வேண்டுமென்றும் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், எங்களுடைய தொகுதியான உத்திர மேரூரில் மருத்துவர்கள் இருக்கிறார்கள். 10 படுக்கைக் கொண்ட மருத்துவமனை இருக்கிறது. இதயத் தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியிலே அங்கே 22 படுக்கைகளை ஒதுக்கியிருக்கிறார்கள். அப்பேர்பட்ட அந்த மருத்துவமனைக்கு ஒரு கட்டடம் இல்லை. அதற்காக நம்முடைய பொதுப்பணித் துறை மூலமாக ஒரு கட்டடத்தை கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காஞ்சிபுரத்திற்கும் உத்திரமேரூருக்கும் சாலை வசதி சரியில்லை. அதையும் அமைத்துத்தர வேண்டுமென்று இதயத் தெய்வம் புரட்சித் தலைவி அவர்களைப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். இந்த வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்த மரியாதைக் குரிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியை கூறி, விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. நா. சா. பழனிசாமி. 5 நிமிடங்கள்.

திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கையின் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த உங்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, பொதுப் பணித் துறை வல்லுநர்கள் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிற துறை, அணைக் கட்டுவதும்,

கால்வாய்களை வெட்டுவதும், சாலைகளைப் போடுவதும் என
வளர்ச்சிப் பணிகள் அத்தனையும் பொதுப் பணித் துறையின்
பொறுப்பிலேதான் வருகின்றன.

பொதுப் பணித் துறையிலே சில பொறுப்பற்ற பொறியாளர்கள்
இருப்பதால் `பல கட்டடங்கள் குறுகிய காலத்தில் பழுதடைந்து
விடுகின்றன. கரிகாலன் கட்டிய கல்லணை இன்னும் கட்டுக்
குலையாமல் இருக்கிறது. ராஜ ராஜன் கட்டிய பெரிய கோயில்
கம்பீரமாக நிற்கிறது. முதல் பிரதமர் நேரு அவர்கள் இன்றைய
அணைகளும், தொழிற்சாலைகளும் தான் நவீன இந்தியாவின்
கோவில்கள் என்றார்கள்; ஆனால் நவீன தொழில் நுட்ப அறிவு
வளர்ந்து, சிமென்ட். உருக்கு போன்ற பொருள்களைக் கலந்து
கட்டும் நவீன இந்தியாவின் கோவில்களான கட்டடங்களும்,
அணைகளும் உடைகின்றன என்றால் அதன் கலவை சரியில்லாமல்
இருப்பதும். அஜாக்கிரதையாக நடப்பதும், ஊழல்கள் செய்வதும்
தான் காரணம். தார்ச் சாலைகளை போடுகின்றபோது தாரை
குறைவாக போடுகிறார்கள். மழை பெய்து வாகனங்கள் சென்றால்
அங்கே பள்ளம் விழுந்து ஜல்லிகள் வெளியே வந்து விடுகின்றன.
என்னுடைய தொகுதியில் இந்த ஆண்டு தென்மேற்கு பருவ மழை
அதிகமாக பெய்ததால் தார்ச் சாலைகள் எல்லாம் பாழடைந்து
இருக்கின்றன. எனது தொகுதிக்கு அருகிலுள்ள கேரள மாநில
தார்ச் சாலைகள், தண்ணீர் நிற்காத வண்ணம் நடுவிலே ரோட்டை
மேடாக போட்டு, தண்ணீர் ரோட்டின் இரு புறங்களிலும் இருக்கிற
டிச்சிலே ஓடுகின்ற நிலை இருக்கிறது. அதனால் அங்கே சாலைகள்
பழுது அடையாமல் இருக்கின்றன.

பிற்பகல் 7.15

ஆனால் தமிழ்நாட்டில் உள்ள பொறியாளர்கள் ரோட்டை
சம தளமாக போடுவதால் தண்ணீர் ரோட்டில் வற்றாமல் நின்று
ரோடு பழுதடைந்து விடுகிறது. நமது கிராமங்களை நெடுஞ்
சாலையோடு இணைந்து விட்டால் கிராமங்கள் தாமாக முன்னேறி
விடும் என்று இந்தியாவின் நிதியமைச்சராக இருந்த டி. டி.
கிருஷ்ணமாச்சாரி அவர்கள் கூறினார்கள். கிராமங்கள் தோறும்
சாலைகள் அமைக்க வேண்டும். நாங்கள் வாக்கு கேட்கச் செல்லும்
போது குடிநீருக்கு அடுத்தபடியாக மக்கள் வைக்கும் கோரிக்கை
சாலைகள் வேண்டுமென்பதுதான். சாலைகள் இருந்தால்தான்
பேருந்துகள் விட முடியும். எனது தொகுதி பரம்பிக்குளம்—ஆளி
யாறு பாசனம் பெருகின்ற பகுதி. 2 இலட்சம் ஏக்கருக்குத் திட்ட
மிட்டுக் கட்டிய அணையிலிருந்தும், வெட்டிய வாய்க்கால்களி
லிருந்தும் 4 லட்சம் ஏக்கருக்குத் தண்ணீர் பாய்ச்ச வேண்டி
உள்ளது. வல்லான் வகுத்ததே வாய்க்கால் என்று சொல்லு
வார்கள். அது பரம்பிக்குளம்—ஆளியாறு பாசனத் திட்டத்தைப்
பொறுத்தவரையில் உண்மையாக இருந்து வருகிறது. அரசியல்
[illegible] அதிகமாக உள்ள வாய்க்கால்களில் அதுவும் ஒன்றாக



இருந்து வருகிறது. பாசனத்திற்கு ஒரு புறம் தண்ணீர் கேட்பார்கள்
குளம் குட்டைகளுக்கு ஒரு புறம் தண்ணீர் கேட்பார்கள். குடி
நீருக்கு ஒரு புறம் தண்ணீர் கேட்பார்கள். இத்தனை தேவை
களையும் பூர்த்தி செய்தாக வேண்டும். 3 மண்டல பாசன
முறையை, விரிவாக்கப் பகுதிக்கும் தண்ணீர் பாய்ச்ச வேண்டு
மென்பதற்காக 4 மண்டலங்களாக மாற்றும் கொள்கை வேண்டு
மென்பது அரசின் பரிசீலனையில் உள்ளதாக கொள்கைக் குறிப்பு
கூறுகிறது. தற்போது ஒரு மண்டலத்திற்கு 75 ஆயிரம் ஏக்கருக்குப்
பாசனம் தரப்படுகின்றது. அந்தப் பாசனத் தண்ணீரை 4 மண்ட
லங்களாக விடும்போது 90 ஆயிரம் ஏக்கர்களுக்கு விட வேண்டும்.
அப்படி விடும்போது இடைவெளி அதிகமாகிவிடக்கூடிய வாய்ப்பு
இருக்கிறது. எனவே இந்த 4 மண்டல பாசன முறையை அமல்
படுத்துவதற்கு ஆனமலையாறு. நல்லாறு என்ற இரண்டு திட்டங்
களை நிறைவேற்றினால் பாசனம் அளிக்க முடியும் என்று பொறி
யியல் வல்லுனர்கள் கூறுகிறார்கள். ப0 ஆண்டுகளுக்குப் பிறகு
கேரள மாநிலத்தோடு பேசி ஒப்பந்தம் செய்யப்பட வேண்டு
மென்று இருப்பது இன்னும் ஒப்பந்தம் செய்யப்படாமல்
இருப்பதாகச் சொல்லுகிறார்கள். அந்த பரம்பிக்குளம்–ஆளியாறு
பாசனத் திட்டத்திலே இப்போது பரம்பிக்குளத்திலே புரட்சித்
தலைவி அவர்கள் ஆட்சியில் ஏற்பட்ட ஒரு தெய்வச் செயலாக
பரம்பிக்குளம் அணை இன்று நிரம்பி இருக்கிறது. ஆனால் அந்த
அணையிலிருந்து தண்ணீரை திருமூர்த்தி அணைக்குக் கொண்டு
வரும் 'காண்டூர் கெனால்' கொள்ளளவு குறைவாக இருக்கிற
காரணத்தால் திருமூர்த்தி அணைக்குத் தண்ணீரை அதிகமாகக்
கொண்டுவர முடியவில்லை. அதனால் அதிகமான பகுதிகளுக்குப்
பாசனம் அளிக்க முடியாமல் இருக்கிறது. ஆனமலையாறு,
நல்லாறு திட்டங்களை நிறைவேற்றினால் திருமூர்த்தி அணைக்கு
தனியாக வேறு ஒரு வழியாக தண்ணீரைக் கொண்டுவர முடியும்
என்று சொல்லுகிறார்கள். அந்த ஆனைமலை ஆறு—நல்லாறு
திட்டங்களை நம்முடைய தமிழக அரசு நிறைவேற்றுவதற்கு
இடையூறாக கேரள மாநிலம் எடைமலையாறு என்ற அணை
கட்டியும்கூட அது இன்னும் முடிவு செய்யப்படாமல் இருப்பதாகச்
சொல்லுகிறார்கள். அந்த ஆனைமலையாறு நல்லாறு திட்டங்களை
எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்க மத்திய அரசை
நிர்பந்தப்படுத்தி, மத்திய அரசின் திட்டச் செலவிலே அந்த ஆனை
மலையாறு. நல்லாறு திட்டத்தைக் கட்டி நிறைவேற்றுவதற்கு
தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் முயற்சி எடுத்து,
அந்தப் பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு பாசனம் அளிக்க வேண்டு
மென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பரம்பிக்குளம் ஆளியாறு பாசனத் தண்ணீர் இன்று பாசனத்
திற்கு இரண்டாவது மண்டலத்திற்கு விடப்பட்டிருக்கிற இந்த
நேரத்திலே (மணி அடிக்கப்பெற்றது) அந்தத் தண்ணீர் இப்போது
பாசனம் பெறுகின்ற பகுதியிலிருந்து திருப்பூர் நகருக்கு பாசனத்
தண்ணீரை விற்றுக் கொண்டிருக்கிறார்கள். பல இடங்களிலே
பாசனத்திற்கு விடப்பட்ட தண்ணீரை கிணறுகளிலே விட்டும்

[திரு. நா. சா. பழனிசாமி] [1991 செப்டம்பர் 26

பரம்பிக்குளம் மெயின் வாய்க்காலின் பக்கவாட்டிலே குழிகளைப்
போட்டும் தண்ணீரை அங்கே இருக்கின்ற சாயச் சலவை பட்டரை
களுக்கு விற்றுக் கொண்டிருக்கிற காரணத்தால் தண்ணீரை
விற்கும் விவசாயிக்கும், விவசாயம் செய்யும் விவசாயிக்கும்
இடையே பல பிரச்சினைகள் ஏற்பட்டு, சட்டம் ஒழுங்குப்
பிரச்சினையாக அது உருவெடுத்துக் கொண்டிருக்கிறது. பொதுப்
பணித் துறை மூலமாக பாசனத்திற்கு விடப்பட்ட தண்ணீரை
வியாபார ரீதியாக விற்கக்கூடாது என்று தடை விதிக்க வேண்டும்.
பரம்பிக்குளம் ஆளியாறு தண்ணீரை நேரடியாக திருப்பூர் தொழிற்
சாலைகளுக்கு......(குறுக்கீடு)

பிற்பகல் 7.20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வெ. பழனிசாமி

திரு. வெ. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, cn a point of ordei. திருப்பூர் பகுதியில் உள்ள
டையிங் பேக்டரிகளுக்கு தண்ணீரை விற்றுக் கொண்டிருக்கிறார்கள்
—பரம்பிக்குளம் ஆளியாறு தண்ணீர்—என்று சொல்லுகிறார்கள்.
ஒரு தவறான தகவல் தந்து கொண்டிருக்கிறார்கள் என்று நான்
கருதுகிறேன். கிணற்றில் இருக்கிற தண்ணீரை திருப்பூரில் இருக்கிற
டையிங், பிளிச்சிங் தொழிற்சாலைகளுக்கு வாங்கிக் கொண்டு
வருவது உண்மைதான். சுமார் வருடம் ஒன்றுக்கு 15 கோடி
ரூபாய்க்கு அந்த தண்ணீரை வாங்கித்தான் பல லட்சம் தொழிலா
ளர்களுக்கு நாங்கள் வேலை வாய்ப்புக் கொடுத்துக் கொண்டு
வருகிறோம். பரம்பிக்குளம் ஆளியாறு தண்ணீர் என்பது ஆண்டுக்கு
15 நாட்கள் வரக்கூடிய தண்ணீர்தான். அதை விற்றுக்கொண்டு
இருக்கிறார்கள் என்பது தவறான தகவல். அப்படியே இருந்தாலும்
பல லட்சம் தொழிலாளர்களை திருப்பூரில் வாழவைத்துக்
கொண்டிருக்கிற சூழ்நிலையில் விவசாயத்திற்குப் போக உபரியாக
இருக்கிற தண்ணீரை வாங்கி நாங்கள் பயனடைகிறோமே தவிர
அதன்மூலம் பாதிப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்
கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சித் தலைவர்.

* திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் என். எஸ்.
பழனிசாமி அவர்கள் குறிப்பிட்டது முற்றிலும் உண்மை. அவரைக்
காட்டிலும் எனது தொகுதிதான் மிகவும் அதிகமாக இதனால்
பாதிக்கப்பட்டு, பெரிய பதட்டம் கூட ஏற்பட்டு இருக்கிறது.
அவர் வேறு தொகுதியாக இருந்தாலும் என்னுடைய தொகுதியைச்
சேர்ந்தவர். பொங்கலூர் ஒன்றியத்தைச் சேர்ந்தவர். அந்தத்
தொகுதியில் சில காலமாக பதட்டம் ஏற்பட்டதற்குக் காரணம்,
தண்ணீர் விற்கப்படுவது. இதை யாராலும் மறுக்க
முடியாது. பரம்பிக்குளம் ஆளியாறு திட்டத்திலிருந்து
இரண்டாவது மண்டலத்திற்கு இப்போது தண்ணீர் பாய்ந்து
கொண்டிருக்கிறது. இரண்டாவது மண்டலத்திற்கு வழங்கப்
படுகிற தண்ணீரின் அளவு 850 கியூசெக்ஸ். ஆனால்



1991 செப்டம்பர் 26] [திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்]

தொடர்ச்சியாக இப்போது 1050 கியூசெக்ஸ் விடப்படுகிறது.
கிட்டத்தட்ட 25 சதவீதம் அதிகமாக தண்ணீர் அங்கே போகிறது
என்று சொன்னால் திருப்பூர் பகுதிக்கு அது விற்கப்படுகிறது.
தண்ணீரை விற்பதற்காக பரம்பிக்குளம்—ஆளியாறு தண்ணீர்
விடப்படுகிறது. அவசியமாக சில நேரங்களில் தண்ணீர் விட
வேண்டுமென்று சொன்னால் விடலாம். நாங்கள் குறுக்கே நிற்க
மாட்டோம். ஆனால் தண்ணீர் வீணடிக்கப்படுகிறது என்ற
காரணத்தினால், மூன்றாவது மண்டலத்திற்கு தண்ணீர் விடப்
படுவதுகூட நின்று போய்விடும் என்ற அச்சம் அந்தப் பகுதி முழு
வதும் இருக்கிறது. இப்போது முறைப்படி 3-வது மண்டலத்
திற்கு தண்ணீர் பாயவேண்டிய நேரம். தி.மு.க. அரசு செய்த
தவறு என்னவென்றால், இரண்டாவது மண்டலத்திற்கு தண்ணீர்
பாயவேண்டிய நேரத்தில் திருப்பூருக்கு தண்ணீரை விட்டார்கள்.
எங்கெல்லாம் தண்ணீர் போகக் கூடாதோ, அங்கேயெல்லாம்
தண்ணீர் விட்ட காரணத்தாலே சென்ற முறையே தை மாதம்
பாய்ந்திருக்க வேண்டிய தண்ணீர் அவர்களுக்குப் பாயவில்லை.
இப்போது 2-வது மண்டலத்திற்கு பாய்ந்து கொண்டிருக்கிறது.
ஆனால் இப்போது 3-வது மண்டலத்திற்கு முறை.

அடுத்தது இப்போது தண்ணீர் இருக்கிறது. அது வீணடிக்கப்
படாமல் இருக்குமானால் 3-வது மண்டலத்திற்கு மார்கழி
மாதத்திலே விடப்படும் என்று பொறியாளர்கள் சொல்லிக்
கொண்டிருக்கிறார்கள். இங்கே அமைச்சரிடம் கேட்டால் நான்
நிறுத்தச் சொல்லிவிட்டேன் என்று சொல்கிறார். இங்கேயிருக்கிற
அதிகாரிகளைக் கேட்டால் நிறுத்தச் சொல்லியாகிவிட்டது என்று
சொல்கிறார்கள். இருந்தாலும் தண்ணீர் போய்க் கொண்டே
இருக்கிறது. 1,050 கியூசெக்ஸ் தண்ணீர் விட வேண்டியது அவசியம்
தானா ? அந்த அளவுக்கு தண்ணீர் போனால் தண்ணீர் வீணடிக்கப்
பட்டு 3-வது மண்டலத்திற்கு தண்ணீர் பாய்வது கெட்டுப் போய்
விடும் என்பது ஒன்று. அந்தப் பகுதியில் ஏராளமாக தண்ணீர்
விற்கப்படுகிற காரணத்தாலே அங்கே இருப்பவர்கள் போராட்டம்
நடத்தவேண்டுமென்று நீண்டகாலமாக வலியுறுத்திக் கொண்டிருக்
கிறார்கள். அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்
சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப்பணித்
துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்
அவர்களும், உறுப்பினர் திரு. என். எஸ். பழனிச்சாமி அவர்களும்
ஒரு பிரச்சினையை முன்வைத்திருக்கிறார்கள். இது சம்பந்தப்
பட்ட பிரச்சினைகள் என்னுடைய கவனத்திற்கு கொண்டுவரப்
பட்ட நேரத்திலே, நான் உடனடியாக நிலத்தடி நீர் தலைமைப்
பொறியாளரையும், நெடுஞ்சாலைத் துறை உயர் அதிகாரிகளையும்
அழைத்து எந்த இடத்திலே தண்ணீரை எடுத்துக் கொண்டிருக்

கிறார்கள் என்பதை நீங்கள் நேரடியாக ஆய்வு செய்து என்னிடத்திலே அறிக்கை தாக்கல் செய்ய வேண்டுமென்று நான் அவர்களுக்கு அறிவுரை வழங்கினேன். அதன்பேரில கண்காணிப்புப் பொறியாளரும், நிலத்தடி நீர் ஆய்வு செய்கிற அதிகாரிகளும் அந்தப் பகுதிகளுக்கு விரைந்து சென்று அங்கே பார்க்கிற நேரத்தில் பட்டா நிலங்களில் கிணறு வைத்திருப்பவர்கள் பம்ப் செய்து கிணற்றுத் தண்ணீரை டாங்கர் மூலம் திருப்பூருக்கு விற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்று தெரிய வந்தது. ஆற்றில் தண்ணீர் வந்தால் கிணற்றில் நீர் ஊறுகிறது. நேரடியாக பொதுப்பணித் துறை வாய்க்கால்களிலோ அல்லது துறையின் குளங்களிலோ செல்கிற தண்ணீரை தனியார் யாரும் எடுப்பதற்கு இந்த அரசு ஒருபோதும் அனுமதிக்காது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். ஒரு புறத்திலே கோரிக்கைகள்—தண்ணீர் விட வேண்டுமென்று வந்தாலும், குறிப்பிட்ட அளவுள்ள ஆயக்கட்டுகளுக்குத்தான் தண்ணீர் விடமுடியும் என்று நாங்கள் சொல்கிற நேரத்தில், குடிதண்ணீர்ப் பற்றாக்குறை இருக்கிறது, ஆகவே குளங்களுக்காவது தண்ணீர் விடுங்கள் என்று சொல்கிறார்கள். மனிதநேய அடிப்படையில் இந்த புரட்சித் தலைவியின் அரசு தண்ணீர் விடுகிற நேரத்தில் விவசாயத்திற்குப் போதவில்லை என்கிறார்கள். ஆகவே இந்த அரசு தண்ணீரை முறையாகப் பயன்படுத்துகிறது என்பதுதான் உண்மை. இந்தப் பிரச்சினையை உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்களும் என்னிடம் நேரில் சொல்லியிருக்கிறார்கள், முழு விபரம் அதிகாரிகளிடம் பெற்று இருக்கிறோம். அந்த அறிக்கையின் மீது மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் கலந்துபேசி அவர்களுடைய அறிவுரையின் பேரில் இறுதி முடிவெடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 7.25

ஆனால் தனியார் நிலத்திலே இருக்கின்ற பட்டா நிலத்திலே இருக்கின்ற கிணறுகளிலிருந்து எடுக்கின்ற தண்ணீரை இந்த அரசு கட்டுப்படுத்த முயன்றால் அவர்கள வழக்கு மன்றத்திலே சென்றால் அதன் நிலை என்னவாகும் என்று நாம் நினைத்துப் பார்க்க வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே சட்ட விதிகளுக்குட்பட்டு இந்த அரசு எதைச் செய்ய முடியுமோ அதை நிச்சயமாகச் செய்யும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பழனிசாமி போதும். அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லிவிட்டார். உங்களுக்கு கொடுத்த நேரத்திற்கு மேல் ஆகிவிட்டது. கடைசியில் கேட்டீர்கள். நேரம் கொடுத்தால் மேலும் கேட்கிறீர்களே? போதும். திரு. வ. சத்தியமூர்த்தி.



திரு. வ. சத்தியமூர்த்தி: பேரவைத் தலைவர் அவர்களே இதய தெய்வத்தை வணங்கி நான் பொதுப்பணித் துறை மானியக் கோரிக்கையை வரவேற்று என்னுடைய கருத்தைச் சொல்ல விழைகிறேன்.

கடந்த ஆட்சியாளர்கள் மக்களுடைய பேராதரவைப் பெறாமல் ஆட்சிக்கு வந்ததாலோ என்னவோ, மக்களாட்சி என்ற தத்துவத்தை மாற்றி அந்த முதல்வர் தன்னுடைய மக்கள் ஆட்சியாக, தன்னுடைய மைந்தன் ஆட்சியாக தமிழகத்தை ஆண்டார். இந்த நாடு திக்கு முக்காடிக் கொண்டிருந்தது. ஆனால் இன்றைய தினம் மக்களுடைய ஒட்டுமொத்த பேராதரவைப் பெற்று, இந்த 6 கோடி மக்களும் தாயாகக் கருதுகிற இதய தெய்வம் ஆட்சி செய்கின்ற காரணத்தால் இன்றைய தினம் இந்த நாட்டு மக்களையெல்லாம் தன் மக்களாகக் கருதுகிற காரணத்தால் மக்களாட்சி மீண்டும் தமிழகத்திலே மலர்ந்திருக்கிறது என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். காவிரி தாய்கூட கரைபுரண்டு ஓடுகிறாள் தாயினுடைய ஆட்சியில் என்று இங்கே வர்ணித்தார்கள். நான்கூட யோசித்துப் பார்க்கிறேன். இலண்டனுக்குக் கடத்தப்பட்ட ஆண்டவர் அன்று இந்த நாட்டை ஆண்டவர்களைக் கண்டு ஓடிவிட்டார் போலும். இலண்டன் நாட்டிலேயிருந்த ஆண்டவர், இன்றைய தினம் இந்த நாட்டில் நல்லாட்சி நடைபெற்றுக் கொண்டிருப்பதைக் கண்டு தாயின் கரத்திற்கு வந்து சேர்ந்துள்ளது. அதன் மூலம் அருள்கடாட்சமே அவருக்குக் கிடைத்திருக்கிறது. இயற்கையே எங்கள் இதய தெய்வத்திற்கு ஒத்துழைக்கிறது என்று எண்ணி நான் இந்த மானியக் கோரிக்கையின்மீது கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

முதலிலே இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களிடம் ஒரே நேரத்தில் நான் அவருடைய கவனத்தை ஈர்த்தேன். எல்லோரும் இராமநாதபுரம் மாவட்டத்தை வறட்சி மாவட்டம், வறட்சி மாவட்டம் என்று சொல்லுகிறார்கள். தலைவர் அவர்களே, நீங்கள் கூட முதன் முதலில் அருப்புக் கோட்டை தொகுதியில் வெற்றி பெற்று முதல்வர் ஆனீர்களே, ஆகவே வறட்சிப் பகுதியாகிய இராமநாதபுரத்தை வறட்சியிலிருந்து மீட்க என்ன நடவடிக்கையை எடுக்க இருக்கிறீர்கள் என்றேன். திருச்சிக்குப் பக்கத்திலே கட்டளை கால்வாயிலிருந்து சென்னைக்குக் குடிநீர் கொண்டுவர வேண்டுமென்று திட்டம் தீட்டினீர்களே, பிறகு அந்த திட்டத்தை மாற்றி விட்டீர்களே, ஏன் கட்டளைப் பகுதியில் இருந்து இராமநாதபுரம் பகுதிக்கு வெள்ளப் போக்குக் கால்வாயை அமைக்கக் கூடாது என்று அவரிடம் மன்றாடிக் கேட்டபோது, 1982 ஆம் ஆண்டில், காவிரியிலிருந்து தெற்கே கடற்கரையோரம் உள்ள வைப்பாறு வரை ஒரு வெள்ளப் போக்குக் கால்வாய் இணைக்கப்படும் என்று ஆளுநர் உரையில் குறிப்பிட்டிருந்தார்கள்.

அதற்காக உடனடியாக மதிப்பீடும் பெறப்பட்டது. அதைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்த நமது இதய தெய்வம் அரசு முன்வர வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதே போன்று வைகையில் பாசனத்தை நவீனப்படுத்தி பாசனத் திட்டத்தை விஸ்தரிப்பதில் எந்த மாச்சரியமும், கருத்து வேறுபாடும் எங்களுக்குக் கிடையாது. ஆனால் வெள்ளக் காலக் கட்டத்திலாவது இராமநாதபுரம் வரையில் வைகை நதியில் தண்ணீர் வந்து சேர வேண்டும். அப்படி எந்தக் காலக் கட்டத்திலும் இராமநாதபுரம் வைகை நதியில் வரவில்லை என்று சொன்னால் மதுரையிலே இருந்து கிழக்கே 120 கி.மீ. தொலைவில் உள்ள பகுதிகள் குடிநீர் ஆதாரமற்ற பகுதியாக மாறிவிடும். அது மட்டுமல்லாமல் அந்த வைகை மணல் பரப்பில் இன்றைய தினம் அரசின் கட்டுமானத் துறையின் மூலம் மணலை அன்றாடம் வாரிச் செல்வதன் காரணத்தால் வைகையில் மணல்கூட இல்லாத சூழ்நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது. ஆகவே எங்களுக்கு குடிநீர் ஆதாரம் இல்லாமலே போய்விடுமோ என்று அந்தப் பகுதியின் மக்களாகிய நாங்கள் அச்சப்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

பிறபகல் 7.30

மிகவும் வறட்சிக்கு இலக்காகியுள்ள இராமநாதபுரம் போன்ற பகுதியிலாவது நான் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களைக் கேட்டுக் கொள்வேன். பெய்கின்ற மழைநீர் கடலுக்குச் சென்று அடையாத வகையில் தொலைநோக்குப் பார்வையோடு, எப்படி 'அழகிய சென்னை நகரம்-2000' என்று சிந்திக்கிறீர்களோ அது போன்று இன்னும் ஒரு 20 ஆண்டுகளுக்குப் பிற்பாடு இராமநாதபுரம் பகுதி ஒரு 'புரோஹிபிடட் ரெசிடென்ஷியல் ஏரியா, என்று இல்லாமல் இருக்கப்பட வேண்டுமேயானால், மனிதர்களே குடி இருக்க அருகதையற்ற இடம், குடி இருக்கக் கூடாது என்று சொல்லாமல் இருக்க வேண்டுமானால் அந்தப் பகுதியின் நிலத்தடி நீரைப் பாதுகாத்து ஆக வேண்டும். நிலத்தடி நீரின் ஆதாரத்தை கூட்டி ஆக வேண்டும், அப்படி என்று சொன்னால் நீங்கள் ஒரு மாஸ்டர் பிளான் தயாரித்து, அந்தப் பகுதியில் மழைநீர் கடலுக்குச் செல்லாத வகையில் எப்படி ஆங்காங்கே தேக்க முடியும்; அது எத்தனை கோடியானாலும் செய்து காட்டுவேன் என்ற சூளுரையை எங்கள் தாய் எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் மிகப் பணிவோடு கேட்டு கொள்கிறேன். மலட்டாறு நீர்த்தேக்கத் திட்டத்திற்கு ஒரு மிகப் பெரிய சரித்திரம் உண்டு. அது ஒரு பரிணாம வளர்ச்சி பெற்று வந்து இருக்கிறது.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : முடியுங்கள்.

திரு. வ. சத்தியமூர்த்தி; 1970-ல் இருந்து அந்தத் திட்டம் இருக்கிறது. அந்தத் திட்டத்தை இதய தெய்வம் அவர்கள் எங்கள் பகுதிக்கு வழங்கியதன் மூலம் ஒவ்வொருவரும் சொல்வார்கள் பிறவிப் பயன் என்று நான் சட்டமன்ற உறுப்பினராக அனதினுடைய பயனை இந்தத் திட்டத்தை உங்கள் மூலம் பெற்று அந்தப் பகுதி மக்களுக்குக் கொடுத்ததின் மூலம் அடைந்துவிட்டேன் என்று சொல்லி நன்றி கூறி அமைகிறேன். நன்றி வணக்கம்.

### 4. அறிவிப்பு—தொடர்ச்சி.

### (இ) பேரவை அலுவல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவின்படி பேரவையின் அலுவல்கள் பற்றிய நிகழ்ச்சிகள் கீழ்க்கண்டவாறு நடைபெறும்.

| | |
|---|---|
| 27-9-1991 (வெள்ளிக்கிழமை) | 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்.<br>7—மாநிலச் சட்டமன்றம்<br>8—தேர்தல்கள்.<br>42—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வு கால நன்மைகளும்.<br>43—பல்வகை.<br>61—பல்வகை மூலதனச் செலவு.<br>62—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும்.<br>1991-92-ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும் மற்றும் முடிவு பெறாத மானியக் கோரிக்கைகளை பொறுத்தவரை விவாதமின்றி வாக்கெடுப்பு சரியாக 1.00 மணிக்கு எடுக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| | வாக்கெடுப்பிற்குப் பின் 1991–92–ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளுக்கான நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு—அறிமுகம் செய்தல். |
| | கீழ்க்கண்ட அரசினர் சட்ட முன்வடிவுகள் ஆய்வு செய்தலும் நிறைவேற்றுதலும். |
| | 1. 1991–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிச் சட்டங்கள் சார்ந்த (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண். 28/1991). |
| | 2. 1991–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 29/1991). |
| 28–9–1991 (சனிக்கிழமை) | தமிழ்நாடு 1991 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு—ஆய்வு செய்தலும், நிறைவேற்றுதலும். |
| 29–9–1991 (ஞாயிற்றுக்கிழமை) | விடுமுறை. |
| 30–9–1991 (திங்கட்கிழமை) | மண்டல் கமிஷன் பரிந்துரை மீதான அரசினர் தீர்மானம். |
| 1–10–1991 (செவ்வாய்க்கிழமை) | தமிழ்நாடு மின்சார வாரிய நிதி நிலை அறிக்கையின் மீது விவாதம். |
| 2–10–1991 (புதன்கிழமை) | காந்தி ஜெயந்தி—விடுமுறை. |
| 3–10–1991 (வியாழக்கிழமை) | 1. கச்சத் தீவு பற்றிய அரசினர் தீர்மானம். |
| | 2. தமிழ்நாடு சட்டமன்ற மேலவையை தோற்றுவிக்கலாம் என்று 20–2–1989 அன்று நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தினை [illegible]கும் தீர்மானம். |



| | |
|---|---|
| | 3. அரசினர் சட்டமுன்வடிவுகளை ஆய்வு செய்தலும், நிறைவேற்றுதலும். |
| 4–10–1991 (வெள்ளிக்கிழமை) | அரசினர் சட்டமுன்வடிவுகளை ஆய்வு செய்தலும், நிறைவேற்றுதலும். |

தேவையிருப்பின் பேரவை 5–10–1991 அன்று கூடும்.

பேரவை 3–10–1991 மற்றும் 4–10–1991 ஆகிய நாட்களில் மாலையிலும் கூடும்.

பிற்பகல் 7.35

### 7. மானியக் கோரிக்கைகள், 1991–92—விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் அவர்கள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற பொதுப்பணித் துறை மானியக் கோரிக்கை மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்தக் குறிப்பிலே பம்பையாறு, அச்சன்கோவில் ஆறு இவைகளை தென்புறமாக, தமிழகத்திற்கு திருப்புவதற்கும், அதைப்போல மகாநதி, கோதாவரி, கிருஷ்ணா ஆகிய ஆறுகளை பெண்ணாறு, காவிரி, வைகை ஆகிய ஆறுகளோடு திருப்பி கலக்க வேண்டுமென்று ஒரு முடிவை எடுத்திருப்பதை பார்த்து நான் உண்மையிலேயே மகிழ்ச்சி அடைகிறேன், பாராட்டுகிறேன். காரணம், இது மற்ற அண்டை மாநிலங்களோடு முதல்வர்களோடு கலந்து பேசாமல், நம்முடைய மதிப்பிற்குரிய முதல்வர் அவர்கள் ஒரு 'வில்–பவர்' தன்னம்பிக்கையோடு இவ்வளவு பெரிய திட்டங்களை நாம் செய்ய முடியும். நம்மால் செய்ய முடியாத காரியமே இல்லையென்ற அடிப்படையில், இதை இங்கே இணைத்திருக்கிறார்கள். நான் உண்மையிலேயே மகிழ்ச்சி அடைகிறேன். பாராட்டுகிறேன்.

ஏற்கனவே கவர்னர் உரையில் நதிகள் தேசியமயமாக்கப்பட வேண்டும் என்று நானும் பேசியிருந்தேன். நம்முடைய முதல்வர் அவர்களும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள், இந்த நதிகளை தேசியமயமாக்கினால்தான் முடியும். கங்கையில் சென்று பார்த்தால் தண்ணீர் கரைபுரண்டு ஓடி கடலில் விழுகிறது. அந்தத் தண்ணீரை திருப்பிக் கொண்டு வந்தால், எந்தெந்த மாநிலங்களிடையே அந்தத் தண்ணீர் வருகிறதோ

[திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்] [1991 ஏப்ரல் 26

அந்தச் செலவை அந்த மாநிலம் ஏற்றுக் கொள்ளலாம் என்ற நிலைமைகளை நாம் உருவாக்கிக் கொள்வதற்கான ஒரு சூழ்நிலையை மத்திய அரசிடம் சொல்வார்களானால் நிச்சயமாக அந்தத் திட்டத்தை ஏற்றுக் கொள்வார்கள் என்றுதான் நான் நம்புகிறேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்களால தான் இது போன்ற திட்டங்களை நிறைவேற்ற முடியுமே தவிர வேறு யாராலும், எந்தக் காலத்திலும் நிறைவேற்ற முடியாது என்பதை இந்த நேரத்தில் அழுத்தந்திருத்தமாகச் சொல்லிக்கொள்ள ஆசைப் படுகிறேன். சிறப்பு நிதித் திட்டத்தின் கீழ் இங்கே சிறு பாசனத்திற்கு பணம ஒதுக்கி இருக்கிறோம். மத்திய அரசு இதற்கு 325 இலட்சம் கொடுத்து இருக்கிறது. அதன் மூலமாக 267 திட்டங்கள் இங்கே நிறைவேற்றப்பட இருப்பதாக அறிகிறேன். சில காரியங்கள் நிறைவேறி இருக்கின்றன. அதற்கு நாமும் 18.89 இலட்சம் பணத்தை ஒதுக்கி இருக்கிறோம். எப்படி செய்தாலும் கண்மாய்களைப் பற்றி நான பலமுறை சொல்லி இருக்கிறேன். மாண்புமிகு ரெவின்யூ அமைச்சர் அவர்களும் இங்கே இருக்கிறார்கள். கண்மாய்களில் ஆக்கிரமிப்பு பண்ணி அதற்கு நாம் பட்டா கொடுத்திருக்கிறோம். பல ஆண்டுகளாக இது இருக்கிறது. இப்படி பட்டா கொடுத்ததை ரத்து செய்து, 1947 ஆம் ஆண்டுக்கு முன்னால் எப்படி கண்மாய்கள் இருந்தனவோ அந்த அளவுக்கு கண்மாய்களை கொண்டு வந்து, புல்டோசர் வைத்து ஆழப்படுத்தி, கரைகளை உயர்த்தி, தண்ணீரை அதிகமாக சேமித்து வைத்தால் ஒழிய நமக்கு ஒரு விமோசனம் இல்லையென்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பல இடங்களில் கண்மாய்களில் பட்டா போட்டு கொடுக்கப் பட்டிருக்கிறது. அந்தப் பட்டாக்களை கண்டிப்பாக ரத்து செய்ய வேண்டும் என்று முடிவை எடுத்தால்தான்-இன்றைக்கு மழை இல்லாத நேரத்தில், நிலங்கள் வைத்திருந்தும் கூட, கிணறுகள் இருந்தும் கூட அந்த கிணறுகளுக்கு பெர்குலேஷன்—ஊற்றுத் தண்ணீர் கிடைக்கவில்லை. கிணற்றை ஆழப்படுத்தி ஆழப்படுத்தி தண்ணீர் இல்லாத நிலை இருக்கிறது. நிலத்தடி நீர் இருக்க இருக்க குறைந்து கொண்டே போகிறது. ஆகவே, இதிலெல்லாம் அரசு கண்ணும் கருத்துமாக இருக்கவேண்டுமென்று கூறிக்கொள்ள் விரும்புகிறேன்.

அதேநேரத்தில் ஏழை எளியவர்களுக்கு பட்டா போட்டு கொடுத்திருப்பதை நான் வரவேற்கிறேன். அதில் கண்மாய் புறம் போக்கு, ஓடைப் புறம்போக்கு, சுடுகாடு புறம்போக்கு, பாதைப் புறம்போக்கு, இவைகளை விட்டுவிட்டு தனியாக நீங்கள் இடம் ஒதுக்கி கொடுத்து, அவர்ளுக்கு பட்டா போட்டு கொடுத்து அவர் களுக்கு வீடு கட்ட 3 செண்ட் நிலம் கொடுக்கும் நிலைமையை உருவாக்கினால் அப்போதுதான் நமக்கும், இந்த நாட்டுக்கும் விமோசனம் கிடைக்கும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்பு கிறேன்.



1991 செப்டம்பர் 26] [திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்]

மேலெழுந்தவாரியாக கிட்டத்தட்ட 95 சதவீதம் தண்ணீரைப் பயன்படுத்தும் அளவுக்கு நாம் செய்திருக்கிறோம். இப்போது நிலத்தடி நீர் கீழே போய்விட்டது. நாங்கள் எல்லாம் 300 அடி போர் போட்டோம். 300 அடி போட்டும் கூட $2\frac{1}{4}$ அங்குலம் பைப் போட்டால் தண்ணீர் வரும் என்று சொன்னார்கள். அப்படி செய்தும் இரண்டு நிமிடம் தண்ணீர் வருகிறது. பிறகு நின்று விடுகிறது. நாங்கள் இந்தக் குறையை யாரிடம் சொல்வது என்று தெரியவில்லை. 13 இலட்சம் கிணறுகள் நீர்பாசனத்திற்கு மின்சார பம்ப் செட் வசதி செய்துகொடுத்து தமிழகம இந்தியாவிலே கிணற்றுப் பாசனத்திலே முதன்மையான நிலையை அடைகிறது. ஆகவே, எங்கெல்லாம் தரிசு நிலங்கள் இருக்கிறதோ, எங்கெல்லாம் விவசாயத்திற்கு பயன்படாத நிலம் இருக்கிறதோ, இவைகள் எல்லாவற்றையும் பொதுப்பணித் துறை ஆய்வு செய்து, எந்த இடத்தில் தண்ணீர் இருக்கிறது என்று தெரிந்து, அந்த இடத்தில் ஒரு பெரிய இராட்சத கிணறு போட வேண்டும். அந்த இராட்சத கிணற்றை போட்டு அதிலே தண்ணீரை உண்டாக்கி, பம்ப் செட் வைத்து,—அந்த பம்ப் செட் போடுகிற பணத்தைக் கூட—டிபென்டிங் அப்பான் தி ஏக்ரேஜ்—ஒருவருக்கு 2 ஏக்கர், 3 ஏக்கர், 5 ஏக்கர் என்று எவ்வளவு இருக்கிறதோ அதை வைத்து மொத்தம் ஆகக்கூடிய செலவை பிரித்துக் கொள்ளலாம். இப்போது பம்ப் செட் பணம் பூராவும் கொடுப்பதில்லை. கிணறு வெட்டுகிற பணத்தை கூட ஏக்ரேஜுக்கு தகுந்தாற்போல வசதி செய்யக்கூடிய நிலைமையை உருவாக்கிக் கொள்வோமானால் இன்னும் சற்று சாலச் சிறந்ததாக இருக்கும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். காரணம் நாங்கள் சித்ரவதை பட்டுக்கொண்டிருக்கிறோம். விவசாயிகள் கிணற்றில் தண்ணீர் இல்லாத காரணத்தால் விவசாயம் கெட்டு, பாழடைந்து போய் என்ன செய்வது என்று புரியாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த விவசாயி களுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்றால் எங்கே குழாய்க் கிணறு போட வேண்டுமோ, ஆழ்குழாய் கிணறு போட வேண்டுமோ, அதைத் துறையின் மூலமாகப் பார்த்து, ஆராய்ந்து,— அவர்களிடத்தில் பணம் இருக்காது. அவர் களிடத்தில் பணம் இல்லாத மிகவும் சிரமமான சூழ்நிலை. இந்தச் சூழ்நிலையை மாற்றுவதற்கு நம்முடைய மதிப்பிற்குரிய, இன்றைக்கு எல்லோரும் வியக்கக்கூடிய, எல்லோரும் பாராட்டக் கூடிய அளவிலே, திகைப்படையக்கூடிய அளவிலே, இங்கே இந்தச் சட்டமன்றத்தை நடத்தி, ஒவ்வொன்றுக்கும் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார்களே—என்னிடத்திலே பாராட்டு சொல் கிறார்கள்.

பிற்பகல் 7.40

ஏலோ தெரியவில்லை. எனக்குப் பாராட்டு, உங்களுடைய முதல்வர் அவர்கள் இந்த அளவிற்கு, இவ்வளவு திறமையாக காரியங்களை ஆற்றுகிறார்கள் என்று என்னிடத்திலே வந்து பாராட்டக்கூடிய அளவிற்கு, இருக்கிறது, படித்தவர்கள் எல்லாம்,

பெரிய பெரிய உத்தியோகத்திலே இருப்பவர்கள் எல்லாம், இவ்வளவு ஒரு நல்ல முதல்வரைப் பெற்று இருக்கிறீர்கள் என்று சொல்கிறார்கள். நாங்கள் இதை நினைக்கிறோம். இந்தக் காலத்திலே நடைபெறாத ஒரு வேலை வேறு எந்தக் காலத்திலேயும் நடைபெறாது என்பதை நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

பிறகு, என் தொகுதியிலே பல ஆறுகள் இருக்கின்றன. கொடகனாறு திட்டம் எங்கள் ஊரிலே உற்பத்தியாகிறது. சித்தாம்பட்டி பகுதியிலே உற்பத்தியாகிறது. அந்தத் தண்ணீர் கொஞ்சம் எங்கள் ஜில்லாவிற்கு கிடைக்கிறது. ஆனால் திருச்சி வரைக்கும் வருகிறது. திருச்சி வரைக்கும் வரக்கூடிய அந்தத் தண்ணீரை நாங்கள் பார்த்துக் கொண்டே இருக்கிற நிலைமை யிருக்கிறது. ஆகையினாலே மிக வறண்ட சூழ்நிலை இன்றைக்கு ஏற்பட்ட காரணத்தினாலே, இந்த அணையை—அங்கே ஒரு அணை, கல்தேக்கத்திற்குப் பக்கத்திலே ஒரு அணையைக் கட்டி, அங்கே தண்ணீரை தேக்கி வைத்தால்தான் எங்கள் பகுதிக்கு பயன்படக்கூடிய ஒரு நிலைமை ஏற்படும் என்பதையும் இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பிறகு மருதா நதி என்று பழைய காலத்திலே பல ஆண்டு களுக்கு முன்பு, அந்தத் திட்டத்தைக் கட்டினோம். இந்த மருதா நதித் திட்டத்தின் மூலமாகக் கூட, மருதா நதித் திட்டத்தின் தண்ணீரும், மஞ்சளாறு தண்ணீரும் இரண்டும் சேர்ந்து, வைகையிலே எல்லாம் வந்து விழுகிறது. கூட்டத்து ஐயம்பாளையம் இந்த இரண்டு நதிகளும் சேருகின்ற காரணத்தினாலே, அங்கே கூட்டாத்து ஐயம்பாளையம் என்று பெயர் பெற்று, அந்த தண்ணீர் வைகையிலே விழுகிறது. ஆனால் நாங்கள் பார்த்துக் கொண்டேயிருக்கிறோம். மருதா நதியில் கொஞ்சம் பாசனம் இருக்கிறது. இருந்தாலும் கூட, அங்கே ஒரு பூச்சாண்டி அம்மன் என்று ஒரு ஓடைத் திட்டம் இருக்கிறது. அந்தப் பகுதியிலே ஒரு செக் டாம் போட்டுக் கட்டினால், இன்னொரு 2 ஆயிரம் ஏக்கருக்கு, நிலக்கோட்டைப் பகுதிக்கு தண்ணீர் கிடைக்கும் என்ற அந்த ஆசையினாலே இதை இங்கே சொல்லிவைக்கலாம் என்று சொல்கிறேன் என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதன் பிறகு மஞ்சளாறு, இது ராஜவாய்க்கால். இந்த ராஜவாய்க்காலிலே தண்ணீர் மடமட என்று போகிறது. நான் நடந்தே போய் பார்த்துவிட்டு வந்தேன். அதாவது பெரியகுளம் தொகுதிக்குப் போகிறது. அது போகும்போது பார்த்தால், இந்த தண்ணீர் அங்கே சென்று, பொம்மிநாய்க்கன் குளத்திலே விழுந்து, அப்படியே வைகையிலே விழுகிறது. ஆறு கிலோ மீட்டர் நடந்து சென்று பார்த்துவிட்டுவந்தேன். அப்படி அந்தத்



தண்ணீர் வைகையிலே விழுகிறது. ஆகையினாலே, இந்த மஞ்சளாறு, ராஜ வாய்க்காலிலிருந்து ஒரு வாய்க்காலை வெட்டுவோமானால், என்னுடைய தொகுதியில் உள்ள இலவன்பட்டி, பெரியப்ப நாயக்கன்பட்டி போன்ற பல ஊர்களுக்கு தண்ணீர் கிடைக்கக்கூடிய, பாசனம் கிடைக்கக்கூடிய கிணற்றுக்கு தண்ணீர் கிடைக்கக்கூடிய ஒரு நிலைமை உருவாகும் என்பதையும் இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்பு கிறேன்.

சென்ற தடவை, அதாவது கவர்னர் உரையின்போதே, சிறுமலை அருவித் திட்டத்தைப் பற்றி நான் மாண்புமிகு முதல்வரிடத்திலே எழுதிக் கொடுத்தேன். அவர்களும் அதைப் பரிவோடு ஏற்றுக்கொண்டு இலாக்காவிற்குஅனுப்பியிருக்கிறார்கள். அந்த இலாக்காவிலே ஏன் இப்படிச் செய்கிறார்கள் என்று என்னால் புரிந்து கொள்ளவே முடியவில்லை. அதுவும் சீப் இன்ஜினியர் அவர்கள். நான் அவர்கள் மீது குறை சொல்ல வில்லை. 1964-ம் ஆண்டு, I was M.L.A. சோழவந்தான் தொகுதி. அப்போது நான் சட்டமன்ற உறுப்பினராக இருக்கிறேன். சிறுமலையிலே மழை பெய்த காரணத்தாலே, Trivardrum Mail-Between Pallapatti and Kodai Road இரண்டுக்கும் இடையிலே சிறுமலைத் தண்ணீர் உடைந்து, அந்த ரயில் கவிழ்ந்தது. 303 பேர்கள் ரயிலிலே பிரயாணம் செய்தவர்கள் இறந்தார்கள். என்னை அந்த நேரத்திலே வந்து அழைத்துக் கொண்டு போனார்கள். நாங்கள் எல்லாம் சென்று பார்த்து விட்டு வந்தோம். என்ன செய்வது? பெண்கள், எத்தனையோ பெண்கள். அங்கே செத்து மடிந்தார்கள். அந்தத் தண்ணீர், சிறுமலை அருவித் திட்டத்தினாலே, மழை அதிகமாகப் பெய்து, அந்த ரயில் கவிழ்ந்தது ** அத்தனை பேர்களும் செத்து மடிந்தார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், * * என்று சொல்வதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க உத்தரவிடுகிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : அவர்கள் எல்லாம் நன்றாக வேலை செய்யக் கூடியவர்கள்தான். இப்போது ஏனோ தெரியவில்லை. இந்த பொன்னம்மாள் அக்கா இன்னும் அலையட்டும் என்று நினைக்கிறார்களோ என்று தெரியவில்லை. இந்தத் திட்டத்திற்கு ஒரு ஆயிரம் தடவை போய் இருக்கிறேன்,

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

அந்த இலாக்காவிற்கு. இப்போது என்ன எழுதியிருக்கிறார்கள் என்று சொன்னால், நான் தெரிந்து கொண்டது, அது 20 ஆண்டுக் காலத்திலே இரண்டே இரண்டு முறைதான் தண்ணீர் வந்து குளங்கள் நிரம்பி இருக்கின்றன என்று உண்மைக்குப் புறம்பான ஒரு தகவலை அளித்திருக்கிறார்கள். அதைப் பார்த்து நான் மிகுந்த வேதனை அடைகிறேன். 1982 ஆம் ஆண்டு என்னை 11 மணிக்கு, என்னுடைய வீட்டிலே வந்து, எழுப்பினார்கள். பிறகு ஓடினேன். அங்கே தண்ணீர் வருகிறது. தண்ணீர் வருகிற நிலைமையிலே பக்கத்திலே இருந்த ஆட்களை நானூத்துச் சொச்சம் பேரை இரவிலே எழுப்பிக் கொண்டு போய். பெட்ரோமாக்ஸ் லைட்டை வைத்து, கற்களை எடுத்துப் போட்டு, அந்தத் தண்ணீர் உடைப்பைத் தடுத்து நிறுத்தக்கூடிய சூழ்நிலையை உருவாக்கி, காலை 3 மணிக்குத்தான் வீட்டுக்கு வரக்கூடிய நிலைமை ஏற்பட்டது. ஆகையினாலேதான் சொல் கிறேன். மழை பெய்தால் வெள்ளம் கரைபுரண்டு வருகிறது. ரயில் கவிழ்கிறது. அந்த ரயிலிலே வரக்கூடிய மக்கள் செத்து மடிகிறார்கள். எனவே இதிலே வந்து எக்சனாமிக்கலா, அல்லது அன்—எக்க ாமிக்கலா, இது லாபகரமான திட்டமா., அல்லது லாபம் இல்லாத திட்டமா என்பதை தயவு செய்து சம்பந்தப் பட்ட பொறியாளர்கள், வேறுவிதமாக கவனம் செலுத்தினால், நாம் மிகப் பெரிய பாதகத்திற்கு ஆளாவோம் என்பதைத்தான் இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். எனவே மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே கேட்டுக் கொள்கிறேன். இதை ரொம்ப கருணையோடு நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். இப்போது போனால் அங்கே—நம்முடைய ரெவின்யூ அமைச்சர் எஸ்.டி.எஸ். அவர்கள் இருந்த வீடு மல்லிகை,—அந்த மல்லிகையிலேதான் ஆபீஸ் இருக்கிறது. அந்த ஆபீசுக்கு ஓடினேன். அங்கே அன்றைக்கு என்ஜினியர் இல்லை. பிறகு அவர்களைப் பார்த்து, மேனேஜரைப் பார்த்து, அவரிடம் ரெக்கொஸ்ட் பண்ணினேன். சார், இதை எப்படியாவது சேர்க்கச் சொல்லுங்கள் என்று சொன்னேன். இப்போதும் என்ன சொல்கிறார்கள், 20 ஆண்டிலே, 2 வருடத்திலே 2 தடவைதான் தண்ணீர் வந்திருக்கிறது, அதை எடுக்க முடியாது என்று சொன்னால், நாளும் போராட்டம் நடத்தி, நாளும் உண்ணா விரதம் இருந்து, இப்படி வருமா, வரவேண்டுமா என்பதைத் தான் நான் அவர்களிடத்திலே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். எனவே இந்தத் திட்டத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

பிற்பகல் 7.45



ஏம்பா, என்னப்பா அன்—எக்கனாமிக்கல் என்று இப்படியே கேட்டார். ** ** உடன் சேரு.

அந்தத் திட்டத்தை. அதாவது ரூ. 10 இலட்சத்திற்கும் கீழே ரூ. 9.99 இலட்சம் என்று போட்டு மறுபடியும் 'ரிவைஸ்டு எஸ்டிமேட்' போடலாம் என்று சொல்லி, அங்கே சோழவந்தான் தொகுதியிலே அந்தத் திட்டத்தை அந்தத் தலைவர், அதை மாற்றி அந்தத் திட்டத்தை எடுக்க வைத்தாரோ அதே போன்று நம்முடைய மதிப்பிற்குரிய நம்முடைய அருமைத் தலைவி (சிரிப்பு) (குறுக்கீடு) இன்றைக்கு நான் சொல்லவில்லை காக்கா பிடிக்கவில்லை. இது காக்கா பிடிக்கறதில்லை. (சிரிப்பு) அவருடைய வேலை. அவர்களால் செய்ய முடியும். இது போதாதா? இது ஒன்றை மட்டும் நினைத்துப் பாருங்கள் எம்.எல்.ஏ-க்கள் எல்லாம். இந்தத் துணிவு, இந்தத் துணிச்சல், அண்டை மாநிலத்திலிருந்து தண்ணீரைக் கொண்டு வரமுடியும் என்ற தன்னம்பிக்கை, அந்தத் தன்னம்பிக்கையால் இந்தத் திட்டத்தை அவர்கள் இந்தப் புத்தகத்தில் போட்டுக் கொடுத் திருக்கிறார்கள் என்றால், இதைவிட ஒரு தைரியம், இதைவிட ஒரு will power, இதைவிட ஒரு தன்னம்பிக்கை வேறு எந்த அமைச்சருக்கு வரும் (மேசையைத் தட்டும் ஒலி) என்று நான் உங்களிடத்தில் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். எனவே, நான் அவர்களிடத்தில் கேட்டுக்கொள்கிறேன். அன்றைக்கே நான் சொன்னேன். அவர் இங்கேயே ஆளவேண்டுமென்று நினைத்தவள்தான். அன்றைக்கே நான் முதன் முதலில் பேசும் போதே நினைத்தேன். நீங்கள் மத்தியிலும் வரவேண்டுமென்ற ஆசை. (சிரிப்பு) மத்தியில் வரவேண்டுமென்று சொன்னதற்கே காரணம், அந்தக் கெட்டிக்காரத்தனம். இங்கே பேசும்போது பார்க்கிறோம். இல்லையா? நாங்கள் எல்லாம் பிரமித்துப்போய் உட்கார்ந்து கொண்டிருக்கிறோம். எத்தனையோ மந்திரிகள் முதல்வர்களாக இருந்தார்கள். 1957-லிருந்து நான் எம்.எல்.ஏ., இத்தனை மந்திரிகள் இருக்கும்போது நான் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறேன். இப்படி நம்முடைய முதல்வர் அவர்கள், அதிலும் பெண் என்பதில் எங்களுக்கு இன்னும் கொஞ்சம் பெருமை. ஆகையால்தான் அவருடைய காலத்தில் நிறைவேற்றப்படாத திட்டமே இருக்கக்கூடாது என்பதற்காகத்தான் நான் இதை வலியுறுத்தி சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். (சிரிப்பு).

அடுத்து இன்றைக்கு இருக்கிற இந்த கிணற்றுப் பாசனம் சார். இன்றைக்கு வெட்டின கிணற்றுக்குக் கொடுக்காதீர்கள். வேண்டாம். இது என்றைக்கோ 100 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு கிராமத்திலே எனக்கு ஒரு கிணறு இருக்கிறது. இந்த

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

செக்ரட்டரிக்கு ஒரு கிணறு இருக்கிறது. இந்தத் தம்பிக்கு ஒரு கிணறு இருக்கிறது என்று வையுங்கள். அது 100 ஆண்டுகளுக்கு முன்பு வெட்டப்பட்ட கிணறு. இப்போது அவருக்கு பணம் இருக்கிறது. வசதி இருக்கிறது. அவர் கிணற்றை ஆழப் படுத்திக் கொண்டே போகிறார். எனக்கு வசதி இல்லை. நான் ஆழப்படுத்த முடியவில்லை. எனவே இப்போது அந்த கிணற்றை மூடிவிட்டா நாம் கடன் வாங்குவது? கடன் கேட்கச் சென்றால் பக்கத்தில் கிணறு இத்தனை அடிக்குள்ளே இருக்கவேண்டும். இது இவ்வளவு அடிக்குள்ளே இருக்கிறது. ஆகையால் லோன் இல்லை என்று சொல்கிறார்கள். இதற்கெல்லாம் ஒரு மாற்றான வழியைக் கண்டுபிடித்து எல்லோருக்கும், அந்தக் கடன் கிடைக்கக் கூடிய அளவிலே, எல்லா மக்களுக்கும் அதாவது கிணறு வெட்ட முடியாது இருக்கிறவர்களுக்கு, பக்கத்தில் உள்ளவர்களுக்கு எல்லாம் கூட பல ஆண்டுகளுக்கு முன்பு இருந்த கிணறு என்று யோசனை செய்து பார்த்து, அந்த அளவில் செய்து கொடுக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிறகு 1985-லே நான் பழனி தொகுதி எம்.எல்.ஏ., அந்த தொகுதியைப் பற்றி நான் ஒன்றும் இப்போது சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் 1957-லிருந்து எல்லாவற்றையும் சொல்லிக் கொண்டிருந்தால் இப்போது நேரம் 7.45-ஐத் தாண்டிப்போய்க் கொண்டிருக்கிறது. இப்போது இருக்கிற பிரச்சினையோடு முடியுங்கள்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** விஜயகுமார் மில் அதிபர், அருமைத்தம்பி மணிநாயக்கர் அவர்கள் என்னிடத்தில் சொன்னார்கள். அதாவது ஜெர்மன் கொலாபிரேஷனிலே அங்கே மூணாறுக்கு மேலே 300 அடி அணைக் கட்டி அந்த தண்ணீரிலிருந்து மின்சாரத்தை எடுத்து, அதைத் தென்பகுதிக்கு திருப்பி விடுவோமேயானால், அந்தத் தென்பகுதி முழுவதும் சிறப்படையும் என்று அவர் ஒரு குறிப்பைக் கொடுத்தார்கள். அன்றைக்கு அந்த நேரத்திலே எனக்கு ஏற்பட்டிருந்த சூழ்நிலையின் காரணத்தால் பல கொடுமைகள் ஏற்பட்ட காரணத்தினாலே நான் அதை ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு நிலைமை. அதைப்பற்றி பேச முடியாத ஒரு சூழ்நிலை. இரண்டு ஆண்டுகளாக மகன் இறந்து, மருமகன் இறந்து அப்படிப்பட்ட நிலைமையில் நான் இருந்த காரணத்தினாலே அதைக் கைவிடக் கூடிய நிலைமை ஏற்பட்டது. ஆகையால் அந்தத் திட்டத்தையும் பரிசீலனைக்கு எடுத்து, அது என்னவென்று பார்த்து அதையும் நாம் அமல்படுத்தக் கூடிய நிலைமையை உருவாக்குவோமேயானால் சாலச் சிறந்ததாக இருக்குமென்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நம்முடைய தலைவர் அவர்கள் மணியடித்து விட்டார்கள்.



இப்போது ரோடிலே போக முடியவில்லை சார். நாங்கள் எல்லாம் டவுன் பஸ் எம்.எல்.ஏக்கள். 50 வருஷம் உயிரோடு இருந்தால் கூட கார் வாங்க முடியாது. டவுன் பஸ் எம்.எல். ஏ-க்கள், டவுன் பஸ்ஸில் தான் போக வேண்டும். அப்படி டவுன் பஸ்ஸில் போகும் போது குலுங்குகிற குலுக்கலுக்கு கர்ப்பிணி பெண்கள் எல்லாம் போக முடியாது. ரோடு அப்படி யிருக்கிறது. ஆகவே இந்த ரோடுகளுக்கு பணம் ஒதுக்கி யிருக்கிறோம்.

பிற்பகல் 7-50

இந்தத் திட்டத்திற்கு நாம் பணம் ஒதுக்கியிருக்கிறோம். ரூ. 102.25 கோடி ஒதுக்கியிருக்கிறோம். அது போதாது. இன்னும் இந்த ஐந்தாண்டு திட்டத்திற்காக 150 கோடி ரூபாய் ஒதுக்கி இருப்பதாக கொள்கை விளக்க குறிப்பிலே சொல்லப் பட்டிருக்கிறது. ஆகவே எங்கெல்லாம் ரோடுகள் பள்ளமும் குழியுமாக இருக்கிறதோ அந்த ரோடுகள் எல்லாம் மூன்று மாதத்திற்குள்ளாக செப்பனிடப்பட வேண்டும் என்ற ஒரு நிலைமையை உருவாக்கி கொடுப்போமேயானால் தான் நல்ல ஒரு சூழ்நிலையை உருவாக்க முடியும் என்று இந்த நேரத்திலே கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து செம்பட்டியிலிருந்து பழனி வருகிற ரோட்டிலே— அது என்னுடைய பழைய தொகுதி, இப்போது போவதில்லை. ஆனால் அப்போது போனேன். அந்தத் தொகுதியிலே நான் பார்த்தவரைக்கும் ரோடுகள் மிக மோசமாக இருக்கிறது. அந்த ரோட்டையும் இந்த ஆண்டிலே எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வத்தலகுண்டு—கெங்காரெட்டி ரோடும் மிக மோசமாக இருக்கிறது. அதையும் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு பாலம். இந்தப் பாலத்தைப் பொறுத்தவரையில் 100 பாலங்கள் கட்டுவது என்ற ஒரு திட்டம் ஏற்கெனவே நம்முடைய முன்னாள் முதல்வர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்திலேயே திட்டமிடப்பட்டது. அந்த திட்டத்தை இப்போது அமல் நடத்துவோமேயானால் எங்கெங்கெல்லாம் சிறு சிறு பாலங்கள் கட்ட முடியுமோ அந்தந்த இடங்களில் கட்டுவதற்கு அது வாய்ப்பாக இருக்கும். அந்த அளவிற்கு நிறைய சிறிய பாலங்கள் கட்டவேண்டியிருக்கிறது. அதை எழுதிக் கொடுக்கிறேன்.

அதைப்போல மருதாநதியும் மஞ்சளாறும் இணைகிறது ஓர் இடத்தில். அதில் மழை காலத்தில் தண்ணீர் நிறைய வருகிறது. அங்கே 40 லட்சத்திற்கு ஒரு பாலம் கட்ட வேண்டும் என்று— குழிப்பட்டி மீனாட்சிபுரம் அருகே அந்த இடத்திலே பாலம் கட்ட சொல்லிக் கொண்டிருக்கிறோம்.

[திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்] [1991 செப்டம்பர் 26

அது இப்போது தலைமைச் செயலகம் வந்திருக்கிறது. போய்
கேட்டால். அது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது
என்று இலாகாவிலே சொல்லுகிறார்கள். அதைப்போல நீண்ட
நெடுங்காலம் கக்கண்ணா அவர்கள் அமைச்சராக இருந்த
போதிலிருந்தே—ரெங்கப்பநாயக்கன்பட்டி—இராமநாயக்கன்பட்டி
வைகையிலே பாலம் கட்ட வேண்டும் என்று கேட்டார்கள். அது
இன்னும் நடைபெறவில்லை. அதைப்போல இந்த நிலக்கோட்டை
தொகுதியிலே என்ன பாலமோ தெரியவில்லை. ஆறு வேறு நடுவில்
வந்துவிட்டது. ஆற்றுக்கு அந்தப்புறம் 50 ஆயிரம் 60 ஆயிரம்
மக்கள் மலைப்பகுதியிலே இருக்கிறார்கள். அவர்கள் அங்கேயிருந்து
வரவேண்டுமென்றால் 20, 30 கிலோ மீட்டர் சுற்றித்
தான் தாண்டி வரவேண்டும். அந்த திட்டம் எப்போது தான்
முடியுமோ எந்தக் காலத்திலே முடியவேண்டுமோ அப்போதுதானே
முடியும்- அது உங்கள் கையால் முடியவேண்டும் என்று
இருக்கிறது. அது ரூ. 2¾ லட்சத்திற்கு போட்ட திட்டம் ஒரு
கோடி ரூபாயாக ஆகிவிட்டது. இங்கே கேட்டால் டெல்லிக்கு
அனுப்பிவிட்டோம் என்று சொல்லுகிறார்கள். டெல்லிக்கு
போயிருந்தபோது அதைப்பார்க்க எனக்கு நேரம் இல்லை.
அதனால் ஓடிவந்துவிட்டேன். ஒரு கோடி ரூபாயைக் கூட நீங்கள்
ஒதுக்க வேண்டாம். குறைத்து மதிப்பு போட்டு 40 லட்சத்திற்கு
போட்டு அந்தப் பாலம் கட்டி முடிக்கப்பட்டால் மிகவும் உதவியாக
இருக்கும் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனவே இந்த
வேலைகளை எல்லாம் நடத்திக் கொடுக்க வேண்டும். நான் நீண்ட
நாள் எம்.எல்.ஏ. பல எம்.எல்.ஏக்கள் பிறந்து கூட இருக்க
மாட்டார்கள். 1957-க்கு பிறகு தான் இங்கே இருக்கிற சில
எம்.எல்.ஏக்கள் பிறந்திருப்பார்கள். நம்முடைய மாண்புமிகு
முதல்வர் அவர்கள் கருணை உள்ளத்தோடு 'பாவம் இந்த
பொன்னம்மா அக்கா' என்று நினைத்து இந்தத் திட்டங்
களையெல்லாம் நிறைவேற்றித் தருமாறு கேட்டு தலைவர் அவர்
களுக்கும் முதலமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்து
என் உரையை முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ** என்று வருகிற சொற்
றொடரை அவைக்குறிப்பிலிருந்து நீக்குகிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்; நான் அப்படிச் சொல்ல
வில்லை. தயவு செய்து அப்படி எழுதிவிடாதீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படிச் சொல்லியிருந்தால்
அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படும். மாண்புமிகு அமைச்சர்
பதிலுரை.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க
அகற்றப்பெற்றது.



1991 செப்டம்பர் 26]

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, 6 கோடி தமிழக மக்களின் அன்புச்
செல்வியாம் 40 லட்சம் கழகத் தொண்டர்களின் உயிர் துடிப்பாய்
என்னைப் போன்ற சாதாரண மாணவர்களை இந்தச் சபையிலே
உட்காரச்செய்து அமைச்சர் பதவியை கொடுத்து அழகு பார்க்கிற
என் அன்புத் தாயாய், தமிழகத்தை தலைநிமிரச் செய்கிற தானைத்
தலைவியாய், புதிய பொற்காலம் அமைக்க புறப்பட்டிருக்கும்
எங்களுடைய புரட்சி தலைவியாய் இன்றைக்கு இந்த அவையிலே
வீற்றிருக்கிற இந்த அன்னையை வணங்கி என்னுடைய பதி
லுரையை இங்கே தெரிவிப்பதற்கு கடமைப் பட்டிருக்கிறேன்.
என்னைப் பொறுத்த மட்டிலே புகழ் மிக்கவனாக இருப்பதை
விட விஸ்வாசம் உள்ளவனாக இருப்பதையே பெரியதாக எண்ணு
கிறேன். என்பதை இங்கே தெரிவித்து கொள்ளக் கடமைப்
பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

என்னை அமைச்சராக்கி என்னுடைய பணிகளை நான்
செவ்வனே ஆற்றுவதற்கு என்னுடைய ஆசானாக இருந்து
அவ்வப்போது அறிவுரைகளை வழங்கி என்னுடைய பணி
சிறக்க எனக்கு இன்றைக்கு அறிவுரை கொடுத்துக் கொண்டிருக்கிற
எங்கள் அன்புத் தலைவியை மீண்டும் வணங்குகின்றேன்.
இங்கே பேசிய அருமை நண்பர்கள், அருமை மாமன்ற உறுப்பினர்
கள் பல்வேறு பாராட்டுகளையும் இங்கே வழங்கினார்கள். சில
குறைபாடுகளையும் சொன்னார்கள்.

பிற்பகல் 7.55

பலர் கோரிக்கைகளை இங்கே வைத்தார்கள். எனக்கு கிடைத்த
பாராட்டுகளும், இந்த அரசுக்கு கிடைத்த பாராட்டுகளும் என்
னுடைய ஒப்பற்றத்தலைவி, புரட்சித் தலைவியின் காலடிக்குச்
சமர்ப்பணம் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்
கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன். குறைகளைப் பார்க்கின்ற
நேரத்திலே அவை என்னை இந்த பொறுப்பினை திறம்பட நடத்
திச் செல்கின்ற ஒரு தூண்டுகோல்கள் என்று நினைத்து நான்
அவைகளை எல்லாம் நிறைகளாக ஏற்று எதிர்காலத்திலே இந்த
துறையிலே செவ்வனே ஆற்ற வேண்டிய பணிகளுக்கு அவை ஒரு
தூண்டுகோல் என்ற உணர்வோடு நான் இந்தப் பணியைத்
தொடர்கின்றேன் என்பதைச் சொல்லி பொதுப் பணித்துறை
என்பது பொது மக்களுக்கு ஆற்றுகின்ற, சிறப்பான பணிகளை
ஆற்றுகின்ற துறை என்பதை நம்முடைய ஒப்பற்ற தலைவி,
புரட்சித்தலைவியின் காலத்திலே செயலாற்றிக் காட்டுவேன் என்று
உறுதியையும் இந்த மாமன்றத்திலே உறுப்பினர்களுக்கு நான்
தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டவனாக உள்ளேன். (மேசை
யைத் தட்டும் ஒலி). இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர்கள்
பல்வேறு கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். இந்த அரசினு
டைய நல்ல பல திட்டங்களை இந்தத்துறையின் சார்பிலே நான்
அறிவிப்பதற்கு முன்னாலே நான் முக்கியமான சில பிரச்சினை
களை இங்கே உங்களுக்கு கோடிட்டுக்காட்டக் கடமைப்
பட்டிருக்கிறேன். ஏழையின் சிரிப்பிலே இறைவனைக்

காண்போம் என்றார் பேரறிஞர் அண்ணா அவர்கள். இன்றைக்கு அந்த ஏழைகளுக்காக எண்ணற்ற பல நலத் திட்டங்களைத் தீட்டி இன்றைக்கு தன்னையே வருத்திக் கொண்டு பணியாற்றுகின்ற என் இனிய தலைவியை நான் எண்ணிப் பார்க்கிறேன். இன்றைக்கு ஏறத் தாழ 100 நாட்களிலே அவர்கள் படுகின்ற அல்லல்களை எல்லாம் நாங்கள் அருகில் இருந்து பார்க்கிறோம். ஏறத்தாழ ஒரு நாளைக்கு 20 மணி நேரம் உழைக்கின்ற அந்தப் பாங்கு எங்களை மெய்சிலிர்க்க வைக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) தன்னுடைய உடல் நலத்தையும் பாராமல், கோரிக்கைகள், பிரச்சினைகள் என்று வருகின்ற நேரத்திலே எத்தனை மணி நேர மானாலும் எத்தனை மணிக்கு வந்தாலும், இரவு என்றும் பகல் என்றும் பாராமல் இன்றைக்கு அந்த கோரிக்கைகளையெல்லாம் தன்னுடைய அமைச்சரவை சகாக்களை அழைத்து உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்றும், தானும் அந்த முனைப்பான முயற்சியிலே ஈடுபட்டு இந்தத் தமிழகத்தை தலைநிமிரச் செய்கின்ற ஒரு தானைத் தலைவியாக எங்களுடைய புரட்சித் தலைவியைநான் பார்க்கிறேன். அப்படிப்பட்ட புரட்சித் தலைவியின் பொற்கால ஆட்சியில் இந்தத் தமிழகம் எதிர்காலத்தில் தலைசிறந்து விளங்கி, தரணி போற்றும் தமிழ்நாடாகத் திகழும் என்பதை இந்த நேரத் திலே தெரிவித்துக்கொள்வது என் கடமை என்று கருதுகிறேன். இன்றைக்கு 1,2 பிரச்சினைகளை தான் முன் வைத்தாக வேண்டும். நம்முடைய முக்கியமான பிரச்சினையான காவிரி பிரச்சினை. இன்றைக்கு உச்ச நீதிமன்றத்திலே வழக்குகள் இருக்கின்ற காரணத் தினாலே அதனுடைய உள்ளே செல்லாமல் நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் இந்த அரசு பொறுப்பை ஏற்றதற்குப்பின்னாலே இந்தப் பிரச்சினையை எத்தனை முனைப்போடு செயலாற்றினார் கள் என்பதை நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சிலப்பதிகாரத்திலே இளங்கோவடிகள்—

'மருங்கு வண்டு சிறந்தார்ப்ப
மணிப்பூ ஆடை அது போர்த்து

கருங்கு கயற்கண் விழித்து ஒல்கி
நடந்தாய் வாழி காவேரி'

என்று சொன்னார்கள். காவிரி பெருக்கெடுத்து ஓடுகின்ற நேரத் திலே வண்டுகள் எல்லாம் மொய்க்கின்றன. அந்த வெள்ளத் திலே மலர்கள் எல்லாம் மலர் ஆடையாகப் போர்த்தி, அந்த அளவிற்கு சிறப்பாக வெள்ளம் பெருக்கெடுத்து ஓடிய காலம் சிலப்பதிகாரத்துக் காலம் என்ற காரணத்தினாலே அன்றைக்கு இளங்கோவடிகள் பாடி வைத்ததை நான் இந்த நேரத்திலே நினைவுகூர்வதற்கு கடமைப்பட்டிருக்கிறேன். அன்றைக்கு அவர் பாடியதை இன்றைக்கு சரித்திரமாக காட்டிக் கொண்டிருக்கின்ற காலம் புரட்சித் தலைவியினுடைய காலம் ... கடமைப்பட்டிருக்கிறேன். (மேசை



10 ஆண்டுக்காலமாக சோழனுக்குச் சொந்தக்காரன் பாண்டியனுக்கு வேண்டியவன் என்று சொன்னவர்கள் எல்லாம் ஆண்ட நேரத்திலே அன்றைக்கு வறட்சியிலே வாடிய காவேரித், தாய் இன்று பொங்கி எழுந்திருக்கிறாள்என்றால், இந்த நாட்டை, இந்த மகராசி—முகராசி கொண்ட மகராசி ஆள வந்த நேரம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 8:00

காவிரிப்பிரச்சினை எழுகின்ற நேரத்திலே நம்முடைய ஒப்பற்ற தலைவி, தானைத் தலைவி, புரட்சித் தலைவி அவர்கள் எவ்வளவு முனைப்போடு செயலாற்றினார்கள் என்பதை இந்த மன்றத்தில் இருக்கிற உறுப்பினர்கள் அறிவார்கள்; இந்த நாடு அறியும். அவர் எடுத்த நடவடிக்கைகளிலே நான் ஒன்றிரண்டை முக்கியமாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 25-6-1991 அன்று நடுவர் மன்றத் தீர்ப்பு 205 டி. எம். சி தண்ணீர் விடவேண்டும் என்று சொன்ன போது கர்நாடக அரசு சட்டத்திற்கு முரண்பட்டு மறுத்த நேரத்திலே பல்வேறு நடவடிக்கைகளை நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் எடுத்தார்கள். உடனடியாக கர்நாடக மாநிலத்திற்கு டெலக்ஸ் செய்தி அனுப்பினார்கள். அதற்குப் பின்னாலே கர்நாடக முதலமைச்சரோடு தொடர்பு கொண்டு தண்ணீரை திறந்துவிட வேண்டும்; நீதிக்கும், நேர்மைக்கும், நியாயத்திற்கும் கட்டுப்பட வேண்டும் என்று வற்புறுத்தினார்கள். அதற்குப் பின்னாலே, பாரதப் பிரதமருக்கு 5-7-1991-லே தந்தி அனுப்பினார்கள். அதற்குப் பின்னாலே 25-6-1991 ஆம் தேதி இடைக்கால உத்திரவினை நிறைவேற்ற வேண்டும் என்று பாரதப் பிரதமர் அவர்களை நேரிலே சந்தித்து வேண்டி கேட்டுக்கொண்டார்கள். அங்கே வலியுறுத்தினார்கள். அதற்குப்பின்னாலே அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி அனைத்துக் கட்சிகளும் அன்றைக்கு தி.மு.க. உட்பட அனைத்துக்கட்சிகளும் பாராட்டிப் பேசியதை இந்த மன்றத்திலே நான் நினைவுக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த அளவுக்கு இன்றைக்கு காவேரிப் பிரச்சினை தமிழ்நாட்டினுடைய தலையாயப் பிரச்சினை என்ற உணர்வோடு அவர்கள் பணியாற்றியதை இந்த மன்றத்தில் இருக்கும் மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். அதற்குப் பின்னாலே இன்றைக்கு உச்ச நீதிமன்றத்தில் அந்த வழக்கு இருக்கின்ற காரணத்தால் அதனுடைய நடைமுறைகளை இந்த அரசு எவ்வாறு செயலாற்றிக் கொண்டிருக்கிறது என்பதை நான் உங்களுக்குச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. நீதியை மதிக்கின்ற நீதித் தேவதையாக நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் இருக்கின்ற காரணத்தாலே (மேசையைத் தட்டும் ஒலி) அது நீதிமன்றத்தின் நடைமுறையில் உள்ளே செல்லுவது சட்ட விதிகளுக்கு புறம்பானது என்ற காரணத்தாலே இன்றைக்கு நீதிக்காக நாம் காத்து இருக்கின்றோம். நிச்சயம் தர்மத்தின்

வாழ்வு தன்னை சூது கவ்வும், தர்மமே வெல்லும் என்பதை இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் காலத்தில் (மேசையைத் தட்டும் ஒலி) காவேரிப் பிரச்சினையில் நிரூபிக்கப் படப்போகிறது என்பதை இந்த நேரத்தில் நான்சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதற்குப் பின்னாலே கிருஷ்ணா நதி நீர்த்திட்டம். இன்றைக்கு கிருஷ்ணா நதி நீர்த்திட்டத்தை சென்னைக்கு கொண்டு வருகின்ற ஒரு பாங்காக இன்றைக்கு பல்வேறு முனைப்பான பணிகள் இந்தத் துறையில் நடக்கின்றது என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். சென்னைக்கு குடிநீர் தருகின்ற இந்த திட்டம் என்பது நம்முடைய ஒப்பற்றத் தலைவர் புரட்சித் தலைவர் அவர்கள் காலத்தில் போடப்பட்டு இருந்தாலும் கூட இன்றைக்கு ஆந்திர மாநிலமும், நம்முடைய தமிழ் மாநிலமும் ஒன்றாக இணைந்து அங்கே தெலுங்கு கங்கைத் திட்டம் என்றும், இங்கே கிருஷ்ணா நதித்நீர்த் திட்டம் என்றும் இன்றைக்கு நாம் செயலாற்றிக் கொண்டு இருக்கின் றோம். இன்றைக்கு நம்முடைய பணிகளை முறைப்படுத்தி முனைப்பாக செயலாற்றுவதற்காக சென்ற ஆண்டுக் கொடுத்த தொகை 9 கோடி ரூபாய். இந்து ஆண்டு நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் 26 கோடி ரூபாய் இன்றைக்கு வழங்கியிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ளக்கடமைப் பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

1993 ஆம் ஆண்டுக்குள் கிருஷ்ணா நதித்நீர் திட்டம் இங்கே வந்து ஆகவேண்டும் என்ற முனைப்போடு எங்களுக்கு உத்திர விட்டு இருக்கிறார்கள். அதற்கான ஆயத்தப் பணிகளை இன்றைக்கு பொதுப்பணித் துறை முனைப்போடு செய்து கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதற்குப் பின்னாலே மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளை திருப்பி விடுகின்ற திட்டம். இன்றைக்கு முக்கிய பிரச்சினையாக கேரளாவில் வீணாகிக் கொண்டு இருக்கின்ற, கடலில் கலக்கின்ற தண்ணீரை எல்லாம் தமிழ்நாட்டுக்கு தந்து ஆகவேண் டும்என்ற கோரிக்கையை பல ஆண்டுகளாக இங்கே வற்புறுத்தப் பட்டு வருகிறது என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லி யாகவேண்டும். இன்றைக்கு அந்த பிரச்சினைகளை எடுத்துக் கொண்டு இருக்கின்ற நேரத்தில் நம்முடைய கடந்த கால நிகழ்ச் சிகளை நாம் சிந்தித்துப் பார்த்தால் அதற்கு நாம் முக்கியத்துவம் கொடுக்க தவறி விட்டோமோ என்று தான் எண்ணத் தோன்று கிறது. அதற்காக தான் இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் இந்தக் திட்டத்தில் மிகவும் முனைப்பாக இருக்கிறார்கள். மேற்கு நோக்கிப் பாய் கின்ற ஆறுகளில் பம்பா, அச்சன் கோவில்ஆறு திட்டத்தை வைப



நதிவரை நீட்டி அதன் மூலம் தென் மாவட்டங்களுக்கு இன்றைக்கு அந்த வீணாகிக்கொண்டிருக்கின்ற தண்ணீரை குடிநீருக்காக பயன்படுத்துகின்ற ஒரு திட்டமாக இன்றைக்கு கேரள அரசுடன் பேச்சு வார்த்தை நடத்த வேண்டுமென்ற அந்த முனைபபோடு அவர்கள் இன்றைக்கு இருக்கிறார்கள். ஏற்கனவே கூட நம் முடைய மத்தியில் இருக்கின்ற 'நேஷனல் வாட்டர் டெவலப் மெண்டு ஏஜென்சி' என்கின்ற நிறுவனம் அது சம்பந்தமான ஆய்வுகளை நடத்தி அதற்குப் பின்னாலே இன்றைக்கு மத்திய அரசினுடைய செயற்குறிப்பிலே அந்த அறிக்கை இருக்கிறது என்பதை அதை முனைப்போடு நிறைவேற்ற வேண்டுமென்ற வேகத்தோடு இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில்தான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதற்குப் பின்னாலே கங்கை காவிரி இணைப்பு. ''வங்கக் தில் ஓடிவரும் நீரின் மிகையால் மையத்து நாடுகளில் பயிர் செய்கு வோம்'' என்று அன்றைக்கு பாரதியார் பாடினார். ஆகவே, வங்கத்தில் ஓடுகின்ற நதியை இன்றைக்கு நம்முடைய பகுதிக்குக் கொண்டு வருகின்ற திட்டமாக இந்த கங்கை காவேரி இணைப் பினைச் செயலாற்ற வேண்டுமென்ற முனைப்போடு இன்றைக்கு தம்முடைய தமிழகத்தினுடைய முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் இருக்கின்றார்கள். இருந்தாலும் இந்தத் திட்டங்கள் பல்வேறு மாநிலங்களை இணைக்கின்ற திட்டமாக இருக்கின்ற காரணத்தால் பல்வேறு மாநிலங்களின் ஒப்புதலோடு நிறைவேற்ற வேண்டிய திட்டமாக இருக்கின்ற காரணத்தால் இந்தத் திட்டத்தை நிறைவேற்றுகின்ற முழு பொறுப்பும் மத்திய அரசை சார்ந்தது ஆகும் என்பதால் இந்தத் திட்டத்தை நாம் வலியுறுத்துவதற்காக நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஏற்கனவே நம்முடைய பிரதம அமைச்சரை சந்தித்த நேரத்திலும் அதற்குப் பின்னாலே என்னை அங்கே டெல்லிக்கு அனுப்பி நம்முடைய நீர்வளத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. வி. சி. சுக்லா அவர்களை நேரில் சந்தித்தும் வலியுறுத்தும்படியும் பணித்தார்கள். அதைப்போன்று அன்றைக்கு நடந்த, நமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துக் கொண்ட அந்த பாசன அமைச்சர் தலைமையில் நடந்த அந்த மாநாட்டிலே மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய அறிவுரையை ஏற்று அன்றைக்கு நான் கலந்து கொண்டு இந்த திட்டங்களை உடனடியாக நிறைவேற்றுவதற்கு நீங்கள் முனைப் போடு செயலாற்ற வேண்டுமென்று அன்றைக்கு மத்திய அரசை நாங்கள் கேட்டுக்கொண்டு இருக்கிறோம் என்பதை இந்த நேரத் தில் நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இது தொடர்பான நடவடிக்கை நம்முடைய தமிழக அரசு தொடர்ந்து எடுக்கும். நம்முடைய மாண்பமிகு புரட்சித் தலைவி அவர்கள் அதை தொடர்ந்து வலியுறுத்துவார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு நதிகளை எல்லாம் தேசியமயமாக்குகின்ற ஒரு பிரச்சினையை நம் நாட்டில் நாம் இன்றைக்கு விவாதித்துக் கொண்டு இருக்கின்றோம். மாநிலங்களுக்கு இடையே பிரச்சினை கள் என்று வருகின்றபோது இன்றைக்கு 'இன்டர்ஸ்டேட் வாட்டர் டிஸ்பியூட் ஆக்ட்' இருந்தாலும் கூட அவைகளை எல்லாம் மதிக் கின்ற உணர்வு இல்லாத ஒரு மாநிலமாக நம்முடைய அண்டை மாநிலமான கர்நாடகம் நடந்து கொண்டு இருப்பதை நாம் கண் கூடாக காண முடிகின்றது. ஆகவே எத்தனையோ சட்டங்களைப் போட்டாலும் அதற்கு மாற்று வழியாக இன்றைக்கு சட்டத்திலே ஓட்டை இருந்தாலும் இல்லாவிட்டாலும் எதேச்சதிகாரமாக இன்றைக்கு கர்நாடக அரசு போன்ற மாநில அரசுகள் மனிதாபிமானமற்ற முறையிலே சில பிரச்சினைகளிலே ஈடுபட்டுக்கொண்டு இருக்கின்ற நேரத்திலே நதிகளை எல்லாம் தேசியமயமாக்கி விட்டால் அந்த நதி நீர் பிரச்சினைகளை தீர்ப் பதற்கு ஏன் முடியாது என்ற உணர்வு இன்றைக்கு நம்மிடத்திலே வந்திருக்கிறது.

பிற்பகல் 8.05

நதிகள் தேசிய மயமாக்கப்பட வேண்டுமென்ற உணர்வை நாம் இன்றைக்குப் பெற்றிருக்கின்றோம். அந்த அளவிலே இன்றைக்கு நம்முடைய ஜீவாதார பிரச்சினையாக இருக்கின்ற காவிரிப் பிரச்சினை, கிருஷ்ணா குடிநீர், கங்கை காவிரி இணைப்பு, பம்பா அச்சன்கோயில் மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளைத் திருப்பிவிடுகின்ற திட்டம் இப்படி பல்வேறு திட்டங் களை இந்த அரசு முனைப்போடு இன்றைக்கு கையிலே எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுப்பணித்துறையை எடுத்துக்கொள்கின்ற நேரத்திலே, இன்றைக்கு நம்முடைய மாநிலத்திற்கென்று, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கோரிக்கைகளை வைத்திருக் கின்றார்கள். கோரிக்கைகளைப் பார்க்கின்ற நேரத்திலே எத்தனை கோடி ரூபாய் கொடுத்தாலும் அத்தனை திட்டங்களை யும் உடனே நிறைவேற்றவேண்டுமென்று நினைக்கிறார்கள். நாம் சுதந்திரம் அடைந்த பிறகு இத்தனை ஆண்டுக்காலம் என்னென்ன திட்டங்கள் நிறைவேற்றப்பட்டதோ அதைப்போல மாண்புமிகு புரட்சித் தலைவியினுடைய காலத்திலே இவைகளையெல்லாம் நிறைவேற்றவேண்டுமென்ற உணர்வு இன்றைக்கு நம்முடைய மாமன்ற உறுப்பினர்களுக்கு வந்திருக்கின்றது. அவர்களுடைய கோரிக்கைகள் நியாயத்தின் அடிப்படையிலே உண்மை என்றாலும் கூட, அவைகள் தேவையென்றாலும்கூட இருக்கின்ற நிதியாதா ரங்களை வைத்து, வந்திருக்கின்ற 100 நாட்களிலே இந்தத் துறை யின் மூலம் பணிகளை சிறப்பாகச் செய்வதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் அதிகமான தொகையினை இங்கே தந்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு சிலமுக்கிய-



திட்டங்களாக நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்க ளுடைய சார்பிலே, நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய சார்பிலே, அவர்களுடைய மேலான ஒப்புதலோடு இங்கே நான் அறிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஏ.எஸ். பொன் னம்மாள் அவர்கள், நமது மாண்புமிகு புரட்சித் தலைவி அவர் களிடத்திலே. தான் பேசுகின்ற நேரத்திலே, இன்றைக்கும் எங்களுக்கெல்லாம் வழிகாட்டியாக இருக்கின்ற மூத்த உறுப்பினர் அவர்கள், நமது மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய அன்பைப் பெற்றவர் என்பதை, அவர் கேட்ட மாத்திரத்திலே அந்த சிறுமலைத் திட்டத்தை இன்றைக்கு புரட்சித் தலைவி அவர்கள் நிறைவேற்றித் தந்திருப்பதை, (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அவையிலேயே அறிவிக்கவேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டு இருக் கின்றார்கள். ஆக, இன்றைக்கு மூத்த உறுப்பினரான திருமதி பொன்னம்மாள் அவர்களுடைய உணர்வு எங்களது மாண்புமிகு புரட்சித் தலைவியால் மதிக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் பெருமையோடு சொல்லிக்கொள்வதிலே பெருமை அடைகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

காங்கிரஸ் பேரியக்கத்திலே பல தியாகங்களைச் செய்தாலும் கூட இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவியின் காலத்திலே தான் பல்வேறு திட்டங்களுக்கான அனுமதியை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திருமதி பொன்னம்மாள் அவர்கள் பெற்றுக்கொண்டு இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

நீர்ப்பாசனத் திட்டங்களுக்காக பல்வேறு திட்டங்களை இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் இங்கே தந்திருக்கின்றார்கள். நம்முடைய அருமை மாமன்ற உறுப்பினர் சத்தியமூர்த்தி அவர்களும், சோ. பாலகிருஷ்ணன் அவர்களும் மலட்டாறு திட்டத்தை நிறைவேற்றியது குறித்து நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவிக்கு நன்றி தெரிவித்துப் பேசினார்கள். மிகவும் வறட்சியான மாவட்டமான இராமநாத புரம் மாவட்டத்தை, மிகவும் பின்தங்கிய மாவட்டமான இராம நாதபுரம் மாவட்டத்தை தத்து எடுத்துக்கொள்கிற நிகழ்ச்சியான அன்றைக்குக்கூட அதிகாரிகள் பெனிஃபிட்-காஸ்ட் ரேஷியோ என்று சொல்லப்படுகின்ற அந்த அளவிற்குக்கூட அந்த திட்டத் திலே வாய்ப்பு இல்லை என்று சொன்னாலும்கூட, மிகவும் பின் தங்கிய பகுதிகளுக்கு இதையெல்லாம் நாம் பார்க்கக்கூடாது; இது நடைமுறைக்கு சரி வராது என்று சொல்லி, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் உடனடியாக மலட்டாறு திட்டத்தை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று அன்றைக்கு உத்தரவிட்டார்கள்.

17 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில், இந்த ஆண்டு அந்தத் திட்டம் நடைமுறைக்குக் கொண்டுவரப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

இதைப்போல, 16 அணைகளுக்கான வேலைகள் இன்றைக்கு நடந்துகொண்டிருக்கின்றன. அவைகளையெல்லாம் நான் படித்துக் கொண்டு போகாமல், காலத்தின் அருமை கருதி மொத்தமாக சொல்லலாம் என்று நினைக்கிறேன். அந்த 16 அணைகளுக்கும் ஏற்கெனவே நடைபெறுகின்ற பாசனத் திட்டங்களுக்காக இந்த ஆண்டு ஏறத்தாழ 20 கோடியே 87 இலட்ச ரூபாயை நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஒதுக்கி இருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

பெரியார் அணையை மேம்படுத்தவேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் பேசினார்கள். நம்முடைய நீர்த் தேக்கத்தினுடைய அளவு 132 அடிதான் வைத்துக்கொள்ள முடியும் என்று, கேரளாவிற்கும் நமக்கும் இருக்கின்ற பிரச்சினையை வைத்து இன்றைக்கு கேரள அரசு 132 அடிக்கு மேல் தண்ணீரைத் தேக்கக்கூடாது என்ற கட்டுப்பாட்டினை அவர்கள் சொல்கின்றார்கள். இன்றைக்கு நம்முடைய அணையை பலப் படுத்தி ஏறத்தாழ 11 கோடி ரூபாய் செலவிலே பெரியார் அணையை மேம்படுத்தி ஏறத்தாழ 152 அடி தண்ணீரைத் தேக்கு வதற்கான திட்டத்தை நாம் செயலாக்கி, இந்த ஆண்டுகூட அதற்காக நாம் ஒரு கோடி ரூபாயை மேலும் ஒதுக்கி, 152 அடி அளவில் தண்ணீரைத் தேக்குகின்ற அளவிற்கு, நாம் நம்முடைய பணியைச் செய்து முடித்திருக்கின்றோம்; அந்தப் பணி முடியும் கட்டத்திலே இருக்கிறது என்பதை நான் தெரிவித் துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி). ஆனால் அணையிலே தண்ணீரைத் தேக்குகின்ற நேரத்திலே, கேரள மாநிலத்தோடு நாம் பேசி, எந்த அளவிற்கு நாம் தண்ணீரைத் தேக்க முடியும் என்ற அந்தப் பேச்சு வார்த்தையின் அடிப்படையிலே தண்ணீரைத் தேக்கலாம் என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 8.10

கடல் அரிப்பைத் தடுக்க வேண்டுமென்று நமது அருமை மாண்புமிகு அமைச்சர் திரு. மதுசூதனன் அவர்கள்கூட பல பிரச்சினைகளை நேற்றைக்குக்கூடச் சொன்னார்கள். அவர்கள் கூட கடலரிப்பு எண்ணூர் பகுதியிலே இருக்கிறது என்று அடிக்கடி புரட்சித் தலைவி அவர்களிடத்திலே கோரிக்கை விடுத்துக் கொண்டிருக்கிறார்கள். கடலரிப்பைத் தடுக்கின்ற விதத்திலே, கடலரிப்பைத் தடுக்கின்ற திட்டத்திற்கு 1 கோடியே 87 இலட்சம் ரூபாயைப் புரட்சித் தலைவி அவர்கள் வழங்கியிருக்கிறார்கள்.



ஏரிகளையெல்லாம் பலப்படுத்த வேண்டுமென்று சொல்லியிருக் கிறார்கள். தமிழகத்திலே ஏரிகள் ஏறத்தாழ 39,000-க்கு மேல் இருக்கின்றன. 9,000 ஏரிகள் பொதுப் பணித் துறையிலும், 23,500 ஏரிகளுக்கு மேலே பஞ்சாயத்து யூனியன் என்று சொல்லுகின்ற சிறுபாசன ஏரிகளும், 8,000 ஏரிகள் முன்னாள் ஜமீன் கண்மாய்களும் ஆக, பல்வேறு ஏரிகள் இருக் கின்றன. இவைகளையெல்லாம் சீர்படுத்துவதற்கு ஒரு தொலை நோக்குத் திட்டத்தோடு 400 கோடி ரூபாய் அளவிலே ஒரு திட்டத்தை இந்தப் புரட்சித் தலைவியினுடைய, நம்முடைய ஒப்பற்ற தலைவியினுடைய அரசு கையிலே வைத்திருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதற்குப் பின்னால் இன்றைக்கு நம்முடைய ஏரிகளை மேம் படுத்துவதற்காக 15 கோடி ரூபாயை இந்த ஆண்டு புரட்சித் தலைவி அவர்கள் ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏரிகளைத் தூர் வாருவதற்கு அதிகபட்சமாக 2 கோடியே 63 இலட்சமும், ஜமீன் கண்மாய்களைச் சீரமைப்பதற்காக 1 கோடியே 90 இலட்சமும், பாசன ஆதாரங்களைப் பழுது பார்ப்ப தற்காக 3½ கோடி ரூபாயும், பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்திற்காக, பாசன மேம்பாட்டுத் திட்டத்திற்காக 80 இலட்சம் ரூபாயும் ஒதுக்கியிருக்கிறார்கள்.

நம்முடைய மாமன்ற உறுப்பினர் திரு. பன்னீர்செல்வம் அவர்கள் வீடூர் அணையைப் பற்றிச் சொன்னார்கள். இந்த ஆண்டு வீடூர் அணை நீர்த் தேக்கத்திற்கு 3 கோடி ரூபாயைப் புரட்சித் தலைவி அவர்கள் ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

தேசிய நீர் மேலாண்மைத் திட்டம் என்ற ஒரு திட்டம் இருக்கிறது. National Water Management Project என்ற தேசிய நீர் மேலாண்மைத் திட்டத்தின் கீழ் பழைய பாசனத்தை மேம்படுத்துவதற்காக ஏற்கெனவே இருக்கின்ற அணை களைச் சீரமைப்பதற்காக, அந்தக் கால்வாய் களைச் சீரமைப்பதற்காக, அந்தக் கடைமடைப் பகுதி களிலெல்லாம் தண்ணீர் வர வேண்டும் என்பதற்காக இன்றைக்கு பல்வேறு கோரிக்கைகளை நம்முடைய நண்டர்கள் இங்கே வைத் தார்கள். அந்தத் திட்டங்களை நிறைவேற்றும் முகத்தான் நம்முடைய புரட்சித் தலைவி அவர்களின் அரசு இந்த ஆண்டு அந்தப் பணியின் கீழ் 52 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

பெரியார் மேம்பாட்டுத் திட்டத்தைப் பற்றிச் சொல்லுகின்ற நேரத்திலே இணைப்புக் கால்வாயை நாம் நினைத்துப் பார்க்காமல் இருக்க முடியாது. அந்த அளவிற்கு இணைப்புக் கால்வாய்த் திட்டம் என்பது பல ஆயிரக்கணக்கான ஏக்கர்களுக்குப் பாசன வசதி தருகிற திட்டமாக இருக்கிறது. அந்தத் திட்டம் இன்றைக்கு 25 கோடி ரூபாய் செலவிலே செயலாற்றிக் கொண்டிருக்கிறது என்பதையும், அதற்காக இந்த ஆண்டு அதிகமான நிதி ஒதுக்கீட்டையும் புரட்சித்தலைவி அவர்கள் தந்திருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் பாண்டியம்மாள் அவர்கள் ஏற்கெனவே சட்டமன்றத்திலே கேட்ட கோரிக்கைக்கு இணங்க நம்முடைய புரட்சித் தலைவி அன்றைக்கே ஒப்புதல் தந்தார்கள். இன்றைக்கு நம்முடைய புரட்சித் தலைவியினுடைய தாய் உள்ளத்தைப் பார்த்து நம்முடைய மாமன்ற உறுப்பினர்களெல்லாம் ஆங்காங்கே கோரிக்கைகளைக் கொடுத்து, உடனடியாக அந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றுகின்ற முகத்தான் மாண்புமிகு உறுப்பினர்களின் முகத்தில் மகிழ்ச்சியைப் பார்க்க முடிகிறது. அதன்வாயிலாக, 58 கண்மாய்களுக்குக் கால்வாய் வெட்டுகின்ற திட்டத்தை இந்த ஆண்டு இல்லாவிட்டாலும் அடுத்த ஆண்டு செய்யவேண்டுமென்று சொல்லியிருந்தார்கள். ஆகவே, அடுத்த ஆண்டு இந்தத் திட்டத்திலே இந்த 58 கண்மாய்களுக்குக் கால்வாய் வெட்டுகின்ற திட்டத்தை செயலாற்றுவதற்கான அந்தத் திட்டத்தைப் புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்திருக்கிறார்கள் என்பதை இன்றைக்கு நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்தத் திட்டத்தினுடைய மதிப்பு ஏறத்தாழ 13 கோடியே 30 இலட்சம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுப்பணித் துறையிலே பாசனங்கள் தவிர, கட்டிடங்கள், மற்றும் பல்வேறுக் கட்டிடங்களைப் பழுது பார்த்தல், மருத்துவ மனைகளைப் பழுது பார்த்தல், கல்லூரி விடுதிகளைப் பழுது பார்த்தல், கல்லூரிக் கட்டிடங்களைப் பழுது பார்த்தல், பல்வேறு நலப் பணிகளைப் பல்வேறு பொதுப் பணிகளை இந்தப் பொதுப் பணித்துறையின் பிரிவிலே இருக்கின்ற கட்டிடப் பிரிவு இன்றைக்குச் செயலாற்றிக் கொண்டிருக்கிறது. நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் நம்முடைய மாணவ நண்பர்கள் மீது அக்கறை கொண்டு மாணவர்கள் விடுதிகளிலேயும், மாணவியர் தங்கிப் படிக்கின்ற விடுதிகளிலேயும், கல்லூரிகளிலேயும் குறைபாடு இருக்கக் கூடாது என்று எனக்கு புரட்சித் தலைவி அவர்கள் இட்ட உத்தரவின்பேரில் உடனடியாக நான் 2, 3 கல்லூரிகளுக்குச் சென்று, பார்வையிட்டேன். அன்றைக்கு பிரசிடென்சி கல்லூரியிலே நாங்கள் சென்று பார்த்தபோது மாணவியர் விடுதியிலே காம்பவுண்ட்

கா...





பிற்பகல் 8-15

பல்வேறு பணிகளை பழுதுபார்க்கிற முகத்தான், புரட்சித் தலைவி அவர்களின் சார்பிலே கட்டிடத்துறை பல்வேறு பொதுப் பணிகளை எடுத்துச் செயலாக்கிக் கொண்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

சென்னையிலே மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் 6,32,00,000 ரூபாய் செலவிலே கட்டப்பட இருக்கிறது. அதுபோல, சிதம்பரனார் மாவட்டத்திலே மாவட்ட ஆட்சியர் அலுவலகம் 2,81,00,000 ரூபாய் செலவில் கட்டப்படவிருக்கிறது. தமிழ்நாடு முழுவதும், ஆரம்பச் சுகாதார நிலையத்தின்கீழ் வந்தாலும்கூட பொதுப்பணித் துறைதான் அதைச் செய்கிறது. நம்முடைய மாண்புமிகு சுகாதார அமைச்சர் அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்; இருந்தாலும், 157 சுகாதார மையங்கள் இன்றைக்கு 10 கோடி ரூபாய் அளவிலே—ஏனென்றால், நான் என்னுடைய செயலாக்கப் பணிகளைச் சொல்லியாகவேண்டும்—திட்டங்கள் எந்தப் பக்கத்திலே இருந்து வந்தாலும்கூட; பண ஒதுக்கீடு எந்தப் பக்கத்திலே இருந்து வந்தாலும்கூட, அந்தக் கட்டிடங்களையெல்லாம் நாங்கள் செய்து முடிக்கிறோம் என்பதை நான் இங்கே சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அண்ணா மாவட்டம்-திண்டுக்கல்லிலே அங்கு அலுவலர்கள் குடியிருப்பு ரூ. 3,68,00,000 செலவிலே கட்டவிருக்கிறோம். சென்னையில் மருத்துவ மனைகள் விபத்து மற்றும் அவசரச் சிகிச்சைப் பிரிவு ரூ. 4,25,00,000 செலவிலே, நம்முடைய புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு இன்றைக்கு ஒதுக்கி இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி). புதுக்கோட்டையிலே, கால்நடைப் பண்ணைகளுக்காக ரூ. 1,15,00,000 ஒதுக்கியிருக்கிறார்கள். இதைப்போல, பல்வேறு திட்டங்களை நம்முடைய புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு காலத்திலே அறிவித்திருக்கிறோம்.

பொதுப்பணித் துறையை எடுத்துச் சொல்கிற நேரத்திலே, அதற்கு அடுத்ததாக நிலத்தடி நீர் துறை இருக்கிறது. கட்டிடப் பிரிவுக்கு அடுத்து, சிறு பாசனப் பிரிவுக்கு அடுத்து, நிலத்தடி நீர் பிரிவு, நிலத்தடி நீரை ஆராய்ந்து, எந்த அளவிலே நம்முடைய பாசனத் திட்டங்களை நிறைவேற்ற முடியுமோ, அந்த அளவு திட்ட நோக்கோடு பணியாற்றக்கூடிய துறைதான் நிலத்தடி நீர் துறை. நம்முடைய தமிழகத்தைப் பொறுத்த மட்டிலே, நிலத்தடி நீர் வெகுவாகக் குறைந்திருக்கிறது என்பதை நாம் நன்றாக அறிவோம். ஆகவே, அதற்கான முனைப்பான திட்டங்களைத் தீட்டி, இந்த நிலத்தடி நீர் துறையின் மூலம் பல்வேறு பாசனத் திட்டங்களைக்கொண்டு வருவதற்காக பல்வேறு ஆய்வு பணிகளை நம்முடைய நிலத்தடி நீர்

முறை செயலாற்றிக் கொண்டு வருகிறது; செய்து வருகிறது
என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்
பட்டிருக்கிறேன். அதற்கு அடுத்தபடியாக, 'இன்வெஸ்டிகேஷன்'
என்று சொல்லக்கூடிய ஆய்வுப் பிரிவு, இன்றைக்கு என்னென்ன
திட்டங்களை இந்த நாட்டிலே எடுக்கலாம்; எவற்றை நம்மால்
முறைப்படி செயல்படுத்த முடியும்; இந்த திட்டங்கள்
எல்லாம் 'Benefit Cost ratio', என்று சொல்கிற அளவுக்கு உகந்தது
தானா; நாம் செலவழிக்கின்ற தொகை, நாம் போடுகின்ற
திட்டங்களின் மூலம் அதைப் பயன்படுத்துகிற மக்களுக்கு எந்த
அளவுக்குப் போய்ச் சேர்கிறது; ஆகியவற்றின் அடிப்படையிலே
செயலாற்றுகிற துறைதான், பாசனப் பிரிவினுடைய 'இன்வெஸ்டி
கேஷன் செக்ஷன், என்று சொல்கிற ஆராய்ச்சி செய்கிற அந்தப்
பிரிவு, அந்தப் பிரிவின் சார்பிலே, இன்றைக்கு ஏறத்தாழ 76
பாசனத் திட்டங்களை ஆய்விலே எடுத்து, ஏறத்தாழ 400 கோடி
ரூபாய் அளவிற்குரிய திட்டங்கள். இந்தப் பிரிவால் ஆய்வு
செய்யப்பட்டிருக்கின்றன என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்
கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நீங்கள் கூறியிருக்கிற பல்வேறு கருத்துக்களை நான் கவனித்
தேன். அவற்றையெல்லாம் இருக்கிற நிதியாதாரங்களைப்
பொறுத்து, வருகிற ஆண்டுகளிலே படிப்படியாக நம்முடைய
புரட்சிக் தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியில் நிறை
வேற்றித் தரப்படும் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்
கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

அடுத்ததாக. நெடுஞ்சாலைத் துறை. இங்கே பேசிய
நண்பர்கள் எல்லாம் நெடுஞ்சாலைத் துறையைப் பற்றி
சொன்னார்கள். சாலைகள் எல்லாம் மிகவும் மோசமாக
இருக்கின்றன; இந்த அரசு என்ன செய்து கொண்டிருக்கிறது
என்றெல்லாம் கேட்டார்கள். நான்காண்டு காலம் இந்த அரசு
இல்லாத காரணத்தினாலேதான் சாலைகள் மோசமாக இருக்
கின்றன என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக்
கடமைப்பட்டிருக்கிறேன். (மேசைதைத் தட்டும் ஒலி) புரட்சித்
தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் நம்மைவிட்டுப் பிரிந்த நேரத்
திலே, நம்முடைய அரசு இல்லாத காரணத்தினாலே, அந்த
வள்ளலின் வாரிசாக நம்முடைய புரட்கித் தலைவி அலர்கள்
இன்றைக்குப் பொறுப்பேற்றிருக்கிறார்கள். அவர்கள் தமிழ
கத்தை எத்தனை முறை சுற்றி வந்தார்கள் என்பதை என்னைப்
போன்ற தொண்டர்கள் எல்லாம் நன்றாக அறிவோம். நம்முடைய
புரட்சித் தலைவர் அவர்களின் மறைவுக்குப் பின்னாலே,
நம்முடைய தானைத் தலைவி அவர்கள் ஒன்று சொன்னார்கள்.
ஏதோ எடுத்த எடுப்பிலே முதலமைச்சராக வந்துவிட்டதைப்
போல சிலர் பேசுகிறார்கள் என்று நான் சொல்லக் கடமைப்
பட்டிருக்கின்றேன். அவர்கள் எத்தனை தடவை புரட்சித்
தலைவர் அவர்கள் மறைவுக்குப் பின்னாலேயும், புரட்சித்
தலைவர் இருந்த காலத்திலேயும் அந்த சாயல்குடிப் பகுதியிலே



இருக்கிற சாலைகள் எல்லாம் எவ்வாறு இருந்தன என்பதை.
புரட்சித் தலைவி அவர்கள் கொள்கைப் பரப்புச் செயலாளராக
இருந்த நேரத்திலே அங்கு வந்து பார்த்தார்கள். அதற்குப்
பின்னாலே, தமிழகத்தை-இயக்கம் பிரிந்த நேரத்திலே-சுற்றிச்
சுற்றி வந்தார்கள். அதற்குப் பின்னாலே பல்வேறு தேர்தல்
களிலே வந்தார்கள். அன்றைக்கு 'சேவல்' சின்னத்தில் எங்களைப்
போன்றவர்கள் நிற்கிற நேரத்திலே எங்கள் வெற்றிக்காகப் பாடு
பட வந்தார்கள். அதற்குப் பின்னாலே நாடாளுமன்ற
தேர்தலிலே சுற்றி வந்தார்கள். அதற்குப் பின்னாலே நம்முடைய
தலைவி சட்டமன்றத் தேர்தலுக்கும் வந்தார்கள். ஆக தமிழ
கத்தை இவ்வளவு அதிகமாகச் சுற்றிய தலைவர்கள் வேறு யாரும்
இருக்க முடியாது என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்
கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி]
மற்ற தலைவர்கள் எல்லாம் வந்திருக்கிறார்கள்; வருகின்ற வழி
யிலே ஒன்றிரண்டு ஊர்களில் பேசிவிட்டுச் சென்று விடுவார்கள்.
ஏனென்றால், அவர்கள் செல்கிற நேரத்திலே, அதிகமான ஊர்
களுக்குப் போனால். அங்கே கூட்டம் இருக்காது என்கின்ற
காரணத்தினாலே, ஒன்றிரண்டு ஊர்களுக்குத்தான் வருவார்கள்.
(மேசையைத் தட்டும் ஒலி). ஆனால், நம்முடைய புரட்சித்
தலைவி அவர்கள் எந்த இடத்திற்குச் சென்றாலும், குற்றா
மங்கலத்துக்குச் சென்றாலும் அங்கே இலட்சக்கணக்கான மக்கள்
கூடுகின்ற காட்சியை கண்ட காரணத்தினாலும், இவ்வாறு
சுற்றிச் சுழன்று வந்த காரணத்தினாலும், அந்த நிலைமைகளை
யெல்லாம் பார்த்து, ஆட்சிக்குவந்த உடனேயே ஒரு திட்டத்தை
அறிவித்தார்கள். தமிழ்நாட்டினுடைய சாலைகள் மிகவும்
மோசமாக இருக்கின்றன. இந்தச் சாலைகளையெல்லாம் நாம்
உடனடியாக முனைப்பாகப் பழுது பார்த்தாக வேண்டும் என்று
எங்களை அழைத்து உத்தரவிட்டார்கள்.

பிற்பகல் 8-20

150 கோடி ரூபாய்க்கு ஒரு சிறப்புத் திட்டத்தை நீங்கள்
தயார் செய்யுங்கள் என்று அன்றைக்கு உத்தரவிட்டார்கள்.
அவர்களுடைய உத்தரவின் அடிப்படையிலே இன்றைக்கு ஐந்து
ஆண்டு காலத்திலே யதார்த்தமாக ஒதுக்குகின்ற நிதி ஒதுக்கீடு
களைத் தவிர, சிறப்புத் திட்டமாக, மிகவும் மோசமாக இருக்
கின்ற சாலைகளை எல்லாம் எடுத்து சீர்செய்ய வேணடுமென்ற
நோக்கத்தோடு இன்றைக்கு 150 கோடி ரூபாய் ஐந்து ஆண்டு
காலத்திலே நான் தருகின்றேன், உடனடியாக அந்தச் சாலைகளை
செப்பனிட்டு நம்முடைய காலத்திலே நிச்சயமாக பஸ் செல்லு
கின்ற அத்தனை ஊர்களிலும் உள்ள சாலைகள் மோசமாக
இருக்கக் கூடாது என்ற உத்தரவு பிறப்பித்ததன் காரணத்தாலே
உடனடியாக நம்முடைய நெடுஞ்சாலைத் துறைப் பொறியாளர்
கள் மிகுந்த முனைப்போடு செயலாற்றி அந்த திட்டத்தினை
இந்த ஆண்டிலேயே கொண்டு வந்திருக்கின்றார்கள். அதற்கு
முதற்கட்டமாக, இன்றைக்கு 20 கோடி ரூபாய்க்கு ஆறு மாத

காலத்திற்கு ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தத் திட்டத்தின் மூலம் நம்முடைய மாமன்ற உறுப்பினர்கள் வைத்த கோரிக்கைகள், ஆதங்கங்கள், தம்முடைய தொகுதியிலே இருககின்ற நிலைமைகளை எல்லாம், சாலைகளைப் பற்றிய பிரச்சினைகளையெல்லாம், இந்த ஐந்து ஆண்டு காலம் என்று சொன்னார்கள்—நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் காலத்திலே மூன்று ஆண்டு காலத்திலேயே மிக முக்கியமான சாலைகள் அத்தனையையும் பஸ் செல்லுகின்ற அத்தனை சாலைகளையும் மேம்படுத்தித் தருவோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஆண்டிலே மிகத் தேவையான அளவிற்கு இன்றைக்கு நிதியைத் தந்திருக்கின்றார்கள். போன வருடம் தந்ததைவிட மாவட்டச் சாலைகளுக்கு முதலிலே, ஏற்கனவே 57 கோடி ரூபாய் தந்திருக்கின்றார். இந்த ஆண்டு 97 கோடி ரூபாய் தந்திருக்கின்றார். (மேசையைத் தட்டும் ஒலி). ஆகவே யதார்த்தமாக ஒதுக்கிய நிதியைக் காட்டிலும் 34 கோடி ரூபாய் அதிகமாகத் தந்து அதற்குப் பின்னாலே 20 கோடி ரூபாய் தந்திருக்கின்றார்கள். அது போக, கிராமப்புறச் சாலைகள் rural ro:ds. அதற்கு பின்னாலே இன்னும் பல்வேறு ghat roads என்று சொல்கிற மலைப்பகுதிச் சாலைகள். அதற்குப் பின்னாலே சந்தை மையங்கள் என்று சொல்லக்கூடிய Market Centres அவைகளுக்கும் இந்த ஆண்டு 20 கோடி ரூபாயிலே ஒரு பெரிய திட்டத்தை நாம் நிறைவேற்ற இருக்கின்றோம். அதைப் போல, இன்றைக்கு நம்முடைய புரட்சித் தலைவி அவர்களுடைய காலத்தில் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் Tamil Nadu Urban Development Programme (TNUDP) என்ற திட்டத்தின் கீழ் ஏறத்தாழ 30 கோடி ரூபாய்க்குப் பெரிய பெரிய திட்டங்களையெல்லாம் நாம் செய்ய இருக்கின்றோம். அதிலேதான் இன்றைக்கு ராயபுரம் பகுதியிலே 11 கோடி ரூபாய்க்குப் பாலம் கட்ட இருக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி).

மணலி எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை இணைக்கும் சாலைக்கு 2½ கோடி ரூபாயை நாம் ஒதுக்கியிருக்கின்றோம். உள்வட்டச் சாலை வட்டப் பகுதி நீட்டிப்புக்கு 6½ கோடி ரூபாய் தந்திருக்கிறோம்.

Inner Ring Road என்று சொல்லப்படுகின்ற உள்வட்டச் சாலைக்கு ரூபாய் ஏழு கோடியே தொண்ணூற்று ஐந்து இலட்சம் தந்திருக்கின்றார்கள். அதுபோல மதுரை எல்லிஸ் நகர் ரெயில்வே மேம்பாலத்தைத் திரும்பக் கட்டுவதற்காக ஐந்து கோடியே இருபத்தைந்து இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. திருச்சி சாலை ரோட்டையும் கரூர் புறவழிச் சாலையையும் இணைக்கும் சாலைக்கு மூன்று கோடியே ஐம்பது இலட்சம் செலவில் இந்த ஆண்டு திட்டம் ஒன்று மேற்கொள்ளப்படவிருக்கின்றது. திருப்பூரில் குன்னத்தூர் சாலை ரெயில்வே மேம்பாலத்தைத் திரும்பக் கட்டுவதற்காக ஐந்து கோடியே பத்து இலட்சம் இந்த ஆண்டு ஒதுக்கப்பட்டிருக்கிறது. கோவையில் பெரியகடைத்



தெருவில் ரெயில்வே கீழ்ப்பாலத்தை அகலப்படுத்தும் பணி மூன்று கோடி செலவில் இந்த ஆண்டு துவங்கப்பட இருக்கின்றது. கோவையில் உக்கடன் புறவழிச் சாலையை மேம்பாடு செய்வதற்காக மூன்று கோடியே முப்பது இலட்சம் இன்றைக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. தூத்துக்குடி நகரில் பாளையங்கோட்டை சாலையை மேம்பாடு செய்வதற்காக இரண்டு கோடியே முப்பத்தைந்து இலட்சத்திற்கு இன்றைக்கு நிர்வாக ஒப்புதல் வழங்குவதற்காக அனுப்பப்பட்டு இருக்கின்றது. ஏனென்றால், பல்வேறு நண்பர்களை நான் பார்க்கிறேன். நான் உங்களுக்கு ஒன்றை நினைவுபடுத்தியாக வேண்டும். Tamil Nacu Urban Development Programme என்ற திட்டத்தின் கீழே நம்முடைய தமிழ்நாட்டிலே 10 நகரங்களைத்தான் தேர்வு செய்திருக்கிறோம். ஆக, அந்த பத்து நகரங்கள் உள்ளிட்ட ஊர்களை வைத்து நாம் மத்திய அரசின் உதவியோடு திட்டங்களைப் போட்டு நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். இன்னும் பல நகரங்கள், முனைப்பான பெரிய பெரிய நகரங்கள் எல்லாம் இருக்கின்றன. அவைகளையும் இந்தத் திட்டத்திலே சேர்க்க வேண்டுமென்று இன்றைக்கு ஒரு ஆய்வு நடத்திக் கொண்டிருக்கிறோம். நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களிடத்திலே சொல்லி அந்தத் திட்டத்தை எந்த அளவிற்கு நடைமுறைப்படுத்த முடியும் என்று மத்திய அரசோடு கலந்து பேசி, மாண்புமிகு முதல்வர் அவர்களுடன் கலந்து பேசி, மற்ற முக்கியமான நகரங்களுக்கும் அதை நீட்டிக்க எப்படி வழி செய்ய முடியும் என்ற உணர்வோடு அவைகளை எல்லாம் இந்த அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. அப்படி வருகின்ற நேரத்தில் உங்களுடைய கோரிக்கைகள் நிச்சயமாக நிறைவேற்றப்படும். இல்லாவிட்டாலும்கூட, இந்தத் தலைப்பின் கீழ் வருகின்ற நிதியில் செயல்படுத்த முடியாவிட்டாலும்கூட, நம்மிடத்திலே இருக்கின்ற மற்ற நிதி ஆதாரங்களை வைத்து, மற்ற பகுதிகளுக்கு கேட்டிருக்கின்ற பை-பாஸ் சாலைகள் மற்றவைகளை எல்லாம் மிகச் சிறந்த முறையில் நம்முடைய புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் அமைத்துத் தருவோம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கும்பகோணம் மகாமகத்தைப் பற்றிச் சொன்னார்கள். நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய காலத்திலே சிறப்பாக நடைபெறுகின்ற விழாவிற்கு அந்தப் பகுதியிலே இருக்கின்ற சாலைகளையெல்லாம் மேம்படுத்த இருக்கின்றோம் என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொல்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 8-25

தேசிய நெடுஞ்சாலைகளைப் பொறுத்தமட்டில் நான் ஒன்றைச் சொல்லியாகவேண்டும். ஏற்கெனவே நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் மாண்புமிகு பிரதம அமைச்சரைச் சந்திக்கிற நேரத்தில் நம்முடைய தேசிய நெடுஞ்சாலைகளின் தூரங்களை

அதிகப்படுத்த வேண்டும்; நம்முடைய கிழக்குக் கடற்கரைச் சாலை என்று சொல்லப்படுகின்ற 'ஈஸ்ட் கோஸ்ட் ரோடு, என்ற அந்தச் சாலையையும் தேசிய நெடுஞ்சாலையாக மேம்பாடு செய்து அதைத் தேசிய நெடுஞ்சாலைத் திட்டத்தில் சேர்க்க வேண்டுமென்று மிகப் பெரிய கோரிக்கையை அன்றைக்கு நம்முடைய பிரதமரிடத்திலே வலியுறுத்தி இருக்கிறார்கள். அதன் தொடர்பாகத்தான் என்னை டெல்லிக்கு அனுப்பி நம்முடைய சர்ஃபேஸ் ட்ரான்ஸ்போர்ட் மினிஸ்டர் மாண்புமிகு ஜெகதீஷ் டைட்லர் அவர்களைச் சந்திக்கும்படி பணித்தார்கள. அவர்களுடைய ஆணையை ஏற்று நான் ஜெகதீஷ் டைட்லர் அவர்களைச் சந்தித்து அன்றைக்குப் பேசினேன். ஏற்னெவே அவர்கள் 53 கோடி ரூபாய் கடலூர் வரை தந்து இருக்கிறார்கள். கடலூர் வரை தந்திருந்தாலும் போதாது; தேசத்தினுடைய பாதுகாப்புக்கு முக்கியமான பிரச்சினையாக இருக்கின்ற, அந்த நேஷனல் செக்யூரிட்டிக்கு மிகவும் உத்தரவாதமாக இருக்கின்ற அந்தக் கிழக்குக் கடற்கரைச் சாலையை, நம்முடைய நாட்டுக்கு மிகவும் முக்கியமான சாலையாக இருக்கின்றது என்பதைப்பற்றி எல்லாம் புரட்சித் தலைவி அவர்கள் பிரதமர் அவர்களிடத்திலே வலியுறுத்தியதன் அடிப்படையில் அன்றைக்கு நான் பேசி இப்போது ஜெகதீஷ் டைட்லர் அவர்கள் கொள்கை அளவில் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். உங்களுடைய முதல்வரிடத்திலே சொல்லுங்கள், நான் நிச்சயமாக அதை முடித்துத் தருகிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே இங்கே கிழக்குக் கடற்கரைச் சாலையைப் பற்றி நண்பர்கள் பேசினார்கள். கடலூரிலிருந்து கன்னியாகுமாரி வரை ஏறத்தாழ 561 கிலோமீட்டர்கள் பாக்கி இருக்கின்றன. வருகிற நடப்பாண்டில் 53 கோடி ரூபாய் அளவுக்கு நாம் திட்டம் தொடங்கி இருக்கிறோம். சென்னையில் இருந்து கடலூர் வரை 166 கிலோ மீட்டருக்கு 53 கோடி ரூபாய் அளவில் இன்றைக்குத் திட்டம் தொடங்கி வேலைகள் ஆரம்பித்திருக்கின்றன. இது முடிந்தவுடன் அந்தச் சாலையைத் தொடர்ந்து எடுப்பதற்கு மத்திய அரசோடு பேசி அதை வலியுறுத்தி புரட்சித் தலைவியின் பொற்கால ஆட்சியில் அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு முனைப்பான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்னும் பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. இருந்தாலும் அதிகமான பிரச்சினைகளுக்கு நான் செல்லாமல் சில முக்கியமான பிரச்சினைகளை மட்டும் சொல்லி இருக்கிறேன். தஞ்சைமாவட்டத்தில் உள்ள ஒன்றைச் சொல்கிறேன். நம்முடைய பட்ஜெட்டில் அறிவித்திருக்கிறோம். சாலைகளை மேம்படுத்துவதற்கு பெரிய திட்டம் ஒன்றை புரட்சித் தலைவியிடத்திலே நம்முடைய நெடுஞ்சாலைத் துறையின் சார்பிலே நாங்கள் கொடுத்திருக்கிறோம். அந்தத் திட்டம் பற்றி ஏற்கெனவே நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் தன்னுடைய பட்ஜெட் உரையிலே சொல்லியிருக்கிறார்கள் ஆக அந்தத் திட்டமும் நம்முடைய அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது.



அந்தத் திட்டமும் நம்முடைய புரட்சித் தலைவியின் மேலான ஆலோசனையில் பேரில் அவர்களுடைய உத்தரவின் பேரில் படிப்படியாக நிறைவேற்றப்படும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பல்வேறு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத் திருக்கிறார்கள். இந்த விவாதத்திலே கலந்துகொண்டு 23 பேர் பேசினார்கள். இதுவரையிலே இல்லாத அளவுக்கு, எந்த மானியக் கோரிக்கையிலும் இல்லாத அளவுக்கு இதில் அந்த அளவுக்குப் பேசுகிறார்கள் என்றால் அந்தப் பிரச்சினைகளைத் தீர்க்கவேண்டுமென்ற முனைப்போடுதான் அவர்களுடைய தொகுதிகளுக்கு வேண்டிய காரியங்களுக்காகத்தான் மாண்புமிகு உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள் என்பதை நாங்கள் உணர்கிறோம். மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய காலத்திலே நீங்கள் சொல்லியிருக்கிற பிரச்சினைகளைப் பற்றி இந்த அரசு கனிவோடு பரிசீலிக்கும் என்பதையும் இந்த நேரத்தில் நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். வெட்டுத் தீர்மானங்கள் வருகிற நேரத்தில் இன்றைக்கு நான் சில முக்கியமான பிரச்சினைகள் ஒன்றிரண்டைச் சொல்லியாக வேண்டும். இன்றைக்குப் பொதுப் பணித்துறையில் மொத்தம் 51 வெட்டுத் தீர்மானங்களைத் தந்திருக்கிறார்கள். கொள்கை பற்றி விவாதிக்க மூன்றும், பழுது பார்த்தல் மற்றும் பராமரித்தல் சம்பந்தமாக 12–ம் புதிதாக அணை கட்டுதல், குளங்கள் கட்டுதல், கால்வாய் அமைத்தல் சம்பந்தமாக 12–ம் தூர் எடுத்தல் சம்பந்தமாக 5-ம் நீரேற்றுத் திட்டங்கள் குறித்து 4–ம் கால்வாய்களை மேம்பாடு செய்வது குறித்து 3–ம் ஆறுகளில் நடைபாலம் அமைத்தல் குறித்து 6–ம் தவறு செய்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுப்பது சம்பந்தமாக சிலவும், பாசனத் தண்ணீரைத் திருடி மற்ற காரியங்களுக்கு உபயோகித்தல் சம்பந்தமாக சில வெட்டுத் தீர்மானங்களும், கடலரிப்பு மற்றும் பொதுவான பிரச்சினைகள் குறித்து சில வெட்டுத் தீர்மானங்களும் ஆக 51 வெட்டுத் தீர்மானங்களைத் தந்திருக்கிறார்கள்.

அதைப்போல பொதுப்பணித்துறையினுடைய கட்டடப் பிரிவு சம்பந்தமாக இன்றைக்கு ஏறத்தாழ 30 வெட்டுத் தீர்மானங் களைத் தந்திருக்கிறார்கள். அதைப்போல நெடுஞ்சாலைத் துறை சார்பில் 61 வெட்டுத் தீர்மானங்களைத் தந்திருக்கிறார்கள். பாலங்கள் அமைத்தல் சாலைகளைப் பழுதுபார்த்தால் என்று அவரவர்களுடைய பகுதிகளுக்கு வேண்டிய உதவிகளைக் கேட்டு வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள். அப்படி வெட்டுத் தீர்மானங்கள் என்கிறபோது பிரச்சினைகள் அல்ல; பெரும்பாலும் கோரிக்கைகள் வைத்திருக்கிறார்கள். ஆக அப்படிப்பட்ட கோரிக்கைகளையும் வைத்திருக்கிறார்கள். ஆகவே அவைகளை எல்லாம் ஒட்டுமொத்தமாக இந்த அரசு கவனத்தில் எடுத்துக்கொண்டிருக்கிறது. உங்களுடைய வெட்டுத்

தீர்மானங்கள் எல்லாம் இந்த அவையினுடைய குறிப்பில் இருக் கிறது. அதற்கான பணிகளை முனைப்போடு நம்முடைய புரட்சித் தலைவியினுடைய அரசு நிச்சயமாக எடுத்து அந்தக் காரியங்களை நிதியாதாரங்களுக்கு ஏற்ப, இருக்கின்ற பிரச்சினை களுக்கேற்ப படிப்படியாக செய்து உங்களுடைய கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லி, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் தந்திருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்று இந்த மானியக் கோரிக்கை களை நிறைவேற்றித் தரும்படிக் கேட்டுக்கொண்டு அமர்கிறேன், நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 8.30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

(அ) கோரிக்கை எண் 36—பாசனம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண் 36. ''பாசனம்'' பற்றிய வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப் படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். சிங்காரம் அவர் களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றது.

டாக்டர் தே. குமாரதாஸ் தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்த விரும்புகிறாரா என்பதை அறிய விரும்பு கிறேன். டாக்டர் தே. குமாரதாஸ் அவர்கள் இருக்கையில் இல்லாத தால் அவருடைய வெட்டுத்தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாக கருதப்பெறுகிறது.

திரு. ஜி. பழனிசாமி: தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்த விரும்புகிறாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. ஜி. பழனிசாமி : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையில் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றது.

''பாசனம் பற்றிய 36–ம் ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 119, 73, 73, 000–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்'' என்னும் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது. அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெற்றது.





(ஆ) கோரிக்கை எண் 37-பொதுப்பணிகள் கட்டிடங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண் 37. பொதுப்பணிகள்–கட்டிடங்கள் பற்றிய வெட்டுத் தீர்மானங் கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன். டாக்டர் தே. குமாரதாஸ்.

டாக்டர் தே. குமாரதாஸ் அவர்கள் இருக்கையில் இல்லாத தால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாகக் கருதப்பெறுகிறது.

''பொதுப் பணிகள்–கட்டிடங்கள் பற்றிய 37–ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 4,28,90,000–க்கு மேற் படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்'' என்னும் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர் களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெற்றது.

(இ) கோரிக்கை எண் 38–பொதுப் பணிகள்—பணியாளரமைப்பும், கருவிகளும் தளவாடமும்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண் 38 பொதுப் பணிகள் பணியாளரமைப்பும், கருவிகளும் தளவாடமும் பற்றிய வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன். திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். சிங்காரம் அவர் களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றது.

டாக்டர் தே. குமாரதாஸ் தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்த விரும்புகிறாரா என்று அறிய விரும்புகிறேன். டாக்டர் தே. குமாரதாஸ் அவர்கள் இருக்கையில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாக கருதப்பெறுகிறது.

"பொதுப் பணிகள்—பணியாளரமைப்பும், கருவிகளும் தளவாடமும் பற்றிய 38-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 47,58,16,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம் தீர்மானம் நிறைவேறியது.
அரசுக்கு கோரிய தொகை வழங்கப்பெற்றது.

(ஈ) கோரிக்கை எண் 39—சாலைகளும் பாலங்களும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண் 39—சாலைகளும் பாலங்களும் பற்றிய வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன். திரு. எச். எம். ராஜு.

திரு. எச். எம். ராஜு: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எச். எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றது.

டாக்டர் தே. குமாரதாஸ்: தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்த விரும்புகிறாரா என்பதை அறிய விரும்புகிறேன். டாக்டர் தே. குமாரதாஸ் அவர்கள் இருக்கையில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்று கொள்ளப்பெற்றதாக கருதப் பெறுகிறது.

"சாலைகளும் பாலங்களும் பற்றிய 39-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 171,78,12,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்." என்னும் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)
மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.
அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெற்றது.



(உ) கோரிக்கை எண் 55—பாசனம் குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண் 55—பாசனம் குறித்த மூலதனச் செலவு பற்றிய வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. சா. பன்னீர்செல்வம்.

திரு. சா. பன்னீர்செல்வம் : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சா. பன்னீர்செல்வம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றது.

"பாசனம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 55-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 85,69,14,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்." என்னும் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)
மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.
அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெற்றது.

(ஊ) கோரிக்கை எண் 56—பொதுப்பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண் 56 பொதுப்பணிகள்-கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப் படுகின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன். திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். சிங்காரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றது.

"பொதுப் பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 56-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 49,62,79,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.
அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெற்றது.

பிற்பகல் 8-35

(எ) கோரிக்கை எண் 57–சாலைகள்-பாலங்கள் குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண் 57 சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன். திரு. ஆர். தங்கராஜ்.

திரு. ஆர். தங்கராஜ் : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். தங்கராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றது.

''சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 57-ஆம் எண் மானிய கோரிக்கையின் கீழ் ரூ. 34,33,34,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்'' என்னும் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)
மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.
அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெற்றது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று பேரவை மீண்டும் 27-9-1991, வெள்ளிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்குக் கூடும்.

பின்னர் பேரவை, பிற்பகல் 8.36 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.



8. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்,

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

ஏதுமில்லை

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

118. சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் 1985–86 ஆம் ஆண்டிற்கான கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கை. (தமிழ், ஆங்கிலம்.)

119. கோரிக்கை எண் 12 தமிழ்நாடு 1959–ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1991–92 (தமிழ், ஆங்கிலம்).

120. கட்டடப் பிரிவு பணிகள் பற்றிய ஆய்வுக் குறிப்பு, 1990–91. (தமிழ், ஆங்கிலம்.)

## இணைப்பு—1.

(43-ஆம் பக்கத்திலுள்ள அடிக் குறிப்பைக் காண்க.)

### தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு.

#### முன்னுரை.

இந்து மற்றும் சமண மத அற நிறுவனங்கள்/அறக் கட்டளைகள் நிருவாகமும், கட்டுப்பாடும், 1960ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் நாள் செயலுக்கு வந்த, தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தின்படி (தமிழ்நாடு சட்டம் 22/1959) தற்போது நிர்வகிக்கப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு, திருக்கோயில்கள் நிறைந்த மாநிலமாக இருப்பதால் அத்திருக்கோயில்களைப் பராமரித்து நிருவகிப்பதில் அரசு அதிகக் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. பல திருக்கோயில்களைப் புதுப்பித்து, சரிவர பராமரிக்க வேண்டியுள்ளது. மேலும், பல திருக்கோயில்களில் வழிபாட்டு முறைகளை, முறைப்படி பின்பற்ற வேண்டியுள்ளது. ஆளுநர் உரையில் இதுகுறித்த கொள்கை முடிவை ஏற்கெனவே அறிவித்துள்ளபடி, பழம்பெருமை மிக்க திருக்கோயில்களில், வழிபாட்டு முறைகளைப் பின்பற்றுவதுடன் அத்திருக்கோயில்களை புதுப்பித்துப் பராமரிக்கப்படும் என்பதை' உறுதி செய்வதற்காக திருக்கோயில் நிருவாக வாரியம் ஒன்றை அமைக்க விரைந்து நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. திருக்கோயில் நிருவாக வாரியம் அமைக்க, தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தில் திருத்தம் செய்யும்பொருட்டு தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இத்தகைய திருத்தம், அரசின் திட்டங்களை செயல் படுத்துவதற்கும் திருக்கோயில்கள் பழம்பெருமையை அடையச் செய்யும் தூயநோக்கினை நிறைவேற்றுவதற்கும் உறுதுணையாக அமையும்.

**1. நிறுவனங்களின் எண்ணிக்கை :**

இந்து சமய—அறக்கட்டளைகள் நிருவாகத் துறை, தமிழ்நாட்டிலுள்ள மொத்தம் 35,150 இந்து—சமண மத நிறுவனங்கள் மற்றும் அறக்கட்டளை நிறுவனங்களின் நிருவாகக் கட்டுப்பாட்டைப் பராமரித்து வருகின்றது; அந்நிறுவனங்களின் விவரம் வருமாறு :—

| | | |
|---|---|---|
| திருக்கோயில்கள் | .. | 33,109 |
| மடங்கள் | .. | 56 |
| மடங்களுக்குச் சொந்தமான கோயில்கள். | .. | 58 |
| குறிப்பிட்ட அறக்கட்டளைகள் | .. | 1,721 |
| அறநிலையங்கள் | .. | 189 |
| சமணக் கோயில்கள் | .. | 17 |
| | | 35,150 |

ஆண்டு வருமானம் 2,000 ரூபாய்க்கும் மிகையாக உள்ள இந்த சமய நிறுவனங்கள், உதவித்தொகை நிர்ணயிக்கத்தக்க வருமானத்தின் அடிப்படையில், நான்காக வகைப்படுத்தப் பட்டுள்ளன; அவ்விவரம் வருமாறு :—

| தொடர் எண். | வகைப்பாடு. | எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | ஆண்டு வருமானம் ரூ. 2,100 முதல் ரூ. 9,999 வரை உள்ள பட்டியலில் சேராத நிறுவனங்கள். | 5,727 |
| 2 | ஆண்டு வருமானம் ரூ. 10,000 முதல் ரூ. 49,999 வரை உள்ள பட்டியலின்கீழ் வருகின்ற நிறுவனங்கள். | 1,160 |
| 3 | ஆண்டு வருமானம் ரூ. 50,000 முதல் ரூ. 99,999 வரை உள்ள பட்டியலின் கீழ் வருகின்ற நிறுவனங்கள். | 152 |
| 4 | ஆண்டு வருமானம் ரூபாய் ஒரு இலட்சமும் அதற்கு மேலும் உள்ள பட்டியலின்கீழ் வருகின்ற நிறுவனங்கள். | 326 |
| | மொத்தம் .. | 7,806 |



**2. நிருவாக அமைப்பு :**

இந்து சமய—அறக்கட்டளைகள் நிருவாகத் துறை ஆணையர் (இவர் இந்திய ஆட்சிப் பணியை சார்ந்தவராவார்), தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய—அறக்கட்டளைகள் சட்டத்தைச் (தமிழ்நாடு சட்டம் 22/1959) செயற்படுத்தும் துறையின் தலைவராவார். இவருக்கு உதவியாக இணை ஆணையர் இருவரும், துணை ஆணையர் எண்மரும், துணை ஆணையர் பதவித்தரத்தில் நேர்முக உதவியாளர் ஒருவரும், உதவி ஆணையர் பதவி நிலையில் கூடுதல் நேர்முக உதவியாளர் ஒருவரும், உதவி ஆணையர் பதினேழு பேரும் உள்ளனர். இவர்களுடன் திருக்கோயில்களுக்குச் சொந்தமான திருஆபரணங்கள் மற்றும் மதிப்பு மிக்க பொருட்கள் ஆகியவற்றை மதிப்பீடு செய்து சரிபார்க்கும் பணியில் ஆணையருக்கு உதவியாக உதவி ஆணையர் (சரிபார்ப்பு) எட்டு பேர்களும் உள்ளனர். மேலும் திருவாரூரிலுள்ள உலோக திருமேனிகள் பாதுகாப்பு மையத்திற்குப் பொறுப்பு வகிக்கும் உதவி ஆணையர் ஒருவரும் உள்ளார்.

திருக்கோயில் திருப்பணி மதிப்பீடுகளை தயாரித்தல், மேற் பார்வையிடுதல் மற்றும் அறநிறுவனங்களின் கட்டிட வேலைகளை மேற்பார்வையிடுதல் போன்ற பணிகளில் ஆணையருக்கு உதவி யாக மேற்பார்வை பொறியாளர் ஒருவரும் அவரின் தலைமையில் கோட்டப் பொறியாளர் ஒருவரும் மற்றும் தேவையான தொழில் நுட்ப அலுவலர்களும் அடங்கிய பொறியியல் பிரிவு ஒன்றும் இயங்கி வருகிறது.

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆணையர் அலுவல கத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் பதவி தரத்தில் திருக் கோயில் நிலங்களுக்காக ஒரு தனி அலுவலர் கொண்ட தனி வருவாய் பிரிவு ஒன்று திருக்கோயில்களின் நிலங்களை ஆய்வு செய்து, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் வருவாய்த் துறை அலுவலர்களுடன் தொடர்பு கொண்டு அடிப்படை பதிவேடுகளை தயாரிக்கும் பணியை மேற்கொண்டுள்ளது. அனுமதியின்றி தனியார் அனுபவத்தில் இருந்துவரும் சிதம்பரம் அருள்மிகு சபாநாயகர் திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலங் களை கண்டறியும் பணியினை ஒரு தனி வட்டாட்சியர் மற்றும் அவருடைய துணை பணியாளர்கள் செய்து வருகின்றனர்.

கருவூலங்கள்—கணக்குத் துறையைச் சேர்ந்த முதுநிலை கணக்கு அலுவலர் ஒருவர், கணக்குகள் பிரிவிற்குப் பொறுப்பு வகிக்கிறார். அவருக்கு உதவிக் கணக்கு அலுவலர் ஒருவர் உதவி புரிகிறார்.

சமய நிறுவனங்களின் கணக்குத் தணிக்கையை, சென்னை, மாநிலக் கணக்குத் துறைத் தலைவர் அலுவலகத்திலிருந்து முக மையில் வந்துள்ள தணிக்கைத் தலைமை அலுவலரின் நேரடிக் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் தணிக்கைத் தனிப் பிரிவு ஒன்று மேற்கொள்கிறது.

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை எட்டு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு அவை ஒவ்வொன்றும் ஒரு துணை ஆணையரின் நிர்வாகத்தின்கீழ் உள்ளது. மேலும், பதினேழு கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றும் ஒரு உதவி ஆணையரின் நிர்வாகத்தின்கீழ் இயங்கிவருகிறது. மேற்குறிப்பிட்ட அலுவலர்களுடைய நிர்வாக வரம்புகள் கீழே தரப்பட்டுள்ளன:—

| | |
|---|---|
| 1. துணை ஆணையர், சென்னை. | 1. உதவி ஆணையர், சென்னை.<br>2. உதவி ஆணையர், காஞ்சீபுரம். |
| 2. துணை ஆணையர், தஞ்சாவூர். | 3. உதவி ஆணையர், தஞ்சாவூர்.<br>4. உதவி ஆணையர், நாகப்பட்டினம். |
| 3. துணை ஆணையர், மயிலாடுதுறை. | 5. உதவி ஆணையர், கும்பகோணம்.<br>6. உதவி ஆணையர், கடலூர். |
| 4. துணை ஆணையர், திருச்சிராப்பள்ளி. | 7. உதவி ஆணையர், புதுக்கோட்டை.<br>8. உதவி ஆணையர், திருச்சிராப்பள்ளி. |
| 5. துணை ஆணையர், மதுரை. | 9. உதவி ஆணையர், மதுரை.<br>10. உதவி ஆணையர், ராமநாதபுரம். |
| 6. துணை ஆணையர், திருநெல்வேலி. | 11. உதவி ஆணையர், திருநெல்வேலி.<br>12. உதவி ஆணையர், நாகர்கோவில். |
| 7. துணை ஆணையர், கோயம்புத்தூர். | 13. உதவி ஆணையர், கோயம்புத்தூர்.<br>14. உதவி ஆணையர், ஈரோடு. |
| 8. துணை ஆணையர், சேலம். | 15. உதவி ஆணையர், சேலம்.<br>16. உதவி ஆணையர், தர்மபுரி.<br>17. உதவி ஆணையர், வேலூர். |



3. சமய நிறுவனங்கள் மற்றும் அறக்கட்டளைகளின் நிருவாகம் :

திருக்கோயில்கள், அவற்றின் முக்கியத்துவம், வருமானம், அவற்றிற்குச் சொந்தமாகவுள்ள சொத்துக்கள் ஆகியவற்றின் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டுள்ளன. கீழே விரிவாகக் குறிப்பிட்டுள்ளவாறு திருக்கோவில்களுக்கு இணை ஆணையர், துணை ஆணையர், உதவி ஆணையர், செயல் அலுவலர்கள் நிலை I முதல் IV ஆகிய பதவித் தரங்களில் செயல் அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்:—

| | |
|---|---|
| இணை ஆணையர் .. .. | 5 |
| துணை ஆணையர் .. .. | 7 |
| உதவி ஆணையர் .. .. | 9 |
| செயல் அலுவலர் நிலை—I .. .. | 66 |
| செயல் அலுவலர் நிலை—II .. .. | 117 |
| செயல் அலுவலர் நிலை—III .. .. | 172 |
| செயல் அலுவலர் நிலை—IV .. .. | 117 |

மடங்கள் 58 கோயில்களை நிருவகித்து வருகின்றன; மேலும் 70 கட்டளைகள் அல்லது குறிப்பிட்ட அறக்கட்டளைகள் திருமடங்களின் பொறுப்பில் உள்ளன. இதுவரை 8 மடங்களைச் சார்ந்துள்ள கோயில்களுக்கு செயல் அலுவலர்கள் நியமிக்கப் பட்டுள்ளனர்.

ஒரு துணை ஆணையரும், மண்டல தணிக்கை அதிகாரியும் இந்த மடங்களின் ஒட்டு மொத்த பொதுக் கட்டுப்பாட்டையும், ஆய்வுப் பணிகளையும் கவனித்து வருகின்றனர்.

4. **அறங்காவலர்கள் நியமனம் :**

உரிய அதிகாரிகளால் பரம்பரை வழிமுறை சாரா அறங்காவலர்கள் நியமிக்கப்படுவதற்காக சமய நிறுவனங்கள், அவற்றின் ஆண்டு வருமானத்தின் அடிப்படையில் பின்வருமாறு நான்கு தொகுதிகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன:—

| நிறுவனங்கள். | ஆண்டு வருமானம். | நியமனம் செய்யும் அதிகாரி. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. பட்டியலில் சேராத நிறுவனங்கள். | ரூ. 9,999 ரூபாய் வரை, | உதவி ஆணையர். |
| 2. பட்டியலில் சேர்ந்த நிறுவனங்கள் பிரிவு 46 (i)-ன் கீழ். | ரூ. 10,000 முதல் ரூ. 49,999 வரை. | துணை ஆணையர். |
| 3. பட்டியலில் சேர்ந்த நிறுவனங்கள் பிரிவு 46 (ii)-ன் கீழ். | ரூ. 50,000 முதல் ரூ. 99,999 வரை. | ஆணையர். |
| 4. பட்டியலில் சேர்ந்த நிறுவனங்கள் பிரிவு 46 (iii)-ன் கீழ். | ரூ. 1 இலட்சமும் அதற்கு மேலும். | அரசு. |



4. ஒவ்வோர் உதவி ஆணையருக்கும் அவருடைய அதிகார வரம்பிற்குட்பட்ட பகுதிக்கென ஒரு மண்டலக்குழு உள்ளது. மேற்குறிப்பிட்ட முதல் மூன்று இனங்களைப் பொறுத்தமட்டில் அறங்காவலர் பதவிக்கு விண்ணப்பித்தவர்களிலிருந்து அறங்காவலர்களாக நியமிப்பதற்குரியவர்களின் பெயர்கள் அடங்கிய பட்டியலொன்றை உதவி ஆணையர் உரிய அதிகாரிக்கு அனுப்புவார். உரிய அதிகாரி, அவர் எக்கோவில்களுக்கு பரம்பரை வழிமுறை சாரா அறங்காவலர்களை நியமிக்க அதிகாரம் பெற்றுள்ளாரோ அக்கோயில் ஒவ்வொன்றுக்கும் பரம்பரை வழிமுறை சாரா அறங்காவலர்கள் மூவரை நியமிக்கிறார். முதல் இரு இனங்களைப் பொறுத்தமட்டில் ஏனைய இரு அறங்காவலர்களை ஆணையரும், மூன்றாம் இனத்தைப் பொறுத்தமட்டில் ஏனைய இரு அறங்காவலர்களை அரசும் நியமிக்கின்றனர். நான்காம் இனத்தைப் பொறுத்தமட்டில் பரம்பரை வழிமுறை சாரா அறங்காவலர்கள் ஐவரையும் அரசே நியமிக்கிறது.

திருக்கோயில்களுக்கு பரம்பரை வழிமுறை சாரா அறங்காவலர்களை நியமனம் செய்யும் தற்போதைய முறை ஆலயங்களின் முறையான நிருவாகத்திற்கு நலம் பயப்பதாக இல்லாததாலும் நடைமுறையில் ஏராளமான பிரச்சினைகளைத் தோற்றுவிப்பதாலும், பரம்பரை வழிமுறை சாரா அறங்காவலர்களை நியமிப்பதற்கான தற்போதைய நடைமுறையை மாற்றியமைக்க அரசு திட்டமிட்டு வருகிறது.

5. கோயில் நிலங்களும், கட்டிடங்களும் :

சமய நிறுவனங்களுக்கு 4.91 இலட்சம் ஏக்கர் பரப்புள்ள வேளாண்மை நிலங்கள், வேளாண்மைக்கு உட்படுத்தப்படாத பிற நிலங்கள் சொந்தமாக உள்ளன. இது தவிர, அவற்றிற்கு நகர்ப்பகுதியில் 22,592 மனைகளும் 21,200 கட்டிடங்களும் உள்ளன. இச்சொத்துக்களிலிருந்து கிடைக்கும் ஆண்டு வருமானம் பின்வருமாறு மதிப்பிடப்படுகிறது:—

| | | (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| 1. | நன்செய் நிலங்கள் .. .. | 7.48 |
| 2. | புன்செய் நிலங்கள் .. .. | 2.67 |
| 3. | கட்டிடங்கள் .. .. | 2.79 |
| 4. | வீட்டுமனைகள் .. .. | 0.98 |
| | | 13.92 |

1400 ஆம் பசலிக்கான (1—7—1990 முதல் 30—6—1991 வரை) கேட்பு, வசூல் மற்றும் நிலுவை பற்றிய விவர அறிக்கை வருமாறு:—

| | கேட்பு. | | | வசூல். | | | நிலுவை. | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | நிலுவை தொகை. | நடப்பு தொகை. | மொத்தம். | நிலுவை தொகை. | நடப்பு தொகை. | மொத்தம். | நிலுவை தொகை. | நடப்பு தொகை. | மொத்தம். |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
| 1. நன்செய் நிலங்கள் — | 53.43 | 7.48 | 60.91 | 3.54 | 2.65 | 6.19 | 49.89 | 4.83 | 54.72 |
| 2. புன்செய் நிலங்கள் — | 11.24 | 2.69 | 13.93 | 1.25 | 1.50 | 2.75 | 9.99 | 1.19 | 11.18 |
| 3. கட்டிடங்கள் — | 3.03 | 2.78 | 5.81 | 1.31 | 1.80 | 3.11 | 1.72 | 0.98 | 2.70 |
| 4. வீட்டுமனைகள் — | 1.38 | 0.97 | 2.35 | 0.47 | 0.59 | 1.06 | 0.91 | 0.38 | 1.29 |
| | 69.08 | 13.92 | 83.00 | 6.57 | 6.54 | 13.11 | 62.51 | 7.38 | 69.89 |



நன்செய் நிலங்கள் 1,06,807 குத்தகைதாரர்களுக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளன. வீடு மற்றும் கட்டிடங்கள் 22,629 நபர்களுக்கும், வீட்டுமனைகள் 75,320 நபர்களுக்கும் குத்தகைக்கு விடப்பட்டுள்ளன. நிலங்கள், கட்டிடங்கள், வீட்டுமனைகள் ஆகியவற்றிலிருந்து வரவேண்டிய மொத்த நிலுவைத் தொகை 30-6-1991 ஆம் நாள் வரை ரூ. 69.89 கோடியாகும்.

6. திருக்கோயில் திருப்பணியும் அவற்றைப் புதுப்பித்தலும்.

தமிழ்நாட்டுத் திருக்கோயில்கள் ஆழ்வார்களாலும், நாயன்மார்களாலும் பாடிப் புகழப் பெற்ற புனிதத் தன்மை வாய்ந்த திருத்தலங்களாகும். இவற்றையும் வரலாற்று முக்கியத்துவம் தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த திருக்கோயில்களுடன், பிற திருக்கோயில்களையும் நல்ல முறையில் பேணி வருவதும், அவற்றுக்குத் திருப்பணி செய்வதும் இன்றியமையாததாகும். அவற்றுடன் வேறு சில முக்கியமான திருக்கோயில் களும் புதுப்பிக்கப்பட வேண்டிய நிலையிலுள்ளன. திருக் கோயில்களுக்குத் திருப்பணி செய்வதற்கும், அவற்றைப் புதுப் பிப்பதற்குமான செலவு, (1) திருக்கோயில் நிதிகளிலிருந்தும், (2) பொது மக்கள் அளிக்கும் நன்கொடையிலிருந்தும், (3) அரசு மானியத்திலிருந்தும், (4) இந்து சமய அறநிலையத் துறை ஆணையரின் பொதுநல நிதியிலிருந்தும் செய்யப்படுகின்றது. (5) செல்வச் செழிப்புள்ள கோயில்களின் உபநிதியிலிருந்தும் வருமானமில்லாத திருக்கோயில்களுக்கு நிதி வழங்கப்பட்டு மேற் கண்ட திருப்பணிகள் செய்யப்படுகின்றன.

1990-91 ஆம் ஆண்டில் திருக்கோயில்களை புதுப்பிப்பதற்கு அரசு மானியமாக ரூபாய் 45 இலட்சம் வழங்கப்பட்டது. இதே போன்று ஆணையரின் பொதுநல நிதியிலிருந்து புதுப்பித்தல் பணிக்காக 1991 ஆகஸ்ட் மாதம் வரை 71 திருக்கோயில் களுக்கு ரூ. 41.65 இலட்சம் வழங்கப்பட்டது.

இது தவிர 32 திருக்கோயில்களில் புதுப்பித்தல் பணியை மேற்கொள்வதற்காக ஐந்து கோடி ரூபாய் மூல நிதியிலிருந்து ரூ. 1.95 கோடி வழங்கப்பட்டது. பழனி அருள்மிகு தண்டா யுதபாணி சுவாமி திருக்கோயில் அளித்த தொகையிலிருந்து ஏற் படுத்தப்பட்ட ஒரு கோடி ரூபாய் மூல நிதியிலிருந்து கிடைக் கும் வட்டித் தொகையிலிருந்து நிதி தேவைப்படும் திருக்கோயில் களின் திருப்பணிக்காக அளிக்கப்படும் தொகை ரூ. 10,000- லிருந்து ரூ. 20,000-ஆக 1991-ஆம் ஆண்டிலிருந்து உயர்த்தி வழங்கப்படுகிறது. கடந்த ஐந்தாண்டுகளில் இதுவரை மொத்தம் 553 திருக்கோயில்களுக்கு ரூ. 54.43 இலட்சம் வழங்கப்பட் டுள்ளது.

7. தமிழ்நாடு திருக்கோயில் பாதுகாப்பு—மேம்பாட்டுத் திட்டங்கள் :

வசதியுள்ள திருக்கோயில்களின் உபநிதியிலிருந்து ஏற்படுத்தப் பட்ட ஐந்து கோடி ரூபாய் மூல நிதி, ஒருகால பூசை செய்வ தற்குக்கூட நிதிவசதி இல்லாத திருக்கோயில்களில் "ஒரு லகா

பூசையேனும்'' செய்வதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்நிதி
யிலிருந்து கிடைக்கும் வட்டியில் 50 சதவீதத் தொகை ஒருகால
பூசை செய்வதற்காகப் பயன்படுத்தப்படுகிறது. எஞ்சிய 50 சத
வீதத் தொகை நாயன்மார்களாலும், ஆழ்வார்களாலும் பாடப்
பெற்ற திருக்கோயில்களுக்குத் திருப்பணி செய்வதற்கும், அவற்
றைப் புதுப்பிப்பதற்கும் பயன்படுத்தப்படுகிறது.

8. முதலமைச்சரின் திருக்கோயில்கள் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதி.

திருக்கோயில்கள் திருப்பணிக்காகப் பல முயற்சிகள் மேற்
கொள்ளப்பட்டு, நிதியுதவிகள் அளிக்கப்பட்டிருந்தபோதிலும்,
நமது பழம் பெரும் கலைப் பண்பாட்டுச் செல்வங்களின் ஒரு
பகுதியாக விளங்குகிற, தொன்மைச் சிறப்பு வாய்ந்த சிறிய
திருக்கோயில்கள் பல இடிந்து பாழடைந்து கவனிப்பாரற்றுக்
கிடக்கின்றன. அவற்றுள் பெரும்பாலானவை அழியும் நிலையில்
உள்ளன. இடிந்து சிதைந்து கிடப்பவற்றை பழுதுபார்க்காமல்
புறக்கணிக்கப்பட்டதற்கு காரணம் போதுமான நிதிவசதி
இன்மையே ஆகும். இத்தகைய திருக்கோயில்களின் திருப்பணிக்
காகவும், பழுதுபார்ப்புக்காகவும் முதலமைச்சரின் திருக்கோயில்
கள் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதி உருவாக்கப்பட்டுள்ளது.

முதலமைச்சரின் திருக்கோயில்கள் திருப்பணி மற்றும் பரா
மரிப்பு நிதி, பொது மக்கள், தொழிலதிபர்கள் மற்றும் கொடை
உள்ளம் கொண்டவர்கள் ஆகியோரிடமிருந்து பெரும் நன்
கொடைகள் கொண்டு இயங்கும் வரலாற்று முக்கியத்துவம்
வாய்ந்த திருக்கோயில்களின் திருப்பணி பழுதுபார்ப்புப் பணி
களை இந்த நிதியைக் கொண்டே மேற்கொள்ளலாம். இந்த
நிதிக்காக அளிக்கப்படும் நன்கொடைகள், கவனிப்பாரற்றுக்
கிடக்கும் திருக்கோயில்களைப் பழுது பார்த்தல், திருப்பணி
செய்தல், சீரமைப்புப் பணியை மேற்கொள்ளுதல், திருக்கோயில்
பராமரிப்புத் தொடர்புடைய ஏனைய பணிகள் ஆகியவற்றுக்குப்
பயன்படுத்தப்படும், இந்த நிதியை ஏற்படுத்தியது பொது மக்
களால் பெருமளவில் ஏற்று வரவேற்கப்பட்டுள்ளது. ஆலயத்
திருப்பணிக்காக இவ்வாறு நிதி திரட்டுவது அனைத்துப் பிரிவின
ரின் ஆதரவையும் பெற்றுள்ளது. முதலமைச்சரின் திருக்
கோயில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதி அமைக்கப்பட்ட
2—8—1991ஆம் நாளிலிருந்து பொதுமக்களிடமிருந்து பெற்ற
நன்கொடைமூலம் இந்நிதிக்கு இதுவரை மொத்தம் ரூ. 1.51
கோடி கிடைத்துள்ளது.

9. மகாமகம்

மகாமகம் திருவிழா, கும்பகோணத்தில் 12 ஆண்டுகளுக்கு
கொருமுறை கொண்டாடப்படும் முக்கியமான சமய விழா
வாகும். இத்திருவிழா, மாசி மாதத்தில் மகம் நட்சத்திரத்தில்
பௌர்ணமி நாளன்று கொண்டாடப்படுகிறது. இது தமிழ்நாட்டில்
மகாமகம் என்று அழைக்கப்படுகிறது. இத்திருவிழாவன்று
இந்தியா முழுவதிலுமுள்ள பல இலட்சம் பக்தர்கள் ஒன்றுகூடி



மகாமகம் திருக்குளத்தில் புனித நீராடுவர். இத்திருவிழா, கும்ப
கோணம் நகரத்திலுள்ள அனைத்துத் திருக்கோயில்களிலும்,
18—2—1992 அன்று கொண்டாடப்படவுள்ளது. அச்சமயத்தில்
கும்பகோணத்திலுள்ள வைணவ மற்றும் சிவாலயங்களின்
உற்சவ மூர்த்திகள் முறையே காவிரி நதியின் சக்கரை படித்
துறைக்கும், மகாமகம் திருக்குளத்திற்கும் திருவுலாவாக எடுத்துச்
செல்லப்பட்டு, எல்லா பக்தர்களுக்கும் புனித தீர்த்தம் வழங்கப்
படும். இத்திருவிழா, கும்பகோணத்திலுள்ள அருள்மிகு ஆதி
கும்பேஸ்வரர் திருக்கோயிலில் கொண்டாடப்படும் முக்கியமான
திருவிழாவாகும். மகாமகம் தொடர்பான இவ்விழா, வழக்கமாக
10 நாட்கள் கொண்டாடப்படும். இவ்விழாவின் இறுதி நாளன்று
அதாவது ''மகாமகம் நாளன்று'' பக்தர்கள் புனித குளத்தில்
புனித நீராடுவர். இவ்விழாவின்போது, நாட்டின் பல பகுதிகளி
லிருந்தும் பக்தர்கள் பெருமளவில் கூடுகின்றனர். அச்சமயத்தில்,
பக்தர்கள் எவ்வித இடையூறும் இன்றி, இந்தப் புனித குளத்
தில் நீராடுவதற்கு ஏற்ற வகையில், இத்திருக்குளத்தினைச்
செப்பனிட வேண்டும். இத்திருக்குளத்தினைச் சுற்றி அமைந்
துள்ள 16 சோடச மகாலிங்க சுவாமிகள் திருக்கோயில்களின்
திருப்பணிக்காகவும், திருக் குள திருப்பணிக்காகவும் மூல நிதி
யான ரூ. 5 கோடியிலிருந்து 10 இலட்சம் ரூபாய் ஏற்கனவே
அனுமதிக்கப்பட்டுள்ளது. திருப்பணி முடிவுற்று குடமுழுக்கு விழா
நடைபெறும்.

கும்பகோணம் நகரிலும், அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலு
முள்ள திருக்கோயில்களுக்கும் திருப்பணி பழுதுபார்ப்புப் பணி
கள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. இப்பணிகளுக்கு
ரூ. 24.5 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.
இச்செலவு அரசிடமிருந்து ரூ. 12.5 இலட்சம் மானியம் பெறுவ
தன் மூலமும், பெரிய திருக்கோயில்களின் உபரிநிதியிலிருந்து
ரூ. 12 இலட்சம் பெறுவதன் மூலமும் மேற்கொள்ளப்படும்.
தேவையானால், முதலமைச்சரின் திருக்கோயில் திருப்பணி
மற்றும் பராமரிப்பு நிதியிலிருந்து நிதி உதவிபெற்று பயன்
படுத்தப்படும்.

10. உலோகத் திருமேனிகளையும், ஏனைய மதிப்பு மிக்க பொருட்
களையும் பாதுகாத்தல்;

திருக்கோயில்களின் திருஆபரணங்களைப் பார்வையிட்டு
முறையாகச் சரிபார்த்து, மதிப்பீடு செய்வதற்கும். அப்பணிகளை
மேம்படுத்துவதற்கான வழிவகைகள் பற்றி கருத்துத் தெரிவிக்கவும்
நீதிபதி திரு. என். கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்களின்
தலைமையிலான வல்லுநர் குழு ஒன்று அரசால் நியமிக்கப்பட்டது.
இக்குழு, திருஆபரணங்கள் மற்றும் ஏனைய விலையுயர்ந்த
பொருட்கள் வைக்கப்பட்டுள்ள திருகோயில்களிலுள்ள பாதுகாப்பு
அறைகளைக் குறிப்பிட்ட காலத்திற்கொருமுறை ஆய்வு செய்து
அவற்றின் மேம்பாடு குறித்துக் கருத்துத் தெரிவித்துள்ளது.

தமிழ்நாட்டில் பல்வேறு திருக்கோயில்களிலுள்ள உலோகத் திருமேனிகளை பாதுகாப்பதற்கு அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு பழம் பொருள் கலைச்செல்வங்கள் சட்டத்தின்படி (தமிழ்நாடு சட்டம் 22/1972) திருக்கோயில்களுக்குச் சொந்தமான உலோகத திருமேனிகளை தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையில் பதிவு செய்யப்பட வேண்டும். திருக்கோயில்களிலுள்ள 66.534 உலோகத் திருமேனிகளில் இதுவரையில், அரசு தொல்பொருள் ஆய்வுத் துறையில் 23.910 உலோகத் திருமேனிகள் பதிவு செய்யப் பட்டுள்ளன.

சிறிய கிராமங்களிலுள்ள திருக்கோயில்களில் நாள்தோறும் வழிப்பாட்டிற்குப் பயன்படுத்தாமல் உள்ள உலோகத் திருமேனிகளைப் பாதுகாப்பதற்கென்றே, இத்துறை திருவாரூரில் உலோகத் திருமேனி பாதுகாப்பு மையம் ஒன்றை அமைத்துள்ளது. அங்கு, இந்த உலோகத் திருமேனி வடிவிலான தெய்வங்களுக்கு வெள்ளிகிழமைதோறும் வழிபாடுகளும், நைவேத்தியமும் செய்யப் படுகின்றன. கிராமத் திருக்கோயில் அலுவலர்கள், அவரவர் சம்பந்தப்பட்ட திருக்கோயில்களின் ஆண்டுத் திருவிழாக் காலங்களில் இந்த உலோகத் திருமேனிகளை அத்திருக்கோயில் களுக்கு எடுத்துச் செல்லவும், திருவிழாக்கள் முடிந்தவுடன் இத் திருமேனிகளை பாதுகாப்பு மையத்திற்குக் கொண்டு வரவும் அனுமதிக்கப்படுகின்றனர். தற்போது, திருவாரூரிலுள்ள உலோகத் திருமேனி பாதுகாப்பு மையத்தில் 1,785 உலோகத் திருமேனிகள் வைக்கப்பட்டுள்ளன.

கோயில்களில் திருட்டுக்களைத் தடுக்க காவலர்கள் குறிப்பாக முன்னாள் படை வீரர்கள். நியமிக்கப்பட்டுள்ளனர். முக்கிய திருக்கோயில்களில் ''திருடர்கள் எச்சரிக்கை மணிப்பொறிகளும்'' (Burglar alarms) பொருத்தப்பட்டுள்ளன. காவலர்கள் இரவு நேரங்களில் அயராமல் திருக்கோயில் காவல் பணியை மேற் கொள்கின்றனரா என்பதைக் கண்காணிப்பதற்காக பெரும்பாலனத் திருக்கோயில்களில் ''விழிப்பு பதிவுக் கடிகாரங்களும்'' (Tell-tale Clocks) பொருத்தப்பட்டுள்ளன.

குறிப்பிட்ட திருக்கோயில் ஒன்றில் திருட்டு நடைபெறுமானால், சம்பந்தப்பட்ட உலோகத் திருமேனிகளை அடையாளம் கண்டுறிதலை எளிதாக்கும் பொருட்டு, உலோகத் திருமேனிகள் நிழற்படம் எடுக்கப்பட்டு, அந்த நிழற்படம் நகல்கள் ஆணையர், இணை ஆணையர் மற்றும் உதவி ஆணையர் அலுவலகத்திலும், சம்பந்தப்பட்ட திருக்கோயிலிலும் வைக்கப்பட்டுள்ளன. இது வரையில், 2,563 திருக்கோயில்களிலுள்ள 23,910 உலோகத் திருமேனிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. மேலும் 3,883 திருக் கோயில்களின் 21,505 உலோகத் திருமேனிகளின் நிழற்படங்கள் எடுக்கப்பட்டு ''தொகுப்பு பதிவேடுகள்'' (Albums) தயாரிக்கப்





ட்டுள்ளன. உலோகத் திருமேனிகளின் திருட்டுக்களை டுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதோடு களவுபோன லோகத் திருமேனிகளை மீட்பதற்கு நீதிமன்றங்களில் வழககுத் தொடர்த்து அயராத முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

1976 ஆம் ஆண்டில் இந்தியாவிலிருந்து கள்ளத்தனமாக கடத்தி செல்லப்பட்ட, தஞ்சாவூர் மாவட்டம், பத்தூரிலுள்ள அருள்மிகு விசுவநாதசாமி திருக்கோயிலுள்ள விலைமதிப்பிட முடியாத நடராசர் உலோகத் திருமேனியை இலண்டன் நீதிமன்றம் முதல் அதன் பாரளுமன்ற மேல்சபை வரையில் நீண்டகாலமாக வழக்காடி, மீட்டது. அத்தகைய முயற்சிகளில் குறிப்பிடத்தக்கதாகும் இந்த நடராசர் திருமேனியை, சென்னையில் 9-8-1991 அன்று இதற்கென்று நடைபெற்ற மீட்டுப் பெறும் விழா நிகழ்ச்சியில் இலண்டனிலுள்ள இங்கிலாந்து நாட்டுக்கான இந்தியத் தூதுவர், மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களிடம் ஒப்படைத்தார். இந்த உலோகத் திருமேனி தற்போது திருவாரூரிலுள்ள உலோகத் திருமேனி பாதுகாப்பு மையத்தின் பாதுகாப்பில் உள்ளது. பத்தூர், அருள்மிகு விசுவநாதசாமி திருக்கோயிலைப் புதுப்பிக்கும் பணி முடிந்து, குடமுழுக்கு நடத்தப்பட்ட உடன் இந்த உலோகத் திருமேனி அத் திருக்கோயிலில் பிரதிஷ்டை செய்யப்படும். இதற்கு ஆறுமாத காலம் ஆகும்.

இதுதவிர திருடப்பட்டு இந்தியாவிலிருந்து கள்ளத்தனமாக கடத்தப்பட்ட நடராசர் அம்மன், பழனிஆண்டவர், நர்த்தன கிருட்டிணன் போன்ற விலைமதிப்பு மிக்க உலோகத் திருமேனிகளை இலண்டனிலிருந்து நம்மால் மீட்க முடிந்தது. இந்த உலோகத் திருமேனிகள் இங்கிலாந்தின் துப்பறியும் இரகசிய காவற் படையினரால் (Scotland Yard Police) இலண்டனில் தனியார் தரப்பினரிடமிருந்து கைப்பற்றப்பட்டன ; அவற்றை அடையாளம் காட்டிய பின்னர். நாம் அவர்களிடமிருந்து அத்திருமேனிகளைத் திரும்பப் பெற்றோம். இத்திருமேனிகளும் திருவாரூரிலுள்ள உலோகத் திருமேனி பாதுகாப்பு மையத்தில் வைக்கப்பட்டுள்னன.

11. பக்தர்களுக்கான வசதிகள் :

திருக்கோயில்களுக்குத் தரிசனத்திற்காக வரும் பக்தர்களுக்கு வசதிகள் செய்து தரப்பட வேண்டும் என்ற கருத்தினை மனதில் கொண்டு, திருக்கோயில்களுக்கு வரும் பக்தர்கள் திருக்கோயிலுக்கு அருகிலேயே தங்க வசதியாக குடில்கள், ஓய்வு விடுதிகள், தனி நபர் அறைகள் கட்டுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இவ்வாறாக மொத்தத்தில் 14 திருக்கோயில்களுக்கென 58 பயணிகள் ஓய்வு விடுதிகள், 231 குடில்கள் மற்றும் 951 தனி நபர் அறைகள் கட்டப்பட்டுள்ளன. திருக்கோயிலில் இறைவனுக்கு நைவேத்தியம் செய்யப்பட்ட பிரசாதம் இலவசமாக பக்தர்களுக்கு பக்தர்களின் வசதிக்காக திருக்கோயில்கள் வழங்கப்படுகிறது.

பிரசாத கடைகள் நடத்துகின்றன. முக்கியத்துவம் வாய்ந்த திருக்கோயில்களில் திருக்கோயிலின் முக்கியத்துவம் மற்றும் வரலாற்று நிகழ்ச்சிகளை எடுத்துக் கூறும் வழிகாட்டிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

12. திருக்கோயில்களால் நடத்தப்படும் பள்ளிகள், கல்லூரிகள், கருணை இல்லங்கள் மற்றும் மருந்தகங்கள்:

தெய்வ நெறிகளைக் கடைபிடிக்கத் தேவையான கட்டுப்பாட்டினையும், கலாசாரம் மற்றும் சமயக் கோட்பாடுகளையும் இளமையிலிருந்தே பயிற்றுவிக்கும் நோக்கோடு திருக்கோயில்கள் சமயம் மற்றும் பொதுக்கல்வி தொடர்பான பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் நிறுவனங்களை நடத்துகின்றன. அவற்றின் விவரம் வருமாறு :—

| | | |
|---|---|---|
| 1. | கல்லூரிகள் மற்றும் தொழில் நுட்ப பயிலகம். | 7 |
| 2. | மேல்நிலைப் பள்ளிகள் | 10 |
| 3. | உயர்நிலைப் பள்ளிகள் | 9 |
| 4. | நடுநிலைப் பள்ளிகள் | 3 |
| 5. | ஆரம்பப் பள்ளிகள் | 7 |
| 6. | மெட்ரிகுலேஷன் பள்ளி | 1 |
| 7. | நாதஸ்வரம் மற்றும் தவில் பள்ளி | 1 |
| 8. | சித்த வைத்தியசாலைகள் | 14 |
| 9. | அன்பு இல்லங்கள் | 25 |
| 10. | வேத ஆகம பாடசாலைகள் | 4 |
| 11. | தேவாரப் பாடசாலைகள் | 2 |
| 12. | முதியோர் இல்லங்கள் | 3 |
| 13. | காதுகேளாதோர்—பேசயியலாதோர் பள்ளி | 1 |

திருக்கோயில்கள், சமயப் பணிகளுடன், சமூக நல நடவடிக்கைகளிலும் பங்கு கொண்டு சமுதாயத்தின் அடித்தளத்திலுள்ள மக்களுக்குத் தொண்டாற்றுவதிலும் ஈடுபட்டு வருகின்றன. மேலும் 'அன்பு இல்லங்களை' நடத்தி வருவதோடு இந்து மதத்தைச் சேர்ந்த ஏழைகளுக்கு இலவசமாக திருமணமும் நடத்தி வருகின்றன.

தமிழ்நாட்டில் இந்து மதத்தைச் சேர்ந்த பக்தர்கள் சாதி பாடின்றி ஆலயங்களுக்குச் சென்று வழிபாடு நடத்துகின்றனர். நிகழ்ச்சிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையிலும் இந்த சமுதாயத்தின் சமய வாழ்க்கையில் ஆதி திராவிடர்களின் ஈடுபாட்டை ஊக்கப்படுத்தவும், சிறப்பு வழிபாடுகளும், பொது விருந்துகளும் சுதந்திர தின நாளன்றும் (15-8-1991) மற்றும் பேரறிஞர் அண்ணாவின் நினைவு நாளான 03-02-1991 அன்றும்



நடைபெற்றன. திருக்கோயில் நடத்தும் இத்தகைய பொது விருந்துகளில் தமிழ்நாடு அரசு அமைச்சர்களும் நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களும் பொது வாழ்வில் ஈடுபட்டு வரும் பல்வேறு தலைவர்களும் கலந்து கொண்டனர்.

13. திருக்கோயில் பணியாளர்கள் :

இம்மாநிலத்தில் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப் பாட்டின்கீழ் உள்ள பல்வேறு சமய நிறுவனங்களில் 49,700 பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். அவர்களுக்கு பணமாகவும், பொருள்களாகவும் ஊதியம் வழங்கப்படுகிறது. மொத்தமுள்ள 49,700 பணியாளர்களில், 4,200 பணியாளர்கள் இணை ஆணையர். துணை ஆணையர், உதவி ஆணையர் நிலை யிலுள்ள செயல் அலுவலர்களால் நிருவகிக்கப்படும் உயர் வருவாய்த் தொகுதியுள்ள திருக்கோயில்களில் பணிபுரிகின்றனர்.

இந்து சமய—அறநிலையத் துறைப் பணியாளர்கள் குடும்ப நல நிதித் திட்டத்தின் கீழ், பணியிலிருக்கும்பொதே இறந்துவிடும் திருக்கோயில் பணியாளர்களின் குடும்பத்தினருக்கு ரூ. 10,000 உதவித் தொகையாக வழங்கப்படுகிறது.

குறைந்த அளவாக 20 ஆண்டுகள் திருக்கோயில்களில் பணியாற்றி ஓய்வு பெற்ற 60 வயதுக்கும் மேற்பட்ட ஓதுவார்களுக்குத் திங்களொன்றுக்கு ரூ. 250 ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

14. கன்னியாகுமரி தேவஸ்வம் வாரியம் :

இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத தேவஸ்வம் என்ற ழைக்கப்படுகின்ற கன்னியாகுமரி தேவஸ்வம் வாரியம் கன்னியா குமரி மாவட்டத்திலுள்ள 490 திருக்கோயில்களைப் பராமரித்து வருகின்றது. இதற்கு அரசு மானியமாக ரூ. 13.70 இலட்சம் வழங்கப்பட்டு வருகிறது. துணை ஆணையா நிலையில் உள்ள ஒரு செயல் அலுவலர் பொறுப்பில் இந்நிர்வாகம் இருந்து வருகிறது. அரசு மானியம் ரூ. 13.70 இலட்சம் நீங்கலாக இந்த தேவ ஸ்தானத்தின் ஆண்டு வருவாய் ரூ. 45.23 இலட்சமாகும்.

இத்திருக்கோயில்களின் பணியாளர்களை கீழ்க்காணும் மூன்று பிரிவுகளாக வகைப்படுத்தலாம்:

| | | |
|---|---|---|
| 1. | கண்காணிப்பாளர் உட்பட அரசு கருவூலங்களி லிருந்து ஊதியம் பெற்று வரும் அரசு ஊழியர்கள். | 70 |
| 2. | திருக்கோயில்களிலிருந்து ஊதியம் பெற்று வரும் திருக்கோயில் பணியாளர்கள். | 14 |
| 3. | சில்லரை செலவின பணியாளர்கள் | 987 |
| | மொத்தம் .. | 1,071 |

**15. திருக்கோவில் இதழ் வெளியீடு :**

1958 ஆம் ஆண்டு முதல் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை 'திருக்கோயில்' என்று அழைக்கப்படும் மாத தமிழ் இதழ் ஒன்றை வெளியிட்டு வருகிறது. சிறந்த அறிஞர் பெருமக்கள் இவ்விதழுக்காக எழுத்தோவியங்களை எழுதுகிறார்கள். இந்து சமயத் தத்துவம் மற்றும் பல்வகையிலும் பயனூட்டும் சமய நெறிகளைப் பரப்ப இத் ''திருக்கோயில்', பெரிதும் பாடுபடுகிறது. ஒரு தமிழறிஞர் தற்போது இவ்விதழின் ஆசிரியராக உள்ளார். இவ்விதழின் ஆண்டுச் சந்தா ரூ. 36; ஆயுள் சந்தா ரூ. 300 ஆகும். தற்போது 3,000 பிரதிகள் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்படுகின்றன.

**16. முடிவுரை :**

திருக்கோயில்களை நிர்வகித்தல், அந்தந்த திருக்கோயிலின் பழக்க வழக்கங்களுக்கேற்ப பூசை மற்றும் விழாக்களை நடத்துதல், பழமையான திருக்கோவில்களின் கட்டிடக் கலை, கலை அம்சங்கள் முதலியவற்றைத் தனிக்கவனம் செலுத்தி பாதுகாத்தல் போன்ற புனிதமான பொறுப்பு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

திருக்கோவில் நிர்வாக வாரியம் அமைத்து, திருக்கோயில் நிர்வாகத்தைச் சீரமைக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. திறமையான திருக்கோவில் நிர்வாகம், சரியான பராமரிப்பு, தேவையான திருக்கோவில்களில் திருப்பணிகளை மேற்கொள்ளுதல் மற்றும் திருக்கோயில்களில் வழிபாட்டு நடைமுறைகளைப் பின்பற்றுதல் ஆகியவற்றை இந்த வாரியம் உறுதி செய்யும்.

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் அதிகாரிகளும், பணியாளர்களும் இச்சந்தர்ப்பத்தில் தங்களது நேர்மையான, திறமையான தொண்டினைச் செய்ய தங்களை மீண்டும் அர்ப்பணித்துக் கொள்கிறார்கள்.



இணைப்பு—2.

(141. . ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

## பொதுப்பணித் துறை.

## கொள்கை விளக்கக் குறிப்பு.

1991—92.

**முன்னுரை :**

பொதுப்பணித்துறை, பெரிய. நடுத்தர, சிறிய பாசனத் திட்டங்களை வகுத்து செயற்படுத்துவதற்கும், நிலத்தடி நீர் பற்றிய ஆய்வுகளை மேற்கொள்வதற்கும் பொறுப்பு வகிக்கிறது. இத்துறை, அரசு அலுவலகங்கள், அரசுத்துறை நிறுவனங்கள், பள்ளிகள், மருத்துவமனைகள், ஆகியவற்றிற்குத் தேவையான கட்டிடங்களையும் வீட்டுவசதி குடியிருப்புகளையும் கட்டிக் கொடுப்பதற்கும் பொறுப்பு வகிக்கிறது.

**2.1. பாசன நிலை:**

2.1. தமிழ்நாடு 18 மில்லியன் எக்டேர் பரப்பளவைக் கொண்டு இந்திய மாநிலங்களில் 11 ஆம் இடம் வகிக்கிறது. இவற்றில் பயிரிடப்படும் நிகர பகுதி 6 மில்லியன் எக்டேர் (அல்லது 46 எக்டேர் சதவீதம்) ஆகும். சுமார் 3.0 மில்லியன் (அல்லது 50 சதவீதம்) பகுதி. கீழே குறிப்பிட்டுள்ள பல்வேறு நீர் ஆதாரங்களிலிருந்து பாசன வசதிகளைப் பெறுகிறது:—

| | | |
|---|---|---|
| அரசு வாய்க்கால்கள் | .. | 0.95 மில்லியன் எக்டேர் |
| ஏரிகள் | ... | 0.90 மில்லியன் எக்டேர் |
| கிணறுகள், குழாய்க் கிணறுகள் முதலியன | ... | 1.15 மில்லியன் எக்டேர் |

**2.2, தமிழ்நாட்டில் பாசன மேம்பாடு:**

பெரிய, நடுத்தர பாசனத் துறைகளின் கீழ் மாநில மொத்த பாசன வளம் 1976-ல். 1.5 மில்லியன் எக்டேர் என்று தேசிய வேளாண் குழு நிர்ணயித்துள்ளது. முதல் ஐந்தாண்டுத் திட்டத் தொடக்கத்தில் மொத்தம் 1.10 மில்லியன் எக்டேர் பகுதி பயனடையும் வகையில் 23 பெரிய நடுத்தரப் பாசனத் திட்டங்கள் வகுக்கப்பட்டன. ஏழாம் திட்டக் காலத்தில் பாசனப் பகுதி 1.453 மில்லியன் எக்டேராக அதிகரித்துள்ளது. 1990-91

[1991 செப்டம்பர் 26

ஆம் ஆண்டு திட்டக் காலத்தில், 6,761 எக்டேர் பாசன வளம் உருவாக்கப்பட்டுள்ளது. 1991-92 ஆம் ஆண்டில் 3,975 எக்டேர் பாசன வளம் உருவாக்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

2.3. மாநிலத்தின் நீர் ஆதாயங்களில் பெரும்பான்மையானவை ஏற்கனவே பயன்படுத்தப்பட்டுள்ளன. பாசனத்தை மேம்படுத்துவதற்காக, மாநிலத்தில் கிடைக்கக் கூடிய நீர் ஆதாரங்கள் கூடுதலாகக் கிடைப்பதற்கு வாய்ப்பே இல்லை. எனவே தமிழ்நாட்டின் நீர் ஆதாயங்களைப் பெருக்குவதற்காகப் அண்டை மாநிலங்களான கேரளம், கருநாடகம், ஆந்திரப் பிரதேசம் ஆகியவற்றின் வடிநிலப் பகுதிகளில் கிடைக்கக் கூடிய உபரி நீரைத் திருப்பிவிடுவது பற்றிய கருத்துரு மத்திய அரசு உருவாக்கிய தேசிய நீர்வள அமைப்பின் பரிசீலனையில் உள்ளது. தேசிய நீர்வள அமைப்பு, ஆற்று நீர்வள மேம்பாட்டு திட்டங்களை ஆய்வு செய்யும் பணியை மேற்கொண்டுள்ளது. கேரளத்தில் மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளான பம்மை, அச்சன் கோயில் ஆகிய ஆறுகளின் உபரி நீரை, மதுரை இராமநாதபுரம் காமராஜர், திருநெல்வேலி, கட்டபொம்மன் ஆகிய மாவட்டங் களிலுள்ள வறண்ட கால்வாய்கள் பயனுறும் வகையில் இழுக் காகத் திருப்பி விடுதல், மகாநதி கோதாவரி, கிருஷ்ணா ஆகிய ஆறுகளைப் பெண்ணாறு, காவிரி, வைகை ஆறுகளுடன் இணைக் தல், ஆகிய, பணிகளையும் இந்த அமைப்பு மேற்கொண்டுள்ளது. இவ்வரசு இதுபற்றி அண்டை மாநிலங்களுடனும், மத்திய அரசுடனும் தீவிரமாகப் பரிசீலிக்கக் கருதியுள்ளது.

2.4. நம் மாநிலத்தில் கிடைக்கக் கூடிய பற்றாக் குறையுள்ள நீர் ஆதாரங்களைச் சிக்கனமாகவும், பயனுள்ள வகையிலும், பயன்படுத்தும் பொருட்டு, பாசன முறைகளை நவீனப்படுத்தும் திட்டங்களை, மாநில அரசின் நிதியுதவியுடன் காவிரி கழிமுகப் பகுதியை நவீனப்படுத்தும் திட்டமும் இன்றியமையாத் திட்டங் களாகும். எஞ்சியுள்ள பாசனத் திட்டங்களையும் படிப்படியாக நவீனப்படுத்தும் பணியையும் மேற்கொள்ள இவ்வரசு உத்தேசித் துள்ளது.

3. <u>நடைபெற்று வரும் பாசனத் திட்டங்கள்:</u>

3.1. இவ்வரசு, பின்வரும் பாசனத் திட்டங்களைத் தீவிர மாகச் செயற்படுத்தி, 1991-92 ஆம் ஆண்டில் அவற்றை முடிக்க உத்தேசித்துள்ளது. இதனால், இத்திட்டங்களின் ஆயக்கட்டுப் பகுதிகளிலுள்ள உழவர்களுக்குப் பாசன பயன்கள் விரிவு படுத்தப் படும்.



991 செப்டம்பர் 26]

| தொடர் எண். | திட்டத்தின் பெயர். | பயனடையும் மாவட்டம். |
|---|---|---|
| 1. | கேரவளப்பள்ளி நீர்த்தேக்கத் திட்டம். | தர்மபுரி மாவட்டம். |
| 2. | ஆனைமடுவு நீர்த்தேக்கத் திட்டம். | சேலம் மாவட்டம். |
| 3. | நொய்யல் ஒரத்துப்பாளையம் நீர்த்தேக்கத் திட்டம். | பெரியார் திருச்சிராப் பள்ளி மாவட்டங்கள். |
| 4. | குடகனாறு நீர்த்தேக்கத் திட்டம். | திண்டுக்கல் அண்ணா திருச்சிராப்பள்ளி மாவட்டங்கள். |
| 5. | கோல்வார்பட்டி நீர்த்தேக்கத் திட்டம். | காமராஜர் மாவட்டம். |
| 6. | கரியக்கோவில் நீர்த்தேக்கத் திட்டம் | சேலம் மாவட்டம். |
| 7. | சின்னவேடம்பட்டி நீர்த்தேக்கத் திட்டம். | கோயம்புத்தூர்மாவட்டம் |
| 8. | சென்னம்பட்டி அணைக்கட்டு | காமராஜர் மாவட்டம். |

3.2. பாசனப் பயன்கள் இயன்ற விரைவில் மக்களுக்குக் கிடைக்கும் வகையில் பின்வரும் பாசனத் திட்டப் பணிகளை விரைவு படுத்த கருதப்பட்டுள்ளது:—

| | | |
|---|---|---|
| 1. | சோத்துப் பாறை நீர்த்தேக்கத் திட்டம். | திண்டுக்கல் அண்ணா மாவட்டம் |
| 2. | நன்கஞ்சியாறு நீர்த்தேக்கத் திட்டம். | திண்டுக்கல் அண்ணா மாவட்டம். |
| 3. | மதுராந்தகம் வலப்புற கால்வாய்த் திட்டம். | செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டம். |
| 4. | நம்பியாறு நீர்த்தேக்கத் திட்டம். . | திருநெல்வேலி-கட்ட பொம்மன் மாவட்டம், |
| 5. | பொய்கையாறு நீர்த்தேக்கத் திட்டம். | கன்னியாகுமரி மாவட்டம். |
| 6. | கொடுமுடியாறு நீர்த்தேக்கத் திட்டம். | திருநெல்வேலி-கட்ட பொம்மன் மாவட்டம். |

3.3. தேக்கடிக்கு அருகிலுள்ள பெரியார் அணை, திண்டுக்கல் அண்ணா மதுரை, பசும்பொன்முத்துராமலிங்கத் தேவர், இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களிலுள்ள பெரியார் ஆயக் ட்டுப் பகுதிகளின் முக்கியமான பாசன அமைப்பாகும். கேரள

அரசு, இந்த அணையின் பாதுகாப்புக் குறித்து அச்சம் தெரிவித்
துள்ளது. தமிழக அரசு, கேரள அரசு, மத்திய நீர்வளக்குழு
ஆகியவை இணைந்து நடத்திய ஆய்விற்குப் பின்னர், பெரியார்
அணையை வலுப்படுத்துவது பற்றி முடிவு எடுக்கப்பட்டது.
மத்திய நீர்வளக்குழு ஆலோசனையின் பேரில், பெரியார்
அணையை வலுப்படுத்தும் பணி எடுத்துக்கொள்ளப்பட்டது.
வலுப்படுத்தும் பணிகள் முடிவடையும்வரையில் அணையில் 136
அடி ஆழம்மட்டுமே தண்ணீர் நிரப்பப்படுகிறது. இப்பணிகள்
விரைவுபடுத்தப்பட்டு, இவ்வாண்டு இறுதிக்குள் முடிக்கக்
கருதப்பட்டுள்ளது.

4. தேசிய நீர் மேலாண்மைத் திட்டம்:

4.1. இத்திட்டம் இந்தியாவில் தமிழ்நாடு, ஆந்திரபிரதேசம்,
கருநாடகம் ஆகிய மூன்று தென் மாநிலங்களில் 1986–87 ஆம்
ஆண்டில் தொடங்கப்பட்டது. தேவை ஏற்படின், பயிரிடு
முறையை மாற்றியமைத்து, நம்பிக்கையூட்டும் வகையிலும்,
முன்கூட்டியே அறிந்து கொள்ளும் வகையிலும், ஆயக்கட்டு முழு
வதற்கும் சரிசமமாக பாசனத்திற்கு நீர் வழங்கும் முறையைப்
பின்பற்றியும் தற்போதுள்ள பாசன ஏற்பாடுகளின் மூலம்
"உற்பத்தியளவையும், பண்ணை வருவாயையும்" பெருக்குவதே
இத்திட்டத்தின் முக்கியக் குறிக்கோளாகும். இத்திட்ட ஒப்பந்தம்
உலக வங்கி, இந்திய அரசு பங்கு பெறும் மாநிலங்கள் ஆகிய
வற்றால், 28–1–1987 அன்று ஒப்பமிடப்பட்டது. பயிர்களுக்குத்
தேவையான அளவு நீரை வழங்குவதற்கு உறுதி செய்யும்
வகையில் திட்டங்களை வடிவமைத்தல்பராமரிப்பு நடவடிக்கைகள்
குறித்துத் திட்டமிடுதல், அவற்றை செயல்படுத்துதல்,
கண்காணித்தல் ஆகியவற்றிற்குத் தேவையான செயல் திறனைப்
பெற இத்திட்டம் மாநிலங்களுக்கு உதவும்.

4.2 தமிழ்நாட்டில் நிறைவேற்றப்படுவதற்காக கீழ்க்கண்ட
திட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன;—

1. சாத்தனூர் துணைத் திட்டம்.
2. கோதையாறு துணைத் திட்டம்.
3. தாமிரபரணி துணைத் திட்டம்.
4. அமராவதி துணைத் திட்டம்.
5. கம்பம் பள்ளத்தாக்குத் துணைத் திட்டம்,
6. சேத்தியா தோப்பு துணைத் திட்டம்.
7. மருதா நதி துணைத் திட்டம்.

இத் திட்டப் பணியின் மொத்த செலவு ரூ. 52.70 கோடி
யாகும். பயனடையும் மொத்த ஆயக்கட்டுப் பகுதி 1,53,748
எக்டேர் ஆகும்.



4.3. துணைத் திட்டங்களின் செயல் முன்னேற்றம்:

4.3.1. சாத்தனூர் துணைத் திட்டம்:

நீர் முறைப்படுத்தும் குறுக்கு மதகுகள் அமைத்தல்,
சீரமைத்தல், நீர்வழிந்தோடும் கட்டுமானங்கள் குளங்களுக்கு
நீர்வரத்துக்கான இணைப்புக் கால்வாய்கள் அமைத்தல், மதகுகள்
அமைத்தல் ஆகிய கட்டுமானப் பணிகள் செயயப்பட்டன. இத்
திட்டத்தின் மூலம் பயனடையும் ஆயக்கட்டுப் பகுதியின் பரப்பு
18,210 எக்டேர் ஆகும்.

4.3.2. கோதையாறு துணைத் திட்டம்:

கோதையாறு கால்வாயை பலப்படுத்துதல், கரையை
வலுப்படுத்துதல், சுரங்கப் பாதையைப் பாதுகாத்தல் ஆகிய
பணிகள் நடைபெற்று வருகின்றன. புத்தனாறு கால்வாய்
தோவாளைக் கால்வாய், பட்டணங்கால் கால்வாய், அனந்தனாய
கால்வாய், இராதாபுரம் கால்வாய், பாழையார் ஆறு ஆகிய
வற்றைச் சீர்படுத்தும் வேலை நடைபெற்று வருகிறது. இத்
திட்டத்தின் மூலம் பயனடையும் ஆயக்கட்டுப் பகுதியின் பரப்பு
36,900 எக்டேர் ஆகும். 1991–92–ல் இப்பணிகளை விரைவு
படுத்தக் கருதப்பட்டுள்ளது.

4.3.3 தாமிரபரணி துணைத் திட்டம்;

அணைக்கட்டுகள், கால்வாய்கள், கிளைக் கால்வாய்கள்
ஆகியவற்றைப் பழுது பார்த்தல் ஏரிகளை மேம்படுத்துதல்,
கழிவு நீர் அகற்றுதல், வெள்ளக் கட்டுப்பாட்டுக் கரைகள்
அமைத்தல் போன்ற பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன.
இத்திட்டத்தின் மூலம் பயனடையும் ஆயக்கட்டுப் பகுதியின்
பரப்பு சுமார் 45,300 எக்டேர் ஆகும்.

4.3.4. அமராவதி துணைத் திட்டம்;

அணைக்கட்டுகள் பழுது பார்த்தல், அணைக்கட்டுகளுக்கு
அணுகு சாலைகள் அமைத்தல், கால்வாய்களையும், கால்வாய்
கட்டுமானங்களையும் பலப்படுத்துதல், கடைசி ஏழு கால்வாய்
களுக்கு நீர் கிடைக்கச் செய்ய கடைமடைப் பகுதியில் புதிய
அணைக்கட்டு ஒன்று கட்டுதல், தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்
களில் கால்வாய்களுக்கும் கிளைக் கால்வாய்களுக்கும் கரை
யமைத்தல் ஆகிய பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன
இத்திட்டத்தினால், சுமார் 22,400 எக்டேர் பயனடைகிறது.

4.3.5. கம்பம் பள்ளத்தாக்குத் துணைத் திட்டம்.

வைரவன் கால்வாய், கம்பம் சின்னவாய்க்கால், ஊத்துமுத்துக்
கால்வாய் முதலியவற்றைப் பலப்படுத்துதல், கட்டுப்பாட்டு
அமைப்புகளையும், தலைமை மதகு கலிங்கல்களையும் கட்டுதல்
அணைக்கட்டுகள் மாற்று வழிக் கால்வாய்கள், நேரடியாக ஏரி

களுக்கு நீர் எடுத்துச் செல்லும் கால்வாய்கள் முதலியவற்றை சீர்படுத்தி புதுப்பித்தல் போன்ற பணிகள் இத்துணைத் திட்டத் தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டத்தினால் பயன் பெறும் ஆயக்கட்டு பகுதிகள் சுமார் 8,100 எக்டேர் ஆகும்.

## 4.3.6. சேத்தியாத்தோப்பு துணைத் திட்டம்

இத்துணைத் திட்டப் பணிகள், மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த ஆண்டில் இப்பணிகளை முனைந்து விரைவாக மேற் கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தினால் 19,500 எக்டேர் பயனடையும்.

## 4.3.8. மருதா நதி துணைத் திட்டம்

இத்திட்டத்திற்கு இந்நிதியாண்டில் அனுமதி வழங்கப் பட்டுள்ளது. இப்பணி விரைந்து நிறைவேற்றப்படும். இத் திட்டத்திற்கு 1991—92 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீடு ரூ. 16.625 இலட்சமாகும்.

## 5. பெரியாறு—வைகை பாசன அமைப்பை நவீனப்படுத்துதல்

5.1. நீரைக் கொண்டு செல்லும்போதும் அதனைப் பயன் படுத்தும் போதும் நீர் வீணாவதை தடுக்க கால்வாய் அமைப்பை புதுப்பிப்பதன் மூலமும் நவீனப்படுத்தும் மூலமும் பெரியாறு, வைகை பாசன அமைப்பை நவீனப்படுத்தும் திட்டம் வகை செய்கிறது. இவ்வாறு சேமிக்கப்படும் நீர்ப்பாசன வசதிகளை மேம்படுத்த பயன்படுத்தப்படுகிறது. இத்திட்டம் இரு நிலை களில் நிறைவேற்ற எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

### 5.2.1. முதல் நிலை

இத்திட்டத்தின் முதல் நிலைப் பணிகள், உலக வங்கியின் நிதியுதவியுடன் 23.00 மில்லியன் அமெரிக்க டாலரை, முழு அளவிற்குப் பயன்படுத்தி, ரூ. 46.40 கோடி செலவில் 1977 ஜூலை திங்களில் தொடங்கி, 1984 ஆகஸ்டு திங்களில் முடிக்கப் பட்டன. இதன் பயனாக, மதுரை, பசும்பொன் முத்துராம லிங்கத் தேவர் ஆகிய மாவட்டங்களில் சுமார் 10,300 எக்டேர் நிலம் கூடுதலாகப் பாசன வசதி பெற்றுள்ளன.

### 5.2.2. இரண்டாம் நிலை

இத்திட்டத்தின் இரண்டாம் நிலைப்பணி 35.00 மில்லியன் அமெரிக்க டாலர் உலக வங்கி நிதி உதவியுடன் ரூ. 56,86 கோடி மதிப்பீட்டுச் செலவில் முதல் நிலைப்பணி நடைபெற்று வந்தபோதே அதாவது 1983 அக்டோபர் திங்களிலேயே மேற் கொள்ளப்பட்டது.



சுழற்சி முறையில் நீரைத் திறந்து விடும் முறையைப் பின் பற்றி, இத்திட்டத்திற்கு உட்பட்ட பகுதியில், நீரை நன்முறை யில் பயன்படுத்துவதற்கான உத்திகளை மேம்படுத்துவதற்கு, பண்ணை மேம்பாட்டு பணிகள், பாசனத்திற்கு நீர் விடுவதை கணிப் பொறிமயமாக்குதல் நவீன நீர் பயன்பாட்டு உத்திகளில் உழவர்களுக்குப் பயிற்சி அளித்தல் ஆகிய வகைகளில் இத்திட்டத் தின் இரண்டாம் நிலையில் தனி முக்கியத்துவம் அளிக்கப்படும். பொது மக்கள் செய்து கொண்ட முறையீட்டுகளின் அடிப்படை யில், இரண்டாம் நிலைப் பணிகளுடன் தொடர்புடைய சில கூடுதல் பணிகளும் இதில் சேர்த்துக் கொள்ளப்பட்டதுடன், இத் திட்டத்திற்கான செலவு ரூ. 56.96 கோடியிலிருந்து ரூ. 70.00 கோடியிலிருந்து ரூ. 70.00 கோடியாக உயர்த்தப்பட்டது.

5.2.3 பெரியாறு முதன்மைக் கால்வாயில் வண்டல்படி வதைத் தடுப்பதற்காகவும் பேரணையில் மதகுப் பலகைகளை இயக்குவதில் ஏற்பட்ட இடர்பாடுகளை நீக்கவும், இந்த அமைப் பின் ஒட்டு மொத்தத் திறனை மேம்படுத்தவும், வைகை அணைக்கட்டிற்கு கீழே உள்ள நீர்வரத்து அ ணப் பகுதியிலிருந்து பேரணை பொறி மதகுவரை, 32.38 கி.மீ. தொலைவிற்கு இணைப்புக் கால்வாய் ஒன்றை ரூ. 25.00 கோடி செலவில் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனால் இரண்டாம் நிலைத் திட்டத்திற்கான செலவு ரூ. 95.00 கோடியாக மேலும் அதிகரித்தது. இணைப்புக் கால்வாய் பணியை நிறைவேற்றுவதன் பயனாக, நிலக்கோட்டை, பெரியகுளம் வட்டங்களில் கூடுதலாக 1,620 எக்டேர் பரப்பளவு நிலம் பாசன வசதி பெறும். இணைப்புக் கால்வாய் பணிகளை 1993 ஏப்ரல் திங்களுக்குள் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

## 6. ஏரிப்பாசன அமைப்புகளைப் பராமரித்தல்

6.1. இம்மாநிலத்தில் கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பகுதி பரப்பு, ஏரிப் பாசனத்தின் மூலம் பாசன வசகி பெறுகிறது. மிகப் பழைய ஏரிகளை நன்னிலையில் வைக்கவும், உரிய முறை யில் பராமரிக்கவும் இந்த அரசு மிகுந்த முக்கியத்துவம் அளிக் கின்றது.

தமிழ் நாட்டிலுள்ள சுமார் 39,000 ஏரிகளில், 40 எக்டே ருக்கு மேல் பாசன வசதி அளிக்கின்ற சுமார் 8,900 ஏரிகள் பொதுப்பணித் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளன. இவற்றைத் தவிர, சுமார் 9,700 முன்னாள் ஜமீன் ஏரிகளும் உள்ளன. எஞ்சிய ஏரிகள், பல்வேறு ஊராட்சி ஒன்றியங்களின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளன.

6.2. ஊராட்சி ஒன்றியங்களின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள ஏரிகளைப் பழுதுபார்த்து, பராமரிக்கும் பணிகள், விரைவு படுத்தப்பட்ட சிறு பாசனத் திட்டங்கள், ஏனைய சிறப்புத் திட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன. ஊரக வளர்ச்சித்

துறை, சிறு பாசன ஆதாரங்களை, நன்னிலையில். வைத்திருப்
பதற்காக ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் பொதுப்
பணித் துறை மூலமாக நிறைவேற்றுவதற்கென (சிறுபாசனபிரிவு)
ரூ 10கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. இத்திட்டப்பணிகள், 1991
பிப்ரவரியில் தொடங்கப்பட்டன. இப்பணிகளை விரைபடுத்தி,
இந்த ஆண்டிற்குள்ளேயே முடித்திட திட்டமிடப்பட்டுஸ்ளது.

**6.3 ஐரோப்பிய பொருளாதார குழுவின் நிதி உதவியுடன் தமிழ் நாட்டிலுள்ள ஏரி பாசன அமைப்பை நவீனப்படுத்துதல்.**

**6.3.1. முதல் நிலை**

இது ஐரோப்பிய பொருளாதார குழுவிடமிருந்து 25 எம்.இ
இ.யு. (Millian Eurcpeen Curreicy Units) உதவி பெற்று செங்கல்
பட்டு—எம்.ஜி.ஆர்., வட ஆற்காடு அம்பேத்கார், திருவண்ணா
மலை—சம்புவராயர், தென்னாற்காடு, புதுக்கோட்டை, பசும்
பொன் முத்துராமலிங்கத் தேவர், இராமநாதபுரம், காமராஜர்
ஆகிய எட்டு மாவட்டங்களில் ஒவ்வொன்றும் 200 எக்டேர் பரப்
பிற்கு குறையாமல் பாசன வசதி அளிக்கும் 150 மானாவாரி
ஏரிகளை நவீனப்படுத்துவதற்கான திட்டமாகும். இத்திட்டப்
பணிகள், 1984 ஜூலைத் திங்களில் தொடங்கப்பட்டன.

ஐரோப்பிய நாணயத்தின் மதிப்பு 1984 ஜூலையில் 9.50—
லிருந்து 1988 ஆம் ஆண்டில் ரூ. 16 ஆக உயர்ந்தது. ஐரோப்பிய
பொருளாதாரக் குழு அளித்த மானியத் தொகையான 25
மில்லியனையும் பயன்படுத்திக் கொள்ளும் பொருட்டு, அந்நிய
செலவாணி மாற்று மதிப்பில் ஏற்றத்தாழ்வுகளைக் கருத்தில்
கொண்டு, நவீனப்படுத்துவதற்காக ஏற்கனவே எடுத்துக் கொள்ள
பட்டுள்ள 150 ஏரிகளுடன் கூடுதலாக 56 ஏரிகள் எடுத்துக்
கொள்ளப்பட்டுள்ளன. இப்பணிகள் விரைவுப்படுத்தப்பட்டு
இவ்வாண்டில் முடிக்கப்படும்.

**6.3.2. இரண்டாம் நிலை**

ஐரோப்பிய பொருளாதாரக் குழுவின் உதவியுடன் ஏரிகளை
நவீனப்படுத்தும் திட்டத்தின் இரண்டாம் நிலை, இரு பகுதி
களைக் கொண்டது. முதலாவது, செங்கற்பட்டு எம்.ஜி.ஆர்.,
வடஆற்காடு—அம்பேத்கார், திருவண்ணாமலை—சம்புவராயர்'
தென்னாற்காடு, புதுக்கோட்டை, பசும்பொன் முத்துராமலிங்கத்
தேவர், இராமநாதபுரம், காமராஜர், திருச்சி, மதுரை, திண்டுக்
கல் அண்ணா, திருநெல்வேலி கட்டபொம்மன், சிதம்பரனார்
ஆகிய மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் 100 எக்டேர் முதல் 200
ஏக்டேர் வரை ஆயக்கட்டுப் பகுதிகளைக் கொண்ட 150 ஏரிகளை
நவீனப்படுத்துவதாகும். மற்றொன்று, பசும்பொன்முத்துராம
லிங்கத்தேவர், இராமநாதபுரம், காமராஜர், புதுக்கோட்டை
ஆகிய நான்கு மாவட்டங்களிலுள்ள 80 முன்னாள் ஜமீன் ஏரி
களை நவீனப்படுத்துவதற்கான முன்னோடித் திட்டமாகும்.



150 பெரிய ஏரிகளை நவீனப்படுத்துவதன் மூலம், மொத்தம்
20.300 ஏக்டேர் பாசனப் பகுதிகளும், 80 சிறிய முன்னாள்
ஜமீன் ஏரிகளை நவீனப்படுத்தும் முன்னோடித் திட்டத்தின் மூலம்
மொத்தம் 2,080 எக்டேர் பாசனப் பகுதிகளும் பயனடையும்,

இத்திட்டத்திற்கான மொத்த செலவு ரூ. 33.20 மில்லியன்
ஐரோப்பிய பொருளாதார நாணயமாகும். இது இந்தியப்பணம்
ரூ. 53.12 கோடிக்குச் சமமாகும். ஐரோப்பிய பொருளாதாரக்
குழுவின் மானியத் தொகை 24.50 மில்லியன் ஐரோப்பிய
பொருளாதார நாணயமாகும். இது, ரூ. 39,20 கோடிக்குச்
சமமாகும். இதில் தமிழ்நாடு அரசின் பங்கு 8.70 மில்லியன்
ஐரோப்பிய பொருளாதார நாணயமாகும். இத்தொகை ரூ.13.92
கோடிக்குச் சமமாகும்.

இத்திட்டம் 1989 ஆகஸ்டில் தொடங்கப்பட்டது. 1995
மார்ச்சுக்குள் முடிக்கப்படவிருக்கிறது. இவ்வரசு இத்திட்டத்தை
விரைந்து செயல்படுத்தி, குறித்த காலத்திற்கு முன்னர் முடிக்கக்
கருதியுள்ளது.

6.4 ஆதி திராவிடர் பழங்குடி நலத்துறை ஒதுக்கிய நிதி
களிலிருந்து மத்திய உதவியுடன், ஒருங்கிணைந்த பழங்குடியினர்
மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தடுப்பு அணைகள் கட்டுதல்'
கசிவு நீர்க் குட்டைகள் அமைத்தல் முதலிய திட்டங்களையும்,
நீலகிரி மாவட்டத்தில் மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தை
யும், கோயம்புத்தூர், பெரியார், திண்டுக்கல்—அண்ணா, மதுரை
கரமராஜர், திருநெல்வேலி கட்டபொம்மன் கன்னியாகுமரி
ஆகிய மாவட்டங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட 24 வட்டங்களில்
மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டத்தையும், இத்
துறை செயல்படுத்தி வருகிறது.

**7. அணைப் பாதுகாப்பு, உறுதி மற்றும் சீரமைப்புத் திட்டம்**

அணைப் பாதுகாப்பு, உறுதி மற்றும் சீரமைப்புத் திட்டத்
திற்கு நிதியுதவி அளிக்க உலக வங்கி முன்வந்துள்ளது. இத்
திட்டத்தில் தமிழ்நாடு, இராஜஸ்தான், ஒரிசா, மத்தியபிரதேசம்
ஆகிய நான்கு மாநிலங்கள் பங்கு கொண்டுள்ளன. இத்திட்டத்
தில் பின்வரும் பணிகள் அடங்குகின்றன. அவையாவன:

1. ஏற்கெனவே செயல்பட்டு வருகின்ற அணைப் பாதுகாப்பு
நிறுவன அமைப்பைச் சீரமைத்தல்.

2. அணைப் பகுதியில் உள்ள பாதுகாப்பு வசதிகளை மேம்
படுத்துதல்.

3. பாழடைந்த அணைகளைச் சீரமைத்தல்.

[1991 செப்டம்பர் 26

தமிழ்நாட்டில் இத்திட்டத்தை செயல்படுத்துவதற்காக உலக வங்கி 41.85 கோடி ரூபாய் நிதியுதவி வழங்குகிறது.

இத்திட்டத்தின் கீழ் பின்வரும் அணைகள் மேம்படுத்தக் கருதப்பட்டுள்ளன;

1. பெரியாறு
2. குடகனாறு
3. பேச்சிப்பாறை
4. பெருஞ்சாணி
5. மணிமுத்தாறு
6. வீடூர்
7. கோமுகி
8. உப்பாறு
9. பொன்னணியாறு

8. கடலரிப்புத் தடுப்புப் பணிகள்

தமிழ் நாட்டில் சுமார் 960 கிலோ மீட்டர் நீளத்திற்குக் கடற்கரை உள்ளது. வட சென்னை, தஞ்சாவூர், சிதம்பரனார் நெல்லைக் கட்டபொம்மன், கன்னியாகுமரி ஆகிய மாவட்டங் களின் பருவ மழை காலங்களில் கடலரிப்பு மோசமாக உள்ளது. இம் மாவட்டங்களில் கடலரிப்புத் தடுப்புப் பணிகள் ஒரு கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

9. கிருஷ்ணா நதி நீர் வழங்கல் திட்டம்.

9.1. 1976 ஆம் ஆண்டில் அப்போதைய இந்தியப் பிரதமர் எடுத்துக் கொண்ட முயற்சியின் விளைவாக, சென்னை மாநகருக்கு வழங்கப்படும் குடிநீர் அளவை அதிகரிக்கும் பொருட்டு, ஆந்திரப் பிரதேசம், கருநாடகம், மகாராஷ்டிரம் ஆகிய மாநிலங்கள் ஒவ்வொன்றும் கிருஷ்ணா நதியிலிருந்து 5 டி.எம்.சி., (T.M.C.) தண்ணீரை விட ஒப்புக்கொண்டுள்ளன. 15 டி.எம்.சி., தண்ணீரை கிருஷ்ணா நதியிலிருந்து பெறு வதற்கான திட்டத்தைச் செயல்படுத்தும் பொருட்டு தமிழ்நாடு அரசு, 18-4-1983 ஆம் நாளன்று ஆந்திர மாநில அரசுடன் ஒப்பந்தம் செய்து கொண்டது. இத் திட்டமானது, கூட்டுத் திட்டம் என்ற வகையில் செயல்படுத்தப்படுகிறது. அதாவது, இத்திட்டம், ஆந்திர மாநிலத்தில் தெலுங்கு கங்கைத் திட்டமாகவும், தமிழ்நாடு மாநிலத்தில் கிருஷ்ணா நதிநீர் திட்டமாகவும் செயல்படுகிறது. சம்பந்தப்பட்ட மாநிலங்களின் அதிகார எல்லைக்குள் வரக்கூடிய இத் திட்டம் தொடர்பான பணிகள், அந்தந்த மாநில அரசுகளால் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. ஆந்திர மாநிலத்தில் இத்



1991 செப்டம்பர் 26]

திட்டம் தொடர்பாக மேற்கொள்ளப்படும் பணிகளுக்காகும் செலவில் ஒரு பகுதியைத் தமிழ்நாடு அரசு ஏற்கவேண்டும். இவ்விரு மாநில அரசுகளும் தங்களுடைய மாநில பகுதிக்குள் உள்ள இத்திட்டம் தொடர்பான பணிகளை 1983 ஆம் ஆண்டிலேயே தொடங்கிவிட்டன.

9.2. 1989-90 ஆம் ஆண்டில் நிலவிய விலை வீதங்களின் அடிப்படையில் மதிக்கப்பட்ட "சோமசிலா—இரண்டாம் நிலை பணிகள் உட்பட ஆந்திர மாநிலத்தில் மேற்கொள்ளப்படும் பணிகளுக்காகும். மொத்தச் செலவு 1,088.29 கோடி ரூபாய் என கணக்கிடப்பட்டது. மேற்சொன்ன தெலுங்கு கங்கைத் திட்டச் செலவில் தமிழ்நாட்டின் பங்கு 274.26 கோடி ரூபாய் என கணக்கிடப்பட்டது. 1991 ஜூன் மாதம் வரையில் ஆந்திர மாநில அரசால் செலவிடப்பட்ட 417.22 கோடி ரூபாய் மொத்தத் தொகையில் தமிழ்நாடு அரசின் பங்குத் தொகை ரூபாய் 105.03 கோடி ஆகும். தெலுங்கு கங்கைத் திட்டப் பணிகளுக்காகும் செலவுத் தொகையில் தமிழ்நாடு அரசின் பங்குத் தொகையாக 122 கோடி ரூபாய் தமிழ்நாடு அரசு, ஆந்திர மாநில அரசுக்கு முன்பணமாக இதுவரை கொடுத்துள்ளது. ஆந்திர மாநில அரசு, தெலுங்கு கங்கைத் திட்டப் பணிகளுக்காக 1991-92-ல் 50 கோடி ரூபாயை ஒதுக்கியுள்ளது. தமிழ்நாடு மாநில அரசும், தெலுங்கு கங்கைத் திட்டத்திற்காகும் செலவில் தமிழ்நாடு அரசின் பங்குத் தொகை என்ற வகையில் 1991-92 ஆம் ஆண்டின் 45.00 கோடி ரூபாயை ஒதுக்கியுள்ளது. கிருஷ்ணா நதியின் ஒரு பகுதி நீரை சென்னை மாநகருக்கு 1993-94 ஆம் ஆண்டு வாக்கில் வழங்க இயலும் வகையில் இன்றியமையாத திட்டப் பணிகளை நிறைவேற்றி முடிப்பதாக, 2-7-1991 ஆம் நாளன்று ஐதராபாத்தில் கடைசியாக நடந்த பணி இணக்கக் கூட்டத்தில் ஆந்திர மாநில அரசு அதிகாரிகள் ஒப்புக் கொண்டுள்ளனர்.

9.3.1. தமிழ்நாடு எல்லைக்குள் நடைபெற்றுவரும் பணிகளின் முன்னேற்றம்:

தமிழ்நாடு அரசு பின்வரும் பணிகளை நிறைவேற்ற எடுத்துக் கொண்டுள்ளது:—

(i) தமிழ்நாடு எல்லையிலிருந்து பூண்டி நீர்த்தேக்கத்திற்குக் கண்டலேறு—பூண்டி கால்வாய் வெட்டுதல்.

(ii) பூண்டி நீர்த்தேக்கத்திலிருந்து செம்பரம்பாக்கம் ஏரிக்கு இணைப்புக் கால்வாய் வெட்டுதல்.

(iii) இணைப்புக் கால்வாயின் 10.5 கிலோமீட்டர் தொலைவிலிருந்து நீர் வழங்கும் கால்வாய் வெட்டி, புழலேரிக்கு நீர் வழங்குதல்.

[1991 செப்டம்பர் 26

(iv) பூண்டி நீர்த்தேக்கத்தின் முழு நீர்த்தேக்க அளவை உயர்த்துதல்.

(v) செம்பரம்பாக்கம் ஏரியின் முழு நீர்த்தேக்க அளவை உயர்த்துதல்.

(vi) புழலேரியின் முழு நீர்த்தேக்க அளவை உயர்த்து தல்.

9.3.2. இத் திட்டப் பணிகள் அனைத்தும் நடைபெற்று வருகின்றன.

9.3.2.1. தமிழ்நாடு மாநில எல்லைக்குள் 25 கிலோ மீட்டர் தொலைவிற்குக் கண்டலேறு பூண்டி கால்வாய் வெட்டும் பணியில், 92 சதவீதப் பணிகள் முடிந்துவிட்டன. இது சம்பந்தமான அனைத்துப் பணிகளும் 1991–92 ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டுவிடும்.

9.3.2.2. இணைப்புக் கால்வாய் வெட்டும் பணி மேற்கொள்ளப்பட்டு, நடைபெற்று வருகிறது. கிருஷ்ணா நதி நீரை 1993 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களுக்குள், புழலேரிக்கு கொண்டு செல்வதற்காக, 10.5 கிலோ மீட்டர் தொலைவுக்கு இணைப்புக் கால்வாய் வெட்டும் அனைத்துப் பணிகளும் 1992–93 ஆம் ஆண்டிற்குள் முடிக்கக் கருதப்பட்டுள்ளது.

9.3.2.3. புழலேரி வரை நீர் வழங்கும் கால்வாய் வெட்டும் பணி மேற்கொள்ளப்பட்டு, அப்பணி நடைபெற்று வருகிறது. கிருஷ்ணா நதி நீரை புழலேரிக்கு கொண்டு சென்று, சென்னை மாநகருக்கு வழங்குவதற்காக பங்கீடு செய்யும் இணைப்புக் கால்வாய் வெட்டும் அனைத்துப் பணிகளும் 1992–93 ஆம் ஆண்டில் முடிக்கக் கருதப்பட்டுள்ளது.

9.3.2.4. பூண்டி நீர்த்தேக்கத்தின் முழு நீர்த்தேக்க அளவை உயர்த்தும் பணி முடியும் தருவாயில் உள்ளது. 1991–1992 ஆம் ஆண்டில் இது சம்பந்தமான அனைத்துப் பணிகளும் முடிக்கக் கருதப்பட்டுள்ளது.

9.3.2.5. செம்பரம்பாக்கம் ஏரியின் முழு நீர்த்தேக்க அளவை உயர்த்தும் பணி மேற்கொள்ளப்பட்டு, இப்பணி நடை பெற்று வருகிறது. இது சம்பந்தமான பணி 1992–93 ஆம் ஆண்டில் முடிக்கக் கருதப்பட்டுள்ளது.

9.3.2.6. புழலேரியின் முழு நீர்த்தேக்க அளவை உயர்த்தும் பணி மேற்கொள்ளப்பட்டு இப்பணி நடைபெற்று வருகிறது. 1993 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களுக்குள், புழலேரிக்குக் கிருஷ்ணாநதி நீரைக் கொண்டு வரும் பொருட்டு, இப்பணி 1992–93 ஆம் ஆண்டுக்குள் முடிக்கக் கருதப்பட்டுள்ளது.



1991 செப்டம்பர் 26]

9.3.3. திருக்கண்டலம். இராமஞ்சேரி ஆகிய இடங்களில் புதிதாக இரு நீர்த்தேக்கங்களை அமைக்கும் பணி இரண்டாம் நிலைப் பணியாக 1992–93 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும்.

9.4. கிருஷ்ணாநதி நீர் வழங்கும் திட்டம் குறித்து 1989-90 ஆம் ஆண்டில் செய்யப்பட்ட அண்மைக்கால மதிப்பீட்டுச் செலவு ரூபாய் 181.80 கோடியாகும். 1991 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் வரையில் ஏற்பட்டுள்ள மொத்த செலவு ரூபாய் 29.63 கோடியாகும்.

9.5. 1991–92 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீடு ரூபாய் 26 கோடியாகும். இதில், இதுவரையில் ரூபாய் 3.19 கோடி செலவிடப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள தொகை நடப்பு நிதி ஆண்டில் செலவிடப்படும்.

10. காவிரி நதி நீர்ப் பிரச்சினை:

10.1. இறுதி ஆணை வெளியிடப்படும் வரை ஆண்டொன்றில் ஜூன் திங்கள் முதல் மே திங்கள் வரையிலான கால அளவில், மாதாந்திர முறையில், வாராந் தவணைகளில் தண்ணீர் திறந்துவிடுவதற்காக தமிழ்நாட்டின் மேட்டூர் நீர்த்தேக்கத்தில் 205டி.எம்.சி., நீர் கிடைப்பதை உறுதிசெய்யும் வகையில், கருநாடக அரசு, கருநாடகத்திலுள்ள தங்களுடைய நீர்த்தேக்கங் களிலிருந்து நீரைத் திறந்து விடவேண்டுமென்றும், இந்த உத்தரவு 1–7–1991 ஆம் நாள் முதல் செயலுக்கு வரும் என்றும் குறிப்பிட்டு காவிரி நதி நீர்ப் பிரச்சினை நடுவர் மன்றம், 25–6–1991 ஆம் நாளன்று தங்களுடைய இடைக்கால உத்தரவுகளைப் பிறப்பித்தது.

10.2. நடுவர் மன்றத் தீர்ப்பில் குறிப்பிட்டவாறு நீரைத் திறந்து விடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதில் ஒத்துழைப்பு அளிக்கும்படியும், நீரைத் திறந்து விடுவதற்கான செயல் திட்டம் பற்றி குறிப்பிடும்படியும் கேட்டுக் கொண்டு, தமிழ் நாடு முதலமைச்சர், கருநாடக முதலமைச்சருக்கு 3–7–1991 ஆம் நாளன்று டெலக்ஸ் செய்தியொன்றை அனுப்பினார்.

10.3. 1956 ஆம் ஆண்டு பன் மாநில நீர்த் தகராறுகள் சட்டத்தின் 6 ஆம் பிரிவின்படி நடுவர் மன்றத்தின் முடிவை அரசிதழில் வெளியிடுவது, மத்திய அரசின் தவிர்க்க இயலாத கடமை என்று இந்தியப் பிரதமருக்குத் தெரிவிக்கப்பட்டது. இந்த உத்தரவு 1–7–1991 ஆம் நாள் முதல் செயலுக்கு வரவிருந்ததால். மத்திய அரசு அதனை உடனடியாக அரசிதழில் வெளியிட்டிருக்க வேண்டும்.

10.4. நடுவர் மன்றம் பிறப்பித்த உத்தரவுகளைச் செல்
திறனற்றதாக்குவதும், காவிரி அதன் கிளை ஆறுகள்
ஆகியவற்றின் பாசனப் பாதுகாப்பு, பராமரிப்பு ஆகியவற்றைப்
பேணுவதும் தன் நோக்கம் என்று கூறி கருநாடக அரசு
25–7–1991 அன்று அவசரச் சட்டம் ஒன்றைப் பிறப்பித்தது.

10.5. காவிரி நதி நீர்ப் பிரச்சினை குறித்து நடுவர்
மன்றம் அளித்த இடைக்கால ஆணைக்கு இணங்கி நடக்காமல்
கருநாடக அரசு பிறப்பித்துள்ள அவசர சட்டம், இந்திய
அரசியல் சட்டத்திற்கு இணங்க உள்ளதா என்பது தொடர்பாக
கீழ்க்கண்டவை குறித்து ஆலோசனை நல்குமாறு இந்திய
அரசியலமைப்புச் சட்டத்தின் 143-ஆம் பிரிவின் கீழ் இந்தியக்
குடியரசுத் தலைவர், உச்ச நீதிமன்றத்தின் ஆலோசனையைப்
பெறும் பொருட்டு (மத்திய அரசு கேட்டுக் கொண்டதன் பேரில்)
அனுப்பிவைத்துள்ளார்.

(i) கருநாடக அரசு பிறப்பித்த அவசரச் சட்டம் செல்
திறனுள்ளதா?

(ii) காவிரி நதி நீர்ப்பிரச்சினை குறித்த நடுவர் மன்றம்
பிறப்பித்த இடைக்கால உத்தரவு பன்மாநில நீர்த் தகராறு
கள் சட்டத்தின் 5 (2) பிரிவின் செயல் வரம்புக்குள்
வருகிறதா?

(iii) நடுவர் மன்றம் இடைக்கால உத்தரவைப் பிறப்
பிக்க இயலுமா?

சம்பந்தப்பட்ட தரப்பைச் சேர்ந்த மாநிலங்கள் தங்களுடைய
எழுத்து மூலமான பதிலைத் தாக்கல் செய்தன. குடியரசுத்
தலைவர் கேட்டுக் கொண்டதன் பேரில் உச்ச நீதிமன்றம்
21–8–1991 ஆம் நாளிலிருந்து விசாரணையைத் தொடங்கி
யுள்ளது.

10.6. நடுவர் மன்றத்தின் இடைக்கால உத்தரவுகளைத்
தள்ளுபடி செய்யக் கோரி கருநாடக அரசு, 29–7–1991 ஆம்
நாளன்று தனியாக வழக்கு ஒன்றை உச்ச நீதிமன்றத்தில்
தாக்கல் செய்தது. கருநாடக அரசின் வழக்கை மறுத்து
விடக்கோரி 27–8–1991 ஆம் நாளன்று தமிழ்நாடு அரசு வழக்கு
ஒன்றை உச்ச நீதி மன்றத்தில் தாக்கல் செய்துள்ளது. அந்
நாளில் கருநாடக அரசின் வழக்கிற்கு எதிரான அறிக்கையையும்
தாக்கல் செய்துள்ளது.

10.7. நடுவர் மன்றத்தின் இடைக்கால உத்தரவுகளைச்
செயல்படுத்தவும் அதற்குப் பணிந்து நடக்கவும் கருநாடக
அரசை வலியுறுத்துவதற்கான தீர்ப்பையும், ஆணையையும்
பெறுவதற்காகத் தமிழ்நாடு அரசு வழக்கு ஒன்றைத்தொடுக்க
கருதியுள்ளது.



11 ஆய்வு, நுண்ஆய்வு, ஆராய்ச்சி:

11.1. இம்மாநிலத்தில் மீண்டும் நீர்ச்செறிவு ஏற்படத்தக்க,
நிலத்தடி நீர் ஆதாரம் 30.162 இலட்சம் எக்டேர் மீட்டர்
என்று மதிப்பிடப்பட்டுள்ளது. குடிநீர் வீட்டுப் பயன்,
தொழிற்சாலைப் பயன், பிற பயன்களுக்கான நீரை ஒதுக்கியது
போக பாசனத்திற்காக கிடைக்கும் நீர் ஆதாரம் 25.636
இலட்சம் எக்டேர் மீட்டராகும். இதில், 11.987 எக்டேர்
மீட்டர் நீர்ப் பரப்பு ஏற்கனவே பயன்படுத்தப்பட்டுள்ளது.
இம்மாநிலத்திலுள்ள 375 வளர்ச்சி வட்டாரங்கள் 85 சதவீதத்
திற்கும் மிகையாக நீர்ப் பயன்பாடுள்ள 60 வளர்ச்சி
வட்டாரங்கள் ''கருப்பு நிறம்'' என்றும், நீர்ப்பயன்பாடு
65 சதவீதமுள்ள 66 வளர்ச்சி வட்டாரங்கள் ''சாம்பல் நிறம்''
என்றும் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

11.2. மேற்கொண்டும் நிலத்தடி நீரை எடுக்கக்கூடிய பகுதி
களைக் கண்டறியவும் கிணறுகள் முதலியவற்றை வெட்ட ஏற்ற
இடத்தை வரையறுக்கவும், இம்மாநிலம் முழுவதும் விரிவான
நிலத்தடி நீர் ஆய்வு, நிலத்தடி நீர் அளவு அறிதல் ஆகிய பணிகள்
மேற்கொள்ளப்படுகின்றன.

11.3. பூண்டியிலுள்ள நீரியல்-நீர் அழுத்தவியல் நிறுவனத்
திலும், தரமணியிலுள்ள நீர் வள ஆராய்ச்சி நிறுவனத்திலும்,
இம்மாநிலத்தின் நீர்வளத்தை மதிப்பிடவும், பாசன அமைப்புகள்
கடலரிப்பு முதலியவை தொடர்பான பிரச்சினைகளை
ஆராயவும், ஆராய்ச்சிப் பணி மேற்கொள்ளப்படு
கிறது.

11.4. பொதுப் பணித்துறையின் திட்டம் மற்றும்
வடிவமைப்பு பிரிவு பெரிய நடுத்தர மற்றும் சிறிய பாசனத்
திட்டங்களை உருவாக்கும் பணியைச் கவனித்து வருகிறது.

12. பருவ நிலைகள்:

12.1. 1991–92 ஆம் ஆண்டு பாசன காலத்தில், தென்
மேற்குப் பருவமழை குறித்த நாளில் பெய்யத் தொடங்கியது.
இக்காலத்தில் நல்லமழை பெய்ததால், மதுரை, திருநெல்வேலி
கட்டபொம்மன், சிதம்பரனார், கன்னியாகுமரி ஆகிய தமிழ்
நாட்டின் தென் மாவட்டங்களில் உள்ள நீர்ப்பிடிப்புப் பகுதி
களிலிருந்து கணிசமான அளவு நீர் கிடைத்தது. பெரும்பாலும்
இப்பகுதியிலுள்ள அனைத்து நீர்த்தேக்கங்களும் குறிப்பிடத்தக்க
வகையில் நிரம்பியுள்ளன. கருநாடக மாநிலத்திலுள்ள காவிரி
நீர்ப்பிடிப்புப் பகுதியிலும் நல்ல மழை பெய்தபோதிலும்,
பெய்த மழைநீர் முழுவதும் கருநாடக மாநிலத்திலுள்ள
நீர்த்தேக்கங்களில் தேக்கி வைக்கப்பட்டதால், இப்பருவமழை
காலத் தொடக்கத்தில் மேட்டூர் நீர்த் தேக்கத்திற்குக் குறிப்பிடத்
தக்க அளவு நீர் வரத்து இல்லை. எனினும், கருநாடக

நீர்ப்பிடிப்புப் பகுதியில் தொடர்ந்து நல்ல மழை பெய்ததால், கருநாடக நீர்த்தேக்கங்கள் நிரம்பி வழியவே 10-7-1991 முதல் மேட்டூர் நீர்த் தேக்கத்திற்கு அதிக அளவு நீர் கிடைத்தது. அதனால் 1991 ஆகஸ்டில் இருமுறை முழு நீர்த் தேக்க அளவை எட்டியது.

**12.2. இதுவரை பாசனத்திற்காகத் திறந்துவிடப்பட்ட அணைகளின் விவரங்கள்.**

**12.2.1 மேட்டூர் பாசன அமைப்பு:**

மேட்டூர் நீர்த்தேக்கத்திலிருந்து நீரானது குறித்தபடி 12-6-1991 அன்று திறந்துவிடப்பட்டிருக்க வேண்டும். நீர்த் தேக்கத்தில் நீரின் அளவு குறைவாக இருந்ததால், குறித்த நாளில் நீரைத் திறந்துவிட இயலவில்லை. இதனால சாதாரண மாக சுமார் 5 இலட்சம் ஏக்கர் பரப்பில் சாகுபடி செய்யப் படும் குறுவைப் பயிரைத் தொடர்ந்து ஆறாவது ஆண்டாகப் பயிரிட முடியவில்லை. பின்னர், கருநாடக நீர்த்தேக்கங் களுக்கு மேலலயிலிருந்து நீர்வரத்து மிகுதியாகக் கிடைக்கவே, மேட்டூர் நீர்த்தேக்கத்திற்கும் 1991 ஜூலை மாத இரண்டாம் வாரத்திலிருந்து அதிக அளவு நீர் கிடைத்தது. நீர்த்தேக்கத் தில் நீரின் அளவு அதிகரித்ததால் மேட்டூர் நீர்த்தேக்கம், காவிரி அடிநிலப்பகுதியின் பாசனத்திற்காக 21-7-1991 அன்று திறந்து விடப்பட்டது. மேட்டூர் நீர்த்தேக்கத்திலிருந்து வரப் பெறும் நீரைச்சார்ந்துள்ள பிற நீர்த்தேக்கத் திட்டங்கள், அதாவது மேட்டூர் கால்வாய் (சேலம், பெரியார் மாவட்டங் கள்) புதிய கட்டளை உயர்நிலைக் கால்வாய், புள்ளம்பாடி கால்வாய் (திருச்சி, தஞ்சாவூர் மாவட்டங்கள்) ஆகியவை, முறையே 3-8-1991 அன்றும் 1-8-1991 அன்றும் பாசனத் திற்காகத் திறந்து விடப்பட்டன.

மேட்டூர் நீர்த்தேக்கம் முழு அளவு நீர்மட்டமான 120 அடியை 3-8-1991 அன்று பிற்பகல் 2-00 மணிக்குத் தொட்டு விட்டது. இரண்டாம், நீர்வரத்து ஆகஸ்டு திங்கள் 17-ஆம் நாள் முதற்கொண்டு வரத் தொடங்கியது. இரண்டாம் முறை யாக மேட்டூர் அணையின் கொள்ளவு 18-8-1991 அன்று பிற்பகல் 4-00 மணிக்கு (1) 120 அடியையும் தாண்டியது. முதற்கண், வடிநிலப்பகுதி பாசனத்திற்காக 22,000 கன அடி நீர் திறந்து விடப்பட்டது. பின்னர் இந்த அளவு 26-8-1991 முதற்கொண்டு வினாடிக்கு 28,000 கன அடியாக உயர்த்தப் பட்டது.

**12.2.2. பவானி பாசன அமைப்பு :**

சுமார் 24,500 ஏக்கர் பரப்பளவிற்குப் பாசனமளிக்கக் கூடிய பழைய பவானி கால்வாய்களான அரக்கன்கோட்டை, தடப்பள்ளி கால்வாய்கள் 25-4-1991 அன்று திறந்து



விடப்பட்டது. 14,000 ஏக்கர்களுக்குக் பாசனமளிக்கக் கூடிய காளிங்கராயன் கால்வாய் 26-6-1991 முதற்கொண்டு திறந்துவிடப்பட்டது.

முதல் போகப் பயிருக்காக நீர்ப்பாசனம் அளிக்கும் கீழ் பவானித் திட்ட முக்கியக் கால்வாய் (1,03,500 ஏக்கர்) வழக்கமாகத் திறந்து விடப்படக்கூடிய நாளான ஆகஸ்டுத் திங்கள் 15-ஆம் நாளுக்கு 15 நாளுக்கு முன்னரே அதாவது 1-8-1991 அன்றே பாசனத்திற்காகத் திறந்து விடப்பட்டது.

**12.2.3. அமராவதி பாசன அமைப்பு :**

பாசனம் பெறும் பழைய பாசனப் பகுதியான சுமார் 31,200 ஏக்கர் நிலத்திற்கு இந்த நீர்த்தேக்கத்திலிருந்து 25-6-1991 அன்று தண்ணீர் திறந்து விடப்பட்டது. அமராவதி முக்கிய கால்வாய் (21,500 ஏக்கருக்குப் பாசனம் அளிக்கக்கூடியது) பாசனத்திற்காகச் செப்டம்பர் திங்கள் 1 ஆம் நாளன்று திறந்து விடப்பட்டது.

**12.2.4. பெரியாறு, வைகைபாசன அமைப்பு :**

கம்பம் பள்ளத்தாக்குப் பாசனத்திற்காக (14,000 ஏக்கர்) 4-6-1991 அன்று தண்ணீர் திறந்து விடப்பட்டது. இரு போக பயிர்பாசனப் பகுதிக்கு 14-6-1991 அன்று முதற் கொண்டும் ஒரு போகப் பயிர்ப்பாசனப் பகுதிக்கு 22-8-1991 முதற்கொண்டும் பெரியாறு முதன்மைக் கால்வாயிலிருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டது.

**12.2.5. தாமிரபரணி பாசன அமைப்பு :**

சுமார் 19,500 ஏக்கர் பரப்பளவு நிலங்களில் ''கார்'' பயிருக்காக பாசனம் அளிக்கும் முறையில் விதிகளின்படி முன் னுரிமை அளித்த ஏப்ரல் திங்கள் 1ஆம் நாள் முதற்கொண்டு நீர்ப்பாசனம் அளிக்கப்பட்டது. முறையான முன்னதாகவே, ''கார்'' பயிருக்காக ஜூன் 1ஆம் நாள் முதற்கொண்டு தண்ணீர் திறந்து விடப்பட்டது.

**12.2.6. கோதையாறு பாசன அமைப்பு :**

இப்பாசன ஏற்பாட்டுத் திட்டம், பேச்சிப்பாறை, பெருஞ் சாணி, சித்தாறு அணை I, II ஆகிய நீர்த்தேக்கங்களிலிருந்து பாசனத்திற்கான தண்ணீரைப் பெறுகிறது. இந்நான்கு நீர்த் தேக்கங்களின் ஒருங்கிணைந்த செயல்பாட்டின் மூலம் இப்பாசன ஏற்பாட்டுத்திட்டத்தின் ஒரு பகுதியாக அமைந்துள்ள கோதை யாறு பட்டணங்கால் இராதாபுரம் கால்வாய்கள் தண்ணீரைப் பெறுகின்றன. தற்போதைய பாசனப்பருவ காலத்திற்காக கோதையாறு பட்டணங்கால் கால்வாய்களுக்கு 12-6-1991 முதற்கொண்டு தண்ணீர் திறந்துவிடப்பட்டது. இராதாபுரம் கால்வாய் 19-6-1991 முதற்கொண்டு பாசனத்திற்காகத் திறந்து விடப்பட்டது.

[1991 செப்டம்பர் 26

12.2.7. பரம்பிக்குளம்-ஆழியாறு பாசன அமைப்பு :

ஆழியாறு பழைய கால்வாய்களுக்கு 1-6-1991 முதற்
கொண்டு தண்ணீர் திறந்து விடப்பட்டது. சுமார் 72,256 ஏக்
கர்களுக்கு இரண்டாம் மண்டலப் பாசனமளிக்கும் பரம்பிக்
குளம் முக்கியக் கால்வாய். பாசனமளிப்பதற்காக 1-8-1991
முதற்கொண்டு திறந்து விடப்பட்டது.

12.3. தென்மேற்குப் பருவமழையை நம்பியிருக்கும் மேற்
சொன்ன அனைத்து நீர்த்தேக்கங்களும், மேற்குறிப்பிட்டவாறு,
பாசனத்திற்காகத் திறந்து விடப்பட்டன. வடகிழக்குப் பருவ
மழை காலத்தில் நீர் வரத்துப் பெறக்கூடிய கிருஷ்ணகிரி
சாத்தனூர் முதலிய நீர்த்தேக்கங்கள் வடகிழக்குப் பருவ மழை
பெய்வதைப் பொறுத்து பாசனத்தற்காகத் திறந்து விடப்படும்.

## 13. கட்டடங்கள்:

13.1. அரசின் பல்வேறு துறைகளுக்கான எல்லாக் கட்ட
டங்களையும், திட்டமிட்டு வடிவமைத்துக் கட்டுதல், பொதுப்
பணித்துறையின் கட்டடப்பிரிவின் பொறுப்பாகும். மேலும்,
குறிப்பிட்ட சதவீதக் கட்டணம் பெற்று, நகராட்சி மன்றங்கள்
மற்றும் அரசு நிறுவனங்களுக்கான கட்டடங்களையும்
இப்பிரிவு ஒப்பளிப்பு முறையில் கட்டுகிறது. மத்திய
அரசுக்கென, தொழிலாளர் மாநில ஈட்டுறுதிக் காப்பீட்டுக்
கழகம், ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம், மலைப்
பகுதி மேம்பாட்டுத் திட்டம் இவற்றுக்கான கட்டடப் பணி
களையும் இத்துறை செயலாக்குகிறது. எலலா அரசுக் கட்ட
டங்களையும் பராமரித்தல், அவற்றுக்கான சாதாரண மற்றும்
சிறப்புப் பழுது பார்த்தல், புயல் மற்றும் வெள்ளச் சேதப்
பணிகள், புயல் பாதுகாப்பு இல்லங்கள் கட்டுதல் ஆகியவையும்
பொதுப்பணித்துறையின் பொறுப்பாகும்.

13.2. 1990-91 நிதி ஆண்டில், 893 கட்டடங்கள் முடிக்
கப்பட்டு, பயன்பெறும் துறைகளிடம் ஒப்படைக்கப்படவேண்டும்
எனத் திட்டமிடப்பட்டது. அவற்றில், ரூ. 1 கோடிக்கு
அதிகமான மதிப்புள்ள 4 கட்டடங்கள், ரூ. 50 இலட்சத்துக்கும்
ரூ. 100 இலட்சத்துக்கும் இடையிலான மதிப்புள்ள ஒரு கட்டடம்,
மற்றும் ரூ. 30 இலட்சத்துக்கும் ரூ. 50 இலட்சத்துக்கும்
இடையிலான மதிப்புள்ள இரண்டு கட்டடங்கள் உள்ளிட்ட
888 கட்டடங்கள், 31-3-1991 நிலவரப்படி ஒப்படைக்கப்
பட்டுவிட்டன; -



1991 செப்டம்பர் 26]

13.3. கீழ்க்கண்ட பெரிய பணிகள் முன்னேற்றத்தில்
உள்ளன ;

| | | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| (1) | தமிழ்நாடு முழுவதும், பிற்பட்ட வகுப்பினர்/தாழ்த்தப்பட்ட பிரிவின ருக்கென 40 இடங்களில் தங்கும் விடு திகள் கட்டுதல். | 411.00 |
| (2) | 12 இடங்களில், இளைஞர் சீர்திருத்த இல்லங்கள், கண்காணிப்புக் கால இல்லங்கள் மற்றும் சிறப்பு இல்லங்கள் கட்டுதல். | 199.00 |
| (3) | சென்னையில் முன்னாள் உயர்நீதி மன்றக் கட்டடம் இருந்த இடத்தில் புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலகம் கட்டுதல். | 632.00 |
| (4) | வ.உ. சிதம்பரனார் மாவட்ட ஆட்சி யாளருக்கென தூத்துக்குடியில் புதிய அலுவலகம் கட்டுதல். | 360.00 |
| (5) | சேலம் தென்னாற்காடு மாவட்டங் களில் டானிடா திட்டத்தின் கீழ் கட்டடங்கள் கட்டுதல். | 153.00 |
| (6) | 120 இடங்களில், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் மருத்துவ அலு வலருக்கென குடியிருப்புகள் கட்டுதல். | 1023.55 |
| (7) | 37 இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் கட்டுதல். | 311.53 |

13.4. 1991-92-ல் வெவ்வேறு அரசுக் கட்டடங்கள்
கட்டுவதற்கும், ஏற்கெனவே உள்ள கட்டடங்களைப் பராமரிப்
பதற்கும் மொத்தம் ரூ. 51.25 கோடி செலவிடத் திட்டமிடப்
பட்டுள்ளது.

13.5. ஏற்கெனவே நடைபெறும், ஒவ்வொன்றும் ரூ. ஒரு
கோடிக்கும் அதிகமான மதிப்புள்ள 13 பணிகளுடன், 1991-
92-ல் மொத்தம் ரூ. 34.61 கோடி மதிப்புடைய, ஒவ்வொன்றும்
ரூ. ஒரு கோடிக்கும் அதிகமான மதிப்புள்ள 12 பணிகளை மேற்
கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், மொத்தம்
ரூ. 28.68 கோடி மதிப்புள்ள பணிகளை முகமை முறையிலும்
ரூ. 2.39 கோடி மதிப்புள்ள பணிகளை ஒப்பளிப்பு முறையிலும்
பொதுப்பணித் துறை இந்த ஆண்டில் மேற்கொள்ளும்,

13.6. இந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட உள்ள சில சிறப்புப் பணிகள் கீழே தரப்பட்டுள்ளன ;

1. தமிழ்நாடு கால்நடை மருத்துவப் பல்கலைக் கழகத்துக்கென, ரூ. 3.73 கோடி செலவில் நாமக்கல்லில் கால்நடை மருத்துவக் கல்லூரிக் கட்டடங்கள் கட்டுதல்.

2. ரூ 1.25 கோடி செலவில், தருமபுரி, சேலம், செங்கை எம்.ஜி.ஆர். மற்றும் வட ஆற்காடு அம்பேத்கர் மாவட்டங்களில் ஐரோப்பியப் பொருளாதாரக் கழக உதவியுடன் ஆடு வளர்ப்பு மேம்பாட்டுப் பண்ணைகளுக்கான கட்டடங்கள் கட்டுதல்.

3. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நீலகிரி மாவட்டத்தில் ரூ. 2 கோடி செலவில் கட்டடங்கள் கட்டுதல்,

4. ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ. 1-70 கோடி செலவில் கட்டடங்கள் கட்டுதல்.

5. கோயம்புத்தூர், தமிழ்நாடு ஜி. டி. நாயுடு விவசாயப் பல்கலைக் கழகத்துக்கென ரூ. 2 கோடி செலவில் கட்டடங்கள் கட்டுதல்.



## இணைப்பு—3

[141 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

### பொதுப்பணித்துறை.

### கட்டடப் பிரிவு.

### 1990-91 ஆம் ஆண்டின் பணிகள் பற்றிய ஆய்வுக் குறிப்பு.

மருத்துவம், கல்வி, வருவாய், காவல், சிறை. நீதி, வர்த்தக வரி, கருவூலம் மற்றும் கணக்கு, போக்குவரத்து, பதிவு, தியணைப்பு, பொது, சட்டமன்றம், விவசாயம், கால்நடை பராமரிப்பு போன்ற எல்லா அரசுத் துறைகளுக்கான கட்டடங்களையும், திட்டமிட்டு, வடிவமைத்துக் கட்டி முடித்தல் பொதுப் பணித் துறையின் பொறுப்பாகும். மேலும், ஒப்பளிப்பு முறையில் (1) அரசு சார்பு நிறுவனங்கள் மற்றும் நகராட்சி, நகரப் பஞ்சாயத்து போன்ற உள்ளாட்சி மன்றங்கள், (2) விவசாயப் பல்கலைக் கழகம், கால்நடைப் பல்கலைக்கழகம் மற்றும் தஞ்சை தமிழ் பல்கலைக் கழகம் போன்றவை, (3) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், முன்னாள் இராணுவ வீரர் நல வாரியம், தொழிலாளர் நல வாரியம், காப்பி வாரியம் போன்ற வாரியங்கள் மற்றும் கழகங்கள் மற்றும் (4) மைய அரசின் தொழிலாளர் மாநில ஈட்டுறுதிக் காப்பீட்டுக் கழகம் மற்றும் பொறியியல் கழகங்கள் போன்ற மைய அரசின் துறைகள் இவற்றிற்கென, சேவைக்கேற்ப நூற்றுவிகிதக் கட்டணம் வசூலித்துக் கட்டடங்கள் கட்டும் பணியையும் இத்துறை மேற்கொள்ளுகிறது. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டங்களும், பழங்குடியினர் நல் வாழ்வுத் திட்டங்களும் இத்துறையால் செயலாக்கப்படுகின்றன.

பல்வேறு துறைகளுக்கெனத் தற்போது கட்டப்பட்டுவரும் ரூ. 50 இலட்சத்துக்கும் அதிகமான மதிப்புடைய கட்டடங்களின் எண்ணிக்கை கீழே தரப்பட்டுள்ளது;—

| | | |
|---|---|---|
| 1. | ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை .. | 126 |
| 2. | சுகாதாரம் மற்றும் குடும்பநலத் துறை .. | 106 |
| 3. | வருவாய்த் துறை .. .. | 17 |
| 4. | விவசாயத் துறை .. .. .. | 20 |
| 5. | உள் துறை .. .. .. | 32 |
| 6. | பொதுப் பணித் துறை .. .. .. | 18 |
| 7. | கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை | 5 |
| 8. | வனத் துறை .. .. .. | 9 |

| | | |
|---|---|---|
| 9. | கல்வித் துறை .. .. .. | 10 |
| 10. | செய்தி மற்றும் சுற்றுலாத்துறை .. .. | 8 |
| 11. | நல்வாழ்வுத் துறை .. .. | 31 |
| 12. | வர்த்தக வரி மற்றும் அறநிலையத் துறை | 7 |
| 13, | நிதித்துறை .. .. .. | 5 |
| 14. | பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை. | 2 |
| 15. | மறுவாழ்வு மற்றும் சுங்கவரித் துறை .. | 6 |
| 16. | ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை | 15 |
| 17. | பொதுத் துறை .. .. .. | 4 |
| | மொத்தம் .. | 421 |

வெவ்வேறு அரசுத் துறைக் கட்டடங்கள் கட்டுவதற்கென, 1990–91–ல், திட்டப்பணிகளின் கீழ், ரூ. 27.02 கோடி செலவிடத் திட்டமிடப்பட்டது.

முன்னேற்றத்தில் இருக்கும் பணிகளின் விபரமும், மதிப்பும் கீழே தரப்பட்டுள்ளன,—

| | | (ரூபாய் கோடியில்.) |
|---|---|---|
| I. | (அ) மருத்துவக் கல்வித் துறையின் கீழ் வெவ்வெறு அரசு மருத்துவக் கல்லூரிகளுக்கெனக் கட்டடங்கள் கட்டுதல். .. .. .. | 14.60 |
| | (இ) குடும்ப நலத் துறை, மருத்துவப் பணிகள் துறை, ஆரம்ப சுகாதாரத் துறை. இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி, பொதுச் சுகாதாரம், மற்றும் தடுப்பு மருத்துவம் மற்றும் சுகாதாரப் போக்குவரத்துத் துறைகளுக்கென மருத்துவமனைகள், பிணியாளர் நீள் அறைகள், சுகாதார நிலையங்கள் மற்றும் பணிமனைகள் கட்டுதல் .. | 3·17 |
| | (உ) பல்வேறு மருத்துவமனைகளில் குளிர்சாதன வசதி அளித்தல், உயர் அழுத்த மின் இணைப்பு அமைத்தல், ஜெனரேட்டர்கள் அமைத்தல் போன்ற சிறப்பு மின்பணிகள் .. .. | 1·09 |
| | மொத்தம் .. | 18.86 |



| | | (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| II. | வருவாய் துறைக்கென மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வட்ட ஆட்சியர் அலுவலகம் போன்றவை கட்டுதல். .. .. .. | 1.70 |
| III. | காவல் துறைக்கென, காவல் நிலையங்கள் மற்றும் காவலருக்கான குடியிருப்புகள் வெவ்வேறு இடங்களில கட்டுதல். .. .. | 2.22 |
| IV. | நீதித்துறையின் கீழ் நீதிமன்றங்கள் கட்டுதல் | 5.86 |
| V. | கல்வித் துறையின் கீழ் கல்லூரி மற்றும் பள்ளிக் கூடங்களுக்கென வகுப்பறைகள் கட்டுதல் | 2.90 |
| VI. | பொதுப் பணித் துறையின் கீழ் அலுவலகங்கள் மற்றும் குடியிருப்புகள் கட்டுதல் .. ... | 0.58 |
| VII. | மற்ற துறைகளுக்கென பல்வேறு கட்டிடங்கள் கட்டுதல் .. .. .. | 11.17 |
| VIII. | ஒப்பளிப்பு முறையில், ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி திட்டத்தின் கீழ் நகராட்சிகள் மற்றும் நகரப் பஞ்சாயத்துக்களுக்கென வெவ்வேறு இடங்களில் பேருந்து நிலையங்கள், வர்த்தக வளாகங்கள், தினசரி/வாரச் சந்தைகள் கட்டுதல் .. | 16.84 |
| IX. | ஒப்பளிப்பு முறையில், மற்ற துறைகள் மற்றும் பல்கலைக் கழகங்களுக்கென கட்டடங்கள் கட்டுதல் .. .. .. .. .. | 2.47 |
| X. | ஒப்பளிப்பு முறையில், தொழிலாளர் மாநில ஈட்டுறுதி காப்பீட்டுக் கழகம் மற்றும் பொறியியல் கழகங்களுக்கென உள்ளூர் அலுவலகங்கள், மருந்தகங்கள் மற்றும் குடியிருப்புகள் கட்டுதல் .. | 1.62 |
| XI. | மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் டானிடா திட்டங்களின் கீழ், நீலகிரியில், துணை சுகாதார நிலையங்கள், திறந்தவெளி விளையாட்டரங்கம் மற்றும் திட்ட அலுவலர்க்கான குடியிருப்புகள் போன்ற கட்டடங்கள் கட்டுதல் .. | 1.91 |
| XII. | மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், கட்டடங்கள் கட்டுதல் .. | 0.30 |
| XIII. | இளைஞர் விடுதி, படுக்கை அறைகள், உணவகங்கள், கட்டுதல் சாலையோர வசதிகள் அமைத்தல் .. .. .. .. .. | 1.16 |
| XIV. | முன்னாள் இராணுவ வீரர் நல வாரியம், தொழிலாளர் நல வாரியம், காப்பி வாரியம் இவற்றுக்கென கட்டடங்கள் கட்டுதல் ... .. | 0.35 |
| | மொத்தம் .. | 67.92 |

1990–91 ஆம் ஆண்டில், வெவ்வேறு துறைகளுக்கென ரூ.36.34 கோடி மதிப்புள்ள கட்டடங்கள் கட்டி முடிக்கபட்டுள்ளன. ரூ.67.42 கோடி மதிப்புள்ள, வேறு பல திட்டங்கட்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவை 1991-92-ல் மேற் கொள்ளப்படும்.

1990–91–ல், 893 கட்டடங்கள் கட்டப்பட்டு, அந்தந்தத் துறைகளின் உபயோகத்துக்கென, அவற்றிடம் ஒப்படைக்கத் திட்டமிடப்பட்டது. இவற்றில் 888 கட்டடங்கள் கட்டி முடிக் கப்பட்டு வெவ்வேறு துறைகளிடம் ஒப்படைக்கப்பட்டு விட்டன. A. ரூ.50 இலட்சத்துக்கும் கூடுதலான மதிப்புடைய, முன் னேற்றத்திலிருச்கும் பெரிய கட்டடப் பணிகளின் விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

1. காவலர் குடியிருப்புகள்.

| | | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| சிவகங்கை | .. .. | 253.50 |
| இராமநாதபுரம் | .. .. | 252.49 |
| விருதுநகர் | .. .. | 183.70 |
| விருதுநகர் (ஏ.ஆர்.பி.) | .. | 236.50 |
| மொத்தம் | .. | 9.26 கோடி |

கட்டுமானப் பணிகள் முடிவடைந்து விட்டன. இறுதிப் பணிகள் நடைபெறுகின்றன. 1991 செப்டம்பரில் முழுவதுமாக முடிக்கப்படும்.

2. சென்னை உயர்நீதி மன்றத்தில் கூடுதல் கட்டடம் கட்டுதல் .. .. .. ... ரூ. 4.545 கோடி

நிர்வாகக் கட்டிடம் முடிக்கப்பட்டு, 7–6–1991 அன்று பதிவாளரிடம் ஒப்படைக்கப்பட்டது. நீதிமன்ற அறைகளில் சிமெண்ட்/இறுதி வண்ணம் தீட்டும் பணி தவிர எல்லாப் பணி களும் முடிந்து விட்டன. நீதிபதிகளின் அறைகளில் இறுதிப் பணிகள் முடியும் தருவாயில் உள்ளன. சுகாதாரப் பணிகள், குடிநீர் வழங்கல், தரை மற்றும் வடிகால்கள் அமைத்தல், தரையில் வழுவழுப்பான ஓடுகள் பதித்து மெருகிடல் ஆகிய பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. திட்டமிடப்பட்டுள்ள முடிவு நாள் 30-9-1991.



3. சேலம், மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரிக் கட்டிடம் கட்டுதல் மற்றும் தற்போ துள்ள மாவட்டத் தலைமை மருத்துவ மனையைக் கல்வி மருத்துவமனையாக மாற்றுதல். .. ரூ.3.75 கோடி

(1) நிர்வாகக் கட்டிடம், பொதுக் கூட்ட அறை, உணவகம், (2) துறைக் கட்டிடங்கள், (3) விரிவுரை அறைகள், (4) படிப்பகம், (5) மாதிரிக் கூடம் மற்றும் விரிவுரை அறைகள் மற்றும் (6) தற்போதுள்ள பிண ஆய்வுக் கூடத்தின் மேல் முதல் மாடி ஆகிய கட்டடங்கள் கட்டுதல் இத்திட்டத்தில் அடங்கும். பணிகள் விரைவாக நடைபெறுகின்றன. எல்லாக் கட்டடங்களும் 1992 மார்ச் மாதம் முழுவதுமாக முடிக்கப்படும் என எதிர்பார்க் கப்படுகிறது.

4. சென்னை, பொது மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவுக் கட்டடத்தின் மேல் கூடுத லாக 7 மாடிகள் கட்டுதல், இருதய சிகிச்சைப் பிரிவுக் கட்டடம், விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவுக்கான கட்டடம் கட்டுதல் .. ரூ. 1.386 கோடி

கட்டுமானப் பணிகள் முடிவடைந்து விட்டன. இறுதிப் பணிகள் நடைபெறுகின்றன. திட்டத்துக் கான முடிவு நாள் டிசம்பர் 1991.

5. கோயம்புத்தூரில் சட்டக் கல்லூரி மற்றும் மாணவர் விடுதி கட்டுதல் 1.04 கோடி

பணிகள் விரைவாக நடைபெறுகின்றன. 1991 நவம்பரில், முழுவதுமாக முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

6. உலக வங்கி உதவி பெறும் ஐ.பி.பி.வி. திட்டத்தின் கீழ் (1) அம்பத்தூர், (2) தாம்பரம், (3) பல்லாவரம், (4) ஆவடி, (5) நங்கநல்லூர், (6) முகப்பேர், (7) ஆலந்தூர், (8) திருவொற்றியூர், (9) கொட்டிவாக்கம் மற்றும் (10) மாதவரம் ஆகிய இடங்களில் நடை பெறும் பணிகள் .. .. ரூ.1.24 கோடி

அம்பத்தூர், தாம்பரம், பல்லாவரம், ஆவடி, நங்கநல்லூர், மற்றும் முகப்பேர் ஆகிய இடங்களில் 20 படுக்கைகள் கொண்ட மகப்பேறு மற்றும் குடும்பக்கட்டுப்பாட்டு அறுவை சிகிச்சை அறையுடன் கூடிய நோயாளர் நீள் அறைகள் மற்றும் சுகாதார மையங்கள் கட்டும் பணியும், திருவொற்றியூர் மற்றும் கொட்டி க்கத்தில், 10 படுக்கைகள் கொண்ட மகப்பேறு மற்றும் ம்பக்கட்டுப்பாடு அறுவை சிகிச்சை அறையுடன் கூடிய நீள் றகள் மற்றும் சுகாதார மையம் கட்டும் பணியும்,

மாதவரத்தில், 10 படுக்கைகள் கொண்ட மகப்பேறு மற்றும் குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை அறையுடன் கூடிய நீள் அறை, கட்டும் பணியும் வெவ்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. மேற்கண்ட 10 பணிகளில், தாம்பரம், ஆவடி, முகப்பேர், கொட்டிவாக்கம், அம்பத்தூர் மற்றும் ஆலந்தூர், ஆகிய 6 இடங்களில் பணி முழுவதுமாக முடிக்கப்பட்டு ஆலந்தூர் தவிர மற்றவை அனைத்தும் பயன்படுத்தும் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டன. மற்ற 4 பணிகளும் விரைவாக நடைபெறுகின்றன. நங்கநல்லூர் மற்றும் பல்லாவரம் பணிகள் 1991 அக்டோபரிலும், மாதவரம் மற்றும் திருவொற்றியூர் பணிகள் 1991 நவம்பரிலும் முடிவடையுமாறு திட்டமிடப்பட்டுள்ளது.

7. ஓசூரில் 50 படுக்கைகள் கொண்ட தொழிலாளர் மாநில ஈட்டுறுதிக் காப்பீட்டுக் கழக மருத்துவமனை கட்டுதல் .. .. ரூ. 1.90 கோடி

ஆரம்பப் பணிகள் நடைபெறுகின்றன. 1991 செப்டம்பரில் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

8. காரைக்குடியில் கவியரசு கண்ணதாசனுக்கு நினைவு மண்டபம் கட்டுதல் .. .. ரூ. 80 இலட்சம்

பணி முடிவடையும் நிலையில் உள்ளது. திட்டமிடப்பட்டுள்ள முடிவு நாள் ஜனவரி 1992.

9. கோயம்புத்தூரில் இ. எஸ். ஐ. மருத்துவ மனை வளாகத்தில் 190 கூடுதல் குடியிருப்புகள் கட்டுதல் .. ரூ. 2.58 கோடி

பணி இப்போதுதான் துவங்கியுள்ளது. தரைமட்டம் வரை கட்டடம் எழும்பியுள்ளது. திட்டமிடப்பட்ட முடிவு நாள் ஏப்ரல் 1992.

10. தமிழ்நாட்டில் ஐரோப்பிய பொருளாதாரக் கழகத்தின் நிதி உதவியுடன் கட்டப்படும் புயல் பாதுகாப்பு இல்லங்கள் நிலை II மற்றும் III. ரூ. 1.50 கோடி

இரண்டாம் நிலையில் அடங்கிய இரண்டு பணிகளில், புதுப் பட்டினத்தில் பணிமுடிந்து விட்டது. புலிகட்டில் முன்னேற்றத் தில் உள்ளது. III நிலைப் பணிகள் அனைத்தும் முடிவடைந்து விட்டன.

11. மருத்துவப் பணிகள் இயக்குநர் அலுவலகத்தின் மேல் குடும்ப நலத்துறை இயக்குநர் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் இயக்குநர் ஆகியோரின் அலுவலகங்களுக்கென V மற்றும் VI மாடிகள் கட்டுதல் ரூ. 68 லட்சம்



பணி முழுவதுமாக முடிக்கப்பட்டு பயன்பெறும் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டது.

12. சென்னை அண்ணாநகரில் காது, மூக்கு, தொண்டை மருத்துவமனை கட்டுதல் ரூ. 50 லட்சம்

பணிகள் விரைவாக நடைபெறுகின்றன. 1991 டிசம்பரில் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

13. அண்ணாநகர், புறநகர் மருத்துவ மனையில், ஜீரணக்கோளாறு மருத்துவத் துறைக்கென கூடுதல் மாடி கட்டுதல் ரூ. 58 லட்சம்

பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. 1991 டிசம்பரில் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

14. பத்து இடங்களில், ஆரம்ப சுகாதார நிலையங்கள், மருத்துவ அலுவலர் குடியிருப்பு, மருத்துவ உதவியாளர் மற்றும் அலுவலக உதவியாளருக்கென குடியிருப்புகள் கட்டுதல் ரூ. 54.5 லட்சம்

ஆரம்ப நிலை பணிகள் நடைபெறுகின்றன.

15. சென்னை கூடுதல் சிவில் நீதி மன்றக் கட்டடத்தின் மேல் இரண்டாவது மாடி கட்டுதல் ரூ.72.6 லட்சம்

பணிகள் விரைவாக நடைபெறுகின்றன. 1991 டிசம்பரில் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

16. நாமக்கல் லத்திவாடியில் கால்நடை மருத்துவ மனை மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்திற்கென 6 பல் பயன் கட்டடங்கள், மேல்நிலைத் தொட்டி, இணைப்புச் சாலைகள், குழாய்க் கிணறு, மின் இணைப்பு, விடுதிக் கட்டிடம் மற்றும் கல்வித் துறைக் கட்டடங்கள் ஆகிய பணிகள் ரூ. 1.73 கோடி

இது, கால்நடைப் பல்கலைக்கழகத்திற்கென செய்யப்படும் ஒப்பளிப்புப் பணியாகும். மூன்று கட்டடங்கள் கட்டி முடிக்கப் பட்டு பயன்பெறுவோரிடம் ஒப்படைக்கப்பட்டு விட்டன. ஏனைய கட்டடங்களில் பணி நடைபெறுகிறது. திட்டமிடப்பட்ட முடிவு நாள் பிப்ரவரி 1992.

17. கேரள மாநிலம், வைக்கம் என்ற இடத்தில் தந்தை பெரியாருக்கு நினைவு மண்டபம் கட்டுதல் ரூ.15 லட்சம்

பணி முன்னேற்றத்தில் உள்ளது. திட்டமிடப்பட்ட முடிவு நாள் மார்ச் 1992.

18. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்:

நீலகிரி மாவட்டத்தில், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், சுற்றுலா, மீன்வளம், கால்நடை பராமரிப்பு, தோட்டக்கலை, மருத்தும் போன்ற வெவ்வேறு துறைகளின் கீழ், ரூ. 200 இலட்சத்துக்கான பல திட்டங்களுக்கு அரசு ஏற்பு அளித்துள்ளது.

66 மொத்தப் பணிகளில் 27 பணிகள் முடிவடைந்துவிட்டன. 18 பணிகள் நடைபெறுகின்றன. மேலும் 21 பணிகள் செயலாக்கத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

19. ஐரோப்பிய பொருளாதாரக் கழகத்தின் நிதி உதவியுடன் சேலம் / தர்மபுரி மாவட்டங்களில் ஆடு வளர்ப்புக்கான கட்டடங்கள் மற்றும் சென்னையில் ஆடு நோய் ஆராய்ச்சிக்கான ஆய்வுக் கூடம் கட்டுதல் .. .. .. ..ரூ.83 லட்சம்

சென்னை, சேலம், மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் பணிகள் சமீபத்தில்தான் துவக்கப்பட்டு முன்னேற்றத்தில் உள்ளன.

B. கீழ்க்கண்ட பெரிய திட்டங்கள் விரைவில் எடுத்துக் கொள்ளப்பட உள்ளன.

(1) பழைய உயர்நீதி மன்றம் இருந்த இடத்தில், சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் கட்டுதல் ... .. ... .. ..ரூ.6.32கோடி

தற்போதுள்ள பழைய உயர்நீதி மன்றக் கட்டடத்தை இடிக்கும் பணி நடைபெறுகிறது. மண் ஆய்வு போன்ற ஆரம்பப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

(2) ஊட்டியில் பழங்குடியினர் அறங்காட்சியகம் கட்டுதல் .. .. .. ரூ. 2.00 கோடி

இது, தஞ்சாவூர், தமிழ் பல்கலைக் கழகத்தின் ஒப்பணிப்புப் பணி ஆகும். ஒரு கலைக் கூடமும் பார்வைக் கோபுரங்களும் கட்டும் பணி இத்திட்டத்தில் அடங்கும். பணி விரைவில் துவங்கப் பெறும்.

(3) தமிழ்நாடு விவசாயப் பல்கலைக் கழகத்துக்கென கீழ்க்கண்ட இடங்களில் கட்டடங்கள் கட்டுதல்

(1) வேலூர், (2) காட்டுப்பாக்கம், (3) நாமக்கல், (4) சிறுகமணி, (5) பவானி சாகர், (6) வெம்பன், (7) ஏற்காடு, (8) விஜயநகரம், (9) பேச்சிப்பாறை, (10) கின்னிகுளம், (11) கோயம்புத்தூர் .. ரூ. 0.27 கோடி



தமிழ்நாடு விவசாயப் பல்கலைக் கழகம், ரூ. 2.70 கோடி செலவில், அலுவலகக் கட்டிடங்கள் ஆய்வுக்கூடம், மாணவர் விடுதிகள், குடியிருப்புகள் மற்றும் சேமிப்புக் கிடங்குகள் கட்டும் பணியைப் பொதுப் பணித் துறையிடம் ஒப்படைத்துள்ளது. 80 சதவிகிதப் பணிகளுக்கு முகமை முடிவாகிப் பணிகள் துவங்கி, முன்னேற்றத்தில் உள்ளன. எஞ்சியுள்ள 20 சதவிகிதப் பணிகளுக்கென முகமை முடிவு செய்யப்பட்டு வருகிறது.

4. பல்வேறு இடங்களில் 120 ஆரம்ப சுகாதார நிலையங்களும் மருத்துவ அலுவலர் குடியிருப்புகளும் கட்டுதல் ரூ. 8.10 கோடி

மாநிலத்தின் பல்வேறு இடங்களில், ஒவ்வொன்றும் ரூ. 5 இலட்சம் செலவில் 120 ஆரம்ப சுகாதார நிலையங்களும் ஒவ்வொன்றும் ரூ. 1.75 இலட்சம் செலவில் மருத்துவ அலுவலர் குடியிருப்புகளும் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கான செலவினை 50:50 என்ற அடிப்படையிலும், குடியிருப்புகளுக்கான செலவினை 30:70 என்ற அடிப்படையிலும் அரசும், ஹட்கோ நிறுவனமும் பகிர்ந்து கொள்ளும். பொதுப் பணித்துறை மேற்கொள்ளும் இப்பணிக்கென தமிழ்நாடு கட்டுமானக் கழகம், ஹட்கோவிடமிருந்து கடன் உதவு பெற்றுப் பொதுப் பணித் துறையிடம் வழங்கும். அரசிடமிருந்தும் 'ஹட்கோ'விடமிருந்தும் இன்னும் நிதி உதவி வழங்கப் படவில்லை. எனினும், அநேகமாக, எல்லா இடங்களிலும் 'டெண்டர்' கோரப்பட்டு முடிவாக்கப்பட்டு வருகிறது.

5. சேலத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்கள் கட்டுதல். .. .. .. ரூ. 3.25 கோடி

திருத்திய வரைபடம் தயாரிக்கப்படுகிறது.

6. வெவ்வேறு இடங்களில், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/ பழங்குடியினருக்காக 40 இடங்களில் விடுதிகள் கட்டுதல் .. .. .. ரூ. 4.11 கோடி

40 வெவ்வேறு இடங்களில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/ பழங்குடியினருக்கென விடுதிகள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பல விடுதிகள் கட்டி முடிக்கப்பட்டு விட்டன. சில பணிகளுக்கென 'டெண்டர்' கோரப்பட்டுள்ளது. பணிகள் விரைவில் துவங்கும். எல்லாப் பணிகளும் மார்ச் 1992-ல் முடிவு பெறும் என எதிர்பார்க்கலாம்.

7. 14 இடங்களில் கூடுதலாக அரசு இளைஞர் சீர் திருத்தப்பள்ளிகள், கண்காணிப்பு விடுதிகள் மற்றும் சிறப்பு விடுதிகள் கட்டுதல் .. ரூ. 1.12 கோடி

சில இடங்களில் பணிகள் துவக்கப்பட்டு விட்டன. சில பணிகளில், விபர மதிப்பீடுகள் தயாரித்தல், டெண்டர் கோருதல் போன்ற ஆரம்ப நிலைப்பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

8. மதுரையில் இ.எஸ்.ஐ. மருத்துவமனையில் கூடுதலாக அலுவலர் குடியிருப்புகள் கட்டுதல் ரூ. 1.81 கோடி

2–6–1991 அன்று மனை, ஒப்பந்தக்காரரிடம் ஒப்படைக்கப்பட்டது. அஸ்திவாரப் பணிக்கென மண் தோண்டும் பணி நடைபெறுகிறது. மொத்தப் பணிகளும் 1992 டிசம்பரில் முடிவடையத் திட்டமிடப்பட்டுள்ளது.

9. சென்னை அயனாவரத்தில் கூடுதல் அலுவலர் குடியிருப்புகள் கட்டுதல் .. .. ரூ. 3.35 கோடி

அஸ்திவாரத் தூண்களுக்கான முகமை முடிவாகி உள்ளது 'டெண்டர்' கோரப்பட்டுள்ளது. பணி விரைவில் துவங்கும்.

10. மதுரை பொது மருத்துவமனையில், கண் சிகிச்சை மற்றும் அறுவை சிகிச்சைப் பகுதிக்கென சுண்ணப்ப நாயனார் கண் சிகிச்சைப் பகுதிக் கட்டடத்தின் மேல் இரண்டாவது மாடி கட்டுதல் .. .. .. ரூ. 54.00 இலட்சம்

11. கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை மற்றும் நரம்பியல் அறுவை சிகிச்சைப் பிரிவுக்கென கட்டடம் கட்டுதல் .. .. .. ரூ. 55.00 இலட்சம்

டெண்டருக்கான அரசு ஏற்பு வழங்கப்பட்டு விட்டது. விரைவில் பணி துவக்கப்படும்.

12. சென்னை சாந்தோமில், பதிவுத் துறைத் தலைவர் அலுவலகம் கட்டுதல் .. ரூ. 72.00 இலட்சம்

வரை படங்கள் மற்றும் மதிப்பீடுகள் தயாரித்தல் போன்ற ஆரம்ப நிலைப் பணிகள் நடைபெறுகின்றன.

13. சென்னை பெரம்பூரில், நவீன இறைச்சிக் கூடம் அமைத்தல் .. .. ரூ. 1.21 கோடி

பெரம்பூரில் நவீன இறைச்சிக் கூடம் கட்டும் பணியைத் தமிழ்நாடு இறைச்சிக் கழகம் பொதுப் பணித் துறையிடம் தந்துள்ளது. பணி விரைவில் துவங்கும்.

14. ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் .. .. 1.45 கோடி



பச்சைமலை, கல்ராயன் மலை, சின்னக் கல்ராயன் மலை, ஜவ்வாது மலை, கொல்லிமலை போன்ற பகுதிகளில் உள்ள பழங்குடியினரின் மேம்பாட்டுக்கென, மருத்துவம், தோட்டக்கலை, கால்நடை பராமரிப்பு, கல்வி போன்ற பலதுறைகளின் கீழ் ரூ. 1.45 கோடி செலவில் பல கட்டடங்கள் கட்டுவதற்கு அரசு அனுமதி அளித்துள்ளது. ரூ. 65 இலட்சம் மதிப்புள்ள பணிகளுக்கான இடங்கள் இத்துறையிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளன.

பணிகள் விரைவில் துவங்கும்.

இணைப்பு-

[141 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைப் [illegible].]

பொதுப் பணித் துறை.

<u>தமிழ்நாட்டில் 1990-91 ஆம் ஆண்டு சாலை மேம்பாட்டுத் திட்டம் பற்றிய ஆய்வும், 1991-92 ஆம் ஆண்டுத் திட்டமும்.</u>

நாட்டில் சமூகப் பொருளாதார நிலை வளரவும், மேம்பாடடையவும் சீரான சாலை வசதிகள் பெருந்துணை புரிகின்றன. நாட்டில் வளர்ச்சிக்கு அடிப்படையாக விளங்குவன சாலைகளும், சாலை போக்குவரத்தும் ஆகும். ஒரு நாட்டில் சாலைகள் மேம்பாடும் பொருளாதார வளர்ச்சியும் ஒன்றை ஒன்று சார்ந்துள்ளன.

சுமார் 80 சதவீத மக்கள் கிராமங்களில் வசிக்கின்றனர். இங்கு, சாலைகள் மட்டுமே, போக்குவரத்திற்கு வழி வகுக்கின்றன. பிற்படுத்தப்பட்ட மக்களும், பழங்குடி மக்களும், சாலைகளையே தங்கள் போக்குவரத்துக்குப் பெரிதும் நம்பியுள்ளனர்.

தமிழ்நாட்டில், நெடுஞ்சாலைகள் மற்றும் ஊரகப் பணித் துறை, அரசு ஒப்புதலளித்த பல்வேறு திட்டங்களின் கீழ், மாநிலத்தில் பெரிய பாலங்கள் கட்டுதல், சாலைகள் அமைத்தல் ஆகிய பணிகளை மேற்கொள்கிறது. அதன் விவரங்கள் வருமாறு:—

(a) மாநில சாலைகள் திட்டம்—

(1) மாநில நெடுஞ்சாலைகள்

(2) மாவட்ட முதன்மைச் சாலைகள்

(3) மாவட்ட பிற சாலைகள்

(b) பிற சாலைகள் திட்டம்:

(c) தற்போதுள்ள இருப்புப் பாதைக் கடவுகளுக்குப் திலாக மேம்பாலங்கள்/சுரங்கப் பாதைகள் அமைத்தல்.

(d) கருவிகளும் தளவாடங்களும்.

(e) நிழல் மரச் சாலைகள்.

(f) ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் பாலங்கள் கட்டுதல்.

[1991 செப்டம்பர் 26

மாநில சாலைகள் திட்டம்:

போதிய பராமரிப்பு இன்மையால் நம் சாலைகளின் நிலை மிகவும் மோசமாக உள்ளது. சாலைகளை நல்ல நிலையில் பேணி வருவதற்காக 1989-90 ஆம் ஆண்டில் 59.65 கோடி ரூபாயும், 1990-91 ஆம் ஆண்டில் 70.07 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டது. நடப்பாண்டில் அரசு இப்பணிக்காக மொத்தம் 102.25 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது. மோசமான நிலையில் உள்ள சுமார் 8,000 கிலோ மீட்டர் நீளச் சாலைகளைச் சீரமைத்து நன்நிலைக்குக் கொண்டுவர புதிய சிறப்புப் பழுதுபார்ப்புத் திட்டம் தொடங்கப்படும். இப்பணிக்காக நிதி ஒதுக்கீடு 150 கோடி ரூபாய், இப்பணி ஐந்தாண்டுகளில் முடிக்கப்படும்.

செங்கல்பட்டு—எம்.ஜி.ஆர், வட ஆற்காடு—அம்பேத்கார், தென் ஆர்க்காடு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி ஆகிய ஐந்து மாவட்டங்களிலுள்ள 19 அங்காடி மையங்களை இணைக்கும் 800 கிலோ மீட்டர் நீளமுள்ள ஊரக அங்காடிச் சாலைகளை மேம்படுத்துவதற்காக 45.28 கோடி ரூபாய் செலவிலான தனித் திட்டமொன்று நடப்பாண்டில் மேற்கொள்ளப்படும்.

தஞ்சாவூர் மாவட்டத்தில், சாலைகளின் தரம் உயர்த்தும் பணியில் தொழிற்சாலைகளையும் ஈடுபடுத்துவதற்கான விரிவான செயற் குறிப்பு பரிசீலனையில் உள்ளது. இத்திட்டத்தின் கீழ் சாலை மேம்பாட்டில் முதலீடு செய்யும் தொழிலதிபர்கள், குறிப்பிட்ட கால அளவிற்கு சாலைச் சுங்கக் கட்டண வகையில் சிறுதொகை வசூலிக்க அனுமதிக்கப்படுவர். இதில் நமக்குக் கிடைக்கும் அனுபவத்தின் அடிப்படையில், இத்திட்டத்தைப் பிற மாவட்டங்களுக்கும் நாம் விரிவுபடுத்துவோம். சர்க்கரை ஆலைகள் அமைந்துள்ள பகுதிகளுக்கு 16.5 கோடி ரூபாய் செலவில் சீரான சாலைகள் அமைந்த விரிவான சாலை வளர்ச்சித் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கிழக்குக் கடற்கரை நெடுக சென்னையிலிருந்து கடலூர் வரையில் மொத்தம் 53 கோடி ரூபாய் செலவில் சாலை அமைக்கும் பணி இப்போது தொடங்கப்பட்டுள்ளது. இது மிகவும் முக்கியமான சாலை. இக்கடற்கரைச் சாலை ஒன்று தான் தேசிய நெடுஞ்சாலை நிலைக்கு உயர்த்தப்படவில்லை. எனவே, இச்சாலையில் மேம்பாட்டுப் பணியை மேற்கொண்டு அதனை தேசிய நெடுஞ்சாலைவாக அமைக்குமாறு இம்மாநில அரசு மத்திய அரசை வலியுறுத்தியுள்ளது.

ஒசூர்—கிருஷ்ணகிரிக்கு இடையிலான தேசிய நெடுஞ்சாலை, திண்டுக்கல்—மதுரைக்கு இடையிலான தேசிய நெடுஞ்சாலை ஆகியவற்றை நால் வழிச் சாலைகளாக மாற்றும் பணியை மேற்கொள்ளுமாறும் அரசு, மத்திய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளது.



1991 செப்டம்பர் 26]

மாநில நெடுஞ்சாலைகள் :—

இத்திட்டத்தின் கீழ், மாநில நெடுஞ்சாலைப் பணிகள், முன்னுரிமை அளிக்கப்பட்ட முதன்மைப் பணிகளாக மேற்கொள்ளப்படுகின்றன. 1—4—1991 ஆம் நாள் நிலவரப்படி மாநில நெடுஞ்சாலைகளின் மொத்த நீளம் 1,915 கிலோ மீட்டர் ஆகும். மாநில நெடுஞ்சாலைகளின் கீழ், 23.00, இலட்சம் ரூபாய் செலவிலான மூன்று சாலைப் பணிகளும் 12.00 இலட்சம் ரூபாய் செலவிலான ஒரு பாலப் பணியும் 1990—91 ஆம் ஆண்டு பகுதி இரண்டு திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்டன.

உயரளவு வாகனப் போக்குவரத்து செறிந்த சாலைகள் ( High Density Corridor ) என்பதன் கீழ் ரூ. 3.66 கோடி செலவில், மாநில நெடுஞ்சாலையின் 61 கிலோ மீட்டர் தொலைவிற்கு சாலையை வலுப்படுத்தி அகலப்படுத்த அரசு அனுமதியளித்துள்ளது. 1991—92 ஆம் ஆண்டிற்காக 1.84 கோடி செலவில் ஆறு பணிகளுக்கு 1991—92 ஆம் ஆண்டு பகுதி இரண்டு திட்டத்தின் கீழ் அனுமதியளிக்கக் கருதப்பட்டுள்ளது. 1991-92 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட நிதியொதுக்கம் ரூ. 1.99 கோடியாகும்.

பெரிய அளவிலான மாவட்டச் சாலைகள் :

பெரிய அளவிலான மாவட்டச் சாலைகளின் மொத்த நீளம் 1—4—1991 அன்றுள்ளபடி 13,930 கிலோ மீட்டர் ஆகும். 1990-91 இல் ரூ. 1.91 கோடி செலவில் ஒன்பது பாலம் கட்டும் பணிகளுக்கும் ரூ. 73.00 இலட்சம் செலவில் ஐந்து சாலைப் பணிகளுக்கும் அனுமதியளிக்கப்பட்டது. உயரளவு வாகனப் போக்குவரத்து செறிந்த சாலைகள் என்பதன் கீழ், பெரிய அளவிலான மாவட்டச் சாலைகளின் 155 கிலோ மீட்டர் தொலைவிற்கு சாலையை 11.34 கோடி ரூபாய் செலவில் வலுப்படுத்தி அகலப்படுத்த அரசு அனுமதியளித்துள்ளது.

1991-92 ஆம் ஆண்டு பகுதி இரண்டு திட்டத்தின் கீழ் ரூபாய் 3.35 கோடி செலவில் ஒன்பது பணிகளை நிறைவேற்ற அனுமதியளிக்கக் கருதப்பட்டுள்ளது.

1991–92 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட நிதியொதுக்கம் ரூபாய் 727.14 இலட்சமாகும்.

மாவட்டங்களிலுள்ள ஏனைய சாலைகள் :

மாவட்டங்களிலுள்ள ஏனைய சாலைகளின் மொத்த நீளம் 1—4—1991 அன்றுள்ளபடி, 33,110 கிலோ மீட்டர் ஆகும். மாவட்ட ஏனைய சாலைகள் 1990—91 ஆம் ஆண்டின் பகுதி இரண்டு திட்டத்தின் கீழ் ரூபாய் 38.00 இலட்சம் செலவில்

மூன்று பாலங்களைக் கட்டவும் ரூபாய் 35.00 இலட்சம் செலவில் ஐந்து சாலைகளை அமைக்கவும் அனுமதியளிக்கப் பட்டது.

1991–92–ல் ரூ. 294 இலட்சம் செலவில் 13 பணிகள் மேற்கொள்ளக் கருதப்பட்டுள்ளது.

1990–91 இல், ஏற்பட்ட செலவு ரூ. 287.55 இலட்ச மாகும்.

1991-92 ஆண்டு வரவு–செலவுத் திட்ட நிதியொதுக்கம் ரூ. 251.70 இலட்சமாகும்.

பிற சாலைத் திட்டங்கள்:

ஊராட்சிகளிலும், ஊராட்சி ஒன்றியங்களிலும் உள்ள சாலைகளைப் பொறுத்த வரையில் பெரிய–சிறிய பாலங்கள், படுகைப் பாலங்கள் (Causeways) சிறு பாலங்கள் (Culverts) ஆகியவற்றுக்கு வகை செய்தல், சாலைகளை மேம்படுத்துதல் ஆகிய பணிகள் ரூ. 50,000-க்கும் அதிகமான செலவில் இத்திட்டத்தின் கீழ், நிறைவேற்ற எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. சாலைகள், பாலங்கள் ஆகியவற்றை பராமரித்துவரும் சுமையிலிருந்து ஊராட்சி களையும், ஊராட்சி ஒன்றியங்களையும் விடுபடச் செய்யும் வகையில், மேற்சொன்னபடி, ரூ. 50,000 செலவில் சாலைகளையும், பாலங்களையும் மேம்படுத்தி அவ்வாறு மேம் படுத்தப்பட்ட சாலைகளையும் பாலங்களையும் நெடுஞ்சாலை கள்—ஊரகப் பணிகள் துறை, அரசு நிதியிலிருந்து பேணி வரவேண்டும் என அரசு ஆணையிட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ், 1990-91 ஆம் ஆண்டில் ரூ. 40.00 இலட்சம் செலவில் இரண்டு பாலங்களைக் கட்டவும் ரூ. 61.00 இலட்சம் செலவில் 6 சாலைகளை அமைக்கவும் அனுமதியளிக் கப்பட்டன.

1991-92-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட நிதி யொதுக்கம் ரூ. 94.77 இலட்சமாகும்.

மேம்பாலங்கள் சுரங்கப் பாதைகள் (Ov.r Und r Bridges)

அணுகு சாலைகள் உட்பட, இரயில்வே மேம்பாலங்கள் சுரங்கப்பாதைகள் கட்டும் செலவை 50:50 என்ற வீதத்தில் மாநில அரசும், இரயில்வே துறையும் பகிர்ந்து கொள்கின்றன. தற்போதுள்ள இரும்புப் பாதைக் கடவுகளுக்கு பதிலாக மேம்பாலங்கள்/சுரங்கப்பாதைகளுக்கு வகை செய்தல், தற் போதுள்ள இருப்புப் பாதைக் கடவுகளை நிலை உயர்த்துதல்.



ஆளில்லாத இருப்புப் பாதைக் கடவுகளைப் பராமரித்தல் ஆகிய மாநில அரசின் செலவுகளை ஈடு செய்வதற்காக, மத்திய அரசு "இரயில்வே பாதுகாப்புப் பணிகள் நிதி" எனப்படும் நிதி ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. ஆளில்லாத இருப்புப் பாதைக் கடவுகளுக்கு ஆட்களை நியமிப்பதற்கும், இருப்புப் பாதைக் கடவுகளை நீக்கிவிட்ட மேம்பாலங்கள் சுரங்கப்பாதைகள் கட்டுவதற்கும் மேற்சொன்ன நிதியில் எட்டு சதவீதம் மாநில அரசுக்கு அளிக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

சேலம்-ஓமலூர் சாலையில் 0/8 கி.மீ. தொலைவிற்குச் சாலை மேம்பாலம் கட்டும் பணி முடிக்கப்பட்டு, 29–7–1990 அன்று போக்குவரத்திற்காக திறந்துவிடப்பட்டது.

பரங்கிமலை இரயில் நிலையத்திற்கு அருகில் தற்போதுள்ள இருப்புப் பாதைக் கடவுகளுக்குப் பதிலாக 15/20–21 கி.மீ. இரயில்வே சாலை சுரங்கப்பாதை கட்டும் பணிக்காக, அரசு அனுமதியளித்தது. அதற்காக நிலம் கையகப்படுத்தப்பட்ட பின்னர் அப்பணி எடுத்துக்கொள்ளப்படும். இதே போன்று, பழவந்தாங்கல் இரயில் நிலையத்திற்கு அருகிலுள்ள நங்க நல்லூர் சாலையில் 0/6 கி.மீ. சாலை சுரங்கப் பாதை கட்டும் பணிக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

அரக்கோணம் சந்திப்புக்கு அருகே, சாலை மேம்பாலம் கட்டுவதற்கு இரயில்வே இசைவளித்துள்ளது. இந்த இரயில்வே மேம்பாலம் கட்டும் பணிக்கு ஆகும் செலவு ரூ. 925 இலட்சமாகும். இப்பாலத்தில் இரயில்வேக்கு சொந்தமான பகுதியிலுள்ள பணியை இரயில்வே தொடங்கியுள்ளது. அணுகு சாலைகள் போடும் பணியை மாநில அரசு செய்யும்.

நாகல் நகருக்கு அருகே திண்டுக்கல்-வட்டானம் சாலையில் 2/4 கி.மீ தொலைவில் சாலை மேம்பாலம் கட்டுவதற்கு இரயில்வே இசைவளித்துள்ளது. இந்த இரயில்வே மேம் பாலம் கட்டும் பணிக்கு ஆகும் செலவு ரூ. 320.00 இலட்ச மாகும்.

1991–92 ஆம் ஆண்டுக்கு வரவு–செலவுத் திட்ட ஒதுக்கீடு ரூ. 100.16 இலட்சமாகும்.

கருவிகளும், தளவாடங்களும்.

அதிகரித்துவரும் வேகமான போக்குவரத்தின் தேவையை நிறைவு செய்வதற்காக, சாலைகளின் நடைபாதையை பரா மரித்தல், மேம்படுத்துதல் என்பதன் கீழ் கொண்டுவரப்படும் சாலைகளின் நீளம் ஒவ்வோராண்டும் அதிகரிக்கிறது. பல் வேறு மேம்பாட்டுத் திட்டங்களை செயற்படுத்துவதன் காரண மாக, நெடுஞ்சாலை ஊரகப்பணிகள் துறையின் சாலைக்

53–339—39

கட்டுமானப் பணிகள் அதிகரித்துள்ளன. இதனால் நெடுஞ்
சாலை ஊரகப் பணிகள் துறையின் கருவிகள், தளவாடங்கள்
ஆகியவற்றை மேம்படுத்தி, நவீனப்படுத்த வேண்டிய அவசிய
மேற்பட்டுள்ளது. பல்வேறு கருவிகள், தளவாடங்கள் ஆகியவை
பயனற்றதாகிவிட்டன. இவைகளுக்குப் பதிலாக புதிய
கருவிகள், தளவாடங்கள் ஆகியன படிப்படியாக வாங்கப்
பட்டு வருகின்றன.

1991-92 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு
ரூ. 5.50 இலட்சமாகும்.

நிழல் மரம் நடுதல் :

உயிரின வாழ்க்கைச் சூழல் சம நிலையைப் பேணி வரு
வதற்கும், சாலைகளைப் பயன்படுத்துவோருக்கு நிழற்குடை
களாக இருக்கும்பொருட்டும், சாலை ஓரங்களில் நிழல் தரும்
மரங்களை நடும் பணி பெருமளவுக்கு எடுத்துக் கொள்ளப்
பட்டுள்ளது. இந்த மரங்களிலிருந்து கிடைக்கும் பொரு
ளால் அரசுக்கு வருவாயும் கிடைக்கிறது. இவை கிராம வேலை
வாய்ப்பை உருவாக்குவதுடன், கிராமத் தொழில் வளர்ச்சிக்
கும் பெரிதும் உதவுகின்றன. அண்மையில் பல இலட்சக்
கணக்கான பனை மரங்களையும் ஏனைய வெட்டு மரங்கள்,
எரிபொருள், எண்ணெய், பழங்கள், மலர்கள் அளிக்கும்
ஏனைய வகை மரங்களையும் நடுவதற்கு நடவடிக்கை எடுக்
கப்பட்டு வருகிறது. மரங்களை உரியவாறு மேற்பார்வை
செய்வதற்கும், உயிருடன் இருக்கும் மரங்களின் எண்ணிக்
கையை அதிகரிக்க உறுதி செய்யவும் தொகுதி தொகுதியாக்க
பட்டுள்ளது. பயிரிடும் தொழில் நுட்ப உத்தி பின்பற்றப்பட்ட
மரங்களை 1991-92 ஆம் ஆண்டில், 150,00,000 பனை
மரங்களும், 1,55,000 ஏனைய வகை மரங்களும் நடுவதற்கு
இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பனை மரங்களும், நிழல்தரும் ஏனைய மரங்களும்
நடுவதற்காக, 1991-92 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட ஒதுக்
கீடு ரூ. 50.00 இலட்சமாகும்.

போக்குவரத்து பொறியியல் நிருவாக வட்டாரங்கள் :

தமிழ்நாட்டில் குறிப்பிடத் தக்க அளவுக்கு போக்குவரத்து
வளர்ச்சி ஏற்பட்டுள்ளதால் பயணிப் போக்குவரத்து, சரக்குப்
போக்குவரத்து பொறியியல் துறையில் தனிப் பயிற்சி பெற வேண்
டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. உலக வங்கி இப்பிரச்சினையில்
தன்மையை ஆராய்ந்து, போக்குவரத்துப் பொறியியல்,
நிருவாகத்திற்காக வட்டங்களை ஏற்படுத்துவது அவசியமென
பரிந்துரைத்தது. அதன்படி சென்னையைத் தலைமையிட
மாகக் கொண்டு, போக்குவரத்து நிருவாக வட்டத்தை



அரசு அமைத்துள்ளது. செங்கை மாநகரிலும், தமிழ்நாட்டில்
ஏனைய முக்கியமான நகரங்களிலும் பாதுகாப்பான முறை
யான போக்குவரத்தை வசதி செய்வதற்காக போக்குவரத்து
சமிக்ஞை விளக்குகள், போக்குவரத்துக் கட்டுப்பாடு வடி
வமைப்புகள் ஆகியவற்றுக்கு வகை செய்தல், போக்கு
வரத்து தீவுகள் கட்டுதல், போக்குவரத்து பாதைகளை
கோடிட்டுக் குறித்தல் போன்றவற்றில் களப் பணியாளர்களுக்கு
இவ்வட்டம் ஆலோசனை நல்குகிறது. இம்மாநிலத்திலுள்ள
சாலைகளின் போக்குவரத்துப் பயன் திறனை உரிய அளவுக்குப்
பயன்படுத்தவும், இது உதவி செய்கிறது.

தேசிய நெடுஞ்சாலைகள்:

1971 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட தேசிய நெடுஞ்
சாலைகள் பிரிவு, தலைமைப் பொறியாளரின் (தேசீய
நெடுஞ்சாலைகள்) கட்டுப்பாட்டின் கீழ் செயல்படுகிறது.
தற்போது தேசிய நெடுஞ்சாலைகள் பிரிவு கவனிக்கும் திட்டங்
கள் வருமாறு:—

(1) தேசிய நெடுஞ்சாலைத் திட்டம்
(மத்தியதுறைத் திட்டம்).

(2) தேசீய நெடுஞ்சாலை நகர்ப்புற இணைப்பு
(மாநில துறைத் திட்டம்).

(3) மத்திய சாலை நிதித்திட்டம்
(மாநில துறைத் திட்டம்).

(4) பழங்குடியினர் பகுதி மேம்பாட்டுத் திட்டம்
(மத்திய அரசின் உதவியுடன் மாநிலத் திட்டங்கள்).

(5) மேற்குமலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டம்
(மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள்).

ஒவ்வொரு திட்டத்தின் கீழும் செய்யப்படும் பணிகளின்
விவரங்கள் வருமாறு:—

1. தேசிய நெடுஞ்சாலைத் திட்டம்:

தேசிய நெடுஞ்சாலைகள், மத்திய அரசின் சொத்துக்
களாகும். தேசிய நெடுஞ்சாலைகளைப் பராமரித்தல் மேம்
படுத்துதல் தொடர்பான பணிகளுக்கு மத்திய அரசு தன்சொந்த
நிதியிலிருந்து முழு உதவி செய்கிறது. நெடுஞ்சாலைகள்
துறையின் தேசிய நெடுஞ்சாலைகள் பிரிவு தேசிய நெடுஞ்
சாலைகள் குறித்த பணியை மேற்கொள்ளும் மத்திய அரசின்
முகவரமைப்பாகும். மேற்கொள்ளப்பட்ட பணிகளின் மதிப்
பில் 9 சதவீதம் முகவரமைப்புக் கட்டணமாக மத்திய அரசு
அளிக்கிறது. தமிழ்நாட்டிலுள்ள தேசிய நெடுஞ்சாலை
களின் நீளம் 2,002.464 கி.மீ. ஆகும். இதில் தேசிய நெடுஞ்

[செப்டம்பர் 26

சாலைகள் நகர்ப்புற இணைப்பாக 125.86 கி.மீ. நீளமும் அடங்கும். இந்நகர்ப்புற இணைப்பில், செங்கை மாநகருக்குள் அமைந்த 29.55 கி.மீ. தொலைவு, நெடுஞ்சாலைப் பிரிவின் கீழ் உள்ளது.

தேசிய நெடுசாலைகள்—மூலப் பணிகள்:

பின்வரும் மூலப் பணிகள் நிறைவேற்றப்படுவதற்காக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன:

1. இரு வழிகளாக அகலப்படுத்துதல்.
2. வளமையற்ற இரு வழிச்சாலைகளை வலுப்படுத்துதல்.
3. ஒரு வழிச்சாலைகளை இருவழிச்சாலைகளாக அகலப் படுத்தி, வலுப்படுத்துதல்.
4. வடிவமைப்பை மேம்படுத்தல்.
5. மேம்பாலம்/கீழ் பாலங்கள் கட்டுதல்.
6. மாற்றுச் சாலைகள் அமைத்தல்.
7. பெரிய சிறிய பாலங்கள் கட்டுதல்.
8. மதகுகள் கட்டுதல்.

1990-91 ஆம் ஆண்டில் ரூ. 264.18 இலட்சம் செலவில் 22 மூலப் பணிகள் முடிக்கப்பட்டன. 94 மூலப்பணிகள் நடைபெற்று வருகின்றன. 1-4-1991 ஆம் நாள் நிலவரப் படி, கையிலுள்ள எஞ்சிய பணிகள் மதிப்பு ரூ. 1,305 இலட்ச மாகும். இவற்றில் 8 பணிகள் ஒவ்வொன்றும் ஒருகோடி ரூபாய் மதிப்புக்கும் அதிகமானவையாகும்.

மாற்றுச் சாலைகள்;

பின்வரும் இரண்டு மாற்றுச் சாலைகள் தற்போது அமைக்கப் பட்டு வருகின்றன. அவை குறித்த விவரம் வருமாறு;—

| | | (ரூபாய் இலட்சத்தில்). |
|---|---|---|
| 1. தேசிய நெடுஞ்சாலை—46 வாணியம் பாடி மாற்றுச் சாலை | | |
| (1) கட்டுமானம் | | 21.12 |
| (2) நடைபாதை | — | 24.70 |
| 2. வேலூர் மாற்றுச் சாலை தேசிய நெடுஞ்சாலை—46 | | |
| (1) கட்டுமானம் | — | 49.20 |
| (2) நடைபாதை | — | 39.00 |



1991 செப்டம்பர் 26]

தேசிய நெடுஞ்சாலை—7-ல் ரூபாய் 63.83 இலட்சம் செல விலான புகலூர் மாற்றும் சாலை அமைக்கும் பணி முடியும் நிலையில் உள்ளது.

தேசிய நெடுஞ்சாலை 7-ல் அமைக்கப்படவுள்ள கோயம்- புத்தூர் மாற்றுச் சாலை போடும் பணி, குறித்த மதிப்பீட்டிற்கு மத்திய அரசு இசைவளித்த பின்னர் நிறைவேற்ற எடுத்துக் கொள்ளப்படும். ரூ. 11.40 கோடி மதிப்புள்ள கட்டுமானப் பணிக்காக மதிப்பீட்டிற்கு அனுமதி வேண்டி, மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. தேசிய நெடுஞ்சாலைகள்—45. 4, 5 ஆகியவற்றை இணைக்கும், சென்னை மாற்றுச் சாலை தொடர் பாக, ரூபாய் 398 இலட்சம் செலவில் நிலத்தை கையகப்படுத்தும் பணி பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகிறது.

ரூபாய் 172.63 இலட்சம் செலவில், சேலம் மாற்றுச் சாலையில் 2/8 கி.மீ. தொலைவிலும், ரூபாய் 133,77 இலட்சம் செலவில்; மேட்டூர் கேட்டிற்கு அருகில் தேசிய நெடுஞ்சாலை 7-ல் 395/2 கி.மீட்டர் தொலைவிலும் சாலை மேம்பாலம் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

2. தேசிய நெடுஞ்சாலைகள் நகர்ப்புற இணைப்புகள்:

20,000மும் அதற்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட நகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ள தேசிய நெடுஞ்சாலைகள் நகர்ப்புற இணைப்புகள் என வகைப்படுத்தப்படுகின்றன. இந்த தேசிய நெடுஞ்சாலை நகர்ப்புற இணைப்பின் மொத்த நீளம் 125.86 கி.மீட்டர்களாகும். மேற்சொன்ன தேசிய நெடுஞ் சாலைகள் நகர்ப்புற இணைப்புச் சாலைகள் நல்ல தரத்துடன் துவக்கும் நோக்கத்துடன், மாநில திட்டத்தில், பகுதி 2 திட்டத் தின் கீழ் மேம்பாட்டுப் பணிகள், படிப்படியாக மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

இந்நோக்கத்திற்காக 7-வது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் மொத்தம் ரூபாய் 150 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இத் தொகையில் ரூ. 46.77 இலட்சம், ரூபாய் 24.23 இலட்சம், ரூபாய் 47.24 இலட்சம், ரூபாய் 15.09 இலட்சம், ரூபாய் 19.07 இலட்சம் முறையே 1985-86, 1986-87, 1987-88, 1988-89 மற்றும் 1989-90 ஆம் ஆண்டுகளில் செலவிடப் பட்டுள்ளன. 1990-91 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் இரு பணிகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளவாறு முடிக்கப் பட்டன.

[1991 செப்டம்பர் 26

| | | (ரூபாய் (இலட்சத்தில்). |
|---|---|---|
| (1) | பரமக்குடி நகர எல்லையில் தேசிய நெடுஞ்சாலை, 49-ல் 74/0, 76/0 கி.மீ. தொலைவில் உள்ள சாலையை மேம்படுத்தும் பணி. | 12.10 |
| (2) | திருநெல்வேலி நகர எல்லையில் 7-ஆம் எண் தேசிய நெடுஞ்சாலையின் 148/2—150/6 கி.மீ. தொலைவில் அகலப்படுத்தப்பட்ட பகுதி உட்பட சாலைகளை மேம்படுத்துதல் வலுப் படுத்துதல். | 5.00 |

மத்திய சாலை நிதிப் பணிகள்:

மத்திய சாலை நிதி தொடர்பாக 13-5-1988 ஆம் நாளன்று நாடாளுமன்ற மக்கள் அவை/மாநிலங்கள் அவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி மோட்டார் ஸ்பிரிட் மற்றும் டீசல் மீது விதிக்கப்படும் சுங்கம் மற்றும் ஆயத் தீர்வையிலிருந்து அடிப்படை விலையில் 5 சதவீதத்திற்கும் குறையாத ஒரு தொகை தொடர்ந்து சேர்க்கப்பட்டு அத்தொகை, சாலைகளின் மேம்பாடு மற்றும் பராமரிப்புப் பணிகளுக்குப் பயன்படுத்தப்பட வேண்டும்.

மதுரை மாவட்டத்தில் தாடியன் குடிசை—ஆமலூர் சாலையில் 13/2 கிலோ மீட்டரில் பிரிந்து பச்சலூர் வரை செல்லும் மலைச் சாலையை 0/0–9/680 கிலோ மீட்டர் 65 லட்சம் ரூபாய்ச் செலவில் மேம்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. 31-5-1991 ஆம் நாள் வரையில் இத்திட்டத்திற்கு 47.90 இலட்சம் ரூபாய் செலவாகியுள்ளது.

திருவண்ணாமலை—சம்புவராயர் மாவட்டத்தில், போளூரிலிருந்து ஜவ்வாது மலையின் உச்சி வரையிலும் அங்கிருந்து ஆலங்காயம் (6/4-40/535 கிலோ மீட்டர்) வரையிலும் செல்லும் மலைச்சாலையை 187.70 இலட்சம் ரூபாய்ச் செலவில் மேம்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. மார்ச் 1991 வரையில் இத்திட்டத்திற்கு 150.46 இலட்சம் ரூபாய் செலவாகியுள்ளது.

மற்றொரு பணி, அதாவது திருநெல்வேலி மாவட்டத்தில் சிவிலைபேரிக்கு அருகில். பாளையங்கோட்டை-நாகலாபுரம் சாலையில் 11/8 கிலோ மீட்டர் தொலைவில் தாமிரபரணி ஆற்றுக்குக் குறுக்கே தரைப்பாலம் கட்டும் பணி, 49.50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் மேற்கொள்ளப்பட்டு முடிக்கும் நிலையில் உள்ளது.





1991 செப்டம்பர் 26]

நிறைவேற்ற வேண்டியுள்ள எஞ்சிய பணிகளின் மதிப்பு 1–4–1991 ஆம் நாள் நிலவரப்படி 63.66 இலட்சம் ரூபாய் ஆகும்.

28.48 கோடி ரூபாய் செலவில், தேசிய நெடுஞ்சாலைகளுக்கு இணையாக பணிச் சாலைகள், புறச்சாலைகள் அமைப்பது, மற்றும் தேசிய நெடுஞ்சாலைகள், நகர்ப்புற இணைச்சாலைகளை மேம் படுத்துவது ஆகியவற்றிற்கான செயற்குறிப்புகள், எட்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மேற்கொள்ளப்படுவதற்காக மத்திய அரசிற்கு அனுப்பப்பட்டுள்ளன. 1990-91 ஆம் ஆண்டிலிருந்து இத்திட்டம், திட்டம் சாரா பணிகள் என்ற தலைப்பின் கீழ் வருகிறது.

1991–92 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்ட தொகை 23.51 இலட்சம் ரூபாய் ஆகும்.

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்:

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், நீலகிரி மாவட்டத்தில் மட்டுமே செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம், 1975 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. மலைப்பகுதியிலுள்ள இராமங்களின் சமூகப் பொருளாதார நிலைகளை மேம்படுத்துவது; வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, காடு வளர்ப்பு, தொழில், சுற்றுலா முதலியன போன்ற பல்வேறு துறைகளின் கீழ் மேம் படுத்தக் கருதப்பட்டுள்ள அனைத்து இடங்களுக்கும் எளிதில் சென்று வர வகை செய்தல், பழங்குடியினர்/ஆதிதிராவிடர் இராமங்களை, பொருளாதார சமூக நடவடிக்கை மையங்களுடன் இணைப்பது ஆகிய அத்திட்டத்தின் நோக்கங்களாகும். இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பழங்குடியினர் வாழும் பகுதிகளில் மேம்பாட்டுத் திட்டம்:

சமுதாயத்தில் நலிந்த பிரிவினரை குறிப்பாக பழங்குடியினரை மேம்படுத்துவதற்குத் தனிக் கவனம் வலியுறுத்தத் தேவையில்லை. வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள பழங்குடியினரின் குடும்பங்களை முனைப்புத் திட்டத்தின் மூலம் மேம்படுத்துவதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. பழங்குடியினர் சமுதாயத்தின் சமூகப் பொருளாதார பிரச்சினைகளைச் சமாளிக்க, பல்வேறு அடிப்படை வசதிகள் வழங்கக் கருதப்பட்டுள்ளது. பழங்குடியினரின் துணைத் திட்டத்தின் கீழ், பழங்குடியினர் வாழும் பகுதிகளைக் கண்டறிந்து, இப்பகுதிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகளுக்கு வகை செய்ய, குறிப்பிட்ட வரைவுத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. அணுக முடியாத பகுதிகளில் வசிக்கும் பழங்குடியினருக்குத் தகவல் தொடர்பு ஏற்படுத்தித் தருவதும் அப்பகுதிகளுக்குச் சாலை வழியமைத்துக் கொடுப்பதும் இத்திட்டத்தின் முக்கிய பணிகளில் ஒன்றாகும். எனவே, சாலைகள் அமைப்பது முக்கியப் பணியாகும்.

[1991 செப்டம்பர் 26

இத்திட்டத்தின் கீழ், சேலம், வட ஆர்க்காடு அம்பேத்கார்,
தென் ஆர்க்காடு, தருமபுரி, திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்
களில் கண்டறியப்பட்டுள்ள பழங்குடியினர் பகுதிகளில் சாலை
அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ள இத்திட்டம்
1976–77 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.
இத்திட்டத்தின் கீழ் ஏர்க்காடு, பச்சைமலை, சித்தேரி, ஜவ்வாது,
கொல்லி, கல்வராயன் மலை ஆகிய மலைப்பகுதிகள் வருகின்றன.

கிராமப்புறச் சாலைகள் திட்டம்:

1,500-க்கு மேற்பட்ட மக்கள் தொகை யுள்ள கிராமங்களுக்கும்
1,000-லிருந்து 1,500 வரை மக்கள் தொகை கொண்ட இணைப்புச்
சாலைகள் இல்லாத பகுதிகளுக்கும் எல்லா பருவகாலத்திற்கும்
ஏற்ற இணைப்புச் சாலைகளுக்கு வகை செய்யும் திட்டவட்டமான
நோக்கத்துடன், மத்திய அரசு ''குறைந்த அளவு தேவைத்
திட்டத்தின்'' கீழ் கிராமப்புற சாலைகள் போடும் திட்டப் பணிகள்
மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டம் 1972-73 ஆம் ஆண்டு
முதல் செயல்படத் தொடங்கியது.

எட்டாம் ஐந்தாண்டு காலத் திட்டம்:

எட்டாவது ஐந்தாண்டு காலத்திட்டத்தில், அரசு திட்டக் குழு
கருத்துத் தெரிவித்துள்ளவாறு, சாலை வழித் தொடர்பு உட்பட,
அடிப்படை வசதிகள் குறித்த ஆய்வு நடத்தப்பட்டது.

சாலை வழித் தொடர்பு பற்றி நடத்திய ஆய்வின்படி, பின்
வரும் மக்கள் தொகை கொண்ட கிராமங்களுக்குச் சாலை வழித்
தொடர்பு வழங்கப்பட வேண்டும் என மதிப்பிடப்பட்டுள்ளது.
அவையாவன—

| | |
|---|---|
| 1,500-க்கும் அதற்கு மேற்பட்ட மக்கள் தொகையுள்ள கிராமங்கள். | 156 |
| 1,000-க்கும் 1,500-க்கும் இடைப்பட்ட மக்கள் தொகையுள்ள கிராமங்கள். | 403 |
| 1,000-க்கும் குறைவாக மக்கள் தொகை உள்ள கிராமங்கள். | 7,871 |

1,500-க்கும், அதற்கு மேற்பட்ட அளவிற்கும் மக்கள் தொகை
உள்ள கிராமங்கள், 1,000-லிருந்து 1,500 வரை மக்கள்
தொகையுள்ள கிராமங்கள் ஆகிய இருவகை கிராமங்களுக்கும்
இணைப்புச் சாலைகள் அமைக்க ஏற்படும் மொத்தச் செலவு
ரூ. 41.78 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. தற்போதைய
விதங்களில், சாலைகள் அமைக்க வேண்டிய தொலைவில் நீளம்
1,432 கிலோ மீட்டர்கள் என்று கணக்கிடப்பட்டது. எட்டாம்



1991 செப்டம்பர் 26]

ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், 1,500-க்கும், அதற்கு மேற்
பட்ட அளவிற்கும் மக்கள் தொகையுள்ள கிராமங்கள், 1,000-
லிருந்து 1,500 வரை மக்கள் தொகை உள்ள கிராமங்கள் ஆகிய
இவ்விரு வகையைச் சேர்ந்த கிராமங்கள் மட்டுமே மேம்படுத்தப்
படும் என அரசு திட்டக்குழு முடிவு செய்துள்ளது.

1991–92 ஆம் ஆண்டுக்கான திட்டம்:

1991–92 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட
நிதியொதுக்கம் ரூ. 750 இலட்சம் ஆகும். 1981 ஆம் ஆண்டு
மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி 1,000-க்கும் மேற்பட்ட
மக்கள் தொகையைக் கொண்ட 96 கிராமங்களை இணைக்க
842.70 இலட்சம் ரூபாய் செலவில் 237 கிலோ மீட்டர் நீளமுள்ள
சாலைகளை அமைப்பதற்காக புதிய பணிகளை மேற்கொள்ள
உத்தேசிக்கப்பட்டுள்ளது. 1991-92 ஆம் ஆண்டில் 200 கிலோ
மீட்டர் நீளமுள்ள சாலைகள் அமைக்கப்படும்.

சிறப்பு உள்ளடக்கத் திட்டம்:

சிறப்பு உள்ளடக்கத் திட்டம் 1980–81 ஆம் ஆண்டிலிருந்து
ஆதி திராவிடர்களின் சமூக-பொருளாதார மேம்பாட்டுக்கான
கிராமப்புற சாலைகள் திட்டத்தின் துணைத் திட்டமாகச் செயல்
படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் ஆதி திராவிடர்
கள் பரவலாக வசிக்குமிடங்களில் அனைத்து பருவ நிலைகளுக்கும்
ஏற்ற வகையில் உள்ள சாலைகள் அமைக்கப்படுகின்றன.
1,500-க்கும் மேற்பட்ட மக்கள் தொகை தொகுதிகளுக்கும்
1,000—1,500 வரையிலான மக்கள் தொகை தொகுதிகளுக்கும்
அவர்கள் வசிக்குமிடங்கள் அனைத்திலும் இணைப்புச் சாலை
களை அமைக்க, தற்போது எட்டாவது திட்ட ஆவணத்திற்கு
ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. கிராமப்புறச் சாலைகள்
திட்டத்தின் கீழ் பழங்குடியினர் பரவலாக வசிக்கக் கூடிய
இடங்கள் அனைத்திலும் (1,000-மும் குறைவாகவும் மக்கள்
வசிக்கும் பகுதிகளில்) இணைப்புச் சாலைகளை அமைக்க உத்தேசிக்
பட்டுள்ளது.

1991–92 ஆம் ஆண்டுத் திட்டம்:

1991–92 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட நிதியொதுக்க
ரூ. 250 இலட்சம் ஆகும். இது இவ்வாறிருக்க, ரூ. 331 இலட்சம்
செலவில் 99.60 கிலோ மீட்டர் சாலைகளை அமைப்பதற்கான
புதிய பணிகள் மேற்கொள்ளப்படும். இந்த ஆண்டு முடிவதற்குள்
80 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகளை அமைக்க உத்தேசிக்கப்
பட்டுள்ளது.

அரசால் எடுத்துக் கொள்ளப்பட்ட பேருந்து வழித் தடங்களும் அவற்றுக்கான மேம்பாட்டுத் திட்டமும்:

இத் திட்டம் தொடக்கத்தில் திட்டம் சாராத திட்டப்பணியாக, தொடங்கப்பட்டது. பின்னர் எட்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இத்திட்டம் திட்டப் பணிகளின் கீழ் கொண்டு வரப்பட்டது.

இத்திட்டத்தின்படி படிப்படியாகச் செயல்படுத்தும் திட்டத்தின் கீழ் சாலைகளை மேம்படுத்துவதற்காக, கடந்த மூன்றாண்டுகளாக பேருந்துகள் இயக்கப்பட்டு வந்த ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகள் குறிப்பிட்ட காலத்திற்கொரு முறை, அரசால் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. இத்திட்டம் 1960-62 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. 1960-61 ஆம் ஆண்டிலிருந்து 1973-74 ஆம் ஆண்டு வரையிலான கால அளவில் வருங்காலத்தில் பிற மாவட்டச் சாலைகளாகப் பராமரிப்பதற்காக ஊராட்சிகளின் பேருந்து வழித்தடச் சாலைகளும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளும் சுமார் 12,976 கிலோ மீட்டர் நீளமுடையவை மேம்படுத்தப்பட்டு அரசால் எடுத்துக் கொள்ளப்பட்டன. இத்திட்டம் 1974-75 ஆம் ஆண்டில் ஒத்திப் போடப்பட்டது. 1979-80 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு புத்துயிரளிக்கப்பட்டது.

ரூ. 1,500.00 இலட்சம் செலவில் 750 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகளை மேம்படுத்த, அரசு 270 புதிய பணிகளுக்கு அனுமதியளித்துள்ளது.

1991-92 ஆம் ஆண்டுத் திட்டம்:

1991-92 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டு நிதி ஒதுக்கீடு ரூ. 1,20 இலட்சம் ஆகும். இதில் ரூ 1,242.70 இலட்சம் செலவில் 370.40 கிலோ மீட்டர் நீளத்திற்குச் சாலை அமைக்கும். புதிய பணிகள் மேற்கொள்ளப்படும். இந்த ஆண்டின் இறுதிக்குள் 300 கிலோ மீட்டர் நீளத்திற்குச் சாலைகள் போடும் பணியை செய்து முடிக்கக் கருதப்பட்டுள்ளது.

நெடுஞ்சாலைகள் ஆராய்ச்சி நிலையம்:

(நடைபெற்று வரும் ஆராய்ச்சித் திட்டப் பணிகள்).

1. மணல்-சரளை, மண்-களிமண் கலவைகளில் ஒட்டு மொத்த குழைமத் தன்மையின் நுட்பம் பற்றிய ஆராய்ச்சி.

2. அழுத்த மானியைப் (Pressure Meter) பயன்படுத்தி, மண்ணின் அழுத்தம் தாங்கும் திறனை நிர்ணயித்தல்.



3. நெடுஞ்சாலைகள் ஆராய்ச்சி நிலையத்தின், சிமிட்டிக் கான்கிரீட் நடைபாதையின் (களிமண் மேற்பரப்பில்) தரம் குறித்த ஆராய்ச்சி.

4. மலைச்சாலைகள், சமவெளிகளிலுள்ள மண்மேட்டுப் பாறைகளில் மண் அரிப்பு/மண் அடித்துச் செல்லுதல் ஆகியவற்றை கட்டுப்படுத்துவதற்காக, கயிறு வலையைப் பயன்படுத்துவது குறித்து ஆராய்ச்சி.

5. நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில், பாதைச் சோதனை சாதனங்களை அமைத்தல்.

6. பள்ளங்கள், கரைகளில் மண்ணிட்டு நிரப்பி வலுவூட்டுதல் குறித்த ஆராய்ச்சிப் பணி.

7: நிலமட்டத்திற்கு அடியிலுள்ள வடிகால்களில் நிலக்கரி பூசுதல்.

8. உறுதியான நடைபாதையில் நெகிழ்வான மேற்பரப்பில் ஏற்படும் வெடிப்புகளைத் தடுப்பதில் ''ஜியோபெப்ரிக்'' ''ஜியோ கிரிட்ஸ்' செயல்திறன் ஆராய்ச்சி.

9. நெடுஞ்சாலை நடைபாதைகளின் மேற்படி அமைப்பு குறித்த ஆராய்ச்சி.

10. ஆஸ்பால்ட்—காங்கிரீட் கலவையின் ஏற்புத் திறன் குறித்த ஆராய்ச்சி.

11. பல்வேறு வகையான சாலைகளில் ஒட்டுவேலைகளுக்கான சிறப்பான கலவையைக் கண்டறிவதற்கான ஆராய்ச்சி.

12. சாலை அமைப்பில் புதிய வகை பொருட்களைப் பயன்படுத்தி சாலைபோடுவது குறித்த ஆராய்ச்சி.

13. மீச்சேர்மங்களைச் சேர்த்து (Polymers) தயாரிக்கப்படுகிற தார் (நிலக்கீல்) கலவையின் இராசாயன குணங்களை ஆராய்தல்.

14. சாலை விபத்துக்களுக்கான காரணங்கள் குறித்த ஆராய்ச்சி.

15. தமிழ்நாட்டின் நெடுஞ்சாலை நடைபாதைகளின் தரத்தை மேம்படுத்துவது குறித்த ஆராய்ச்சி.

16. நகர்ப்பகுதி ஊரகப்பகுதிகளில் மோட்டார் வாகனங்களின் நிலை குறித்த ஆராய்ச்சி.

17. தமிழ்நாட்டின் பார வண்டிகள் போக்குவரத்து குறித்த ஆராய்ச்சி.

18. நகர்ப்பகுதிகளில் போக்குவரத்து நெரிசலைக் கட்டுப் படுத்துதல் குறித்த ஆராய்ச்சி.

19. போக்குவரத்து சாலை சந்திப்பு மேம்பாடுகள் குறித்த ஆராய்ச்சி.

20. சிமிட்டிக் கற்கலான மேற்பரப்பு மேம்பால அடுக்கத் தளங்களில் செய்யத் தவறிய, செய்ய வேண்டிய நிவாரண நடவடிக்கைகள் குறித்த ஆராய்ச்சி.

21. கடல் நீரால் சிமிட்டிக் கற்கலவைக்கு ஏற்படும் பாதிப்பு குறித்த ஆராய்ச்சி.

22. சாலை அமைப்பில் காங்கிரீட் கட்டுமானத்தை நீர்விட்டு உறுதிபடுத்தும் செய்முறை குறித்த ஆராய்ச்சி.

23. சிமிட்டிக் கற்கலவை சாலை அமைப்புகளைப் பழுதுபார்ப்பதற்காக சிறந்தப் பொருள்களைக் கண்டறிதல் குறித்த ஆராய்ச்சி.

**புதிய திட்டப் பணிகள்:**

1. இரண்டாம் நிலைச் சாலைகளில் ஆர்.44 வகையான போக்குவரத்து ஆய்வு.

2. பால அடுக்குத் தளங்களில் வெப்பத்தைத் தாங்கும் நிலை குறித்த நீண்ட கால ஆராய்ச்சி.

**தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்:**

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டப் பணிகள், உலக வங்கியின் கடன் நிதி உதவியுடன், சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, தூத்துக்குடி, திருப்பூர், சேலம், ஈரோடு, வேலூர் ஆகிய இடங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. பயணி ஊர்திகள் போக்குவரத்து—சரக்கு ஊர்திகள் போக்குவரத்து நிருவாக திட்டம் என்பது, தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி திட்டத்தின் கூறுகளில் ஒன்றாகும். இத்திட்டப் பணி, தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின், நெடுஞ்சாலைகள்—ஊரகப் பணிகள் துறைப் பிரிவின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டப் பணி, 1988—89 முதற்கொண்டு செயல்படுத்தப் பட்டு வருகிறது. 1985 மார்ச்சுத் திங்களுக்குள் இப்பணி நிறைவேற்றப்பட உள்ளது. பயணி ஊர்திகள் போக்குவரத்து—சரக்கு ஊர்திகள் போக்குவரத்து நிருவாகத் திட்டத்தின் இப்பணி



குறித்த மொத்த செலவு ரூ. 100.30 கோடியாகும். உலக வங்கி ஈடு செய்யும் திருப்பிக் கொடுக்கும் தொகை 31-8-1990 வரை சிவில் பணிகளுக்காக செலவில் 75 சதவீதமாகும்,

1-9-1990 முதற்கொண்டு. மேற்சொன்ன ஈட்டுத்தொகை சிவில் பணிகளுக்காக செலவில் 90 சதவீதமாக இருந்தது.

பணியாளரமைப்புச் செலவிற்குரிய ஈட்டுத் தொகை 31- 8—1990 வரை $12\frac{1}{2}$ சதவீத சிவில் பணிக்காக செலவில் 7 சதவீதமாகவும் 1-9-1990 முதற்கொண்டு $12\frac{1}{2}$ சதவீத சிவில் பணிக்காக செலவில் 90 சதவீதமாகவும் இருந்தது.

**பயணி ஊர்திகள் போக்குவரத்து/சரக்கு ஊர்திகள் போக்குவரத்து நிருவாகத் திட்டப் பணியின் நோக்கம்.**

நகர்ப் பகுதி சாலைகளின் திறனை உயர்த்துவதையும், போக்குவரத்து ஒழுங்குமுறை, போக்குவரத்துப் பாதுகாப்பு விதிகளை முனைப்புடன் செயல்படுத்துவதையும் முக்கிய நோக்கமாகக் கொண்டு, இத்திட்டப் பணிகள் தெரிந்தெடுக்கப் படுகின்றன.

**திட்டப் பணிகள் தெரிவும் அவற்றின் வள வாய்ப்புகளும்:**

சமூகப் பயன்கள் உட்பட போக்குவரத்து—பொருளாதார மதிப்பீடு ஆகியவற்றின் அடிப்படையில், இத்திட்டத்தின் கீழ் திட்டப்பணிகள் தெரிந்தெடுக்கப்படுகின்றன. ஒரு திட்டத்தின் பல்வேறு விருப்பத் தெரிவு முறையின் கீழ், பொருளாதார மதிப் பீடு செய்யப்படுகிறது. குறைந்தது $12\frac{1}{2}$ சதவீத ஆதாயம் கிடைக்கக்கூடிய ஒரு திட்டமே தெரிந்தெடுக்கப்படுகிறது. இப் பணிகளுக்கு, உலக வங்கியிடமிருந்து ஒப்புதல் பெற வேண்டியது அவசியமாகும்.

**நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளின் வகை:**

வட்டச் சாலைகள், பக்கச் சாலைகள், பாலங்கள் கட்டுதல், இருப்புப் பாதை கடவுகளுக்குப் பதிலாக மேம்பாலங்களை அல்லது சுரங்கப் பாதைகளை, அமைத்தல் தற்போதுள்ள சாலைகள், பாலங்கள் ஆகியவற்றை மேம்படுத்துதல் போன்ற பணிகள் இத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன.

**பணிகளுக்கு அனுமதி வழங்குதல்:**

ரூ. 9,003 இலட்சம் செலவிலான 22 சாலைப் பணிகளுக்கு அரசு நிருவாக அனுமதி வழங்கியுள்ளது.

இத்திட்டப் பணியின் கீழ், 1-3-1991 வரை ரூ. 1682.49 இலட்சம் மொத்தம் செலவிடப்பட்டுள்ளது.

1991-92-ல் பணி முன்னேற்றம்:

அனுமதியளிக்கப்பட்டு நிறைவடையாமல் எஞ்சியுள்ள பணிகள் அனைத்தும் நிறைவேற்றப்படுவதற்காக, 1991-92-ல் மேற்கொள்ளப்படும் 5 பணிகளை செய்து முடிக்கக் கருதப்பட்டுள்ளது. 1991-92 ஆம் ஆண்டுக்கான வரவு—செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடு ரூ. 1,50.000 இலட்சம் ஆகும்.

சென்னை நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் I & II.

இத்திட்டப் பணிகள் சென்னையில் மட்டும் நிறைவேற்றப்படுகின்றன. இத்திட்டப் பணிகள், உலக வங்கி நிதி உதவியுடன் நிறைவேற்றுவதற்காக எடுத்துக்கொள்ளப்பட்டன. திட்டப் பணிக் காலம், முடிவடைந்துவிட்டதால், இத்திட்டப்பணியின் கீழ்வரும் எஞ்சியுள்ள பணிகள், மாநில நிதியின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

சென்னை நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் I.

பணியின் முன்னேற்ற நிலை :

உள் வட்டச் சாலையில் சிறிய பகுதி வி.எம். தெருவில் சாலை மேம்பால பணி ஆகியவை நீங்கலாக சென்னை நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் I-ன் கீழ் வரும் அனைத்துப் பணிகளும் செய்து முடிக்கப்பட்டுவிட்டன. இச்சாலை போக்குவரத்திற்காக அனுமதிக்கப்பட்டுள்ளது.

1991-92 ஆம் ஆண்டுத் திட்டம்:

வைத்தியநாத முதலித் தெருவில் சாலை மேம்பாலம் கட்டும் பணியை 1991-92-ல் நிறைவேற்றி முடிக்கக் கருதப்பட்டுள்ளது. 1991-92 ஆம் ஆண்டுக்காக நிதி ஒதுக்கம் ரூ. 30.17 இலட்சமாகும்.

சென்னை நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் II

இத்திட்டப் பணியின் கீழ் வரும் வரும் அனைத்துப் பணிகளும் நிறைவேற்றி முடிக்கப்பட்டு விட்டன.

1991-92 ஆம் ஆண்டுக்கான திட்டம்:

1991-92 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கம் ரூ. 5.01 இலட்சமாகும்.



158328

மாநகர ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டம் :

சென்னைப் பெருநகர எல்லைக்குட்பட்டுள்ள பகுதியில், நெடுஞ்சாலைகள்—ஊரகப் பணித் துறை, சென்னை மாநகராட்சி ஆகியவற்றின் கட்டுப்பாட்டின் கீழ் ஒப்படைக்கப்பட்டுள்ளன. தெரிந்தெடுக்கப்பட்ட சாலைகளை மேம்படுத்த இத்திட்டப் பணி வகை செய்கிறது.

பணியின் முன்னேற்ற நிலை:

நிலம் கையகப்படுத்தும் பணி முடிவடையாமல் உள்ளதன் காரணமாக வேளச்சேரிப் பக்கச் சாலையில் 225 மீட்டர் நீளத்திற்கு மிகச் சிறிய சாலைப் பணி நீங்கலாக ஏனையச் சாலைப் பணிகள் அனைத்தும் நிறைவேற்றி முடிக்கப்பட்டுவிட்டன.

தேசிய நெடுஞ்சாலை 45—உலக வங்கி கடன் நிதியுதவி பெறும் திட்டம்

தாம்பரம் முதல் விழுப்புரம் வரையில் தேசிய நெடுஞ்சாலை 45-ல் 27/8 கி.மீ. முதல் 160/2 கி.மீ. வரையிலான பகுதியில் சாலையை உலக வங்கி நிதியுதவி பெறும் திட்டத்தின் கீழ் மேம்படுத்தும் பணி, இப்பிரிவின் மூலம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மொத்தச் செலவு ரூ. 7,229 இலட்சமாகும். செங்கல்பட்டில் பக்கச் சாலை போடுவது உட்பட தேசிய நெடுஞ்சாலை 45-ல் 27/8 கி. மீ. முதல் 67/0 கி.மீ. வரையிலான பகுதியில் தாம்பரம் முதல் புக்கத்துறை வரை இச்சாலையை நான்கு வரிசை போக்குவரத்து சாலையாக அகலப்படுத்துவதற்கும், செங்கல்பட்டுக்கு அருகே பாலாற்றின் குறுக்கே பெரிய பாலம் ஒன்றை கட்டுதல், தாம்பரம், பரனூர், செங்கல்பட்டு பக்கச் சாலை ஆகிய இடங்களில் இரயில்வே மேம்பாலம் கட்டுதல் மதுராந்தகத்தில் பக்கச் சாலை போடுதல் ஆகியவை உட்பட 67/0 கி.மீ. முதல் 160/2 கி.மீ வரையிலான பகுதியில் சாலையை (புக்கத்துறை முதல் விழுப்புரம் வரை) வலுப்படுத்தி, மேம்படுத்துவதற்கும் இத்திட்டப் பணி வகை செய்கிறது.

இத்திட்டப் பணியைப் பொறுத்தவரை 31-3-1991 வரை ரூ.4,227 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. திருத்த மதிப்பீட்டில் அனுமதிக்கப்பட்ட காரிய தொகை ரூ. 900 இலட்சமாயிருக்க 1991-92 ஆம் ஆண்டில் 1991 ஜூலை வரை ரூ. 258 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

செங்கல்பட்டுக்கருகே பாலாற்றின் குறுக்கே பெரிய பாலமும் தாம்பரம், பரனூர், செங்கல்பட்டு ஆகிய இடங்களில் இரயில்வே மேம்பாலங்களும் கட்டும் பணி நிறைவேற்றப்பட்டு விட்டன.

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras 1.
12 New Century Book House (Private) Limited, Madras 2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore District)
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai
6 Palaniappa Brothers, Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore 1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1
15 Parameswari Book Shop, No. 461, Old Market Street, Salem
16 Meenakshi Pathipagam, Pudukkottai
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-14.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalevam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bachi & Company, 286, B.B. Gandhi Street, Calcutta-12.

© Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.